
உ

திருச்சிற்றம்பலம்

கந்தரநுபூதி

திருக்குறள் பீடம் முதற்குரவர் மாம்பாக்கம் குருகுலம்
சிவத்திரு. அழகரடிகளின் விரிவுரைச் சுருக்கம்



தொகுப்பும் கட்டுரையாக்கமும்;
அமரர். எஸ். முத்துசாமி, திரு. த. ஆறுமுகம்
திரு. கு.இர. முனிராசகோபாலன்
(அடிகளாரின் மாணவர்கள்)

வெளியீடு:
நு. மகாலிங்கம் B.A.,
தொண்டமான் சக்ரவர்த்தி பதிப்பகம்,
3, பழைய அஞ்சலகத் தெரு, வேங்கடாபுரம், சென்னை 600 053.

உ

திருச்சிற்றம்பலம்

கந்தரநுபூதி

திருக்குறள் பீடம் முதற்குரவர் மாம்பாக்கம் குருகுலம்
சிவத்திரு. அழகரடிகளின் விரிவுரைச் சுருக்கம்

தொகுப்பும் கட்டுரையாக்கமும்:

அமரர். **எஸ். முத்துசாமி**

திரு. த. ஆறுமுகம்

திரு. கு.இர. முனிராசகோபாலன்

(அடிகளாரின் மாணவர்கள்)

வெளியீடு:

நு. மகாலிங்கம் B.A.,

தொண்டமான் சக்ரவர்த்தி பதிப்பகம்,

3, பழைய அஞ்சலகத் தெரு,

வேங்கடாபுரம், சென்னை 600 053.

நூல் குறிப்பு

தலைப்பு	: கந்தரநுபூதி (திருக்குறள் பீடம் முதற்குரவர் மாம்பாக்கம் குருகுலம் சிவத்திரு. அழகரடிகளின் விரிவுரைச் சுருக்கம்)
தொகுப்பும் கட்டுரையாக்கமும்:	அமரர். எஸ். முத்துசாமி திரு. த. ஆறுமுகம் திரு. கு.இர.முனிராசகோபாலன்.
வெளியீட்டு எண்	: 8
பதிப்பு	: முதல் பதிப்பு - பிப்ரவரி 1995
உரிமை	: திரு. நு. மகாலிங்கம் B.A.
அளவு	: 11 செ.மீ. x 18.2 செ.மீ.
எழுத்து	: 10 & 11 புள்ளி
பக்கங்கள்	: 36 + 442
படிகள்	: 1000
விலை	: ரூ. 75/-
வெளியீடு	: திரு. நு. மகாலிங்கம் B.A. தொண்டமான் சக்ரவர்த்தி பதிப்பகம், 3, பழைய அஞ்சலகத் தெரு, வேங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053.
அச்சகம்	: பார்க்கர் அச்சகம் 47, 49, பந்தர் தெரு, சென்னை - 600 001.
பொருள்	: முருகன் தோத்திர நூல் - விளக்கம்.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

உலகின்கண் விளங்கும் மொழிகளுள் தன்னேரில்லாத் தனிச் சிறப்புடையதாய்த் திகழ்வது தெய்வத் தீந்தமிழாகும். இதன்கண் மந்திர நூல்களாகப் போற்றப்பெறுவன இரண்டாம். ஒன்று, எம்பிரான் திருமூல நாயனாரால் அருளிச் செய்யப்பெற்ற திருமந்திரம். மற்றொன்று, திருவண்ணாமலை முனிவரான அருணகிரிப்பெருமான் வாய்மலர்ந்த **கந்தரநுபூதி**யாகும்.

''கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தை அருள்நாடி இருக்கும் நாள் எந்நாளோ?''

என்று தாயுமானவர் கந்தரநுபூதி நூலைப் போற்றியுள்ளார். இந்நூலின் 43-வது பாடலில் அருணகிரிநாதர், ''ஆசா நிகளம் துகளாயினபின் பேசா அநுபூதி பிறந்ததுவே'' என்று கூறியிருப்பதால், இது மெய்யுணர்வினை விளக்குகின்ற ஓர் அரிய - சிறந்த நூலாகும். மற்றும் இது மனித வாழ்வின் சிக்கல்களை உள்ளவாறு உணர்த்தி, அவற்றிலிருந்து விடுபடுவதற்கான தெளிவைத் தருகின்ற ஒரு வழிகாட்டியாகவும் உள்ளது.

இத்தகைய மந்திரநூலைப் பொருள் உணர்ந்து ஓதினால் நல்ல பயன் தரும். ''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்'' என்று திருவாசகம் கூறுகிறது.

கந்தரநுபூதியின் பொருளை உணர்த்தும் வகையில், திருக்குறள் பீடத்தின் முதற்குரவராய்த் திகழ்ந்த சிவத்திரு **அழகரடிகளார்** (1904-81) சென்னையில் தொண்ட மண்டல உயர்நிலைப் பள்ளியில் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, 3-2-1953 முதல் 25-5-1954 வரை கிழமைக்கு (வாரம்) ஒரு பாடலாக, இந்நூலுக்கு உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் உரை ஆழ்கடலிலிருந்து முத்தெடுத்து வந்து வழங்குவதைப்போன்று இருந்தது. ''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்'' என்பதற்கேற்ப அவர்களுடைய விரிவுரை அமைந்திருந்தது. அரிய கருத்துக்களைக் கற்றாரும் கல்லாதாரும் கேட்டு இன்புறுமாறு எளிமையாய் விளக்கமாய் அமைந்திருந்தது. சைவ அன்பர்களும் முருக பத்தர்களும் நூற்றுக்கும் மேற்பட்டவர் தொடர்ந்து இவ்விரி வுரைகளைக் கேட்டதோடு, பலர் குறிப்புக்களையும் எடுத்து வந்தனர்.

குறிப்பெடுத்தவர்களுள் அமரர் **எஸ். முத்துசாமி** அவர்களும் ஒருவர். எடுத்த குறிப்புக்களை அவர் கட்டுரையாகவும் எழுதி வைத்திருந்தார். அத்தொகுப்பை அடிகளாரின் மாணவர் தாம்பரம் திரு. **எஸ். நடராஜன்** அவர்கள் 30-3-1992 அன்று, திருல்லை வாயிலில் தொண்டமான் சக்ரவர்த்தி சோமவார வழிபாட்டுக்குழு வின் பாராயணத்தின்போது கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார் கள்.

அமரர் முத்துசாமி அவர்களின் கட்டுரைகளோடு, அடிகளாரின் மாணவரும் அணுக்கத் தொண்டரும் ஆகிய திரு. **த. ஆறுமுகம்** அவர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புக்களும் கிடைத்தன. இவற்றை வைத்துக்கொண்டு, அடிகளாரின் மற்றொரு மாணவராகிய திரு. **கு. இர. முனிராசகோபாலன்** அவர்கள் பெருமுயற்சி செய்து, ஓர் அரிய - பெரிய விளக்கவுரை கொண்ட நூலை ஆக்கினார்.

இந்நூல் அடிகளாரின் சொற்பாங்கிலேயே அமைந்துள்ளமை இதன் தனிச்சிறப்பாகும். இதனைப் பலரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்று அடியேன் எண்ணினேன். இவ்வெண்ணத்துக்கு ஆக்கங்கள் பல உருவாயின. இறைவன் திருவருள் பல பத்தர்களின் உருவில் வந்து உதவியது. அவர்களுள் முதலிடம் பெறுபவர் - அம்பத்தூர், இராம் நகரைச் சேர்ந்த திரு. **வி. எஸ். சங்கரன்** (முதுநிலைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, தமிழக அரசு -ஓய்வு) அவர்கள் ஆவார். அவர்களும் அவர் குடும்பத்தினரும் மனமுவந்து ரூ.2000/- கொடுத்து உதவினார்கள். மற்றும் கீழ்க்கண்ட வடமேற்கு ரோட்டரி சங்க உறுப்பினர்கள் நன்கொடை தந்தார்கள்.

1. திரு. V.S. இராஜப்பன் ரூ.1000/-
2. திரு. K.S. ஜயராமன் ரூ.1000/-
3. திரு. K. தியாகராஜன் ரூ.1000/-
4. திரு. அம்பா பழநியப்பன் ரூ.1000/-
5. திரு. D. நடேசன் ரூ.1000/-
6. Dr. அ. நாகலிங்கம் ரூ.2000/-
7. திரு. குருநாதன், சென்னை-40 ரூ.1000/-

இதுவரை வெளிவந்துள்ள கந்தரநுபூதி நூல்களுள், பாடல்களுக் குத் தனித்தனி சக்கரங்களும், ஆறு ஆதாரங்களுக்கு ஆறு சக்கரங்களும், கொண்ட ஒரு நூல் இருப்பதாகத் தெரியவில்லை. சக்கரங்களும் அவற்றுக்கான விளக்கங்களும் கொண்ட இந்நூல், தமிழன்னைக்குச் சிறந்ததொரு அணிகலனாகத் திகழும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

40 ஆண்டுகளுக்கு முன்னர் இதனை நூலாக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு அரிதின் முயன்று எழுதிவைத்த அமரர் எஸ். முத்துசாமி அவர்களுக்கும், அதனைப் பாதுகாத்து வைத்திருந்த திருமதி முத்துசாமி அவர்களுக்கும், தக்கவர்வழி அதனைப்பெற்று எனக்குத் தந்த திரு. எஸ். நடராசன் அவர்களுக்கும் தம் விரிவான குறிப்புக்களை கொடுத்துதவிய அடிகளாரின் மாணவரும், பெரிய புராண விரிவுரை ஆற்றிவருபவரும் ஆகிய ''திருத்தொண்டர் உரை மாமணி'' திரு. த. ஆறுமுகம் அவர்களுக்கும் நான் யாது கைம்மாறு செய்யப் போகிறேன்? அவர்கள் அனைவருக்கும் என்றும் கடப்பாடு உடையேன்.

தம் ஆசிரியரின் புலமைமீது கொண்ட பத்திப்பெருக்காலும், அவருடைய எளிய நடையைப் பின் சந்ததியினர்க்கு வழங்கவேண்டும் என்னும் பேர் ஆர்வத்தாலும், சைவர்களிடையே கந்தரநுபூதிக்கு இருந்துவருகின்ற பெருஞ்சிறப்பாலும் இதனை எழுதும் பணியை ஓர் ஒப்பற்ற இறைபணியாக எடுத்துக்கொண்டு, தம் முதுமையையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், அல்லும் பகலும் பெரிதும் முயன்று, கிடைத்த குறிப்புகளைத் தொகுத்தும் வகுத்தும் முறைப்படி எழுதி உதவியவரும், என் இறைபணிகளுக்கு உறுதுணையாக இருந்து வருபவரும் ஆகிய கெழுதகை நண்பர் திரு. கு. இர. முனிராச கோபாலன் அவர்கட்கு நோயற்ற வாழ்வும் மேலும் பல விரிவுரைகளை நூலாக்கக் கூடிய ஆற்றலையும் இறைவன் அருள்புரிய வேண்டுகிறேன்.

என் முந்தைய வெளியீடுகளான வடதிருமுல்லைவாயில் தலபுராணம், சிவஞானபோத விளக்கம், வடதிருமுல்லைவாயில் தலப்பதிக விளக்கம் ஆகிய நூல்களுக்கு எனக்கு உறுதுணையாய் இருந்ததைப் போன்றே இக்கந்தரநுபூதி நூலுக்கும் துணை இருந்து அச்சுப்பிழை திருத்தம் முதலிய உதவிகளைச் செய்தவரும், பட்டாபிராம் பகுதியில், திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய நூல்களுக்கு விளக்கவுரை ஆற்றி வருபவரும் ஆகிய, சென்னை, பட்டாபிராம் தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் **அ. நாகலிங்கம்** எம்.ஏ., பிஎச்.டி. அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டும், வாழ்த்தும் உரியனவாகுக!

கந்தரநுபூதிப் பாடல்களுக்கான சிறிய சக்கரங்களையும், ஆறு ஆதாரங்களுக்கான ஆறு பெரிய சக்கரங்களையும் வரைந்து உதவிய முதுபெரும் அன்பர் திரு. **எம். குப்புசாமி முதலியார்** (ஓய்வு பெற்ற தலைமை வரைவாளர், தென்னக ரயில்வே) அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

தத்துவப் பேராசிரியர் டாக்டர் **வ. ஆ. தேவசேனாபதி** எம்.ஏ. பிஎச்.டி. அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் மெய்ப்பொருள் ஆய்வு மையத்தில் பேராசிரியராகவும் இயக்குனராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற மூதறிஞர். அவர்கள் இப்பதிப்பகத்தின் 6-வது வெளியீடாகிய சிவஞானபோத விளக்கம் என்னும் நூலுக்கு (19-1-91-ல்) அரியதொரு அணிந்துரையை வழங்கினார்கள்.

டாக்டர் அவர்கள் முருகபத்தராகிய தணிகைமணி இராவ்பகதூர் டாக்டர் வ.சு. செங்கல்ராயப்பிள்ளை அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முருகன் புகழ்நூலாகிய கந்தரநுபூதி விளக்கவுரைக்கு அணிந்துரையை வழங்குமாறு வேண்டிக்கொண்டோம். அவர்களும் தம் அகவையையும் முதுமையையும் பாராமல், (கைப்பிரதியில் 640 பக்கம் கொண்ட) இந்நூல் முழுவதையும் பார்த்துப் பல நுட்பமான செய்திகளைக் குறிப்பிட்டுச் சிறந்ததொரு அணிந்துரையை வழங்கினார்கள்.

டாக்டர் அவர்களை நவம்பர் 1994-ல் நாங்கள் அணிந்துரைக்காக அணுகினோம். 8-12-94 அன்று அவர்கள் அதனை எழுதினார்கள். அதனை 14-12-94 அன்று நேரில் கண்டு பெற்றுக்கொண்டோம். 25-12-94 அன்று அவர்கள் சிவனடி சேர்ந்தார்கள் என்னும் செய்தி கேட்டு மனம் மிக வருந்தினோம். முருகபத்தர் குடும்பத்தவராகிய டாக்டர் அவர்கள் தம் இறுதிக்காலத்தில் கந்தரநுபூதி நூலைப் படித்தமை குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய ஆன்மா இறைவன் திருவடியில் என்றும் அமைதியுற்று முத்தி இன்பத்தைத் துய்க்க வேண்டும் என்று, இறைவனை மனமுருகி வேண்டுகிறோம்.

கேதாரச்செல்வர், ஒளியகம் திரு. **ந. ரா. ஆடலரசு** (அம்பலவாண தேசிகர்) அவர்கள் அழகரடிகளின் மூத்த மாணவராவார். ஆங்காங்கே சிதறியுள்ள குருகுல மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாய்த் திகழ்கின்றார். நாங்கள் பதிப்பித்த முந்தைய நூலாகிய 'சிவஞான போத விளக்கம்' என்னும் நூலுக்கு விரிவானதொரு முன்னுரையை வழங்கிச் சிறப்பித்தார்கள். அவ்வாறே இக்கந்தரநுபூதி நூலையும் அருள்கூர்ந்து பார்வையிட்டு அரியதொரு முன்னுரையை வழங்கினார்கள். பல கடமைகளுக்கிடையே சுருங்கிய காலத்தில் இந்நூலைப் படித்தும், திருத்தங்கள் செய்தும், முன்னுரையை வழங்கியதோடு எங்களுக்கு ஊக்கங்கொடுத்தும் உதவிய அன்னாருக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

மிகக்குறைந்த காலத்தில் மிகச்சிறந்த முறையில் இந்த நூலை அச்சிட்டுத் தந்த பார்க்கர் (கணிப்பொறி) அச்சகத்தார்க்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆசிரியப் பெருந்தகை சிவத்திரு அழகரடிகள் அவர்களுக்கும், இப்பெருநூல் வெளிவரத் தோன்றாத் துணையாய் இருந்து பல்லாற்றானும் அருள் புரிந்த- 'யாவர்க்கும் மேலான், அளவிலாச் சீர் உடையான்'- ஆகிய அருள்மிகு கொடியிடைநாயகி உடனுறை மாசிலாமணியீசுரர் கழல்களை வணங்குகின்றேன்.

அடிகளாரின் திருவடிகளுக்கு
இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

வாழ்க அடிகளாரின் திருநாமம்!
பரவுக அவர்தம் சீரிய கருத்துக்கள்!!

3, பழைய அஞ்சலகத்தெரு,
வேங்கடாபுரம், அம்பத்தூர்,
சென்னை - 600 053,
27-1-95.

இங்ஙனம்,
நு. மகாலிங்கம்.

திருச்சிற்றம்பலம்

குருவருள்!

முன்னுரை

செந்தமிழ்ச் சைவசித்தாந்த நெறியில் நின்று முருகனை வழிபடு தெய்வமாகக் கொண்ட 'அருணகிரியார்' அருளியுள்ள நூல்களில் 'கந்தரநுபூதி'யே மிகச்சிறந்த அருள் அடைவு (அநுபவ) நூல்; அவர் இறுதியாக அருளிய நூல். இதை முருகப்பெருமானின் திருத்தோளில் கிளி உருவில் இருந்து பாடினார் என்பது வரலாறு.

சைவத் திருமுறைகளில் பத்தாந்திருமுறையாக இலகும் திருமூலரின் திருமந்திரம்போல, முருகவேள் பன்னிரு திருமுறைகளில் பத்தாந்திருமுறையாக இந்நூல், சைவப்பெரியார் தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளையவர்களால் வைக்கப்பட்டுள்ளது.

திருமூலர், அருணகிரியார் இருவருமே முறையே திருமந்திரத்தையும், கந்தரநுபூதியையும், வேறு உடலில் இருந்தே அருளியுள்ளனர் என்பது எண்ணத்தக்கது. இவ்விரு நூல்களின் பாடல்களும் 'ஏ' காரத்திலேயே முடிகின்றன. நிறைமொழி மாந்தர்களாகிய அவர்கள் வாக்கு அனைத்தும் கருதிய பயனை அருளி, காக்கவல்ல மந்திரங்களே. இவ்வகையில் கந்தரநுபூதி மந்திரப்பாடல் ஒவ்வொன்றும் ஓதுபவர்கட்கு இன்ன இன்ன பயனைத் தரும் என்று பெரியோர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நாடோறும் ஓதுதற்கு உகந்த, மிக, இனிய பாடல்கள் அவை.

நாம் காணும் இவ்வுலகமும், பிற கோள்களும் எல்லாம் ஒளியுலகங்களாகவே இருக்கின்றன. இவற்றுக்கு மூலமாக ஒலி உலகங்களும் உள்ளன. வடமொழியில் அர்த்தப் பிரபஞ்சம், சப்தப்பிரபஞ்சம் என்பர். எல்லா ஒலிக்கும் மூல ஒலியாக 'ஓம்' இருக்கிறது. தமிழில் ஒலியைக் குறிக்கும் மற்ற சொற்களும் ஓசை, ஓலம், ஓதல் என்று இருப்பது உன்னத்தக்கது. ஓங்காரத்தின் விரிவாக ஐம்பத்தோர் அக்கரங்கள் உள்ளன. அவற்றுள் மூல ஒலிகள்-வித்து ஒலிகள் (பீஜாட்சரங்கள்). எல்லா மொழிகளுக்கும் பொதுவானவை.

அச்சு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு பல உருவங்களை (பொருள்களை) உருவாக்குவர். அதைப்போலவே நம் பரு (பூத) உடம்பும் அதற்குள்ளே இதே போன்ற வடிவில் உள்ள நுண்ணுடம்பும் (ஒளியுடம்பும்) அதற்குள்ளே காரண உடம்பும் உள்ளன. காரண உடம்பு ஒலியுடம்பு. அதை அச்சாக வைத்தே மற்ற உடம்புகள் இறைவனால் படைக்கப்படுகின்றன. பூத உடம்பில் பொறி புலன்களும், நுண்ணுடம்பில் அறிவும் காரண உடம்பில் உணர்வும்

உள்ளன. காரண உடம்பின் அமைப்பு ஐம்பத்தோர் எழுத்துக்களின் அடிப்படையில் ஆறு ஆதார அருட் சக்கரங்களாக அமைந்து, நம் உணர்வைக் கிளர்ந்து எழச்செய்கிறது. வேறு வகையில் நமக்கு இறையருளால் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்துள்ள உடம்புகளை - அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞா னமயகோசம், ஆனந்தமயகோசம் என்று ஐந்தாகவும் குறிப்பர். கோசம் என்பது உடம்பு. முன் சொன்ன மூன்றில் இவை அடங்கும்.

தக்க குருவின் அருளைப் பெற்று ஒரு நெறியை மனம் வைத்துக் காரண உடம்பின் இயக்கத்தை உணர்ந்து, பயன்படுத்தினால், கந்தரநுபூதிப் பாடல்கள் உயிர் நலத்துக்கு - ஆசு அகன்று, ஈசன் அடியில் அமர்ந்து ஆனந்தமயமாக (மாணிக்கவாசகரைப்போல்) இருப்பதற்குத் துணை செய்யும். அதன் இறுதிப்பாடல் அத்தகைய குருவருளையே நாடி நிற்கிறது.

அநுபூதிப் பாடல்களில் அடங்கியுள்ள இந்நுட்பங்களையெல் லாம் உரிய ஆறு ஆதார சக்கரங்கள், அவற்றின் மந்திர எழுத்துக்கள், மூல ஒலிகள், இயக்கத்துக்குரிய மற்ற எழுத்துக்கள் அவற்றின் இயைபுகள்பற்றி எல்லாம் படம் போட்டுக்காட்டி மிக்க அருளோடு எம் குருநாதர், மதுராந்தகம் குருகுல அமைப்பாளர் திருக்குறள் பீடம் சிவத்திரு. அழகரடிகளார் நாற்பது ஆண்டுகட்குமுன் ஆசிரியர் இளவழகனார் எனச் சங்கச் சான்றோர்போல விளங்கிய காலத்தில், கிழமைக்கு ஒரு பாட்டாக ஓராண்டுக்காலம் நூற்றுக்கணக்கான அன்பர்களிடையே எடுத்து விளக்கியருளினார்கள். அப்போது அவைகளைப் பலர் குறிப்பெடுத்துக் கொண்டனர். ஆயினும் அவ்வரிய விளக்கங்களைப் பலர்க்கும் பயன்படும் முறையில் அச்சிட்டு வெளியிடுவதற்கு யாரும் முனையவில்லை.

இப்போது, பேரன்பர்கள் அம்பத்தூர் திரு. **நு. மகாலிங்கம்** பி.ஏ. அவர்களும் 'மெய்கண்டான்' எனக் குருகுலத்தாரால் அன் புடன் அழைக்கப்பட்ட திரு. **கு. இர. முனிராசகோபாலன்** அவர்களும், அரிதின் முயன்று, கோடம்பாக்கம் அமரர் **எஸ். முத்துசாமி** அவர்களால் எழுதி வைக்கப்பட்டு அவர்தம் அருமைத் துணைவியாரால் பாதுகாத்து வைத்துக் கொடுக்கப்பட்ட குறிப்புக ளையும் திரு. **த. ஆறுமுகம்** அவர்கள் எழுதிவைத்த குறிப்புகளையும் தொகுத்து, திருத்தமான கட்டுரைகளாக வெளியிடுகிறார்கள். அவர்க ளுடைய அயரா முயற்சி பெரிதும் போற்றத்தக்கது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. முன்னரே இவர்கள் பாடல்தலமாகிய திருமுல்லைவா யிலில் பல ஆண்டுகளாகத் தொண்டமான் சக்ரவர்த்தி சோமவார வழிபாட்டுக்குழு ஒன்றை அமைத்து அதன் சார்பில் இயன்ற பல

அருட்பணிகளைச் செய்து வருவதோடு, குருகுலம் அடிகள் அருளிய அத்தலப்பதிக விளக்கவுரையையும், அடிகளின் சிவஞான போத விரிவுரைகளையும் நூலாக வெளியிட்டிருக்கிறார்கள். திருமுல்லைவாயில் தல புராணத்தையும் கல்வெட்டுக் குறிப்புகளுடன் மிகவும் முயன்று பெரும்பொருள் செலவில் வெளியிட்டார்கள். இப்போது இக் 'கந்தரநுபூதி விளக்கவுரை' நூலை வெளியிடுகிறார்கள்.

திரு. மெய்கண்டார் அவர்கள், 40 ஆண்டுகளுக்கு முன் எடுத்த குறிப்புகளை எல்லாம் நுணுகிப்பார்த்து, இனிய, விளக்கக்கட்டுரைகளாக வடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இவ்இருவருடைய ஈடுபாடும், உழைப்பும், அயராத முயற்சியும், அருள் நெறியன்பர்களால் மிக்க உருக்கத்தோடு என்றும் நன்றியுடன் போற்றப்படும் என்பது உறுதி.

என்றும் அடிகளின் திருவடி நிழலில் இருப்பவன் என்னும் ஒரே தகுதி கருதி எளியேனையும் ஒரு பொருளாக மதித்துக் கந்தரநுபூதி விளக்கக் கட்டுரைகளைப் பார்வையிட்டுத் தருமாறு கேட்டுக்கொண்டார்கள். ஆருயிர் அன்பர்களின் வேண்டுகோளை மறுத்தற்கஞ்சி மிகமிக நன்றாக எழுதப்பட்ட அக்கட்டுரைகளை ஆர்வத்துடன் படித்துப் பார்த்து மகிழ்ந்ததன்றி வேறு எவ்வகையிலும் இவர்களின் நற்பணிக்கு அடியேனால் உதவ இயலவில்லை. இவர்களுக்கு என் உளமார்ந்த பாராட்டும், நன்றியும், வாழ்த்தும் உரியவாகும்.

எல்லாம் வல்ல 'மாதொரு பாகனாகிய ஆதி பகவன்' திருவருளால் இவ்வன்பர்கள் நீடினிது எல்லா நலமும் வளமும் பெற்று வாழ்ந்து மேலும் மேலும் இத்தகு நற்பணிகளைச் செய்வார்களாக என நெகிழ்ந்த நெஞ்சுடன் இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம்
உண்மையுள்ள,
ஒளியகம் ந.ரா. ஆடலரசு
(அம்பலவாண தேசிகன்)
குருகுல மாணவன்.

சைதை,
சென்னை - 15,
19-1-1995

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் **வ.ஆ. தேவசேனாபதி**, எம்.ஏ., பி.எச்.டி.,
(டாக்டர் இராதாகிருஷ்ணன் மெய்ப்பொருள் ஆய்வு மைய முன்னாள் இயக்குநர் (ஓய்வு), சென்னைப் பல்கலைக்கழகம்)

டாக்டர் வ.ஆ.தே. அவர்கள் 25.12.94 அன்று சிவனடி சேர்ந்தார்.

அருணகிரிநாதர் முருகன் புகழைப் பலவகைப் பாடல்களிலும் பல நலன்களுடனும் பாடியுள்ளார். பக்தியில் ஈடுபடுவோர்கே அல்லாமல் இலக்கிய மெய்யுணர்வு நோக்கில் ஆராய்வோர்க்கும் அவர் அருளிச் செயல்கள் பெருவிருந்தாய் உள்ளன. ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து'' சொல்வது பெரும்பயன் உடையதெனினும் அருட்பாடல்களுக்குப் பொருள் காண்பது இயல்வதன்று என்னும் கருத்தில் சான்றோர் பொருள்கூறாது இருந்து விடுகிறார்கள். கொள்ளக்குறைவில்லாத பற்பல நயங்களை அவரவர்கள் நவில் தொறும் புதுப்புதுப் பொலிவுடன் கண்டு இன்புறுதல் ஆன்மிய, உணர்வியல் நலங்களில் நாளும் நாம் உயர்வதோர் நன்மையைப் பயக்கும்.

உரை கூற முற்படுவோர், கேட்பவர் படிப்பவரின் உள்ளுணர்வைத் தூண்டி உய்தி பெற உதவுவோராவர். பண்டை உரையாசிரியர்களைப்போல நூலறிவோடு நுழைவும் மதிநலனோடு அருள் உணர்வும் வாய்க்கப்பெற்ற மாம்பாக்கம் அழகரடிகளார் ஒரு நூலுக்கு உரை கூறுகிறார் எனின் நற்பேறுடையோர் ஆர்வத்துடன் சென்று கேட்டுப் பெரும்பயன்பெற்று வந்தது நம்மில் பலர் நேரில் கண்டதாகும். அடிகளார் மந்திரநூலாகிய **திருமந்திரத்துக்கு** விளக்கச் சொற்பொழிவுகள் தந்து நிறைவு செய்துள்ளார்கள். அங்ஙனமே அருணகிரியாரின் நூல்களில் மந்திரநூலாகப் போற்றப்பெறும் **கந்தரநுபூதிக்கும்** அவர்கள் விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இவற்றை அருகிருந்து கேட்டதுடன் குறிப்பெடுத்து எழுதி நமக்கு அளித்துள்ளவர்கள், 1) அமரர் எஸ். முத்துசாமி அவர்களும், 2) திரு. த. ஆறுமுகம் அவர்களும் ஆவர். இத்தகைய நற்பணிகளில் ஓயாமல் ஈடுபட்டு அழகரடிகளாரின் சிவஞானபோத விளக்க உரையைத் தொகுத்து வெளியிட்டும் இனி அவர்களின் சிவஞான சித்தியார் சுபக்க விளக்க உரையை வெளியிட முயல்பவரும் ஆகிய மூன்று சைவத்திருத் தொண்டர்கள்: 1) திரு. நு. மகாலிங்கம், பி.ஏ. 2) திரு. கு. இர. முனிராசகோபாலன் 3) டாக்டர் அ. நாகலிங்கம் ஆவர்.

அச்சாகும் முன் கந்தரநுபூதி உரையைப் படிக்கும் வாய்ப்பினை எனக்கு நல்கிய அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி. உண்பதற்கு முன் பசியைத் தூண்டுவதற்குச் சிறிது கொடுப்பது (appetiser) ஓர் உத்தி. அவ்வகையில் சிறிது கூற முற்படுகிறேன்.

'கந்தரநுபூதி' பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் முதலில் பொழிப் புரை கொடுத்து அதை அடுத்து விளக்க உரை தரப்பட்டுள்ளது. பொழிப்புரை பாட்டின் மையக்கருத்தை எடுத்துரைக்கிறது. அதை அடுத்து வரும் விளக்க உரை ஒரு தங்கச்சுரங்கம் போன்றது. மெய்யுணர்வுக் கருத்துக்கள, யோக நுட்பங்கள், இலக்கிய நயங்கள், சொல்லாட்சித் திறன்கள் இன்ன பல தந்துள்ளார்கள். இறுதியில் பாடலுக்கு உரிய சக்கரமும் தரப்பட்டுள்ளது.

வள்ளியைப் பற்றி வரும் செய்திகளைப் பருவவடிவில் நாடகச்சுவையுடன் தலைவி - தலைவன் உறவுகளைக் கூறுவதாகக் கொள்ளலாம். பருமையிலிருந்து நுண்மைக்கு உயர்வதற்கு இவ்வுறவு களை யோக முறையில் நம் உடலில் ஊறும் விந்துவைப் புலன்வழியில் செலுத்தி வீணாக்காமல் யோக முறையில் மடைமாற்றி மேலெழுப்பி ஆன்மிய உயர்வையும், உய்தியும் பெறச்செய்யலாம். ஆங்காங்கே அடிகளார் இதனை விளக்கி வற்புறுத்துகிறார்.

'பணியா? எனும் வள்ளி பதம் பணியும்' என்பதனை வள்ளியை முருகன் கேட்கிறாரா, முருகனை வள்ளி கேட்கிறாளா என்று இரு வழிகளிலும் நம்மைச் சித்திக்க வைக்கிறார். அடியார்கள் சிற்றம்பலவ னுக்கு அடியார் எனில், சிற்றம்பலவனும் அடியார்க்கு அடியன் அல்லனோ?

'நெஞ்சக்கனகல்' என்னும் முதல் பாட்டாலேயே நம்மனம் எளிதில் உருகாக்கனகல் என்னும் வழக்கமான உரையுடன் இறைவன் மனமும் நம்பால் கல்லாயிராமல் உருக வேண்டும் என்னும் அருள் வேட்டலையும் அடிகளார் நயம்பட உரைக்கிறார். ''அதிமோக தயாபரனே'' என்னும் தொடரை வைரத்தை ஒளியில் பல கோணங்களிலிருந்து காட்டி இன்புறச் செய்வதைப்போல விளக்கிச் செல்கிறார்.

'ஏறு மயிலேறி விளையாடு முகம் ஒன்றே' - நம்மில் பல்லோர் பாடி மகிழ்வது - அடிகளார் விளக்கம் இனி அம்மகிழ்ச்சியைப் பெருக்குமன்றோ - மெய்யுணர்வுகளைக்கொண்டு பார்க்கும்போது?

அரிய சொற்களுக்கே அன்றி எளிய, பொது வழக்குச் சொற்களையும் அடிகளார் அலசிக் காட்டும் திறம் அவருக்கே உரியதன்றோ? ''சூர்மா மடிய'' மடித்தல் - அழித்தல் அன்று

- அடக்குதலே - அன்றாட வழக்கில் காட்டுகிறார் - துணியை மடித்தல் அதனை அழித்தலன்று!


''முழுதும் செய்யோய்'' - முருகனின் சிவந்த நிறம் மட்டுமன்று - நடுநிலைமை, நேர்மை - இவற்றையும் குறிப்பது சமயவாழ்க்கைக்கு மட்டுமன்றி அன்றாட வாழ்க்கையிலும் பல துறைகளிலும் கடைப் பிடிக்க வேண்டுவதொன்று என்று அடிகளார் கூறும் அறிவுரை சமயத்தையும் வாழ்க்கையையும் இணைப்பதற்கான நெறிமுறை யாகும். செய்யோனாகிய முருகனை வழிபடுவோர் வாழ்க்கையும் செம்மை நலனுடன் அமைய வேண்டும்.

இத்தேன் ஆற்றிலிருந்து ஓயாமல் உவட்டாமல் மேலும் தரலாம். ஆனால் அன்பர்களே தேனை நுகர விட்டு அமைகின்றேன். தேன் அருவியை நம் இல்லங்களில் பாயச்செய்யும் சிவ அன்பர்கள் நீடு வாழவும் நற்பணிகளைத் தொடரவும் முருகனை வணங்குகிறேன்.

வ.ஆ. தேவசேனாபதி

சென்னை
8-12-94

திருச்சிற்றம்பலம்


அருணகிரி நாதர்

உ

திருச்சிற்றம்பலம்

அருணகிரி நாதர் வரலாறு

தமிழகத்துக்குள்ள சில சிறப்புகளைப் போலவே பல குறைபாடுகளும் உள்ளன. அக்குறைபாடுகளுள், நாட்டின் முழுமையான, விரிவான தொடர்ந்த வரலாறு இன்மையும் ஒன்றாகும். அதனால் பல அருளாளர்கள், புலவர்கள், அரசர்கள் ஆகியோரின் சரியான வாழ்க்கை நிகழ்ச்சிகள் தெரியாமலே உள்ளன.

மற்றும், தமிழகச் சான்றோர்கள் 'யான்', 'எனது' என்னும் செருக்கற்று இருத்தலையும், தம்மைப்பற்றி வியந்து பேசாமையையும் முதன்மையாகக் கருதியதால், அவர்கள் செய்துள்ள சிறப்புச் செயல்களைப் பின் சந்ததியினராகிய நாம் தெரிந்து கொள்ள இயலவில்லை.

மேற்கூறிய காரணங்களால், அருணகிரியாரின் வரலாறும் ஆதாரங்களோடு முழுமையாகக் கிடைக்கவில்லை. என்றாலும், செவிவழி (கர்ணபரம்பரையாக) வந்த சில செய்திகளை இங்கே காண்போமாக:

அருணகிரிநாதர் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபுடதேவ அரசன் காலத்தவர். அவர் திருவண்ணாமலையில் அவதரித்தார். இளமையில் இன்பத் துறையில் எளியராகி நோய்வாய்ப்பட்டு, பல துன்பங்களுக்கு ஆளானார். அதனால் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணி (வல்லாள மன்னன் கட்டியுள்ள) திருக்கோயில் கோபுரத்தின் மீதேறிக் குதித்துவிட்டார். ஆனால் முருகக்கடவுள், முனிவர் வேடத்தில் வந்து கீழே விழாதபடி அவரைத் தாங்கிக்கொண்டார். மற்றும், அவருக்கு உபதேசம் செய்து, ஜபமாலையைத் தந்து, 'சும்மா இரு' என்று கூறி, மோன நிலையை உணர்த்தி மறைந்தருளினார்.

உபதேசம் பெற்ற அருணகிரியார் கோபுரவாயிலையே தமக்கு இருப்பிடமாகக் கொண்டு, நிட்டைகூடி இருந்துவந்தார். அதன் பயனாக அவருக்கு இருந்த நோய்கள் நீங்கின. திருமுகம் பொலிவுற்றது. கண்களில் அருள் வழிந்தது. உடல் முழுவதும் தூய்மையும் ஒளியும் பெற்றது.

முருகனருளால் தாம் பெற்ற நன்மைகளை எண்ணி எண்ணி, நன்றி உணர்வு மேலோங்க, அவன் புகழைப் பாடுவதையே தம் தொழிலாகக் கொண்டார். தலங்கள்தோறும் சென்று முருகனைத் தரிசித்துத் திருப்புகழ்ப்பாடல்களைப் பாடத் தொடங்கினார். அவர்

பாடியவை 16,000 பாடல்கள் என்பர். அவற்றுள் இன்று 1307 பாடல்களே கிடைத்துள்ளன. திருப்புகழ்ப்பாடல்கள் சந்தச் சிறப்பும் ஓசை உயர்வும் மிக்கவை. இவற்றுள் 1008 சந்த வேறுபாடுகள் உள்ளன. இவருடைய பாடல்களில் வடசொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன.

திருப்பரங்குன்றம், மதுரை, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், திருப்போரூர், வடதிருமுல்லைவாயில், திருத்தணிகை, காளத்தி, விராலி மலை முதலிய பல தலங்களுக்கும் சென்று பாடியுள்ளார். வயலூரில் முருகவேளின் தரிசனம் பெற்றார். ஈழ நாட்டில் கதிர்காமம் முதலிய தலங்களையும் தரிசித்துப் பாடிப் பெரும் புகழ் பெற்றார். மோன நிலையில், அநுபூதியையும் பெற்ற மகானாக விளங்கினார்.

அவர் காலத்தில் 'வில்லிபுத்தூரார்' என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் வட மொழியிலும், தமிழிலும் வல்லவராய் இருந்தார். அவர் 'வரபதியாட்கொண்டான்' என்னும் சிற்றரசனின் அவைப் புலவராக இருந்தார். அவர் கல்விச் செருக்கால், தாம் செல்லும் இடங்களில் உள்ள புலவர்களை வாதுக்கு அழைத்து, கடுவினாக்களை எழுப்பி, விடையிறுக்க இயலாதவருடைய காதைத் துறடு கொண்டு அறுத்து வந்தார்.

வில்லிபுத்தூரார் திருவண்ணாமலைக்கு வந்தபோது, அவ்வூரில் உள்ள புலவர்களில் அருணகிரியார் சிறந்தவர் என்பதை அறிந்து அவரை வாதுக்கு அழைத்தார். அருணகிரியாரும் வாதுக்கு உடன்பட்டார். தாம் பாடியுள்ள ஒரு பாட்டுக்கு வில்லிபுத்தூரார் உரை கூறிவிட்டால், தாம் தோற்றதாகக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். அதற்கு வில்லிபுத்தூரார் உடன்பட்டுச் செய்யுளைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொண்டார். அருணகிரியாரும் தாம் இயற்றியுள்ள 'கந்தரந்தாதி' என்னும் நூலில் 54-வது ✽செய்யுளை ஓதினார். அது வருமாறு:

'திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்ததி தித்திதத்த தேதுத்தி தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததீ தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித் திதீதீ திதிதுதி தீதொத்ததே'

✽இச்செய்யுளின் பதவுரை:

திதத்தத்தத்தித்த = திதத்தத்தத்தித்த என்னும் தாள பிரமாணங்களை
திதி = திரு நடனத்தினால் காப்பாற்றி வருகின்ற

தாதை	=	சிவபிரானும் (சீகண்ட உருத்திரரும்)
தாத	=	நான்முகனும்
துத்தி	=	படப்பொறியினையுடைய
தத்தி	=	பாம்பின்
தா	=	இடத்தையும்
தித	=	நிலைபெற்றுக்கொண்டு
தத்து	=	ததும்புகின்ற
அத்தி	=	கடலைப் பாலாகக் கொண்டு
ததி	=	தயிரானது
தித்தித்ததே	=	தித்திக்கின்றதென்று
து	=	உண்ட கண்ணபிரானும்
துதித்து	=	துதி செய்து வணங்குகின்ற
இதத்து	=	பேரின்ப வடிவினனான
ஆதி	=	மூலப்பொருளே!
தத்தத்து	=	தந்தத்தை உடைய
அத்தி	=	அயிராவதத்தால் வளர்க்கப்பட்ட
தத்தை	=	கிளியைப்போல் உள்ள தெய்வ யானைக்கு
தாத	=	தொண்டனே!
திதே	=	தீமையை
துதை	=	நெருங்கிய
தாது	=	ஏழு தாதுக்களால் நிறைந்ததும்
அதத்து	=	மரணத்தோடும்
உதி	=	பிறப்போடும்
தத்து	=	பல தத்துகளோடும்
அத்து	=	இசைவுற்றதுமான
அத்தி	=	எலும்புகளை மூடிய
தித்தி	=	பையாகிய இந்த உடல்
தீ	=	நெருப்பினால்
தீ	=	எரிக்கப்படுகின்ற
திதி	=	அந்த நாளிலே
துதி	=	உன்னைப்போற்றி செயும்
தீ	=	அறிவானது
தொத்தது	=	உனக்கே எந்நாளும் அடிமையாக இருக்க வேண்டும்.

இதைக்கேட்ட வில்லிபுத்தூரார் பொருள் காண முடியாமல் திகைத்து நின்றார். தம் தோல்வியையும் ஒப்புக்கொண்டார். ஒப்பந்தப்படி வில்லிபுத்தூராரின் காதை அருணகிரியார் அறுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதைச் செய்யாமல், காதறுக்கும் வேலையை இனியேனும் விட்டுவிடும்படி, அறிவு புகட்டி அனுப்பி விட்டார். வில்லிபுத்தூரார், அருணகிரியாரின் புலமையையும், விரிந்த கருணை உள்ளத்தையும் பாராட்டிச் சென்றார்.

செல்லும்போது, திருவண்ணாமலைத் திருக்கோயிலின் வழியாகச் செல்லவேண்டி இருந்தது. வில்லிபுத்தூரார், சிவபிரான் திருக்கோயிலைத் தரிசிக்கலாகாது என்னும் கருத்துடையவராதலால் திரையிட்டுச் சென்றார். இதனை அறிந்த அருணகிரியார்,

'புரத்தை, நரசிங்கத்தைப், போர்வேளைக் கூற்றை,
எரித்தவர்க்குத் தாசன் எதிரே - நிரைத்தபுகழ்
தேன்காட்டும் சோணகிரித் தேசிகனைப் போற்றாமல்
ஏன் கெட்டுப் போறான் இவன்?'

என்று பாடினார் என்றும், அதனால் வில்லி, தம் கண்ணிழந்தார் என்றும், மீண்டும் அருணகிரியாரின் கருணையால் திரும்பப் பெற்றார் என்றும் கூறுவர். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரே தாம் இயற்றிய பாரதத்தில், வில்லி, சிவபிரானைப் புகழ்ந்து பாடினார் என்றும் கூறுவர்.

இவ்வாறெல்லாம் அருணகிரியாரின் புகழ் ஓங்கி வளர வளர, தீயோருக்கு அதனைப் பொறுக்க முடியவில்லை. அப்போது திருவண்ணாமலையிலேயே சம்பந்தாண்டான் என்னும் வேறொரு புலவன் இருந்தான். அவனுக்குப் புலமையோடு, அழுக்காறும் மிகுதியாக இருந்தது. அவன் தேவி உபாசகனாகவும் இருந்தான். அவன் அருணகிரியாருக்குத் தீங்கு செய்ய எண்ணி ஒரு சூழ்ச்சி செய்தான். அரசனிடம் சென்று (அருணகிரியார்) முருகக் கடவுளின் தரிசனத்தைத் தமக்குக் கிடைக்கச் செய்யும்படி உத்தரவிடச் செய்தான். அருணகிரியாரும் அதற்கு ஆவன செய்தார். தேவி உபாசகனான சம்பந்தாண்டான் அதைத் தடுத்துப் பார்த்தும், தடுக்க இயலவில்லை. அரசன் முருகக் கடவுளின் தரிசனத்தைப் பெற்றான். முருகப் பெருமானின் பேரொளியைத் தாங்க இயலாத அரசன் தன் கண்களை இழந்தான்.

அந்த நிலையிலும், சம்பந்தாண்டான் வேறு ஒரு சூழ்ச்சியைச் செய்தான். அதாவது அரசன் கண்களை மீண்டும் பெறுவதற்கு இந்திர லோகத்திலிருந்து பாரிசாத மலரைக் கொண்டுவரும்படி

அருணகிரியாருக்கு ஆணை பிறப்பித்தான். அருணகிரியாரும், தம் உடலை ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட்டு, கிளி உருவில் சென்று பாரிசாத மலரைக் கொண்டு வந்தார். இதற்கிடையில், சம்பந்தாண்டான், அவருடைய உடல் உள்ள இடத்தை அறிந்து கொண்டு அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்லி அதனை எரிக்கச் செய்தான்.

மீண்டு வந்த அருணகிரியார் தம் உடலைக் காணாது, அரசனைக் கண்டு தமது நிலையை உணரும்படிச் செய்து, அந்நிலையிலேயே நிட்டையில் அமர்ந்து, இறைவன் திருவடிகளில் இரண்டறக் கலக்கின்ற சுத்தாத்துவித முத்திப் பேற்றை அடைந்தார். அருணகிரியார் முருகன் தோளில் அமர்ந்து கந்தரநுபூதி பாடல்களைப் பாடியருளினார் என்றும் கூறுவர்.

அருணகிரியார், 36 தத்துவங்களை ஒப்புக்கொண்டு இருப்பதனாலும், சுத்தாத்துவித முத்தியைப் பற்றி விளக்கி இருப்பதனாலும் அவர் சைவ சித்தாந்தி என்பது புலனாகும்.

அவர் திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு ஆகிய நூல்களை இயற்றியருளினார்.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு அழகரடிகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில

(திரு. த. ஆறுமுகம்)

தமிழகம் செய்த தவப்பயனால் ''தோன்றிற் புகழோடு தோன்றுக'' என்னும் திருவள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, சிவத்திரு. அழகரடிகளார் கருவிலே திருவுடையராகி 1904ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாளன்று மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கத்தில் திரு. சுப்பராயப்பிள்ளை திருமதி. மாணிக்கம்மாள் என்னும் பெற்றோருக்குப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'பாலசுந்தரம்' ஆகும்.

சிறுவராக இருந்தபோதே தம்மையொத்த பிள்ளைகளுக்குத் தலைவராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். தம் 16ஆம் வயதில் கல்விக்கடலாகிய சிவத்திரு. மறைமலையடிகளார்க்கு மாணவராகி அவரிடம் கல்வி பயின்றதோடு அவர்தம் தனித்தமிழ் இயக்கத்துக்கு உறுதுணையாகவும் இருந்தார். ''பாலசுந்தரம்'' என்னும் இவர் பெயரை ''இளவழகனார்'' என்று மறைமலையடிகளார் மாற்றியமைத்தார்.

அடிகளார் தம் 19ஆம் வயதில் ''குட்டிக்குறள்'' என்னும் நூலின் ''உலகுக்கெல்லாம் ஒரு பொருள் முதலே'' என்னும் முதற் குறளுக்கு 60 பக்கங்களில் பேருரை எழுதினார். தம் 20ஆம் வயதில் ஆசிரியர் மறைமலையடிகளார் இயற்றிய ''திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை''க்கு விளக்கவுரை எழுதி அவர்தம் பாராட்டினையும் பெற்றார்.

தம் 21ஆம் வயதில் திருமதி. தங்கம்மாள் என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். இவருக்கு இரு பெண் மக்கள் உள்ளனர். மூத்தவரை மீஞ்சூர் டாக்டர் சண்முகம், எம்.பி.பி.எஸ். என்பவரும், இளையவரை குருகுலத்தில் ஆசிரியரான திரு. சுப்பிரமணியம் (தமக்கை மகனார்) என்பவரும் மணந்து கொண்டனர்.

1928-31 ஆண்டுகளில் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகப்புலவராக இருந்து அரும்பணியாற்றினார். 1933-ல் தனி அச்சகம் நிறுவி ''முல்லைக்கொடி'' என்ற கிழமை இதழைத் தோற்றுவித்தார்.

1934-36 ஆண்டுகளில் வாலாசாபாத்தில் ஆசிரியர்களுக்குச் சாத்திர வகுப்புக்களை நடத்தினார். 1936-ல் திருவண்ணாமலை இரமணாசிரமத்திலும் 1938-ல் பாலாற்றங்கரையிலுள்ள பிணாவூர் மலையிலும் தவமியற்றியவை குறிப்பிடத் தக்கனவாகும்.

1940-42 ஆண்டுகளில் மீண்டும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பணியில் ஈடுபட்டார். தங்கசாலை, தொண்டமண்டலம் பள்ளியில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு கேட்க 1942-43-ல் சிவஞானபோத விரிவுரை செய்தார். 1944-ல் தொடங்கி ஏழு ஆண்டுகள் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் திருமந்திர விரிவுரையாற்றி, திருவாவடுதுறையில் 26-ஆம் பட்டம் திருப்பெருந் திரு அம்பலவாண பண்டார சந்நிதிகள் முன்னிலையில் நிறைவு செய்து ''திருமந்திரப் பேராசிரியர்'' என்ற பட்டமும் பெற்றார்.

1946ஆம் ஆண்டு திருக்கழுக்குன்றத்தில் மேற்படி திருக்கூட்டச் சார்பில் மாணிக்கவாசகர் திருநாளில் திருமுறைப் பெருவிழாவைத் தொடங்கி வைத்தார். இன்றும் இவ்விழா ஆண்டுதோறும் சிறப்புற நடந்து வருகின்றது.

1949ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் தலைமையில், தாம் பிறந்த ஊரான மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கத்தில் குருகுலத்தின் திறப்பு விழாவை நடத்தினார்.

1950-62 ஆண்டுகளில் சென்னை இறைபணி மன்றச்சார்பில் 12 ஆண்டுகள் ''பெரிய புராண விரிவுரை'' அடிகளாரால் நிகழ்த்தப்பெற்றது. 1953-54ல் கந்தரநுபூதி விளக்கவுரையாற்றினார்.

1952-57 ஆண்டுகளில் பாடல் பெற்ற தலங்களுக்கு அவ்வப் போது நூறு இருநூறு மாணவ அன்பர்கள் புடைசூழத் திருப்பயணம் மேற்கொண்டு தமிழையும் சைவத்தையும் குருகுல இயக்கத்தையும் பரப்பினார். 1957-58 ஆண்டுகளில் கல்கத்தா, பம்பாய், காசி, புவனேசுவரம், பூரி, கோகரணம், திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்) ஆகிய இடங்களுக்குச் சென்று விரிவுரைகளும் வழிபாடுகளும் செய்து வந்தார்.

சென்னையிலும் தமிழகத்துச் சிற்றூர் பேரூர்களிலுமாக ஆயிரக் கணக்கான சமய இலக்கிய விரிவுரைகளை நிகழ்த்தியவர் அடிகளார். அவர்தம் தொடர் விரிவுரைகளில் திருக்குறள், திருவாசகம், திருக் கோவையார், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள், திருமந்திரம், அருட்பெருஞ்சோதி அகவல், கந்தரனுபூதி முதலிய நூல்கள் புதுவிளக்கங்கள் பெற்றன. அடிகளார் தோற்றத்தில் மிக எளியவராக

இருந்தார். அதனால் அவர்பால் எல்லோரும் நெருங்கிப் பழக வாய்ப்பாய் இருந்தது. வெள்ளைக்கதரே அவர் ஆடை. தம் 30ஆம் அகவையிலேயே அகத்துறவு பூண்ட அடிகள் ஒரு துறவி போலவே காட்சியளித்தார். எளிய உணவைப் பழகிக்கொண்டார். உடல்நலத் தில் போதிய அக்கரை எடுத்துக்கொண்டாரில்லை. அவர் மேற் கொண்ட தொண்டுகளால் அவர் தூக்கம் குறைந்தது! அலைச்சல் மிகுந்தது!! அவர் எண்ணமெல்லாம் பிறர்க்கென வாழும் பெருநெறி யிலேயே நிலைத்திருந்தது.

அவருடைய விரிவுரைகள் எளிமையாக விளங்கினமையால் ஆண்களும் பெண்களும் திரளாக வந்து விரும்பிக் கேட்டனர். அவர் பேச்சில் சிறுவர் சிறுமியர்க்கேற்ப நகைச்சுவையும் கலந்திருந் தது.

சமய விரிவுரைகளில் பெரும்பாலும் வயதானவர்களையும், மற்றும் சாத்திர வகுப்புகளில் ஒரு சிலரையும் மட்டுமே காணவியலும் நிலையை அடிகளார் மாற்றியமைத்தார். அவர் சென்றவிடமெல்லாம் ஏராளமான இளைஞர்களும் சூழ்ந்துகொண்டு அவர் உரைகளை ஒன்றுவிடாமல் குறிப்பெடுத்துக் கொள்வார்கள். ஐயங்கள் கேட்பதை வரவேற்று அவற்றிற்குத் தெளிவான விடைகளை அளிப்பது அடிகளாரின் சிறப்பியல்பு.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய அடிகள் தொடர்பால் பல இல்லங்களில் திருத்தங்கள் உண்டாயின. பலர் தூய உணவு மேற்கொண்டனர். பல குடும்பங்களில் இறைநம்பிக்கை யும் வழிபாடுகளும் மலர்ந்தன. கருத்து வேறுபாடு கொண்டிருந்த பலர் தெளிவு பெற்றுத் தம் கருத்துகளை மாற்றிக்கொண்டு நல்வழிப்பட்டனர். திருமுறைகள், திருக்குறள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றின் சிறப்புக்களை எடுத்துரைத்தார்.

அடிகள் சங்க இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் கொண்டிருந்தார். ''முற்கால சங்கப்புலவர் தம் உலகியற்கைப் பாடல்களுக்கும் பிற்காலச் சமயகுரவர் பாடல்களுக்கும் இடையே யாதும் வேற்றுமை தோன்றாது. மற்றும் அவற்றின் கருத்தொருமை யும் தொண்டின் பெருமையும் நன்கினிது விளங்கும்'' என்று அவர்தம் புறநானூற்றுச் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார். இதனால் போலும் அடிகள் சங்கம் மருவிய நூல்களுக்கே விளக்கங்கள் பல வரைந்தார். அடிகளாரியற்றிய நூல்களின் பட்டியல் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கின்றது.

அடிகளார், பேச்சு எழுத்துக்களோடு அமையாமல் பெரியதோர் இயக்கத்தையும் தோற்றுவித்தார். தம் எளிய வாழ்க்கையால் தொகுத்த பொருளைக் கொண்டும் மாணவர், அன்பர், ஆர்வலர் தந்த காணிக்கைகளைக் கொண்டும் குருகுலத்தை அமைத்தார்.

திருக்குறளால் மட்டுமே உலகிலுள்ள அனைவரையும் ஒன்று திரட்ட முடியுமென்று கண்ட அடிகள் 'திருக்குறள் பீடம்' அமைத்து, 'பொதுமறை' என்ற திங்கள் இதழையும் திருக்குறள் வெளியீடுகள் பலவற்றையும் பரப்பினார்.

பாடல் பெற்ற தலங்களில் குருகுலக்கிளை நிலையங்கள் பல அமைத்து அவற்றின் வாயிலாக ஒவ்வொரு தலத்துக்கு ஒவ்வொரு திருக்குறள் அதிகாரம் என்று வகுத்துப் பரப்பும் எண்ணத்துடன் பல கிளை நிலையங்களையும் அமைத்து நடத்தி வந்தார்.

அடிகளார் மேற்கொண்ட திருப்பயணங்கள், ஆண்டு விழாக்கள், திருக்கழுக்குன்ற மாணிக்கவாசகர் விழா, திருஞானசம்பந்தர் இசை விழா, அங்கு அமைத்த அப்பர் தொண்டர் அணி முதலியவற்றால் பலதிறப்பட்டோர் இணக்கங்களும், அவற்றால் குருகுல இயக்கமும் நன்கு வளர்ந்தது. குருகுலத்தில் தற்பொழுது ஆண்கள், பெண்கள் உயர்நிலைப்பள்ளிகள், உணவு விடுதிகள் அச்சகம் முதலியவை செயல்பட்டு வருகின்றன.

அடிகளாரின் சிறந்த புலமையைப் போற்றியும், அவர் தொண்டின் திறத்திற்கும் பெருமக்கள் பலர் பொன்முடிப்புக்களையும், பட்டங்களையும் வழங்கியுள்ளனர். சில பட்டங்கள் வருமாறு:

1) செந்தமிழ்ச் சிவநெறிச் செஞ்சொற்கொண்டல் (1942)

2) திருமந்திரப் பேராசிரியர் (1949)

3) சித்தாந்தச் செஞ்ஞாயிறு (தூத்துக்குடி)

4) சங்க நூற்பெரும்புலவர் (1955)

5) திருக்குறள் அடிகள் (1964)

6) சைவப்பெரும் பேராசிரியர்

2-5-60 அன்று ஆசிரியர், திருமுழுக்குப் (ஆசாரிய தீக்கை) பெற்று 'அழகரடிகள்' என்ற தீக்கைத் திருப்பெயர் கொண்டு திருக்குறள் பீடாதிபதிகளானார்.

1965-ஆம் ஆண்டு அடிகளாருக்கு மணிவிழாவும் 1971-ல் பவள விழாவும், 1975-ல் முத்து விழாவும் சிறப்புற நிகழ்ந்தன.

அடிகள் தம் பெயரராகிய 'குருபழநி அடிக'ளாரை இரண்டாவது பீடாதிபதியாக (இளவரசாக) 1-10-79 அன்று அமைத்தார்.

18-2-81 மாசி மக நன்னாளில் அடிகளார் இறைவன் திருவடி சேர்ந்தார். குருகுலத்திலேயே அடிகளார் திருமேனி அடக்கம் செய்யப்பட்டது. சென்னைச் சிவநேயச் செல்வர் திரு. வ.ஏ. சண்முகம் செட்டியார் அவர்களால் அங்கு திருவடிக்கோயில் எழுப்பப்பட்டு, சிறப்புத் திருக்குடமுழுக்கும் நடைபெற்றது. ஆண்டு தோறும் மாசிமகத்தில் சிறப்பு வழிபாடுகளும் நிகழ்ந்து வருகின்றன.

77 ஆண்டுகள் வாழ்ந்த அடிகளாரின் ஒப்பற்ற வாழ்க்கை நமக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாகும். அவர்தம் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாமும் நல்லவராக, இனியவராக, நடுநிலையுள்ளவராக, ஏதேனும் ஒரு நற்பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோமாக.

வாழ்க அடிகளார் புகழ்!

சிறக்க அவர் கண்ட இயக்கம்!!



‘திருக்குறள் பீடம்’
குருகுலம் அழகரடிகள்

அழகரடிகளார் இயற்றிய நூல்கள்

1) சங்க நூற்கட்டுரைகள் 2 பகுதிகள்

2) சங்க இலக்கிய இன்கவித்திரட்டு 3 பகுதிகள் (இவை திரு. இர. பாலகிருட்டின முதலியார் அவர்களால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.)

3) பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை

4) பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை

5) தொல்காப்பியம் குறிப்புரை

6) அகத்திணையியல் விளக்கம் (50 நாட்கள் அரசமரத்தடியி லிருந்து எழுதப்பட்டது)

7) கலித்தொகை விளக்கவுரை

8) திருமுருகாற்றுப்படை அகராதி

9) முல்லைப்பாட்டு அகராதி

10) பட்டினப்பாலை அகராதி

11) நீதிவெண்பா, நான்மணிக்கடிகை, முதுமொழிக் காஞ்சி, நாலடி யார், நீதிநெறி விளக்கம் - இவற்றிற்கு உரை.

12) ஒளவையார் திருவுள்ளம்

13) அதிவீரராமர் அறநெறி

14) சிவப்பிரகாசர் செந்நெறி

15) ஜெனோவா வீரன் (கொலம்பசு)

16) மறைமலையடிகளார் மாட்சி

17) சிவஞான போத ஆராய்ச்சி

18) திருக்குறள் அறம் (பரிசு பெற்ற நூல்)

19) ஈரடி இருநூறு உரை (மற்றும் பல குருகுல வெளியீடுகள்)

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

அறிமுகம்

(1) கந்தரநுபூதி - நூல்

ஒரு நூலுக்குப் பெயர் வைப்பது என்று பார்க்கும்போது அந்நூலின் முதல் சொல்லையே வைப்பது ஒரு முறையாகும். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்கள் இந்த முறையிலேயே பெயர்களைப் பெற்றுள்ளன.

அன்றி, ஒரு நூலுள் வருகின்ற சொற்களுள் எது முதன்மையாக உள்ளதோ அதனையோ, ஆசிரியரின் பெயரையோ வைப்பதும் உண்டு. கந்தரநுபூதி என்னும் இந்நூலில் 43-வது பாடலில் ''பேசா அநுபூதி பிறந்ததுவே'' என்னும் ஒரு தொடர் வருகின்றது. இத்தொடரில் உள்ள 'அநுபூதி' என்னும் சொல்லே இந்நூலில் முதன்மை பெற்று விளங்குகின்றது. எனவே, அச்சொல்லையே இந்நூலுக்குப் பெயராக வைத்துள்ளனர். இந்நூல் தெரிவிக்கும் பல கருத்துக்களுள் அநுபவமே முதலிடம் பெறுவதனால், இந்நூலின் பெயர் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

'அநுபூதி' என்பது அநுபவச் செல்வம் ஆகும். 'அநு' என்பது ''உடன்''. 'பூதி' என்பது ''ஆதல்''. எனவே, 'அநுபூதி' என்பது உடனாதல் ஆகும். கந்தரநுபூதி என்பது கந்தனுடன் ஒன்றாதல் என்று பொருளாகும்.

மெய்யுணர்வோடு அநுபவப்பட்டு, அதனால் வரும் பாட்டே அநுபூதி எனப்படும். அது பிறரையும் அநுபூதியில் உய்ப்பதாகும்.

கந்தரநுபூதி நூல் இசைத்தமிழைச் சேர்ந்ததாகும். அருணகிரியார் அருளிச் செய்த கந்தரந்தாதி இயல் தமிழையும், கந்தரலங்காரம் நாடகத்தமிழையும் சேர்ந்தவை ஆம்.

இந்நூலை அவர் தம் உடம்பில் இருந்தபோதல்லாமல் வேற்று உடம்பில் இருந்து பாடியருளினார் என்பர். திருமூலரும் அவ்வாறே வேற்று உடம்பிலிருந்துதான் திருமந்திரத்தை அருளினார். இந்த இரண்டு நூல்களுமே மந்திர நூல்கள் ஆம்.

அருணகிரியாரின் வேற்று உடம்பு என்பது கிளியாகும். கிளி அன்புக்கு உரியது. மக்களில் அன்பு பாராட்டும்போது 'கிளியே' என்று கொஞ்சுவதனால் இது விளங்கும். கிளி பறப்பது. அதனால் அவர் வான் நிலையிலிருந்து அதாவது பரந்த, சூக்கும நிலையிலிருந்து இதனைப் பாடியிருக்கின்றார்.

கந்தரநுபூதிப் பாடல்கள் நெஞ்சத்தை உருக்கவல்லவை. அவற்றைப் பாடிக்கொண்டே இருந்தால், நம்மை அறியாமலே நாம் தூய்மை பெறுவோம்.

பாராயணம் செய்வது நமக்கு முடியாத செயல் என்று சொல்வதற்கில்லை. நேர்ந்த வரை செய்துகொண்டே போனால், அதுவே நம் வாழ்வை நல்வழியில் நடாத்திச் செல்லும்.

இராவ்பகதூர் தணிகைமணி டாக்டர் வ.சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் இந்த நூலைப் பதிப்பித்துள்ளார். அவருடைய பதிப்பைத்தவிர வேறு பல பதிப்புக்களும் வெளிவந்துள்ளன.

ஒரு பதிப்பில் அநுபூதிப்பாடல்களை உலகியலுக்கு, அதாவது நோய் நீக்கம் போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம் என்னும் குறிப்பு உள்ளது. இந்நூலை உயர்ந்த அநுபவத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்நூலால் தெய்வ பத்தியை வளர்த்துக் கொள்வோமானால், நோய்கள் தாமே நீங்கிவிடும். நோய் நீக்கத்துக்கான வாய்ப்புகள் தாமே வந்து சேரும்.

இந்நூல் சன்மார்க்க நெறியை விளக்குவதாகும். சன்மார்க்கம் என்பது மாணிக்கவாசகர் பின்பற்றிய அன்பு நெறியாகும். இந்நூலில் வள்ளிப்பிராட்டியாரைப்பற்றிய குறிப்புகள் பல முறையும் வந்துள்ளன.

இந்நூல் அகநிகழ்ச்சியாகிய யோகம், மற்றும் நாதவிந்துக்களின் சேர்க்கையைப் பற்றி விளக்குகின்றது. இதில் உள்ள ஒவ்வொரு சொல்லும், உள்ளுணர்வுக்குத் தக்க கோலத்தைக் காட்டுவதாக உள்ளது.

கந்தரநுபூதிப்பாடல்கள் ஒவ்வொன்றும் 'முருகன்' என்னும் சொல்லுக்கு விளக்கம் தருவனவாகவும், அவனுடைய திருவிளையாடல்களைக் குறிப்பனவாகவும் அமைந்துள்ளன.

இந்நூலைப் பாராயணம் செய்து தெய்வ பத்தியையும் அகநாட்டத்தையும் யோகப் பயிற்சியையும், தெய்வ நலங்களையும் பெறுவோமாக!

திருச்சிற்றம்பலம்

(2) சக்கரம்

ஒரு சொல் ஒரு கருத்தைத் தரும். அக்கருத்தைப் பலமுறை எண்ணிப்பார்த்தால் அதற்குக் கொஞ்சம் ஆற்றல் வரும். அச்சொல்

சான்றோர் வாயிலாக வந்த மந்திரச் சொல்லாக இருக்குமானால், அது ஆற்றல் பெறுவதோடு ஒரு உருவத்தையும் கொள்ளும்.

கருத்து அல்லது எண்ணம் உருவத்தைப் பெறுகிறது என்னும் உண்மையை நம் அநுபவத்திலேயே காணலாம். ஒருவர் மீது இரக்கம் கொண்டு நினைத்தாலோ கோபம் கொண்டு நினைத்தாலோ, நினைக்கப்பட்டவரின் உருவம் நம் கருத்தில் தோன்றுவதை நாம் அறிவோம். (உருவம் தோன்றுவதோடு நம் உணர்ச்சிக்கு ஏற்பக்கண் களில் நீர் கசிவதும் உடலில் விரைப்பும் வேகமும்கூடத் தோன்றும்.) ஆக, நம் எண்ணத்துக்கு ஏற்ப உருவம் அமைகின்றது என்பதில் ஐயம் இல்லை.

நம்முடைய எண்ணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நம் தலைவிதியை அமைக்கின்றன. அத்தலைவிதி, அடுத்து வரும் பிறவிகளில் நமக்கு ஏற்ற உருவங்களைத் தந்து, வாழ்வை இயக்குகின்றது.

மேற்கூறியவற்றால், எண்ணம் உருக்கொள்கிறது என்பதும், உரு இயக்கம் கொள்கிறது என்பதும் புலனாகும்.

அழுத்தம் பெறாத எண்ணம் உருக்கொள்வதில்லை. மற்றும், எல்லா உருவங்களும் இயங்குவதும் இல்லை. ஒரு மாட்டு வண்டியில் அச்சு (பார்), அச்சாணி, குடை முதலிய பல உறுப்புக்கள் உள்ளன. அவை எல்லாம் அசைவதில்லை. அவற்றை எல்லாம் தாங்கிக்கொண்டு அவற்றுக்கு இயக்கம் தருவது - வட்ட வடிவின தான வேறு ஒரு பகுதி உள்ளது. அது இயக்கம் உடையதாதலால், அதனைச் சக்கரம் என்கின்றோம். ஆக, இயங்குகின்ற உருவம் 'சக்கரம்' ஆகின்றது.

அருளாளர்களின் பாடல்களுக்குக் கருத்துக்கள் உள்ளன. அக்கருத்துக்களுக்கு உருவங்கள் உள்ளன. அந்த உருவங்களுக்கு இயக்கம் உண்டு. அவையே அப்பாடல்களுக்குரிய 'சக்கரங்கள்' ஆகின்றன.

அருளாளராகிய அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரநுபூதி யில் ஒரு காப்புச் செய்யுளும், 51 பாடல்களும் உள்ளன. இப்பாடல்களுக்கு, அவற்றின் கருத்துக்கேற்பச் சக்கரங்கள் உள்ளன. அவை இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

தனிப்பாடல்களுக்கான சக்கரங்களோடு, ஆறு ஆதார மலர் களுக்கான சக்கரங்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

(3) ஆதார மலர்கள்

கட்டடங்களைக் கட்டுவதற்கு முதலில் நாம் வரைபடங்களை (Plans) வரைந்து கொள்கிறோம். பிறகு அப்படங்களைப்போலக் கட்டடங்களை அமைக்கின்றோம். அவ்வாறே, அகத்துறையில், இறைவனால் கட்டப்பட்ட நம் உடம்புகளுக்கும் வரைபடங்கள் உள்ளன. அவையே ஆதார மலர்கள் ஆம்.

நம் நுண்ணுடம்புகளில் ஆறு ஆதார மலர்கள் உள்ளன. அவை 1) மூலாதாரம், 2) சுவாதிட்டானம், 3) மணிபூரகம், 4) அநாகதம், 5) விசுத்தி, 6) ஆக்ஞை ஆம். இவை நெற்றிக்கண் வரை உள்ளவை. (நெற்றிக்கண்ணுக்கும் மேல் இரண்டாவது தொகுப்பாகிய ஆறு மேல் ஆதாரங்களும் உள்ளன. அவை சகஸ்ராரத்தில் முதல், இடை, கடை என மூன்றும், பிரம்மரந்திரத்தில் முதல், இடை, கடை என்று மூன்றும் ஆம். ஒவ்வொரு ஆதார மலருக்கும் ஒரு சக்கரம் உள்ளது. அவற்றுள் ஆறு நடு எழுத்துக்கள் உள்ளன. அவ்வெழுத்துக்கள்: 1) ஓம், 2) ந, 3) ம, 4) சி, 5) வ, 6) ய என்பனவாம். நடு எழுத்துக்களைச் சுற்றிலும் வித்தெழுத்துக்கள் (பீஜாட்சரங்கள்) உள்ளன. வித்தெழுத்துக்கள் நடு எழுத்துக்கு வலு (பலம்) ஊட்டுகின்றன. ஒவ்வொரு மலருக்கும் பல இதழ்கள் உள்ளன. ஒவ்வொரு இதழுக்கும் ஒரு ஒலி அல்லது எழுத்து இருக்கின்றது. இவற்றின் விவரங்கள் பின்னே வருகின்றன.

இன்னமும் மாசுபடாத தூய மனம் உடைய பச்சிளங்குழந்தைகளுக்கும், தவமியற்றும் மாதர்களுக்கும் பல பதக்கங்களை அணிவிப்பர். தவப்பகுதியாகிய தலைக்கு சூரிய சந்திர பதக்கங்களையும் மார்பில் சிறிய, பெரிய பதக்கங்களையும் அணிவிப்பர். இப்பதக்கங்கள் எல்லாமே, ஆதார மலர்களை நினைவூட்டுவன ஆம். ஆதாரமலர்கள் பதக்கங்கள் என்றால், அம்மலர்களில் உள்ள எழுத்துக்கள், பதக்கத்தில் உள்ள இரத்தினங்கள் என்னலாம்.

முதல் ஐந்து ஆதாரமலர்களின் சத்திகள் ஒன்று சேர்ந்து ஆறாவதாகிய ஆக்ஞைக்கு பலம் கொடுக்கின்றன.

இந்த ஆறு ஆதார மலர்களைத் தியானிப்பதோடு அவற்றைப் புறத்தே எழுதி, பூசிக்கவும் வேண்டும். ஒவ்வொரு இதழ் வட்டத்துக்கும் ஒவ்வொரு வகையான கலசம் உண்டு. அக்கலசங்களை அமைத்து ஓமம் வளர்த்து, ஓமத்திலிருந்து கலசத்துக்குச் சத்தியை ஏற்ற வேண்டும். அக்கலசங்களுக்குத் தனித்தனியே ஆரத்தி எடுத்தும் பாவனையைச் செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆதாரமலர்களைப் பூசிப்பதும், தியானிப்பதும், அருள் அடிப் படையில் பத்தியோடு நடைபெற வேண்டும். பிறர் மேல் காழ்ப்பு, பகை முதலிய எண்ணங்கள் இருக்குமானால், அவை ஆற்றல் கொள்ளமாட்டா.

தூய்மையும், தெய்வபத்தியும் கொண்டு இந்த ஆறு ஆதாரங் களையும் தியானித்துக்கொண்டே இருந்தால், ஆன்மீகத் துறையில் மேலும் மேலும் வளர்ச்சி உண்டாகும். தியானிக்க வேண்டிய நேரம் மற்றும் முறைகளைப்பற்றிக் காப்புச் செய்யுளின் இறுதியில் (பக்கம் - 9) காணலாம்.

(4) மொழியும் எழுத்தும்

மொழி மன்பதையின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது. அருணகிரியார் அன்று பாடிய கந்தரநுபூதிப்பாடல்களை நாம் இன்று படிக்கிறோம் என்றால் அது மொழியினால்தான் முடிகிறது. மொழி யில்லையானால் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முடியாது. நாம் பயன்படுத்துகின்ற பண்டங்களையும் பணத்தையும் விட மொழி நமக்கு அதிகமாக உதவுகிறது. கருத்துப் பரிமாற்றமேயன்றி, குழந்தையைக் கொஞ்சுவதற்கும், ஆண்டவனைப் போற்றுவதற்கும் மொழி வேண்டும்.

மொழிகளுள் அவரவர் தாய்மொழியே எளிதாகக் கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுவதாக உள்ளது. எனவே, குறைந்தது நம் தாய்ஒழியையாவது நாம் சரியாகப் பயில வேண்டும். பயிலுவதோடு அதனைத் தப்பில்லாமல் அழகாய், ஆற்றலாய்ப் பேசவும், எழுதவும் முயல வேண்டும்.

ஒரு கருத்தை உணர்த்த ஒரு சொல் பயன்படுகிறது. 'சலசல' என்னும் வெறும் ஓசை எந்தக்கருத்தையும் உணர்த்தாமையால் அது சொல் ஆகாது. கருத்தை உணர்த்தும் சொல் பல எழுத்துக்களைக் கொண்டதாகவே இருக்க வேண்டுமென்பதில்லை. ஒரே எழுத்துக் கூட ஒரு கருத்தை உணர்த்துமானால், அது சொல்லாகும். அத்தகைய எழுத்துக்கு 'ஓரெழுத்து ஒரு மொழி' என்று பெயர். ஓரெழுத்தோடு ஒரு மெய்யெழுத்தைச் சேர்ந்த எழுத்தும் இந்த வகையைச் சேர்ந்ததேயாகும். இத்தகைய சுருக்கமான சொற்களைக் கொண்டே கருத்துக்களை விளக்கமாகத் தெரிவிப்பது ஒரு சிறப்பு முறையாகும். அது வெளிப்பாட்டின் உயர்நிலையைக் காட்டுவதாகும். இச்சிறப்பு தமிழுக்கு உள்ளது. காட்டாக, நாம் எப்பொழுதும் கண்ணெதிரே காண்கின்ற இயற்கைப் படைப்புகளை (ஐம்பூதங்களை) எல்லாம், மேலே குறிக்கப்பட்ட ஓரெழுத்தொரு மொழிகளாலேயே சுட்டிக்காட்

டியுள்ளனர். அச்சொற்கள் வருமாறு: மண் (கல்), நீர், தீ, கால், வான்.

மற்றும், சங்க நூல்களை ஆராய்ந்து பார்த்தால், அவற்றுள் மூன்று எழுத்துக்கு மேற்பட்ட சொற்கள் மிகக் குறைவாக இருப்பதைக் காணலாம். அதாவது ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று எழுத்துச் சொற்களைக் கொண்டே இத்தமிழ்மொழி இயங்கி வந்துள்ளது என்பது தெரியவரும். சொல் சுருக்கமாய் இருந்தாலும் கருத்து விளக்கம் தெளிவாகவே இருக்கும். அதில் குறை வருவதில்லை.

தமிழில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. அப்பன்னிரண்டு எழுத்துக்களும் ஒரு கருத்து அல்லது பல கருத்துக்களை உடையன வாக உள்ளன. அவை வருமாறு:

1) அ= அந்த, அழகு
2) ஆ= பசு, ஆன்மா
3) இ= இந்த, இரு
4) ஈ= கொடு, தேனீ
5) உ= உந்து, உமை
6) ஊ= ஊக்கம், ஊன்
7) எ= எந்த, எப்படிப்பட்ட
8) ஏ= அம்பு, இறுமாப்பு
9) ஐ= அழகு, தலைவர்
10) ஒ= ஒன்று
11) ஓ= வியப்பு, மதகுப்பலகை
12) ஔ= தாய், நிலம்

ஆக, சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் தமிழுக்குச் சிறப்பாய் அமைந்துள்ளது.

இம்மொழி இப்பொழுது பரவலாய் இல்லாமல் அடக்கமாய் உள்ளது. இருப்பினும் சத்தி குன்றாமல் உள்ளது. ''ஒளிந்து கொண்டால் ஒளியுண்டாகும்'' ''மறைந்து கொண்டால் மறை (மந்திரம்) உண்டாகும்'' என்னும் வழக்குகள் மொழிகளுக்கும் பொருந்தும். கோயிலில் கருவறை ஒடுக்கமாகத்தான் இருக்கும். மண்டபங்கள் விரிந்திருக்கும். என்றாலும் இவ்விரண்டனுள் கரு வறைக்குத்தான் முதன்மை உண்டு என்பதனை நாம் அறிவோம். அதாவது சுருக்கத்தில் சிறப்பும் ஆற்றலும் விளங்கும். தமிழுக்கும் அவை அமைந்துள்ளன.

தமிழுக்கு முன் ஒரு மொழி இந்நாட்டில் இருந்ததில்லை என்பதனை யாவரும் ஒப்புக்கொள்வர். அளவில் குறைந்து விட்டதானாலும் இன்றுவரை வழக்கில் இருப்பதும், பெரு மொழி யாய் இருப்பதும் இத்தமிழ்மொழியேயாகும். இது நெடுங்காலமாய் வாழ்ந்து வருகிறது என்று சொல்வதைத் தவிர, இதற்குக் காலம் குறிப்பிடுவார் யாரும் இல்லை.

தமிழ்மொழி வழங்கும் நாடு இன்று முழுமையாய் இல்லை. இன்றைய தமிழ்நாட்டின் தென்பகுதியில் பெருநிலப் பரப்பு தமிழ்நாடாக இருந்தது. அதற்குக் ''குமரிக்கண்டம்'' என்று பெயர். அதனையே 'நாவலந்தீவு', 'லெமூரியா' என்றும் கூறுவர். அது இன்றைய இந்தியாவைவிட மிகப்பெரிதாக இருந்தது. அதன் பெரும்பகுதி கடலில் அமிழ்ந்துபோய் விட்டது. அமிழ்ந்த பகுதிக்கு ஈடாகவே இன்றைய இமயம் மேலெழுந்தது. இமயம் முன்பு கடலில் இருந்ததென்பதற்கான அடையாளங்கள் விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனவே தமிழ்மக்கள் மற்ற மொழியினரை விடப் பழமையானவர்கள்; மொழியும் பழமையானது. முதன் முதல் நாகரிகம் மலர்ந்தது இக்குமரிக் கண்டத்திலேயேயாகும். எல்லார்க்கும் முன்னமே தெய்வத்தை உண்டென்று கூறியவர்களும், அதனை அறிந்து அநுபவித்தவர்களும் இத்தமிழர்களேயாவர்.

நெடுங்காலமாய் இருந்ததனால், நாட்டிலும், மொழியிலும் பல மாறுதல்கள் நேர்ந்து விட்டன. தமிழ்மொழிக்கு முதன் முதல் சித்திர எழுத்துக்களும், பிறகு கோட்டெழுத்துக்களும், பிறகு வட்டெழுத்துக் களும், பின் இவை கலந்த எழுத்துக்களும் வழங்கியுள்ளன. இந்த மாற்றங்கள் நேர்ந்தபோது, மற்ற எழுத்துக்கள் அதாவது பிரமி, நாகரி, கிரந்தம், தெலுங்கு, கன்னடம் மலையாளம் முதலியவை பிரிந்து விட்டன.

நோயில்லாத மூத்தோரைப் பார்த்தால் அவர்களிடம் தெய்வத் தன்மை விளங்குவதைக் காணலாம். அந்த முதுமையிலும் ஓர் அழகு காணப்படும். அவர்களுடைய பொக்கைவாய்க் கொச்சைப்பேச்சும் இன்பமூட்டும். அத்தகைய நோயில்லாத மூத்தவளே தமிழ்த்தாய் ஆவாள்.

மந்திரங்களை ஒலித்து, வேள்வி முதலியன செய்வதற்கும் (கிரியைக்கும்), சக்கரம் முதலியவற்றைப்பயன்படுத்தி உயிர்ப்பொடுக் கம் (யோகம்) செய்வதற்கும், அன்றாட வழக்கில் இல்லாத கடின ஒலிகளைத் தரக்கூடிய சில தனி எழுத்துக்களும் தேவைப்படுகின்றன. எனவே, பண்டைய சான்றோர், தம் சமய வாழ்வு மலர்ந்து கிரியைகளும், யோக முறைகளும், வளர்ந்தபோது வடமொழியைப் பயன்படுத்தினர். அந்த வடமொழியில் ஷ, ஸ, ஹ, க்ஷ போன்ற ஒலிகளும் வல்லின எழுத்துக்களாகிய க, ச , ட, த, ப-க்களுக்கு வல்லொற்று எழுத்துக்களும் சேர்க்கப்பட்டன. அவ்வாறே உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டனோடு மந்திரங்களுக்குத் தேவையான ரு, ரூ, லு, லூ ஆகிய எழுத்துக்களையும் சேர்த்துக் கொண்டனர். மற்றும் ஆய்த எழுத்தை இரண்டாகப் பிரித்து 'அம்' என்றும்

'அஹ' என்றும் வளர்த்துக் கொண்டனர். மந்திரங்களை உருவாக்குவதற்கென்றே இவ்வேறுபாடுகள் செய்யப்பட்டன.

ஆக, உலகியல் மற்றும் பத்தி, ஞான வாழ்வுக்கு இயல்பான இன்தமிழும், மந்திரக்கிரியைகளுக்கும் யோக முறைகளுக்கும் வடமொழியும் வழங்கி வந்தன. அதனாலேயே, தமிழர்களுக்கே உரிய ஆகமம் போன்ற நூல்கள் தமிழில் இல்லாமல் வடமொழியில் உள்ளன.

இதுகாறும் மொழியைப்பற்றிப் பார்த்தோம். இனி, எழுத்துக்களைப்பற்றிச் சிறிது பாா்ப்போம். எழுத்துக்களுக்கும், மனிதர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. மனித வாழ்வில், உயிரில்லாமல் உடல் இயங்குவதில்லை. அதைப்போலவே, எழுத்துக்களிலும், உயிரெழுத்தில்லாமல் மெய்யெழுத்து இயங்குவதில்லை.

மற்றவர்களை இயக்குகின்ற குணத்துக்கு இராஜஸ குணம் என்று பெயர். ஆட்சிப்பொறுப்பில் இருந்து கொண்டு மற்றவர்களை இயக்குவோர் இக்குணத்தைச் சேர்ந்தவராவர். அவ்வாறே மெய்யெழுத்துக்களை இயக்குகின்ற பதினாறு (16) உயிர் எழுத்துக்களும் இக்குணத்தைச் சேர்ந்தவையே. 51 எழுத்துக்களுள், உயிரெழுத்துக்கள் 16 போக மீதமுள்ள மெய் எழுத்துக்கள் 35. அவற்றுள் 26 தாமச குணத்தையும், 9 சாத்துவிக குணத்தையும் சேர்ந்தவையாம். தாமச எழுத்துக்கள் தடிப்பானவை. சாத்துவிக எழுத்துக்கள் மெல்லோசையுடையவை. அவை வருமாறு:

1) இராஜச எழுத்துக்கள்:
அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, லூ, ஏ, ஐ, ஓ, ஔ, அ0, அஹ — 16

2) தாமச எழுத்துக்கள்:
க, க₂, க₃, க₄, ச, ச₂, ச₃, ச₄
ட, ட₂, ட₃, ட₄, த, த₂, த₃, த₄
ப, ப₂, ப₃, ப₄, ச₂, ஷ, ஸ, ஹ, க்ஷ, ள — 26

3) சாத்துவிக எழுத்துக்கள்:
ங, ஞ, ண, ந, ம, ய, ர, ல, வ — 9

ஆக — 51

இனி இந்த 51 எழுத்துக்களுள் எவை எவை எந்தெந்த ஆதாரங்களைச் சேர்ந்தவை என்பவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

எண்	ஆதார மலர்	இதழ்களின் எண்ணிக்கை	அவற்றுக்கான எழுத்துக்கள்
1.	மூலாதாரம்	4	வ, ச(ஶ), ஷ, ஸ
2.	சுவாதிட்டானம்	6	ப:, ப:°, ம ய ர ல
3.	மணிபூரகம்	10	ட:, ட:°, ண, த, த°, த:, த:°, ந, ப, ப°
4.	அநாகதம் (இதயம்)	12	க, க°, க:, க:°, ங, ச, ச°, ச:, ச:°, ஞ, ட ட:
5.	விசுத்தி (கழுத்து)	16	அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, லூ, ஏ, ஐ, ஓ ஔ, அ°, அ:
6.	ஆக்ஞை (புருவ நடு)	3	ஹ, க்ஷ, ள

(5) மந்திர எழுத்துக்கள்

முன்பு குறிப்பிடப்பட்ட ஆறு ஆதார மலர்களுக்கும் ஆறு சக்கரங்கள் உள்ளன என்பதனைப் பார்த்தோம். அச்சக்கரங்களுக்குக் குறிப்பிட்ட ஒலிகளும் உள்ளன. ஒலியும் எழுத்தும் இல்லாமல் வாழ்வு இல்லை. அவற்றுள் சில ஒலிகளும் எழுத்துக்களும் பொருள் செறிந்தனவாய், ஆற்றல் மிக்கனவாய், மனித வாழ்வை உயர்த்துவன வாய், இறைவனோடு தொடர்புபடுத்தக்கூடியனவாய் உள்ளன. அவற்றுக்கு மந்திரங்கள் என்று பெயர்.

நம் முன்னோர்கள் ஆறு ஆதார மலர்களுக்கும் இன்னின்ன மந்திர எழுத்துக்கள் உரியவை என்று நியமித்துள்ளனர். அவை வருமாறு:

1. மூலாதாரம் — ஓம்
2. சுவாதிட்டானம் — ந
3. மணிபூரகம் — ம
4. அநாகதம் — சி
5. விசுத்தி — வ
6. ஆக்ஞை — ய

இவற்றுள் ''ஓம்'' என்பது பிரணவம் என்றும், மற்றவை திருவைந்தெழுத்து (பஞ்சாக்கரம்) என்றும் பெயர் பெற்றிருப்பதை நாம் அறிவோம்.

இந்த நூலாகிய கந்தரநுபூதி முருகனைப்பற்றியது. முருகனைப் பற்றிப் பேசவேண்டிய விரிவுரையில், சிவத்தைக் குறிக்கின்ற

திருவைந்தெழுத்தைப் பற்றிப் பேசலாமா என்னும் ஐயம் தோன்றக் கூடும். இதற்கான விளக்கம் வருமாறு:

நாம் வழிபடும் தெய்வம் எதுவாய் இருந்தாலும் எந்தத் தெய்வத்தைப் பற்றிப்பேசினாலும், நம் நாட்டவர் தெரிந்தெடுத்த மந்திரம் ஒன்றேயாகும். அதாவது 'நமசிவய' என்னும் மந்திரம் எல்லாத் தெய்வங்களுக்கும் பொருந்திய ஒரே மந்திரமாகும். சடாட்சரம் என்பதும் இந்த மந்திரமே. ஓங்காரத்தோடு கூடிய ஐந்தெழுத்துச் சடாட்சரம் ஆகின்றது. எனவே முருகனை வருவிக்க, ஏற்ற மந்திரமும் இதுவேயாகும்.

எண்ணத்தின் சத்திகள் முகத்தில் தோன்றுகின்றன. ஐந்து முகங்களுடைய சிவபெருமான் இடமிருந்துதான் ஆறுமுகங்களை யுடைய முருகன் தோன்றினான். ஆறாவது முகமாகிய 'அதோ முகம்'தான் 'ஓம்' ஆகின்றது.

தமிழ் மொழியிலிருந்து சலித்துப் பிழிந்து எடுக்கப்பட்டவையே இத்திருவைந்தெழுத்துக்கள். தமிழ்மொழியிலுள்ள வல்லின, மெல் லின, இடையின எழுத்துக்களிலிருந்து, தக்கவற்றைத் தெரிந்தெடுத்து பெரியோர்கள் இதனைச் செய்துள்ளனர்.

மந்திர எழுத்துக்களைத் தெரிந்தெடுப்பதில் சில நியமங்கள் உள்ளன. சொல்லுக்கு முதலில் வராத எழுத்துக்கள் மந்திரங்களுக்குப் பயன்பட மாட்டா. வல்லினமாகிய க, ச, ட, த, ப, ற க்களில் 'ட'வும், 'ற'வும் சொல்லுக்கு முதலில் வர மாட்டா. எஞ்சியுள்ளவற் றுள், 'ச'கரம் அமுத எழுத்தாகும். எனவே, இந்த எழுத்துக் கொள்ளப்பட்டது.

மெல்லின எழுத்துக்களாகிய ங, ஞ, ண, ந, ம, ன-க்களில், ஞ, ண, ன சொல்லுக்கு முதலில் வருவதில்லை. ஞகரம் அதிகமாக வருவதில்லை. எஞ்சியுள்ள 'ந' வும் 'ம' வும் கொள்ளப்பட்டன.

இடையின எழுத்துக்களாகிய ய, ர, ல, வ, ழ, ள-க்களில், ர, ல, ழ, ள-க்க்ள் மொழிக்கு முதலில் வரமாட்டா. எஞ்சிய 'ய' வும், 'வ' வும் கொள்ளப்பட்டன.

ஆக, 'ச'கரம் வல்லினத்திலிருந்தும், 'ந', 'ம' ஆகியவை மெல்லினத்திலிருந்தும் 'வ', 'ய' இடையினத்திலிருந்தும் எடுத்து இம்மந்திரத்தைச் செய்துள்ளனர். இந்த ஐந்து எழுத்துகளும் ஓரெழுத் தொரு மொழிகளே. அவற்றின் பொருள் (கருத்து) வருமாறு:

ந = நன்மை
ம = மலம்
சி = சிவம்
வ = அழைப்பு (அம்பிகையின் அழைப்பு)
ய = யான் (ஆன்மா).

இந்த எழுத்துக்களின் விரிவான விளக்கங்கள் பின்னே வருகின்றன.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

கந்தரநுபூதி

மூலாதார மலர் (1 + 4)

காப்புச் செய்யுள்

நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம் பணிவாம்.

I பொழிப்புரை

நெஞ்சமாகிய கனமான கல்லும், நெகிழ்ந்து உருகும் பொருட்டு, அடைக்கலம் என்று அடைந்தவர்களுக்கு அருள் புரியும் ஆறுமுகக் கடவுளுக்கு உண்மையோடு பொருந்திய, செம்மையான சொற்களா லாகிய இந்தக் 'கந்தரநுபூதி' என்னும் மாலை முதன்மை பெற்று வெளிவர, ஐந்து கரத்தினை உடைய ஆனைமுகக் கடவுளுடைய திருவடிகளை வணங்குவோமாக.

II விளக்கவுரை

(1) நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருக

நெஞ்சம் கனமானது; கல் போன்று கட்டியானது. அத்தகைய நெஞ்சம் உருகினால்தான் இறையருளைப் பெறமுடியும். அவ்வுருக் கத்தைப் பெறுவதே இந்த வாழ்க்கையின் நோக்கமும் பயனும் ஆகும். உருக்கம் எப்படி வரும்? பாடினால் வரும். நல்லோர் கூட்டுறவோடு, அருளாளர் பாடல்களை, தக்கோர் பாட, பொருள் தெரிந்து உணரும்போது, உருக்கம் வரும்.

'உருகுதல்' என்பது நுட்பம் பெறுதலாகும். கட்டியான பனிக்கட்டி கரைந்து நீராகும்போது 'உருகுகிறது' என்போம். மனித உள்ளத்துக்கு இந்த உருக்கம் வருவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன: (1) தமக்கு வரும் இடர்ப்பாடுகளை எண்ணி வருவது.

இந்த உருக்கத்தோடு அழுகையும் வருவதுண்டு. இது தன்னலத்தின் அடிப்படையில் வரும்.

(2) இறைவனை நாடவில்லையே என்றும், தன் குறைபாடுகளை-யும் குற்றங்களையும் எண்ணியும் வருவது. இரக்கங்காரணமாக பிறர்க்கு உதவ முடியவில்லையே என்று எண்ணும்போதும் வரும். இந்த இரண்டாவது உருக்கமே வேண்டத்தக்கது.

''நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருக'' என்னும் இத்தொடருக்குக் கனமான கல்போன்ற மனித நெஞ்சம் உருகும்படி என்று மேலே கூறிய உரை ஒருவகை.

இதே சொற்றொடருக்கு வேறு ஒரு பொருளும் உண்டு. அது - மனித நெஞ்சத்தினுள்ளே கனம் (பெருமை) பொருந்திய, ஒளி பொருந்திய மாணிக்கக் கல் (இறைவன்) ஒன்று மறைந்துள்ளது. அது இரக்கம் கொண்டு நெகிழ்ந்து அருளும்படி - என்பதாகும்.

(2) தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர் செஞ் சொல் புனைமாலை சிறந்திடவே

சண்முகனிடம் அடைக்கலம் புகுந்தால் மேற்குறித்த உருக்கம் வரும். அவன் இரங்கிவந்து உருக்கம் வரும்படி அருளுவான். அதற்கு நாம் எளியவராய் அவனிடம் ஒப்படைத்துக்கொள்ள வேண்டும். தக்கோரிடம் ஒப்படைத்துக் கொள்வதும் அவன் அருளுவதற்கு ஊட்டமான செயலேயாகும். தஞ்சம் புகுவதும், அடைக்கலமாவதும், அடிமை ஆவதும் எல்லாம் ஒன்றேயாகும்.

சண்முகன் சத்தியின் கூறு ஆவான். அதனால், சத்தியின் மடியில் இருப்பான் என்பர். தந்தையிடம் விநாயகர் இருப்பார். அவர் தந்தையிடமிருந்து பழத்தைப் பெற்றவர். அதுபோலச் சண்முகன் சத்தியிடமிருந்து வேலைப் பெற்றான். எனவே சண்முகனுக்கு சத்தி அம்சம் அதிகமாகும்.

சத்திக்கு இரக்கம் அதிகம். சத்தி, அடியவர் துன்பத்தைத் தாங்கொணாதது. காரைக்கால் அம்மையார் தலையால் நடந்தமையை முதலில் கண்டு இரங்கியது அம்பிகையே. முதன் முதலில் இரக்கங்கொள்வது அம்பிகையாதலால், அம்பிகையின் கூறாகிய சண்முகனுக்கு இரங்கும் இயல்பு மிகுதியாகும்.

சண்முகனுக்குச் செய்யப்படுகின்ற சொல் மாலையாகிய 'கந்தரநுபூதி' என்னும் இந்த நூல், சிறப்பாக அமையவேண்டும் என்பது அருணகிரி நாதரின் விருப்பமாகும். இச்சொல்மாலை உண்மை கலந்ததாகும். எனவே இதனை ''இயல்சேர் செஞ்சொல் மாலை'' என்றார். ''இயல்'' என்பது இங்கு இயற்றமிழைக் குறிக்கவில்லை. ஏனெனில் இந்நூல் இசைத் தமிழைச் சேர்ந்ததாகும். எனவே 'இயல் சேர்' என்பது ''உண்மை சேர்ந்த'' என்று பொருள்படும்.

'செஞ்சொல்' என்பது பக்குவத்திலிருந்து உண்டான சொல் ஆகும். செம்மையோடு கூடிய சொல் ''செஞ்சொல்'' ஆயிற்று. அது நம்மை வாழவைக்கும் சொல்.

சொல்மாலையைப் ''புனைவது'' என்பது இசையோடு பாடுதலாகும். பூக்களாலோ, அல்லது மணிகளாலோ செய்யப்படுவது மாலையாகும். மணிகளாலான மாலையானால் அதனைக் ''கோப்பது'' என்பர். இப்பாடலில் ''புனைவது'' என்று வருவதனால் இம்மாலை பூக்களாலானது என்பது புலப்படும்.

அருணகிரியார் கந்தரநுபூதிப் பாடல்கள் ஒவ்வொன்றையும் ஒரு பூவாகக் கருதினார். அப்பூக்கள் (51) ஐம்பத்தி ஒன்றாகும். அவை 'அ'கரம் முதல் 'ள' கரம் வரையான ஐம்பத்தொரு எழுத்துக்களை விளக்கிக் கூறுகின்றன. இச்செய்யுள்களாகிய பூக்களை ஒன்று சேர்த்த மாலையே இந்நூலாகும்.

இவற்றோடு, இந்தக் காப்புச் செய்யுள் எழுத்துக்களுக்கெல்லாம் மூலமாகவும், முடிவாகவும் உள்ள ''ஓங்''காரத்தை விளக்குவதாகும். (காப்புச் செய்யுளோடு சேர்த்து, அநுபூதியில் ஐம்பத்திரண்டு (52) பாடல்கள் உள்ளன.)

அநுபூதி நூல் சிறப்புற்றுத் தலைமை பெற்று வெளிவருவதற்கு என்னும் கருத்தில் ''சிறந்திடவே'' என்றார்.

(3) பஞ்சக்கர வானை பதம் பணிவாம்

(கந்தரநுபூதி நூல் சிறந்து வெளிவர) ஐந்து கைகளை உடைய ஆனையாகிய விநாயகரின் திருவடிகளைப் பணிவோமாக என்று கூறி அருணகிரிநாதர் பிள்ளையாருக்குத் தம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

ஆனைமுகனுக்கு வணக்கம் என்று சொன்ன உடனே, சிலர் ஒரு வாதத்தை எழுப்புவர். அதாவது 'தேவ உருவையும் மனித உருவையும் கொள்ளாமல் ஒரு விலங்கு உருவத்துக்கு வணக்கம் செய்யலாமா?'' என்று வினவுவர்.

வாதம் செய்வதில் தவறு இல்லை. வாதம் செய்தால் விளக்கம் வரும். அதனால் அறிவார்ந்த வாதம் வரவேற்கத் தக்கதே. அவ்வாதத்திற்கான விடையைக் கூறுவது நம் கடமையும் ஆகின்றது. எனவே இதைப் பற்றிச் சிறிது நுணுகிப் பார்ப்போம்.

யானை ஆனினத்தை (விலங்கினத்தை)ச் சேர்ந்தது என்பது உண்மையே. ஆனால், அது பெருந்தன்மையுடையது; சாந்தமானது; மரக்கறி உணவையே கொள்வது; அறிவார்ந்தது; அதோடு யாருக்கும் தீங்கு செய்ய நினையாதது. இப்பண்புகள் நமக்கும் அமையவேண்டு மென்னும் நோக்கத்தால், விநாயகருக்கு யானை முகத்தை வைத்தனர்.

யானையின் முகத்தை எதிரே பார்க்கும் காட்சியில் (Front view) தமிழில் 'ஓ' என்னும் எழுத்தைப்போல இருக்கும். மற்றும் விநாயகரின் வயிறு பெரிதாகவும், அதன் குறுக்கே கோடுபோன்ற துதிக்கையும் அமைந்திருக்கும். இதுவும் 'ஓ'வை நினைப்பூட்டும். இவ்வாறெல்லாம் நம் முன்னோர் அமைத்ததன் நோக்கம் - நாமும் 'ஓ'ங்கார வடிவத்தைப் பெற வேண்டும் என்பதேயாகும். மற்றும் யானையைப் போல, மரக்கறி உணவாகிய சாத்துவிக உணவையே கொண்டு, ஆன்மீகத் துறையில் முன்னேற வேண்டும் என்பதுமாகும்.

விநாயகருக்குத் துதிக்கையோடு சேர்த்துக் கைகள் ஐந்து ஆம். இவை படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல் ஆகிய ஐந்தொழிலைக் குறிப்பனவாம். மனிதனுக்கு ஐந்து கைகள் இல்லை. அவை தெய்வ உருவங்களுக்கே உள்ளன.

யானை உருவைப் பார்த்து விலங்கு நிலையிலிருந்து உயர்ந்து, இரண்டு கால்களைப் பார்த்து மனித நிலைக்கு வந்து, ஐந்து கைகளைப் பார்த்து தெய்வ நிலையை அடையவேண்டும் என்னும் நோக்கமும் இதில் அடங்கியுள்ளது.

துண்டாக ஒரு பாதிவட்டத்தை வரைந்து அத்துடன் வளைந்த ஒரு கோடு இழுத்தால் 'ஓ'காரம் வரும. யான்னயின் தலையையும், துதிக்கையையும் பார்த்தால் அதே 'ஓ'கார உருவம் தென்படும். இயற்கையோடு ஒத்த மொழியாகிய இத்தமிழ் மொழிக்கு இந்த

'ஓ' காரம் உரிமையாக இருக்கிறது. எவ்வாறெனின் 'ஓ' என்னும் ஓசைக்கு எழுத்தை அமைக்கும்போது, ஒலியைக் கேட்கும் புலனாகிய காதின் வடிவத்தையே அதற்கும் அமைத்தனர். அவ்வாறு அமைத்த-தால், எல்லா ஒலிகளுக்கும் மூலமாகவும், முடிவாகவும் இருப்பது 'ஓ' என்னும் ஒலியே என்பதனையும், அவ்வொலியைப் புலப்படுத்து வது காதாகிய புலன் என்பதனையும், நம் முன்னோர் உணர்ந்து நமக்கு உணர்த்தியுள்ளனர். இச்சீர்மையை எண்ணிப் பார்க்கப் பார்க்கத் தமிழ் மொழியின் மேன்மை விளங்கும். தமிழில் 'ஓ' காரத்துக்கு வடிவம் அமைந்திருப்பதுபோல வேறு எந்த மொழியிலும் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. (ஆங்கிலத்தில் இதற்கு ஒரு முழுவட்டம் 'O' அமைக்கப்பட்டுள்ளது).

மற்றொரு நுட்பமான செய்தி, அதாவது சமய உண்மையை புலப்படுத்தும் செய்திகூட இதில் அடங்கியுள்ளது. அச்செய்தி வருமாறு:

இறைவன் படைப்புத் தொழிலைத் தொடங்கும்போது தன் சத்தியை, மலத்தின் பிரிவாகிய மாயையில் பதிய வைக்கின்றான். அச்சத்தி பதியும் பகுதி வட்டமாய்ச் சுழல்கிறது. அச்சுழலும் இடத்துக்குக் ''குடிலை'' என்று பெயர். சுழற்சிக்குப்பின், அச்சத்தி இயக்கம் கொண்டு பாய்ந்து சென்று பல செயல்களைச் செய்கின்றது.

குடிலையில் நிகழும் முதல் சுழற்சியின்போது ஓர் ஒலி எழுகிறது. அதுவே ''ஓம்'' என்னும் பிரணவமாகும். அந்த ஒலியோடு ஒரு வரிவடிவமும் உண்டாகின்றது. அது ஒரு வட்டமும், நீட்டமும் ஆகும். ஒலிக்கு ''நாதம்'' என்றும், வரிவடிவுக்கு ''விந்து'' என்றும் பெயர்.

வரிவடிவத்தில், வட்டம் சத்தி நிறைதலையும், நீட்டம் அதன் இயக்கத்தையும் குறிக்கின்றன. 'ஓ' என்னும் எழுத்தில் இவ்விரண்டை யும் காணலாம்.

இயற்கையில் எல்லா ஒலிகளும் முடியும்போது ''ம்'' என்று முடிவதைக் காண்கிறோம். மற்றும், 'ம'கரம் மலத்தைக் குறிக்கும் எழுத்தாகும். மலத்தின் பிரிவே மாயையாகும். இந்த மாயையை, மேற்கூறியவாறு இயக்கி, அணுவையும், அண்டங்களையும் அவற்றி லுள்ள எல்லாப் பண்டங்களையும் இறைவன் படைக்கின்றான்.

எனவே 'ஓ'காரத்தோடு 'ம்' சேர்ந்து ''ஓம்'' என்று ஆகின்றது. இது இறைவன் சத்தியும் மாயையும் சேர்ந்த நிலையைக் காட்டும்.

மாயையில், படைப்பின் தொடக்கம், வட்டத்திலும் நீட்டத்திலும் அமைந்ததால், மாயையாலான எல்லாப் பொருள்களும் இவ்விரண்டு உருவங்களாலேயே அமைந்திருப்பதைக் காணலாம். இவ்விரண்டு உருவங்களும் இயக்கம் கொள்ளும்போது வட்ட நீட்ட (oval) உருவத்தைக் கொள்கின்றன. அவ்வியற்கை உருவம் விதையிலும், பழத்திலும் அணுவிலும், அண்டத்திலும் எல்லாவற்றிலும் எங்கும் இருப்பதைக் காணலாம்.

இந்த உண்மையை நினைவுகூர்ந்து, இறைவன் இயக்கத்தில் இணைந்து செயல்படுவதற்குப் பண்டைத் தமிழர்கள், தாம் செய்யும் செயல்களுக்கு முன்னோடியாக, எல்லாச் சடங்குகளிலும் உருட்சியும் நீட்சியுமான மஞ்சள் பிள்ளையாரைச் செய்து வைத்து, அதற்குத் தம் முதல் வணக்கத்தைச் செய்து வந்தனர். எல்லா மந்திரங்களுக்கும் முன்னால் 'ஓங்'காரத்தை ஒலித்தனர். கடிதம் எழுதும்போதும் பிள்ளையார் சுழி (உ) போட்டுப் பிறகு எழுதலாயினர்.

இனி, ''பஞ்சக்கரவானை'' என்னும் தொடரை பஞ்ச+(க்)+கர +(வ்)+ஆனை என்று பிரித்து ஐந்து கைகளை உடைய ஆனை முகனுடைய திருவடியைத் தொழுவாம் என்று மேலே பொருள் கொண்டோம். இத்தொடரைப் பஞ்ச+அக்கர+வானை என்று பிரித்து வேறொரு நுண்பொருளையும் காணலாம். அது வருமாறு.

''ஓம்'' என்னும் ஒலியில் அ,உ,ம் அடங்கியுள்ளன. 'ஓங்'கார ஒலியை 6 முதல் 12 மாத்திரை வரை நீட்டித்து ஒலிப்பர். அவ்வாறு நீட்டி ஒலிக்கும்போது 36வது தத்துவமாகிய ''நாதம்'' அவ்வொலி யில் வந்து சேரும். அவ்வொலிக்கான வடிவத்துக்கு ''விந்து'' என்று பெயர் என்பதனை முன்னமே பார்த்தோம். ஆக, ஓங்காரத்தில் அ+உ+ம்+நாதம்+விந்து கலந்துள்ளன என்பது புலனாகும். இந்த ஐந்தின் சேர்க்கையையே அருணகிரிநாதர் ''பஞ்சக்கரம்'' என்றார். ''வான்'' என்பது இவ்வைந்துக்கும் உயர்வான ''ஞானவெளி''யாகும். மண் முதலிய ஐம்பூதங்களுள் நுட்பமானதும், உயர்வானதும் ஆகிய ஆகாயம் ''வான்'' எனப்பட்டதைப் போல, நாத, விந்துக்களுக்கு உயர்வான ஞானவெளி ''பஞ்சக்கர வான்'' எனப்பட்டது. (வான் = உயர்ந்தது).

மேற்கூறிய ஐந்து பொருள்களை (அக்கரங்களை) அருணகிரிநாதர், காப்புச் செய்யுளாகிய இப்பாடலில் அமைத்துப் பாடி இருக்கிறார். எவ்வாறெனின்:

(1) 'அ'கரம் இறைவனைக் குறிக்கின்ற எழுத்தாகும். இச்செய்யுளில் இறைவனைக் ''கல்'' (மாணிக்கக் கல்) என்று பாடியுள்ளார். இறைவன் ஆன்மாக்களின் நெஞ்சில் கனம் பொருந்தியவனாகவும் ஒளிபொருந்தியவனாகவும் இருந்துகொண்டு மறைந்திருக்கின்றான்.

(2) 'உ'கரம் சத்தியின் மும்முரத்தைக் காட்டுவதாகும். அது இப்பாடலில் ''சண்முகன்'' என்று குறிக்கப்பட்டது. அது இரக்கத் தன்மையில் முந்தி நிற்பது; பேரிரக்கம் கொண்டு அருள் பாலிப்பது. அந்த இயல்பின் கூறானவன் சண்முகன்.

(3) 'ம'கரமெய் மாயையைக் குறிக்கும். மாயை மலத்தின் கூறு ஆகும். இப்பாடலில் அது ''மாலை'' என்று குறிக்கப்பட்டது. மாயையில் இறை ஆற்றல் பதிந்து இயக்கம் கொள்ளும்போது ஆன்மாக்களுக்குப் பயன்படும் பண்டங்கள் உருப்பெறுகின்றன என்பதனை இந்த ''மாலை'' காட்டும்.

(4) ''நாத''த்துக்கு இப்பாடலில் ''புனைதல்'' குறிக்கப்பட்டுள்ளது. மலர் மாலையைப் புனைவது மாலையைக் கட்டுவது அல்லது கோப்பது ஆகும். சொல் மாலையைப் புனைவதென்பது பண்ணொடு பாடுவதாகும். 36வது தத்துவமாகிய நாதம் சேர்ந்தால்தான் இசையும் கவிவு (ஈர்ப்பு) பெற்றுச் சிறப்புறும். கவிதை பிறப்பதும், அது சேர்வதனாலேயே. அருளாளர்கள் தாம் அருளிய அருட்பாடல்களை இந்த நாத முடியிலிருந்தே பாடியுள்ளனர்.

(5) ''விந்து''. இது நாதம் தோன்றுமிடத்தில் உடன் தோன்றும். இங்குச் ''சிறந்திடவே'' என்னும் சொல்லால் குறிக்கப்பெற்றது. பாடுதலாகிய நாதத்தோடு விந்து சேர்வதால் பாடலாகிய இந்நூல் சிறப்படைகிறது. 35வது தத்துவமாகிய விந்து நாதத்தின் வடிவமாகும். கண்ணுக்குத் தெரியும் தோற்றங்கள் எல்லாமே விந்துவின் தோற்றங்களே. இறைவனை நேரே காண்பது இயலாது. ஏனெனின் அவன் மிக நுட்பமானவன்; உருவங்கடந்தவன். அவனுடைய சத்தியும் அத்தகையதே. எனினும் அவன் சத்தி குடிலையில் பதிந்தபோது உண்டான ஓங்கார ஒலிக்கு, இவ்விந்து வரிவடிவத்தைத் தந்ததனால், அவ்வோங்கார (பிரணவ) வடிவமே இறைவனுக்கு அமைந்த முதல் வடிவம் ஆயிற்று. அதாவது ஓங்காரத்துக்குப்

பொருள் இறைவனே ஆகின்றது. இவ்வாறாக ஐந்து அக்கரங்களை இச்செய்யுளில் அமைத்துக்காட்டிய அருணகிரியார், அவற்றின் தொகுப்பாகிய பிரணவம் இயங்குகின்ற ஞான வானத்தின் நிலையை அடைந்து அதில் ஈடுபடுவோம் என்னும் பொருள்பட ''பதம் பணிவாம்'' என்றுகூறி செய்யுளை முடித்துள்ளார். (பதம் = நிலை; பணிவாம் = ஈடுபடுவோம்).

மற்றும், 'ஓ' என்னும் எழுத்துக்கு 'ஓம்புதல்' அல்லது 'காத்தல்' என்னும் பொருளும் இருக்கின்றது. எனவே ஓங்காரம் நம்மிடம் சேருமானால், அது நம்மைக் காக்கும். அதனால் ஓங்காரத்துக்கு உருவமான விநாயகர் நம்மைக் காப்பவர் ஆவார். நம் இடர் தீர்த்துக் காக்க வேண்டுமென்று அவரைப் பணிவது இதனாலேயே ஆகும். நூல் இயற்றுமுன் அவரை நோக்கிக் காப்புச் செய்யுள் செய்வதும் ஒரு மரபாயிற்று. அந்த மரபை ஒட்டியே அருணகிரியார், இக்காப்புச் செய்யுளைப் பாடியருளினார்.

இக்கருத்துக்களை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது விலங்கு உருவம் கொண்ட விநாயகரை வழிபடலாமா என்னும் வாதம் தோல்வியுறும்.

அருணகிரிநாதர், இந்நூல் சிறப்புற வேண்டும் என்று பாடியதைப்போல், நாமும், இவ்விரிவுரை சிறக்கவேண்டும் என்று விநாயகரை வணங்கி வேண்டுவோமாக.

III சக்கரம்

இப்பாடல் பிரணவத்தை விளக்கிக் காட்டி அதற்குரிய விநாயகருக்கு வணக்கம் தெரிவிப்பதால், இச்சக்கரத்துக்குரிய சிறப்பெழுத்து ''ஓம்'' ஆகின்றது.

இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:

காப்புச் செய்யுள்



இச்சக்கரத்தில் ஒரு வட்டமும், ஒரு முக்கோணமும், அ,உ,ம்,ஓ ஆகிய எழுத்துக்களும் உள்ளன. அவற்றுக்கான விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) வட்டம்

குடிலையில் இறைவன் சத்தி பதிந்தபோது ஒரு சுழற்சி அல்லது வட்டம் உண்டாயிற்று என்பதனைப் பார்த்தோம். அது புறத்தில் நடந்த நிகழ்ச்சி. புறத்தில் நடந்ததைப் போலவே அகத்திலும் அதாவது நம் உடம்பின் நடுப்பகுதியாகிய மூலாதாரத்திலும் பிரணவமாகத் தோன்றுகின்றது. பிரணவம் (ஓங்காரம்) வட்ட வடிவில் தோன்றுவதால் இச்சக்கரத்தில் முதலில் ஒரு வட்டம் அமைந்துள்ளது. (கோயில் திருவிழாக்களில், திருஉருவங்களுக்கு வட்டவடிவமாகப் பிரபை வைப்பதும் இந்த ஓங்காரத்தைக் குறிப்பதே யாகும். பிரபையைத் திருவாசி என்றும் கூறுவர். அது வானம் சூழ இருக்கிறது என்பதனையும், ஓங்காரத்தையும் நினைப்பூட்டும்).

(2) முக்கோணம்

மேற்கூறிய வட்டத்துக்குள் ஒரு முக்கோண வடிவம் அமைந்துள் ளது. அது நம் உடம்பின் ஒரு பகுதியைக் குறிக்கின்றது. அதாவது நம் உடம்பில் இரண்டு தோள்களுக்கு இடைப்பட்ட பாகம் விரிந்து அகன்று உள்ளது. அந்த இரண்டு முனைகளிலிருந்து மூலாதாரம் உள்ள இடம் வரை குறுகி வருகிறது. இந்த அமைப்பைக் குறிப்பதே இந்த முக்கோண வடிவமாகும். மூலாதாரமாகிய முனையில் தோன்றி விரிவடைந்து மேலே செல்லும் ஓங்காரத்தை இம்முக்கோணம் காட்டுகின்றது.

(இந்த முக்கோண வடிவத்துக்கு மாறாக, கீழே விரிந்து மேலே குறுகிவரும் மற்றொரு முக்கோணமும் நம் உடம்பில் உள்ளது. அது இரு தோள்களிலிருந்து புருவநடுவரை வரையப்படுவதாகும். அந்த முக்கோணம் பின்னே விளக்கப்படும்)

(3) அ,உ,ம்,ஓ

பிரணவம், அ,உ,ம் ஆகிய மூன்று எழுத்துக்களின் கூட்டொலி யானதால் வட்டத்துக்குள் முக்கோணத்தின் மூன்று முனைகளிலும் மூன்று எழுத்துக்கள் அமைந்துள்ளன. மூலாதாரத்தில் தோன்றும்

'ஓ'கார ஒலியைக் குறிக்க முக்கோணத்துக்குள்ளே 'ஓ' அமைந்துள் ளது.

(4) இச்சக்கரத்தின் பயன்

ஒரு நாளைக்கு 60 நாழிகைகள் உள்ளன. அவை பகற்போதுக்கு 30 என்றும், இராப்போதுக்கு 30 என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த 30 நாழிகைகளும், ஐம்பூதங்கள் ஒவ்வொன்றுக்கும் 6 நாழிகை வீதம் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் வானத்துக்கு உரிய 6 நாழிகைகள் விடியற்காலையிலும், அந்தி நேரத்திலும் வருகின்றன. வானத்தின் நேரமே வழிபாட்டுக்கும் தேனிப்புக்கும் உரிய நேரமாகும். எனவே இந்த இரண்டு நேரங்களிலும், தேனிப்புக்கு உகந்த இடத்தைத் தேர்ந்து அங்கு அமர்ந்துகொண்டு மூலாதாரத்தில் கருத்திருத்தி விநாயகருக்கு வழிபாடு செய்து, அநுபூதிச் செய்யுளை ஓதி அ,உ,ம் ஆகிய மூன்று எழுத்துக்களையும் (ஓங்காரத்தை) முன்பு தெரிவித்தபடி 6 முதல் 12 மாத்திரை வரை நீட்டித்து ஓதுதல் வேண்டும். மற்றும், (மேலே குறித்த) மூலாதார சக்கரத்தை மனக்கண்ணால் கண்டு, அதிலுள்ள கருத்துக்கள் இயங்குவதைப் பார்க்கவேண்டும்.

தேனிப்பு உண்மையோடு பொருந்தி வருதல் வேண்டும். அப்போது தெய்வசத்தி பதிந்து நாதம் தோன்றும். அந்த நாதம் உடம்பின் வானப்பகுதியாகிய நடுநாடியில் பரவும். இந்த நடுநாடி என்பது ஆறு ஆதாரங்களின் கோவையாகும். (மூலாதாரத்துக்கு ''ஓம்'' சிறப்பெழுத்தானதைப் போல, அதற்கு மேலே உள்ள சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய 5 ஆதாரங்களுக்கு முறையே ந,ம,சி,வ,ய ஆகிய ஐந்தெழுத்துக்கள் சிறப்பெழுத்துக்கள் ஆகின்றன. இவற்றைப் பற்றிப் பின்னே விரிவாக விளக்கம் வரும். நடுநாடியில் பரவுகின்ற நாதம் மேலே சென்று இதயத்தில் வந்து முடியும். இதயம் தகராகாசம் எனப்படும்.

மேற்கூறிய தேனிப்பு முறையில் கந்தரநுபூதிப் பாடல்களையும், சக்கரங்களையும் பயன் கொள்ள வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-1

"ஆடும் பரி, வேல், அணி சேவல்" எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்,
தேடும் கயமாமுகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே!

I பொழிப்புரை

"தோகையை விரித்து ஆடுகின்ற மயில், வேல், அழகான கோழி" என்று இவற்றைப் பாடுகின்ற தெய்வீகத் தொண்டினையே என் வாழ்நாள் தொண்டாக அருள் செய்வாயாக. நல்லவர்களை வதைக்கும் பொருட்டுத் தேடி அலைகின்ற பெருத்த உடலை உடைய கயமுகாசூரனைப் போரில் அழிக்கும் ஒப்பற்ற விநாயகக் கடவுளு டைய உடன் பிறந்தோனே!

II விளக்கவுரை

(1) "ஆடும் பரி, வேல், அணி சேவல்" என

"ஆடும்பரி" என்பது தோகையை விரித்து விளையாடுகின்ற மயில் ஆகும். அது குதித்து ஆடுகின்ற பறவை. "பரி" என்பது சுமப்பது ஆகும். அது முருகனைச் சுமப்பதால் பரி எனப்பட்டது.

"மயில்வேல் மற்றும் அழகிய சேவல்" என்று பாடுகின்ற வேலையையே தமக்கு வாழ்நாள் தொண்டாக அருள வேண்டும் என்று அருணகிரியார் வேண்டுகிறார். இது இத்தொடரின் பொது வான கருத்து.

இனி, 'சேவல்' என்னும் சொல்லுக்கு வேறு ஒரு பொருளும் உண்டு. அது 'பாதுகாப்பு' என்பதாகும். இந்தக் கருத்தில் பார்க்கும்போது 'மயில்வேல் என்று பாடுவதே நல்ல அழகான பாதுகாப்பு' என்று பொருளாகும். இந்த அடிப்படையிலேயே "வேலும் மயிலும் துணை" என்னும் வழக்கு இருந்து வருகிறது.

ஞானியார் சுவாமிகள் அண்மையில் விளங்கியவர். அவர், பல்லக்கில் செல்வது பழக்கம். அவ்வாறு செல்லும்போது, அன்பர்கள் 'வேல் மயில்', 'வேல் மயில்' என்று ஒலித்துக்கொண்டே செல்வர். அவ்வாறு ஒலிப்பதனால் அவர்கள் பாதுகாப்பு உணர்வைப் பெற்றனர். (ஒலித்துப் பார்த்தால் அந்த அநுபவம் விளங்கும்).

'சேவல்' நாத ஒலிக்கு அறிகுறியாகும். எனவே 'ஆடும் பரி, வேல் அணி சேவல்' எனும் தொடருக்கு 'மயிலும் வேலும் அவற்றை உச்சரிக்கும்போது உண்டாகின்ற நாதமும் நமக்கு நல்ல பாதுகாப்பாகும்' - என்றும் பொருள் கொள்ளலாம்.

மயில் பார்வைக்கு அழகாய் இருக்கும். அது கண்ணுக்கு விருந்து. சேவலின் ஒலி கேட்பதற்கு அழகாய் இருக்கும். அது காதுக்கு விருந்து. சேவல் 'கொக்கரகோ' என்று ஒலி எழுப்பும். இந்த ஒலியில் (அதாவது க்+ஒ+க்+அர+க்+ஓ என்பதில்) பற்றுக்கோடாய் உள்ள 'க' கர மெய்யை (க்) நீக்கிவிட்டால் 'ஒ+அர+ஓ' என்று மிஞ்சும். 'அர' என்பதில் வருகின்ற 'ர' கர ஒலி, நம்மிடம் தெய்வ சத்தியைச் சேர்ப்பதாகும்.

'அர' என்னும் ஒலி சிவபிரானுக்கு உரியதென்று எண்ணுவோம். ஆனால் அது முருகன் திருமுன்னிலையிலும் (சந்நிதானத்திலும்) ஒலிக்கப்படுகிறது. அங்கு 'அரோகர' என்பர். எனவே அது இருவருக்கும் எழுப்பப்படும் பொது ஒலியாக உள்ளது. 'அர' என்னும் சொல்லுக்குக் கெட்டவைகளை நீக்குபவன் என்றும் சுகம் கொடுப்பவன் என்றும் பொருளாகும்.

மனிதன் ஆறு அறிவு படைத்தவன். கோழி, ஐந்து அறிவு மட்டுமே உடையது. என்றாலும், அது, 'அரவோ' என்று கூவி நம்மிடம் தெய்வ உணர்வை எழுப்புகிறது. அதைவிடச் சிறந்த சூழல்களைப் பெற்றுள்ள நமக்கு அந்த உணர்வு வருவதில்லை. நாமும் 'அர' ஒலியை எழுப்பி உயர்வடைய வேண்டும்.

(2) பாடும் பணியே பணியாய் அருள்வாய்!

'பாடு' என்னும் சொல்லுக்கு உழைப்பு என்றும் பெருமை என்றும் பொருள். இங்கு உழைப்பு என்பது தவ உழைப்பாகும். அது அகமுன்னேற்றத்துக்கு உரிய உழைப்பாகும். மற்றும் 'பாடு' என்னும் சொல்லுக்குப் பாட்டுப் பாடு என்னும் பொருளும் உண்டு.

எனவே, 'பாடிக்கொண்டே, உழைத்துப் பெருமைப் படு' என்னும் பொருளும் வருகின்றது.

உழைப்பவர் பாட்டுப் பாடினால் உழைப்பின் வருத்தம் தோன்றுவதில்லை. தவ உழைப்புக்கும் உருக்கமான பாட்டுப் பாடுவது இன்றியமையாததாகும்.

முருகனைப் பாடினால் உருக்கம் உண்டாகும். 'முருகு' என்னும் சொல் சத்தி வாய்ந்த சொல்லாகும். சத்தி வீறுகொண்டு எழுவதை மும்முரம் என்று கூறுவர். 'முருகு' என்னும் சொல்லில் மூன்று உகரங்கள் உள்ளன. மற்றும், இச்சொல்லில் 'ர' கர ஒலி உள்ளது. 'ர' கர ஒலி தெய்வத்தன்மையைச் சேர்ப்பதாகும். அதோடு 'முருகு' என்று ஒலிக்கும்போது இறுதி ஒலி 'ஹு' என்று அமையும். 'ஹ' என்னும் ஒலியும் தெய்வத் தன்மையை நம்மிடம் சேர்க்கின்ற வித்தெழுத்து (பீஜாட்சரம்) ஆகும்.

அதோடு, இச்சொல்லில் உள்ள முதல் எழுத்தாகிய 'ம' கரத்தை நீக்கிவிட்டால் 'உருகு' என்று மிஞ்சும். 'ம' கரம் மாயை அல்லது பாசப் பற்றைக் குறிக்கும். எனவே 'ம' கரத்தை நீக்கிப் பாடுவோமா னால் உருக்கம் தானே உண்டாகும்.

ஆக, பாசப்பற்றை நீக்கி, உருக்கத்தோடு பாடி, தவ ஒழுக்கத் தால் பெருமை அடைய வேண்டும் என்னும் கருத்தோடு அருணகிரியார் ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்று வேண்டிக் கொண்டார்.

(3) தேடும் கயமாமுகனைச் செருவில் சாடும் தனியானை சகோதரனே!

இத்தொடரில் ''நல்லவர்களை வதைப்பதற்குத் தேடுகின்ற கயமுகர் சூரனைப் போரில் அழிக்கின்ற ஒப்பற்ற யானையின் உடன்பிறந்த முருகக் கடவுளே'' என்று விளிக்கின்றார்.

கய(கஜ)முகன் ஒரு அசுரன். அவன் யானை முகம் உடையவன். அசுரர்கள் சுரர்களுக்கு மாறுபட்டவர்கள். சுரர் என்பவர் தேவரென் றும் அழைக்கப்படுவர். அவர்கள் நல்லியல்பு உடையவர்கள்; மேல் உயர்த்தும் இயல்பு உடையவர்கள். அசுரர்கள் கீழ்படுத்தும் தன்மை உடையவர்கள்.

காம உணர்வுதான் இங்கு 'கயமுகன்' என்று உருவகிக்கப்பட்டுள்ளது. காம உணர்வு மூலாதார சத்தியைக் கீழ்நோக்கிச் செல்ல வைக்கும். கயமுகனும் தீய தன்மைகளையே தேடி அலைவான்.

யானை ஒரு நல்ல விலங்கானாலும், அதற்கு மதம் பிடிக்கும் போது பல தீமைகளை விளைவிக்கும்; யாருக்கும் அடங்காது. மதர்த்த நிலையில் அதனை அடக்கவேண்டுமானால், அதனை ஒத்த இன்னொரு யானையின் துணை தேவைப்படுகிறது. அவ்வாறு துணைக்குவந்து நம்மைக் காக்கின்ற யானைதான் விநாயகர் எனப்படுவார்.

'செருவில்' என்பது போர்க்களத்தில் என்று பொருளாகும். இங்குப் போர்க்களமாவது மூலாதார வயலாகும். இங்கு மதர்த்த காமத்துக்கும் (கயமுகனுக்கும்), தவ ஆற்றலுக்கும் (விநாயகருக்கும்) போர் நடைபெறுகிறது.

''சாடுதல்'' என்பது தன் போக்கில் செல்கின்ற தீய சத்தியை அழிப்பதாகும். தெய்வ சத்தியாகிய விநாயகர் அசுரசத்தியாகிய கயமுகனை இங்கு அழிக்கின்றார். அதாவது விநாயகர் மூலாதாரத்தில் பதிந்த உடனே காமம் அழிந்து விடும். அதனால் விநாயகரைச் ''சாடும் தனியானை'' என்றார்.

இதே கருத்தை விளக்குகின்ற மற்றொரு உருவகமும் உள்ளது. அதாவது விநாயகருக்கு வாகனம் பெருச்சாளியாகும். அது மண்ணைக் குடைந்து கீழ்ச்செல்லும் இயல்புடையது. காமத்தின் இயல்பும் இத்தகையதே. ஆனால், மூலாதார சத்தியை (விந்துவை) கீழே சென்று வீணாகாதபடி தடுத்து அதன் போக்கை மாற்றி மேலேற்ற வேண்டிய பொறுப்பு நம்முடையதாக இருக்கின்றது. இதுவே அகவாழ்வுக்குத் திருப்புமுனையாகும். இந்த அரிய செயலைச் செய்வதற்குத் தெய்வ சத்தியின் உதவியைப் பெறவேண்டும். வெறும் மனித முயற்சியாலேயே அதனைச் செய்ய இயலாது. விநாயகர் (தெய்வ சத்தி) பெருச்சாளியின் (மதர்த்த காம உணர்வின்) மீது அமரும்போது, அது, அவருடைய பளுவைத் தாங்காமல் நெளிந்து தலையை மேலே தூக்குகிறது. இந்தத் திருப்பத்திற்குப்பிறகு மூலாதாரசத்தி நடுநாடி வழியே மேல்மேல் ஆதாரங்களுக்குச் சென்று முன்னேறுகிறது. கயமுகன் உருவகமும், பெருச்சாளி உருவகமும், ஒரே கருத்தை விளக்குவன ஆம். இதனால் தெய்வசத்தியின் கனமான அழுத்தத்தால்தான் காமம் நீங்கும் என்பது தெரிகின்றது.

தெய்வசத்தி வளர வேண்டுமானால் அதற்கு ஒரேவழி தவம் இயற்றுதல் ஆகும். தவம் என்பது சரியை, கிரியை, யோகங்களாம். இவை நோன்பு, பட்டினி, விரதம், தேனிப்பு, உள்ளுருகுதல், பாராயணம் முதலிய பயிற்சிகளால் பெறத்தக்கவை. தவ நிலையே அல்லும் பகலும் தோன்றும்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நோக்கத்தோடேயே சிவன் கோயில்களில் தவநிலைக்கான மூர்த்தங்களை அமைத்துள்ளனர். சிவபிரானுக்கே தவச்சின்னங்களை வைத்துள்ளனர். சங்க இலக்கியங்களில் சிவபிரான் ''தவத்தோன்'' என்று குறிக்கப்பட்டுள்ளான். தட்சிணாமூர்த்தி, சந்திரசேகரர், சோமாஸ் கந்தர் முதலிய மூர்த்தங்கள் தவக்கோலத்தைக் காட்டுவனவே.

அகத்தே அல்லது உள்ளே போவது என்பது உடலின் நடு இடத்துக்குப் போவதாகும். நம் வீடுகளில் வழிபாட்டு இடத்துக்கு நடுவீடு என்று பெயர். அங்குத் தெய்வ உருவங்களை வைத்திருப்போம். அதைப்போல நம் உடம்பிலும் நடுப்பகுதியில் தெய்வ சத்தி விளங்கும் (பிரகாசிக்கும்).

நம் உடல் 96 பெருவிரல் நீளம் உடையது. அதில் 48வது விரல் அளவில் மூலாதாரம் உள்ளது. அதுவே உடலின் ''நடுவீடு'' ஆகும்.

வீட்டுக்கு யார் வரினும் கூடத்தின் நடுவிலே இருத்துவோம். அதுபோல நம் உடம்பில் தெய்வசத்தி பதியும்போது, நடு இடமாகிய மூலாதாரத்தில் முதல் முதல் வந்து சேரும். (தெய்வசத்தி இதயம், உச்சி ஆகிய இடங்களில் தங்கினாலும், அவை மூலாதாரத்துக்குப் பின்னர் நிகழ்பவையே).

நம் வீட்டுக்கு வந்தவரை நடுவீட்டில் அமர்த்தி, அவருக்கு உபசாரம் செய்வோம். உபசாரத்தில், காற்றுவசதி (Fan), ஒளி விளக்கு (Electric light), இசை ஒலி (Radio) ஆகியவற்றைப் பயன்படுத்து வோம். அதே வகையில், மூலாதாரத்தில் பதிகின்ற தெய்வசத்திக்குப் பிராணாயாமம் செய்ய வேண்டும். அது நாத ஒலியையும், ஒளியை(விந்துவை)யும் உண்டாக்கும். புறத்தே வீட்டை அலங்கரிப் பது போல, மூலாதாரத்தில் மின்னலை எழுப்ப வேண்டும். புறத்திலுள்ள வீட்டைவிட, நமக்கு உள்ளுடல்தான் முதன்மையானது. புறவீட்டுக்குச் செலுத்துகின்ற அக்கரையைவிட, அகவீட்டுக்கு

அதிகமாகச் செலுத்த வேண்டும். ஏனென்றால் இது நாம் இறந்த பிறகும் நம்முடன் வரும். மற்றும், முத்தி பெறும்வரை நம்முடனேயே பிரியாமல் இருக்கும்.

மூலாதாரத்தில் தோன்றுகின்ற மின் மண்டலத்துக்குக் 'குண்டலினி' என்று பெயர். வானத்தில் காற்று, மின்னல், மழை, இடி முதலியன இருப்பதைப்போல், அகத்திலும் உள்ளன. அகத்தில் வானமாய் இருப்பது நடுநாடி; காற்றாய் இருப்பது பிராணாயாமம்; இடியாய் ஒலிப்பது நாதம்; மழையாய்ப் பொழிவது அமுதம். இந்த அகப்பொருள்களையும் அவற்றின் இயக்கங்களையும் காணும்போது நம் வாழ்வில் விம்மிதம் உண்டாகும். இவ்விம்மிதம் இல்லாத வாழ்வு, கழிவுற்ற (Weaknessஉள்ள) வாழ்வேயாகும்.

இதை உணர்ந்த நம் முன்னோர் புற ஆற்றல்களை ஒரு அளவோடு நிறுத்திக் கொண்டு அகத்துக்கு முதன்மை கொடுத்து வந்தனர். அதனால் காற்று வாங்குவது (பிராணாயாமம்) ஒரு சீராக அமைந்து, உடம்பினுள்ளே பரவவேண்டிய இடங்களில் முறையே பரவி வந்தது. அதனால் காமத்தில் மயங்காமல் அகவளர்ச்சியைப் பெற்றுவந்தனர்.

அகவளர்ச்சி பெற்றவர்கள் குடும்பத்தோடு இருப்பதனால் தவறு இல்லை. குடும்பத்தை அன்பு முறையில் நடத்தலாம். ''காமம்'' என்னும் சொல்லுக்குப் பண்டைக் காலத்தில் அன்பு என்றுதான் பொருள் இருந்தது. (பிற்காலத்திலேயே அது வேறு பொருளைத் தருவதாகக் கொள்ளப்பட்டது). அதனால்தான் அம்பிகையைச் ''சிவகாமி'' என்றனர். இராமலிங்க அடிகளாரும் ''சிவகாமி நேயன் - காமம் அகற்றிய தூயன்'' என்று பாடினார். இது எப்படி இயலும் என்று ஐயம் வரும். ஆனால் காமம் இல்லாமல் நேயமாய் இருக்க முடியும். காமம் (அவா) இல்லாமல் பிள்ளைகளையும் பெறலாம். அது அறத்தின் அடிப்படையில் நிகழ்வதாகும். இதை உணர்த்தவே திருவள்ளுவர் ''மக்கட்பேறு'' என்னும் அதிகாரத்தை அறத்துப்பாலில் வைத்துள்ளார். அதைக் காமத்துப் பாலில் வைக்கவில்லை. மற்றும் நல்ல தவசிகளாய் இருந்தால்தான் அவர்களுக்குச் சிறந்த குழந்தைகள் பிறப்பர். மற்றவர்களுக்கு வேறுமாதிரியாகிவிடும். ஞானசம்பந்தரைப் பெற்றவர்கள் தவத்தால் பெற்றவரே.

சாதாரண நிலையினருக்கே காமமும் மதர்த்த தன்மையும் வரும். அவர்களே ''தேடும் கயமுகனைப்'' போல் தீமைகளைத் தேடுவர்.


இனி, அருணகிரியார் இந்தப் பாடலில் சூரனைக் கொன்ற முருகன் என்றோ, வேறு சிறப்புகளையுடைய முருகன் என்றோ, சொல்லாமல், 'கஜமுகனைக் கொன்ற விநாயகரின் உடன் பிறந்தவனே' என்றதனால், மூலாதாரத்துக்கு அடுத்துவருவது சுவாதிட்டானம் என்பதனையும், அதற்குரிய தெய்வம் முருகன் என்பதனையும், இந்த இரண்டு சத்திகளுக்குள்ள தொடர்பையும், இவற்றின் நிலைகளையும் இங்குத் தெளிவுபடுத்தினார் என்று கொள்ளவேண்டும்.

III சக்கரம்

இப்பாடலில் அருணகிரியார் பாடும் பணியே தமக்கு வேண்டும் என்று வேண்டுகிறார்.

பாட்டுப் பாடுவதற்கு நாதம் அமைய வேண்டும். அதோடு பாடுகின்ற பாடல் கருத்துடையதாய், மந்திர வாக்காகவும் அமைய வேண்டும். வாக்கிற்கு அதிபர் குரு என்றும், நாதத்துக்கு அதிபர் சந்திரன் என்றும் கூறுவர். இவ்விரண்டும் அமையப் பெற்று, கலைத்திறமும் சேர்ந்து நிலவொளியில் பாடினால் பாட்டுச் சிறக்கும். நாதம் நாக்கினுடைய நீர் ஒழுக்கில் சிறந்து அமையும். நீருக்குரிய எழுத்து 'வ' கரம் ஆகும். எனவே இப்பாட்டுக்குரிய சிறப்பெழுத்து 'வ' கரம் ஆகின்றது.

இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:



காப்புச் செய்யுளில் மூலாதாரச் சக்கரத்தின் அமைப்புப் பற்றி விளக்கப்பட்டது. இங்கு இப்பாடலுக்கான சிறப்பெழுத்தும் அத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-2

உல்லாச, நிராகுல, யோக, இதச்,
சல்லாப, விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லாய்! முருகா! சுர பூபதியே!!

I பொழிப்புரை

இன்பம் உடையவனாய், துன்பம் இல்லாதவனாய், கலப்பு உடையவனாய், மகிழ்ச்சியான மொழிகளைப் பேசுபவனாய், மற்றும் புதுமையானவனாய் இருப்பவன் நீ அல்லவா? முருகா! தேவர் மற்றும் மண்ணுலகத்தவர்க்குத் தலைவா!! 'யான்', 'எனது' என்னும் தாழ்ந்த உணர்வுகளை இழந்து மேல் நிலைகளுக்குச் செல்லும்படிச் செய்த சத்தி உன்னிடம் என்ன இருக்கிறது என்பதனைச் சொல்வாயாக!

II விளக்கவுரை

இப்பாடல், முருகனைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டது போல அமைந்துள்ளது. அருணகிரியார் முருகனை எங்கே பார்த்தார்? புற உலகத்தில் பார்க்கின்றவை எல்லாமே அழிந்து போகக் கூடியவை. எனவே அவர், கடவுளைப் புறத்தில் கண்டிருப்பாரா? அது இயலாது. புறத்தில் முடியாது என்றபோது, அகத்தில் உள்ளுணர்வால்தான் கண்டிருக்க முடியும். அந்த உள்ளுணர்வென்பது எது? அது தேனிப்பு (தியானம்) ஆகும். தியானம் அல்லாத பிற எதைக் கொண்டும் தெய்வ இயல்பை அறிய இயலாது. அதுவும், அவன் இறங்கிவந்து காட்சி கொடுத்தால் மட்டுமே அறியமுடியும். எனவே அவனைக் காணவேண்டுமானால், நம் உணர்வுகள் உள்ளே போகும் தியான வழியை மேற்கொள்ள வேண்டும்.

உடம்பினுள்ளே என்ன இருக்கிறது? அதனுள்ளே ஒன்றும் இல்லாமல் வெறும் சொத்தையாய் இருந்திருக்குமானால், அதற்கு ''மெய்'' என்னும் பெயர் வந்திருக்காது. அதற்குப் ''பொய்'' என்று பெயர் வைத்திருப்பர். வெற்றிடம் ள்ள குளத்துக்குப் ''பொய்கை''

என்று பெயர். (உள்ளீடு இல்லாத அடுப்பை, இன்றும் தெலுங்கர் ''பொய்'' என்றே அழைப்பர்). நம் முன்னோர் உடலை ''மெய்'' என்று சொன்னதனால் அதனுள்ளே ஏதோ இருக்கவேண்டும் என்பது புலப்படும்.

நம் உடம்பினுள்ளே, கண்ணுக்குப் புலப்படாத ஒரு நுட்பமான உடல் இருக்கிறது. இன்னும் ஆழ்ந்து போனால், அதைவிட நுட்பமான இன்னொரு உடம்பு இருக்கிறது. அப்படிப் போகப் போக நான்கு நுண்ணுடம்புகள் இருக்கின்றன. (அவற்றுக்கும் உள்ளே இறைவன் விளங்குகிறான்). இந்தப் பரு உடலோடு சேர்த்து நமக்கு மொத்தம் ஐந்து உடம்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. வெங்காயத் தோலை உரிக்க உரிக்கப் பல தோல்கள் வருவதுபோல நமக்கு இந்த ஐந்து உடம்புகள் அமைந்துள்ளன. இந்த அமைப்பு அவசியம்தானா? இது மிகவும் அவசியம் ஆகும். இயற்கையில் பழங்கள் போன்றவற்றில் இந்த அமைப்பு உள்ளது. செயற்கையிலுங் கூட வண்டிச் சக்கரங்களில் பருத்ததும் நுண்ணியதுமாகிய குழாய்கள் (Tyres and Tubes) ஒன்றுக்குள் ஒன்றாகப் பொருத்தப்பட்டிருப்பதை நாம் அறிவோம். அவற்றின் இன்றியமையாமையையும் அறிவோம். நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து உடம்புகளின் விவரங்கள் வருமாறு:-

(1) பரு உடல்

இது பருமனானது; கண்ணுக்குத் தெரிவது. சோற்றால் (உண வால்) ஆனது. இதற்கு 'அன்னமய கோசம்' என்று பெயர். கோசம் என்பது உடம்பு. இதற்கு மண், நீர் முதலிய ஐம்பூதங்களாலான உணவைப் போட்டுக் கொண்டே இருக்கவேண்டும்.

(2) காற்று உடல்

இது நுட்பமானது; கண்ணுக்குத் தெரியாதது. இதனைப் 'பிராணமய கோசம்' என்பர். இது பிராண சத்தியால் ஆக்கம் பெறுகிறது. நம் உடம்பிலிருந்து உயிர் பிரியும்போது இந்த உடம்பு மேலெழுந்து போகும். (இந்த உடம்பு மனிதக் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும், நாய்கள் மற்றும் கோட்டான்களுக்குப் புலப்படு கிறது. நாய் அழும்போதும், கோட்டான் கத்தும்போதும், இந்த உடம்பின் நடமாட்டம் இருக்கிறது என்று புரிந்துகொள்ளவேண்டும்).

நாம் மூச்சு இழுக்கும்போது அதில் பிராண சத்தி கலந்துசெல்கிறது. அந்தச் சத்தியால் இந்த உடம்பு ஆக்கம் பெறுகிறது.

(3) மன உடல்

இது காற்று உடலைவிட நுட்பமானது. கண்ணுக்குத் தெரியாதது. நம் எண்ணத்துக்கேற்ப உருப்பெறுகிறது; மற்றும் வலுப்பெறுகிறது. இதற்கு 'மனோமய கோசம்' என்று பெயர். மனம் என்பது கண்ணாடி போன்ற ஆனால் மிக நுட்பமான ஒரு பண்டமாகும். உயர்ந்த கருத்துக்களை எண்ணுவதனால் மனம் மென்மையும் ஆற்றலும் பெறும். எனவே சாதாரண மற்றும் வீண் நினைப்புகளை எண்ணாமல் இருக்கவேண்டும்.

(4) அறிவு உடல்

இது மன உடலைவிட நுட்பமானது; கண்ணுக்குத் தெரியாதது; பகுத்தறிவால் ஆனது. இதற்கு 'விஞ்ஞானமய கோசம்' என்று பெயர். இது பகுத்தறிவின் விளக்கத்தால் ஆக்கம் பெறுகிறது. பகுத்தறிவைக் கொண்டு உள்ளே ஆராயும்போது இந்த உடல் செயல்படுகிறது.

ஆன்மாவுக்கே சொந்தமான அறிவு ஒன்று இருக்கிறது. அதற்குச் ''சிற்றறிவு'' என்று பெயர். இந்த அறிவைக் கொண்டுதான் முற்றறிவினனான இறைவனை உணர முடிகிறது. இது, கண் தனக்கே உரிய சிறு ஒளியைக் கொண்டு, பெரிய ஒளியாகிய ஞாயிற்றொளி யைக் காண்பதைப் போன்றதாகும். ஆன்ம அறிவு முதிர்ச்சி பெறும்போது, அன்பாக மாறுகிறது. அது மேலும் முதிர்ச்சி பெறும்போது அருள் ஆகின்றது.

அறிவு முதிர்ச்சி பெறாத நிலையில் வன்மையுடையதாகவும், முறுக்குடையதாகவும், சொர சொரப்பாகவும் இருக்கும். அது கத்தியைப் போன்று கூர்மை உடையதாகவும் இருக்கும். அதனால் அறிவை ''ஞான வாள்'' என்றும் கூறுவர்.

அறிவு விளங்குவதற்குப் பெரியோர்கள் (ஒழுக்கம்) சீலம், விரதம் என்று பல வழிமுறைகளை வகுத்துள்ளனர். அவற்றைக் கடைப்பிடித்தால், நாம் ஒன்று தெரிந்து கொள்ளும்போது பத்து மடங்கு விளக்கம் வரும்.

(5) காரண உடல்

இது அறிவு உடலைவிட நுட்பமானது; கண்ணுக்குத் தெரியாதது. இதற்கு 'ஆநந்தமய கோசம்' என்று பெயர். 'அதி சூக்கும உடல்' என்றும் கூறுவர். ஆன்ம அறிவு, இந்த உடலுக்கு வந்த பிறகே, அதனால் தனித்து விளங்க முடிகிறது. அதாவது, மற்ற கருவிகளின் துணை இல்லாமல் விளங்குகிறது. இந்த உடல் கைவந்தபின், ஆன்மாவால் கருவியின்றிச் செயல்பட முடிகிறது. அன்புடைய ஒருவரை வரவழைப்பதற்குக் கடிதம் எழுதவேண்டுமென்பதில்லை. நினைத்தாலே அவர் வந்துவிடுவார். இந்த மூல உடலோடு வாழ்வதுதான் நாகரிக வாழ்வாகும். இந்த உடம்பிலிருந்து எண்ணு கின்ற எண்ணங்கள் மேலும் மேலும் இன்பம் பயப்பனவாகின்றன.

ஐவகை உம்புகளுள் இதுதான் மிக நுட்பமானதும், இறுதியான தும் ஆகும். இறைவனும் நுட்பமானவன். ஆதலால் அவன் இந்த உடம்பிலேயே தோன்றுவான். ஆறு ஆதார மலர்களும் இந்த உடம்பில்தான் உள்ளன.

இனி, ஆன்ம அறிவை அன்பாக மாற்றி இறைவனிடம் செலுத்துவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப் பார்ப்போம். அதற்கு இன்றைய வாழ்க்கை முறையைச் சிறிது மாற்றிக்கொள்ள வேண்டும். அதாவது, பரு உடலையே பெரிதாக எண்ணி அதற்கு உணவு தேடும் முயற்சியிலேயே காலத்தைக் கழித்து வருவதை மாற்றி, நுண்ணுடம்புகளுக்குச் செல்லும் முயற்சியில் ஈடுபடவேண் டும். இதற்கு, முதலில் பருமனான உணவுகளை அதாவது புலால் முதலியவற்றை விட்டு, பால் பழம் போன்ற சத்துவ உணவுகளை மட்டும் கொள்ளவேண்டும். பட்டினி, மௌனம் போன்ற நோன்பு களை மேற்கொள்ளவேண்டும். பின்னர், மூச்சுப் பழக்கத்தில் சென்று காற்று-உடலை வலுப்படுத்த வேண்டும். பிறகு தூய எண்ணங்களை மட்டும் எண்ணி, மன-உடலைச் சிறக்கச் செய்ய வேண்டும். அடுத்து, நல்ல கல்வி கேள்விகளால், அறிவு-உடலை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர்தான் அதிசூக்கும உடலுக்குப் போக முடியும். அங்கு ஆன்ம அறிவை அன்பாக்கி இறைவனை உணரவேண்டும். அப்பொழுதுதான் ஓங்காரம் தெரியும். அந்த நிலையை அடையும்போது முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து விட்ட நிலைவரும். அங்கு இறைவன் மகிழ்ச்சியாய் வந்து விளையாடுவான். அந்த நிலையில் அவனிடம் நம்மைப்

பறிகொடுத்து நிற்பதும், அவனை விளித்துக் கேள்வி கேட்பதும் நடைபெறும். அருணகிரிநாதர் அந்த நிலையில் இந்தப்பாடலை அருளிச் செய்துள்ளார்.

(1) உல்லாச, நிராகுல, யோக, இதச், சல்லாப, விநோத னும் நீ அலையோ!

'உல்லாசம்' என்பது இன்பத்தைக் குறிக்கும். 'உல்லாசப் பயணம்' என்னும் வழக்கில் இதனைத் தெரிந்து கொள்ளலாம். இங்கு, இறைவன் உல்லாசமாய் இன்பகரமாய் இருப்பவன் என்பத னைக் குறிப்பிடுகின்றார்.

'நிர் ஆகுல' என்பது வருத்தம், துன்பம், கவலை ஆகியவை இல்லாத நிலை. கவலை இல்லாதபோது இன்பம் இருக்கும். பொருள் இழப்பு, நோய் முதலியவற்றால் நமக்குக் கவலைகள் வருகின்றன. அவை வரும்போது மகிழ்ச்சி போய்விடும். இறைவன் என்றும் கவலை இல்லாத மகிழ்ச்சியில் இருப்பவனாவான்.

'யோகம்' என்பது கூட்டுறவு. நல்லோர் கூட்டுறவால் கவலைகள் போம். நோய் வந்தபோது மருத்துவராலும், பொருள் இழப்பு நேரும்போது நண்பர்கள் கூட்டுறவாலும் கவலை போகும். இறைவ னின் கூட்டுறவால் எல்லாக் கவலைகளும் நீங்கிப்போம். (யோகம் இறைவனோடு சேராமல் செய்யப்படுமானால் அது 'அசட்டு யோகம்' எனப்படும்). இறைவன் ஆன்மாக்களின் கூட்டுறவால் அவற்றுக்கு இன்பம் கொடுத்து அதனால் மகிழ்ச்சியடைவான்.

'இதம்' என்பது இனிமையாய் இருக்கும் குணமாகும். இறைவன் ஆன்மாக்களிடம் இனிமையாய் இருப்பான்.

'சல்லாபம்' என்பது மகிழ்வு மொழி பேசி, உறவாடுவதாகும். இறைவன் அவ்வாறு நடந்து கொள்வான்.

'விநோதன்' என்பது புதுமையுடையவன். மற்றும் விகடப் பேச்சு உடையவன். இறைவன் எப்பொழுதும் புதுமையோடு திகழ்வான்.

'நீ அலையோ!' என்றதில் நீ என்பது இறைவனைப் பார்த்துச் சொன்ன முன்னிலை விளியாகும். 'மேற்கூறிய ஆறு நற்குணங்க ளோடு நீ இருக்கின்றாய் அல்லையோ?' என்று அருணகிரியார் முருகனைக் கேட்கின்றார். 'விநோதனும் நீயலையோ?' என்பதனை

ஒவ்வொரு சொல்லோடும் அதாவது உல்லாச, நிராகுல முதலியவற்றோடு தனித்தனியே சேர்த்துக் கேட்டதாகக் கொள்ளவேண்டும்.

(2) எல்லாம் அற, என்னை இழந்த நலம் சொல்லாய் முருகா! சுர பூபதியே!!

'எல்லாம்' என்றது ஆன்மாக்களின் உடைமைகள் எல்லாம் ஆகும். ஆன்மாவுக்குச் சொந்தமானது அதனுடைய சிற்றறிவு மட்டுமே என்பதனை முன்பு பார்த்தோம். ஆன்மா இந்த அறிவையும், அதன் முதிர்ச்சியாகிய அன்பையும், புறத்திலுள்ள பண்டங்கள் மீதும் தகாதவர்களிடத்தும் செலுத்துவது கீழ் நிலையாகும்; இறைவனிடம் செலுத்துவது மேல் நிலையாகும். முன்பாடலில், ஆன்ம உணர்வு கீழ்நிலையிலிருந்து மேலே செல்லும் திருப்பத்தைப் பற்றிப் பார்த்தோம். உணர்வு மேலே செல்லும்போது 'எனது' என்னும் எண்ணம் அற்றுப் போகிறது. அந்த நிலையே இங்கு 'எல்லாம் அற்ற' நிலையாகக் குறிக்கப்பட்டது.

இந்த முன்னேற்றப் பாதையில் ஆன்மாவுக்கு எஞ்சி இருப்பது 'யான்' என்னும் உணர்வு மட்டுமேயாகும். ஆன்மாவின் பத்தி நிலை உயர உயர, இறைவனும் கருணைப் பெருக்கால் அதனைத் தன்னிடம் ஈர்த்துக் கொள்வான். அதன் பயனாக, ஆன்மா, இறைவனிடம் தன்னை ஒப்படைத்துவிடும். அந்த நிலையில் அதற்கு 'யான்' என்னும் எண்ணமும் அற்றுப்போகும். இதனையே அருணகிரியார் 'என்னை இழந்த நலம்' என்றார்.

தாம் முன்னேறிய செய்தியையும், அதற்கான வழியையும், மற்ற ஆன்மாக்களும் அறிந்துகொள்ளும்படி அனைவர்க்கும் சொல்வாயாக என்று முருகனைக் கேட்டுக்கொள்கிறார்.

'சொல்லாய்' என்னும் சொல்லுக்கு வேறு ஒரு பொருளும் உண்டு. அதாவது 'என்னை வளரச் செய்த சத்தி உன்னிடம் ஏதோ ஒன்று இருக்கவேண்டும். அச்சத்தி எது என்பதனைச் சொல்வாயாக' என்பதாகும். (அச்சத்தி எதிலும் பற்றில்லாமல் இருப்பதாகும். பற்றிருந்திருக்குமானால் மேற்கூறிய 'உல்லாசம்' முதலியன இருக்கமாட்டா. இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்). இச்சொல்லுக்கு மூன்றாவது பொருளும் ஒன்று உண்டு. அது 'நான், என்னை, உன்னிடம் ஒப்படைத்து விட்டதனால், இனிமேல் என்னால்

பேச இயலாது. எனவே இச்செய்திகளை நீ சொல்வாயாக' என்பதாகும்.


'முருகா' என்பது அழகு, இளமை, ஞானம், இன்பம் உடையவனே என்று பொருள்படும்.

'சுர, பூபதியே' என்றது வானத்தவர்க்கும், இப்பூவுலகத்தவர்க்கும் தலைவனே! என்றாகும். வானவரும், உலக மக்களும் ஏதோ ஒரு பற்று உடையவராய் இருப்பர். 'நீ அவர்களோடு கலந்து இருந்தாலும், பற்றில்லாதவனாய் இருப்பதனால், அவர்களுக்குத் தலைவனாய் இருக்கின்றாய்' என்பதனையும் தெரிவித்துக் கொண்டார்.

III சக்கரம்

இந்தப் பாடலில் அருணகிரிநாதர், தாம் ''யான்'', ''எனது'' என்னும் உணர்வுகளை இழந்து பெருவெளிக்குச் செல்லும் அநுபவ நிலையைக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையைக் குறிக்கின்ற எழுத்து ச (श) கரம் ஆகும். எனவே இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்து ச (श) கரம் ஆகின்றது.

இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-3

வானோ? புனல், பார், கனல், மாருதமோ?
ஞானோதயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே?!

I பொழிப்புரை

சண்முகனே! எது மெய்ப்பொருள்? ஆகாயமா? தண்ணீரா? மண்ணா? தீயா? காற்றா? ஞானத்தோற்றமா? ஓதுகின்ற நான்மறைகளா? நானா? என் மனமா? என்னை ஆட்கொண்ட நிலையா? இவற்றுள் எது மெய்ப்பொருள்? (சொல்லுவாயாக).

II விளக்கவுரை

அடியார்கள் எந்தச் சூழலில் எப்படி இருந்தாலும், ஒருபொருளையே தேடிக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் தேடுவது மெய்ப்பொருள் ஆகும். அருணகிரியார் நாட்டமும் அதுவே. அவர், தமக்குப் புறத்தும் அகத்தும் புலப்படுகின்ற எல்லாப் பொருள்களையும் சொல்லி அவற்றுள் மெய்ப்பொருள் எது என்று கேட்கின்றார்.

இப்பாடலின் முதலடியில் புறத்தில் காணப்படுகின்ற ஐம்பூதங்களையும் குறிப்பிடுகின்றார். ஏனென்றால் ஐம்பூதங்களில் பருப்பொருள்கள் எல்லாமே அடங்கிவிடுகின்றன.

அடுத்த வரிகளில் அகத்திலுள்ள பொருள்களைக் கூறுகின்றார். அவை பலவாக இருப்பினும், அவற்றைக் காண்பதற்குத் தேவைப்படுவது அகமுகம் (அதோமுகம்) ஒன்றேயாகும். இந்த அதோமுகத்தோடு, புறத்தில் நான்கு திசைகளிலும், மேல் திசையிலும் உள்ளவற்றைக் காண்பதற்கு ஐந்து முகங்களும், ஆக ஆறு முகங்களின் பார்வையில் எல்லாமே அடங்கிவிடுகின்றன. சண்முகனுடைய முகங்களும் ஆறு ஆம்.

இந்த ஆறுமுகங்களின் பார்வைக்கும் உட்பட்ட பொருள்கள் என்பதனால், ஒன்றையும் விடாமல் எல்லாவற்றையும் சொல்லி,

இவற்றுள் எது மெய்ப்பொருள் என்று கேட்டதாக ஆகின்றது. அவ்வாறு கேட்டதனாலேயே, ''இவற்றுள் எதுவும் மெய்ப்பொருள் இல்லை; நீயே மெய்ப்பொருள்'' என்பதனை, நாம் உய்த்துணரும்படி அருணகிரிநாதர் சுட்டிக் காட்டுகிறார்.

இனி, மேற்கூறிய அனைத்துப் பொருள்களுள் எதுவும் மெய்ப்பொருள் அன்று என்றாலும், அவை எல்லாவற்றுள்ளும் அந்த மெய்ப்பொருள் கலந்திருக்கின்றது. ''பொருள்'' என்பது ''சத்'' அல்லது ''உண்மைக்கருத்து'' ஆகும். எனவே பொருள் என்பது ஒரு பண்டத்தையும் அதனுள்ளே ஒரு உண்மை அடங்கி இருப்பதையும் குறிக்கும். பண்டங்கள் பலவற்றை நாம் காண்கின்றோம். ஆனால் அவற்றினுள்ளே மறைந்திருக்கும் உண்மையைக் காணமுடிவதில்லை. அதைக் கண்டுபிடிப்பது முதன்மையாகும். மற்றும், 'பொருள்' என்னும் சொல்லுக்கு 'பொரு' பகுதியாகும். அது ''பொருந்துதல்'' ''கலத்தல்'' என்னும் கருத்துடையது. எனவே ''பொருள்'' என்பது ''மெய்ப்பொருள் கலந்த ஒன்று'' என்றாகும். அவ்வாறு கலந்துள்ள பொருள் இறைவன் ஆவான்.

அப்படியானால், அருணகிரியார், ''சண்முகனே நீதான் எங்கும் கலந்துள்ள மெய்ப்பொருள்'' என்று சுருக்கமாக, நேரடியாகச் சொல்லி முடித்திருக்கலாம். ஆனால் அவர் சுற்றி வளைத்துச் சொல்கின்றார். அதற்குக் காரணம் என்னவெனின், நமக்கும் அந்த உண்மை விளங்கவேண்டுமென்பதாகும். நாம் எதை எதையோ மெய்ப்பொருள் என்று எண்ணிக்கொண்டு, இறுதியில் ஏமாந்து நிற்கிறோம். அதைக் கண்டு, அந்த நிலையைத் தவிர்ப்பதற்காகக் கருணை உள்ளத்தோடு அவ்வாறு கூறினார்.

இனி, மண் முதலான ஐம்பூதங்களுள் மெய்ப்பொருளாகிய இறைவன் கலந்திருக்கிறான் என்பதை எவ்வாறு தெரிந்துகொள்வது? நாம் காணும் பண்டங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அது விளங்கும். ஒரு கவர்ச்சியான மலர், முன்பு மண்ணாக இருந்து, இன்று அழகுடன் விளங்கி, மீண்டும் மண்ணாவதை நாம் காண்கின்றோம். அந்த மண்ணுக்கு அந்த அழகு எப்படி வந்தது? ஓர் அழகிய மண்பாண்டத்தைக் காணும்போது, அதனை உருவாக்கிய குயவனின் ஆற்றலும் ஊக்கமும், அறிவும் அதனை உண்டாக்கின என்பதைப் புரிந்துகொள்கிறோம். ஓர் அழகிய ஓவியத்தைக் காணும்போது, அதைத் தீட்டிய ஓவியரின் திறத்தை எண்ணி

வியக்கின்றோம். அவ்வாறே ஐம்பூதங்களைக் காணும்போதும் யாரோ ஒருவருடைய திறமை இவ்வாறெல்லாம் செய்து வருகின்றது என்பது விளங்கும். அத்திறமை மெய்ப்பொருளாகிய இறைவனுடைய சத்தியாகும்.

இறைவனுடைய திறமை அல்லது சத்தி என்று சொல்வதைச் சிலர் ஒப்புக்கொள்வதில்லை. இயற்கையாய் இவையெல்லாம் அமைந்துள்ளன என்று அவர்கள் கூறுவர். ''இயற்கை'' என்பதும் மெய்ப்பொருள் என்பதும் அந்த இறைவனேயாகும்.

இனி, இப்பாடலில் அருணகிரியார் குறிப்பிட்டுள்ள பொருள் களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்:

(1) வானோ?

இச்சொல் ஆகாயத்தைக் குறிப்பதோடு, வானோர்கள் அல்லது தேவர்களையும் நினைப்பூட்டுகின்றது. திருவள்ளுவர், வையத்துள் வாழவேண்டிய முறையில் வாழ்பவர் வானவராகக் கருதப்படுவர் என்றதனால், வானவர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர் என்று தெரிகிறது. இந்த நல்லொழுக்கம் இறைவனை அடைவதற்கான முதற்படியாகும். இதற்குச் 'சரியை' என்று பெயர். 'சரியை' ஒழுக்கத்தை மேற்கொள்ள வேண்டுமானால், குரு வழியாகத் தீக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குச் ''சமய தீக்கை (தீக்ஷை)'' என்று பெயர். (தீக்கையைத் தீக்ஷை என்பர். ஆனால் தீக்கை என்பதே மூலச் சொல்) ஆக வான் என்றதனால் ஆகாயத்தோடு சரியையையும் குறிப்பிட்டார் என்றும், அச்சொல்லோடு 'ஓ'காரத்தைச் சேர்த்து 'வானோ' என்றதனால், இதைத் தனியே பிரித்துக்கொண்டு மற்ற வற்றை வேறாகப் பிரித்துக் கொண்டார் என்றும் தெரிகிறது. இவர் ஐம்பூதங்களைப் பிரித்துக் கொண்டமுறை, சரியை கிரியை, யோகங் களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. அதனால் வான், கால், தீ, நீர் மண் என்று வராமல் வானத்துக்குப்பின் புனல் வருகிறது.

(2) புனல், பார், கனல் மாருதமோ?

இத்தொடரின் நான்கு சொற்களுக்கு இறுதியில் 'ஓ'காரத்தைச் சேர்த்திருப்பதனால் இவை நான்கும் வானத்துக்கு வேறுபட்ட பிரிவைச் சேர்ந்தனவாகின்றன.

புனல் என்பது நீர்; பார் என்பது மண். இவ்விரண்டும் அணுக்கமான தொடர்புடையவை. எனவே இவை இரண்டும் ஓர் இனத்தைச் சேர்ந்தவை.

கனல் என்பது தீ; மாருதம் என்பது காற்று. இவை இரண்டும் வேறு இனத்தைச் சேர்ந்தவை.

மேற்கூறிய சரியைக்கு அடுத்த நிலை கிரியையாகும். இது இறைவனைப் பூசித்து வழிபடுவதாகும். வழிபாட்டுக்கு வேண்டியவை பூவும் நீரும் ஆம். அவற்றைத் தருவன மண்ணும் நீரும். எனவே வானத்துக்குப் பிறகு நீரையும் மண்ணையும் குறிப்பிட்டுள்ளார். (வானத்துக்குப்பிறகு முறையே வரவேண்டிய காற்றும் தீயும் இங்குவரவில்லை).

கிரியைக்கு அடுத்தது யோகம். இதற்குக் காற்றை இழுத்து, உள்ளே நிறுத்தி, தியானம் செய்தல் வேண்டும். செய்தால் உள்ளே சோதி எழும். (அச்சோதிக்குத் 'தவக்கனல்' என்று பெயர்) எனவே தீயையும் காற்றையும் ஒன்று சேர்த்தார்.

கிரியை முறையில் பூசை செய்பவர் பொதுவாகப் பூவும் நீரும் கொண்டு புறத்தில் பூசிப்பதோடு நின்றுவிடுவர். அது முழுமை பெற்றதாகாது. புறத்தில் இறைவன் திருவுருவத்தைக் காண்பது (Perception) எவ்வளவு அவசியமோ, அவ்வளவு, அதனை உள்ளே நிறுத்தி (Conception) தியானிப்பதும் அவசியம் ஆகும். வெறும் வெளிப்பூசை குறையுடையது. வளர்ச்சி தராதது. எனவேதான், திருக்கோயிலுக்குப் போய்ப் பலமுறை சுற்றிவந்தாலும், பலிபீடத்து அருகில் அமர்ந்து தியானித்தல் (தேனித்தல்) வேண்டும். என்னும் மரபினைப் பெரியோர்கள் வைத்துள்ளனர். (தேனித்தல் என்பது இனிப்பு தட்டும்படி நினைத்தலாகும்).

புறத்தில் தீவளர்த்துச் செய்யும் வழிபாட்டுக்கு ஒப்பானது அகத்தில் மூச்சுப் பழக்கத்தால் நடுநாடியில் தீயை எழுப்புவதாகும்.

இரண்டாவது படியாகிய கிரியைக்கும் மூன்றாவது படியாகிய யோகத்துக்கும் ஒரே தகுதி போதுமானது. அதனைப் பெறுவதற்குச் சிறப்புத்தீக்கையை (விசேட தீக்ஷையை)ப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(3) ஞானோதயமோ?

மேற்கூறிய ஐம்பூதங்களிலும் கலந்துள்ள உண்மைப் பொருள் எது என எண்ணிப் பார்க்கின்றோம் அல்லவா? அதன் மெய்த் திறத்தை, அதன் அழகை உள்ளேதானே எண்ணுகிறோம்? அவ்வாறு எண்ணும்போது தோன்றுகின்ற தோற்றம் அல்லது தெளிவு ஞானோதயம் எனப்படும். அந்த ஞானோதயம்தான் மெய்ப்பொருளோ என்னும்படி இங்கு ''ஞானோதயமோ?'' என்றார்.

மற்றும், சரியை கிரியை யோகங்களின் பயனாய் வருவது ஞானம். ஞானத்தை அம்பிகை என்றும் 'சித்' என்றும் கூறுவர். இறைவனுக்குச் 'சத்', என்று பெயர். 'சத்'துக்குத் தோற்றம் என்பது கிடையாது. ஆன்ம வளர்ச்சியில் அதன் தகுதிக்கேற்ப 'சித்' எனப்படும் ஞானம் தோன்றுவதுண்டு. இத்தோற்றமும் மெய்ப் பொருள் ஆகாது.

(4) நவில் நான் மறையோ?

மந்திரங்களை உடையது மறை. மந்திரம் ஆற்றலை மறைத்து வைத்திருக்கும். மறை நூலுக்கு வேதம் என்றும் பெயர். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் கொண்டது வேதம். ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு பிரிவுகள் வேதத்தில் உள்ளன. ருக் என்பது மந்திர வடிவம் என்று பொருள்படும். ருக்கில் வருகின்ற மந்திரங்கள் மற்றவற்றிலும் வருவதனால் இந்நான்கிற்குமே 'ருக்' என்ற பெயரும் உண்டு.

நவிலுதல் என்பது நாக்கால் பலகாலம் பழகிச் சொல்லுவதாகும். மந்திரச் சொற்களைப் பலமுறை சொல்லுவதால், அவற்றின் கருத்துகள் தெரிந்தோ தெரியாமலோ வந்து பதியும். மாணிக்க வாசகர் அருளிச் செய்த 'சிவபுராண'த்தையும் இந்தக் கந்தரநுபூதியையும் பாராயணம் செய்யச் செய்ய, அவற்றின் ஆற்றலும் பயனும் வந்து அமையும். அவற்றை உருப்போடுவதால், அவை நினைவில் உருக்கொள்கின்றன.

ஞானோதயம் பெற்றவர்களிடமிருந்துதான் வேதவாக்கு வரும். எனவே முதலில் ஞானோதயத்தையும் பிறகு மறைவாக்கையும் குறிப்பிட்டார்.

(5) யானோ?

'யானோ' என்பதும் 'நானோ' என்பதும் ஒன்றே. இங்கு இச்சொல் ஆன்மாவைக் குறிக்கின்றது. 'யான்' வேறு; 'என் மனம்' வேறு. முத்தியடையும் வரை உடல் இருப்பதனால் 'யான்' என்றது உடலோடு கூடிய ஆன்மாவையாகும்.

முத்தியை நோக்கித் தவம் இருந்தாலும் ''யான்'' என்னும் உணர்வு இருப்பதனால் அது மெய்ப்பொருள் ஆகாது. ஆன்மாவில் இறைவன் கலந்திருந்தாலும் ஆன்மா இறைவன் (அல்லது மெய்ப் பொருள்) ஆகாது.

(6) மனமோ?

மனம் அந்தக்கரணங்களுள் ஒன்று. மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பவை அந்தக்கரணங்களின் நான்கு பிரிவுகளாம். இவற்றுள் மனம் நினைக்கும். புத்தி நினைத்த பொருளை இன்னதென்று ஆராய்ந்து நிச்சயிக்கும். அகங்காரம், நிச்சயிக்கப்பட்ட தைச் செய்து முடிக்க முற்படும். இந்த மூன்றன் தொகுப்புக்குச் சித்தம் என்று பெயர். மற்றும் சித்தம் என்பது அந்தக் காரியத்துள் அழுந்தி அதன் வண்ணமாகும். இந்த நடைமுறையில்தான் நாம் செய்கின்ற செயல்கள் எல்லாமே செயல்பட்டு வருகின்றன. இந்த நான்கனுள் எல்லோருக்கும் தெரிந்திருப்பது மனம் ஆதலால், அதை மட்டும் இங்குக் குறிப்பிட்டார்.

இந்த மனத்திலும், மற்ற அகக் கருவிகளிலும், மெய்ப்பொருள் கலந்திருந்தாலும் இவையே மெய்ப்பொருள் அல்ல.

(7) எனை ஆண்ட இடம் தானோ?

இங்கு ''இடம்'' என்றது ''நிலை'' என்னும் கருத்தில் வந்துள்ளது. ஆன்மா, இறைவனால் ஆளப்படுவதற்கு ஒரு நிலை அல்லது பக்குவம் தேவைப்படுகிறது. மாணிக்கவாசகர் இப்பக்குவத் தைக் குருந்தமர நீழலில் பெற்றார். அது திருக்கழுக்குன்றத்துக்கு வந்தபோது நிறைவு பெற்றது. அவ்வாறே அருணகிரியார் திருவண் ணாமலையில் பெற்றாலும் நிறைவுநிலை வேறு இடத்தில் கிடைத்தி ருக்கும். அதாவது ஓரிடத்தில் முதல் பக்குவம் வந்து, அது வளரத் தொடங்கிப் பிறிதோர் இடத்தில் நிறைவு நிலை அடையும் என்று தெரிகிறது. ஏனெனின் பக்குவம் பெறுகின்ற நிலை மிக நீண்டதாக

அமைந்துள்ளது. இறைவன் அருளுவதற்கு ஆயத்தமாய் இருந்தாலும், ஆன்ம பக்குவம் வரவில்லையானால் அது தடைபடும்.

அருளைப் பெறுவதற்குப் பக்குவநிலை முதன்மையாய் இருப்பதனால் அந்த நிலையைப் பற்றிச் சிறிது எண்ணிப் பார்ப்போம். ஆன்மா ஒழுக்கமாய் இருந்து, தெளிவுபெற்று, நாதத்தோடு கலந்த வாக்கையும் கைவரப் பெற்று, அந்த வளர்ச்சியை அநுபவிக்கும் போது ''நான்'' என்னும் உணர்வு அதற்கு இருந்துகொண்டே இருக்கும். இந்த நிலைக்குச் 'சகல நிலை' அல்லது 'விழிப்பு நிலை' என்று பெயர். இது ''ஜாக்கிராவத்தை'' என்றும் அழைக்கப்பெறும். இந்த நிலையில் ஆன்ம அறிவு எல்லாக் கருவிகளோடும் சேர்ந்து இருக்கும். அதாவது, ஐம்புலன்கள், ஐம்பொறிகள், புறக்கருவிகள் யாவும் உணர்வோடு சேர்ந்து வேலை செய்யும். இந்த நிலையில் ஆன்ம உணர்வு புருவ நடுவில் இருக்கும்.

விழிப்பு நிலைக்கு அடுத்து கனவுநிலை. (ஸ்வப்நாவஸ்தை) சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்று அவத்தைகள் மொத்தம் ஐந்துள்ளன.

கனவு நிலையில் ஆன்ம உணர்வு கண்டத்துக்கு இறங்கிவிடும். சுழுத்தியில் இதயத்திலும், துரியத்தில் நாபியிலும், துரியாதீதத்தில் மூலாதாரத்திலும் உயிர் உணர்வு தங்கி இருக்கும். புருவத்திலிருந்து மூலாதாரத்துக்கு இறங்குவது கீழாலவத்தை எனப்படும். இது இருளோடு அதாவது ஆணவத்தோடு சேரும்போது நிகழ்வதாகும். இதனால் தூக்கமும், அறியாமையும் துன்பமும் மிகும்.

கீழாலவத்தைக்கு மாறாக, மேலாலவத்தையும் உள்ளது. அது இறையருளோடு சேர்கின்ற உயர்ந்த போக்காகும். அது இறை வழிபாட்டினால் அமைவது; ஒளியையும் இன்பத்தையும் தரவல்லது.

மேலாலவத்தையில் இரண்டு பிரிவுகள் உள்ளன. அவை: (1) மத்திய ஜாக்ராவத்தை, (2) சுத்தாவத்தை என்பன. இவை ஒவ்வொன்றுக்கும் ஐந்து பிரிவுகள் உள்ளன. புருவத்திலிருந்து உச்சிக்குழி (பிரம்மரந்திரம்) வரை பரவியுள்ள மத்திய ஜாக்கிராவத்தையில் ஐந்தும், உச்சியிலிருந்து அதற்குமேல் 12 அங்குலம் வரை உள்ள சுத்த ஜாக்கிராவத்தையில் ஐந்து பிரிவுகளும் உள்ளன. புருவ நடுவில் ஆன்ம தத்துவங்களும் மத்ய ஜாக்ராவத்தையில் கலைகளும் (மிச்ர தத்துவங்களும்) உச்சிக்கு மேலுள்ள சுத்தாவத்தையில் சுத்த தத்துவங்களும் (சிவ தத்துவங்களும்) வேலை செய்கின்றன. உச்சிக்கு

மேலும் உணர்வு இருப்பதனால், ஒருவர் தலைமேல் மற்றவர் கை வைக்கக் கூடாது. வைத்தால் உணர்வு கலங்கும்.

இனி, விழிப்பு நிலையிலிருந்து கனவு நிலைக்கு உயிர் உணர்வு இறங்கும்போது ஆன்ம தத்துவங்களிலும் பல கருவிகள் வேலை செய்வதில்லை. அதாவது கனவு நிலையில் கண் பார்க்காது; காது கேளாது; அப்படியே மற்றவையும். கனவு நிலையிலிருந்து மேலும் கீழிறங்கி இதயத்துக்கும் நாபிக்கும், மூலாதாரத்துக்கும் போகும் போது, இறுதியில், இருளில் ஆணவத்தோடு மட்டும் சேர்ந்திருக்கும்.

இதற்கு மாறாக, மேலாலவத்தையில், விழிப்பு நிலைக்கு அடுத்த 'அறிதுயில்' நிலைக்கு உயரும். மேலும் உயர்ந்து ஆழ்ந்து செல்லும்போது சுழுத்தி நிலையை அடையும். அப்பொழுது ஆன்மாவுக்குச் சூழலில் என்ன நடக்கிறது என்பது புலப்படாது. ஒரு நூலை ஆழ்ந்து படிக்கும்போது இந்த நிலை வரும். அவர்களுடைய படிப்பைக் கலைத்தால் எரிவர். படிப்பில் அவர் களுக்கு இன்பம் இருப்பதனால் அவ்வாறு நிகழும். படிப்பைவிட அருளியலில் ஆழ்ந்து போகிறவர்களுக்குப் பெரிய இன்ப உணர்வு கள் கிட்டும். அவர்கள் கோயில் வாசற்படியில் அமர்ந்திருந்தாலும், அவர்களுடைய இன்ப உணர்வுகள் எங்கோ பறந்து சென்று இன்பத்தில் அமிழ்ந்திருக்கும்.

இதற்கும் மேம்பட்ட துரிய நிலையை எட்டினால், பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கம்பியை அவர்கள் மேல் வைத்து ''இது மல்லிகை மலர்'' என்று நாம் சொன்னால் ''ஆம், மெத்தென்று இருக்கிறது'' என்று பதில் கூறுவர். அதோடு ''அது மணம் வீசுகிறது'' என்றும் கூறுவர். இந்தத் துரிய நிலை நான்காவது நிலையாகும். சண்டேசரை அவருடைய தகப்பனார் அடித்தபோது அவருக்குத் தெரியவில்லை. பால்குடத்தைக் காலால் இடறியபோதும், அவ ருடைய உணர்வு கலையவில்லை. அவர் வழிபட்டுக் கொண்டிருந்த இலிங்கத்தைத் தாக்கியபோதுதான் அவர் உணர்வு கலங்கியது. இதைக்கொண்டு அவர் உணர்வு எவ்வளவு ஆழ்ந்துபோய் இருந்தது என்பதனைப் புரிந்து கொள்ளலாம். இந்த உயர்ந்த தெளிவு நிலையை அடைவதற்குப் பணம் செலவு செய்யவேண்டுவதில்லை. எவ்வளவு வறியரும் இந்நிலையைப் பயின்று பெறலாம்.

இத்துரிய நிலையை அடைந்த பிறகு ஆன்ம முயற்சி தேவையில்லை. இறைவனே இறங்கிவந்து உதவுவான். மேலும் மேலும் விளக்கங்களையும் அநுபவங்களையும் தருவான். அநுபவம் வரும்போது ''யான்'' ''எனது'' என்பவை மறக்கப்படும்.

இறையநுபவத்தில் உலகம், உயிர், இறைவன் ஆகிய மூன்று பொருள்களும் நினைவுக்கு வருவதில்லை. சிறு சிறு அநுபவங்களி லேயும் இந்த நிலை வருவதுண்டு. குழந்தையைக் கொஞ்சி அநுபவிக்கும்போதுகூட குழந்தை என்பதும், தான் என்பதும் மறந்துபோம். இன்பத்தின் இயல்பு அத்தகையது.

இன்பம் என்பது இல்லாத ஒரு பொருளன்று. அது ஆன்ம உணர்வுக்குப் பொருள் (விஷயம்) ஆவதுதான். இன்பம் ''எல்லாம் அற என்னை இழந்த நலம்'' ஆகும்.

எல்லாம் அற்ற இடத்துக்குப் ''பாழ்'' என்று ஒரு பெயருண்டு. ''முப்பாழும் பாழாய், முடிவில் ஒரு சூனியமாய், அப்பாழும் பாழ் என்றறி'' என்னும் தொடர் மூன்று மலப்பொருள்களும் (ஆணவம், கன்மம், மாயை) பாழாகி, ஆன்மாவும் இல்லாதாகி, அப்பொருளா கிய சிவமும் தோன்றாத, இன்பநிலை என்பதனை அறிவாயாக என்று பொருள்படும்.

இந்த அநுபவ நிலையைப் பற்றி எத்தனையோ சான்றோர்கள் ஒருவர் சொன்னதைப் போலவே மற்றவரும் கூறுவதனால், ஒன்றுமில்லாத ஒன்றைக் கற்பித்துத் தமக்குத் தெரியாத ஒன்றைச் சொல்லுவதாக இருக்க முடியாது. எனவே அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இறைஇன்பம் உண்டென்பதனையும், அவர்கள் அதற்கு இட்ட ''பாழ்'' என்னும் பெயரையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ''பாழ்'' என்னும் சொல்லில் உள்ள ✦''ழ'' கரத்துக்கே ''இன்பம்'' (ஆநந்தம்) என்னும் பொருள் இருக்கிறது.

ஆக, ஆணவத்தோடு கூடிய கீழாலவத்தையைச் சேர்ந்த துரியாதீதத்திலிருந்து உயர்ந்து, சுத்தாவத்தையைச் சேர்ந்த இறுதியான

✦ ''தமிழ்'' என்னும் சொல்லிலும் ''ழ'' கரம் உள்ளது. இந்திய மொழிகளில் தமிழ் மொழி ஒன்றில்தான் 'ழ' கரம் உள்ளது. ''தமிழ்'' என்னும் சொல்லில் இதன் கருத்து என்ன என்பதனைப் பார்ப்போம்.

த = த்+அ. த் = தகராகாசம்; அ = இறைவன் (பரமான்மா)

மி = மாயையொடு கூடிய உயிர் = சீவான்மா

ழ் = (இறைவனும் ஆன்மாவும் சேர்ந்தபோது உண்டாகின்ற) இன்பம்.

ஆக, 'தமிழ்' என்னும் சொல் இறைவனும் ஆன்மாவும் சேரும்போது உண்டாகின்ற முத்தி இன்பத்தைக் குறிக்கின்றது. அவ்வாறே கீழ்வரும் சொற்களிலும் 'ழ'கரம் இன்பத்தைக் குறிக்கின்றது.

(1) 'வாழ்' என்னும் சொல்லில் 'ழ'கரம் சேர்ந்து அன்பு முதலிய பண்புகளோடு விளக்கமாய் வாழ்வதையும்,

(2) 'பாழ்' என்னும் சொல்லில் 'ழ'கரம் சேர்ந்து இறையும் உயிரும் ஒன்றுபடுகின்ற லய முறையையும்,

(3) 'யாழ்' என்னும் சொல்லில் 'ழ'கரம் சேர்ந்து நல்ல, இனிய ஓசையையும் குறிக்கின்றது.

துரியாதீதத்தை ஆன்மா அடையும்போது இறைவன் ஆட்கொள் வான். ''ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத் தாணுவி னோடு அத்துவிதம் சாருநாள் எந்நாளோ?'' என்று தாயுமான சுவாமிகள் குறிப்பிட்டதும் இந்த உயர்ந்த நிலையையேயாகும்.

இந்த நிலை அல்லது இடம்தான் இங்கு ''எனை ஆண்ட இடம்'' என்று அருணகிரியாரால் குறிக்கப்பட்டுள்ளது. இது மிக உயர்ந்த இடம் ஆனாலும், இதுவும் மெய்ப்பொருள் ஆவதில்லை.

(8) பொருளாவது சண்முகனே!

பொருள் என்றது மெய்ப்பொருளாகிய இறைவன் ஆகும். 'சண்முகம்' என்பது ஆறுமுகங்களை உடைய முருகனாவான். சண்முகனை நோக்கி, மேற்கூறிய புறப்பொருள்களிலும், அகப் பொருள்களிலும் எது மெய்ப்பொருள் என்று கேட்கின்றார். 'சண்முகனே' என்று விளித்ததில் ஒரு கருத்து இருக்கின்றது. அதாவது, முன்பு விளக்கியபடி புறப்பொருள் ஐந்தும், அதோ முகத்தால் காண்கின்ற அகப்பொருள்களின் தொகுப்பு ஒன்றும், ஆக பொருள்களில் ஊடுருவிக் கலந்துள்ள ஆறுமுகங்களைக் கொண்ட கடவுளாகிய இறைவனே! அதாவது சண்முகனே! என்று விளிக்கின் றார். இல்லையானால், கந்தனே, முருகனே, வேலனே என்றோ, வேறு எப்படியோ கூறியிருப்பார்.

III சக்கரம்

இப்பாடல் சரியை, கிரியை, யோகம் ஆகிய தவமுயற்சிகளில் முன்னேறி, ஆன்மா மேல் மேல் நிலைகளை அடைவது பற்றிக் கூறுகின்றது. இறையருளால் ஆன்மாவின் பிராண சத்தி படிப்படியாக மிகுவதால் இந்த முன்னேற்றம் வருகின்றது. பிராண சத்தியைக் குறிக்கின்ற எழுத்து 'ஷ' கரம் ஆனதனால், இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்து 'ஷ' கரம் ஆகின்றது.

இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-4

வளைபட்ட கை மாதொடு மக்கள் எனும்
தளைபட்டு அழியத் தகுமோ! தகுமோ!!
கிளைபட்டு எழு சூர் உரமும் கிரியும்
தொளைபட்டு உருவத் தொடு வேலவனே!

I பொழிப்புரை

சுற்றத்தாரோடு போருக்கு எழுகின்ற சூரபன்மனுடைய மார்பி லும், (அவனுக்கு அரணாக இருந்த) மலைகளிலும் தொளைகளை உண்டுபண்ணிக் கொண்டு ஊடுருவிச் சென்று அழிக்கும்படியாக வேலாயுதத்தை எறிகின்ற வேலவனே! வளை அணிந்த கையுடைய மாதோடு, மக்கள் என்கின்ற தடையினால் (பிணிப்பால், நான்) அழிவது தகுமோ! தகுமோ!

1 விளக்கவுரை

(1) வளைபட்ட கை மாதொடு

இங்கு 'மாது' என்றது மனைவியைக் குறிக்கும். 'மா' என்பது அழகு. எனவே 'மாது' என்பது அழகுடையவள் என்று பொருள் படும். அழகினைப் புற அழகு என்றும் அக அழகு என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். உடலுறுப்புக்களின் அழகு புற அழகு; நற்பண்புகள், அக அழகு ஆம். நற்பண்புகள் என்பவை 1. அச்சம், 2. மடம், 3. நாணம், 4. பயிர்ப்பு ஆம். இவை பொதுவாக ஒரு பெண்ணிற்கு உரியவை. இவற்றோடு மனைவிக்கு விருந்தோம்பல் சிறப்புப் பண்பாகக் கொள்ளப்படுகிறது. மனைவிக்குப் புற அழகு களில் குறை இருந்தாலும், அக அழகுகளில் குறை இருக்கக் கூடாது.

இந்தப் பாட்டில் அருணகிரியார் மாதர்களைப் பற்றிப் பேசி இருப்பதனால், தமிழர் நாகரிகத்தில் பெண்கள் எவ்வாறு மதிக்கப்பட் டனர்; சமூகத்தில் அவர்கள் எந்த நிலையைப் பெற்றிருந்தனர், அவர்கள் கடமைகள் என்ன, உரிமைகள் என்ன என்பவற்றைச் சிறிது எண்ணிப் பார்ப்பது பயனுடையதாகும். இச்செய்திகள்

பண்டைய இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. சங்ககாலக் கருத்துப்படி ஆண்மை என்பதும் பெண்மை என்பதும் உடல் அமைப்பில் மட்டும் காணப்படும் வேறுபாடல்ல. இந்த வேறுபாடு உயிரிலேயே இருக்கின்றது. உயிருக்கேற்ற உடம்புதான் இறைவனால் கொடுக்கப்படுகின்றது. மற்றும் இந்த வேறுபாடு எந்தப் பிறவியிலும் மாறுவதில்லை. ஒவ்வொரு ஆண் உயிருக்கும் ஒவ்வொரு பெண்ணுயிர் உரியதாய் இயல்பாகவே அமைந்துள்ளது. உரிய அந்த இரண்டு உயிர்களும் எதிர்ப்படும்போது ஒன்றை ஒன்று ஈர்க்கும். அதுவே தெய்வீகக் காதல் எனப்படுவதாகும். எதிர்ப்பட்ட பிறகு காதல் கொண்டு, திருமணம் ஆகும்வரை அவ்வுயிர்களுக்கு உண்டாகின்ற மெய்ப்பாடுகளை முறைப்படுத்தி அவற்றுக்கு இலக்கணங்களையும் வகுத்துள்ளனர். (தொல்காப்பியம் இவைகளைத் தெரிவிக்கின்றது). உலகத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இத்தகைய இலக்கணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த முறையில் தமிழர் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவதையே நல்லறம் என்று கருதி வந்தனர். ''இல்லை'' என்று சொல்லாத அறமே ''இல்லறம்'' ஆகும். மற்றும் வறுமை, அறியாமை முதலியன இல்லாத அறம் என்றும் பொருள்படும்.

தனக்குரிய ஆண் உயிரோ, பெண்ணுயிரோ, எதிர்ப்படாதவர்களும், கிடைக்கப்பெற்றுத் திருமணமாகிப் பிறகு இழந்தவர்களும், வாழ்நாள் முழுவதும் தனித்து இருந்து பற்றற்ற முறையில் நோன்பிருந்து வாழ்ந்து வந்தனர். இவர்களையே தமிழர்கள் ''துறவிகள்'' என்றனர். மற்றபடி, இல்லறத்தைவிட்டு, வெறுப்புக் காரணமாக வெளியே செல்வதைத் ''துறவு'' என்று கொள்ளவில்லை. திருவள்ளுவர் போன்ற பெரியோர்கள் மனைவியோடு இல்லறத்தில் இருந்துகொண்டே பற்றற்ற முறையில் சிறந்த துறவிகளாய் வாழ்ந்துள்ளனர்.

பற்றற்ற வாழ்க்கை வாழ்வதே குறிக்கோளானால், திருமணம் எதற்கு என்று தோன்றும். தமிழர் கொள்கைப்படி திருமணம் செய்துகொள்வது விருந்தோம்புவதற்காகவேயாகும். விருந்தோம்பல் என்னும் அறம் திருமணத்துக்குப்பின் இருவரும் சேர்ந்து செய்ய வேண்டுவதாகும். தனித்து வாழ்பவர் செய்யத் தக்கதன்று. இதனை இளங்கோவடிகள் கண்ணகி கூறியதாக, பின்வருமாறு கூறுகின்றார்:

''அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.........
(சிலப்-கொலைக். 71-73)

கோவலன் ''சிலம்பினை விற்றுவருகிறேன்'' என்று கண்ணகியிடம் சொல்லிப் பிரிவதற்கு முன்பு, தான் கண்ணகிக்குச் செய்த கொடுமையை எண்ணி வருந்தினான். அப்பொழுது கண்ணகியும் நடந்ததை எல்லாம் எண்ணி வருத்தப்பட்டாள். அவளுடைய வருத்தம் பிரிந்து இருந்தது மட்டும் அல்ல. ''தங்கள் பிரிவால் விருந்தோம்பலை இழந்தேனே'' என்னும் கருத்தில் மேற்கண்டவாறு கூறினாள். எனவே தமிழர் மரபுப்படி கணவனைப் பிரிந்து தனியே இருக்கும் மாது விருந்தோம்புதல் என்னும் அறத்தைச் செய்யும் தகுதி இல்லாதவள் என்பது தெரிகின்றது.

இத்தகுதியை உடைய மாது, அதற்கு அறிகுறியாகக் கையில் வளையல் அணிந்துகொள்வது பழக்கமாயிற்று. வளையலைக் கொண்டு அப்பெண்ணின் நிலைமையை அறிந்துகொள்ள முடிந்தது. எனவே கணவனை இழந்தவள், விருந்தோம்ப இயலாதவளானதனால், வளையலை நீக்கிவிடுவாள். மதுரையில் கோவலன் கொலையுண்டு இறந்தபின், கண்ணகி அந்நகரைவிட்டுச் செல்லும்போது, கொற்றவை கோயிலுக்குப் போய்த் தன் கைவளையல்களை நெரித்து எறிந்துவிட்டாள். இதனால் விருந்தோம்பும் அறத்தைச் செய்யக் கூடியவர்களே வளை அணிந்து கொள்வர் என்பது தெரிகிறது. இதைக் குறிப்பிடுவதற்கே அருணகிரியார் இங்கு வேறு அடைமொழிகளைச் சொல்லாமல் ''வளைபட்ட கைமாது'' என்று கூறினார். வீரர்கள் வீரவளை அணிவது போன்றதே விருந்தோம்புவோர் வளையல் அணிவதாகும்; அது தகுதி அல்லது அதிகாரத்தைக் காட்டும். பெண் குழந்தைகள் வளையல் அணிவது உபசாரமேயாகும்.

இங்கு 'மாது' என்று ஒருமையாகச் சொன்னதனால் இல்லறம் நடத்துவதற்கு ஒரு பெண்ணே உரியவள் என்பதைக் குறிக்கும். பல மனைவியரை மணந்து கொள்வது தமிழ் நாகரிகத்துக்கு ஏற்றதன்று; முரண்பட்டதாகும். மற்றும், திருமணத்துக்குப் பிறகு, மனைவி இறந்துவிட்டால், மறுமணம் செய்து கொள்வதும் அறம் ஆகாது. ஊழின் காரணமாக மனைவி இறக்க நேர்ந்தால், ஆடவன் எஞ்சிய காலத்தை நோன்பிருந்து கழிக்கவேண்டும். இந்த நோன்பு

நிலையைத் ''தபுதார நிலை'' என்று வழங்கிவந்தனர். அதைப் போலவே மனைவி கணவனை இழந்தாலும் எஞ்சிய காலத்தை நோன்பிருந்து கழித்து வந்தாள். அந்த நிலை ''தாபத நிலை'' என்று வழங்கப்பட்டது. இருபாலாருக்கும் இந்த நிலை பொதுவாக இருந்தது. பெண்களுக்கு மட்டும் அன்று. ஆக, தமிழ்ச் சமூகத்தில் இருபாலாரும் ஒத்த உரிமையும் கடமையும் பெற்றிருந்தனர். பெண்ணினத்துக்குத் தெய்வீக மதிப்பும் இருந்துவந்தது.

(2) **மக்கள்**

விருந்தோம்புவதற்கு மனைவியும் கணவனும் உடன் இருந்து செய்யவேண்டும் என்பதோடு, மக்களும் உடன் இருந்து செய்வது மேலும் சிறப்புடையதாகும். அப்பூதியடிகள் வரலாற்றில் இச்சிறப் பினைக் காணலாம்.

முன்பு 'மாது' என்று ஒருமையில் வந்ததால், ஒரு ஆடவனுக்கு ஒரு மனைவிதான் இருக்கமுடியும் என்பதனைப் பார்த்தோம். இங்கு ''மக்கள்'' என்று பன்மையில் வந்திருப்பதனால், மக்கள் ஒன்றுக்கு மேற்பட்டு இருக்கலாம் என்பது தெரிகிறது. எனினும் மிகப்பலர் இருப்பது சிறப்பன்று. ஒருவர் அல்லது இருவர் இருக்கலாம். அப்படி இருந்தால் மட்டுமே நல்ல மக்கள் பிறக்க வாய்ப்பு இருக்கும். மக்களே வேண்டாம் என்றும் சிலர் எண்ணுவர். அவ்வாறு எண்ணுவது இறைவன் நோக்கத்துக்கு மாறாகும். அது, மேல் பிறவிக்கு வரவேண்டிய ஆன்மாக்களைத் தடை செய்ததாக அமையும்.

''மாதொடு மக்கள்'' என்று ''ஒடு'' உருபைச் சேர்த்து மாதையும், மக்களையும் பிரித்துக் கூறுகிறார். இந்த உருபினால் நாம் புரிந்துகொள்ள வேண்டிய சில கருத்துக்கள் உள்ளன. அதாவது கணவனும், மனைவியும் பிரியக்கூடாது என்பதாகும். குடும்பம் பிரியவேண்டிய கட்டாயம் வந்தாலும், மக்கள் பிரியலாம்; ஆனால் கணவனும் மனைவியும் தம்முள் பிரியக்கூடாது. நளவெண்பாவில் இதுபற்றி வருகிறது. நளன் காட்டுக்குச் செல்லவேண்டி வந்தபோது, மனைவி - மக்களை ஊருக்கு அனுப்ப எண்ணினான். ஆனால் அவள் அதற்கு உடன்படாமல் மக்களை மட்டும் அனுப்பிவிட்டு நளனோடு தானும் காட்டுக்குச் சென்றாள். கணவனும் மனைவியும் பிரியக் கூடாது என்பதனை உணர்த்தவே அருணகிரியார் 'ஒடு' உருபைச்

சேர்த்துப் பாடினார். சிலர் 'ஒடு'வை அசை என்று கொண்டு அதற்குப் பொருள் இல்லை என்பர். சான்றோர் பாடல்களில் வீண் சொற்கள் வருவதில்லை என்பதனை நாம் மறக்கக் கூடாது.

(3) **எனும் தளை பட்டு**

இத்தொடரில் ''தளை'' என்னும் சொல் வந்திருப்பதனால், மனைவி - மக்கள், ஆடவனின் முன்னேற்றத்துக்குத் தடையாய் உள்ளனர் என்று கூறும்படி உள்ளது. ஆனால், அருணகிரியார் எதைக் கருதி அவ்வாறு கூறினார் என்பதனைப் புரிந்துகொள்ள இதுபற்றி ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

மனிதனுடைய குறிக்கோள் இறைவனை அடைவதாகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு அவன் தனக்கு இயல்பாய் அமைந்துள்ள அன்பு நிலையை வளர்த்து அருள் நிலையைப் பெறவேண்டும். அதற்காக அவன் பல பிறவிகள் எடுத்து இல்லறத்தில் பயில வேண்டி இருக்கிறது. தன் வருவாயைத் திருக்குறள் ஆகிய அறநூலில் விதித்தபடி பகுத்துக்கொண்டு விருந்தோம்பி தனக்குத் தொடர்பு இல்லாதவர்களுக்கும் தொண்டு செய்து அருட்பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. இவற்றை எல்லாம் முறைப்படிச் செய்வதற்கு ஒத்த பண்புடைய துணைவி தேவைப்படுகின்றாள். தனக்குரிய அப்பெண்ணுயிர் எதிர்ப்படுவதற்காக நாற்பத்தெட்டு ஆண்டுகள் காத்திருக்கலாம் என்பது மரபு. அதுவரை அவன் மாணவ நிலையில் இருக்கவேண்டும். திருமணம் ஆனபின் பன்னிரண்டு ஆண்டுகள் மேற்கூறிய வகையில் இல்லறத்தை நடத்த வேண்டும். நாற்பத்தெட்டு ஆண்டுகள் சரியை நிலையில் மாணவனாகவும், பன்னிரண்டு ஆண்டுகள் கிரியை நிலையில் இல்லறத்தையும் செவ்வையாக முடித்தபிறகு அறுபது ஆண்டுகள் முழுமை பெறும். அதனைக் குறிப்பதற்கு ''மணி விழா'' என்னும் ஒரு விழாவும் நடைபெறும். அதன்பிறகு யோகத்துக்கும் ஞானத்துக்கும் மற்றொரு அறுபது ஆண்டுகள் (யோகம் அல்லது தவத்துக்கு 48, ஞானத்துக்கு 12) பயில வேண்டும். இவ்வாறு வாழவேண்டிய முழுமையான நூற்று இருபது ஆண்டு வாழ்க்கைக்கு ''மாதொடு மக்கள்'' தளையாக உள்ளனரா அல்லது சாதனமாக உள்ளனரா என்பது பற்றி நாம் ஆராய வேண்டும்.

''தளை'' என்னும் சொல்லுக்குப் பகுதி ''தள்'' ஆகும். இதன் பொருள் ''தடை''யாகும். ஆக தளை, தள், தடை என்பன ஒரே கருத்தை உடையன.

மாணவப் பருவமாகிய சரியை நிலைபோக, மற்ற கிரியை, யோகம், ஞானம் ஆகிய மூன்று நிலைகளிலும் வாழ்க்கைத் துணை உடனிருந்து செய்யவேண்டியுள்ளது. எனவே மனைவி மக்கள் தடையாக உள்ளனர் என்று கூறுவதற்கு இடமில்லை. மேற்கூறிய அறமுறையில் இல்லறத்தை ஆடவன் நடத்தவில்லையானால் அது அவனுக்கே இழுக்கு ஆகுமேயல்லாமல் மனைவி மக்கள் பொறுப் பாக மாட்டார்கள். ஒருவேளை அந்தக் காரியங்களுக்கு மனைவி மக்கள் வராமல் இருந்தால் அது தளையாகும். கணவனும் மனைவியும் நேயத்தால் ஒன்றுவதற்குப் பதிலாகக் காமத்தால் அணுகுவரானால், அது தளையாகும். துறவு (சந்யாசம்) என்பது இராமகிருஷ்ணர் வாழ்க்கையில் அமைந்ததைப் போல இருவரும் துறவிகளாய் இருப்பரானால், அங்குத் தளை வருவதில்லை. ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவதன்று துறவு. வேண்டாத உணர்வுகளை விடுவதே துறவாகும். இந்த வகையில் துறக்காமல், ஆடவன் மாதினால் தளைப்பட்டால் அது அவனுக்கே அழிவு தரும். அப்பொழுதும் அழிபவர் மாதர் அல்லர். மாதர் பிறப்பு, புண்ணியப் பிறப்பு. அவர்கள் மட்டும் தம் சத்தியை உணர்ந்து காத்துக்கொள்வார்களானால் அவர்கள் சத்தி பெரிதாக விளங்கும். அகவாழ்க்கையில், முல்லைத் திணை- இருத்தல் ஒழுக்கம் எல்லாம் அவர்களுக்கென்றே வந்துள்ளது. இருத்தல் ஒழுக்கத்தால் மனைவி தன் கணவன் செயலை நிறைவேற்றுகிறாள். கணவன் வெற்றிக்குத் தியானம் செய்வதனால் அவளே (அவ்வெற்றிக்குக்) காரணமாகின் றாள். தவத்துக்கு ஏற்ற அமைப்பு மாதர்களுக்கே உள்ளது. ஆக, கணவன் தன் வாழ்க்கையை அருள் நாட்டத்தோடு வாழும்போது மாதொடு மக்கள் சாதனமாக இருக்கிறார்கள் என்பதும் காமநோக் கோடு வாழும்போது தளையாக இருக்கின்றனர் என்பதும் பெறப்பட் டன.

இனி ''எனும் தளை'' என்று கூறியதனால் ஒரு சிலர் ''தளை'' என்று கூறுவாராயின், அவர்கள் கூறுவதில் உண்மையும், நிச்சயமும் இல்லை என்பதனை உணர்த்த ''எனும்'' சேர்த்து கூறினார் என்று கொள்ளவேண்டும்.

(4) அழியத் தகுமோ! தகுமோ!

அறமுறையில் வாழ்ந்து வாழ்க்கையைச் சிறப்பாக்கிக் கொள்ளா விட்டால் அழிவுதான் நேரும். மாறாக அறமுறையில் வாழ்ந்தால் பழுத்த பழம்போல் அளிந்து சிறக்கலாம்.

மேற்கூறிய உண்மைகளை அறியாதவர்கள் மனைவி மக்களைக் காமத்தால் தளையாகக் கொண்டு அழிந்துபோவது 'தகுமோ' என்று வினவினார். இவ்வுண்மைகளை அறிந்திருந்தும், ஒப்புக் கொண்டும், அறவழியில் ஒழுகாமல் காமவயப்பட்டு அழிகின்ற மற்றொரு சாராரை நோக்கி இரண்டாவது முறையும் 'தகுமோ!' என்றார்.

(5) கிளைபட்டு எழு சூர் உரமும் கிரியும்

'கிளை' என்பது சுற்றத்தார். 'சூர்' என்னும் சொல் வீரத்தைக் குறிக்கும். மற்றும் அச்சம் தரத்தக்க சூக்கும உடல் உள்ளவர்களையும் குறிக்கும். அஞ்சத்தக்க காரியத்தைச் செய்ததால் இங்குச் சூரபதுமனைக் குறித்தது. அவனுடைய வீரம் முரட்டுத்தனமானது. ஈர அடிப்படை இல்லாதது. ஈர வீரம் இனிமையானது. முரட்டுத்தனத்துக்கு அடிப்படையாய் இருப்பது ஆணவம். சூரனுக்குக் காவலாக அவன் வாழ்ந்த நகரைச் சுற்றி ஏழு மலைகள் (அரணாக) இருந்தன. (கிரி = மலை)

சூரன், முருகனோடு போர் செய்யவரும்போது தன் சுற்றத்தாரோடு எழுந்து வந்தான். அவன் போர் செய்து, முருகனால் ஆட்கொள்ளப்பட்டு உயர்ந்த நிலையை அடைந்தான். அதனால் அவனை ''எழு சூர்'' என்றார்.

(6) தொளைபட்டு உருவத் தொடு வேலவனே

சூரனுடைய மார்பும், மலைகளும் தொளைபட்டு, ஊடுருவிச் செல்லும்படியாக முருகன் வேல் எறிந்தான். வேலை எறிந்ததனால் முருகன் இங்கு 'வேலவன்' எனப்பட்டான். அறத்தின் அடிப்படையில் செய்யும் செயலே வெற்றி பெறும். அறம் என்பது நம் அறிவு செலுத்துகின்ற நல்ல நடத்தையாகும். எனவே அறத்துக்கு அடிப்படை அறிவு அல்லது ஞானம் ஆகின்றது. போர்க்கருவிகள் பலவாக இரண்டு பக்கமும் இருந்தாலும், அறிவின் அடிப்படையிலேயே வெற்றி அமைகிறது. இங்கு முருகனுக்கு வேலாய் இருந்தது


அவனுடைய ஞானமேயாகும். அதாவது அவனுடைய ஞானத்தால் தான் அவனுக்கு வெற்றி கிடைத்தது. அந்த வகையில் முருகனைவிட அவன் வேல் முதன்மை பெறுகின்றது. சில பக்தர்கள் வேலை மட்டும் (முருகன் இல்லாமல்) வழிபடுவது உண்டு. ஆனால் வேலில்லாத முருகனை யாரும் வழிபடுவதில்லை. தொல்காப்பியர், திருவள்ளுவர் ஆகியோருடைய வடிவம் இல்லாவிட்டாலும், அவர் கள் அருளிச் செய்த ஞானம் இருக்கிறது. அது மக்களை நல்வழிப்படுத்துகிறது. உலகத்தில் மக்களைத் தண்டனையால் திருத் தப் பார்க்கின்றனர். அதைவிட திருக்குறள் போன்ற ஞானத்தால் திருத்துவதுதான் நிலையானதும் எளிய முறையும் ஆகும். இதற்கு ஞானிகளைப் பெருக்குவதே செய்யத்தக்கதாகும். இதனை முதன்மை யாகக் கருதாததனால்தான் தீமைகள் அதிகமாகின்றன.

வேலின் உருவத்தில் நுனிப்பாகம் கூர்மையாகவும், இலைப்பா கம் அகன்றும், தண்டுப்பாகம், (முருகனின்) திருவடிவரை நீண்டும் இருக்கிறது. இந்த அமைப்பு, ஞானம் கூர்மையுடையதும், அகன்ற தும், ஆழ்ந்து செல்வதும் ஆகும் என்பதனைக் குறிக்கின்றது.

ஞானத்தின் முன் அறியாமை, ஆணவம், முரட்டுத்தனம் ஆகியவை நிற்கமாட்டா. ஆகவே சூரன் தன் முரட்டுத்தனம் கெட்டு மென்மையுடையவனானான். முரட்டுத்தனம் போனால், நல்ல உடலழகும், நல்ல வாக்கும் வரும். சூரன் நல்ல உடலழகுள்ள மயில் உருவில் முருகனைத் தாங்கிக் கொண்டான். முருகன் நல்ல பேச்சு ஆகிய சேவற்கொடியைத் தாங்கிக்கொண்டான். குரங்குக் குட்டி, தன் தாயைப் பிடிப்பதுபோல் நாம் ஆண்டவனைப் பற்றிக்கொண்டால், பூனை தன் குட்டியைப் பிடிப்பதுபோல், அவன் நம்மைத் தாங்குவான். முன்னது மயிலின் நிலை; பின்னது சேவலின் நிலையாகும்.

III சக்கரம்

இந்தப் பாடல், மனைவியையும் மக்களையும் தவநெறிக்குத் தளையாகக் கருதாமல், சாதனமாகக் கருதவேண்டும் என்று கூறுகிறது. அது ஒரு தூய நிலையாகும். அதனை அடைவதற்கு ஆன்மாவுக்குச் சித்த சுத்தி வரவேண்டும். சித்த சுத்தியைக் குறிக்கின்ற எழுத்து 'ஸ' கரமாகும். எனவே இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்து 'ஸ'கரமாகும். இப்பாடலின் சக்கரம் வருமாறு:



இதுவரை பார்த்த வ, ச(श), ஷ, ஸ ஆகிய நான்கு எழுத்துக்கள் மூலாதார மலரைச் சேர்ந்தவை. இனி அந்த மலரின் முழுசக்கரத்தை யும் அதில் இந்த எழுத்துகள் அமைந்துள்ளதையும் காண்போமாக.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்


ii மூலாதார சக்கரம்

மிக நுட்பமாகிய காரண உடம்பிலுள்ள ஆறு ஆதார மலர்களுள் மூலாதாரம் முதலாவதாகும். ''மூலம்'' என்னும் சொல்லுக்கு வாயில் என்று பொருள். அதனைத் தொடக்கம் அல்லது ஆரம்பம் என்றும் சொல்லலாம். இந்த ஆதாரம் கருவாய்க்கும் எருவாய்க்கும் இடையில் உள்ளது. இதற்கு அதிதேவதை விநாயகர். இது மண் (பூமி) தன்மையுடையது. அதனாலேயே விநாயகரை மண்ணால் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது.

இந்த ஆதாரத்துக்கு அடுத்ததாகிய சுவாதிட்டானம், இதற்குச் சற்று மேலே, இடப்பக்கமாக உள்ளது. சுவாதிட்டானத்தில் இந்திரியம் (குண்டலினி) இருக்கும். அது சுவாதிட்டானத்திலிருந்து புறப்பட்டு மூலாதாரத்துக்கு வந்த பிறகுதான் மேல் நோக்கிச் செல்ல முடியும்.

மூலாதாரம்தான் பிரணவத்தின் பிறப்பிடம். பிரணவத்தின் வடிவமாய் இருப்பவர் விநாயகர். பிரணவத்தின் உள்ளே இருப்பவர் முருகன். பிரணவமே முருகன் என்று சொல்லக் கூடாது. அவன் அதன் உள் ஒளியானவன். எனவே முதலில் விநாயகரைம், பிறகு முருகனையும் தியானிக்க வேண்டும். கோயில் வாயிலில் விநாயக ரும் முருகனும் இருப்பது இதை நினைப்பூட்டுவதற்கேயாகும். ஆலய வழிபாட்டை முறைப்படி செய்துவந்தால், இத்துறையில் அநுபவம் உண்டாகும்.

இனி, மூலாதாரத்துக்கான சக்கரத்தைப் பார்ப்போம். அதன் உருவம் வருமாறு:



● சக்தி என்னும் சொல்லில் வருகிற 'த்' கர எழுத்தின் ஒலியாகும்

இச்சக்கரத்தைத் தியானித்துப் பூசித்தால் ''ஓம்'' நமக்குள்ளே தோன்றும். இதற்கு மூச்சுப் பழக்கம் (பிராணாயாமம்) அவசியம் ஆகும். மூச்சு எங்குச் செல்கிறதோ அங்குச் சத்தி உண்டாகும். மூச்சுப் போதலும் வருதலுமாக இருந்தால், அங்கு ஏதோ ஒரு வேலை நிகழ்ந்தே தீரும். அது ஒலியையும் ஒளியையும் எழுப்பும். மின் சத்தியும் சூக்குமமாய் அமையும். அப்பொழுது ''ஓம்'' ஒலி கேட்கும். அதைக் குறிப்பதற்காகவே சக்கரத்தின் நடுவில் ''ஓம்'' அமைந்துள்ளது. ஓங்காரம் உருக்கொண்டபின் அது இயக்கமும் கொள்ளும். இயக்கம் கொள்ளும்போது அ.உ.ம் என்று மூன்றாகப் பிரியும். பிரிவது செயலுக்குச் சிறப்பாகும். கைகளில் விரல்கள் பிரிந்திருப்பதனால்தான் வேலை செய்ய முடிகிறது. ஒரு மனிதன் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு நடந்து செல்கிறான் என்றால், அவனுடைய கால்களாகிய உறுப்புக்கள் பிரிந்து வேலை செய்கின்றன என்று பொருள். அவ்வாறே ஓங்காரம் இயக்கம் கொள்ளும்போது அது மூன்று பிரிவாகப் பிரிகின்றது. இந்த நிலையை விளக்குவதற்காக அதோமுக திரிகோணத்தின் இடப்பக்கத்தில் 'அ' கரமும், வலப் பக்கத்தில் 'உ'கரமும் 'ஓ'காரத்தின் உள்ளே 'ம்' ஆகிய மகர மெய்யும் வந்துள்ளன. மகர மெய் மூன்றாவது கோணமாகிய கீழ்ப் பகுதியில் வரவேண்டுவது இச்சக்கரத்தில் 'ஓ'கார்த்தின் இடையில் வந்துள்ளது. அதற்குக் காரணம் என்னவெனின் - இறுதிக்காலத்தில் 'ம்' குறிக்கின்ற மாயை அருளில் ஒடுங்குகிறது. எனவே 'ஓ'காரத்தின் நடுவில் காட்டப்பட்டது.

எல்லாச் சக்கரங்களின் வடிவங்களும் வட்டத்தின் வேற்று உருவங்களேயாம். இக்கருத்தை நினைவூட்டவே, முக்கோணத்தைச் சுற்றிலும் ஒரு வட்டம் அமைந்துள்ளது.

இந்த வட்டத்துக்கும், முக்கோணத்துக்கும் இடையில் ''ஆO'', ''ஸO'', ''ஹO'' என்னும் மூன்று எழுத்துக்கள் உள்ளன. இவற்றுக்கான விளக்கங்கள் வருமாறு:

(1) ஆO என்பது வீரியம் பெற்ற வித்தெழுத்து (பீஜ எழுத்து) ஆகும். வித்தெழுத்து நெடிலாகும்போது வீரியம் பெறுகின்றது. தனி எழுத்தாகிய 'அ' கரத்தோடு, 'ம்' சேரும்போது அது வித்தெழுத்து எனப்படும். 'அம்' என்று வரவேண்டுவது மந்திரங்களில் 'அO' என்று எழுதப் பெறும். ('ம்' ஆகிய மாயைக்கு வடிவம் வட்டம். மாயை மயக்கும். வட்டமாகச் சுற்றினால் மயக்கம் வரும்).

வித்தெழுத்துப் பிற எழுத்துக்களைத் தோற்றுவிக்கும் அதிகாரத்தைப் பெறுகின்றது. வித்துத் தன்மை என்பது தாய்த்தன்மை, இயக்கும் தன்மை, சத்தித் தன்மைகளை உடையது என்று பொருள்படும். இந்த 'ஆO' ஆகிய வீரியம் பெற்ற வித்தெழுத்து, பிரணவம் வீரியத்தோடு தோன்றுவதற்குப் பயன்படுகிறது.

வீரியம் தரும் எழுத்துக்கள் இரண்டு வகையின. ஒன்று இயற்கை வீரியம், மற்றொன்று செயற்கை வீரியம். ('நமசிவய' என்னும் திருவைந்தெழுத்துக்கு இயற்கை வீரியம் தருபவை அ, இ, உ, எ, ஒ என்னும் குற்றியல் உயிரெழுத்துக்கள். ஐO, க்லீO, சௌO, றிO, ஸ்ரீO என்பவை செயற்கை வீரியம் தருபவை)

(2) ஸO இந்த எழுத்து சீவசத்தியைக் குறிக்கின்றது. சீவசத்தி என்பது, 36 தத்துவங்களின் சத்தி ஆன்மாவோடு சேரும்போது ஆன்மாவுக்கு உண்டாகும் சத்தியாகும். இச்சீவசத்தி, சிவசத்தியோடு சேரும்போது 'ஓ'ங்காரம் தோன்றும். எனவே 'ஸO' இங்குக் குறிக்கப்பட்டது.

(3) ஹO இது இறை எழுத்தாகும். அதாவது இறைவன் ஆன்மாக்கருக்கு விழிப்புணர்வைத் தருகின்ற எழுத்தாகும். (யாரையாவது அதட்டி எழுப்புவதற்கு இந்த 'ஹ'கர ஒலி பயன்படுவதை நாம் அறிவோம்). 'ஹ' கர ஒலிக்கு கோஷக்கலை என்றும் பெயர். இறைவனைக் குறிக்கின்ற இந்த 'ஹ' கர ஒலியும், ஆன்மாவைக் குறிக்கின்ற 'அO' ஒலியும் சேர்ந்து 'ஹO' ஆயிற்று.

அடுத்து, வட்டத்துக்கு வெளியே நான்கு இதழ்களில் உள்ள வ, ச(श), ஷ, ஸ என்பவை, ஓங்கார சத்தி கைவரப் பெறுவதற்கு முறையே (நாதத்தோடு ஒன்றக்கூடிய) பண்ணொலியும், பற்றற்ற உணர்வும், பிராண சத்தியும், சித்த சுத்தியும் ஆன்மாவுக்கு வரவேண்டுமென்பதனைக் குறிக்கின்றன. கந்தரநுபூதிப் பாடல்கள் ஒன்றிலிருந்த நான்கு வரை இக்கருத்துக்களை விளக்குவதை அந்தந்தப் பாடல்களில் காணலாம். மூலாதார மலரின் சக்கரத்தைத் தியானிக்கும்போது, அதன் அமைப்பையும், அவற்றில் உள்ள எழுத்துக்களையும், பாடல்களின் கருத்துக்களையும் நினைவுகூர்தல் வேண்டும்.

உ

திருச்சிற்றம்பலம்

2. சுவாதிட்டான ஆதார மலர்

பாட்டு 5-10

பாட்டு-5

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே!
அகமாடை மடந்தையர் என்றயரும்
செக மாயையுள் நின்று தயங்குவதே!

I பொழிப்புரை

'மகமாயை' எனப்படும் சுத்தமாயையை நீக்கவல்லவனாகிய இறைவன் ஆறுமுகங்களின் பொருளை உணர்த்தி இருந்தும் (விடவேண்டியவற்றை இன்னமும் நான்) விடாமல் இருக்கின்றேனே!

மண், பொன், பெண் என்று கூறப்படும், ஆழ்த்துகின்ற அசுத்த மாயையில் இருந்துகொண்டு (முன்னேறாமல், நான்) தயங்கலாமோ? (கூடாது).

II விளக்கவுரை

(1) மகமாயை களைந்திட வல்ல பிரான்

மாயை என்பது நீள்வட்ட (oval) வடிவமுடைய ஒரு பொருள் என்று முன்பு பார்த்தோம். அதனுள் மூன்று பிரிவுகள் உள்ளன. அவை ஒன்றன் கீழ் ஒன்றாக உள்ளன. மேல் பகுதி சுத்தமாயை என்றும், இடைப்பகுதி கலப்பு மாயை என்றும் கீழ்ப்பகுதி அசுத்த மாயை என்றும் கூறப்படும். இங்கு ''மகமாயை'' என்றது மேல் பகுதியாகிய சுத்தமாயையாகும். மாயையில் இறை சத்தி முதன்முத லில் பதியும் இடம் இந்த மேல்பகுதியானதனால், இது மற்ற இரண்டு

மாயைகளைவிடத் தூய்மையானதும் நுட்பமானதும் ஆகும். இந்த மாயையில் ஐந்து பிரிவுகள் உள்ளன. கலப்பு மாயையில் ஏழும், அசுத்த மாயையில் இருபத்து நான்கும் ஆக மொத்தம் முப்பத்தாறு[1] பிரிவுகள் உள்ளன. இந்த முப்பத்தாறு தத்துவங்களில் ஆன்மா வைத்துள்ள பற்றினைக் களையப் பெற்றால்தான் அது இறைவனை அடைய முடியும். முதலில் அசுத்த தத்துவப் பிடிப்பிலிருந்தும், பிறகு கலப்பு மாயையிலிருந்தும், இறுதியில் சுத்த மாயை ஆகிய ''மகமாயை''யிலிருந்தும், ஆன்மாக்களை இறைவன் விடுவித்து, மேலேற்றுகின்றான். இதற்காகவே அவன் ஐந்தொழிலைப் புரிகின்றான். அவன் எல்லாம் வல்லவன் ஆனதனால், இதனை எல்லா உயிர்களுக்கும் எந்த நேரமும் செய்து வருகின்றான். அவ்வளவு வல்லமையோடு இறைவன் இதனைச் செய்துவந்தாலும் ''நான் இன்னமும் கீழ்தளத்திலேயே இருக்கின்றேனே!'' என்று வருந்துகின்றார் அருணகிரியார்.

''பிரான்'' என்னும் சொல்லுக்குத் ''தலைவன்'' என்று பொருள். இறைவன் எல்லாத் தலைவர்களுக்கும் மேலான தலைவன் ஆவான். அப்படி மிக உயர்ந்தவனாய் இருந்தும், ஆன்மாக்களை என்றும் பிரியாமல் இருந்து வருகிறான். பிரியாதவன் ஆனதால் ''பிரான்'' எனப்பட்டான்.

(2) முகம் ஆறும் மொழிந்தும், ஒழிந்திலனே!

முருகனுக்கு முகங்கள் ஆறு. சுவாதிட்டான ஆதாரத்தில் மின்னல் போலத் தோன்றுகின்ற விந்து சத்திக்கும் ஆறுமுகங்கள் உள்ளன. அந்த ஆறு முகங்களை அருணகிரிநாதர் ''ஏறுமயிலேறி'' என்னும் திருப்புகழில் விவரித்துள்ளார். அவை வருமாறு:

1. ''ஏறுமயிலேறி விளையாடு முகம்'' என்றது விந்துவைக் குறிக்கும்.

(1) சுத்தமாயை:- நாதம், விந்து, சாதாக்கியம், மயேச்சுரம், சுத்த வித்தை 5

கலப்பு மாயை:- மாயை, கலை, காலம், நியதி, அராகம், வித்தை, புருஷன் 7

அசுத்த மாயை:- சித்தம், அகங்காரம், புத்தி, மனம் - 4
ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் - 5
செவி, மெய், கண், நாக்கு, மூக்கு - 5
கை, கால், வாய், கருவாய், எருவாய் - 5
வான், காற்று, தீ, நீர், மண் - 5 24

ஆக 36

2. ''ஈசருடன் ஞானமொழி பேசு முகம்'' என்றது நாதத்தைக் குறிக்கும்.

3. ''கூறும் அடியார்கள் வினை தீர்த்த முகம்'' என்றது மலத்தைக் குறிக்கும்.

4. ''குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம்'' என்றது சத்தியைக் குறிக்கும்.

5. ''மாறுபடுசூரரை வதைத்த முகம்'' என்றது இறைவனைக் குறிக்கும்.

6. ''வள்ளியை மணம்புணர வந்த முகம்'' என்றது ''ஓம்'' எனும் பிரணவத்தைக் குறிக்கும்.

மேற்கூறிய ஆறு பொருள்களின் விளக்கத்தை எனக்கு அருளவேண்டும் என்று அருணகிரியார் அந்தப்பாட்டில் கேட்டுக்கொண்டார்.

சுவாதிட்டான ஆதாரம் மேற்கூறிய சத்திகளோடு ஆன்மாவைச் சேர்க்கும் இடம் ஆகும். எனவே இந்த ஆதாரத்துக்குக் ''கந்தஸ்தானம்'' என்றே ஒரு பெயர் உண்டு. ''கந்து'' என்னும் சொல்லுக்குச் சேர்த்தல் என்னும் பொருள் உண்டு. இந்த இடம் ஆன்மா யோகத்தால் மேற்கூறிய ஆற்றல்களோடு சேரும் இடம் ஆகும். இந்த ஆதாரத்தில் தோன்றுகின்ற விந்துசத்தி, மூலாதாரத்துக்கு இறங்கி, யோகப் பயிற்சியால் மேல்நோக்கிச் சென்று தலைக்கும் அதற்கும்மேல் நிலைகளுக்கும் செல்கின்றது.

இந்த ஆதாரத்தில் ஆன்மா அநுபவங்களைப் பெறும்போது ஒருவர் சொல்லுதலும் ஒருவர் கேட்டலும் ஆகிய நிலை கிடையாது. ஏனென்றால், அந்த நுட்பமான ஆதாரம் பருக்கருவிகளாகிய காது, வாய் ஆகியவற்றைக் கடந்ததாகும். (ஆதாரங்கள் காரண உடம்பில் இருப்பவை என்பது பாட்டு 2ல் விளக்கப்பட்டுள்ளது.) எனவே இங்கு ''மொழிந்தும்'' என்னும் சொல்லுக்கு ''வாயால் சொல்லியும்'' என்று கொள்ளாமல் ''புலப்படுத்தியும்'' (உள் நின்று உணர்த்தியும்) என்று பொருள் கொள்ளவேண்டும்.

ஆக இறைவன், விந்துவின் அறுவகை நிலைகளை உணர்த்தியும், நான் அவற்றைப் பயன்படுத்தும் நிலைக்கு உயராமல், கீழ்நிலையிலேயே இருந்துகொண்டு உலகப்பற்றை விடாமல் இருக்கின்றேனே என்று வருந்திக் கூறுகின்றார்.

(3) அகமாடை மடந்தையர்

''அகம்'' என்பது வீடு. வீடு நிலத்தின்மேல் கட்டப்படுவதனால், நிலத்தையும், மண்ணையும் அது குறிக்கும்.

''அகமாடை'' என்பதனை ''அகம்+ஆடை'' என்றோ, அல்லது ''அகம்+மாடை'' என்றோ பிரிக்கலாம். ''ஆடை'' என்று கொள்வோமானால், நாம் உடுத்துகின்ற துணியைக் குறிக்கும். ஆடை என்றபோது, நாம் உடுத்துகின்ற துணிகளோடு, அணிந்துகொள்ளும் அணிகலன்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவை பொன்னால் செய்யப்படுவதனால் ஆடை என்பது பொன்னையும் குறிக்கும்.

இனி, ''மாடை'' என்று கொள்வோமானால் அதுவும் பொன்னையே குறிக்கும். எவ்வாறு என்பதைக் காண்போம்: ''மாடு'' என்னும் சொல்லுக்குப் ''பக்கம்'' என்று பொருள். அதனால் நம் பக்கத்தில் இருந்துகொண்டு நமக்குப் பயன்படுகின்ற விலங்குக்கு ''மாடு'' என்றே பெயர் வந்தது. நம் பக்கம் என்னும்போது நம் சூழலில் உள்ள பொருள்களைக் குறிக்கும். அப்பொருள்களுள் சிறந்தது பொன் ஆனதால் இச்சொல் பொன்னைக் குறிப்பதாயிற்று. இங்கு ''மாடு'' என்னும் சொல்லோடு ''ஐ'' சாரியையும் சேர்த்து ''மாடை'' என்றார். ''ஐ'' என்னும் எழுத்துக்கே கூடச் ''செல்வம்'' ''அழகு'' என்ற பொருள் உண்டு. ஆக ''ஆடை'' என்று கொண்டாலும், ''மாடை'' என்று கொண்டாலும் இங்குக் குறிக்கப்பட்டது ''பொன்''னே ஆகும். (கி.பி. 10ஆம் நூற்றாண்டில் பொன் நாணயத்துக்கு 'மாடை' என்றே பெயர் இருந்தது)

அடுத்து, ''மடந்தையர்'' என்பது பெண்களைக் குறிக்கின்றது. மடந்தைப் பருவம், மங்கைப் பருவத்துக்கு அடுத்ததாகும். இலக்கியப்படி, மங்கைப் பருவத்தில் காதல் தோன்றி மடந்தைப் பருவத்தில் திருமணம் ஆகும். இப்பருவம் அறம் செய்வதற்கு அதாவது, குடித்தனம் செய்வதற்கு ஏற்ற இளமையும், வீறும் உள்ள பருவம் ஆகும்.

(4) என்ற

மண், பொன், பெண் என்று சொல்லப்படுகின்ற

(5) அயரும்

= அயர்ச்சி தருகின்ற. ''அயர்ச்சி'' என்பது நிலை தளர்வதாகும். அதாவது அறிவு நிலை, மற்றும் உணர்வு நிலைகளில் தளர்ச்சி வருவதாகும். இந்த அயர்ச்சி எப்படி வருகிறது என்பது பற்றிச் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுவாக, மேற்கூறிய மண், பொன், பெண் என்பவையே இந்த அயர்ச்சியைத் தருவதாகக் கருத்து உலவுகிறது. ஆனால் உண்மையில் அந்த அயர்ச்சி அப்பண்டங்களில் இல்லை. எவ்வாறெனின், இம்மூன்று பண்டங்கள் கோயில்களிலும் இருப்பதை நாம் காண்கின்றோம். ஆனால் அங்கு அயர்ச்சியும் வருவதில்லை; மயக்கமும் வருவதில்லை. மாறாக, பத்தி உணர்வே வருவதைக் காண்கின்றோம். எனவே இம்மூன்று பொருள்கள் அயர்ச்சிக்குக் காரணம் அல்ல என்பதும், அதற்குக் காரணம் வேறு உள்ளது என்பதும் புலப்படுகின்றது. அக்காரணம் பின்னே விளக்கப் படுகிறது.

(6) சகமாயையுள்

சகமாயை என்பது மேலே குறிக்கப்பட்ட அசுத்த மாயை அல்லது பிரகிருதி மாயை ஆகும். இது மாயையின் மூன்று பிரிவுகளில் கீழ்தளத்தில் உள்ளதாகும். இது ''சித்தம்'' முதல் ''மண்'' வரையிலான 24 தத்துவங்களைக் கொண்டது. இதற்கு ''ஆன்ம தத்துவம்'' என்றும் ''மான்'' என்றும் பெயர்கள் உள்ளன.

இத்தத்துவங்களாலான பண்டங்கள் பலவகைத் துய்ப்புகளைத் தருவதனால் ஆன்மாக்கள் அவற்றுள் ஈடுபட்டு, அவற்றிலேயே மயங்கி இருந்துவிடுகின்றன. அவற்றைத் துய்ப்பது ஓரளவோடு நின்றுவிடுமானால் அது நன்மையாகவே முடியும். அவற்றில் உள்ள ஈர்ப்புத் தன்மைக்குக் காரணமாய் இருப்பது எது என்பதை ஆராய்ந்து அதனை ஆன்மா நாடுமானால் அதில் தவறு இல்லை. அதனால் ஆன்ம அறிவு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து முழுமையை நோக்கி ஆன்மா விரைந்து செல்லும்.

மாறாக, நுண்ணுணர்வுகளை நாடாமல் பண்டங்களைத் துய்ப்பதி லேயே தங்கிவிடுமானால் அறிவு வளர்ச்சி தடைபட்டு, தீமைகள் விளையும். நுகர் பொருள்களில் உள்ள பற்றுதான் ஆன்மாக்களை அழுந்தச் செய்கிறது. அந்தப் பற்றும், அழுந்துதலுமே அவற்றுக்கு அயர்ச்சியைத் தருகின்றன. அதனால் இங்குச் சகமாயைப் பொருள்க

ளாகிய, மண், பொன், பெண் என்பவற்றால் அயர்ச்சி வருவதாகக் குறிக்கப்பட்டது.

(7) நின்று

= (நீண்டகாலம் அழுந்தி) தங்கி இருந்து

(8) தயங்குவதே?!

= தயங்கலாமோ?! ஆன்மாக்கள் மேற்கூறிய சகமாயைப் பொருள்களில் வைத்துள்ள பற்றுக் காரணமாக அவற்றுள் அழுந்தி அயர்ச்சி அடையும்போது வேறொரு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. அதாவது எந்தச் சத்தி அழுக்காகிய சகமாயையில் ஊடுருவிப் பண்டங்களுக்குக் கவர்ச்சி தந்து, ஆன்மாக்களை ஈர்த்து, நுகரச் செய்து, அதனால் அவற்றின் அறிவை வளர்க்கின்றதோ, அதே சத்தி, மேல் நிலைகளில் உள்ள தூய தத்துவங்களுக்குச் செல்லும்படி ஆன்மாக்களை உந்தவும் செய்கின்றது. (இச்சத்திக்குத் திரோதானம் என்று பெயர்; இது ''உ'' என்னும் எழுத்தால் குறிக்கப்பெறும்).

இந்த நிலையில் ஆன்மாவுக்கு இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத் துக்கொள்ள வேண்டிய கட்டாயம் வருகின்றது. அதாவது, 1. அழுக் குப் பண்டங்களின் நுகர்ச்சியில் அழுந்தி அதனால் வரும் இன்பதுன்பங்களைத் துய்த்துக் கொண்டே இருப்பது. 2. அழுக்குப் பண்ட நுகர்ச்சியை நிறுத்திக் கொண்டு, அவற்றில் உள்ள கலை, அழகு போன்ற தூய தத்துவங்களை நாடி அவற்றின் பயனாய் இறைசத்தியைக் காண்பது. இந்த இரண்டு மாறுபட்ட போக்குக்களில் எந்தப் போக்கில் செல்ல வேண்டும் என்பதனை அறியாமல் நான் தயங்கிக்கொண்டே இருக்கலாமோ என்று அருணகிரியார் வினவு கிறார்.

''தயங்குவதே'' என்பதில் இறுதியில் வருகின்ற 'ஏ' காரம் எதிர்மறைப் பொருளில் வருகிற வினா ஆகும். இது ''அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே?!'' என்னும் சுந்தரர் தேவாரத்தில் வருவதைப் போன்றதாகும். ஆக ''தயங்குவதே?'' என்பதற்குத் ''தயங்கக் கூடாது'' என்பது கருத்தாகும். அதாவது, சகமாயைப் பொருள்களில் உள்ள பற்றிலிருந்தும் அயர்ச்சியிலிருந் தும் நீங்கி, 'உ' கர எழுத்தால் குறிக்கப்பெறுகின்ற திரோதான சத்தியின் உந்துதலில் சேர்ந்துகொண்டு மேல் நிலைகளுக்குச் சென்றுவிட வேண்டும் என்பது கருத்தாகும்.

ஆக இப்பாடலில், ஆன்மாக்கள் சகமாயையிலேயே தங்கிவிடா தபடி, திரோதான சத்தி மேல் நிலைகளுக்கு உந்துவது சிறப்பு அம்சம் ஆகும்.

III சக்கரம்

இந்தப் பாடலில் அருணகிரிநாதர், இறைவனுடைய அருட்செய லைக் குறிப்பிட்டு, அச்செயலைக் கவனியாமல், தயங்கிக்கொண்டு இருக்கலாமோ என்று வருந்திக் கூறுகின்றார்.


அந்த அருட்செயலாவது - அழுக்காகிய மாயைப் பொருள் களின் துய்ப்புகளில் இருந்துகொண்டு, முன்னேற்றத்தைக் கவனியா மல் இருக்கும் ஆன்மாக்களை மேல் நிலைக்கு அழைப்பதாகும். இந்த அழைப்பைக் குறிக்கின்ற எழுத்து 'ப'கர வர்க்கத்தின் மூன்றாவது எழுத்தாகிய ''பஃ'' கரம் ஆகும்.

மாலை நேரத்தில் வீடு திரும்ப வேண்டிய பசுக்கள், தன்னுடன் வரவேண்டும் என்று பசுமேய்ப்பவர் 'பஃ' கர ஒலியைப் பலமுறை சொல்லி அழைப்பதை நாம் கேட்டிருக்கின்றோம். பாசத்தால் கட்டுண்டு மயங்கி நிற்கும் ஆன்மாக்களை வீடுபேற்றுக்கு வரவேண் டும் என்று இறைவன் அழைக்கின்றான்.

எனவே இப்பாடலுக்கான சிறப்பெழுத்து 'பஃ' கரம் ஆகின்றது.

முதல் நான்கு பாடல்கள் (1-4) மூலாதார சக்கரத்தைச் சேர்ந்தவை என்று முன்பு பார்த்தோம். இந்த ஐந்தாவது பாடலில் இருந்து பத்தாவது (5-10) பாடல்வரை அதாவது ஆறு பாடல்கள் சுவாதிட்டான ஆதார மலரைச் சேர்ந்தவை. இச்சுவாதிட்டான சக்கரங்களின் வடிவம் சதுரம் ஆகும். அதற்குரிய மந்திர எழுத்துத் திருவைந்தெழுத்தின் முதல் எழுத்தாகிய 'ந' கரம் ஆகும்.

எனவே இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:



எல்லாச் சக்கர வடிவங்களும் வட்டத்தின் மறு உருவங்களே என்பதனைக் காட்டுவதற்குச் சக்கரத்தின் மேல் ஒரு வட்டம் வந்துள்ளது.

வட்டத்தின் மேல்புறத்தில், இப்பாடலுக்குரிய சிறப்பெழுத் தாகிய 'பஃ' கரம் வந்துள்ளது.

ஓங்காரத்தின் பிரிவுகளாகிய அ, உ, ம் மற்ற மூன்று பக்கங்களிலும் வந்துள்ளன. அவற்றுள் 'ம' கர எழுத்துத் தலைகீழாக அதாவது 'ஏ' என்று வந்தமை குறிப்பிடத்தக்கது. அது அவ்வாறு மாறி வந்தமைக்கான காரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஊழிக்காலத்தில் எல்லா அண்டங்களும் அழிகின்றன. அழிவ தென்பது - பருப்பொருளாய் இருப்பவை நுட்ப நிலையை அடைவதாகும். நுட்ப நிலையை அடைந்தவை மாயையில் (மலத் தில்) ஒடுங்குகின்றன. மாயை சத்தியில் ஒடுங்குகிறது. சத்தி, முழு முதல் இறைவனில் ஒடுங்குகிறது. அப்பொழுது அவன் ஒருவனே தனித்து நிற்பான்.

மாயையை (மலத்தை)க் குறிக்கும் எழுத்து 'ம' கரம் ஆகும். சத்தியைக் குறிக்கும் எழுத்து 'உ' கரம் ஆகும். முழுமுதல் இறைவனைக் குறிக்கும் எழுத்து 'அ' கரம் ஆகும். அதனால், மேற்கூறிய சைவ சித்தாந்தக் கொள்கையின்படி 'ம' கரமும் 'உ' கரமும் அகரத்தில் ஒடுங்க வேண்டும். ஆம், வியக்கத்தக்க வகையில் அவை இரண்டும் அவ்வாறே ஒடுங்கியுள்ளன. தமிழர்களுக்கு மொழியைப் போலவே சமயமும், சமயத்தைப் போலவே மொழியும் இயல்பாகவே அமைந்துள்ளன! இந்த அரிய அமைப்பை 'அ' கர எழுத்தில் காணலாம். அது கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

புள்ளிகளைக் கவனியாமல் கோடிட்ட எழுத்துக்களை மட்டும் கவனித்தால், இந்த அமைப்புப் புலனாகும்:

1. முழு முதல் இறைவன் - 

2. 'அ'கரத்தில் 'உ'கரம் - 

3. 'அ'கரத்தில் 'ம'கரம் - 

'ம' கர எழுத்துக் குறிக்கின்ற மாயை (மலம்) ஆன்மாக்களை அழுத்துவதாகவும், பளுவாகவும், கீழ்நோக்கு உடையதாகவும் இருப்பதனால், அது தலைகீழாக அமைந்துள்ளது. எனவே இச்சக்கரத் திலும் 'ம' கரம் கீழ்நோக்கிய கரமாக வந்துள்ளது. 'ஓங்'காரத்தின் பிரிவுகளாகிய அ, உ, ம வரும் இடங்களில் எல்லாம் 'ம' கரம் கீழ்நோக்கி வருவதைக் காணலாம்.

இந்த 5வது பாடலுக்கான சக்கரம் சுவாதிட்டானத்தின் முதல் சக்கரமாகும். இந்த ஆதார மலருக்குரிய ஆறு இதழ்களைக் கொண்ட முழுச் சக்கரம் தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-6

திணியான மனோ சிலை மீது உனதாள்
அணிஆர் அரவிந்தம் அரும்புமதோ?!
"பணியா?" என வள்ளி பதம் பணியும்
தணியா அதி மோக தயாபரனே!

I பொழிப்புரை

திண்மையான மனம் என்னும் சிலையின் மேல் உன்னுடைய திருவடிகளாகிய அணிகலன் போன்ற தாமரை மலர் தோன்றுமோ?! ''என்ன தொண்டுகளை நான் உனக்குச் செய்ய வேண்டும்? சொல்க'' என்று கேட்கின்ற வள்ளிப் பிராட்டியார் உன் திருவடியைப் பணிகின்ற, தணியாத மிக்க மோகமாய் இருக்கின்ற தயவை உடைய மேலோனே!

II விளக்கவுரை

(1) திணியான மனோ சிலைமீது

அருணகிரிநாதர் தம் மனத்தின் மீது முருகனுடைய திருவடி அரும்ப வேண்டும் என்று விரும்புகிறார்.

உடம்பின் பல பகுதிகளுள் முதன்மையானது தலை. தலையில் சிறந்த பகுதி மூளை. மூளையின் நுண்ணுருவம் மனம். மூளை பல நுண்ணிய பிரிவுகளை உடையது. மனம் எளிதில் அளவிட முடியாத பல ஆற்றல்களை உடையது. அது கண்ணாடி போன்ற, ஆனால் மிக நுட்பமான ஒளியுடைய ஒரு பண்டத்தால் ஆனது.

மனிதனுக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புறக்கருவிகள் இருப்பதுபோல, அகத்திலும் நான்கு கருவிகள் உள்ளன. அவை: சித்தம், அகங்காரம், புத்தி, மனம் என்பவையாம். அவை உடலுக்கு உள்ளே இருப்பதனால் ''அகக்கருவிகள்'', ''உட்கருவிகள்'' (அந்தஃகரணங்கள்) என்று பெயர் பெற்றன. மனம் புறக்கருவிகளுக்கும், மற்ற மூன்று அகக்கருவிகளுக்கும் இடையில் இருந்து கொண்டு உள்ளும் புறமும் சென்று வேலை செய்யும்.

ஓய்வில்லாத இந்த வேலையினால், ஐம்புல உணர்வுகளை ஆன்மா நுகரும்படிக் கொண்டுவந்து சேர்க்கின்றது.

இது மிக நுட்பமான கருவியாதலால் கண்ணுக்குத் தெரியாமலும் கைக்கு எட்டாமலும், கத்திக்கு வெட்டுப்படமுடியாத நிலையிலும் உள்ளது. என்றாலும் இதன் இருப்பை யாரும் மறுப்பதில்லை. இது செயல்படும்போது இதன் இருப்பை அநுபவத்தில் அனைவரும் உணர்கின்றனர். இது உணர்வால் அறியத்தக்கதாக உள்ளது.

மனத்துக்கு ஓர் இருப்பிடம் என்று ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், அது புருவ நடு என்று சொல்லலாம். அது மூளையின் அடிப்பாகம் ஆகும். ஆனால் மனம் அந்த இடத்தில் மட்டும்தான் இருக்கும் என்பதில்லை. இது உடல் முழுவதும் பரவக்கூடியது. உச்சிமுதல் உள்ளங்கால் வரை பாய்ந்து வேலை செய்வது. அதுவுமன்றி, உடலைக் கடந்து புறத்தில் வெகு தூரம் சடுதியில் சென்றுவரும் (வியாபிக்கும்) இயல்பும் உடையது. இதன் ஆற்றல் மிகப்பெரியது.

மனம் ஐம்புலன்களை ஏவல் கொள்ளும்போது ஆற்றல் மிக்கதாகவும், அவற்றுக்கு அடிமைப்படும்போது ஆற்றல் இழந்தும் இருக்கும். இதனைத் தூய்மையாகவும், ஆற்றல் மிக்கதாகவும் வைத்துக் கொள்ள வேண்டுவது நம் கடமையாகும். ஆனால் இதனை அவ்வாறு வைத்திருப்பவர் வெகு சிலரேயாவர்.

''மனம்'' என்னும் இக்கருவி இருப்பதனால்தான் நமக்கு ''மனிதர்'' ''மானிடர்'', ''மானவர்'' என்றெல்லாம் பெயர்கள் அமைந்தன. மனத்தைப் பயன் கொள்ளாத மனித வாழ்வு வீணேயாகும்.

இத்தகைய சிறப்புகளையும் வியத்தகு இயல்புகளையும் உடைய மனத்துக்கு நெகிழ்ச்சியும், குழையும் தன்மையும் இருக்க வேண்டும். ஆன்மாவுக்கு அன்பு, இரக்கம், பத்தி முதலிய உணர்வுகள் வரும்போது மனம் உருகும் நிலையை அடைய வேண்டும். இதற்கு இருக்க வேண்டிய முதன்மையான பண்பு இந்த உருகும் நிலையே ஆகும்.

ஆனால் இப்பாடலில் அருணகிரிநாதர் இதனைத் திண்மையான கற்சிலைக்கு ஒப்பிடுகின்றார். ''திணியான மனோ சிலை'' என்கிறார். உருக வேண்டிய மனம் உருகாததனால், அவர் இதனை அவ்வாறு வெறுத்துக் கூறினார்.

திண்மை என்பது கட்டியான நிலை. முன்பெல்லாம் வீட்டின் முன்பகுதியில் அமருவதற்கென்று நீண்ட இருக்கைகள் கட்டப்பட்டு வந்தன. அவை திண்மையாய் இருந்ததனால் அவற்றுக்குத் ''திண் ணை'' என்று பெயரிட்டனர். கண்ணப்பர் பிறந்தபோது, ('திண்' என்று) வலிவாய், உரமாய் இருந்ததனால் ''திண்ணன்'' என்று பெயரிட்டனர். ஆக, எதற்கும் அசையாமல், வலிவாய் இருப்பதற்குத் திண்மை என்று பெயர். எனவே மனமும், பத்தியால் உருகாமல் இருக்குமானால் அது திண்மையாகிவிட்டது என்று பழிக்கப்படுவது முறைதானே?

திண்ணிய நிலை கற்பாறைக்கு உண்டு. அது எதற்கும் அசையாது. அதனை வெட்டி எடுத்துப் பதப்படுத்தி, வேண்டிய உருவம் அமையும்படி செதுக்கி ''சிலை''யை உருவாக்குவர்.

கருணை பொழியும் கண்களை உடைய அழகிய ஒரு சிலை செதுக்கப்பட்டதென்று வைத்துக்கொள்வோம். அச்சிலையின் முன்பு ஒரு துயர நிகழ்ச்சி நடப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அப்பொ ழுதும் அச்சிலை அசையாமல், மெய்ப்பாடு காட்டாமல் இருக்கும். அச்சிலையைப்போன்று இறைவனை எண்ணும்போதும், அவன் திருவுருவைக் காணும்போதும், அவன் திருப்பெயரைச் சொல்லும் போதும், குழைவு பெறாத, உருகாத, கண்ணீர் சொரியாத மனம் இருக்குமானால், அது திண்ணிய கல்லால் செதுக்கப்பட்ட ''சிலை'' யேயாகும். அத்தகைய வன்னெஞ்சத்தில் இறையருள் பூக்குமா? என்று அருணகிரியார் ஒரு வினாவை எழுப்புகிறார். மேற்கூறிய நிலையில் பூக்காது என்பது உண்மைதான். என்றாலும், அது பூக்க வேண்டும் என்பதும், அதற்கேற்ப மனம் குழைவு பெற வேண்டு மென்பதும் அவருயை விருப்பமும் வேண்டுகோளு மாகும்.

(2) உனதாள் அணி ஆர் அரவிந்தம்

இறைவனுடைய திருவடிகள் மலர் போன்ற மென்மையுடை யவை. அவை இரண்டானமையால் ''உன'' என்று பன்மையில் கூறப்பட்டன. ''உனது'' என்பது ஒருமை. ''உன'' என்பது பன்மை. (தம்மை மறந்த அநுபூதி நிலையில் தோன்றுகின்ற இப்பாடல்களிலும், இலக்கணவிதி மாறாமல் வருகின்ற அழகைக் கவனிக்கவும்).

''தாள்'' என்பது திருவடி. ''அணி'' என்பது நகை அல்லது அணிகலன்கள். தலை நம் உடம்பில் சிறந்த பகுதியானதால், அதற்கு அணிகலன்களை நிறையச் சூட்டுவர். உடம்பில் ஆற்றலான, வளமான, நுட்பமான பொருள்களைத் தன்னகத்தே கொண்ட தலையைச் சிறப்பித்து, அதன் வழி சென்றால், அது நம்மை மேலும் நுட்பமாகிய இறைவனிடம் சேர்ப்பிக்கும். (இது, நமக்கு அடுத்துள்ள பெரியோரைப் பின்பற்றி அவர் வழிச்சார்ந்தால், அவர் நம்மை மேல் நிலைக்கு உயர்த்துவதைப் போன்றதாகும். நாம் உயர்வதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறையும் இதுவேயாகும்).

''ஆர்'' என்பது, ''போன்ற'' என்று பொருள்படும். ''அணி ஆர் அரவிந்தம்'' என்றதனால் அணிகலன்களைப் போன்ற அரவிந் தம் என்றாகிறது. இங்குத் திருவடிகள் ''அரவிந்தம்'' எனப்பட்டன. அரவிந்தம் என்பது தாமரையாகும். தாமரை தெய்வத்தன்மையைக் குறிக்கின்ற ஒரு பூவாகும். ஆண்டவன் திருவடி ஆன்மாவின் தலைக்கு அணியும் பூவாகவும் மணிமுடியாகவும் உள்ளது.

(3) அரும்புமதோ?

பாறைமேல் இட்ட விதை முளைக்காது. விதை முளைக்க வேண்டுமானால், நீர் கலந்த நெகிழ்ச்சியான மண் இருக்க வேண்டும். அதுவும் நீர்ப்பூவாகிய தாமரை முளைக்க வேண்டுமானால், நீர் நிரம்பிய சேறு இருக்க வேண்டும்.

கற்பாறையில் செதுக்கப்பட்ட சிலையின் மீது தாமரை மலர் தோன்றுமோ என்றதனால், சிலையின் திண்ணிய நிலை நீங்கி உருகும் தன்மையை அடைந்து, இறைவன் திருவடி மலர் தோன்றும் அளவுக்குப் பத்தியால் பதப்பட வேண்டும் என்பது கருத்தாயிற்று.

''அரும்புமதோ'' என்பது தோன்றுமோ என்னும் வியப்பையும், வினாவையும் குறித்தது. அரும்புவது மலர்வதற்கு முதல் நிலை யாகும். அரும்பு சிறிது பருத்த நிலையில் ''மொக்கு'' அல்லது ''மொட்டு'' எனப்படும். மலரத்தொடங்கி, ஆனால் முழுவதும் மலராத நிலையில் ''போது'' எனப்படும். அதற்கு அடுத்த நிலைதான் ''மலர்'' எனப்படுவது. நன்கு மலர்ந்த நிலையில் அது மணம் வீசும். இந்த மணம் வீசுவது நின்றுபோய், மிகுதியாக மலர்ந்து இதழ்கள் விரிந்துவிட்டால் அது''அலர்'' எனப்படும். ஆக, பூவின் நிலைகளை முறைப்படுத்திச் சொன்னால் அரும்பு, மொக்கு (மொட்டு), போது, மலர், அலர் என்று அமையும்.

இங்கு அருணகிரிநாதர், இறைவன் திருவடியாகிய மலர் தோன்றுகின்ற முதல் நிலையேனும் (அதாவது அரும்பாயினும்) வருமோ என்றார். இறைவன் திருவடிகள் மனத்தில் அரும்பினால், அதற்கு மேல் உள்ள நிலைகளில் மலர்ச்சி பெறும்.

(4) ''பணி யா?'' என வள்ளி பதம் பணியும்

''பணி'' என்பது தொண்டு அல்லது இணங்குதல் ஆகும். ''யா'' என்பது யாவை என்னும் வினாச்சொல். ''யாது'' என்பது ஒருமை. ''யா'' என்பது பன்மை. ''யா'' என்பதனால் ஒன்றுக்கு மேற்பட்ட பல பணிகளை நாம் செய்ய வேண்டுமென்பது புலப்படுத்தப்பட்டது. இங்கு வள்ளிப்பிராட்டியார் முருகனிடம், தாம் செய்ய வேண்டிய தொண்டுகள் எவை என்பதனை ஆவலோடு கேட்டுச் செய்கிறார் என்பது குறிக்கப்பட்டது.

இங்கு ''வள்ளி'' என்பது யார் என்பதனைச் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும்.

அறிவு ஆராய்ச்சிகளில் சிறந்த அநுபவம் வாய்ந்த சான்றோர்க்கே விளங்கக்கூடிய பல அரிய நுட்பமான சமயக்கருத்துக்களை உருவகப்படுத்திக் கதை புனைந்து, அதனால் ஏனையோர்க்குப் பத்தி உண்டாகவும், அது வளர்ந்து மேலோங்கவும் செய்வது, பண்டைக் காலத்து மரபாக இருந்திருக்கிறது. அந்த வகையில் ''வள்ளி'' என்னும் சொல்லால் உடம்பின் வளத்தை உருவகப்படுத்திக் கூறினர் என்று தெரிகிறது.

உடம்பின் வளம் என்பது குண்டலி சத்தியாகும். இச்சத்தி, நரம்புகளின் வழியே தேக்கப்பட்ட விந்துவின் செறிவால் உண்டாவதாகும். விந்து என்பது குருதியின் (இரத்தத்தின்) சாறு அல்லது பிழிவு ஆகும்.

''குண்டலி'' என்னும் சொல்லுக்கு ''வளைவாகிய'' என்று பொருள். அது வட்டமிட்டுச் சுழன்று சுழன்று மேலே செல்வதனால் அதற்கு அப்பெயர் உண்டாயிற்று. சாம்பிராணி வத்தியிலிருந்து புகை செல்வதுபோல அது சுழன்று சுழன்று செல்லும் இயல்புடையது. அது ஒரு கொழுகொம்பைச் சுற்றிச்செல்லும் கொடி போன்றது. இங்குக் குண்டலியாகிய வள்ளிக்கொடி முதுகந் தண்டாகிய (நடு நாடியாகிய) முருகனைச் சுற்றிச் சுற்றிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

வள்ளி தினைப்புனத்தில் பறவைகளை ஓட்டினாள் என்பது உடலின் சத்தாகிய விந்துவை புலன்கள் (ஆகிய பறவைகள்) பறித்துச் செல்வதைத் தடுத்தாள் என்பதனைக் குறிக்கும்.

தினைப்புனம் என்பது மனித உடம்பில் உள்ள நரம்புக் கூட்டத்தைக் குறிக்கின்றது. அவற்றின் எண்ணிக்கை 72,000 என்பர். தினைச் செடிகளின் உச்சியில் விளைகின்ற கதிர்கள் என்பவை நரம்புகளில் விளைகின்ற உணர்ச்சிகளாம். ஆக மனித உணர்ச்சிகள், புலன்களால் பறிக்கப்படக்கூடாது என்பதும், அவை தெய்வ சிந்தனையால் சேமிக்கப்பட வேண்டும் என்பதும் கோட்பாடாகும். தினைப்புனத்தில் நல்ல அறுவடை கிடைக்க வேண்டுமானால் பறவைகளை ஓட்டுவது அவசியம்தானே? அவ்வாறே விந்துவின் தேக்கமும் செறிவும் கிடைக்க வேண்டுமானால் இந்திரியப்பறவைகளை ஓட்ட வேண்டுவதும் கட்டாயம் ஆகின்றது. எனவே இந்திரியப்பறவைகள் உணர்வுக் கதிர்களைப் பறிக்காமல் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். பாதுகாக்கப்பட்டுச் சேமிக்கப்பட்ட பிறகுதான் குண்டலி நடுநாடி வழியே மேலேறும். இதற்கான முயற்சி இறைவனோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்னும் அடிப்படை நோக்கத்தோடு அமைதல் வேண்டும். இந்த நோக்கம் இல்லாமல் முயற்சி மேற்கொள்ளப்படுமானால் அது ''அடயோகத்தில்'' முடிந்து பயனற்றதாகிவிடும்.

''வள்ளி'' என்னும் சொல் வேறொரு கருத்தையும் குறிக்கின்றது. அது பிரகிருதி மாயை என்னும் ஆன்ம தத்துவங்களைக் குறிக்கின்றது. ஆன்ம தத்துவங்கள் 24 என்பதனை முன்னமே பார்த்தோம். அவற்றின் தொகுப்புக்கு ''மான்'' என்றும் ஒரு பெயர் உள்ளது. அதனாலேயே புராணங்களில் வள்ளிப்பிராட்டியார் மான் வயிற்றில் பிறந்தார் என்று கூறப்பட்டது. ஆன்ம தத்துவங்கள் இருபத்தி நான்கிலும் நன்கு பயின்றால்தான் விந்து வலுப்படும். அதாவது மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவற்றைத்தாம் பயன்படுத்துவதோடு அவற்றைப் பயன்படுத்துவதில் தேர்ச்சி பெற்றவர்களோடேயே பழக வேண்டும். (திருமணம் செய்து கொள்வது கூட இத்தத்துவங்களில் நற்பழக்கம் உள்ளவர்களை மட்டுமே தெரிந்தெடுத்து மணம் செய்துகொள்ள வேண்டும்). ஆக ''வள்ளி'' என்னும் சொல் உடல் சத்தியின் பிழிவு என்பதனையும், ஆன்ம தத்துவங்களின் கொழுந்து என்பதனையும் குறிப்பதாகும்.

அடுத்துப் ''பதம் பணியும்'' என்பது வள்ளிப் பிராட்டியார் பணிகின்ற திருவடிகளையுடைய முருகன் என்பதைக் குறிக்கும்.

''பதம்'' என்பது பக்குவம் ஆகும். பக்குவம் என்பது தியானத்தால் வருகின்ற வெப்பம் ஆகும். அந்த வெப்பம் குண்டலி சத்தியை எழுப்புவதற்கு உதவி செய்யும். அதாவது குண்டலி சத்தியின் உறக்க நிலையைப்போக்கி அசையும்படிச் செய்ய உதவும். அசைந்தபின் அது மேல்நோக்கிச் செல்வதற்கான வழியைத் தேடும். தியான வெப்பம் மிகுதியாக ஆக, அது செல்வதற்கான குழல்வாய் தோன்றும். அதனை இதுகாறும் மறைத்திருந்த அடைப்பு நீங்கும். வள்ளலார் ''திரை நீக்கம்'' என்று குறிப்பிட்டது இந்த அடைப்பு நீக்கத்தையேயாகும்.

தியானத்தோடு பட்டினியும் சேர்ந்து மேற்குறித்த வெப்பத்தை மிகுதிப்படுத்தும். அதாவது நோன்பு, தவம் ஆகியவை இதற்கு உறுதுணையாக உள்ளன.

மற்றும் பெரிய எண்ணங்களோடு சேர்தல் என்னும் பக்குவ நிலை இதற்கு மிக இன்றியமையாததாகும். அதனால் உடம்பு மேற்குறித்த வெப்பத்தைப் பெற்று உருகும் தன்மையை எளிதில் பெறும். ''பெரிய எண்ணங்களோடு சேர்தல்'' என்னும் நிலையைப் பெறுவதற்கு ஐந்தெழுத்தை ஓதுவதைவிட வேறு சிறந்த வழி ஏதும் இல்லை. ஐந்தெழுத்தை ஓதுவதால் குண்டலி சத்தி மேலேறுவதில் வருகின்ற தடைகள் நீங்குகின்றன. அதற்கு அது ஒன்றே வழி என்பதனைத் திருஞானசம்பந்தரே,

''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி, நன்புலத்து
ஏனை வழிதிறந்து, ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே!—''

என்று தம் ஐந்தெழுத்துப் பதிகத்தில் விளக்கியுள்ளார்.

மேற்கூறிய பல உத்திகளால் நடுநாடி வழியே மேலேற்றப்பட்ட குண்டலி சத்தி உடம்பெங்கும் நரம்புகளில் சுற்றிச்சுற்றிப் பரவுகிறது. 'பரவுவது' என்பது விளங்குவதாகும். பரவுவதனால் குண்டலி சத்தி ''பாம்பு'' எனப்பட்டது. அப்பரவுதலும் ஒரு நெறிப்பட்டு ஒழுங்காகப் பரவும். சட்டதிட்டத்துக்குக் கட்டுப்பட்டுப் பரவுவதால், அதே இயல்புடைய நல்ல பாம்பின் பெயர் இக்குண்டலி சத்திக்கும் அமைந்தது.

மற்றும், குண்டலி சத்தி நம் உடம்பின் அழுக்கு அல்லது நஞ்சுள்ள மூலாதாரப் பகுதியிலிருந்து தோன்றுவதனாலும் அதற்குப் ''பாம்பு'' என்று பெயர் வந்தது. அதுவுமன்றி நம் உடம்பு நஞ்சு போன்ற வினைகளின் காரணமாக உருவானதனாலும் அந்த உடம்பிலிருந்து அச்சத்தி தோன்றுவதாலும் ''பாம்பெ''ன்னும் பெயர் பெற்றது. (நம் உடம்பு நஞ்சு உடையது என்பதனை மாணிக்கவாசகர் ''விடக்குடம்பு'' என்று கூறியதனாலும் அறியலாம்). ஆக, அச்சத்திக் குக் ''குண்டலிப்பாம்பு'' என்னும் பெயர் பொருத்த மானதே ஆயிற்று.

இனி, வள்ளிப்பிராட்டியாருடைய பதங்களை முருகன் பணிந் தான் என்பது புராணம். இதன் கருத்து என்னவெனின் குண்டலி யோடு இறைவன் திருவடிகளைப் பணியும் ஆன்மாவை, இறைவன் இறங்கிவந்து மேல்நிலைக்கு அழைத்துச் செல்வான் என்பதாகும். மேல்நிலை என்பது புருவநடு அல்லது தலைப்பகுதியாகும்.

குண்டலி தோன்றும் இடம் மூலாதாரம் என்று பார்த்தோம். அது அடிப்பாகத்தில் உள்ளது. அது விதை முளைக்கும் இடத்துக்கு ஒப்பானது. அது தாமரையின் கிழங்கு (வேர்)ப்பகுதியைப் போன் றது. அதன் தண்டு மேலோங்கி வளர்ந்து செல்கின்ற நடுநாடியை (முதுகந்தண்டை) ஒக்கும் பத்தியின் அளவுக்கு ஏற்ப அத்தாமரைத் தண்டு வளரும். பத்தி உச்ச நிலையை எட்டும்போது உடம்பின் உச்சியாகிய தலைவரை தாமரை நீண்டு அங்கு 'அரும்பி' பிறகு பூத்து விளங்கும். இந்த நிலை வரும்போது வள்ளியை முருகன் அழைத்துக்கொண்டான் என்று பொருளாகும்.

மேற்கூறிய நிலை வள்ளிக்கும் முருகனுக்கும் மட்டும் தெரிந்த காதல் நிலையாகும். காதல் நிலையை நாலுபேர் அறிந்தபின் அது கற்பு நிலையாகின்றது.

காதல் நிலையில் முருகன் வள்ளியைப் பணிவான். கற்பு நிலையில் வள்ளி முருகனைப் பணிவாள். ''வள்ளி பதம் பணியும்'' என்னும் சொற்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பணிகின்ற இரண்டு கருத்துக்களையும் தருவனவாக அமைந்துள்ளன. இக்காதல் கற்பு நெறிகள் தமிழ் நூல்கள் காட்டும் நெறிகளாம். மேற்கூறிய சொற்றொடருக்கு வள்ளி, முருகன் பாதங்களைப் பணிவதாகக் கொள்வதே சிறப்புடையது.

இனி, உடல் வளமாகிய குண்டலி சத்தி வள்ளியாக உருவகப் படுத்தப்பட்டது என்றால், தெய்வயானை எதனைக் குறிக்கும் என்னும் கேள்வி எழும். அது (உள்ளத்தின்) உணர்வு வளத்தைக் குறிப்பதாகும். வள்ளி அன்பின் சிறப்பு; தெய்வயானை அறத்தின் சிறப்பு. வள்ளி ஆடும் (அசையும்) சத்தி; தெய்வயானை அமைந்த சத்தி.

(5) தணியா அதி மோக தயாபரனே

முருகனை விளித்து அவன் திருவடி தம் மனத்தில் அரும்ப வேண்டும் என்று சொல்லும்போது அவனுடைய குணத்தையும் விரித்துக் கூறுகிறார் அருணகிரிநாதர். அவன் தயவைக் காட்டுவதில் அளவு கடந்த விருப்பம் உடையவன் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

இறைவன் தயவுடையவன் என்று சொல்வது மட்டும் அருணகிரி யாருக்கு நிறைவு தருவதாக இல்லை. அதனை மேலும் மேலும் உயர்த்தி, பல சொற்களால் அதன் உச்ச நிலையைக் காட்ட முயல்கிறார். அதனால் ''தணியா'', ''அதி'', ''மோக'' என்னும் மூன்று அடைமொழிச் சொற்களைச் சேர்த்து ''தயாபரன்'' என்றார்.

''தயவு'' என்னும் குணம், இறைவனுடைய குணங்களை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துப் பிழிந்தால் என்ன வருமோ அதுவேயாகும். அதாவது தயவு இருந்தால் மற்ற குணங்கள் எல்லாம் இருந்தபடியாகும்.

தயவு என்பது என்ன? அது பிறரிடம் காட்டப்படும் அருள் அல்லது கருணை அல்லது இரக்கம் ஆகும். அதனைக் குணங்களுள் கொழுந்தான குணம் என்னலாம். அது தேவையுள்ள இடத்தில் உண்டாகின்ற உள்ள நெகிழ்ச்சியாகும். அதாவது பசி உள்ளவருக்குத் தேவையான உணவளிப்பது தயவாகும். பசியில்லாதவர், நமக்கு-வேண்டியவர் என்பதற்காக உணவளிக்கப்படுமானால் அது தயவாகாது. நமக்கு-வேண்டாதவரானாலும், பசித்திருந்தால் உணவளிப்பது தான் தயவு. செல்வந்தர்களுக்கு விருந்தளிப்பது தயவாகாது.

ஆன்மாக்கள் எல்லாம் வினைவழிப்பட்டு அல்லற்படுவதைத் தடுத்து அவற்றுக்கு முத்தி தருவதுதான் இறைவனுடைய குணங்களுள் எல்லாம் மிகச் சிறந்த குணமாகும். இதுதான் அவனுடைய

கருணை அல்லது தயவின் உச்ச நிலையாகும். இதனாலேயே வள்ளலார் அவனைத் ''தனிப்பெருங்கருணை'' என்றார். இக்கரு ணைக் குணத்தை உடையவன் மேலோன் ஆனதனால் ''தயாபரன்'' எனப்பட்டான். 'பரன்' என்பது மேலோன் ஆகும்.

இந்த ஒப்பற்ற குணத்தை அவன் எந்த அளவுக்கு உடையவ னாய் இருக்கின்றான் என்பதை நாம் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பல சொற்களைச் சொல்லிப் பெருமுயற்சி செய்துள்ளார் அருணகிரியார். அவர் எண்ணத்திற்கேற்ப அச்சொற் கள் காட்டுகின்ற விரிந்த நிலையை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அவன் இந்தத் தயவைக் காட்டுவதில் ''மோகம்'' கொண்டவன் என்கிறார். மோகம் என்பது மேலும் மேலும் ஆசை கொள்வதாகும். அதாவது ஒரு பொருளின் மேல் ஆசை உண்டாகி, பின்னும் தணியாமல் திரும்பத் திரும்ப உண்டாகுமானால் அது 'மோகம்' எனப்படும். அதனை வேணவா என்றும் சொல்லலாம். அவா என்பது தீயதில் செல்வதாகும். அது அறியாமையால் உண்டாவதாகும். அதனை அறியாமையின் தழும்பு என்றும் கூறலாம். அவா ஒருபோதும் முடிவு பெறுவதில்லை. அதனை ''ஆராயியற்கை அவா'' என்று திருவள்ளுவரும் விளக்கியுள்ளார்.

அவாவுக்கு மாறானது விருப்பம் ஆகும். அது நல்லதில் செல்லும் ஆசை எனலாம். இதற்கு வேட்கை என்றும் பெயர் உண்டு. வேட்கை என்னும் சொல்லுக்கு ''வேள்'' பகுதியாகும். ''வேள்'' நல்லதையும், பெருமையுடையதையும் குறிக்கும். உபகாரம் செய்பவர்களுக்கு ''வேள்'' என்றே பெயர் உண்டு.

விருப்பம் முதலில் நல்லதில் போய், பிறகு தீயதில் முடிவதும் உண்டு. ஒரு பொருளைப் பார்த்து நன்றாக இருக்கிறது என்று இன்பப்படுவோம். பிறகு அது நமக்கு இருந்தால் நலமாக இருக்குமே என்று அவாக் கொள்வோம். ஒரு குழந்தையின் அழகைப்பார்த்து மகிழ்வோம். பிறகு அத்தகைய குழந்தை நமக்கு இல்லையே என்று ஏங்குவோம். விருப்பம் அறிவின் தன்மையாகும். அது அறிவள வாகத் தன்னலம் இல்லாமல் நின்றுவிடுமானால் தவறில்லை. மாறாகத் தன்னலம் கலந்து அவாவாக மாறி மேலும் மேலும் வளருமானால், அது ''மோகம்'' ஆகிவிடும். அந்த ''மோக''த்தை முருகன் உடையவனாக இருக்கின்றான் என்று அருணகிரியார் இங்குக் கூறுகின்றார்.

முருகனுடைய மோகமெல்லாம் வள்ளியை அழைத்து வருவதில் உள்ளது. அந்த மோகமும் ''அதிமோக''மாக உள்ளது. அந்த அதிமோகமும் ''தணியாத'' அதிமோகமாக உள்ளது. அதாவது குண்டலி சத்தி இறைவனை நோக்கிப் பயணம் தொடங்கிய உடனே, இறைவன் அதிவேகமாக வந்து அழைத்துச் செல்கிறான் என்பது கருத்தாகும். அந்த வேகத்தின் அளவு மிகவும் அதிகம் என்பதனை நமக்குப் புரிய வைக்கிறார்.

இந்தத் தணியா அதிவேகத்துக்கு ஒரு எடுத்துக்காட்டைக் கூற வேண்டுமானால், அது காந்தியடிகளின் பொருளீட்டல் எனலாம். அவர் அரிசன நல நிதிக்காக நாடு முழுவதும் சுற்றி அல்லும் பகலும் பொருள் திரட்டினார். அவர் திரட்டியதைப் பார்த்தால், அவர் ஒரு பேராசைக்காரர் போல இருந்தது. ஆனால், உண்மையில் அவருக்குத் திரட்டப்பட்ட பொருள்மேல் சிறிதும் பற்றில்லை.

இந்தத் தணியா அதிமோகத்துக்கு இன்னொரு எடுத்துக்காட்டையும் கூறலாம். அது மாணிக்கவாசகர் எல்லா நாட்டுக்கும் பொதுவான இறைவன் தென்னாட்டுக்காரன் என்று கூறியதாகும். அவர் சைவத்தில் பிறந்து, வளர்ந்து, சிவனுக்குக் கோயில் கட்டினாராயினும் அவர் அடைந்த நிலை மதம் கடந்த அதீத நிலையாகும். இறைவன் எல்லா நாடுகளுக்கும், உலகங்களுக்கும், அண்டங்களுக்கும் பேரண்டங்களுக்கும் பொது என்பதனை அவர் அறியாதவர் அல்லர். என்றாலும் அவன் ''தென்னாடுடைய சிவன்'' அதாவது தன்னுடைய நாட்டுக்கு உரியவன் என்று சொல்லிக் கொள்வதில் அவருக்கு அவ்வளவு ''மோகம்'' இருந்தது.

தென்னாட்டில் சிவனாக இருந்து கொண்டு மற்ற இடங்களை ஆள்கின்றான் என்று அவர் கூறுவது மேற்கூறிய ''தணியா அதிமோகத்''தைக் காட்டுகிறது. அவ்வாறு ஓர் இடத்தில் இருந்து கொண்டு மற்ற இடங்களுக்கு அருள்பாலிப்பது, விளக்கு ஒரு சிறு திரியிலிருந்து கொண்டு அறை முழுவதுக்கும் ஒளிவீசுவதைப் போன்றதாகும். (திருவள்ளுவர், மெய்கண்டார் போன்ற தெய்வச் சான்றோர்கள் தம் இல்லங்களிலிருந்துகொண்டு தங்கள் ஞான ஒளியை உலகெங்கும் பரப்பியதைப் போன்றதாகும்).

மேற்கூறிய உவமைகளில் காட்டியவாறு பற்று சிறிதும் இல்லாத இறைவன், பத்தர்களை ஈடேற்றுவதில் ''பேராசைக்காரன்'' போல செயல்படுகிறான் என்பது இங்கு விளக்கப்பட்டது. அவனைப் ''பேராசை வாரியன்'' என்றே மாணிக்கவாசகரும் கூறியுள்ளார்.


ஆக, மிகுந்த தயவுடைய பரம்பொருளே! உன் திருவடிகளை என் மனத்தில் அரும்பச் செய்வாயாக என்று அருணகிரியார் இப்பாடலில் வேண்டுகிறார்.

III சக்கரம்

சென்ற பாடலில் (பாட்டு-5) இறைவன் ஆன்மாக்களை மேல்நிலைக்கு அழைப்பது பற்றிப் பார்த்தோம். இந்தப்பாடலில், அவன் அவ்வாறு உதவி செய்வதற்குத் தணியாத அதி மோகம் உள்ளவனாய் இருக்கின்றான் என்பது விளக்கப்படுகிறது. இப்பேர் ஆர்வத்தைக் குறிக்கின்ற எழுத்துப் 'ப'கர வர்க்கத்தின் நான்காவது எழுத்தாகிய 'பஃ.' கரம் ஆகும்.

முன் பாடலில் குறித்தபடி பசு மேய்ப்பவர் பசுக்கள் விரைவில் திரும்பி வராதபோது, அவை வர வேண்டுமே என்னும் ஆர்வத்தால் முன்பு ஒலித்த 'ப'ஃகரத்தை விட, வன்மையாக, அதட்டும்படி, 'ப'ஃ. கரத்தை உரத்து ஒலிப்பார்.

எனவே இப்பாடலின் சிறப்பெழுத்து பஃ. கரம் ஆகின்றது. இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-7

கெடுவாய் மனனே! கதிகேள்: கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்;
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே;
விடுவாய், விடுவாய், வினை யாவையுமே.

I பொழிப்புரை

கெடுகின்ற நிலையிலுள்ள மனமே! சேரவேண்டிய இடத்துக்குச் செல்லும் வழியை அதாவது (நீ) நடந்து கொள்ள வேண்டிய நல்ல நடையைச் சொல்லுகின்றேன், கேட்பாயாக:

1. வஞ்சனை இல்லாமல் அதாவது ஒளிக்காமல் பிறருக்கு உதவி செய்வாயாக.
2. கூர்மையான வேலையுடைய முருகனின் திருவடியை நினைப்பாயாக.
3. பெருந்துன்பத்தைத் தருவதற்குக் காரணமாய் இருக்கின்ற சஞ்சித வினை தூளாகும்படிச் சுட்டெரிப்பாயாக, மற்றும்,
4. வினையை வளர்க்கின்ற செயல் எதுவாயினும் அதனை விடுவாயாக, விடுவாயாக!

II விளக்கவுரை

(1) கெடுவாய் மனனே, கதிகேள்

இந்தப்பாட்டில், அருணகிரியார் எளிமையான அறிவுரைகளைத் தந்துள்ளார். எளிதாகச் சொல்லப்பட்டாலும் இதன் பயன் பெரிது. இதன்படி நடந்தால், வினைகள் தீரும். அதனால் பிறப்பு ஒழியும். பிறப்பை அறுப்பதுதான் நம் குறிக்கோளாகும்.

இந்த அறிவுரை மனதுக்குச் சொல்லப்பட்டது. இதைக் கேட்காமல் போனால் ''கெட்டுப் போவாய்'' என்று அருணகிரியார் எச்சரிக்கின்றார்.

மனம் பொதுவாகக் கெடுதியை விரைவில் பற்றிக்கொள்ளும். அது கெடுவதோடு ஆன்மாவையும் கெடுத்து விடும். எனவே ''கெடுகின்ற நிலையிலுள்ள மனமே!'' என்று அருணகிரியார் விளித்து ''நீ நல்ல கதியை அடைவதற்கான நல்வழியைச் சொல்லுகிறேன், கேட்பாயாக'' என்றார்.

நாம் சென்று சேரவேண்டிய துறைக்குப் போகும் வழிதான் நமக்கு நல்ல வழியாகும். அதுவே இங்குக் ''கதி'' எனப்பட்டது.

''மனம்'' என்னும் சொல் இங்கு ''மனன்'' என்று வந்துள்ளது.

அருணகிரியார் கூறும் நல்ல நடத்தை வருமாறு:-

(2) கரவாது இடுவாய்

''கரவு'' என்பது மறைத்து வைப்பது அல்லது ஒளித்து வைப்பதாகும்.

''இடு'' என்பது பொருள் கொடுத்து உதவுவதாகும். வேறு உதவிகளும் இதில் அடங்கும். எதைச் செய்வதானாலும் வஞ்சனை இல்றிச் செய்யப்பட வேண்டும். நம்மிடம் பொருள் இல்லாதபோது கொடுக்காமல் இருந்துவிடலாமோ என்றால், அதுவும் சரியன்று. நம் உழைப்பால் பொருள் திரட்டிப் பிறகு கொடுக்க வேண்டும். ஆனால் கடன் வாங்கிக் கொடுக்கக் கூடாது.

ஆருயிர்கள் நலம் பெற, அதாவது அறியாமையை ஒழிக்க, நோயைத் தடுக்க மற்றும் இறைவழிபாடு தடைபடாமல் நடக்க, கொடுக்க வேண்டுவது கட்டாயம் ஆகிறது. இக்கொடை நாம் அன்றாடம் செய்யும் வழிபாட்டைவிட முதன்மையானது. அதாவது வழிபாடு செய்யத் தவறினாலும் இறைவன் மன்னிப்பான்; இக்கடமையை மறந்தால் மன்னிக்க மாட்டான்.

கொடை ஏன் அவ்வளவு வலியுறுத்தப்படுகிறது என்றால், கொடுப்பதனால்தான் மனம் மாட்சிமை பெற முடியும். அதுவும் கரவாது கொடுப்பதனால்தான் அந்த மாட்சிமை வரும். ஒரு கோடீஸ்வரர் ஒரு நல்ல செயலுக்குப் பத்து ரூபாய் கொடுத்தால் அது கரவுடையதாகும். நம் வருவாயில் ஒரு பங்கைக் கொடுப்பதற் கென்றே ஒதுக்கி வைக்க வேண்டும் என்று ஆன்றோர் வகுத்துள்ளனர்.

மற்றும், முன்பு இன்னார் நமக்கு உதவி செய்திருப்பதனால், அவருக்கு இதனைச் செய்கிறேன் என்று கருதாமலும், இதனை இப்பொழுது செய்தால் பிறகு இன்னது வரும் என்று கருதாமலும், உற்ற நேரத்தில் உதவி செய்வதுதான் இங்குக் கொடை எனப்பட்டது.

இக்கொடுக்கும் செயல் துன்புறுகின்றவருடைய துன்பத்தைப் போக்குவதற்காகவே இருக்க வேண்டும். அதாவது **''ஜீவகாருணி'' யத்தின்** (உயிர் இரக்கத்தின்) அடிப்படையில் செய்யப்பட வேண்டும்.

(3) வடிவேல் இறைதாள் நினைவாய்

(கொல்லனால்) வடிக்கப்பட்ட கூர்மை பொருந்திய வேல் ''வடிவேல்'' எனப்பட்டது. இது ஞானத்தைக் குறிப்பதாகும். ''வடிவேல் இறை'' என்பது வேலாயுதத்தை ஏந்திய முருகனைக் குறிக்கும்.

இறைவனை நினைந்துகொண்டுதான் மேலே குறிக்கப்பட்ட கொடை நடைபெற வேண்டும். இறைவனை நினையாமல், விளம் பரத்துக்காகக் கொடுக்கப்படுமானால் அது வீண் செயலாகும். அதனால் மனம் மாட்சிமை பெறாது. கொடுப்பதை மற்றவர்கள் அறியக்கூடாது. இறைவனை நினைப்பதைத் தவிர வேறு எந்த நினைப்போடு கொடுக்கப்பட்டாலும், அது, தன்னையே நினைந்து கொடுத்ததாகிவிடும்.

இறைவன் திருவடியை நினைந்துகொண்டு அவனுக்குக் கொடுத் ததாக எண்ணும்போதும், அந்தக் கொடைக்குப் பதிலாக இன்ன பலன் வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொடுத்தலும் கூடாது. இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்து, அருணகிரியார் தெரிவித்தபடி கொடுத்தால்தான் மனம் மாட்சிமை பெறும். அதனால் தியானம் (ஒருமை) கைகூடும். இல்லையானால் தியானம் செய்வதற்கான தகுதி வராது. தியானம் அமையவில்லையானால், இறைவனோடு ஒன்ற இயலாது; வினை நீங்காது; பிறவி தொடரும். எனவே கொடுப்பதும், இறைவனை நினைப்பதும் ஒருசேர நடைபெற வேண்டும்.

(4) சுடுவாய் நெடுவேதனை தூள்படவே

''நெடுவேதனை'' என்பது உயிர்களுக்கு நீண்ட காலமாகத் துன்பத்தைத் தருகின்ற வினையின் தொகுப்பாகும். இதற்கு ''இருப்பு வினை'', ''முன்வினை'', ''சஞ்சிதம்'', ''பழவினை'', ''தொகுப்பு வினை'' என்னும் பெயர்கள் உள்ளன. இது, தொடர்ந்து பல பிறவிகளிலும் வளர்ந்து கொண்டே வந்து துன்பம் தருவதனால், இதனை ''நெடு வேதனை'' என்றார். இது வினையின் மூன்று பிரிவுகளுள் முதலாவதாகும். இது ஞானாசிரியர் தீக்கை செய்யும் போது அவருடைய பார்வையால் சுடப்படுவதாகும்.

எந்தப் பொருளும், தீயினால் சுடப்படும்போது, அது சாம்பலாக மாறிவிடும். அதுபோல இந்த இருப்புவினையும், சுடப்படும்போது திருநீறாகி விடுகிறது. எனவே, நாம் திருநீறு இடும்போது நமக்கு உரிய இருப்புவினை நீறாகிக் கழிந்துவிட்டதாக எண்ணி (பாவித்து) இடவேண்டும். அவ்வாறு பலகாலும் எண்ணி இடுவதனால், அந்த எண்ணமே, அப்பழவினை ஞானத்தீயால் சுடப்படுவதற்கான வழி யைக் கோலும்.

இனி, வினைகளுள் மற்ற இரண்டு பிரிவுகளைப் பற்றியும் சிறிது பார்ப்போம்: இரண்டாவது பிரிவுக்குப் **''ப்ராரப்தம்''** என்று பெயர். இதனை ''ஏன்ற வினை'' என்றும் கூறுவர். இது, இந்தப் பிறவியில் நாம் துய்ப்பதற்காக எடுத்துவந்த வினையாகும். இது, பழவினையாகிய மூட்டையிலிருந்து எடுத்துவந்த ஒரு சிறு பகுதியா கும். இப்பிறவியில் நாம் துய்த்து வருகின்ற நன்மை தீமைகள் இதன் காரணமாக அமைவனவேயாம்.

இந்த எடுத்துவந்த வினையைத் துய்க்கும்போது புதிய வினைகள் சில உருவாகின்றன. இவை வினையின் மூன்றாவது பிரிவாகும். இப்பிரிவுக்கு ''ஏறுவினை'' என்று பெயர். இதனை ''ஆகாமியம்'' என்றும் கூறுவர். இது ''நான் இச்செயலைச் செய்கின்றேன்'' என்று தன்னுணர்வோடு எண்ணுவதன் எதிரொலி யாக உண்டாவதாகும்.

(1) ஏன்ற வினையை நம்மால் மாற்ற முடியாது. (2) ஞானாசிரி யரிடம் தீக்கை பெற்று, அவருடைய திருப்பார்வை படுமானால், பழவினை மாய்ந்து போகும். இல்லையேல் அதனையும் நம்மால் மாற்ற முடியாது. (3) மூன்றாவதாகிய ஏறுவினையை, நாம் முயற்சி

செய்தால், தடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அதற்கான நுட்பம் என்னவெனின் இது 'இறைபணி' செய்தலாகும். இறைபணி செய்து அதனைத் தடுத்துவிட்டால், பழவினை மூட்டை பெரிதாகா மல் நின்றுவிடும். எடுத்து வந்த 'ஏன்ற வினை'யைத் துய்ப்பதும் எளிதாகிவிடும். இது ஒன்றே நாம் செய்யக்கூடியதும் பிறவியை அறுப்பதற்கான ஒரே வழியும் ஆகும்.

அந்த நுட்பத்தைப்பற்றி விரிவாகக் காண்போம். தீக்கை நெறிநின்று நாம் செய்கின்ற செயல் எதுவாயினும், அதனை ''இறைபணி''யாக மாற்றிவிட வேண்டும். அவ்வாறு மாற்றி விட்டால் அச்செயல்களால் வரக்கூடிய நல்வினை, தீவினைகள் நமக்கு வரமாட்டா. அவற்றின் விளைவுகளை இறைவனே ஏற்றுக்கொள்கின் றான்.

இனி, அந்த ''இறைபணி'' என்பது என்ன என்பதனைப் பார்ப்போம். அது இறைநினைப்போடு இறைவனுக்காகச் செய்யப் படும் செயலாகும். மற்றும் தன்னை-மறந்த-நிலையில் அச்செயலை (என் வாயிலாக)ச் செய்பவனும் இறைவனே (நானல்ல) என்னும் உணர்வோடு செய்யப்படுவது ஆகும்.

இச்செயல் முறை - நுட்பத்தின் அடிப்படையிலேயே ''வடிவேல் இறைதாளை நினைந்துகொண்டு இடுக'' என்று அருணகிரிநாதர் கூறியருளினார்.

(5) விடுவாய், விடுவாய், வினை யாவையுமே

மேற்கூறிய ''இறைபணி'' செய்தால் ஏறுவினை (ஆகாமியம்) ஏறாது. ஏன்றவினை (ப்ராரப்தம்) தாக்குதலின் கடுமையின்றி, சுமுகமாகத் துய்க்கப்படும். மற்றும் பழவினை (சஞ்சிதம்) சுடப்படும். அதனால் ஆன்மாவுக்குப் பிறவி நீங்கும்; முத்தி கிட்டும்.

முன்வரியில் ''சுடுவாய்'' என்றது பழவினையை எரிப்பதாகும். இந்த வரியில் ''விடுவாய்'' ''விடுவாய்'' என்று இரண்டு முறை வந்தது என்னவெனின்:

(1) ''நான் துய்க்கிறேன்'' என்னும் உணர்வை விட்டு ஏன்ற வினையின் தாக்குதலிலிருந்து விடுபட வேண்டுமென்பதும்.


(2) ''நான் செய்கிறேன்'' என்னும் தன்னுணர்வை விட்டு ஏறுவினையைத் தடுக்க வேண்டும் என்பதும் ஆகும். ஏன்ற

வினைக்காக ஒரு முறையும், ஏறுவினைக்காக ஒருமுறையும், ஆக இருமுறை ''விடுவாய்'' ''விடுவாய்'' என்று கூறினார்.

ஆக, அருணகிரியார், இப்பொழுதுள்ள தாழ்ந்த நிலையாகிய, உலக வாழ்விலிருந்து, நற்கதியை அடைவதற்கான எளிய இனிய அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

III சக்கரம்

இப்பாடல், தாழ்ந்த வாழ்விலிருந்து வினையைக் கடந்து உயர்ந்த வாழ்வைப் பெறுவதற்கான வழியைச் சொல்லுவதாக அமைந்துள்ளது. இன்றைய, தாழ்ந்த உலகியல் வாழ்வு என்பது மாயையாலான உடலைக் கொண்டு, மாயையாலான பண்டங்களோடு நடத்தப்படுவதாகும். மாயையைக் குறிக்கும் எழுத்து 'ம'கரம் என்பதனை முன்னமே பார்த்திருக்கிறோம். இந்த 'ம'கர எழுத்து மாயையின் கீழ்நிலையிலுள்ள மண்ணையும் குறிக்கும்; மேல் நிலையிலுள்ள வானத்தையும், மற்றும் முத்தியையும் குறிக்கும். எனவே இப்பாட்டின் சக்கரத்துக்குரிய சிறப்பெழுத்து 'ம'கரம் ஆகும். இச்சிறப்பெழுத்தைக் கொண்ட சக்கரம் வருமாறு:



சுவாதிட்டான ஆதாரத்துக்குரிய 'ந'கரம் நடுவிலும், ஓங்காரத்துக்குரிய அகர, உகர, மகரங்கள் மூன்று பக்கங்களிலும், இப்பாடலுக்குரிய மகரம் மேற்பக்கத்திலும் உள்ளன.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-8

அமரும்பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப்பொருள் பேசியவா!
குமரன், கிரிராசகுமாரி மகன்,
சமரம் பொரு தானவ நாசகனே!

I பொழிப்புரை

குமரனாகிய முருகக் கடவுளே! மலையரசனின் மகளாகிய உமையம்பிகையின் மகனே! போர்க்களத்தில் போர் செய்ய வந்த ''தான்'' என்னும் தன்னுணர்வு மிக்க அசுரர்களை அழித்தவனே! நான் வசிக்கும் ஊர், என் சுற்றம், நான் குடியிருக்கும் வீடு ஆகியவற்றால் எனக்கு உண்டாகின்ற மயக்க உணர்வு கெடும்படியாக உண்மைப் பொருளைப் பேசி அருளியவாறு என்னே! என்னே!!

II விளக்கவுரை

(1) குமரன், கிரிராசகுமாரி மகன்

'குமரன்' என்பது இளைய பருவத்தினன். ஆனால் குழந்தை அல்ல. அது காளையைக் குறிப்பிடும். 16 வயதுக்குக் குறையாதவன் காளையாவான். குமரன் மலையரசனுடைய மகளுக்கு மகனாவான். குமரன் எவ்வளவு பெரியவனானாலும் அம்பிகைக்குக் குழந்தையே ஆவான். ''மகன்'' என்னும் சொல்லில் மகான் என்னும் பொருள் உள்ளது. அதன்படி தந்தையைவிட மகன் சிறந்தவனாக, மகானாக இருக்க வேண்டும். இது, இந்த நாட்டின் குறிக்கோள்களில் (இலட்சியங்களில்) ஒன்று. தாயும், தன் மகன் சான்றோன் ஆனான் என்னும் செய்தியைக் கேட்டு மகிழ்வாள்.

தங்களுடைய நோக்கம் - குறிக்கோள் - கொள்கை (இலட்சியங்)களைத் தாம் வணங்கும் தெய்வத்தின்மேல் ஏற்றிச் சொல்லும் மரபு தமிழர்களுக்கு உண்டு. அதற்கேற்பவே, சிவபிரான் முருகனிடம் உபதேசம் கேட்டான் என்று கூறினர். (நாம் நஞ்சை உண்ண வேண்டி நேர்ந்தாலும் ஏற்றுக்கொண்டு மற்றவர்களைக் காக்க

வேண்டும் என்னும் கொள்கையை (இலட்சியக் கருத்தை)க் காட்டுவதற்கு இறைவன் நஞ்சை உண்டான் என்று கூறினர்).

கிரிராசகுமாரி என்பது அம்பிகை. அம்பிகை மலையரசனின் மகள். மலை வாழ்க்கை, உயர்ந்த வாழ்க்கையாகும். ஏனென்றால் மலை மேல் போகப்போக உயர்ந்த மனப்பான்மை உண்டாகும். காற்றும் தூயதாகிக் கொண்டே வரும். மற்றும் தாழ்வரையில் நாம் காண்கின்ற வேறுபாடுகள் மலை ஏற ஏற மறைந்து விடும். மலைமேல் போகப்போக ஒரு சக்தி பிறக்கிறது. அச்சக்தியே கிரிராச குமாரி' எனப்பட்டது.

குமாரி என்னும் சொல்லுக்குப் பருவம் வந்த சக்தி வாய்ந்த பெண் என்று பொருள். மலை ஒரு பெரிய வடிவம் பெற்று விளங்குகிறது. காடு மலையைப் போர்த்தது போன்று காணப்படு கிறது. இறைவனை மலை என்று சொன்னால், அப்போர்வை சத்தியாகும். அதனாலேயே இறைவனுக்கு வெண்ணிறமும், அம்பி கைக்குப் பச்சை நிறமும் கற்பிக்கப்பட்டன.

பச்சை நிறக்காட்டிலிருந்து தோன்றும் காற்று குளிர்ச்சி பொருந்தி யது; ஆற்றல் மிக்கது. அதனை அம்பிகையின் மகன் அல்லது முருகன் என்றனர். இவ்வாறு உருவகப்படுத்திய இந்நாட்டவரின் உயர் நாகரிகம் எண்ணி மகிழற்பாலது.

இமயமலை உலகத்திலேயே மிகப் பெரியது. இந்த நாட்டுக்கு இமயம் அமைந்தது ஒரு பெரும் சிறப்பு. இப்பெருமலையேயன்றி வேறுபல மலைகளும் இந்நாட்டில் அமைந்துள்ளன. எல்லா மலை உச்சிகளிலும் முருகன் இருப்பதாக எண்ணுவது தமிழர் மரபு. முருகனை மலைகிழவோன் அல்லது மலைக்கு உரியவன் என்று கூறினர். முருகன் கோயிலை மலைமேல் வைத்ததனால், மக்களுக்கு மலைகளை அதிகமாகப் பயன்படுத்தும் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. மக்களும் அவ்வாறே பயன்படுத்தினர்.

குமரன் என்னும் சொல் பருவத்தைக் காட்டும் என்று முன்பு பார்த்தோம். அப்பருவம் தவமிருப்பதற்கு ஏற்றதாகும். அப்பருவத் தில்தான் பற்றற்ற நிலையில் எந்த வேலையையும் ஆற்றலோடு செய்ய முடியும். குமரப்பருவத்தில், தவமிருப்பதோடு சூறாவளி போல வேலைகளைச் செய்ய வேண்டும். அச்சூறாவளியே, மின்னி இடி இடித்து, மழை பொழிவித்துப் பயன் செய்யும்.

(2) சமரம் பொரு தானவ நாசகனே

''சமர்'' என்பது சமம் அல்லது ஒத்த நிலையாகும். ''சமரம்'' என்பது போர்க்களம். ஒருவன் உயர்வென்றும், மற்றவன் தாழ்வென் றும் நினைக்கும்போது சண்டை உண்டாகிறது. அந்த இருவரும் சமம் ஆவதற்குப் போர் உண்டாகிறது. சம உணர்ச்சி வருவதற்காக நிகழும் செயலுக்குப் போர் அல்லது சமர் என்று பெயர்.

''பொரு'' என்பதும் ''சமரம்'' என்பதும் ஒன்றே. ''சமரம் பொரு'' என்பது ''போர்க்களத்தில் போர் செய்து கொண்டு இருக்கின்ற'' என்றாகும்.

''தானவர்'' என்பவர் அரக்கராவர். இங்குத் தானவர்களை நாசகன் என்று வராமல் தானவ நாசகனே என்று வந்ததனால், தானவர்களை அன்றி அவர்களுடைய பண்புகளை அழிப்பவன் என்று பெறப்படும். தானவர் என்னும் சொல்லுக்குத் ''தான்'' என்னும் தன்முனைப்பு மிக்குடையவர் என்று பொருள். இது அரக்கர் பண்பாகும். இப்பண்பு இருப்பதனால், அவர்கள் எடுத்ததற்கெல்லாம் சண்டை போடுவர்.

சண்டையின்றி காரியங்களை நிறைவேற்றிக் கொள்வது தேவ குணம். ஒழுங்குக்குக் கட்டுப்படாதவர்கள் அரக்கப்பண்புடையவரா வர்.

மனிதர்களாகப் பிறந்துள்ள நாம் மனித நிலைக்கு மேம்பட்ட தேவநிலையை எட்ட வேண்டும். தானவர்களாகத் தாழ்ந்துவிடக் கூடாது. உயர்ந்த போக்குக்கு வாயில் இருக்கும்போது நாம் ஏன் பிற்போக்குக்குப் போக வேண்டும்? சண்டை போடாதபடி பண்பட்டு உயர வேண்டும்.

குமரன் என்னும் சத்தி நம்மிடம் இருக்குமானால், மலைக்குப் போகும் உயர்ந்த குணம் நமக்கு இருக்குமானால், அச்சத்திகளைப் பயன்படுத்தி, அதாவது மலை, காற்று, வானம், தவம் ஆகியவற்றால் வரும் ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொண்டு அரக்கப்பண்புகளை நீக்கிக் கொள்ள வேண்டும்.

(3) அமரும்பதி, கேள், அகம் ஆம் எனும் இப்பிரமம் கெட

''அமர்தல்'' என்பது விரும்புதல். ''அமரும்பதி'' என்பது நாம் விரும்பி வாழ்கின்ற ஊர் ஆகும். 'பதி' என்னும் சொல்லுக்குப் பதிந்த இடம் என்று பொருள். அதாவது முன்னமே வாழ்ந்த சான்றோர்களின் அருள் உணர்வு பதிந்த இடம் பதியாயிற்று.

'கேள்' என்பது சுற்றம். சுற்றம் வேறு; மனைவிமக்கள் வேறு. மனைவி மக்கள் நம் குடும்பத்தினர். அவர்கள் நம்மோடு சேர்ந்தவர்கள். சுற்றத்தார் என்பவர் நம்மைச் சூழ இருப்பவர். அவர்களுள் நண்பர்களும் உறவினரும் அடங்குவர். அவர்கள் நம்மீது கொண்டுள்ள அன்பினால் அவ்வப்போதும் நம் நலத்தைக் கேட்பதனால், அவர்களுக்குக் ''கேள்'' என்னும் காரணப்பெயர் வந்தது.

''அகம்'' என்பது நாம் குடும்பத்துடன் உறையும் வீடு.

நம் ஊர், நம் சுற்றறத்தார், நாம் குடும்பத்துடன் வாழ்கின்ற வீடு, எனும் ''இப்பிரமம்'' கெட என்றதனால், இவற்றால் பிரமம் வருவதாகக் கூறுகிறார்.

''பிரமம்'' என்பது பிரமை என்பதன் திரிபாகும். பிரமை என்பது மயக்கம். மேற்கூறிய பொருள்களால் மயக்கம் எப்படி வருகிறது என்பதனைப் பார்ப்போம்.

நம் சொந்த ஊர் அல்லது வாழும் ஊர் நம்மைப் பல வகையில் வளர்த்ததாகும். நம் கிளைஞர்கள் நமக்கு ஆக்கமானவர்கள். நம் குடும்பமும் வீடும், நம் வாழ்க்கைக்கு உறுதுணை ஆனவை. அப்படி இருக்க, இவை ஏன் மயக்கம் தருவன ஆகின்றன? இவை நமக்குக் கொடுக்கப்பட்டதன் நோக்கத்தை ஆராய்ந்து அறிவோமானால் இந்தச் சிக்கல் தெளிவுபடும். இவை நமக்கு, ஆன்ம வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டன. ஆன்மவளர்ச்சி, இவற்றை அருளியலுக்குப் பயன்படுத்துவதனால் வருவதாகும். அதன் பயனாகப் பிறப்பு அறும். இந்த நோக்கத்துக்கு மாறாக, அவற்றிலேயே அழுந்தி, அவற்றைத் துய்த்துக்கொண்டு, முன்னேற்றம் இல்லாமல் இருப்பது மயக்கம் அல்லது பிரமை அல்லது பிரமம் ஆகும். இதை ஒரு உவமையில் காணும்போது நன்கு விளங்கும். ஒரு நல்ல நூல் கொடுக்கப்படுமானால், அதனைப் படித்து அறிவு வளரப் பெறுவது முறையாகும்.

மாறாக அதனைத் தலையணையாகப் பயன்படுத்தினால் தவறாகப் பயன்படுத்தியதாகும். அவ்வாறே, மேலே குறிக்கப்பட்ட வசதிகளை அறவாழ்வுக்குப் பயன்படுத்தவில்லையானால், அவற்றில் மயங்கி, இருளில் சிக்கியதாகும். இந்த இருளே இங்குப் ''பிரமம்'' எனப்பட்டது. எனவே உலகியல் வசதிகளை எல்லாம் அருளியலுக்குப் பயன்படுத்த வேண்டும். இல்வாழ்க்கையும் அறவாழ்வுக்கு ஒத்தாசை செய்வதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. அது மறக்கப்படுமானால் ''பிரமம்'' உள்ளதென்று பொருள்.

இனி, இந்த மயக்கம் கெடும்படி இறைவன் தமக்கு, உண்மைப் பொருளை உணர்த்தியதாக அருணகிரியார் கூறுகின்றார். அது பற்றிச் சிறிது பார்ப்போம்:

(4) மெய்ப்பொருள் பேசியவா!

இங்கு மெய்ப்பொருள் என்றது இறைவனைப் பற்றிய உண்மைகளோடு, மேலே குறிக்கப்பட்ட வசதிகளை அருளிலியலுக்குப் பயன்படுத்தி வாழ்க்கையின் குறிக்கோளை (அதாவது முத்தியை) அடைய வேண்டும் என்னும் செய்தியும் ஆகும். அதனைப் பேசியமுறை வியப்பாய் இருந்தது என்பதனை அருணகிரியார் வியந்து பாராட்டுகிறார். ''பேசியவாறு என்னே!'' என்பது ''பேசியவா!'' என்று குறைந்துள்ளது.

பேச்சுப் பேசுவதில் பலவகையுண்டு. உலகியல் பேச்சுக்களைக் கடகடவென்று பேசலாம். அது கவர்ச்சியாகவும் இருக்கலாம். ஆனால் அதனால் வரும் பயன் குறைவாகவே இருக்கும். மெய்ப்பொருள் பேசுவதற்குச் சில அடிப்படைகள் இருக்க வேண்டும். அவை (1) ஞானம் (2) கலை (3) பிரணவம் (4) நாதம் (5) விந்து (6) தத்துவம் (7) கோலம் (8) செய்கை (கிருத்யம்) (9) சத்தி என்பவை ஆம். இவற்றின் விளக்கத்தையும் சிறிது பார்ப்போம்.

(1) ஞானம்: இறைஞானம் இல்லையானால் மெய்ப்பொருளைப் பற்றிப் பேச இயலாது. பொருள் செறிந்த பேச்சுக்கு ஆழ்ந்த சிந்தனையும் வேண்டும். மெய்ப்பொருள் பற்றிய பேச்சு இறுதியில் ஒரே எழுத்தால் குறிக்கப்பெறும். அந்த முடிவுக்கு வருவதற்கு ஞானத்தோடு தியானமும் வேண்டும். ஞானத்துக்கு வித்தெழுத்து (பீஜாக்ஷரம்) 'ச' ஆகும். அதோடு சத்தி எழுத்தாகிய 'ம'வையும் சேர்த்து ''சம்'' என்று ஓதுவதால் ஞானத்தைப் பெறலாம்.

(2) கலை: முதன் முதலில் எல்லாம் வல்ல இறைவன் யார் வாயிலாகவோ நமக்கு உண்மைப் பொருளைச் சிறிது உணர்த்தி அருளினான். அதனால் சிறிதளவு மந்திரங்களும் தோன்றலாயின. மந்திரம் தோன்றுவதற்குக் கலை அடிப்படையாகும். கலை என்பது எழுத்து, மொழி என்பவை. அவை இன்றி மந்திரம் உருப்பெற இயலாது.

(3) பிரணவம்: மேற்கூறிய எழுத்துக்கும் மொழிக்கும் அடிப் படையானது **பிரணவம்** ஆகும். எல்லாம் எதிலிருந்து தோன்றி, இறுதியில் எதில் அடங்குமோ அதுவே **பிரணவமாகும்.** (அதாவது எல்லா மந்திரங்களும் பிரணவத்தில் தோன்றி பிரணவத்தில் முடிவுறும்).

(4) நாதம்: பிரணவத்திலிருந்து முதலில் தோன்றுவது ''நாதம'' எனப்படும். ''மண்'' என்னும் சொல் ஒலிக்கப்படும்போது அது நம் காதுகளில் வந்து சேர்கிறது. அவ்வாறு சேர்ந்த ஒலியே ''நாதம்'' ஆகும். இதற்குரிய வித்தெழுத்து ''நம்'' ஆகும்.

(5) விந்து: மேற்கூறிய ''மண்'' ஆகிய பண்டம் நம் கண்முன் காட்டப்படுமானால், அந்த உருவமே ''விந்து'' ஆகும். இதற்குரிய வித்தெழுத்து ''அம்'' ஆகும்.

(6) தத்துவம்: மண்ணாகிய பண்டத்தைச் சேர்ந்த ஒளி பொருந்திய வைரத்தைக் காட்டினால் அது ''தத்துவம்'' ஆகும். இதற்குரிய வித்தெழுத்து ''லம்'' ஆகும்.

(7) கோலம்: மண்ணினுடைய திரிபுகளாகிய பஞ்சு, துணி, முதலிய பொருள்களைக் காட்டினால் அவை ''கோலம்'' ஆம். அதாவது ஒரு பண்டத்தின் மாறுபாடுகள், (ஏற்ற இறக்கங்கள்) கோலம் எனப்படும். இதற்குரிய வித்தெழுத்து ''ஆம்'' ஆகும்.

(8) செய்கை (கிருத்தியம்): பண்டங்கள் ஆயிரக்கணக்கான கோலங்களைப் பெறுவதற்குக் காரணமான நிகழ்ச்சிகளுக்குச் செய்கை (கிருத்தியம்) என்று பெயர். அச்செயல்கள் யாவும் படைத்தல், காத்தல், அழித்தல்களில் அடங்கிவிடும்.

(9) சத்தி: ஒவ்வொரு பண்டத்துக்கும் ஒரு சத்தி உண்டு. அச்சத்தி எப்பொழுதும் தன்னியல்பு தோன்ற வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அது, தானே விளங்கித் தோன்றும். (அதை ஒருவர் எடுத்துச்சொல்லி விளம்பரப்படுத்த வேண்டுவதில்லை).

மேற்கூறிய ஒன்பது வகையான அடிப்படைகளுக்கு உரிய குறியீடுகள் உள்ளன. அவற்றை தியானித்து, ஜபித்து, மற்றவர்களுக் குத் தெரிவித்தால், அவர்களும் அவற்றின் மயமாவார்கள்.


இச்செய்திகளை அறிந்து கொள்வதற்கும் செயற்படுத்துவதற்கும் புறநாட்டம் இருந்தால் இயலாது. புலன் வழியே செல்லும் புறநாட்டத்தால் வெளி உடலைத்தான் பார்க்கமுடியும். மாறாக அகநாட்டத்தோடு, நல்ல நினைவுகளோடு நாடினால் இவை புலனாம். மற்றும் உள்ளுடம்புகளையும் காணலாம். அகநாட்டத் தோடு, நீதி, பத்தி, அருள் ஆகிய பண்புகளுடன் முயலும்போது மேலும் பல உண்மைகள் தெரியவரும். எவ்வளவு ஆழ்ந்து செல்கிறோமோ அந்த அளவுக்கு இவற்றில் பயிற்சி மிகும்.

அருணகிரியாருக்கு, இந்த உண்மைகளை இறைவனே பேசி உலகியல் வாழ்வால் வரும் மயக்கத்தையும் தெளிவுபடுத்தி இருக்கிறான். அவ்வாறு உணர்த்திய விதத்தை எண்ணி அவர் வியப்படைகின்றார்.

III சக்கரம்

இப்பாடலில், மலையின் உச்சியில் பெறக்கூடிய நல்ல காற்றைப் பயன்படுத்திக் கொண்டு, தவமிருந்து உலகியலில் உள்ள மயக்கம் நீங்கி மெய்ப்பொருளை அடைய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இது காற்றின் சிறப்பைக் கூறியுள்ளது. காற்றுக்குரிய எழுத்து 'ய'கரம் ஆகும். எனவே இப்பாடலின் சக்கரத்துக்குரிய சிறப்பெழுத்து 'ய' ஆகின்றது.

இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:



சுவாதிட்டானத்துக்குரிய 'ந'கரம் நடு இடத்திலும், ஓங்காரத்தைக் குறிக்கும் அகர, உகர, மகரங்கள் மூன்று பக்கங்களிலும், இச்சக்கரத் துக்குரிய 'ய'கரம் மேற்புறத்தும் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

௯

திருச்சிற்றம்பலம்

பாட்டு-9

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசு என்று ஒழிவேன்?!
தட்டூடு அற வேல் சைலத்து எறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே!

I பொழிப்புரை

(மலையாக வந்து வழியை அடைத்துத் தடை செய்த தாரகாசூரனைத்) தடை நீங்கும்படி மலை மீது வேலாயுதத்தைச் செலுத்திய கோபம் உடையவனும், துன்பமில்லாதவனும், அச்சமில்லாதவனும் ஆகிய முருகக் கடவுளே! மலர் பொருந்திய கூந்தலை உடைய மங்கையர் வலையில் பட்டு ஊசலாடும் என் இயல்பை என்று ஒழிப்பேனோ?!

II விளக்கவுரை

(1) தட்டூடு அற வேல் சைலத்து எறியும்

தட்டு+ஊடு தட்டூடு ஆயிற்று. தட்டு என்பது தடை: ஊடு என்பது துளை அல்லது வழியாகும். நாம் உண்பதற்குப் பயன்படுத்தும் உண்கலம் அகலமாகவும் பரவலாகவும் இருக்கும். அதற்குத் தட்டு என்று பெயர். அந்த அகலத்தன்மை வழியை அடைப்பதானால், அது தடையாகிவிடும். அத்தடையே இங்குத் தட்டு எனப்பட்டது. தட்டூடு என்பது அந்தத் தடைவரும் வழியைக் குறிக்கும்.

இங்குத் தடையாக வந்தவன் தாரகாசூரன் ஆவான். அவன் முருகனுடைய படைகளை வஞ்சனையாக மலையில் அடைத்து விட்டான். அதனால் போருக்குப் போவது தடைபட்டது. தாரகன் மயக்குவதில் வல்லவன். தாரகன் என்பது மாயா மலம் ஆகும். ஆன்மாவின் முன்னேற்றப்பாதையில் முதல் தடையாகவும், பெரிய தடையாகவும் இருப்பது மாயாமலம்தான். எனவே நாம் மாயையை வென்றால்தான் முன்னேற முடியும். மாயையை வெல்வது என்பது

மாயைப் பண்டங்களை அழிப்பதாகாது. அதனால் வரும் தடையை நீக்கிக் கொள்வதுதான் வெல்வதாகும்.

உணவு உடலுக்குத் தேவையானதுதான். பசி நீங்கிய உடனே நிறுத்திவிட்டால் நன்மை பயக்கும். மாறாகச் சுவைக்கு ஆட்பட்டு மேலும் உண்போமானால், அது உடல்நலத்துக்குத் தடையாகிவிடும். அத்தடைதான் மாயாமலத்தின் மயக்கத்தால் வந்ததாகும். மயக்கும் இயல்பு மாயைக்கு உண்டு. அது மயக்கும் முறைகளும் லீலைகளும் பலப்பல.

நமக்கு எதிரே மலை வந்தால், அதன் அழகைப்பார்க்கலாம். அதன் பயனைக் கொள்வதில் தவறு இல்லை. அதுவே தடையாக வந்தால் அதனை நீக்கிக்கொள்ள வேண்டும். பயன் கொள்ளுவதற்கும் மயங்கி வலைப்படுவதற்கும் இடையில் உள்ள எல்லைக்கோடு மிக நுட்பமானது; மெல்லியது. எனவே விழிப்பாய் இருக்க வேண்டும்.

இங்கு முருகக்கடவுள் போருக்குச் செல்லும்போது தடையாய் வந்த கிரவுஞ்ச மலையை (தாரகனை) வேலெறிந்து நீக்கிவிட்டார். சைலம் என்பது மலை; எறிதல் என்பது வீசுதல்.

(2) நிட்டூர, நிராகுல நிர்ப்பயனே!

முருகன் வேல் எறியும்போது கோபமாகவும், உக்கிரமாகவும் இருந்தான். அவ்வாறு இல்லையானால் தடையை நீக்க முடியாது. தீமையைப் போக்குவதில் உக்கிரமாய் இருக்க வேண்டுவது அவசியமாகும். பிறரிடமுள்ள குற்றத்தை நீக்க வேண்டுமானால் கடிந்து கொள்வதில் தவறு இல்லை.

சிவபிரான் கோலம் அச்சம் தரும் கோலம் என்பர். அதற்குக் காரணம் அவருக்குக் கெட்டது பிடிக்காது என்பதுதான். பாசம், நோய், அச்சம் (பயம்), பிறப்பு, காமம் ஆகியவை சிவனுக்கு ஆகாதவை. காரியம் செய்பவர்களுக்கு நிஷ்டூரம் இருக்கத்தான் வேண்டும். ஆக, மாயாமலத்தை நீக்குவதில் முருகன் கோபக்காரனாக, நீட்டூரனாகின்றான்.

ஆகுலம் என்பது கவலை, நிராகுலன் என்பது கவலை இல்லாதவன். கவலைக்குக் காரணமாய் இருப்பது கன்ம மலம்.

அதைக் குறிக்கின்ற சிங்கமுகனைக் கொன்றதனால் முருகன் நிராகுலன் ஆகின்றான். அவ்வாறே ஆணவ மலத்தைக் குறிக்கின்ற சூரபதுமனைக் கொன்றதனால் முருகன் நிர்ப்பயன் ஆகின்றான்.

தீமையானவற்றை விரும்பாமல் அவற்றைப் பொசுக்கக் கற்றுக் கொள்ள வேணடும். நிட்டூரமாய் இருத்தல், நிராகுலமாய் இருத்தல் நிர்ப்பயமாய் இருத்தல் ஆகிய இம்மூன்று தன்மைகள் அமைந்தது சிவ சமயம். சிவன் பிறந்ததாகக் கதை இல்லை. மற்ற தெய்வங்களுக் குக் காலனை உதைத்ததாகக் கதை இல்லை. காமனை எரித்ததாகவும் கதை இல்லை. எனவே சிவனைப் போலக் காமனை எரிக்க நிஷ்டூரமாகவும், காலனை உதைக்க நிராகுலமாகவும், பிறப்பிறப்பைக் கடக்க நிர்ப்பயமாகவும் இருக்க வேுண்டும். பயம் மிகுந்த இடம் பிறப்பு; அழுகை மிகுந்த இடம் இறப்பு.

மாயைக்கு உட்பட்டவர்களுக்குப் பிறப்பு இறப்பு இருக்கும். கன்மத்துக்கு (வினைக்கு) உட்பட்டவர்களுக்குக் கவலைகள் இருக் கும். ஆணவத்துக்கு உட்பட்டவர்களுக்குக் காமம் கட்டாயம் இருக்கும். ஆணவத்தின் குணங்களுள் காமம் முதன்மையானது. இம்மூன்று மலங்களுள் முதலில் தெரிவது மாயை. அதனுள் மற்ற இரண்டும் அடங்கி இருக்கும். இவை நீங்க வேண்டுமானால் ஞானம் பெற வேண்டும்.

நிட்டூரனும், நிராகுலனும், நிர்ப்பயனும் ஆகிய முருகனை விளித்து, தமக்குள்ள குறைபாட்டை அருணகிரியார் கூறுகிறார்.

(3) மட்டூர் குழல் மங்கையர்

மட்டு என்னும் சொல்லுக்கு அளவு என்று பொருள். மலரில் தேன் அளவாய் இருப்பதனால், தேனுக்கு 'மட்டு' என்னும் பெயர் வந்தது. மீண்டும் அத்தேனைக் கொண்ட பூவுக்கு அது ஆகுபெயர் ஆயிற்று. ஆக, மட்டூர் குழல் என்பது பூச்சூட்டப்பட்ட கூந்தல் ஆகிறது. கூந்தல் உணர்ச்சி பாயும் இடம் ஆனதனால், அதனை மாதர் நன்கு பாதுகாப்பர். அழகுக்கு மலரும் வைப்பர். ஆக, மலர் சூட்டப்பட்ட கூந்தலை உடைய மகளிர் என்று ஆயிற்று. (இங்கு அருணகிரியார் குறிப்பிடுவது பொது மாதரையாகும்).

(4) மையல் வலைப்பட்டு ஊசல் படும் பரிசு என்று ஒழிவேன்?!

மங்கைப்பருவம் சிறந்த பருவம். கூந்தலும் சிறந்ததே. மலர் சூடுவதிலும் தவறு இல்லை. அவர்கள் அழகுபடுத்திக் கொண்டு மங்கலமாய் விளங்குவதிலும் தவறு இல்லை. அந்த அழகைப் போற்றுவதிலும் தவறு இல்லை. ஆனால் அதில் மயங்குவதுதான் தவறு. அது மனிதனுடைய தவறேயாகும். அவ்வாறு மயங்குவது இங்கு ''மையல்'' எனப்பட்டது. ''வலைப்படுவது'' என்பது அறிவு அதில் அகப்படுவதாகும். பிறகு மீண்டும் மீண்டும் போவதும் வருவதுமாய் இருப்பது ''ஊசல்படுவ''தாகும். ''பரிசு'' என்பது இயல்பாக அமைந்துள்ள தன்மை. இது உணர்வுத்தூய்மையை அடையாத நிலை. இத்தன்மை தமக்கு இருப்பதாகவும், அது என்று ஒழியும் என்று வருந்திக் கேட்கின்றார் அருணகிரியார்.

இப்பாடலில் ''மட்டூர்குழல்'' என்று தொடங்கும் இரண்டு வரிகளில் காமத்தைப்பற்றியும், ''தட்டூட'' என்று தொடங்கும் இரண்டு அடிகளில் ஞானத்தைப் பற்றியும் கூறியுள்ளார். காமம், ஞானம் ஆகிய இரண்டுமே தீத்தன்மை உடையவை. காமம் சுடுகின்ற தீ; ஞானம் ஒளிதரும் தீ. காமத்தீத்தன்மை போக வேண்டுமானால், ஞானத்தீத் தன்மை வரவேண்டும். இந்த இரண்டு வகைத்தீத் தன்மைகளைப் பற்றிச் சிறிது விரிவாகக் காண்போம்:

தீ எல்லாப் பண்டங்களிலும் இருக்கின்றது. அது புறத்திலும் அகத்திலும் இருந்து வருகிறது. ஐம்பூதங்களிலும் தீ இருக்கிறது. வானத்தில் தீ எப்போதும் இருப்பதை நாம் அறிவோம். அது, நாம் உறங்கி விழிக்கும்போது ஞாயிறாக வருகிறது. அயர்ந்து உறங்கும்போது திங்களாக வருகிறது. நிலவு இல்லாதபோது விண்மீன்களாக வருகிறது. (தீயைப்போல மழை எல்லா நேரங்களிலும் பெய்வதில்லை. காற்று எப்போதும் வீசிக்கொண்டே இருப்பதில்லை). ஆக புறத்தில் எப்போதும் தீயைக் காணலாம்.

புறத்தில் இருப்பதைப் போலவே அகத்திலும் தீ இருந்து வருகிறது. சிலருக்குப் பசி என்னும் தீ தொடர்ந்து இருக்கும். சிலருக்கு அறிவுப்பசி ஆகிய தீ இருந்து வரும். மற்றும் சிலருக்குக் கோபம் ஆகிய தீ இருந்து வரும். இவ்வாறு பல்வேறு வகையான தீயின் உருவங்களை நாம் அறிவோம். இவை எல்லாவற்றையும் விடப்பெரியதொரு தீ ஒன்று இருக்கிறது. அது காமம் என்னும் தீயாகும். அது சந்தடி பண்ணாமல் இருந்து கெடுக்கும்.

ஆக, உள்ளும் புறமும் எங்குப்பார்த்தாலும் தீ இருப்பது தெரியவருகிறது. ஐம்பூதங்களில் இது நடு இடத்தைப் பெற்றுள்ளது. மற்றும் கடலின் நடுவிலும் தீ உண்டு. நம் உடலின் நடுவிலும் தீ உண்டு. விறகின் நடுவிலும், எப்பொருளிலும், ஒவ்வொன்றன் நடுவிலும் இத்தீ இருக்கின்றது.

தீக்கு இரண்டு குணங்கள் உள்ளன. ஒன்று சுடுவது; மற்றொன்று ஒளிவிடுவது. சுடுவது தாழ்ந்தது; ஒளி தருவது உயர்ந்தது.

விளக்கை ஏற்றிவைப்பது பெண்களுக்குச் சிறப்பு. அதிலும் மங்கையர் - மாங்கல்யம் உடைய நங்கையர் - சிறந்தவராவர். நம் நாட்டின் மிகப்பழமையான, பெருஞ்சிறப்புடைய விழா கார்த்திகைத் திருவிழாவாகும். நாகரிகத்தின் முதல் அடையாளம் இருளில் விளக்கு வைப்பதாகும். பகலிலும் விளக்கு வைப்பதுண்டு. அது குருட்டுத்தனம் ஆகாது. அதுவும் நாகரிகத்தின் அறிகுறியே. முன்னது வெளிச்சத்திற்கும், பின்னது பாவனைக்கும் (எண்ணுவதற் கும்) உரியன. இறைவன் திருஉரு பகலில் உலாவரும்போதும், சான்றோர்கள் வழி நடை செல்லும்போதும், தீவட்டி செல்வதுண்டு. உமாபதி சிவாச்சாரியார் பல்லக்கில் செல்லும்போது அவருக்குமுன் தீவட்டி எடுத்துச் சென்றனர். அது மட்டுமல்ல, நாம் உறங்கும்போதும் விளக்கு இருக்க வேண்டும். இருட்டில் உறங்குதல் கூடாது. ஆன்ம நோக்கமே இருளைக்கடிந்து ஒளிபெற வேண்டும் என்பதாகும். எனவே நாம் எப்போதும் ஒளியின் அருகில் இருந்துகொண்டு, ஒளியைத் தியானித்துக்கொண்டும் இருக்க வேண்டும்.

தீயைப் பயன்படுத்துவதில் ஒளிவிளக்கத்துக்காகப் பயன்படுத்து வதே உயர்ந்ததாகும். இவ்வுண்மையை விளக்குவதே கார்த்திகை தீபப் பெருவிழா. அதிலும் திருவண்ணாமலையில் விளக்கேற்றுவது மிகச் சிறப்புடையது. ஏனென்றால் திருவண்ணாமலை விளக்குத் தலமாகும்.

ஒளிமயமாவதே நம்முடைய நோக்கமாகும். அதற்கு நம்மிட முள்ள சில அழுக்குகள் போக வேண்டும். அவை போவதற்கு அவற்றைச் சுட்டு எரிக்க வேண்டும். சுட்டெரிக்கவும் தீ தேவைப்படுகி றது.

விறகில் தீ இருக்கிறது. அதை வெளிக்கொண்டு வருவதற்கும் தீ தேவைப்படுகிறது. தீயை உண்டுபண்ணுவதற்கு விறகைக் கடைய வேண்டும். அவ்வாறே, நம் சூழ உள்ள பண்டங்களில் மறைந்துள்ள

இறைவனைக்காண்பதற்கும் ஒரு வகையான ''கடைதல்'' வேலை யைச் செய்ய வேண்டும். அக்''கடைதல்'' வேலை என்பது நம் கடமையாகும். கடமையை அறிவோடும் அன்போடும் செய்ய வேண்டும். கடமையைச் சரிவர செய்து வந்தால், ஆசை அற்றுப் போகும் ஆசையை விடுவதற்குத் தனியே முயல வேண்டுவதில்லை. தனியே முயன்றாலும் அது அடங்காது. ஆசைகளின் முன் வரிசையில் நிற்பது காமம் ஆகும். கடமை செய்வதனால் ஆசை அற்றுப்போவதால் காமமும் மாய்ந்து விடும். காமம் போவதால் ஞானம் தானாகவே வரும். எனவே காமத்தைப் போக்கிக்கொள்ள வேண்டுமானால் கடமைதான் ஒரே வழியாகும்.

கடமை காரணமாக ஒரு செயலைச் செய்துவரும்போது, இடையில் நமக்கு விருப்பமான சில பற்றுகள் தாமாகவே விலகிப் போவதை நாம் அநுபவத்தில் கண்டிருக்கிறோம். அவ்வாறே ஞானத்தில் குறி வைத்தால் பிறவற்றில் பற்று வைக்க மாட்டோம்.

எனவே கடமையைச் செய்து, ஞானத்தைப் பெற்று, அதன் விளைவாகக் காமத்தைச் சுட வேண்டும். காமத்தைச் சுடுவதால் இருள் போகும். ஞானத்தைப் பெறுவதால் விளக்கம் வரும்.

ஞானம் என்பது இயல்பான தெளிவு நிலையாகும். ஞானம் பெற்றவர்களுக்கு ஐயப்பாடே வருவதில்லை. அவர்கள் எதையும் பளிச்சென்று சொல்லுவார்கள். அவர்கள் சொல்லுவது நமக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் அவர்களைப் பொருத்தவரை, ஐயப்பாடே இல்லை. யார் ஐயம் திரிபு இல்லாதவர்களோ அவர்களே ஞானிகள். அவர்களே மெய்யுணர்ந்தவர்கள்

சிலருக்குச் சிறு பருவத்திலேயே தற்செயலாக இத்தெளிவு வருவதுண்டு. திருஞானசம்பந்தர், மெய்கண்டதேவர், கண்ணப்ப நாயனார் ஆகியோர் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் உண்மைப்பாதையில் சென்றவர்கள்; ஒளிநிலை பெற்றவர்கள்.

தீக்கு, (ஒளிப்பிழம்புக்கு) நிழல் இல்லை. நாம் நடந்தால் நிழல் நம்மைத் தொடரும். இராமலிங்கருக்கு அந்த நிழல் விழவில்லை. அவர் ஒளி வண்ணமாக மாறிவிட்டதனால் நிழல் விழவில்லை. அது ஒரு வித்தை அல்லது சித்தி. அத்தகைய சித்திகளைப் பெறுவதற்கு இப்பிறப்புக்குத் தகுதி உண்டு. அவ்வாறு ஒளி வண்ணமானவர்களுக்கு நோய் என்பதில்லை.

திருஞானசம்பந்தர், தீப்பிழம்பில் கலந்து விட்டார் என்பது அவர் தம்மை ஒளியாக்கிக் கொணடு, பிறகு ஒளிப்பிழம்பில் கலந்தார் என்று பொருளாகும். தம்மை ஒளிவண்ணமாக்கிக் கொண்டதோடு, திருமணத்துக்கு வந்தவர்களையும் அவ்வாறே செய்தார். இல்லையானால், எரிந்து சாம்பலாக வேண்டி வரும். மாணிக்கவாசகர் வெளியில் கலந்தார் என்றால், தம்மை வெளிநிலைக்கு மாற்றிக் கொண்டார் என்பது பொருள். அவ்வாறே சுந்தரரும், தம்மைக் காற்றாக்கிக் கொண்டார். இதுதான் பண்டைய தமிழரின் விஞ்ஞானம். இன்றைய விஞ்ஞானம் புறத்தில் வளருகிறது.

தீவண்ணம் ஆகாதவரையில் அதாவது ஒளிநிலை பெறாதவரையில் எல்லாப்பண்டங்களுக்கும் நிழல் உண்டு. (பண்டமல்லாதவற்றுக்கு நிழல் இல்லை) ஒளி மிகுந்தால் நிழல் குறையும்; ஒளி குறைந்தால் நிழல் வளரும். உச்சிப்போதில் ஒளி அதிகமானதால் நிழல் குறைகிறது. காலையும், மாலையும் ஒளி குறைவதால் நிழல் அதிகமாகிறது. நிழல் நம்மைத் தொடர்வது பற்றித் திருவள்ளுவர் ஒரு குறிப்புக் கொடுத்துள்ளார். அது தீவினை நம்மைத் தொடர்ந்து நிழல்போல் வரும் என்பதாகும். தீவினை இருள் சூழ்ந்தது; ஒளியில்லாதது. எனவே நிழல் தொடர்கிறது. ஞானவண்ணமாகி நிழல் நீங்கப் பெறுவதற்கு மனித உடம்பைப் பெற்றுள்ளோம். எனவே ஞான வண்ணம் ஆக முயலவேண்டும்.


புறத்தில் நெருப்பாக இருப்பது, அகத்தில் அறிவாகவும் உணர்வாகவும் விளங்குகிறது. இந்த அறிவுக்கும், உணர்வுக்கும் அடிப்படையாய் இருப்பது, அதாவது முதற்பொருளாய் இருப்பது ஆண்டவனே ஆவான். அவன் தன்மை ஞானம்; அவன் வண்ணம் தீ. ''தீவண்ணர் திறம் ஒருகால் பேசாராகில்'' என்று திருநாவுக்கரசர் குறிப்பிடுவது இதுவேயாகும். அவனுக்கென்று ஒரு சிறந்த வடிவம் ஐம்பூதங்களில் உண்டென்று சொன்னால் அது தீயேயாகும். ''சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே'' என்பார் மாணிக்கவாசகர். தீ ஒளியாய் இருப்பதோடு அருவுருவமாகவும் உள்ளது.

ஆக, அருணகிரியார், தமக்கு இருந்ததாகக் குறிப்பிட்ட காமத்தை எரிப்பதற்கும் ஞானத்தைப் பெறுவதற்கும் தீவண்ணனின் துணையை வேண்டினார் என்று தெரிகிறது. மற்றும் இந்தப்பாட்டால், காமத்தை விட்டு நிராகுலனாயும், நிர்ப்பயனாயும் இருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

III சக்கரம்

இப்பாடல் தீயின் தன்மையை விளக்கியதாலும், தீக்கு உரிய எழுத்து 'ர'கரம் ஆனதனாலும், இப்பாடலின் சக்கரத்துக்கான சிறப்பெழுத்து 'ர'கரம் ஆகிறது. கொல்லன் உலைக்கூடத்துக்குச் சென்றால் தீயின் ஒலியாகிய 'ர'கர ஒலியைக் கேட்கலாம்.

இப்பாடலின் சக்கரம் வருமாறு:



'ந'கரம் சுவாதிட்டான ஆதாரத்துக்கு உரியது. அகர, உகர, மகரங்கள் ஓங்காரத்தின் விரிவுகள். 'ர'கரம் இப்பாடலுக்குரிய மந்திர எழுத்து.

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-10

கார் மா மிசை காலன் வரின் கலபத்து
ஏர் மா மிசை வந்து எதிரப்படுவாய்
தார் மார்ப! வலாரி தலாரி எனும்
சூர் மா மடியத் தொடு வேலவனே!

I பொழிப்புரை

கரிய (நிறமுடைய) எருமை மேல் எமன் வந்தால், தோகை யுடைய அழகிய மயில் மேல் (நீ) வந்து அவனுக்கு எதிர்ப்படுவா யாக! கடப்ப மாலையை அணிந்த மார்புடையவனே! 'வலன்' என்னும் அரசனை அழித்த இந்திரனுடைய தலையை அரியக்கூடிய வன் என்று சொல்லப்படும் சூரபதுமனாகிய மாமரம் அழியும்படி வேலாயுதத்தைத் தொடுத்தவனே!

II விளக்கவுரை

(1) கார்மாமிசை காலன் வரின்

'கார்' என்பது கருமை நிறம். 'மா' என்பது விலங்கு. இங்குக் 'கார்மா' என்பது எருமையைக் குறிக்கின்றது.

['மா' என்னும் ஓரெழுத்தொரு மொழி நல்லியல்புகளையும் குறிக்கும்; விலங்கையும் குறிக்கும். 'ஆ' என்னும் எழுத்தும் விலங்கைக் குறிக்கும். இவற்றோடு 'ன்' சாரியையைச் சேர்த்து 'மான்' என்றாலும் 'ஆன்' என்றாலும்கூட அதே பொருள்தான். எனினும் இவற்றுள் 'மான்'ஐ விட 'ஆன்' நன்மை, மேன்மை, மென்மை ஆகியவற்றைக் குறிக்கும். 'ஆன்' பசுவு'க்குப் பெயர். 'மான்' அழகைக் குறிக்கும்; சில இடங்களில் மருட்சியையும் குறிக்கும். 'ஆன்' அழகு, அமுதத்தன்மைகளோடு உருக்கத்தையும் உடையது. உருக்கம் என்னும் பண்பு, அன்பு, அருளை விடச் சிறந்தது. அது பரிவினால் வருவது. உருக்கமும், பரிவும்தான் மனிதன் பெறக்கூடிய மிகச்சிறந்த பண்புகளாகும். இந்த பண்புகள் 'மா' அல்லது 'மான்' என்னும் சொற்களில் வருவதில்லை].

'மா' என்னும் எழுத்தோடு 'ன்' சாரியை சேர்ந்தால், நன்மை, நயம் முதலிய பண்புகளை உடைய விலங்கைக் குறிக்கும். ''கார்மா'' என்பதில் 'ன்' சாரியையும் இல்லை. அதனால் இது குறிப்பிடும் விலங்காகிய எருமையில் இனிமை முதலிய பண்புகள் இல்லை. நிறமும் கரியதாக உள்ளது.

எருமையைப் போலக் கரிய நிறமுடைய விலங்குகள் வேறு சிலவும் உள்ளன. அவை யானை, பன்றி முதலியன. இங்கு எருமை மேல் எமன் வருவதாக அருணகிரியார் கூறுகிறார். மற்ற இரண்டு விலங்குகளும் எமனுக்குப் பொருத்தமான ஊர்திகள் (வாகனங்கள்) அல்ல. பன்றி எமனைத் தாங்கக்கூடியதன்று. யானையின் இயல்பு எமனுக்கு ஏற்றதன்று. எருமையின் கொம்பு கரியது; யானையின் கொம்பு வெண்மையானது. அது மற்றவர்களைக் கொடுமைப்படுத்து வதன்று. மாறாக யானையின் கொம்பாகிய தந்தம் மேலுக்குத் தூக்கிவிடும் இயல்புடையது. எருமை மிக மந்தமான விலங்கு. சோம்பல், தடிப்புத்தன்மை, புறக்கணிப்புத்தன்மை, போக (இன்பம் நுகரும்) தன்மை முதலிய விரும்பத்தகாத இயல்புகளை உடையது. அந்த மந்தமான விலங்கின்மேல் எமன் வருவான் என்று கூறுகிறார்.

'காலன்' என்பவன் மனிதர்களுடைய உயிரை உடலிலிருந்து பிரிப்பதற்கு வருபவன். அவன் காலத்தோடு ஒட்டி நடப்பவன். ஒரு நொடியும் பிசகாது. அவன் காலத்துக்கு அதிதேவதை. அவன் தொழிலில் சிறிதும் காலம் தாழ்த்த மாட்டான். மற்றும் அவன் விருப்பு வெறுப்பு அற்றவன். அவனுக்கு 'தருமராசன்' 'தருமதேவ தை' என்னும் பெயர்களும் உள்ளன. எமனுக்குச் சூலப்படை உண்டு. அவன் உருத்திர அம்சம் பொருந்தியவன். அவனுக்கு சீகண்ட உருத்திரரின் கோலம் உண்டு. அவன் பத்திமான்; திருநீறு அணிபவன்; அழிக்கும் ஆற்றல் உடையவன். எனவே உக்கிரமான வன்.

எமன் அழிப்பது என்பதற்கும், உருத்திரன் அழிப்பது என்பதற் கும் வேறுபாடு உண்டு. உருத்திரன் அழிப்பது பாசத்தையாகும். பாசம் எனப்படும் மலம் நன்மை, இனிமை, அழகு ஆகிய இயல்புகளுக்கு மாறானது. எனவே உருத்திரன் அழிப்பது நமக்கு உதவியேயாகும். எமன், உயிரைப் பிரிப்பது என்பது பருஉடலையும், அதனுள்ளே இருக்கின்ற நுண்ணுடல்களையும் (உயிரோடு சேர்த்து) பிரிப்பதாகும். இது மிகுந்த வேதனை தருவதாகும். பிரியும்போது

உடலிலிருந்து பச்சையாகத் தோலை உரிப்பது போன்ற வேதனை இருக்கும். பிறக்கும்போது இருப்பதைவிட இறப்பு வேதனை கொடியது. அதனாலேயே மாணிக்கவாசகர் ''யானேதும் பிறப்பஞ் சேன், இறப்பதனுக்கென் கடவேன்?'' என்றார். இந்தப் பிரிக்கும் வேலை எமனுடையது. இதற்குக் கூறுபடுத்துவது என்றும் பெயர் உண்டு. அதனால் எமனுக்குக் ''கூற்றுவன்'' என்றும் பெயர் வந்தது. உடலைக் கூறுபடுத்தி உயிரைப் பிரிப்பதை வெளிப்படையாகக் காண வேண்டுமானால் அது மூச்சு நின்றுவிடுவதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

மூச்சைக் காலத்தோடு முறை தெரிந்து பயன்படுத்தினால் பல நன்மைகள் உண்டாகும். விடியலில் மூச்சுப்பயிற்சி (பிராணாயாமம்) செய்தால் உடலுக்கு நன்மை செய்வதோடு, ஆயுள் நீட்சியையும் தரும். மூச்சைக் கட்டுப்படுத்துவது (பந்தனம்), அடக்குவது (தம்பனம்), நிலைபெறுத்துவது (தாபனம்) என்னும் மூன்று நிலைக ளில் காலத்தோடு பயில வேண்டும். ஒரு நொடிக்கு இவ்வளவு காற்று வாங்கலாம், இவ்வளவு காற்று விடலாம் என்றெல்லாம் அளவுகள் உள்ளன. வாங்கிய காற்றை எங்கு நிறுத்த வேண்டுமோ அங்கு நிறுத்தி, மற்றும் மேலே எழுப்பி நடுநாடி முழுவதும் சுற்றினால், நுட்பமான சத்திகள் சேரும். இப்பயிற்சிகளை நாம் செய்யத் தவறினால், காலன் குறித்த நேரத்தில் வந்து விடுவான். அதாவது இந்த நுட்பங்களை அறிந்து செயல்படும் சுறுசுறுப்பு இல்லாத மந்த புத்தி உடையவர்களை நாடி எமன் வந்துவிடுவான். இந்த மந்த புத்தியாகிய எருமை உணர்ச்சி மாறி, சுறுசுறுப்பாகிய எருது உணர்ச்சி வருமானால் எமனுக்குப் பதிலாக இறைவன் வந்து ஆட்கொள்வான்.

எருமை என்றும், எருது என்றும் நம் முன்னோர்கள் நமக்கு உருவகப்படுத்திக்கொடுத்தது எதற்காக என்பதனை நாம் சிந்தித்து அறிந்து கொள்ளாவிட்டால் பயனில்லை. உருவகப்படுத்தினால்தான் கருத்துக்கள் நன்றாகப் புரியும். ''உருவகம்'' (Metaphor) என்பது அகத்தில் தோன்றும் கருத்துக்களை உருவத்தில் காட்டுவதாகும். ''எருமை'' என்பதும் ''எமன்'' என்பதும் உருவகங்களே.

ஆக, ''கர்மா மிசை காலன் வரின்'' என்னும் தொடருக்கு எருமை மீது எமன் வந்தால் என்று பொருளாகும் (மிசை=மேல்).

(2) கலபத்து ஏர் மா மிசை வந்து எதிரப்படுவாய்

'கலபம்' என்பது மயிலின் தோகை. 'ஏர்' என்பது அழகு. அழகிய தோகை உடைய மயில் ஆண் மயிலாகும். மயில், பறவை இனத்தைச் சேர்ந்தது என்று தோன்றும். ஆனால் அதனை அருணகிரியார் ''மா'' என்று கூறுகிறார். அது விலங்கினத்தைச் சேர்ந்ததாகும். திமிங்கலத்தை நாம் மீன் என்று எண்ணுவோம். அதுவும் விலங்கினத்தைச் சேர்ந்ததாகும். ''விலங்கு'' என்பதற்கு என்ன பொருள்? குறுக்கே வளர்வது விலங்கு. குறுக்கீடு அல்லது தடை செய்வது விலங்கு.

மயில் பறவைகளில் பெரியது. குறுக்கிட்டு நிற்கும் இயல்புடையது. அது அதிகமாகப் பறப்பதில்லை. பெரும்பாலும் நடந்தே செல்லும். மற்றும் விலங்குகளுக்கு ஐந்தறிவு உண்டு. மயிலுக்கும் ஐந்தறிவுகள் விளக்கமாக உள்ளன. எனவே அதனை ''மா'' என்றார். ''ஏர்'' என்பதற்கு அழகு, தோற்றப்பொலிவு, நன்மை என்று பொருளுண்டு. ஆக மயில் ஒரு அழகிய விலங்கு. அதற்கு கலபம் அல்லது தோகையால், அழகும் பொலிவும் உண்டாகின்றன.

மயில் தோகை விந்து தத்துவத்தை உணர்த்துவதாகும். விந்து சுத்த மாயைத் தத்துவங்கள் ஐந்தனுள் இரண்டாவதாகும். இந்த ஐந்தும் அழகுடையவை. விந்து மண்டலம் நிறம், ஒளி மற்றும் சத்தி உடையது. முருகன் இந்த விந்து மண்டலத்தைச் சேர்ந்தவனாவான்.

மயில் நீல நிறம் உடையது. ''மை'' என்றால் கருமை. இது கறுப்பிலே. பளபளப்பான நீல நிறம் ஆகும்.

அருணகிரிநாதர் எருமை மேல் எமன் வந்தால், மயில் மேல் நீ வந்து எதிர்ப்படுவாய் என்று வேண்டுகிறார். எதிர்ப்படுதல் என்பது எதிரிகள் இருவர் ஒருவரை ஒருவர் எதிர்த்து முட்டுதல் ஆகும். முருகன் வந்து எமனை எதிர்த்துத் தம்மை விடுவிக்க வேண்டுமென்று வேண்டுகிறார். இறைவன் அறிவானவன். அறிவு உணர்ச்சி-ஒளி வந்தால்தான் மலமாகிய அறியாமை இருள் நீங்கும். இறைவனுக்கும் மலத்துக்கும் எப்பொழுதும் போர் நடந்து கொண்டே இருக்கும். ஆன்மாக்கள் அறிவு உணர்ச்சியின் துணைகொண்டு மல பந்தத்திலிருந்து விடுபட வேண்டும். அறிவு என்பது இங்கு விந்து எனப்பட்டது. அது ஒளியுடையது.

ஒளி உண்டாகும்போது, ஒலியும் உண்டாகும். எனவே இந்த இரண்டாலும் எமனை (மலக்கட்டை) நீக்கிக் கொள்ளலாம். அதாவது மயிலால் குறிக்கப்படும் விந்து தத்துவத்தால் மட்டுமேயன்றி ஒலியால் குறிக்கப்படும் நாததத்துவத்தாலும் எமனை நீக்கலாம். சான்றோர்களுடைய வாக்காகிய ஒலி இந்த நாத தத்துவத்தைச் சேர்ந்தது. எனவே அந்த வாக்குகளில் ஈடுபட்டாலும் எமன் வரமாட்டான்.

சான்றோர் வாக்கு நமக்குப் பெருஞ்சொத்தாக வாய்த்துள்ளது. அவை தமிழ் மொழியில் மிகுதியாக (ஏராளமாக) இருக்கின்றன. அவற்றை இசையோடும் இறை உணர்வோடும் பாடினால் 36-வது தத்துவமாகிய நாத தத்துவத்துக்கு நம்மை உயர்த்திவிடும். நாத மண்டலத்துக்கு முந்திய நிலை அதாவது 35-வது தத்துவம் ஒளி மண்டலம் அல்லது விந்து மண்டலமாகும். இந்த நிலையை அடைய வேண்டுமானால் யோகம் பயில வேண்டும்.

யோகம் பயிலுவோர் மூன்று வகைப்படுவர். அவர்கள்:-

1. **அடயோகிகள்:** இவர்கள் வெறும் மூச்சுப் பழக்கம் மட்டும் உடையவர்கள். இதனால் உடல் நலம் கிட்டும். 100 ஆண்டுகள் வாழ்வர். இவர்களால் ஒளி மண்டலத்தை அடைய இயலாது.

2. **அடராஜயோகிகள்:** இவர்கள் மூச்சுப் பழக்கத்தோடு மன ஒருமைப்பாட்டையும் பெறுவர். அதனால் இவர்களுக்குச் சித்திகள் கைகூடும். 500 ஆண்டுகள்வரைகூட வாழ முடியும். ஆனால் இவர்களாலும் ஒளி மண்டலத்தை அடைய இயலாது.

3. **சிவராஜ யோகிகள்:** இவர்கள் இறை அருளோடு ஒன்றியவர்கள். இவர்கள் விரும்பும்வரை உலகில் வாழக்கூடியவர்கள். இவர்கள் விந்து மண்டலம் அல்லது ஒளிமண்டலத்தில் சேர்ந்தவர்கள். ஆதலால் இவர்களுக்கு இறப்புப்பிறப்பு ஆகிய சூழல் அற்றுப்போகும். இவர்களுக்கு எமன் வருவதில்லை. இவர்களுக்கு இறைவனே வந்து ஆன்மாவை மட்டும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, பரு உடலோடு நுண்ணுடம்புள் அனைத்தையும் (அதாவது ஐந்து உடல்களையும்) ஒரு சேர அழித்து விடுவான். இச்செயல் எமனால் செய்ய இயலாதது. இதைச் செய்யவல்லவன் இறைவன் ஒருவனேயாவான். அதனாலேயே இறைவனை மாணிக்கவாசகர் ''கள்ளப்புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லானே'' என்றார் (குரம்பை-உடல்).

ஆக எமன் வந்தால் அவனை எதிர்த்து எனக்கு முத்தி தருவாயாக என்று அருணகிரிநாதர் வேண்டுகிறார்.

(3) தார் மார்ப!

தார் என்பது மலர் மாலை. அதுவும் மார்பில் அணியும் மாலைக்குத் ''தார்'' என்று பெயர். முருகன் மார்பில் அணிவது கடப்ப மாலை. தலைக்கு அணிவது வெட்சி மாலையாகும். தலைமாலை வெற்றியைக் குறிப்பிடும். மார்பில் அணியும் மாலை தன் சொந்தத் தன்மையை அதாவது அதிகாரத்தைக் குறிப்பதாகும். பிரணவம்தான் முருகனின் சொந்தத் தன்மை. விநாயகர் பிரணவத்தின் உருவானவர். முருகன் பிரணவத்தை விளக்கும் அதிகாரத்தைப் பெற்றவர்.

மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்தவர் ஸ்ரீகண்ட உருத்திரர். ஸ்ரீகண்டருக்கு குரு முருகனாவார். அவர் ஸ்ரீகண்டருக்கு உபதேசித்தது ஐந்தெழுத்தை உள்ளடக்கிய 'ஓம்' என்னும் பிரணவமாகும். உபதேசம் செய்யும் அதிகாரத்தை முருகன் பெற்றிருக்கிறார் என்று காட்டுவதற்காகத்தான் அவர் மார்பில் கடப்ப மாலை தவழ்கிறது.

அரசர்கள் மாலை அணிவதும் அதிகாரத்தைக் காட்டுவதற்காகவே யாகும். திருமால் மாலை அணிவது உலக ஆட்சிக்கு உரியவன் என்பதைக் காட்டும். முருகன் அணிவது, உலக ஆட்சியோடு அருள் ஆட்சிக்கும் உரியவன் என்பதைக் காட்டும். திருமாலுக்கு என்னென்ன அழகுப்பொருள்கள் உண்டோ (பட்டாடை போன்றவை) அவை அனைத்தும் முருகனுக்கும் உண்டு. பிள்ளையாருடைய நிலை ஸ்ரீகண்ட உருத்திரரைப் போன்றதாகும்.

(4) வலாரி தலாரி எனும் சூர் மா மடியத் தொடு வேலவனே

''வலாரி'' என்பது வலன் என்னும் அரசனின் தலையை அரிந்தவனாகிய இந்திரனைக் குறிக்கும். வலன் என்னும் அரசன் இந்திர பதவிக்காகச் செய்ய வேண்டிய வேள்வி (யாகங்)களைச் செய்து முடித்துவிட்டான். அவன் தன் பதவியை எடுத்துக் கொள்வானோ என்று அஞ்சி இந்திரன் அவனைக் கொன்று விட்டான். அதனால் இந்திரன் ''வலாரி'' எனப்பட்டான். தலையை அரிபவன் ''தலாரி'' ஆவது போல, வலனை அரிந்தவன் ''வலாரி'' ஆனான்.

இங்குத் ''தலாரி'' என்றது இந்திரனின் தலையை அரியக்கூடிய பகைமை உடைய சூரபதுமனையாகும்.

''சூர்மா'' என்பது அச்சம் தரக்கூடிய சூரபதுமன், மாமரமாய் நின்றதைக் குறித்தது. மாமரம் நல்ல இயல்புகளைக் கொண்ட மரம்தான். மரமானாலும் அதுவும் ஒரு ஆன்மாவாகும். மரம் ஓரறிவுடையது. ஓரறிவுடையனவெல்லாம் அமைதியானவை. எவ்வாறு தேவரும் கயவரும் ஒன்றுபோல இருப்பர் என்று திருக்குறளில் வந்ததோ அதுபோல, ஓரறிவு உயிர்களும், ஆறறிவுடையோரில் சிறந்தோரும் ஒன்றுபோல அமைதியாய் இருப்பர். மரம் நிலைத்து ஒரே இடத்தில் நிற்பது. மற்ற ஆன்மாக்கள் இயங்குவன. அவை சுற்றி அலையும் இயல்புடையன.

மா, முக்கனிகளில் ஒன்று. அதில் கொட்டை பெரிதாக இருக்கும். அது ஆன்மாவில் ஆணவத்தைப் போன்றது. சூரன் ஆணவம் மிக்கவன். ஆணவப் போக்குத் தலைகீழான போக்காகும். அதனால் சூரனும் தலைகீழாக நின்றான்.

சூரன் மடியும்படி முருகன் வேல் எறிந்தான். ''மடிய'' என்றது அழிந்து போகும்படி என்று பொருள் ஆகாது. 'மடிய' என்பதற்கு ''அடங்கும்படி'' என்று பொருள் கொள்ள வேண்டும். உலர்ந்த துணியை 'மடி' என்றால் அதனை நாம் அழிப்பதில்லை. அதன் ஒரு பகுதியின் மேல் மற்றொரு பகுதியை அடக்கி வைக்கின்றோம். அதுவே மடிப்பதாகிறது. நம் வயிறு மடிந்து இருப்பதனால் அதற்கு 'மடி' என்று பெயர். மடியில் நிற்கும் துணிக்கும் 'மடி' என்னும் பெயர் வந்தது.

எனவே சூர்மா மடிய வேலைத் தொட்டதென்பது சூரனே இல்லாதபடிச் செய்ததாகாது. ஏனென்றால் எந்தப் பொருளையும் யாரும் அடியோடு இல்லாமற் செய்வது என்பது இயலாது. ஒன்றில் ஒன்றை ஒடுக்கலாம். பாத்திரங்களை ஒன்றுக்குள் ஒன்றை அடக்குவதைப்போல அடக்கலாம்; அவ்வளவுதான். எனவே சூரன் மடிந்தான் என்றால் அவன் ஆணவம் ஒடுங்கிவிட்டது என்று பொருள். ஆணவம் மடிய வேண்டுமானால் ஞானம் வரவேண்டும்.

சூரன் மற்றவர்களை மிகுதியாக வேதனைக்கு உள்ளாக்கி, எதிர்த்ததனால்தான் முருகன் அவனை அடக்கினான். மற்றப்படி


சூரபதுமன் தவ சத்தியுடையவன்; உணர்வில் சிறந்தவன். அதைப்போலவே இராவணனும் பெரிய தவசாலி. சூரனும், இராவணனும் சிறந்த பத்தர்கள்; அடியார்கள். தன் வீட்டுக்குழந்தையும், பிற வீட்டுக் குழந்தையும் சண்டை போட்டால், தன் வீட்டுக்குழந்தையைத் தான் அடக்கிக் கொள்வதைப் போல, முருகன் சூரனை அடக்கினான். மானம் அல்லது தன்னுணர்வு ஒன்றினால்தான் சூரன் இறைவனை எதிர்த்தான். மற்றப்படி அவன் சிறந்தவன். நாமெல்லாம் அவனை வணங்கும் பேறு பெற்றவனாவான். இச்சிறப்பு சூரனுக்குப் பகையாகிய இந்திரனுக்கு இல்லை. சூரன் யோகி; இந்திரன் போகி. போகிக்கும் யோகிக்கும் நட்பு வரயியலாது. அவர்கள் பகைவர்களாகவே இருப்பர். போக உணர்ச்சி நல்லதன்று. ஆக, போக உணர்வினால் அழிந்துபடும் எனக்கு யோக உணர்வு தந்து, ஒளி மண்டலத்துக்கு உயர்த்தி, முத்தி தருவாயாக! என்பது இப்பாடலின் உட்கருத்தாகும். போகத்தை விட்டு யோகத்துக்குப் போவதே நம் முயற்சியாக இருத்தல் வேண்டும்.

III சக்கரம்

போகத்துக்குரிய இடம் இந்த நில உலகம் ஆகும். இவ்வுலகம் மண்ணால் ஆனது. மண்ணிலிருந்துதான் எல்லாப் போகப்பொருள்களும் உருப்பெறுகின்றன. போகத்தில் முதலிடம் பெறுவது உணவு. அது மண்ணிலிருந்து உண்டாகிறது. ஆடை முதலியனவும் மண்ணிலிருந்தே வருகின்றன. பொன் என்பதுவும் மண்ணின் திரிபேயாகும். இறுதியாகப் பெண் என்பதுவும், மண்ணிலிருந்து வரும் உணவைக் கொண்டு உருவான தசை போன்றவற்றால் ஆனதுவே. எனவே போகத்தைத் தருவது மண்.

மண்ணுக்குரிய எழுத்து 'ல' கரம் ஆகும். மண்ணின் திரிபே உலோகங்கள் என்பதைப் பார்த்தோம். உலோகங்கள் 'கலகல'வென்று ஒலி தருபவை. சிறப்பாக வெண்கலப் பாத்திரம் இந்த ஒலியைத் தரும். அந்த ஒலியைக் கொண்டே வெண்கலப் பாத்திரத்துக்குக் ''கலம்'' என்னும் பெயரும் உண்டாயிற்று. எனவே இப்பாடலுக்குரிய சக்கரத்தின் சிறப்பு எழுத்து 'ல'கரம் ஆகிறது.

இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:



சுவாதிட்டானத்துக்குரிய எழுத்தாகிய 'ந'கரம் நடுவில் இடப்பட்டது. 'அ'கர 'உ'கர 'ம'கரங்கள் ஓங்காரத்தின் விரிவுகள். இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்தாகிய 'ல' கரம் மேல் புறத்தில் வந்தது.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்


சுவாதிட்டான ஆதார சக்கரம்

'சுவ' (ஸ்வ) என்பது சொந்த; ''அதிட்டித்தல்' என்பது உண்டாதல். 'சுவாதிட்டானம்' என்பது சொந்த சத்தி உண்டாகும் இடம். இதற்குக் 'கந்தஸ்தானம்' என்னும் பெயரும் உண்டு.

இந்த ஆதாரம் மூலாதாரத்துக்கு அண்மையில், மேலே சற்று இடப்பக்கம் உள்ளதனால் இவ்விரண்டையும் 'இரட்டை ஆதாரங்கள்' என்றும், 'அண்ணன் தம்பி' என்றும் கூறுவர். இவ்விரண்டும் தொடக்கத் தவ நிலைக்கு உரியவை.

சுவாதிட்டான சக்கரத்துக்கு ஆறு இதழ்கள் உள்ளன. இவற்றுக்கு உரிய அநுபூதிப் பாடல்கள் ஐந்திலிருந்து பத்துவரை (5-10)யிலான ஆறு பாடல்களாம். அப்பாடல்களுக்குரிய மந்திர எழுத்துக்கள் பஃ பஃ° ம, ய, ர, ல, ஆம்.

சுவாதிட்டான சக்கரம் வருமாறு:



சுவாதிட்டான சக்கரத்தின் வடிவம் சதுரம் ஆகும். அதற்குரிய மந்திர எழுத்து 'ந'கரம் ஆகும். இது திருவைந்தெழுத்தின் முதலெழுத்தாகும். மற்ற ம, சி, வ, ய ஆகிய எழுத்துக்கள் இனிவரும்

ஆதாரங்களுக்கு உரியவை. இவற்றைப் பற்றிய விவரங்கள் 'அறிமுகம் - மந்திரம்' என்னும் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

இச்சக்கரத்தின் சிறப்பெழுத்தாகிய 'ந'கரம் சதுரத்தின் நடுவில் வந்துள்ளது. சதுரத்துக்குள், ஓங்காரத்தின் பிரிவாகிய அ, உ, ம ஆகிய எழுத்துக்கள் வந்துள்ளன.

சக்கரங்களின் வடிவம் அனைத்தும் வட்டத்தின் பேதங்களே என்பதனை உணர்த்த சதுரத்தைச் சுற்றி ஒரு வட்டம் அமைந்துள்ளது.

சதுரத்துக்கும் வட்டத்துக்கும் இடையில் ஒன்பது எழுத்துக்கள் உள்ளன. இவை மந்திரம் உண்டாவதற்கான காரணப்பொருள்கள் ஆம். இவை வீரியம் வாய்ந்த வித்தெழுத்துக்கள். இவற்றைப்பற்றிய விவரங்கள் வருமாறு:

(1) **வித்தெழுத்து (பீஜாட்சரம்) - ஸ.**
காரணப்பொருள் - ஞானம்

விளக்கம் : மந்திரம் உண்டாவதற்கு முதலில் ஞானம் வேண்டும். ஞானத்தில் ஸ்தூல ஞானம் என்றும். சூக்கும ஞானம் என்றும் இரண்டு வகை உள்ளன. அவற்றுள் 'ஸ' கரம் ஸ்தூல ஞானத்தைக் குறிப்பதாகும்.

(2) **வித்தெழுத்து: ஸO**

விளக்கம்: : இது சூக்கும ஞானத்தைக் குறிப்பதாகும்.

(3) **வித்தெழுத்து: நO**

காரணப்பொருள்: கலை, பிரணவம்.

விளக்கம் : மந்திரம், ஓர் எழுத்து, அல்லது மொழியின் மூலமாகவே தோன்றும். மொழி கலையில் சேர்ந்ததாகும். இங்குக் கலையைக் குறிப்பது 'ந'கரம். இந்த 'ந'கரமாகிய மந்திர எழுத்து ''ஓம்''லிருந்து வந்தது என்பதனைக் காட்ட ''நO'' என்று வந்துள்ளது. ''ஓம்'' என்னும் ஒலிக்கு 'O' (வட்டம்) குறியீடாகும்.

(4) வித்தெழுத்து: நாO.
காரணப்பொருள் : நாதம்.

விளக்கம் : மந்திரத்துக்கு நாதம் உண்டு. நெடிலாக உச்சரிக்கும்போது அதாவது நாதம் கலக்கும்போது 'நO' என்பது ''நாO' ஆகின்றது.

(5) வித்தெழுத்து : ஆO
காரணப்பொருள் : விந்து

விளக்கம் : மந்திரத்துக்கு வடிவம் உண்டு. அது விந்துவாலானது. அதனைக் குறிப்பது 'ஆO' ஆகும்.

(6) வித்தெழுத்து : லO
காரணப்பொருள் : தத்துவம்

விளக்கம் : 'ந'கரமாகிய மந்திர எழுத்துக்குத் தத்துவம் மண் ஆகும். மண்ணுக்குரிய வித்தெழுத்து 'லO' ஆகும்.

(7) வித்தெழுத்து : அO

காரணப்பொருள் : கோலம்

விளக்கம் : மந்திரத்துக்கு விருத்தி உண்டு. அதாவது அதன் தத்துவம் பல கோலங்களை (உருவங்களை)க் கொள்ளும். மண் மலராகக் கோலம் கொள்ளும். அந்த விரிவைக் குறிக்கும் வித்தெழுத்து'அO' ஆகும்.

(8) வித்தெழுத்து : அ

காரணப்பொருள்: செயல் (கிருத்தியம்)

விளக்கம் : மந்திரத்துக்குச் செயல் உண்டு. செயல் ஐந்து வகைப்படும். அவை 1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) மறைத்தல் 5) அருளல் என்பவை. அவற்றுள் படைத்தலைக் குறிப்பது 'அ'கரம் ஆகும்.

(9) வித்தெழுத்து : ஐ$\circ$

காரணப்பொருள் : சத்தி

விளக்கம் : மேற்கூறிய படைத்தலாகிய செயலைச் செய்வதற்கு சத்தி இருக்க வேண்டும். படைத்தலுக்குரிய சத்தி அழகியல் சத்தியாகும். அழகைக் குறிக்கும் எழுத்து 'ஐ' ஆகும். எனவே இச்சத்தியைக் குறிப்பதற்கு 'ஐ$\circ$' என்னும் வித்தெழுத்து வந்துள்ளது.

அடுத்து, வட்டத்தைச் சுற்றி, ஆறு இதழ்கள் உள்ளன. அவ்விதழ்களில் பঃ, பঃ°, ம, ய, ர, ல ஆகிய எழுத்துக்கள் உள்ளன. இவற்றுக்குரிய விளக்கங்கள் பாடல் ஐந்தி (5)லிருந்து (10) பத்துவரை கொடுக்கப்பட்டுள்ளன.

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

III. மணிபூரக ஆதார மலர்

(பாட்டு 11-20)

பாட்டு-11

'கூ', 'கா' என என் கிளை கூடி அழப்
போகா வகை மெய்ப்பொருள் பேசியவா!
நாகாசல வேலவ! நாலுகவித்
தியாகா! சுரலோக சிகாமணியே!

I பொழிப்புரை

'கூ', 'கா', என்று என் சுற்றத்தார் கூடிக்கூவி அழுகின்ற நிலையில் நான் இறந்து போகாதபடி (நீ எனக்கு) மெய்ப்பொருள் பேசியவாறு (என்னே!) திருச்செங்கோட்டில் (நாகாசலத்தில்) எழுந்தருளி இருக்கும் வேலாயுதத்தை உடையவனே! நாலு கவிதைகளால் துதிப்பவர்க்குத் தியாகியாய் இருப்பவனே! தேவர்களுக்கு முடிமணி போன்றவனே!

II விளக்கவுரை

(1) 'கூ', 'கா', என, என் கிளை கூடி அழ

'ஆ', 'ஊ' என்று அழுவதையே இங்கு அருணகிரிநாதர் 'கூ', 'கா' என்று கூறியுள்ளார். கூ, கா என்பவை 'க' கரத்தைப் பற்றி வருகிற தடித்த ஒலிகள். இவை, உலகவர் அறியாமையால் எழுப்புகின்ற ஒலிகள். குழந்தைகள் மற்றும் அறிவார்ந்தவர்கள் அழ நேர்ந்தால் ஆ, ஊ என்று அழுவர். ஆசாபாசங்கள் நிறைந்த வயதானவர்கள் அழும்போது ஒலி கூ, கா என்று வரும். 'கூ' என்பது திடுக்கிடும்போது உண்டாவது. 'கா' என்பது காப்பாற்று என்னும் பொருளைத் தருவது.

மனிதன் பிறக்கும்போதும், இறக்கும்போதும் - இரண்டு நேரங்களிலும் ஒலி உண்டாகும். முதன் முதல் உலகத்தைக் காணும்போது அச்சம் கலந்த அலறல் வரும். இறக்கும்போது சிலருக்கு ஒலி எழுப்ப முடியாமல் போனாலும், அருகிலிருப்பவர் ஒலி எழுப்புவர்.

ஆக, ஒருவர் இறந்துவிட்டால், அவருடைய சுற்றத்தார் அழுவர் என்பது குறிக்கப்பட்டது. இங்குச் சுற்றத்தாரைக் ''கிளை'' என்று அருணகிரியார் கூறுகிறார். ஒரு மரத்திலிருந்து பிரிந்து வளர்ந்த பகுதிக்குக் ''கிளை'' என்று பெயர். அதைப்போலவே, நம் குருதித் தொடர்புடைய (இரத்த சம்பந்தம் உடைய) உறவினர்களுக்கும் ''கிளை'' என்று பெயர் வந்துள்ளது. இக்கிளைஞர் பாசம் உடையவராதலால் இறந்த உடனே ஒன்று கூடி அழுவர்.

அழுவதில் பலவகை உண்டு. இறைவனை நோக்கி அழுவது தான் உயர்ந்த வகையானது. மற்றவை எல்லாம் தாழ்ந்தவையே. வருந்துதல் என்பதும் அழுகையில் அடங்கும். இறப்புச் செய்தி வந்த உடனே கிளைஞர் திடுக்குற்றுப் பிறகு ஆண்டவனை நோக்கி வேண்டுதல் (பிரார்த்தனை) செய்து கொண்டு அழுவர்.

உடலை விட்டுப் பிரிந்த உயிரைக் 'காப்பாற்றுக' என்று அழுவதனால், அவ்வுயிர் இரங்கத்தக்க நிலையில் இறந்துவிட்டது என்பது பெறப்படும். அவ்வாறு பரிதாபத்துக்குரிய நிலையில் போகக்கூடாது என்னும் தம்முடைய கருத்தை அருணகிரியார் இப்பாடலில் தெரிவிக்கின்றார். அவ்வாறு இறப்பது ஏற்றதன்று. அதற்கு மாறாக, ஞானம் பெற்று உயர்ந்த நிலையை அடைய வேண்டுவது கடமையாகும்.

மேற்கூறிய கிளைஞர் அழும்போது கூட்டமாக ஒன்றுகூடி அழுவர் என்பதனைக் ''கூடி அழ'' என்று கூறியுள்ளார். 'கூடி' என்னும் சொல்லுக்குக் குழுமி என்று பொருள். வேண்டுதல் செய்யும்போது கூடிச் செய்வது சிறப்பாகும். எதையும் கூடிச்செய் தால் சத்தி மிகும். ஆண்டவனை வேண்டும்போதும் அவ்வாறே செய்ய வேண்டும்.

ஆண்டவன் யாருக்கும் நேரடியாக வந்து அருள் செய்வதில்லை. அதிகாரிகள் (அதி தேவதைகள்) மூலமாகவோ அடியார்கள் மூலமாகவோதான் அருள்பாலிக்கின்றான். இவர்களுள் அடியார்கள்

மூலமாக அருளைப் பெறுவதே உயர் வகையானது. இந்திரன், வருணன் போன்ற அதிதேவதைகளை மகிழவைத்தால் அதாவது வழிபட்டால், அவர்கள் மழை பொழிவித்தல் போன்ற செயல்களைச் செய்வார்கள். திருமாலை மகிழ வைத்தால் காப்பாற்றுவார். உருத்திரரை வழிபட்டால் பாசத்தைப் போக்குவார். அடியார்களை வழிபட்டால் நாம் தூயோராகும்படி அருள் செய்வர். அதிதேவதை களைவிட அடியார்கள் உயர்ந்தவர்கள். உருத்திரர் போன்ற உயர்ந்த அதிகாரிகளும் அடியார்களிடம் பணிந்து நடப்பர். ஏனென்றால் அடியார்கள் இறைவனுக்கு அணுக்கமானவர்கள். அவர்கள் ஆண்ட வன் தருகின்ற விளக்கத்தைப் பெறுகின்ற பரம்பரையைச் சேர்ந்தவர் கள். அதிகாரிகளையோ, ஆண்டவனையோ, அடியார்களையோ, இவர்களுள் யாரை வணங்கினாலும், கூட்டமாகவே வழிபட வேண்டும்.

கூட்டு வழிபாடு என்னும் முறையில் பார்க்கும்போது, தமிழ் நாட்டவர் ஆகிய நாம் மிகவும் பின் தங்கியுள்ளோம். இதற்குக் காரணம் என்னவென்றால், நாம் நெருப்புக்கு, அதாவது உலக நடுக்கோட்டுக்கு (Equator) -க்கு அருகில் இருக்கின்றோம். நெருப்புக் குப் பிரிக்கும் இயல்பு உண்டு. நெருப்பு அறிவுத்தொடர்புடையது. அறிவும், ஆராய்ச்சியும் பிரித்துப்பார்க்கும் இயல்பு உடையன. எனவே இவற்றுக்கு ஒன்றுசேர்க்கும் இயல்பு இல்லை. அந்த இயல்பு அன்புக்கு மட்டும்தான் இருக்கிறது. வெம்மை காரணமாக அறிவுக்கு ஆட்பட்ட தமிழர்கள் ஒற்றுமை இல்லாதவர்களே. ஆனால் இந்த நிலை அப்படியே இருக்க வேண்டும் என்பதில்லை. இயற்கையில் எது அதிகமாகக் காய்ச்சப்படுகிறதோ அது ஒட்டும் தன்மையையும் பெறுகின்றது (இரும்பு பற்ற வைப்பு - Welding - செய்யப்படுவது போல). இந்த உண்மையை நாம் (தமிழர்கள்) உணர்ந்து, அன்பு செய்தால், ஒற்றுமையைத் தவறாமல் பெறுவோம். இதனால் அறிவும் ஆராய்ச்சியும் வேண்டாம் என்பதல்ல. அவற்றோடு அன்பும் வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது. ஒருவரை ஒருவர் கடைசிவரையில் ஆராய்ந்து கொண்டே இருக்கக்கூடாது. சிறிது ஆராய்ந்தபின் தகுதியானவர் என்று பட்டால், உடனே தம்மை ஒப்படைத்து அன்புடன் ஈடுபட வேண்டும். அவ்வாறு ஈடுபட்டால் தான் இங்கே குறிக்கப்படும் ''கூடி அழும்'' பழக்கம் வரும்.

ஆக, நாம் பல கிளைகளாகப் பிரிந்து வாழ்ந்தாலும், தேவைப் படும் நேரங்களில் சில செயல்களுக்கு ஒன்றுகூட வேண்டும்.

ஒருவர்க்கொருவர் உணர்ச்சிகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மரத்தின் கிளைகள் பிரிந்து இருந்தாலும், ஞாயிற்றின் வெப்பத்தில் காற்றை வாங்கி, அடிமரத்துக்கும் மற்ற கிளைகளுக்கும் உதவுவதைப்போல, உறவினர் இறந்தபோது ஒன்று சேர்ந்து அவர்கள் நற்கதியை அடைய வேண்டும் என்று, ஒன்றுகூடி வாழ்த்த வேண்டும்.

மேற்கூறியவாறு வாழ்த்தும்போது அழுகையும் வருவதுண்டு. அழுகை, அன்பின் விளைவாகிய உணர்ச்சிப் பெருக்கால் வருகிறது. அழுகையால் கண்ணீர் வரும். கண்ணீர் குருதியின் (இரத்தத்தின்) திரிபாகும். அதுவும் அதன் கனிந்த திரிபாகும். வாயில் எச்சிலாகவும், மூக்கில் சளியாகவும் வரும்போது குருதிக்குச் சிறப்பு இல்லை. அதுவே கண்ணில் நீராக வரும்போது உணர்வு உச்ச நிலையை எட்டுகிறது. கண்ணீர் விடுவோரின் சூழல் மிகவும் உருக்கம் அடைகிறது. இதை எல்லாம் செய்யவல்லது அன்பும் அதன் விளைவாகிய வருந்துதலும் ஆம்.

கண்ணீர்விட்டு வருந்துகின்ற உச்சநிலை வரும்போதும், மேன் மக்கள் அலறி அரற்றுவதில்லை. இப்பாடலில், எளிய உலகியலாரை எண்ணிச் சொன்னதனால் கூ, கா என்னும் அழுகை ஓசையைக் குறிப்பிட்டார்.

இனி, மக்களுள் தீயவர்கள் இறக்கும்போது, அவர்களுடைய ஆவிகளுடன் (நுண்ணுடம்புகளுடன்) பேய்கள் தொடர்ந்து போம். அவற்றை எண்ணியே பறை, மணி, பாடல், ஆடல், கூச்சல் முதலியன செய்வர். அவற்றோடு அழுகைக் கூச்சலும் வருவதனால் அப்பேய்கள் இரக்கம் கொண்டு இறந்தவரை வருத்துதல் செய்யாமல் இருக்கும். அதனால் அழுகை தீயோர் இறக்கும்போது வேண்டுவதே என்று காரணம் கூறப்படுகிறது.

என்றாலும், சான்றோர் பாடல்களைப் பாடினால், இறந்தவர்கள் எவ்வளவு கெட்டவர்களாய் இருந்தாலும், பேய்கள் அண்டமாட்டா. மற்றும் அவர்கள் நல்ல கதியைப் பெறுவர்.

(2) போகா வகை

இங்குப் போதல் என்பது ஆன்மா பருஉடலை விட்டுப் போவதாகும். எளிய உலகியலார்க்கு எமதூதர் வந்து உயிரைப் பிரிப்பர். இறையருள் பெற்ற அடியார்கள் தாம் விரும்பும்போது போவர்.

'எமன்' என்னும் சொல்லுக்கு எம்மவன் என்று பொருள். 'நமன்' என்பதற்கு நம்மவன் என்று பொருள். எம்மவன் என்பதும், நம்மவன் என்பதும், நம்முடனேயே பிறந்து கொல்லுகின்ற நோய் ஆகும். நம்மாலேயே நமக்கு மரணம் வருவதால் பெயர்கள் அவ்வாறு அமைந்தன. நோய் இல்லார் எமன் இல்லார். நோய்க்கு அடிப்படை காமம் ஆகும். காமத்துக்கு அடிப்படை அறியாமை எனப்படும் ஆணவ மலமாகும். மூச்சுப்பழக்கம், மந்திரம், பாவனை, சான்றோர் கூட்டுறவு, அருள் ஆகியவற்றால், ஒளி பரவும்போது, ஆணவ மலம் நீங்கும். அதனால் நோய் நீங்கும்; மரணம் வாராது.

ஆணவமலம் இருக்கும்வரை எமன் பின்னால் ஆன்மாக்கள் போக வேண்டி உள்ளது. அவ்வாறு ''போகா வகை''யை முருகன் அருள வேண்டுமென்பது அருணகிரியார் வேண்டுகோளாகும்.

(3) மெய்ப்பொருள் பேசியவா!

ஆணவமலம் நீங்குவதற்கு மெய்ப்பொருளை உணர வேண்டும். குருமொழி (உபதேச) வாயிலாக அதனை உணரலாம். தனித்து உபதேசம் பெறும் வாய்ப்பு இல்லாதவர்கள் சான்றோர் வாக்கு களையே உபதேசமாகக் கொள்ளலாம். அதையும் பயன் கொள்ளாத வர்களுக்குக் கடைசி நேரத்திலாவது ஓதிப் பார்க்கலாம். இறந்தவர்கள் நுண்ணுடம்பில் போராடிக்கொண்டு இருக்கும்போது சான்றோர் மொழிகளைக் கேட்கும்படிச் செய்வது நன்மை தரும். அவர்கள், அந்த நேரத்தில் சொல்வதைக் கேட்டுத் திருந்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. (சீவகன் கதையில், நாய் இறந்தபோது, அதற்கு மெய்ப்பொருளை ஓதினான் என்று வருகிறது).

மெய்ப்பொருளை வாய்விட்டுப் பேசுவதும், பிறர் காதுக்கு எட்டாதபடி வாயால் சொல்லுவதும், உபதேசத்தின் எழுத்து, கருத்து, வளர்ச்சி ஆகியவற்றைத் தியானிப்பதும் (எண்ணுவதும்) உபதேசங் களே ஆம். இவை எல்லாவற்றையும்விட, மெய்ப்பொருளில் பரவசமாய் இருந்துவிடுவது அதனை உணர்த்தும் முறைகளுள் உயர்ந்ததாகும். அருணகிரிநாதர் இத்தகைய அநுபவங்களைப் பெற்று, உலகியல் நிலையிலிருந்து உயர்த்தப்பட்டதை எண்ணி ''பேசியவா''று என்னே! என்று வியந்து பாராட்டுகிறார்.

(4) நாகாசல வேலவ!

அசலம் என்பது சலனம் (அசைவு) இல்லாதது; அதாவது மலை. நாகாசலம் என்பது நாகமலை (பாம்பு மலை). நாகமலைக்குத் திருச்செங்கோடு என்றும் பெயர் உண்டு. இம்மலை செங்குத்தாக இருப்பதனால் செங்கோடு எனப்பட்டது. இதற்குக் ''கொடிமாடச் செங்குன்றம்'' என்றும் பெயர் உண்டு. கொடி மாடம் என்பது கொடி தாங்கிய மாடமளிகைகளை உடைய பெரிய ஊர் என்பதாகும்.

இம்மலையின் அடிவாரத்தில் நாகம் இருக்கின்றது. (இங்கே பலியிடுவது வழக்கமாய் உள்ளது. சைவர்கள் பலியிடுவது கூடாது. பலியிடுவது நின்றால்தான் சைவம் தழைக்கும். எனவே இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும்). பாம்பு என்பது குண்டலியாகும். சிவபிரானுக்குக் குண்டலி எங்கும் மின்னுவதனால் உடம்பெல்லாம் பாம்பு அணியாயிற்று. குண்டலி ஏறும்போது, நஞ்சு கூட அமுதமாக மாறும். அது ஏறும்போது வளைந்து வளைந்து மேலேறும்.

முருகன் மலைகளுள், திருச்செங்கோடுதான் மிகவும் உயர மானது. 'செங்கோடு' என்னும் சொல்லுக்கு நேரான கொம்பு என்றும் பொருள் உண்டு. அது நிமிர்ந்த முதுகுத்தண்டைக் குறிக்கும். அத்தண்டின் வழியே குண்டலி சத்தி மேலே போனால் ஞானம் வரும். ஞானம் வந்தால் மற்றவர் கூடி அழும்படி இறக்க மாட்டோம். இதைத் தெரிவிக்கும்பொருட்டே, மற்ற மலைகளைக் குறிக்காமல் திருச்செங்கோட்டு (நாகாசல) முருகனை (வேலவனை) இங்கே குறிப்பிட்டார்.

(5) நாலுகவித் தியாகா!

திருச்செங்கோடு ஏறினால் ஞானம் வரும் என்று பார்த்தோம். ஞானம் வந்தபின் பாட்டுப் பாட வேண்டும் என்று தோன்றும். பாடலும் தானே வரும். ''நாலு'' என்னும் சொல் பொதுவாகப் பல என்னும் கருத்தில் வருவதுண்டு. மற்றும் கவிதைகளுள் சித்திரகவி, மதுரம், வித்தாரம், ஆசுகவி என்று பல உள்ளன. அவ்வாறே யாப்பு வகையிலும், வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்று பல உள்ளன. இப்பல்வேறு வகைகளில் பாடல்களைப் பாடினால் இறைவன் தியாக உணர்வோடு அருள்புரிவான்.

பாடல்கள் இறைவனையும், இறை இயல்புகளையும் பாடுவன வாகவே அமைய வேண்டும். சங்க காலத்தில் பாடல்கள் எல்லாம் இறையியல்புகளைப் பாடியவையாம். பாரியைப் பாடிய பாடல்கள் இறைவனைப் பாடியனவாகவே கொள்ளப்பெறும். பாரி ஒரு கண்கண்ட தெய்வமாகவே (பிரத்தியட்ச தெய்வமாகவே) விளங்கி னான். இறைவனையும் இறைத்தொண்டையும் பாடினால், சீர்திருத்தம் தானே அமையும். இடைக்காலத்தில் இந்த முறைமை கவனிக்கப்படா ததனால், தமிழும், தமிழகமும் சீர்கெட்டன.

''பாடு'' என்னும் சொல்லுக்குப் பெருமை என்று பொருள். எனவே, எது பெருமையோ அதைப் பாட வேண்டும். மற்றும் அளப்பில கீதம் சொன்னார்க்கு இறைவன் அருளுவான் என்று அப்பர்பிரானும் கூறியுள்ளார்.

ஆக, நாலுவகைக் கவிதைகளைப் பாடுவோர்க்கு முருகன் **தியாக** (முழு ஒப்படைப்பு) உள்ளத்தோடு வேண்டுவன கொடுப் பான். முருகன் ஒரு **தியாகி** (துறவி). எல்லாவற்றையும் **தியாகம் செய்து** (துறந்து)தான் அவன் பழநிக்குச் சென்றான். மற்றும் அவன் தியாகியாகிய சிவபெருமானின் மகன் ஆவான். அவனுக்கு அலங்காரங்கள் செய்யப்படுகின்றனவே என்றால் அவை பிறர் பார்த்து மகிழ்வதற்கேயன்றி அவனுக்கன்று. அவன் முழுவதும் துறந்த தியாகியேயாவான்.

(6) சுரலோக சிகாமணியே!

சுரலோகம் என்பது தேவர் உலகம். தேவர்களுள் 1) வெறும் போகம் அநுபவிப்பவர்களும் 2) இறைவனுடைய தொண்டுகளை மேற்கொள்ளும் அதிதேவதைகளும் உள்ளனர். அவ்வத்தேவர்களுக் கேற்ற பல உலகங்களும் உள்ளன. இவர்களுக்கெல்லாம் மேலான தேவர் சதாசிவர் ஆவார். இவர்கள் அனைவர்க்கும் மேலானவன் தான் இறைவன் எனப்படுபவன். எனவே இறைவன் தேவர்களின் முடிகளுக்கு மணி போன்றவன். அதாவது அவர்கள் அனைவர்க்கும் அப்பாற்பட்டவன். திருவள்ளுவர் ''வானோர்க்கு உயர்ந்த உலகம்'' என்பது மேற்கூறிய இறைவன் பதத்தைக் குறிப்பதாகும்.

ஆக, ஆதாரமலர்களில் குண்டலியை வரப்பெற்று, முதுகந்தண்டு வழி மேலேறி, ஞானம் பெற்று, பல பாடல்களைப் பாடினால்


எமன் பின்னே போக வேண்டிய நிலை வராது. இதற்கு முருகன் தியாக உணர்வோடு துணை செய்வான் என்பது இப்பாடலின் கருத்தாயிற்று.

III சக்கரம்

இப்பாடல் மணிபூரக ஆதாரத்தைச் சேர்ந்ததாகும். மணிபூரகம் மூன்றாவது ஆதாரம் ஆகும். இதற்குரிய சிறப்பெழுத்து ஐந்தெழுத்தின் இரண்டாவது எழுத்தாகிய 'ம'கரம் ஆகும். இவ்வாதாரத்தின் வடிவம் சந்திர வடிவமாகும். இதற்குப் பத்து மலர்கள் உள்ளன. இவற்றுக்குரிய எழுத்துக்கள் டஃ. டஃ°. ண, த, த°, தஃ தஃ:; ந. ப, ப°. ஆம். இந்தப் பத்து எழுத்துக்களுள் முதலாவது எழுத்தாகிய டஃ. இப்பாடலின் எழுத்தாகும்.

இப்பாடல், திடுமென ஒருவர் இறந்து போவதனால், அழிகின்ற உடம்பைக் காட்டி அவ்வாறு அழிவதற்கு மாறாக, ஞானம் பெற வேண்டும் என்று உணர்த்துகிறது. அந்த அறிவுரையை விழிப்படைந்து உணரும்படி அழுத்தமாகவும் சொல்கிறது. தமிழில் மிக முரட்டு ஒலி ''டஃ''கரம் ஆகும். அதை ஒலிக்கும்போதே ஓர் அதட்டல் உண்டாகும். ''அடா'', ''அடே'' என்னும் சொற்களில் அவ்வொலியைக் கேட்கலாம்.

இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்து ''டஃ'' கரம் ஆனதால், இதற்கான சக்கரம் வருமாறு அமைகிறது:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-12

செம்மான் மகளைத் திருடும் திருடன்,
பெம்மான், முருகன், பிறவான் இறவான்;
"சும்மா இரு சொல்லற" என்றலுமே
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே!!

I பொழிப்புரை

இறைவன், பத்தருடைய (நல்லொழுக்கத்தால் சிறப்பெய்திய) 24 தத்துவங்கள் ஒடுங்குகின்ற "மான்" என்னும் பெயர் பெற்ற 25-வது தத்துவத்தின் மிக உயர்ந்த (மகள் போன்ற) சத்தியாகிய விந்து சத்தி (வள்ளி)யைக் கவருகின்ற திருடனாவான். அவன் பெருமையுடையவன். அழகும் இளமையும் உடையவன். பிறப்பு இறப்பு இல்லாதவன். மந்திரம் ஒடுங்கிய நிலையில் அவன் என்னை அமைதியுறச் செய்தபோது ஆ! இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள்களுள் எந்தப் பொருளுமே எனக்குப் புலப்படவில்லையே!! இது என்ன வியப்பு!!!

II விளக்கவுரை

(1) செம்மான் மகளைத் திருடும் திருடன்

பெரியோர்கள் இறைவனைப் புகழ்வதைப் போலவே இகழவும் செய்வர். பத்திக்குத் திட்டும் உரிமை வருகிறது போலும்! பத்தர்கள் (அன்பிற்சிறந்த) தாய் அன்பு கொண்டு இறைவனோடு பழகுவர். தாய்க்குக் குழந்தையைத் திட்டும் உரிமை எப்போதும் உண்டு. இங்குப் பத்தராகிய அருணகிரியார் முருகனைத் திருடன் என்று வெளிப்படையாகத் திட்டுகிறார். திருட்டுத்தொழில் பெரிய பாவங்களுள் ஒன்று. அருணகிரியாரின் திட்டுதல் கோபத்தினால் வந்ததன்று. அது அன்பின் மிகுதிப்பாட்டினால் வந்ததாகும். இதற்கு "நிந்தாஸ்துதி" என்றும் பெயர் உண்டு.

உண்மையில் முருகன் ஒரு திருடன்தான். இத்திருடன் புறத்தி லுள்ள பொன்னையும், பொருளையும் திருடுபவன் அல்லன்.

புறப்பொருளைத் திருடினால் திருட்டு வெளிப்பட்டு விடும். முருகன் திருடுவது அகப் பொருளையாகும்.

திருட்டு என்பதில் இரண்டு வகை உண்டு. ஒன்று தானே திருடுவது; இரண்டு வேறொரு திருடனுக்குத் துணை போவது. முருகனுடைய திருட்டு நேரடியாகத் தானே திருடுவதாகும். அத்தொழிலில் அவன் முதல் தரமானவனாகவும் இருக்கின்றான். புராணத்தில் அவன் வள்ளியைத் திருடியதாக வரும். அவனுடைய தந்தையாகிய சிவபெருமானும் ஒரு திருடனே. அவன், ஞானசம்பந்தருடைய உள்ளத்தைத் திருடியதாக அவர் கூறியுள்ளார்.

இந்தப் பாட்டில் ''திருடும் திருடன்'' என்று இரண்டு முறை வந்ததனால், முருகன் திருடனே என்பதனை அழுத்தமாகவும், ஐயப்பாட்டுக்கு இடமின்றியும் கூறியுள்ளார் என்பது பெறப்படும்.

இனி, முருகன் எதைத் திருடினான் என்பதைப் பார்ப்போம். இருக்கின்ற 36 தத்துவங்களுள் மண் முதலாக 24 தத்துவங்களுக்குப் பிரகிருதி மாயை என்று பெயர். ஆன்மாவால் இவை எளிதாக அறிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதனால் இவற்றுக்கு ஆன்ம தத்துவங்கள் என்றும் பெயர் உண்டு. இந்த ஆன்ம தத்துவங்களை ''மான்'' என்றும் கூறுவர். பூதங்கள் 5, கன்மேந்திரியங்கள் - 5, ஞானேந்திரியங்கள் - 5, தன்மாத்திரைகள் - 5, மனம் - 1, ஆக 21 தத்துவங்களை நாம் அனைவரும் அறிவோம். மனத்துக்கு அப்பாற்பட்ட புத்தி - 1, அகங்காரம் - 1, சித்தம் - 1, ஆகிய மூன்றும் அவ்வளவு விளக்கமாகத் தெரிவதில்லை. என்றாலும் சிறிது சிரமப்பட்டு ஆராய்ந்தால் தெரியவரும். அதாவது மேற்கூறிய 24 தத்துவங்கள் நமக்குப் புலப்படுவனவாய் உள்ளன. மீதமுள்ள 12 தத்துவங்கள் நுட்பமானவையாதலால் நமக்கு எளிதில் புலப்பட மாட்டா.

இந்த நுட்பமான 12 தத்துவங்களுள் (வித்தியா தத்துவம் 7 +சுத்த தத்துவம் 5) பழக முடியாமல் மேற்கூறிய 24 தத்துவங்களில் மட்டும் பழகுகின்ற ஆன்மா ஒரு சாதாரண சிறப்பில்லாத ஆன்மா ஆகும். அது பசுத்தன்மை அல்லது மான் தன்மை மட்டும் உடையதாகும்.

மேற்கூறிய 21-வது (மனம்), 22-வது (புத்தி), 23-வது (அகங்காரம்) ஆகிய தத்துவங்கள் 24-வது ஆகிய சித்தத்தில்

அடங்கிவிடும். அந்தச்சித்தம் 25-வது தத்துவமாகிய ''மான்''-ல் (மாயையில்) ஒடுங்கும். இது வித்யா தத்துவங்கள் 7-னுள் கடைசி தத்துவம் ஆகும்.

சிவஞானபோதத்தில் ''உள்ளம்'' என்னும் ஒரு சொல் வருகிறது. அது மேற்கூறிய 24 தத்துவங்களைக் குறிக்கும். அவ்வாறே ''உள்ளம் கவர் கள்வன்'' என்று ஞானசம்பந்தர் சொன்னபோது, தாம் பெற்றிருந்த 24 தத்துவங்களின் சத்தியை ஈர்த்துக் கொண்டான் என்பது பொருள்.

ஆன்மா 'மான்' தத்துவத்தில் அதாவது 25-வது தத்துவத்தில் பழகும்போது அதற்குக் கலைஞானம் வரும். மற்றும் 32-லிருந்து 36 வரையான ஐந்து தத்துவங்களில் பழகும்போது 'அருள் நலம்' உண்டாகும்.

இனி ''மானு''க்கு அடைமொழி கொடுத்துச் ''செம்மான்'' என்று கூறியதன் விளக்கத்தைக் காண்போம். ''செம்மை'' என்பது நல்ல வண்ணமாய் இருப்பதாகும். அதாவது கண், காது முதலிய தத்துவங்கள் இருந்தால் மட்டும் போதாது. அவை நல்லவண்ணமாக செயல்படுவனவாய் (குருடு, செவிடு இல்லாமல்) இருக்கவேண்டும். அதைவிட முதன்மையாக அவை தீயவற்றுக்குப் போகாமல், நல்லவற்றுக்கே பயன்படுவனவாய் இருக்க வேண்டும். கருவிகரணங் களைப் பதப்படுத்தி நல்லபடி வாழ்ந்தால்தான் ''மான்'' தத்துவத்தில் (25-வது) தோன்றுகின்ற சத்தி நல்ல சத்தியாய் அமையும். அது செம்மையாய் அமைந்தால்தான் இறைவன் கவர (திருட) வருவான் என்பது தோன்ற ''செம்மான்'' என்று செம்மைக்கு முதன்மை கொடுத்துக் கூறியுள்ளார்.

இனி, ''மகள்'' என்னும் சொல் பொதுவாகப் பெண்பாலைக் குறிக்கும். பெண் என்பது சத்தியைக் குறிக்கும். எனவே இங்கு மானின் மகள் என்றது ஆன்மதத்துவத்தின் சத்தியைக் குறித்ததாகும். அது விந்து சத்தியாகும். அதனை இறைவன் தன் வண்ணமாக்கிக் கொள்வதுதான் ''மகளைத் திருடு''வதாகும். இறைவன் திருடுகின்ற ஆன்மாவுக்கு கலைத்தன்மை வரும், அது யோகத்தில் சிறக்கும். அதன் விளைவாக அந்த ஆன்மா சித்திகளைப் பெறும்; அதன் முதுகு நாடியில் விந்து பரவும். அதனால் மேலும் பல நன்மைகள் உண்டாகும்; புலமை வரும், கவர்ச்சி வரும். சூக்கும தத்துவங்களின் சத்திகளும் கைவரும்.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பது செம்மையான ஒழுக்கமும், ஒழுங்கான நாடிப்பழக்கமும் ஆம். செம்மைநிலை இல்லையானால் விந்து தீய போக்கில் செல்லும். அது காட்டாறு போலத் தன் சத்தியைப் பயனற்றதாக்கிவிடும். அது அழிவுக்கு வழிகோலும். நல்லதை விளைவிக்காது. இவற்றைஎல்லாம் கருத்தில் கொண்டு 'மான்' தத்துவத்தைச் ''செம்மான்'' என்று குறிப்பிட்டார்.

இனி ''திருடுவது'' எவ்வாறு என்பதை எண்ணிப்பார்ப்போம். உரிமையாளருக்குத் தெரியாத நிலையில் ஒரு பொருளை எடுத்துக் கொள்வது திருடுதல் ஆகும். ஆன்மா பத்திவயப்பட்டுத் தன்னை மறந்த நிலையில் இருக்கும்போது அருள் வந்து பதியும். தன்னுணர்வு இருக்குமானால் அருள் பதிவதில்லை. எனவே அருட்பதிவை ஆன்மா உணர இயலாது. அந்த உணர்வு இல்லாத நிலையில் விந்துவின் ஆற்றல் ஈர்க்கப்பட்டு அருளுக்கு ஆட்படுவதனால், அதனைத் திருட்டு என்றார். அருள்பதிவும், விந்து சத்தி ஈர்க்கப்படுவ தும் திருட்டுத் தொழில் ஆயிற்று.

இந்தத் திருட்டு, அசட்டுயோகக்காரர்களுக்கு நிகழ்வதில்லை. ஏனென்றால் அசட்டு யோகம் தன்முனைப்புள்ள யோகம். அது விந்து சக்தியை அதிகப்படுத்த உதவினாலும், அருள் பதிவுக்கு வழி கோலாது. அத்தகைய விந்து சத்தியை இறைவன் திருட மாட்டான். தன்முனைப்பு நீங்கி அறிவு கனிந்து அன்பு (பத்தி) மிகும்போதுதான் இறைவன் ஏற்றுக்கொள்வான். அது அமைவதற்கு நற்செயல்களில் ஈடுபட்டுச் ''சிவராஜ யோகம்'' செய்ய வேண்டும்.

இறைவனிடம் ஈடுபடுவதென்பது அவன் செயல்களில் ஈடுபடுவ தாகும். அச்செயல்கள் எவை எவை என்பதனை அப்பர் பெருமான் ''கண்காள் காண்மின்களோ'' என்னும் பாடலில் விவரித்துள்ளார். அவர் காட்டுகின்ற வழியில் மக்கள் சென்று நல்லவராவதே சிறந்த தெய்வ பத்தியாகும். அதனை நாம் அனைவரும் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

(2) பெம்மான், முருகன், பிறவான், இறவான்

பெருமான் என்பது ''பெம்மான்'' என்று வந்துள்ளது. பெருமை உடையவன் பெருமான். விந்துவின் சத்தியை ஈர்த்துக் கொள்பவன் பெருமானாகத்தான் இருப்பான். மற்றும் அவன் இளமையும் அழகும் உடையவன். அதனால் அவன் முருகன் எனப்பட்டான். அவனுக்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை.

ஆன்மாக்கள் பிறவி எடுத்ததன் பயன் பிறவியிலிருந்து விலகிக் கொள்வதேயாகும். பிறவி இருக்கும்வரை குறை இருக்கும். விந்து சத்தியைப் பெற்ற ஆன்மாக்கள் பிறப்பு இறப்பிலிருந்து விடுபடும். நாடி நரம்புகளுக்குத் தினைப்புனம் என்றும் காடு என்றும் பெயர்களுள்ளன. அவை செறிந்து பின்னிக்கிடக்கும். அவற்றின் பயனாகிய விந்துவை இந்திரியப் பறவைகள் தவறாகப் பாழ் செய்து அழிவைத் தரும். அந்த அழிவைத் தடுப்பதற்காகப் பறவைகளை ஓட்ட வேண்டும். தினைப்புனத்தில் பறவைகளை ஓட்டுவதற்குப் பக்குவம் வந்த பெண்களை அனுப்புவது நாட்டு வழக்கம். அவ்வாறே பக்குவம் வந்த ஆன்மாக்களால்தான் இந்திரியங்களை ஓட்ட முடியும். அவ்வாறு ஓட்டி விந்து சத்தியால் விளங்கும் ஆன்மாவுக்கு முருகனாகிய பெம்மான், அருள் பாலித்துப் பிறப்பு இறப்புக்களைப் போக்குவான்.

(3) 'சும்மா இரு சொல்லற'' என்றலுமே

மேற்கூறியவாறு விந்து சத்தியைக் கவர்ந்து அருள் பாலிக்கும் இறைவன் ஆன்மாவைப் ''பேசிக்கொண்டு இருக்காதே; சும்மா இரு'' என்று சொல்லுவான் (இது, அன்பு மனைவிக்கு வேலை அதிகம் கொடுக்காமல், ஓய்வு கொள்ளும்படிச் சொல்லும் நிலையை ஒக்கும்). விந்து தத்துவம் வலுப்பட்டால் நாத தத்துவம் தோன்றும். இறைவன் விந்து சத்தியைக் கவர்ந்து கொண்ட பிறகு, நாததத்துவத்தில் இரு என்று அருளுவான்.

விந்து சத்தி ஒளிசத்தி. அதைப் பெறுபவருக்குத் 'தேஜஸ்' இருக்கும். இதைப் பெறுவதற்குப் **பிரம்மசரியம்** (கட்டுப்பாடு) வேண்டும். பிரம்மசரியம் என்னும் சொல்லுக்கு இறைவனுடைய கருத்தோடு ஒட்டி ஒழுகுதல் என்று பொருள். இறைவனுடைய நோக்கங்களுள், ஆன்மாக்கள் விந்து சத்தியைச் சேமித்து உயர்வுபெற வேண்டுமென்பதோடு, குழந்தையைப் பெற வேண்டுமென்பதும் ஒன்றாகும். ஆனால் அது காம வயப்படாமல், கடமை வயப்பட்டு ஒரோ ஒருகால் நிகழுமானால் அதுவும் பிரம்மசரியமேயாகும். மேற்றும், பெண்ணால் ஆண் ஒளிபெறுதலும், ஆணால் பெண் ஒளி பெறுதலும் உண்டு. பண்டைக்காலத்துச் சான்றோர் இல்வாழ்க்கையில் இவ்வாறு இருந்தே உயர்ந்தனர் என்று அறிகின்றோம். நாயன்மார்களும் அவ்வாறே உயர்ந்துள்ளனர்.

ஒளி நிலையில் மேற்கூறியவாறு சிறப்பெய்திய ஆன்மாவுக்கு ஒலிநிலையை அடைவாயாக என்று கூறி இறைவன் அருளுகின்றான். இந்த ஒலி நிலையில் சொல் தேவைப்படுவதில்லை. இந்த நிலை ஐந்தெழுத்து நிலைக்கும் மேம்பட்டதாகும். ஏனென்றால் ஐந்தெழுத்து நிலை சொல் நிலையைச் சேர்ந்ததாகும். ஐந்தெழுத்துக்கு ''ஐந்து பதம்'' என்றே ஒரு பெயருண்டு. ''அந்தியும் நண்பகலும் (அஞ்சு) பதம் சொல்லி'' என்று வந்ததனால் இதனை அறியலாம். சொற்களுள் மிக உயர்ந்த இறுதியான அழகான சொல் ஐந்தெழுத்துதான். அந்தச் சொல்லும் அறும்படி அதாவது விரிந்த நிலையில் இல்லாமல் அதனுடைய மூலமாகிய ''ஓம்'' காரத்தில் இருக்கும்படி அருளுகிறான். ஓங்காரம் உள்ளத்துள் நிற்பதாகும். ''உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்று'' என்று மாணிக்கவாசகர் கூறுவதும் இதனையே குறிக்கும். அவ்வாறு நிற்பதனால் சும்மா இருக்கும் அமைதி நிலை வரும்.

(4) அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே

மந்திரத்தையும் ஒலிக்காமல் சும்மா இருக்கும் நிலை மாட்சிமை பொருந்திய நிலையாகும். அது வியப்பைத்தரும் நிலையாகும். இங்கு ''அம்மா'' என்பது வியப்பிடைச் சொல்லாகும். இச்சொல்லில் 'அ'கரத்தைச் சுட்டாகக் கொள்ளக்கூடாது. அருணகிரியார் தமக்கு உண்டான வியப்பு உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக ''அம்மா'' என்று கூறியுள்ளார். அந்த வியப்பு மிகுந்த நிலையில் எந்தப் பொருளுமே அவருக்குத் தெரியவில்லை. அதனால் அங்குச் சுட்டிக்காட்டுவதற்கு வாய்ப்பில்லை.


இருக்கின்ற முப்பொருள்களுள் அதாவது இறை, உயிர், தளை ஆகிய மூன்றனுள், எந்தப்பொருளும் அவருக்குத் தெரியவில்லை. ஏனென்றால் எல்லாம் அநுபவமே நினைவாக இருந்திருக்கிறார். அந்த நிலை விந்து சத்தியால் சிற்றின்பம் அநுபவிப்பதற்கு மாறாகப் பேரின்பத்தை அநுபவிக்கும் நிலையாகும். அங்கு அநுபவமும் அமைதியும் மட்டுமே நிலவும். அது தணிந்த நிலை. பொருள் ஒன்றும் தெரியாத நிலை. சும்மா இருக்கும் தணிகை நிலை. கருவிகரண வேட்கை இல்லாத சாந்த நிலை. எனவே ''பொருள் ஒன்றும் அறிந்திலனே'' என்று வியந்து கூறினார்.

III சக்கரம்

இந்தப்பாடல் விந்து சத்தியை மேலேற்றி, அருள் கைவரப் பெற்று, ஆன்மா அநுபவமும் அமைதியும் பெறுகின்ற வளர்ச்சி நிலையைக் கூறுகிறது. ஒளியை விட நுட்பமாகிய ஒலிநிலைக்கும் பின் அமைதிக்கும் உயர்ந்து செல்லுதலைக் கூறுகிறது.

கோயில் விழாத்தொடங்கும் முன் ''டமால்'' என்று வெடி வைப்பார்கள். அதன் நோக்கம் என்னவென்றால், பருமனாகிய உலகியல் நினைவுகளை விடுத்து நுட்பமாகிய தெய்வ நினைவு களைக் கொள்ள வேண்டும் என்று மக்களுக்குத் தெரிவிப்பதாகும். 'ட'கர ஒலி அதற்குப்பயன்படுவதாகும். இந்த ஒலி மிகவும் தடிப்பானது. ஒளியைவிட நுட்பமாகிய ஒலிக்குச் செல்வதுபற்றி இப்பாடல் கூறுவதால் இப்பாடலின் சிறப்பெழுத்து ''டஃ''கரம் ஆகும். இந்த எழுத்துக்கான அதிதேவதை வெள்ளியாகும். (முன்பாட லில் வந்த ''டஃ'' கரத்துக்கு அதிதேவதை வியோம தேவன் ஆகும்). வெள்ளி என்னும் பெயர் விந்துவுக்கு உண்டு. இந்த வெள்ளி நடுநாடியில் உலவுதல் வேண்டும். உலவினால் ஓங்காரமும் அமைதியும் கிட்டும்.

இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-13

முருகன், தனிவேல், முனி, நம் குரு, என்(று)
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ?
உருவன்று, அருவன்று, உளதன்று, இலதன்(று)
இருளன்று, ஒளியன்று, என நின்றதுவே!

I பொழிப்புரை

(இறைவனைக் காணவேண்டுமானால், அவன் அருளையே கண்ணாகக் கொண்டால்தான் தெரிவான்). அவன் அருளைக் கொண்டு காண இயலாதவர்கள் அவனை முருகன் என்றோ, தனிவேல் என்றோ, முனி என்றோ, நம் குரு என்றோ அறிந்து கொள்ள இயலுமோ? (அருள் கொண்டு காண இயலுமாயின்) கடவுள் உரு உடையதன்று, அருவமும் அன்று, உள்ளது அன்று இல்லாததும் அன்று, இருளும் அன்று, ஒளியும் அன்று என்னும்படி நிலைத்திருப்பதைக் காண்பார்கள்.

II விளக்கவுரை

(1) முருகன், தனிவேல், முனி, நம்குரு, என்று

இப்பாடலில் அருணகிரிநாதர், நமக்கு இறைவனைப் பல பெயர்களைக் கொண்டு அறிமுகப்படுத்துகிறார். மற்றும் இறைவனின் இயல்புகளையும் விரிவாகக் கூறியுள்ளார். அவர் அறிமுகப்படுத்தும் பெயர்களை முதலில் பார்ப்போம்.

(அ) அப்பெயர்களுள் ''முருகன்'' என்பது முதலில் வருகிறது. ''முருகு'' என்னும் சொல்லோடு அன் விகுதி சேர்ந்து ''முருகன்'' ஆயிற்று. இச்சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

(1) இச்சொல்லுக்கு நேர்ப்பொருள் தெய்வம் ஆகும். இதனை ஞானியார் சுவாமிகள் சொல்லுவது வழக்கம்.

(2) இச்சொல்லுக்கு மென்பதம் என்று ஒரு பொருள் உண்டு. இந்த மென்பதம் என்பது முருக்கு வகைகளுள் ஒன்றான தேன்குழலின் மென்மை போன்றதாகும்.

(3) கயிற்றை முருக்குதல் என்னும்போது வருகின்ற வலிவை - மிகுதிப்படுத்துதல் என்னும் கருத்தும் இதற்குப் பொருளாகும்.

(4) ஊக்கம் அல்லது முனைந்து நிற்றல் என்னும் பொருளும் இதற்கு உண்டு.

(5) மும்முரமாய் இருத்தல் என்னும் கருத்தும் இச்சொல்லுக்கு உண்டு. உரம் என்பது ஞானம், வலிவு, (நிலத்துக்கு இடுகிற) எரு என்று பொருள்படும். மற்றும் முருகு என்பதில் மூன்று உகரங்கள் உள்ளன. உகர எழுத்து சத்தியைக் குறிப்பதாகும். சத்திகளுள் இச்சா சத்தி, கிரியா சத்தி, ஞான சத்தி என்று மூன்று பிரிவுகள் உள்ளன. அந்த மூன்று பிரிவுகளும் ஒன்றுகூடித் தொழில்படுவதை முருகு என்னும் சொல் குறிக்கின்றது.

(6) செயல்திறம் படைத்த காரியஸ்தர் (Executive) என்னும் பொருளும் இச்சொல்லுக்கு உண்டு. அக்காரியஸ்தர் அறிவும் (Planning & Know how) செயல் திறமும் (Execution) மற்றும் விருப்பமும் (Initiative and Drive) உடையவராவார்.

(ஆ) அருணகிரியார் கூறுகிற அடுத்த பெயர் ''தனிவேல்'' ஆகும். 'தனி' என்பது ஒன்று என்று பொருள்படும். அது இணை இல்லாத ஒன்றாகும். இறைவன் இணை இல்லாதவன் ஆவான். வெற்றி பெறுவது வேல் எனப்பட்டது. படையே வெற்றி தந்தாலும் அதைப்பயன்படுத்தும் அறிவே வெற்றிக்கு முதல் காரணமாகும். அறிவை வளர்த்துக் கொண்டே போனால், அதனுடைய முடிந்த நிலை ஞானம் ஆகும். ஒரு பொருளை அறிந்து கொள்வது அறிவு. அது கனிந்து உயர்ந்த நிலையில் பரிமளிக்கும்போது ஞானம் எனப்படும். தனிவேல் என்பது இந்த ஞானமாகும்.

(இ) அடுத்து, இறைவனை ''முனி'' என்று கூறுகிறார். இச்சொல்லுக்கு முனைந்து தியானிப்பவர் என்று பொருளாகும். மற்றப்படி இச்சொல் வெறுப்பவரைக் குறிக்கும் என்று கொள்வது தவறாகும். முனைந்து நினைப்பது முன்னுதல். ஒன்றையே ஊக்க மாய்த் தியானிப்பவர் 'முனி'யாவார்.

தூங்குகின்றவருடைய கையில் உள்ள பொருள் தானே நழுவி, விழுந்துவிடுவது போல, முனியினிடம் உள்ள பொருளும் தானே விலகிவிடும். பட்டினத்தாரிடமிருந்து பொருள் விலகியது இந்த வகையைச் சேர்ந்ததேயாகும். துறப்பது முனிவர்க்குச் சிறப்பு. அதிலும் இளமை, அழகு, கல்வி, செல்வம் ஆகியவற்றைத் துறப்பது பெருஞ்சிறப்பு. பட்டினத்தாரும் இளமையில்தான் துறந்தார் என்றாலும் அவரே ''இளமை துறக்கவல்லேன் அல்லன்'' என்று கூறினார். அதனால் இன்னும் இளமையிலேயே துறக்கவில்லையே என்னும் அவருடைய கவலை தெரிகிறது. உலக நலம் கருதி அவ்வாறு துறப்பது சிறப்பாகும்.

பழநிமலையான் நம்மை ஆட்கொள்ளும் பொருட்டு, ஞானயோகத்தில் முனைந்து நிற்பதனால் அவன் 'முனி'யாகின்றான்.

(ஈ) அடுத்து, இறைவனை ''நம் குரு'' என்று கூறியுள்ளார். துறந்தவரே குருமார் ஆவர். தெய்வ நலம் செறிந்தவர் குரு. ஒப்பற்ற தியானத்தில் இருப்பவர் குரு. ஒருவர்க்கு மேல் பலருக்கு ஆசிரியராய் விளங்குபவர் குரு. காரிய உருவாய் இருப்பவர் குரு. தட்சிணாமூர்த்தி நால்வர்க்குக் குருவாய் விளங்கினார். அவர் அனைவருக்குமே குரு ஆவார்.

இறைவன் மேற்கூறிய பண்புகளை உடையவனாவான். ஆன்மாக்களை மேலேற்றுவதே (அதாவது பேரின்பத்தில் சேர்ப்பதே) அவனுடைய வேலையாகும்.

(2) அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ?

மேற்கூறிய இறை இயல்புகளை எவ்வாறு அறிவது? புறப்பண்டங்களைப் புலன்களின் துணைகொண்டு அறிவால் அறிகிறோம். ஓர் ஆன்மாவை அதன் பண்பாகிய அன்பால் அறிகிறோம். அவ்வாறே ஆண்டவனை அறிய வேண்டுமானால் அவன் பண்பாகிய அருளால்தான் அறிய முடியும். இந்த நுட்பத்தை அறியாதவர்கள், பண்ட அறிவால் அவனை ஆராய்ந்து பார்ப்பார்கள். அறிவும் ஒரு சடப்பொருளாதலால் சடப்பொருளுக்கு மேற்பட்டதை அது காட்டாது.

அவ்வாறே அன்புக்கு மேற்பட்டதை அதனால் அறிய முடியாது.

அன்புக்கு மேற்பட்டதும் ஒன்று உண்டு. அது அருள் எனப்படும். அருள், கருணை, இரக்கம் என்பவை உயிரின் இயல்புகளல்ல. அவை இறை இயல்புகள். இறைவன் ஆன்மாவில் பதிந்தால்தான், ஆன்மாவுக்கு அவை அமையும். இந்த நுட்பமான உண்மையை விளக்கிக் காட்டியவர் திருவள்ளுவர் ஒருவரே ஆவார். ''அருளென்னும் அன்பீன் குழவி'' என்று கூறி விளக்கினார். சிலர் அன்பைக் காய் என்றும் அது கனிந்தால் அருள் ஆகும் என்றும் கூறுவர். அவ்வாறு கூறுவது சரியன்று. தந்தையின் சேர்க்கையால்தான் குழவி தோன்றுகின்றது. அதுபோல, அருளுடைய இறைவனின் சேர்க்கை அன்பினை உடைய ஆன்மாவுக்குக் கிடைத்தால்தான் அருள் என்னும் குழவி பிறக்கும். குழந்தையை வளர்க்கும் தன்மை தாய்க்கு இருந்தாலும், அக்குழந்தை தந்தைக்கே உரியதாகும். அதுபோல அன்புக்கு அருளை வளர்க்கும் தன்மைதான் இருக்கிறது. ஆனால் அருள் இறைவனுக்கே உரியது. அதாவது தாய் வளர்க்கும் இடம்தானே தவிர, உரிமை அவளுக்கில்லை; அது தந்தையையே சாரும். ஆக அருளுக்கு உரியவன் இறைவனே; உயிரன்று; அருள் பிறக்க வேண்டுமானால் இறைசத்தி ஆன்மாவின் அன்பில் கலக்க வேண்டும்.

எனவே, அருளால் செய்யக்கூடிய வேலையை அதற்கு உரிமை உடைய இறைவனே செய்தால்தான் நடைபெறும். அதனாலேயே மாணிக்கவாசகர் ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்று தெரிவித்தார்.

மேற்கூறியவற்றால் பண்டத்தை அறிவும், ஆன்மாவை அன்பும், இறைவனை அருளும்தான் காட்டவல்லன என்பது விளக்கப்பட்டது. எனவே இறையருள் காட்டாமல் இறைவனைக் காண முடியாது. வேறு வகையில் யாரேனும் முயன்றால் இடர்கள் வருமேயன்றி தெளிவு வராது. அவ்வாறு இடர்ப்பட்டோர் பலராவர். புத்தர்பெரு மான் இறைவனை உண்டென்றும் சொல்லவில்லை; இல்லை என்றும் சொல்லவில்லை. சங்கரர் சொன்னதற்கு அவர் வழி வந்தவர் வேறு பொருள்களைக் கொண்டுவிட்டனர். உண்மையான விளக்கம் உள்ள நாட்டிலும், குழப்பமான கருத்துக்கள் வந்து புகுகின்றன. இந்த நிலைமையை உணர்ந்து தெளிவிக்க வேண்டும். சத்தி (அருள்)யைக் கொண்டு அப்பனை அறிய வேண்டுமேயன்றி வேறு எந்த வகையிலும் அவனை அறிய இயலாது.

மேற்கூறிய இறையருளைப் பெற்று இறைவனைக் கண்டவர்களே சைவ அடியார்கள். அவர்களே மன்பதையை நல்வழிக்குச் செலுத்தவல்லவர்கள். அத்தகைய அடியார்கள் சென்னை நகரின் எல்லையில் இருவர் இருக்கின்றனர். அவர்கள் பட்டினத்தாரும், திருவள்ளுவரும் ஆவர். பட்டினத்தார் சைவத்துக்கே சிறப்பானவர். திருவள்ளுவர் எல்லார்க்கும் பொதுவானவர். அவர் எல்லாரையும் தழுவிப்பேசுவார். அவரை எல்லோரும் பாராட்டியுள்ளனர்.

அவ்வாறு பாராட்டியவர்களுள் நக்கீரர் ஒருவர். நக்கீரர் இறைவனை நேரே கண்டவர். அவர் தமிழ்ச்சங்கத்தின் தலைவராய் இருந்தவர். சங்கத்தில் பல சான்றோர்கள் புலவர்களாய் வீற்றிருந்து தமிழ் ஆய்ந்தனர். அப்புலவர்கள் அனைவரும் மகரிஷிகள் ஆவர். அந்த மகரிஷிகளுக்கெல்லாம் மகரிஷியாய் விளங்கியவர் நக்கீரர். சங்கச் சான்றோர் அனைவரும் திருவள்ளுவரைப் பாராட்டியுள்ளனர். அவர்களின் தலைவராகிய நக்கீரரும் பாராட்டியுள்ளார். நக்கீரர் காலத்திலும் அவருக்குப் பிற்காலத்திலும் திருவள்ளுவரை மறுத்தவர் யாரும் இல்லை.

சமயாசாரியர்களுள் சுந்தரர் ஒருவராவார். அவர் தில்லைவாழ் அந்தணரைப் பாராட்டியுள்ளார். அப்பரம்பரையைச் சேர்ந்த உமாபதி சிவாச்சாரியார் திருவள்ளுவரைச் சிறப்பித்துள்ளார்.

ஆக, திருவள்ளுவரைப் போன்ற அருள் பெற்ற குருமார்களே இறைவனைக் காணக்கூடிய வழிகளைச் சொல்லக்கூடியவராவர்.

நம் அறிவு கொண்டு குருவைத் தேடுதல் கூடாது. நமக்கு அருள் செய்ய முருகனே குருவாய் வருவான். குரு வரும் நிகழ்ச்சி அவன் அருளால் தானாகவே நடைபெறும். அது நடைபெறுவதற்கு நமக்குப் பக்குவம்தான் இன்னமும் வரவில்லை.

நமக்குப் பக்குவம் வரவில்லையே என்று ஏங்குவது வளர்ச்சிக்கு வழிகோலும். இறைவன் நாம் பக்குவம் பெறுவதை எந்த நேரமும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றான். அவன் அருள் ததும்பிக் கொண்டு காத்திருக்கிறது. குழந்தைக்கு எப்பொழுது எழுத்துப்பேறு செய்விக்கலாம் என்று நாம் ஆர்வமாய் இருக்கின்றோம். ஆனால் குழந்தைக்குப் பக்குவம் வரவில்லையானால் நம்மால் என்ன செய்ய முடிகிறது? அதற்காகக் காத்துக் கொண்டுதானே இருக்கிறோம். அது போலவே இறையருளும் நமக்காகக் காத்திருக்கின்றது.

மாணிக்கவாசகருக்குக் குரு வருவது தெரியாது. தெரிந்திருந் தால் அவர் குதிரை வாங்கப்போய் இருக்க மாட்டார். மாறாகக் குருவை வரவேற்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருந்திருப்பார். அவர் குருவை எதிர்பார்க்கவில்லையானாலும், இறை நாட்டத்தோடு நல்ல துறைகளில் பக்குவப்பட்டுக்கொண்டு இருந்தார். இறைவனை நோக்கித் தாகமாய் இருந்தார். அதனால் அவருக்கு அருள் கிட்டியது. அத்தகைய ''அருள் கொண்டு அறியார்'' எதைக்காணப் போகிறார் கள்? அவர்களால் இறைவனைக் காண இயலாது.

''அருள் கொண்டு அறியார்'' என்னும் தொடர் குரு - மாணவ நிலை அமைவதன் அருமைப்பாட்டைக் குறிக்கின்றது. அருள் வந்தால் குரு வருவார். மாணவருடைய தகுதிப்பாடு வந்தால் அருள் தானே வரும்.

(3) உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று, இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே

முன் வரியில் அருள் கொண்டு அறியாமல் வேறு வகையில் இறைவனை அறிய இயலாது என்பதனைத் தெளிவுபடுத்தினார்.

அருள் கொண்டு அறிந்தோர் பலரும் தம்மால் இயன்ற அளவு விளக்கியுள்ளனர். அருணகிரிநாதரும் பின்னிரண்டு வரிகளில் தாம் அறிந்தவற்றை விளக்கியுள்ளார்.

எந்தக் கருத்தையும் உடன்பாட்டில் சொல்லுவதைவிட எதிர்ம றையில் சொல்லுவது உறுதிப்பாட்டைத் தரும். அந்த வகையில் இறைவன் உருவுடையவன் அல்லன் என்று கூறுகிறார்.

உரு என்பது கண்ணுக்குத் தெரிகின்ற பருமனான ஒரு வடிவமாகும். அது நம் கைக்கு எட்டக் கூடியதும் ஆகும். ஆனால் இறைவன் நம் கண்ணுக்குத் தெரியாதவன். கைக்கும் எட்டாதவன். கண்ணால் பார்க்கக்கூடியதும் கையால் பற்றக்கூடியதும் ஆகிய பொருள் எதுவாயினும் ஒரு காலத்தில் மாற்றம் (அழிவு) பெறும். ஆனால் இறைவனுக்கு அழிவென்பதில்லை. எனவே அவன் 'உருவன்று' என்று கூறினார்.

உருவம் அன்று என்ற உடனே அருவமானவனோ என்று எண்ணத் தோன்றும். ஆனால் அவன் அருவமானவனும் அல்லன். நம்மைச் சூழ்ந்துள்ள ஐம்பூதங்களுள் காற்றும் வானும் அருவ

மானவை. காற்று உலகெங்கும் பரவி இருந்தாலும், உயரத்தில், ஒரு குறிப்பிட்ட தூரத்துக்குப் பிறகு அது இல்லாத நிலை வருகின்றது. அதாவது அருவப் பொருளுக்கும் ஒரு எல்லை உண்டு. இறைவன் அருவப் பொருள் என்று கொண்டால், அவன் ஒரு வரம்புக்கு உட்பட்டவனாகி விடுவான். ஆனால் அவன் வரம்பில்லாதவன். எனவே அவனை 'அரு அன்று' என்று கூறினார்.

இனி, அவன் எங்கும், எதிலும் கலந்திருந்தாலும், நேரே காண இயலவில்லை; மற்றவர்களுக்குக் காட்டவும் முடியவில்லை. அவன் ஒரு இல் பொருள்போலத் தோன்றாமல் இருக்கின்றான். எனவே அவனை 'உளதன்று' என்றார்.

உளதன்று என்றதனால், அவனை இல்லை என்றே சொல்லி விடலாமே எனின், அவ்வாறு சொல்லவும் இயலவில்லை. ஏனென் றால், அவனுடைய இருப்பை நாம் அனைவரும் உணர்கின்றோம்.

காலையில் ஞாயிறு தோன்றுவதும், மாலையில் மறைவதும், இதைப்போன்ற வியக்கத்தக்க எண்ணிலடங்காத செயல்கள் அன்றா டம் நடைபெறுவதையும் எண்ணிப் பார்க்கும்போது, ஏதோ ஓர் அறிவார்ந்த பொருள் இருந்துகொண்டு இவற்றை எல்லாம் இயக்கிக் கொண்டு வருகின்றது என்பது விளங்கும்.

இவை எல்லாம் இயற்கையாய் நடைபெற்று வருகின்றன என்று யாரேனும் எண்ணுவரானால், அந்த இயற்கை எப்படி வந்தது என்னும் கேள்வி எழும். இயற்கையானாலும் வேறு எந்தப் பொருளானாலும், ஒருவர் செய்யாமல் தானே தோன்றுவதில்லை. எனவே இவற்றை எல்லாம் இயக்குகின்ற இறைவன் ஒருவன் இருக்க வேண்டுவது கட்டாய(அவசிய)மாகின்றது. எனவே அவனை ''இலதன்று'' என்று கூறினார்.

அடுத்து, அவன் இல்லாத பொருளன்று என்றால், ஏன் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் இருக்கின்றான்? நாம் காண இயலாதபடி இருட்டாய் இருக்கின்றானா? எனின், அவன் இருளாய் இருப்பவ னும் அல்லன். அவனே ஞாயிறு முதற்கொண்டு எல்லா ஒளிகளுக்கும் அடிப்படையாய் இருக்கின்றான். அவனை ஒளிவண்ணன் என்றும், தீவண்ணன் என்றும் பெரியோர்கள் போற்றுகின்றனர். எனவே அவனை ''இருளன்று'' என்றார்.

அவன் இருளல்லாதபோது ஒளி என்றே கூறிவிடலாமே என்றால், அதுவும் சரியில்லை. ஏனெனின், மற்ற ஒளிப்பண்டங் களைப்போல அவன் தன் ஒளியைக் காட்டுவதில்லை. அவ்வாறு காட்டி நாமும் காண்போமானால், மீண்டும் அவன் மாற்றத்துக்கு (அழிவுக்கு) உட்பட்டவனாகிவிடுவான். ஆனால் அவன் என்றும் உள்ளவன். எனவே அவனை ''ஒளி அன்று'' என்றார்.

இவ்வாறு அவனுடைய இயல்புகளைச் சொல்லிக்கொண்டே போனால், வரம்பில்லாமல், வாக்குக்கு எட்டாதவனாய் இருப்பது விளங்கும். அவன் விளக்க முடியாதவனானாலும், நிலைத்திருப்பவ னாவான் என்று கூறி முடித்துக் கொண்டார்.

III சக்கரம்

இப்பாடலில் அருணகிரியார் இறையியல்புகளைக் கூறியுள்ளார். இந்த இயல்புகளும், சந்திரனின் இயல்புகளும் ஒன்றுபோல அமைந்துள்ளன. அதாவது அமாவாசைக் காலங்களில், சந்திரன் 'உருவன்று', 'உளதன்று' 'ஒளியன்று' என்னும்படியும், பௌர்ணமிக் காலங்களில் 'அருவன்று', 'இலதன்று', 'இருளன்று' என்னும்படியும் உள்ளது.


சந்திரனின் உருவம் மணிபூரக ஆதார சக்கரத்துக்கு வடிவ மாகும். அந்த வடிவம் பிறைச்சந்திரன் போன்றது. அவ்வடிவம் மணிபூரக சக்கரத்துக்கு அமைந்துள்ளதை இப்பாடல் விளக்குவதாய் உள்ளது. சந்திரனைக் குறிக்கும் எழுத்து 'ம'கரம் ஆகும். அதனால் சந்திர வடிவத்துக்கு நடுவில் 'ம'கரம் வருகின்றது.

சந்திரனின் ஒளி தண்மையானது, இனிமையானது, கனிந்தது. சந்திர ஒளியில் தியானிப்பது ஞானம் பெறுவதற்கு ஏற்றதாகும்.

சந்திரயோகம் புரிந்து ஞானம் பெறுவோர்க்கு ஒரு மணியோசை கேட்கும். மணி ஓசை என்பது நாதம் ஆகும். நாதத்தைக் குறிக்கும் எழுத்து 'ண'கரம் ஆகும். எனவே இப்பாடலுக்குச் சிறப்பெழுத்து 'ண' கரம் ஆகும்.

நாதம் நுண்பொருளாதலால் உச்சியில் இருக்கும். விந்து மூலாதாரத்திலிருந்து மேலேறும்போது, நாதம் கீழே இறங்கிவந்து அழைத்துச் செல்லும். அவ்வாறு கீழிறங்கும்போது மணிபூரகத்தில் நாத ஒலி கேட்கும்.

இப்பாடலின் சிறப்பெழுத்தாகிய 'ண' கரத்தைக் கொண்ட சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-14

கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று,
உய்வாய் மனனே! ஒழிவாய்; ஒழிவாய்.
மெய், வாய், விழி நாசியொடும், செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே.

I பொழிப்புரை

மனமே! கையில் ஒளி பொருந்திய வேலேந்திய முருகனின் திருவடிகளைப் பெற்று உயர்ந்து போவாயாக. மெய், வாய், கண், மூக்கு, காது என்னும் ஐந்து வழிகளில் (உன்னை அழைத்துச் செல்கின்ற) அவாவினை (நீ) ஒழிப்பாயாக. ஒழித்து உய்வு பெறுவாயாக.

II விளக்கவுரை

(1) கைவாய் கதிர்வேல் முருகன்

அருணகிரியார் இந்தப் பாடலில் மற்றுமோர் அறிவுரையைக் கூறுகின்றார். அதாவது கையில் வேலேந்திய முருகனுடைய திருவடிகளைப் பெற்று உய்ந்து போவாயாக என்று கூறுகிறார்.

முருகனைப்பற்றி முன் பாடலில் பார்த்தோம். அவன் கதிர்வேல் உடையவன். அத்திருஉரு உலோகத்தில் அவ்வாறு செய்யப்பட்டிருப் பினும், பத்தி மிகுந்த அடியார்களுக்கு தியானத்தில் தோன்றும். அதே திருஉரு புறத்தே கண்ணுக்குத் தெரியும்படித் தோன்ற வேண்டும் என்று அவர்கள் வேண்டினாலும் அவ்வாறே தோன்றும். ஆனால் புறத்தில் தோன்றுவதைவிட அகத்தில் தோன்றுவதுதான் சிறப்புடையது. ஏனெனின் கண்முன் தோன்றுவது உடனே மறைந்துவிடும். மனத்தில் தோன்றுவது சில காலம் நிற்கும். ஆன்ம உணர்வில் தோன்றுவது என்றும் நிலைக்கும். ஆன்ம உணர்வில் தோன்றுவது தான் சரியான வடிவமும் ஆகும். அதுவே "அருளுரு" எனப்படுகிறது.

இறைவனுக்கு உருவம் இல்லை என்றாலும் பத்தர்களுக்காக அருள் உருவைக் கொள்கிறான். அருள் உருவைக்கொள்வதனால்

அவன் உள்பொருள் என்பது புலப்படும். பொருள் என்று ஒன்று இருந்தால் அதற்குச் சத்தி என்று ஒன்று உண்டு. சத்தி என்பது சும்மா இருப்பதில்லை. ஏதோ ஒரு வேலையைச் செய்து கொண்டே இருக்கும். இங்குக் கதிர்வேல் ஏந்திய முருகன் ஆன்மாக்களுக்குள்ள அழுக்கைப் போக்கி முத்தியைத் தருகின்றான். அதுதான் அவனுடைய வேலை. அது எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பார்ப்போம்:

''கதிர்'' என்பது ஒளியைக் குறிக்கும். அதிலும் ஞாயிற்றொளியைச் சிறப்பாகக் குறிக்கும். ''தண் கதிர்'' என்னும்போது அது நிலவொளியாகின்றது. ''தண்'' இல்லாமல் வெறும் கதிர் என்பது ஒளியோடு ஞாயிற்றின் வெப்பத்தையும் குறிக்கும். ஞாயிற்றின் வெப்பம் அழுக்கைப் போக்கவல்லது. எனவே ''கதிர்வேல்'' என்பது அழுக்கைப் போக்கக்கூடிய வேல் ஆயிற்று. ''வேல்'' என்பது ஞானம் என்பதனை முன்னமே பார்த்துள்ளோம். ஆக, கதிர்வேல், நம் அழுக்குகளைப் போக்கி, நம்மைத் திருத்தி, வெற்றி கொள்கின்ற ஞானம் ஆகும்.

''கைவாய்'' என்பது கையில் அல்லது கையிடத்து என்று பொருள்படும். (''வாய்'' என்பது ஏழாம் உருபு). முருகன், **கையில்** வேல் உடையவன் என்று அருணகிரியார் குறிப்பிடுவதில் ஒரு சிறப்பு இருக்கிறது. அதுபற்றிச் சிறிது பார்ப்போம்:

''கை'' என்னும் சொல்லுக்கு ''ஒழுக்கம்'' என்னும் பொருளும் உண்டு. அதனால் முருகன் ஒழுக்கத்தைத் திருத்துபவன் என்னும் கருத்தும் அதில் உள்ளது. ஒழுக்கம் என்பது நடை, செல்லுதல், செயல் என்று பொருள்படும்.

நாம் செய்யும் செயல்கள் திருத்தமுற்று நல்லனவாய் அமையுமானால் ஒழுக்கம் வந்ததாகப் பொருளாகும். ஒழுக்கம் வராமல் சமயத்துறையில் முன்னேற இயலாது. எனவே சமயத்தில் செயல் முதலிடம் பெறுகிறது. ''நான் ஏதும் தவறு செய்வதில்லை'' என்று சொல்பவரை ஒழுக்கம் உடையவர் என்று சொல்வதற்கில்லை. தவறு செய்யாமையோடு நன்மையும் செய்ய வேண்டும். தீமையும் செய்யாமல் நன்மையும் செய்யாமல் ஒருவர் இருப்பாரானால் அவர் உணர்ச்சியற்றவர் என்று ஆகிவிடும். (இந்த இடத்தில் ''சும்மா இருத்தல்'' என்னும் அதீத நிலையை இதோடு ஒப்பிடக்கூடாது. அந்த நிலையின் பொருள் வேறு). ''நான் பொய் சொல்ல

மாட்டேன்'' என்று சொன்னால் மட்டும் போதாது. மெய்யையும் சொல்ல வேண்டும். அவ்வாறே எல்லாச் செயல்களிலும் நல்லதைச் செய்வதனால்தான் ஒழுக்கம் அமையும். செய்கைகளுள் மிக உயர்ந்த செயல். பலன் கருதாத ஈகையாகும். செயல் என்று சொல்லும்போது அதில் நல்லதும் கெட்டதும் ஒன்றை ஒன்று அவாவி நிற்கும். ஒன்று நடைபெறாதபோது மற்றொன்று நடைபெறும். இந்த நிலையை நன்கு புரிந்து கொண்டு நற்செயல்களை இடையீடின்றி செய்யவேண்டும். இதை உணர்த்தவே **கையில்** வேலேந்தினான் முருகன் என்று கூறினார்.

('கை. செயலுக்குச் சிறப்புத் தருவதனால் அதனைத் தெலுங்கர் ''செய்'' என்றே வழங்குகின்றனர். இவ்வாறு பல தமிழ்ச்சொற்கள் அப்படியே அம்மொழியில் வழங்கிவருகின்றன. தமிழை விளக்குவது தெலுங்கு. தவிர. ஒரு மொழியின் கொச்சைச் சொற்கள் நாளடைவில் வேறு மொழியாவதுண்டு. அவ்வாறு பல மொழிகள் இந்தியாவில் தோன்றிவிட்டன. வேற்றவரோடு கலக்கும்போது வரம்பு கடந்து கலப்பதனால் இவ்வாறு மொழிகளின் எண்ணிக்கை வளருகிறது.)

ஆக முருகன் ஒளி பொருந்திய ஞானத்தால் ஆன்மாக்களின் அழுக்கைப் போக்குகிறான் என்பது குறிக்கப்பட்டது.

(2) கழல் பெற்று

''கழல்'' என்பது வீரர்கள் தங்கள் காலில் அணியும் மணியாகும். அச்சொல் காலுக்கே (அதாவது திருவடிக்கே) ஆகு பெயராகிவிட்டது. வீரர்கள் தாம் மேற்கொள்ளும் செயல்களை நிறைவேற்றாமல் விட மாட்டார்கள். முருகனாகிய வீரனும், ஆன்மாக்களின் அழுக்கைப் போக்குவது என்னும் செயலைச் செய்து வெற்றி கொள்வான். அந்த அழுக்கை இனிமையாகவே போக்கிவிடுவான்.

'கழல்' ஞானத்தைக் குறிக்கும். ஆனால் இப்பாடலில் ''வேல்'' ஞானத்தைக் குறிக்கும் என்று முன்னமே தெரிவித்ததனால் ''கழல்'' இங்கு எளிமையைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். கழல் என்னும் சொல்லுக்கு. ஞானம், திருவடி என்பதோடு எளிமை. கருணை என்னும் பொருள்களும் உள்ளன. இச்சொற்கள் அனைத்தும் ஒரே கருத்தை உடையவை.

ஆக இறைவனுடைய கருணையை நாம் பெற வேண்டும் என்பது குறிக்கப்பட்டது.

(3) உய்வாய் மனனே!

''உய்வாய்'' என்பது ''பிழைத்துப் போவாய்'' என்பதாகும். முருகனுடைய திருவருளைப் பெற்று அழுக்கு நீங்கப் பெற்றால் நாம் உய்ந்துபோகலாம்.

. உய்ய வேண்டுவது உயிர் ஆகும். உய்ந்துபோதற்குரியது என்பதனாலேயே அதற்கு ''உயிர்'' என்ற பெயர் வந்தது. உய்ந்து போவதற்குச் சில செய்முறைகள் தேவைப்படுகின்றன. அவற்றுள் ஒன்று மூச்சைச் சரியாக வைத்துக்கொண்டு உயிர் ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதாகும். மூச்சைச் சரியாக வைத்துக் கொள்வதற்கு அதனை முறைப்படி வாங்குதல் (பூரகம்), நிறுத்துதல் (கும்பகம்), விடுதல் (ரேசகம்), ஆகியவற்றில் பயில வேண்டும். இவற்றுள் பழகுவது முதல் நிலையாகும். இப்பழக்கத்துக்கு மூக்கைப் பிடிக்கும் போது பெருவிரலையும் மோதிரவிரலையும் பயன்படுத்துவர். (ஐந்து விரல்களில் ஒவ்வொன்றும் என்ன செயலைச் செய்யும் என்பதும் அவற்றுக்கு ஐந்தெழுத்தில் எந்த எழுத்து உரியது என்பதும் வகுக்கப்பட்டுள்ளது. 1. பெருவிரல் மற்ற நான்கு விரல்களுக்கும் ஊட்டம் தருவதாகும். இதற்குரிய எழுத்து 'சி'கரம் ஆகும். 2. சுட்டு விரல் - இது சுட்டிக்காட்ட உதவுவது. இதற்குரிய எழுத்து 'வ'கரம். 3. நடுவிரல் - இது குண்டலியைக் குறிக்கும். இதற்குரிய எழுத்து ''ய''கரம். 4. மோதிரவிரல் - நல்ல செயல்களைத் தொடங்கும் முன் இதற்கு பவித்திரம் இடுவர். இது நன்மை, அழகு மற்றும் காப்புக்கு உரியது. இதற்குரிய எழுத்து ''ந''கரம். 5. சுண்டு விரல் - இதற்கு விஷவிரல் என்று பெயர். நற்செயல்களுக்கு இதனை நீக்கிவிடுவர். ஆனால் திருமணத்தின்போது மணமகனும் மணமகளும் இதனால் இணைக்கப்படுவர். விஷமும் விஷமும் சேர்ந்து அமுதமாக மாறுகிறது என்பது அதன் கருத்தாகும். இதற்குரிய எழுத்து 'ம' கரம்

மூச்சுப்பழக்கத்தில் இரண்டாவது படியாக, நிறுத்திய மூச்சைப் பரப்புதல் வேண்டும். அந்தப் பரப்பும் செயலில் மூன்றுவகை உண்டு. இம்மூன்றும் மூக்குக்கு மேலே நிகழ்பவை. அவை:

1) பந்தனம்: இது மூக்கு முதல் உச்சிவரை காற்றை நிறுத்துவதாகும்.

2) **தம்பனம்:** இது உச்சியிலிருந்து உடல் எங்கும் காற்றைப் பரப்புவதாகும்.

3) **தாபனம்:** பரப்பியதை அப்படியே நிலைபெறுத்துவதாகும்.

மேற்கூறிய மூச்சுப்பழக்கத்தோடு பாவனையும் செய்ய வேண்டும். இறைசத்தி உருவமில்லாத (நிராகார) ஞான வெளியிலிருந்து மனவெளிக்கும் அங்கிருந்து நீதிவெளிக்கும் மேலும் இறங்கிக் காற்று, தீ, நீர், மண் ஆகியவற்றுக்கும் வருவதாகவும் நம்மிடம் பதிவதாகவும் எண்ண வேண்டும். இந்த பாவனைகளை அடிக்கடியும் செய்ய வேண்டும். அதனால், அவ்வப்போது குறைகின்ற சத்தியை மீண்டும் மீண்டும் பெறலாம்.

மேற்கூறிய மூச்சுப்பழக்கத்தைச் செய்வதற்கு மனம் ஐம்புலன் வழிச்செல்லாமல் தன் வயப்பட வேண்டும். அதற்கு அறிவு அடங்கி அன்பு வளர வேண்டும். அதற்கு ஒரே பொருளாகிய இறைவனிடம் பற்று வளர வேண்டும். இப்பற்று வளருமானால், மற்றவை எல்லாம் தாமே மறந்து விடும்.

ஆக நாம் உய்வதற்கு மனம் ஐம்புலன் வழிச்செல்லாமல் இறைவனைப் பற்ற வேண்டும். இதனைச் செய்யும்படி அருணகிரி யார் மனத்துக்கு அறிவுரை கூறினார்.

மனம், கருவி கரணங்களின் தலைமை நிலையைப் பெற்றதாகும். புறக்கருவிகளேயன்றி அகக்கருவிகளும் மனத்தில் வந்து தங்கும். எனவே மனம் தத்துவக் கூட்டத்தைக் குறிக்கும். மனம் அறிவுரை யைக்கேட்டால் ஆன்மா உய்ந்து போகலாம். அதனாலேயே அருணகிரியார் மனத்தை விளித்து இதனைத் தெரிவித்தார். மனம் இருக்கும் இடம் மூக்கின் அடியாகும். (ஆன்ம ஞானம் உச்சியில் இருக்கும். தனித்த நிலையில் உயிருக்கு ''ஆன்மா'' என்று பெயர். அதுவே உடம்போடு சம்பந்தப்பட்டபோது அதனைச் 'சீவன்' என்று சொல்லுவர்.

(4) மெய்,வாய், விழி, நாசியொடும், செவியாம் ஐவாய் வழி செல்லும் அவாவினையே ஒழிவாய்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் ஆன்ம தத்துவங்களைச் சேர்ந்தவை. 1) மெய் ஓரறிவைச் சேர்ந்தது. 2) வாய் இரண்டாம் அறிவைச் சேர்ந்தது. 3) மூக்கு மூன்றாம்

அறிவைச் சேர்ந்தது. 4) கண் நான்காம் அறிவைச் சேர்ந்தது. 5) செவி ஐந்தாம் அறிவைச் சேர்ந்தது. ஆறாம் அறிவாகிய மனத்தை விளித்து, ''நீ மற்ற ஐந்தின் வழியே போகாதே'' என்று கூறுகிறார்.

ஐந்தின் வழியே மனம் செல்ல, அதன் வழியே செல்லும் ஆன்மா, அநுபவிக்கும்போது அதற்கு நிறைவு ஏற்படாமல் அவா தோன்றிவிடும். ''அவா'' என்பது ஆசை. அது பண்டங்களின் சேர்க்கையால் உண்டாகின்ற மனத்தின் தீவிர நிலையாகும். அத்தீவிரம் பாசத்தின் இயல்பாகும். ஆசை முதலில் தோன்றும்போது, வாய் தானே திறக்கும். வாய் திறந்தால் 'அ'கர ஒலி தோன்றும். (இது மொழி இலக்கணம் கூறும் உண்மையாகும். அநுபவத்திலும் இதை நாம் அறிவோம்).ஒரு முறை பாசப்பொருளைத் துய்த்தபிறகு, அடுத்த முறையும் துய்க்க வேண்டும் என்னும் எண்ணம் வரும். அப்போது வாய் முதலில் திறந்ததைவிடப் பெரிதாகத் திறக்கும். அதனால் 'அ'கரம் நீண்டு 'ஆ'காரம் தோன்றும். அடுத்த முறை துய்த்தலும் மீண்டும் ஆசை கொள்ளுதலும் ஆக, ஒன்றன் பின் ஒன்று தொடர்ந்து செல்லும். அதனால் திறந்த வாய் மூடாமல் இருக்கும். இந்த ''அ''கரமும் ''ஆ''காரமும் சேர்ந்ததுவே ''அவா'' என்னும் சொல்லாகும். இலக்கணப்படி ''அ''கரத்தோடு ''ஆ''காரம் சேரும்போது இடையில் ''வ்'' என்னும் மெய்யெழுத்து வரும். எனவே (அ+ஆ) ''அவா'' ஆயிற்று.

இதனை ''ஆராயியற்கை அவா'' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அவாவுக்கு ஒரு முடிவில்லை. துய்க்கத் துய்க்க மேலும் மேலும் துய்க்க வேண்டும் என்று போய்க்கொண்டே இருக்கும். இந்தக் கருத்துக்கேற்ப ஒரு சொல்லை அமைத்து வழங்கிய தமிழ்ச்சான்றோர்களின் சிறப்பை என்னென்பது!? (தமிழ் மொழியை அதன் இயல்பில் உள்ளபடியே துய்த்து வந்தால் அதுவே ஞானமும் தெய்வமும் ஆம். இதைக் கூறுவதால் பிற மொழிகளைக் குறைகூறுவ தாக யாரும் எண்ண வேண்டா. வேறு மொழிகளில் வேறு சிறப்புகள் இருக்கும். தமிழில் தெய்வத்திறம் மிகுதி என்பதுதான் இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது).

திறந்த வாயை மூடி விட்டால் அந்த நிலையைச் ''சும்மா இருத்தல்'' என்போம். சும்மா இருக்கும்போது துய்க்கும் வேட்கை வருவதில்லை. வேட்கை தணிந்து அவா நீங்கிவிடுமானால், உடனே முத்தி கைகூடும். இதனையே திருவள்ளுவர் ''அந்நிலையே பேரா

இயற்கை தரும்'' என்றார். பேரா இயற்கை என்பது நித்தியத் தன்மை உடைய ஞானம் ஆகும். அதுவே தெய்வநிலை அல்லது முத்திநிலை. அவாவுக்கு அலையும் தன்மை உண்டு. அந்த அலைச்சலில் சிக்கியுள்ள ஆன்மா, பாசப்பொருள்களின் உள்ளே இருக்கின்ற அந்த நிலைத்த தன்மையைத் தேட வேண்டும்.

இயற்கையில் இறைவன் மறைந்து இருக்கின்றான். ஐந்து பருப்பொருள்களையும் தனக்கு உடலாகக் கொண்டுள்ளான். என்றாலும் நம் கண்ணுக்கு அவற்றுள் அவன் தென்படுவதில்லை. அதற்குக் காணமாய் இருப்பது இந்த அவாவேயாகும். இயற்கை முழுவதும் இதன் தோற்றமே பரவியுள்ளது. புறத்தில் முன்வந்து நிற்கிறது. அவாவைக் கடந்து இயற்கையை ஊடுருவிப் பார்த்தால் இறைவன் தென்படுவான். பிறகு எங்கும் சூழ்ந்துள்ள அவனுடைய பரிபூரணத்தைத் துய்க்கலாம்.

ஐம்புலன்களால் நாம் துய்க்கின்ற மாயைப் பொருள்கள் நமக்கும் விளக்கம் தருவதற்காகவே கொடுக்கப்பட்டன. என்றாலும் அப்பொருள்களுக்கு மயக்கம் தரும் இயல்பும் இருக்கின்றது. அது மாயையின் இயல்பு. அதனை யாராலும் மாற்ற இயலாது. இறைவனாலும் இயலாது. இது பற்றிச் சாத்திரங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே அது நம்மை மயக்க இயலாதபடி நாம் ஒதுங்கிக்கொள்வது தான், நாம் செய்யக்கூடிய செயலாகும். உணவை மிதமாகக் கொண்டால் நன்மை தரும். நாக்கின் சுவை காரணமாக, மயங்கி, மிகுதியாக உண்டால், நோய் வரும். அவ்வாறே மற்ற புலன்களும்.

ஒரு செயல் தவறுடையது என்று தோன்றும்போது அதிலிருந்து நீங்கிவிட்டால் நமக்குத் துன்பம் வராது. தெரிந்தும் தவறு செய்தால், துன்பம் அவசியம் வருகிறது. செய்ய வேண்டாம் என்று நமக்குள் இருந்து உணர்த்துவதை மனச்சான்று என்று சொல்லுகிறோம். செய்யத் தூண்டுவதும் நமக்குள்ளேயே இருக்கின்றது. அது அவாவின் வழிச்செல்லும் மனமாகும். இந்த இரண்டும் நமக்குள்ளேயே இருக்கின்றன.

உள்ளே இருந்துகொண்டு தவறு செய்ய வேண்டாம் என்பது தான் இறைவன். ''இறைவன்'' என்னும் சொல்லுக்குத் தங்கி இருப்பவன் என்று பொருள். (''ஆண்டவன்'' என்னும் சொல்லுக்கு ஆட்கொள்பவர் என்று பொருள். ''கடவுள்'' என்னும் சொல்லுக்குக் கடந்தவன் என்று பொருள்).

இறைவன் நமக்குள் இருந்து உணர்த்தவில்லையானால், உலகத்தில் விளக்கமே தோன்றி இராது. எல்லா அறியாமையையும், குழப்பங்களையும் தீர்த்துத் தெளிவுபடுத்துபவன் அவன் ஒருவனே யாவான்.

அவா நீங்கிய சான்றோர்கள் புலன்வழிச்செல்லும் மனதை இறைவழிச் செலுத்தி அப்புலன்களைப் பிறர்க்காகப் பயன்படுத்துவர். புலன்கள் ஐந்தின் வழியாகவும் தீக்கைகள் செய்வர். அவை 1) மாணவனைப் பரிசத்தால் தொடுதல் 2) கண்ணால் பார்த்தல் 3) மூக்கால் முகர்தல் 4) வாயிலிருந்து வரும் எச்சிலைக் கொடுத்தல் 5) காதில் மெய்ப்பொருளை வித்திடல்.


ஆக, புலன்கள் வழிச்செல்லும் அவாவினை ஒழிக்க வேண்டும் என்று மனதுக்கு அருணகிரிநாதர் அறிவுரை கூறினார். ''ஒழித்தல்'' என்பது தவிர்த்துக் கொள்வதாகும்.

(5) ஒழிவாய்

இது இரண்டாவது முறை வருகின்ற ''ஒழிவாய்'' ஆகும். இச்சொல்லுக்கு ஓய்வாய் இருத்தல் என்னும் பொருளும் உண்டு. ஓய்வாய் இருப்பதிலும் ஒரு சுகம் உண்டு. அது அநுபவிக்கும் வேலையும் இல்லாத நிலையாகும். இந்நிலையைப் பெறுக என்று மனதுக்கு அருணகிரிநாதர் கூறினார்.

III சக்கரம்

இப்பாடல் தத்துவக் கூட்டாகிய மனதை விளித்துப் புலன்வழிச் செல்ல வேண்டாம் என்று சொன்னதனாலும், தத்துவத்தைக் குறிக்கும் எழுத்து 'த' கரமானதனாலும், இப்பாடலின் சிறப்பெழுத்து 'த'கரம் ஆகின்றது. 'த'கரத்தொடு கூடிய சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-15

“முருகன், குமரன், குகன்” என்று மொழிந்(து)
உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்?
பொரு புங்கவரும், புவியும் பரவும்
குரு புங்கவ! எண்குண பஞ்சரனே!!

I பொழிப்புரை

(தீமையோடு கண்ணியமாய்ப்) போர் புரியும் மேலோரும், உலகவரும் வழிபடுகின்ற குருமணியே! மதிக்கத்தக்க குணங்களுக்கு இருப்பிடமானவனே!! (உன்னை) ''முருகன், குமரன், குகன்'' என்று (அநுபவித்துச்) சொல்லி உருகும் செயலைத் தந்து, (குணமாகிய) உணர்வை என்று அருளுவாய்?

II விளக்கவுரை

(1) பொரு புங்கவரும், புவியும் பரவும்

இப்பாடலில் அருணகிரிநாதர் இறைவனை அழைத்து ஒரு வேண்டுகோள் விடுக்கின்றார்.

''புங்கவர்'' என்பது புனிதமானவர். அச்சொல் ஆண்மையில் சிறந்தவர் என்றும் பொருள்படும். எனவே பொதுவாக மேலோர் என்று பொருள் செய்வது பொருந்தும்.

''பொருபுங்கவர்'' என்று வந்ததனால், அவர்கள் போர் செய்யும் மேலார் ஆவர். போர் செய்பவர் வீரர் ஆவர். மேன்மையான குணங்களுள் வீரமும் ஒன்று.

போர் செய்தல் என்பது சமன் செய்தல் ஆகும். பொருதல், ஒத்தல் என்பனவும் அதையே குறிக்கும். எடுப்பாய் இருப்பவர்களை மட்டம் தட்டுதலுக்காகப் போர் நடைபெறும். அதாவது தம்மை அதிகமாக நினைத்துக்கொண்டு இருப்பவரை அவர் நிலை இவ்வளவு தான் என்று காட்டுவது போர்.

அருணகிரியார் குறிப்பிடுகின்ற ''பொருபுங்கவர்'', அறியாமை, அழுக்கு, வினை, துன்பங்கள் முதலிய தடிப்பான தீமைகளோடு போரிடுபவர் ஆவர். அவர் செய்வது நம் கண்ணுக்குப் புலப்படுவ தில்லை. அவர்களே சரியான வீரர்கள். ''ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலார், வீரம் எம்மால் விளம்பும் தகையதோ?!'' என்று சேக்கிழார் பெருமானும் கூறியுள்ளார். அச்சான்றோர்களுக்குத் தேவை என்பதே இல்லை. அவர்கள் திருந்தாதவர்களோடு போர் செய்வர். அவர்கள் செய்யும் போர் தியானத்தாலாகும். அவர்கள் ஒருவர் சொல்லிச் செய்பவர் அல்லர். அவர்கள் தாமே இயல்பாகச் செய்வர். அவர்கள் செய்யும் போர் நயமாய்க் கண்ணியமாய் இருக்கும். அக்கண்ணியத்தை எண்ணியே அவர்களைப் ''புங்கவர்'' என்றார். முரட்டுத்தனத்தால் செய்யும் போர் சிறப்புடையதன்று. ஆக, ''பொருபுங்கவர்'' என்பது தீமையோடு கண்ணியமாய்ப் போர் புரியும் மேலோர் ஆவர்.

''புவி'' என்பது உலகு ஆகும். ஆனால் அது, உலகில் வாழ்கின்ற உயிர்கள் அதாவது உலகவர் ஆகிய பொதுமக்களைக் குறிக்கும்.

புங்கவரும், புவியும் என்றதனால் மேலோரும், பொதுமக்களும் என்றாயிற்று. இவ்விருவரும் வழிபடுகின்ற இறைவன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவனை வழிபடுகின்றவர்களுள் சான்றோரும், பொது மக்களும் என்று கூறி, தேவர்களை விட்டுவிட்டதனால், அவர்களை விட சான்றோர்கள் உயர்ந்தவர்கள் என்று தெரிகிறது. ஏனென்றால், ''பெய்யெனப் பெய்யும் மழை'' என்னும்போது சான்றோர் இடுகின்ற ஆணையை அவர்கள் நிறைவேற்றுபவராய் உள்ளனர். [இங்குச்சில ருக்கு ஓர் ஐயம் தோன்றக்கூடும். அதாவது இயற்கை நியதிப்படி மழை பெய்கிறது; இதற்கு ஒரு தேவர் எதற்கு என்று. மழை அறிவில்லாத பண்டம். அது பொழிய வேண்டுமானால் அறிவுள்ள ஒருவர் இருந்து அதனை இயக்குதல் அவசியம் ஆகின்றது. இனி மேட்டிலுள்ள நீர் தானே பள்ளத்தை நோக்கி ஓடவில்லையா என்று கேட்கத்தோன்றும். ஆனால் தண்ணீரை மேட்டில் வைப்பது யார் என்று சிறிது எண்ணிப்பார்க்க வேண்டும். பருப்பொருளை அசைப் பதற்குப் பரு உடல் கொண்ட ஒருவர் தேவைப்படுவதைப்போல், நுண்பொருள்களை அசைப்பதற்கு நுண்ணுடல் படைத்தவர்கள்

தேவைப்படுகின்றனர். நுண்ணுடல் படைத்தவர்களுக்குத் தேவர் என்று பெயர். மற்றும் உலகில் நடைபெறுகின்ற எல்லா வேலை களும், எல்லார்க்கும் தெரிந்தே நடைபெறுகின்றன என்பதற்கில்லை. நமக்குத் தெரியாமல் இந்த உலகிலும், அண்டங்களிலும் எவ்வளவோ வேலைகள் பரு நிலையிலும் நுட்ப நிலையிலும் தொடர்ந்து நடை பெறுகின்றன. நாம் கண்ணெதிரே காணும் சிறு வேலைகளுக்கே பலர் தேவைப்படும்போது மேற்கூறிய எல்லா வேலைகளையும் செய்வதற்கு எத்தனை நுண்ணுடலர் (தேவர்கள்) தேவைப்படுவர்!] அத்தகைய தேவர்கள் சான்றோர் சொல்லுவதைக் கேட்டுச் செய்கின் றனர் என்றால், அவர்களுடைய பெருமையை என்னென்பது!

தெய்வப்புலமை வாய்ந்த நக்கீரரும் சில சான்றோர்கள் உலகுக்கு அணையாய் இருந்து காத்து வருகின்றனர் என்று கூறியுள்ளார்.

ஆக, பொருபுங்கவர் என்று இப்பாடலில் குறிக்கப்பட்ட சான்றோர்கள் தேவர்களை விட உயர்ந்தவர் என்பதும், அவர்களும், சாதாரண உலகவரும் இறைவனைப் பரவுகின்றனர் என்பதும் குறிக்கப்பட்டன.

இனி, ''பரவுதல்''என்பது என்ன என்பதைப் பார்ப்போம்: இச்சொல்லுக்கு வழிபாடு என்பது பொருளாகும். நீர் அல்லது ஓதம் நிலத்தில் பரவுகிறது என்றால், அது ஒவ்வொரு அணுவிலும் கலக்கின்றது என்று பொருள். அது ஒன்றோடொன்று கோத்துக்கொள் கிறது. நீர் தரையில் அதாவது பரந்த நிலப்பரப்பில் பரவுவதுபோல, ஆன்மா ஆண்டவனில் கலந்து கோத்துக்கொள்வதே இங்குப் ''பரவுதல்'' எனப்பட்டது. இதுவே வழிபாடாகும். அதாவது ஆண்டவன் விரிந்துள்ள அளவுக்கு ஆன்மாவும் விரிவு பெறுவதுவே வழிபாடாகும்.

தமிழில், கடவுளை வழிபடுவதற்குப் ''பரவுதல்'' என்னும் சொல் வழங்கி வருவதனால் இச்சொல்லை உண்டாக்கிய தமிழர்களுடைய உணர்வு எவ்வளவு விரிந்து, பரந்து இருந்தது என்பது தெரிகிறது. ''ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்'' (அப்பர்) என்னும்போது இறை இருப்பின் தன்மை, பரப்பு ஆகியவை உணர்ந்து உணர்த்தப்பட் டது. ஏரியில் நீர் நிறைந்ததைப்போல் அவன் எங்கும் நிறைந்தவன் ஆதலால், அவனோடு கலந்து இருப்பதுவே பரவுதல் (வழிபாடு) ஆகின்றது. அவனோடு ஆன்மாவின் உணர்வு கோத்து இருப்பது பரவுதல் ஆகும். அவன் பக்கத்தில் நிற்பது வழிபாடு ஆகிவிடாது.

நுட்பத்தன்மையைப் பெற்றால்தான் பரவ இயலும். எவ்வளவு நுட்பம் ஆகின்றோமோ அவ்வளவு பரவுதல் மிகும். பருமன் ஆக ஆகப் பரவுதல் குறையும். கல் பரவாது; காற்று பரவும். ஆக, நுட்ப அறிவும் உணர்வும் பெற்று வழிபடுவது பரவுதல் ஆகும்.

(2) குருபுங்கவ!

இறைவன் எல்லார்க்கும் குரு ஆவான். எளியோர்க்கு எளிமையாயும், சிறந்தவர்களுக்கு உயர்ந்தவனாயும் வருவான். அவன் மேலான குரு ஆவான். அவன் குருமணி ஆவான்.

(3) எண்குண பஞ்சரனே!

''எண் குணம்'' என்பதற்கு எட்டுக் குணம் என்று கூறலாம். ஆனால் ''எண்'' என்பதனை எட்டு என்று கொள்ளாமல் எண்ணத்தக்க அல்லது மதிக்கத்தக்க குணம் என்று கொள்வதே சிறந்த பொருளாகும்.

அறிவைவிடக் குணம் உயர்ந்தது. இதனால்தான் நீத்தார் பெருமையில் ''குணம் என்னும் குன்றேறி நின்றார்'' என்று வந்தது. குணத்துக்கு மேல் பெரியது ஒன்று இல்லை என்பது திருவள்ளுவர் கருத்து. குணம் மட்டும் இருந்து மற்றவை இல்லாமற் போனாலும் மதிப்பர். உலகில் நாம் பெறவேண்டுவது குணம் ஒன்றேயாகும். குணம் என்பதும், ஞானம் என்பதும், தெய்வத் தன்மை என்பதும், அருள் என்பதும் ஒன்றேயாகும்.

குணம் என்பது ஆன்ம சத்தியில் தெய்வசத்தி ஊறுவதாகும். (முக்குணம் அதாவது சாத்துவிக, ராஜஸ, தாமதம் என்பவை வேறு. இங்குக் குறிக்கப்படும் குணம் வேறு). இறைவனுடைய பண்புதான் குணம் எனப்படுவது. ஆன்மா பளிங்கு போன்றது. அது இறைவனைச் சாரும்போது குணத்தைப் பிரதிபலிக்கும்.

தியானம் பண்ணுவது என்பது இறைவனுடைய இந்தக் குணங்களை எண்ணுவதாகும். நீண்ட நேரம் எண்ணிக்கொண்டு இருப்பதற்குத் தகுதியானவை குணங்களே. வேறு எதையேனும் எண்ணினால் அதில் உள்ளம் முழுமையாகக் கொள்ளை போகாது; செல்லவும் செல்லாது.

இறைவனுடைய குண நலங்களை 400 பிரிவுகளாக்கி அகப் பொருளில் ''கோவை'' செய்துள்ளனர். பண்டைய தமிழர்கள். குணச்சிறப்பை எண்ணி அன்பு செய்தால் உடம்பில் சில மாறுதல்கள் உண்டாகும் என்பதைக் கண்டார்கள். பிரிவினால் உடம்பு வருந்தும். இம்மாறுதல்களை விரிவாகக் கூறுவதே ''கோவை''யாகும். இக்கோ வையில் அதாவது இறைவனுடைய (அருளில்) குணத்தில் பிரிவு பிரிவாக எண்ணி, எண்ணி, இறுதியில் எண்ணுவதற்கும் முடியாமல் ஈடுபாடு மட்டும் இருக்கும் நிலைவரும். அந்த நிலையில் புத்தி வேலை செய்யாது. அன்பு மட்டுமே இருக்கும். முதலில் இருந்த பிரித்துக்காணும் இயல்பு போய்விடும்.

இந்த நிலையை ஞானசம்பந்தர் கூறும்போது ''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும், ஆதி மாண்பும், கேட்பான்புகில் அளவில்லை. கிளக்கவேண்டா'' என்றார். இதில் 'ஆட்பாலவர்'' என்பது அடியார் ஆகும். ''ஆதி'' என்பது இறைவன் ஆகும். அச்செய்திகள் ஒருவர் கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. எனவே அதுபற்றிக் கேட்கவேண்டாம் என்று சொல்லி விட்டார். இறைவன் குணங்களை எண்ணி, அதில் ஈடுபாடும், தியானமும் இயல்பாய் வந்துவிடுமா னால், அவன் அருளுகின்ற முறைமையும் தானே நிகழும்.

ஒரு மனிதரிடம் குணம் காணப்படுமானால், அது இறைவனிட மிருந்து வந்ததென்று தெரிந்து கொள்ள வேண்டும். உபதேசம் என்பது அந்தக் குணத்தின் பதிவேயாகும். அப்பதிவைப் பெற்றவர் குணசாலி என்றும், ஞானி என்றும், அடியார் என்றும் அழைக்கப்படு வார். முத்தி என்பதுவும் அக்குணச்சிறப்பேயாகும்.

''பஞ்சரம்'' என்பது இருப்பிடம் ஆகும். பறவைக் கூட்டுக்குப் பஞ்சரம் என்று பெயர். கூடு, பறவையால் தனக்குப் பாதுகாப்புக் காகக் கட்டிக்கொள்ளப்படுகிறது. பறவைக்கு அது வீடு. வீடு என்பது சிரமங்களிலிருந்து விடுதலை தருவதும் உரிமை தருவதும் ஆகும். குணத்துக்கு அத்தகைய வீடாய் இருப்பவன் இறைவன். எனவே அவனை ''எண்குண பஞ்சரனே'' என்று கூறினார். குருபுங்கவன் என்றும், குணபஞ்சரன் என்றும் இறைவனை விளித்துத் தமக்கு வேண்டுவதைக் கேட்கின்றார் அருணகிரிநாதர். அவர் கேட்பது அவன் பெயரைச் சொல்லி உருகுவதாகும்.

(4) ''முருகன்'', ''குமரன்'', ''குகன்'' என்று மொழிந்து

இறைவனுக்குப் பெயர்கள் பலவாக உள்ளன. அத்தனை பெயர்கள் எப்படி வந்தன? அவன் அருள் செய்யும் தன்மைகளை ஒட்டி அவை அமைந்துள்ளன.

அவற்றுள் அருணகிரியார் இங்கு முருகன், குமரன், குகன் என்னும் மூன்று பெயர்களைக் குறித்துள்ளார். 'முருகன்' என்னும் பெயருக்கான விளக்கத்தை முன்னமே கண்டுள்ளோம். அது இளமை, அழகு, மணம் என்பவற்றைக் குறிக்கும் என்றும் மொத்தமாகப் பார்க்கும்போது தெய்வம் என்று பொருள்படும் என்றும் பார்த்தோம்.

''குமரன்'' என்பது பற்றிச் சிறிது பார்ப்போம்: 'கு' என்பது அஞ்ஞானம் ஆகும். ''மாரன்'' என்பது அழகுபடுத்துபவன் என்று பொருள்படும். அஞ்ஞானத்தை அழகுபடுத்துவது என்பது அதனைச் செயல்படுத்தி, ஞானமாக மாற்றுவதாகும். அதைச் செய்யவல்லவன் இறைவன் ஒருவனே. அவனே குமரன் அல்லது குமரன் ஆவான்.

வேறுவகையாய்ப் பார்க்கும்போது கு+ம+ஆரன் என்றும் பிரிக்கலாம். ஆரன்=அழகன் ம=தடிப்புத்தன்மை கு=மாற்றுபவன்.

ம+ஆரன்=மாரன்=தடிப்புத் தன்மையான அழகன் = காமன். கு+ம+ஆரன்=காமனை அல்லது காமத்தை மாற்றுபவன்.

காமத்தை அழிப்பதே காளைப்பருவத்தின் வீரம் ஆகும். அது காமனைத் தழுவுவதன்று. ['அ' எப்பொழுதும் தெய்வ இயல்பைக் குறிக்கும். 'மா' விலங்கு அல்லது மனித இயல்பைக் குறிக்கும். இந்த அடிப்படையில் அம்மா என்னும் சொல்லில் அ=இறைத்தன்மை; மா=மனித (விலங்கு) இயல்பு. அதாவது மனித (விலங்கு)த் தன்மையில் இறையியல்பு கலந்துள்ள ''தாய்''ஆகும். இச்சொல் மாயையில் இறைத்தன்மை கலந்துள்ள திரோதான சத்தியையும் குறிக்கும். இவ்வாறு சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்ளும் போது அவற்றின் உண்மைநிலை விளங்கும். மன்=மனிதன், மதன்=கெட்டவன், மன்மதன்=மனிதரில் கெட்டவன் அதாவது காமன்]. ஆக குமரன் என்பது காமனை வென்றவன் என்று ஆயிற்று.

ஆண்டவனுக்கு மூப்பு இல்லாமையால் அவனைக் குழந்தை என்போம்; இனியன் என்போம். புராணத்தில் முருகனுக்குத் திருமணம் ஆனது என்னும் வரைதான் வருகிறது. அதற்குமேல் மூப்பு அடைந்ததாக வருவதில்லை.

குழந்தையை எடுத்து; உறவாடும்போது, அது உடம்பெல்லாம் தவழும். அதனைத் தலைமேலும், மார்பின் மேலும், தோள் மேலும் வைத்து மகிழ்வோம்.

குழந்தைக்கு வயது ஆக, ஆக, உடம்பின் உறவு நீங்கி, கண்ணுக்கு விருந்தாய் இருக்கும். இப்பருவம் ''குமர''ப்பருவம் எனப்படும்.

குழந்தைப்பருவத்தில் அன்பு இருக்கும்; ஆனால் குழந்தைமேல் மதிப்பு வராது. வயது ஆக, ஆக, காளைப்பருவத்தில் திறமைகள் அதிகப்படுவதனால் அன்போடு மதிப்பும் பெருகும். இறுதியில் குணச்சிறப்பினால், உள்ளத்தைத் தொடும் அளவுக்கு மதிப்பும் அதனால் பத்தியும் வளரும். உள்ளத்துக்கு வருவது மாறாமல் என்றும் தங்கிவிடும்.

அவ்வாறு உள்ளத்தில் தங்குபவனைக் ''குகன்'' என்றனர். உள்ளம் (இதயம்) ஒரு குகை போன்றது. குகையில் தங்குபவன் ''குகன்''ஆனான். உள்ளத்தில் இருப்பவன் நடுநாடியிலும், அநாகத ஆதாரத்திலும் இருப்பான்.

அவன் திருஉருவமாக (விக்ரகமாக) மண் அல்லது உலோகத் திலிருந்து, பூசை செய்யப்பட்ட (கலச) நீருக்கு வந்து, ஓமம் வளர்க்கப்பட்ட தீக்கு வந்து, பிராணாயாமமாகிய மூச்சுப் பழக்கத்தால் காற்றுக்கு வந்து, பின் பாவனையால் ஆகாசத்துக்கு வருவான். அதுவே தகராகாசம் அல்லது சிதாகாசம் எனப்படும். இப்பாவனை யில் பழகாமல், வெறுமனே (வீணே) 'முருகா', 'குமரா' 'குகா' என்று சொல்வதனால் பயன் வராது. இப்பெயர்கள் வருவதற்குக் காரணமாய் இருக்கின்ற தெய்வ நலங்களை எனக்குத் தருக என்று அருணகிரியார் இவற்றைக் குறிப்பிட்டார்.

இப்பெயர்களைச் சொல்லுவதற்கு ஒரு முறை உண்டு. அது அநுபவ உணர்வோடு சொல்லுவதாகும். அவ்வாறு சொல்லுவதற்கு ''மொழிதல்'' என்று பெயர். (கோபமாகச் சொல்லுவதற்குக் ''கழறல்'' என்று பெயர்; கொஞ்சிக் கொஞ்சிச் சொல்லுவதற்கு ''மிழற்றல்'' என்று பெயர். இச்சொற்கள் எல்லாம் தமிழ்மொழியில் அநுபவப் பயனாய்த் தோன்றியவை).

''வாக்குண்டாம்'' என்று தொடங்கும் ஔவையார் பாட்டில் ''பூக்கொண்டு'' என்றது சொல் மலர் கொண்டு என்று பொருள்

படும். அச்சொல் மலர்களை அநுபவத்தோடு மொழிந்து வழிபாடு செய்ய வேண்டும். நமக்குச் சான்றோர்கள் செய்து வைத்துள்ள துதிப்பாடல்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை உரிய இடத்தில் உரிய நேரத்தில் மொழிவது சிறப்பு.

இங்கு அருணகிரியார் இறைவனை இனியவன் (முருகன்) என்றும், ஆற்றலன் (குமரன்) என்றும், இதயத்தில் தங்கி இருப்பவன் (குகன்) என்றும் அநுபவித்து ''மொழிதலை'' அருள வேண்டுமென்று வேண்டுகிறார்.

(5) உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்?

உருகும் செயலும், உணர்வும் ஞானமாகும். அது வேண்டும்; அதை என்று அருள்வாய் என்று இறைவனை அருணகிரியார் கேட்கின்றார். ''என்று அருள்வாய்'' என்றதனால் அவருக்கு இருந்த ஆர்வம் அல்லது ஞான தாகம் வெளிப்படுகிறது.

சாதாரண உலகவர்க்கு இந்தத் தாகம் இருப்பதில்லை. அது ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். அதனை உண்டாக்குவது சிறந்த பணியாகும்.

''உருகும் செயல்'' என்பது நம் குறைகளை நினைந்து வருந்துவதாகும். நமக்குக் குறைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரிவதில்லை. இறைவன் முன்போ அடியார்கள் முன்போ நின்றால் தான் அவை தெரிகின்றன. அவை தெரிந்த பிறகுதான் உருக்கம் வரும். உருகுவது நம் குறைகளைக் களைவதற்காகவும், பிறர் துன்பங்களைப் போக்குவதற்காகவும் நிகழும். இவற்றுள் பிறர்க்காக உருகுவது சிறப்பாகும். நம் குறைகளை நினைந்து உருகுவது பத்திக்கு அடிப்படையாகும்.


உலகவழக்கில் ''உங்கள் அன்பிருந்தால் போதும்'', ''உங்கள் தயவிருந்தால் போதும்'' என்று கூறுவர். அதைப்போலவே உணர்வை அருளுவது போதும் என்றும், அதனை என்று அருளுவீர் என்றும் கேட்கின்றார். இதனால், உணர்வைப் பெறுவதுதான் முடிவு என்று தெரிகிறது. மாறாக உணர்வை இழத்தல் அல்லது (தெய்வ) உணர்வே இல்லாமல் இருத்தல் பெரிய இழப்பாகும்.

ஆக, இப்பாடலில், அருணகிரியார் ''குணத்தின் இருப்பிடமாகிய இறைவனே, உன் பெயர்களை மொழிந்து உருகுவதையும்,

உன் உணர்வையும் அருளுக'' என்றும் அதனை விரைவில் அருள வேண்டும் என்றும் வேண்டுகிறார்.

III சக்கரம்

முன்பாடலில் தத்துவங்களைக் கடந்து நுட்பத்துக்குச் செல்ல வேண்டும் என்றும் அதற்குரிய எழுத்து 'த'கரம் என்றும் பார்த்தோம். இந்தப் பாடலில், நுட்பத்துக்குச் சென்றபின் அதில் தோய்ந்து உருக வேண்டும் என்று வருவதனால், இதற்குரிய சிறப்பெழுத்து 'த'கரத் துக்கு அடுத்த 'த.' ஆகின்றது. எனவே இப்பாடலின் சக்கரம் வருமாறு அமையும்.



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-16

பேராசை எனும் பிணியில் பிணிபட்(டு),
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா! முதுசூர்பட வேல் எறியும்
சூரா!! சுரலோக துரந்தரனே!!!

I பொழிப்புரை

பேராசை என்னும் நோயில் பிணிக்கப்பட்டு (உன்னோடு) ஒன்றும்படி தியானிக்காமல் இருக்கும் முன்வினை உடைய நான் (உலகிலேயே) உழன்று கொண்டு இருப்பது தகுமோ? (என்னைக் காப்பாற்றுவாயாக). வீரா! பழைய சூரனாகிய பதுமாசூரன் மாயும்படி (ஞான) வேல் எறிந்த சூரனே!! தேவ லோகத்தைக் காப்பவனே!!!

II விளக்கவுரை

(1) வீரா! முதுசூர்பட வேல் எறியும் சூரா!!

அருணகிரியார் இந்தப் பாடலில், இறைவனை விளித்து, ஆசையாகிய பிணியிலிருந்து தம்மை விடுவிக்கும்படி வேண்டுகிறார்.

இறைவனை முதலில் ''வீரா!'' என்று அழைக்கின்றார். வீரன் என்று அழைக்கப்படுவதற்கு அவன் என்ன செய்தான்? அவன் செய்த அச்செயலால் யாருக்கு என்னபயன் விளைந்தது? அவன் செய்த சிறப்புச் செயல் சூரபதுமனை மாய்த்ததாகும். அதனால் தேவர் உலகம் காப்பாற்றப்பட்டது. எனவே அவன் வீரன் ஆனான்.

'வீரன்' என்பதற்கும் 'சூரன்' என்பதற்கும் வேறுபாடு உண்டு. 'வீரம்' என்பது உள்ளத்தளவு இருக்கும் பண்பு. 'சூரம்', அப்பண்பு உடம்பிலும் வெளிப்படுகின்ற நிலை.

வீரச்செயல் செய்வதற்கு அடிப்படையாய் இருப்பது உள்ளத்தில் தோன்றுகின்ற ஈர உணர்வாகும். இங்குத் தேவர்களைக் காக்க வேண்டுமென்பதே அந்த ஈர உணர்வாகும். இத்தகைய ஈர உண்வு இல்லாமல் ஏதேனும் வீரச்செயல் நடக்குமானால் அது முரட்டுத்தன மான செயலாகும். அது வீரம் ஆகாது.

சேக்கிழார் ''ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலார்... வீரம் விளம்பும் தகையதோ!'' என்று கூறியுள்ளார். ஈர நெஞ்சம் என்பது இரக்கம் அல்லது அருளாகிய குணம் நிறைந்த நெஞ்சம் ஆகும். அதாவது பேதம் பாராட்டாது மற்றவர்களுக்கு அருள் செய்வதாகும். ஈரநெஞ்சம் உடைய அடியார்கள் தன்னலமற்றவர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் தாமே வந்து சேரும். அவர்கள் தம் உள்ளத்தில் ''நாம் இறைவன் மடியில் இருக்கின்றோம்; அவன் நம்மைக் காப்பான்'' என்று எண்ணிக்கொண்டு அமைதியாய் இருப்பர். அத்தகையோருக்கே யாதும் குறைவில்லாத நிலை வரும். ஈர நெஞ்சம் கொண்டு தணிந்த காரியங்களைச் செய்யும் அவர்களுடைய செயல்கள் வீரச்செயல்கள் ஆகுமா என்று தோன்றும். அச்செயல்கள்தாம் உண்மையில் வீரம் பொருந்தியவையாம்.

ஈரம் என்னும் சொல்லின் அடிப்படையில்தான் இரக்கம் என்னும் சொல் வந்தது. இந்த இயல்பு இருப்பவர்களுக்குத் தேவை என்பதே இல்லை. என்றாலும் வீர உணர்வு வரும்போது அவர்களுடைய உணர்ச்சிகள் வீறிட்டு எழும். உள்ளே ததும்பி இருந்த ஆற்றல் திடுமென வெளிப்படும். அவ்வாறு வரும்போது அவர்கள் பம்பரம் போலக் காரியங்களைச் செய்வார்கள். எனவே வீரம் சாந்தத்திலிருந்து வருவதேயாகும். இந்த அழகிய பண்பு முருகனிடம் இருக்கின்றது. அவனை வழிபடுவோரும் அதனைப் பெறவேண்டும்.

முருகன் ஈர வீரம் உடையவனானாலும், சூரபதுமனோடு போர் புரிந்தபோது அச்சம் உண்டாக்குகின்ற தோற்றம் அவனுக்கு வந்துவிட்டது. அத்தோற்றம் அவனுக்கு வந்ததனால் அவனும் சூரன் எனப்பட்டான். இறைவன் சூரனுக்குச் சூரனாகவும், யார் யார் இடத்தில் எப்படி வந்து போர் செய்ய வேண்டுமோ, அல்லது உதவி செய்ய வேண்டுமோ அவ்வாறே வந்து செய்வான்.

சூரபதுமனை அருணகிரியார் ''முதுசூர்'' என்றார். ''முது'' என்றதனால் அவன் பழைமையானவன் என்றாயிற்று. அதாவது அவன் வயதானவன். முருகன் இளையவன், ''முது'' என்னும் சொல்லுக்கு அறிவு என்னும் பொருளும் உண்டு. எனவே சூரன் ஒரு அறிஞனும் ஆவான். மற்றும் அவன் பெருந்தவசி. அதனால் தான் அவன் முருகனுக்கு ஊர்தி (வாகனம்) ஆனான். சூரனிடம் எல்லா நலங்களும் இருந்தாலும், அவன் ஞானம் மட்டும் இல்லாதவனாய் இருந்தான். அதனாலேயே அவனை இறைவன் கண்டித்தான்.

''சூர்'' என்பது ஓர் ஒலிக்குறிப்பாகும். அது சுடும் தன்மையை உடையது. பழுக்கக் காய்ச்சிய இரும்பை நீரில் வைத்தால் ''சுர்'' என்னும் சத்தம் வரும். சுடும் தன்மை உடையவன் ஆனதால் பதுமாசூரன்''சூர்'' எனப்பட்டான். (கடல் நீரை சுர் என்று சுடவைத்து மேகமாக்கியும் காலைப்போது சுர் என்று கதிர் வீசியும் ஒளி தருகின்ற ஞாயிறு ''சூரியன்'' என்று பெயர் பெற்றது).

சூரபதுமனை ''முதுசூர்'' என்றதை தத்துவப்படி பார்க்கும்போது அவன் ஆணவ மலத்தைக் குறிப்பவனாவான். ஆணவ மலத்துக்கு வயது சொல்வதற்கில்லை. ஏனென்றால் அம்மலம் அநாதியாய் உள்ளது. எனவே 'பதுமாசூரன்' முதுசூரன் எனப்பட்டான். அவனை மாய்க்க முருகனாகிய புதுசூரன் வந்தான். புதுசூரன் வரவே முதுசூரனுக்கு மதிப்புப் போயிற்று. அதாவது சாந்தமான சூரன் வரவே சாந்தம் இல்லாத சூரன் பட்டுப்போனான்.

புது சூரனாகிய முருகன் ஞானமாகிய வேலை எறிந்தான். எறிதல் என்பது வீசுதல். தீப்பற்றி எரிவது இடையின 'ர'கரம் கொண்ட ''எரிதல்'' ஆகும். எரியும்போது அழுத்தமும் வெடித்தலும் வன்மையும் பெற்று வேகமாகப் பாய்வதால் வல்லின 'ற'கரம் பெற்ற ''எறிதல்'' என்பது வீசுதலுக்கு வந்தது.

வேல் ஒளி வீசிக்கொண்டே வேலை செய்யும். மற்றும் அது முருகனிடம் திரும்பி வந்து சேர்ந்து விடும். ஞானத்தோடு (அறிவோடு) கலந்த இயற்கை உந்துதல்தான் வேல் எனப்படுகிறது. அது அவன் கையில் இருந்துகொண்டு ஆன்மாக்களோடு கலந்து தூய்மைப்படுத்தி மேம்படுத்துகிறது.

(2) சுரலோக துரந்தரனே!!

''சுரலோகம்'' என்பது தேவலோகம். ''துரந்தரன்'' என்பது காப்பாற்றுபவன். இயக்குதல், அசைத்தல், ஒட்டுதல் என்பவையும் ''துரத்த''லில் சேர்ந்தவையே. அதனால் ''துரகம்'' என்பது குதிரைக் குப் பெயராயிற்று. எனவே துரந்தரன் இயக்கிக் காப்பாற்றுவன் ஆகும். தேவர்களை இயக்கிக் காப்பாற்றியதால் முருகன் சுரலோக துரந்தரன் ஆனான்.

''சூரன்'' பயத்தை (அச்சத்தை) உண்டாக்கும் தன்மை உடைய வன் என்று முன்பு பார்த்தோம். அச்சத்தை உண்டாக்காதவன் ''சுரன்''

ஆவான். அச்சத்தை உண்டாக்குபவன் ஒருவன். அஞ்சுபவர் பலர். ஆணவம் ஒன்று. அதனால் தாக்குறுபவர் பல ஆன்மாக்களாவர். ஒரு கெட்டவன் வாழ்ந்தால் பல நல்லவர் துன்புறுவர். வரலாற்றைப் படிக்கும்போது இது புலப்படும்.

அடியார்களைத் தவிர மற்ற அனைவருக்கும் ஆணவம் உண்டு. அடியார்களிடம் உள்ள ஆணவம் ஒடுங்கி இருக்கும். பிறரிடம் வெளிப்படையாய் வேலை செய்யும். அடியார்களிடம் ஒடுங்கி இருப்பதோடு, தன் இயல்புக்கு மாறாக, இன்பம் தரும் வகையில் ஒத்தாசையும் செய்யும். ''இத்தை விளைவிக்கும் மலம்'' என்னும் தொடரால் இவ்வுண்மை விளங்கும்.

சூரபதுமனிடம் ஆணவம் வெளிப்படையாய் வேலை செய்தது. அதனால் முருகன் அவனை மாய்த்தான். ஆணவம் எங்குள்ளது என்று பார்க்கும்போது, அது நம் உடலிலும், உள்ளத்திலும், உயிர் உணர்விலும் பாசை போலப் படிந்துள்ளது. அதனைப் புறத்தில் காணவேண்டுமானால், இருட்டிலும், உடம்பில் உள்ள அழுக்குகளி லும், மலரின் புற இதழிலும், நம் நிழலிலும், அறியாமையிலும், மறதியிலும் இவற்றைப் போன்ற பிறவற்றிலும் காணலாம். இவற்றில் இருந்து கொண்டு ஆணவம் பல லீலைகளைச் செய்து வருகிறது. இதனைப் போக்கிக்கொள்வதுதான் முருக பக்தருடைய வேலை யாகும். இல்லையானால் பத்தி செய்வதன் பயன் இல்லாமற் போம். நாம் வழிபடுகின்ற முருகன், இதைப் போக்குவதற்கென்றே இருக்கின் றான். ஆக மேற்கூறியவாறெல்லாம் முருகனை விளித்துத் தம் குறையை நீக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

(3) பேராசை எனும் பிணியில் பிணிபட்டு

முன்பாடலில் 'அவா' என்பதைப் பற்றிப் பார்த்தோம். அந்த அவாவுக்கும், இங்குக் குறிக்கப்படும் 'ஆசை'க்கும் சிறிது வேறுபாடு உண்டு. இரண்டும் கொடுமையானவையே என்றாலும், அவாவை விட ஆசையின் கொடுமை குறைந்திருக்கும். 'விருப்பம்' என்பது நல்லது. அது நல்ல செயல்களுக்குக் காட்டப்படும் ஊக்கம் ஆகும். இந்த விளக்கத்தைக் கொண்டு பார்க்கும்போது இறைவனிடம் விருப்பம் கொள்ளலாம். ஆசையும் அவாவும் கொள்ளக்கூடாது என்பது விளங்கும்.

இனி ஆசைக்கும் அன்புக்கும் உள்ள வேறுபாட்டைக் காண் போம். அன்பு அறிவின் கனிவு. அறிவு கனியாமல் வெம்பிப் போகுமானால் அதுவே ஆசையாகும். கனிந்த பழத்தையும் வெம்பியதையும் பார்க்கும்போது ஒன்றுபோல இருக்கும். ஆனால் உண்ணும்போது வேறுபாடு தெரியும். அன்பும் ஆசையும் அத்தகை யவே. அன்பு ஆன்மாவின் நல்லியல்பு. ஆசை பாசப்பண்டங்களில் ஒன்றும். அவா ஆணவத்தின் வேலைப்பாடு.

''பேர் ஆசை'' என்பது பெரிய ஆசை என்றும் பெயர்க்கத்தக்க ஆசை என்றும் பொருள்படும். ஆசை பாசப்பண்டங்களின் தொடர்பு உடையதானதனாலும், பாசம் அநாதியாய் இருப்பதனாலும் அதனை அடியோடு அழிக்க முடியாது. எனவே அதனை அடக்குவதுதான் ஒரே வழி. மற்றும் அது பேராசையாக வளரவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நல்லனவற்றில் அது வந்து குறுக்கிடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

'பிணி' என்பது நோய். நோய்க்குக் காரணமாய் இருப்பது பேராசை. எனவே பேராசை எனும் பிணி என்று அருணகிரியார் குறிப்பிட்டார்.

நோய் உடல் நிலை கெடும்போது வருகிறது. இயற்கையான நிலை, திரிந்தால் வரும். ஒழுங்கு மாறுபட்டால் வரும். அறிவு கனியாமல் வெம்பினாலும் வரும்.

நோய் வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன. என்றாலும் அக்காரணங்களுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பது ஆசையாகும்.

நோய் மனிதனை வந்து கவ்வுவதால் அதாவது பிணிப்பதால் அதற்குப் 'பிணி' என்று பெயர் வந்தது. ஆசை பேராசையாக வளரும்போது நோய் பெரிதாகிவிடும்.

நோய் வேறு மூப்பு வேறு. நோய் இல்லாமல் மூப்பு வருமானால், அதில் தவறு இல்லை. மூப்பினால் மூத்தவரைத் ''தள்ளாதவர்'' என்பர். தள்ளாதவர் என்னும் சொல்லுக்கு நம்மால் தள்ளக்கூடாதவர் என்று பொருள். நோயே இல்லாமல் மூத்த உடம்பு வழிபடத்தக்கதாகும்.

ஆக நாம் பிணியில் பிணிபடாமல் இருக்க வேண்டுமானால் ஆசை வரக்கூடாது. அது முத்திக்கும் வரக்கூடாது. முத்திக்கே வரக்கூடாது என்றபோது, மற்ற சிறு பொருள்களாகிய செல்வம், புகழ் ஆகியவற்றுக்கும் வரக்கூடாது என்பது பெறப்படும். ஆசை இன்மையே எல்லாவற்றிலும் பெரிய செல்வம். வேண்டாமை என்னும் விழுச்செல்வம் என்பதனால் இது விளங்கும். ஆசை உடைமையே வறுமையாகும். ஆசையைத் துறந்தால் மெய்யுணர்வு வரும். ஆசையே நம்மை உலகத்தோடு கட்டிப் பிணிப்பதாகும். அதுவே நம்மை உலகப்பொருள்களுக்கு அடிமைப்படுத்துவது.


(4) ஓராவினையேன் உழலத் தகுமோ?

ஓர்தல் எண்ணிப்பார்த்தல் ஆகும். ஓராவினையேன், எண்ணிப் பாராத முன்வினை உடையவன். எண்ணுவது தியானிப்பதாகும். இறைவன் ''ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியான்''. ஓர் என்பது ஒன்று. ஓர்தல் ஒன்றாதல் அல்லது ஒன்று ஆகின்ற முறையில் எண்ணுவது. அது ஆன்மா, இறைவனோடு ஒன்று ஆகின்ற முறையில் எண்ணுதல். அவனிடத்தில் அடங்கி ஒன்றிப்போனால் ஒளி உண்டாகும். அதற்கு இடம் நடுநாடி. அதில் ஒளிந்து கொண்டால் ஒளிவரும். பேதம் நீங்கிய இரண்டற்ற (அத்வைத) பாவம் ஓர்தல் ஆகும். ஞானம், தியானம் எல்லாம் அந்த அபேத நிலையைக் குறிக்கின்றன. இரண்டாக இருப்பது ஒன்றாதல் எளி மையே. அதனால் சுமை தெரியாது. காட்டாக, உணவு வெளியே இருக்கும்போது சுமை தெரியும். அதனை உண்டபின், பளு தெரிவதில்லை. அவ்வாறே இறைவனும் ஆன்மாவும் ஒன்றுவது எளிதே.

இந்தப் பிரிவற்ற நிலையில் தெய்வ உணர்ச்சி தவிர வேறு ஒன்றுமே தெரியாது. இதனைப் பாழ் என்றும் முப்பாழ் என்றும் கூறுவர். பாழ் என்பதும் சூன்யம் என்பதும் ஒன்றே. இறை, உயிர் தளை ஆகிய மூன்று பொருள்களின் தனித்தனியான இருப்புத் தெரிவதில்லை. அந்த நிலை ஓர்தலால் வருகிறது. அதனை ஓர்ந்து கொள்ளாமல் வீணே உலகியலில் ஆசைப்பிணியில் அகப்பட்டு உழல்வது தகுமோ? என்னைக் காத்தருள்க என்று அருணகிரியார் இப்பாடலில் கேட்டுக்கொண்டார்.

III. சக்கரம்

இப்பாடல், ஆசைகளையும், அதனால் வருகின்ற பிணிகளையும் ஒட்டுவது பற்றி வருகிறது. மற்றும், நமக்கு வேண்டாதவற்றை ஒடுக்குவது பற்றிக் கூறுகின்றது. அதாவது பிரிவினை உணர்வை இல்லாதபடிச் செய்கின்ற, பாழ் ஆதல் பற்றிச் சொல்லுகிறது. இம்மந்திரப்பாடலுக்குரிய அதிதேவதைக்குச் ''சூனிய தேவன்'' என்று பெயர். வேண்டாதவற்றை அதட்டுவதற்கும், ஒட்டுவதற்கும் உரிய ஒலி ''தஃ'' ஆகும். இது நான்கு வகை ''த''கரத்துள் மூன்றாவதாகும். எனவே இப்பாட்டின் சக்கரத்துக்குரிய சிறப்பெழுத்து ''தஃ''ஆகும். இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-17

யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்,
நாமேல் நடவீர், நடவீர் இனியே.

I பொழிப்புரை

யாம் கற்ற கல்வியும், எம் அறிவும் ஞானமூர்த்தியாகிய வேல்முருகன் எனக்குக் கொடுத்தவை. அவற்றை அவனே மீண்டும் பெற்றுக்கொள்வதற்காகக் கொடுத்தான். அதனால் நீவிர், உலகத்தின் மேலுள்ள மயக்கத்தைப் போக்கிக் கொண்டு, அறமாகிய உடலைப் பூண்டு இனிமேல் கவி பாடுவீராக, மற்றும் பிறர்க்கும் அறம் உரைப்பீராக.

II விளக்கவுரை

அருணகிரியார் இந்தப்பாடலில் முருகனை அழைக்கவில்லை. உலகவர்க்கே அறிவுரை கூறியுள்ளார். பின் இரு அடிகளில் அறிவுரையையும், முன் இரு அடிகளில் அதற்கான காரணத்தையும் தெரிவித்துள்ளார்.

(1) யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும், தாமே பெற வேலவர் தந்தது

கல்வி மனப்பயிற்சியால் வருவது. அறிவு உயிரினுடைய பண்பு அல்லது குணம் என்னலாம். இவ்விரண்டுமே இறைவனுடைய அருளால் வந்தவையே. அவன் கொடுத்ததனால் அவற்றை நாம் அவனுக்கே பயன்படுத்த வேண்டும். இதுவே அருணகிரியார் நமக்குக் கூறும் அறிவுரை.

திருவள்ளுவர் அமைத்துள்ள அதிகார முறைப்படிப் பார்க்கும் போது, மனிதனுக்கு முதலில் கல்வி வேண்டும்; கல்லாமை கூடாது. கல்வியோடு அறிவுடைமையும் இன்றிமையாதது என்று தெரிகிறது. கல்வி மிக அவசியம்தான். அது இல்லாமல் மனிதன் உயர முடியாது.

என்றாலும் அவன் அறிவைப் பெறுவதுவும் முதன்மையாகும். கல்வியை எவ்வளவு கற்றாலும் அதனாலேயே ஒரு மனிதனுக்கு மதிப்பு வருவதில்லை. கல்வியோடு அறிவும் வளர வேண்டும். கல்வி என்பது கற்றதை மீண்டும் நினைவுப்படுத்தும் படிப்பாகும். (எனவே கல்வி கற்றுவிட்டோம் என்று யாரும் செருக்கடைதல் கூடாது).

மனித உடம்பு கருவிகளால் ஆனது. உடம்பின் வெளியிலும், உள்ளும் கருவிகள் உள்ளன. வெளியிலுள்ள கருவிகளை நாம் காண்கின்றோம். உள்ளே இருக்கும் கருவிகளை நம்மால் காண முடிவதில்லை. கடிகாரத்தில் உள்ளிருக்கும் கருவிகள் பார்த்த உடனே தெரியவில்லையானாலும், கழற்றிப் பார்த்தால் தெரியும். மனித உடம்பைக் கழற்றிப் பார்க்க முடியாது. என்றாலும் அதனுள் மனம், புத்தி முதலிய கருவிகள் உள்ளன. கடிகாரத்தில் உள்ளிருக்கும் கருவிகள் வேலை செய்யவில்லையானால், புறத்தே காணப்படும் முள் அசையாது. அதுபோல மனம் முதலிய நுண்கருவிகள் உள்ளே வேலை செய்யவில்லையானால், கண், மூக்கு, நாக்குப் போன்ற புறக்கருவிகள் வேலை செய்ய மாட்டா.

இந்த அகம், புறம் என்னும் பாகுபாடும், அவை ஒன்றன்மீது ஒன்று சார்ந்து (ஆதாரப்பட்டு) இருப்பதும் எல்லாவற்றுக்கும் பொருந்தும். வீடு என்று எடுத்துக்கொண்டால், வீட்டின் உள்ளே இருப்பவரும், வெளியே சென்று வேலை செய்பவரும், நன்றாக இருந்து வேலை செய்ய வேணடும். அப்பொழுதுதான் இல்லறம் சரியாக நடக்கும். மற்றும், அவ்விருவருள், உள்ளே இருப்பவர் செம்மையாய் இருப்பதும், வேலை செய்வதும் மிகவும் முதன்மை யாகும்.

புறத்தில் மட்டும் நன்றாய் இருந்தால் போதும் என்று நினைப்பது சரியன்று. அது ஆரம்பநிலை; ஆரவார நிலை. பார்க்கப்போனால் புறத்தோற்றம் ஏறக்குறைய இருந்தாலும் தவறு இல்லை. அகம் நன்றாய் இருக்கவேண்டுவது முதன்மையாகும்.

இனி, நமக்குள்ளே மனம் என்னும் ஒரு கருவி இருக்கிறது என்பதனை யாரும் மறுப்பதில்லை. அனைவரும் ஒத்துக்கொள்வர். இந்த மனம், இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள 36 கருவிகளுள் ஒன்று. அந்த முப்பத்தாறு கருவிகள் வருமாறு:

1) ஆன்ம தத்துவங்கள் (உடற்கருவிகள்) - (24)

ஐம்பூதங்கள்	5
ஐம்பொறிகள்	5
ஐம்புலன்கள்	5
தன்மாத்திரைகள்	5
மனம்	1
புத்தி	1
அகங்காரம்	1
சித்தம்	1

2) வித்தியா தத்துவங்கள் (அறிவுக் கருவிகள்) 7

3) சுத்த தத்துவங்கள் (உணர்வுக் கருவிகள்) 5

ஆக 36

இவற்றுள் மனம் 21-வது தத்துவமாகும். மனம் ஒரு நுண்கருவி. அதைவிட முதல் 20 கருவிகள் பருமனானவை. மனத்துக்கு அடுத்து வருகின்ற 15 கருவிகள் மனத்தை விட நுட்பமானவை. மனம் இவற்றுக்கு இடையில் உள்ளது.

மேற்கூறிய 36 கருவிகளும் சரிவர வேலை செய்யுமானால் அந்த ஆன்மா, அறிவு விளக்கத்தோடு முன்னேற்றம் அடையும். இல்லையேல் துன்பம் உண்டாகும். எனவே ஒரு மனிதன் துன்பப்படுவதும் இன்பமாய் இருப்பதும், இக்கருவிகள் வேலை செய்வதைப் பொருத்துள்ளது.

நுண்கருவிகளுக்கும் பருக்கருவிகளுக்கும் இடையில் இருப்பதனால், மனத்தைக் குறிப்பிட்டால் அவை அனைத்தையும் குறித்ததாகும். எனவே ''கல்வி மனப்பழக்கம்'' என்று சொல்லும்போது எல்லாக் கருவிகளையும் சேர்த்துச் சொன்னதாகக் கொள்ள வேண்டும். ஆக, அருணகிரியார் ''யாம் ஓதிய கல்வி'' என்றும், ''வேலவர் தந்தது'' என்றதனால், அவருக்கு இந்த 36 கருவிகளையும் செவ்வனே வேலை செய்யும்படி இறைவன் அருளினான் என்று கொள்ள வேண்டும்.

கல்வியில் பல வகையுண்டு. பொருட்கல்வி, விஞ்ஞானம், சமயக்கல்வி, தவம், யோகம் முதலியன உள்ளன. இறைவனைப்

பற்றிய கல்வியானாலும், அது ஏட்டுப்படிப்பாக இருக்கும்வரை அது இந்த 36 கருவிகளின் செயல்பாடேயாகும். மனம் வேலை செய்யும் வரை அதாவது மனத்தின் வழியாக எந்தச் செய்தியைக் கற்றாலும் அது கல்வியில் அடங்கும். சரியை, கிரியை, யோகம் வரை கற்பதெல்லாம் கல்வியே. உபதேசம் பெறுவதும், மந்திரம் கற்பதும், வித்தைகள் பல கற்பதும், இராஜயோகம் கற்பதும், வாசியோகம் கற்பதும், மதிமண்டல ஒழுக்குப்பற்றிக் கற்பதும், அதனைப் பெறுவதும்கூடக் கல்வியில் அடங்கும்.

அவ்வாறே அவத்தைகள் முறையில் பார்க்கும்போது, 1) விழிப்பு 2) கனவு 3) உறக்கம் ஆகிய மூன்று அவத்தைகள் வரை என்ன கற்றாலும் அவையும் கல்வியில் அடங்கும்.

நான்காவது நிலையாகிய பேருறக்க (துரிய) நிலைக்குப் போகும்போது, மனமாகிய கருவி வேலை செய்வதில்லை. அது மனத்துக்கு அப்பாற்பட்ட நிலை. அங்கு ஆன்மாவுக்குத் தன்னைப் பற்றிய நினைப்பு இருக்காது. அந்த நிலையில் ஆன்மா பெறுகிற அநுபவம் கல்வியைக் கடந்ததாகும். அது படிப்பு முடிந்த நிலை. அந்த நிலையில் எல்லாக் கருவிகளும் ஒடுங்கிவிடுகின்றன. அந்த உயர்ந்த நிலையில் ஏதேனும் வேலை நடக்குமானால் அவற்றைச் செய்கின்ற கருவிகளுக்குப் ''பதிகரணங்கள்'' என்று பெயர். ஏனென்றால், அச்செயல்கள் ஆன்ம முயற்சியால் நடப்பன அல்ல. அது முயற்சி ஓய்ந்த நிலை.

உலகியலில் ஒரு படிப்பைப் படித்து முடித்தபின் ஒரு எளிமை தட்டும். ஒவ்வொரு பட்டம் பெறும்போதும் அப்படி ஒரு நிலை வருவதுண்டு. அதைப்போலவே மூன்று அவத்தைகளைக் கடந்து அதாவது அந்த அவத்தைகளில் தேர்ச்சி பெறுவதற்கான கல்வியைக் கற்று முடித்தபின் நாலாவது நிலையாகிய துரியத்துக்கு வரும்போது ஒரு எளிமை தட்டும். அது ஓர் அமைந்த நிலை. அதற்கு மேல் கற்பதற்கு ஒன்றும் இல்லை.

ஆன்ம முயற்சியால் கற்கின்ற கல்வி முடிந்துபோன அந்த நிலையில், திருவருள் வந்து கூடுகிறது. அது தாயுமானவர் குறித்ததைப் போலப் ''படிப்பற்றுத் துடிப்பற்று'' உள்ள இடம். அது ''கற்று மறந்த'' இடம். இறைவனுடைய அநுபவத்தில் திளைத்திருக்கும் அந்த இடத்தில் முன்பு கற்ற கல்வி எதுவும் நினைவுக்கு வருவதில்லை.

இந்த உயர்ந்த நிலையில்தான் ''கடவுளை நம்பினோர் கை விடப்படார்'' என்னும் வாக்கு எழுந்தது. அந்த நிலையில் ஆன்மா பிடித்த கையை விட்டாலும் ஆண்டவன் விடமாட்டான். அந்த நிலை வருவதற்கு முன் ஆன்மா இறைவனைப் பிடித்துக் கொண்டாலும் (தன்னுணர்வோடு பிடித்துக்கொண்டு இருப்பதனால்) ஆண்டவன் கை கொடுப்பதில்லை. தள்ளாத ஒரு முதியவர் நடந்து வரும்போது நாம் கை கொடுத்துத் தாங்குகிறோம். அத்தகைய தள்ளாமை நமக்கு வரும்போதுதான் இறைவன் நம்மைத் தாங்கு வான். நாம் கல்வி கற்கிறோம் என்று எண்ணும்வரை நமக்கு அந்தத் தள்ளாமை வந்ததாகாது.

கல்வி, தவம், சரியை, கிரியை, யோகம் என்பவை எல்லாம் ஒரு காலத்தில் மறக்கத்தக்கவை. இவை ஒருகால எல்லைவரைதான் பயன்படும். அதனால் இவை தேவையற்றன என்பதில்லை. இவை முதலில் கட்டாயம் வேண்டும். ஞான வெளிப்பாடு வந்தபின் இவை தேவை இல்லை.

கல்வி என்பது ஒரே பிறவியில் பெற்றுவிடக்கூடியதன்று. கல்விக்கு மேற்பட்ட நிலைகளும் அவ்வாறே. எவ்வளவோ கல்வி கற்று, தவம் செய்த பெரியோர்கள் பெறாத பேற்றைக் கண்ணப்பர் அந்தப் பிறவியில் ஒன்றுமே செய்யாமல் பெற்றுவிட்டார். அப்படி என்றால் அவர் கல்வி கற்காதவர் என்று பொருளன்று. அவர் பல பிறவிகளில் கல்விகற்று அதன் பயனைப் பெற்றிருந்தார் என்பதே உண்மையாகும். சிலருக்கு வாழ்வு எளிமையாக அமைகிறது. சிலருக்குப் பெருமுயற்சி தேவைப்படுகிறது. அதற்குக் காரணம் முன்னமே முயன்றவர்களுக்கு எளிமையாயிற்று. மற்றவர்க்கு சிரம மாக முடிந்தது. எனவே, கல்வி கற்பதும் முயன்று வாழ்வதும் அனைவருக்கும் இன்றியமையாதது.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் கல்வி கற்பதற்கு ஏற்ற காலம் இளமைக்காலமாகும். அதனாலேயே ''இளமையில் கல்'' என்று ஔவைப்பிராட்டியார் கூறினார். அவரே ''ஓதுவது ஒழியேல்'' என்று சொன்னபோது, அதில் காலவரையறை இல்லை. அதாவது ஓதுதல் என்றும் நடைபெற வேண்டும். கல்விகற்றல் வேறு ஓதுதல் வேறு. கற்பது தனக்காக; ஓதுவது பிறர்க்காக. தாம் கற்றதைப் பிறர் நன்மைக்காக ஓதுவது என்றும் நடைபெற வேண்டும். இனி, ''சாந்துணையும் கல்லாதவாறு என்?'' என்றது, கல்விப்பயிற்சி

இல்லாதவரை எண்ணிச் சொன்னதாகும். செத்துப் போகும்வரை முயல வேண்டும் என்பதற்காக, அவ்வாறு கூறினார். இந்த அறிவுரைகளைக் கூர்ந்து நோக்கினால் அவற்றை அருளிச் செய்த சான்றோர்களுக்கிடையே முரண்பாடு ஏதும் இல்லை என்பது புலப்படும்.

ஓதுதலுக்கு எல்லை இல்லை. என்றும் யாரும் ஓத வேண்டும். தேவார திருவாசகங்களைச் சொல்லுவார்க்கு ''ஓதுவார்'' என்று பெயர். அவர் ஓதுவது பிறர் தெய்வ உணர்வு பெறுவதற்காக ஆகும். அதுவும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க அவர்கள் ஓதுவார்கள். ஒரு பொருளைப் பரிசாகக் கொடுக்கும்போது ''ஓதிக் கொடுத்தல்'' என்னும் வழக்கு உண்டு. அது பிறர்க்காகச் செய்வது. மாணிக்கவாசகர் ''திருக்கோவையரைப் பிறர்க்காக ஓதினார்''. அதற்கு முன்பு பாடிய பாடல்களை, அதாவது தமக்காகப் பாடிய பாடல்களைத் திருவாசகமாகத் தொகுத்துக் கொடுத்தார். ஆக, பிறர்க்காகச் செய்வது ஓதுதல் ஆகும்.

இங்கு அருணகிரியார் ''யாம் ஓதிய கல்வி'' என்று குறிப்பிட்டுள் ளார். அது, தாம் பிறர்க்காக ஓதி வைத்த கலை நூல்கள் என்று கொள்ள வேண்டும். மற்றும் ''ஓதும்'' என்னாது ''ஓதிய'' என்றதனால், அவர்களுடைய கல்வி அடங்கிவிட்டது என்பது குறிக்கப்பட்டது.

இனி, மேற்கூறிய கல்வி எல்லாமே பாச அறிவைச் சேர்ந்த தாகும். ஆன்மாக்கள்மேல் செலுத்தும் அன்பு அல்லது உணர்வு பசு அறிவு ஆகின்றது. அந்த முறையில் அருணகிரியார் ''யாம் ஓதிய கல்வி'' என்றது பாச ஞானமும், ''எம் அறிவும்'' என்றது பசு ஞானமும் ஆகின்றன. இவ்விரண்டையும் தமக்கு வேலவர் தந்ததாகக் கூறுகிறார். வேல் ஞானத்தைக் குறிக்கும். எனவே, இந்த இரண்டு ஞானங்களையும் ஒரு ஞானி தந்தார் என்று ஆயிற்று.

பாச, பசு ஞானங்களால் நாம் பெற்ற பயனை மீண்டும் இறைவனுக்கே திருப்பித்தர வேண்டும். அவை தாமே இறைவனைச் சேர மாட்டா. நாமே அவற்றை இறைவனிடம் சேர்க்க வேண்டும். நமக்கு வந்த படிப்பை, அறிவை இறைவனுக்குப் பயன்படுத்த வேண்டும். படிப்பையும் அறிவையும் நாமே என்றும் அநுபவித்துக் கொண்டு இருக்கலாம் என்று எண்ணினால், அவை பயன்படாமல் போம். மற்றும் அவற்றுக்கு மேற்பட்டவற்றை அடைய முடியாமலும்

போகும். நாம் பெற்ற கல்வியையும், அறிவையும், உலகியலுக்குப் பயன்படுத்தி அவற்றின் தரத்தைக் குறைத்துக்கொள்ளவும் கூடாது;. இறைவனுக்கே பயன்படுத்த வேண்டும். இயற்கை விளக்கங்களையும் உண்மைகளையும் பாடுவது இறைவனைப் பாடியதாகவே கொள்ளப் படும். சங்க நூல்கள் இத்தகையவை. முருக பத்தர்கள் முருகனுடைய புகழ் விளங்கவே தம்முடைய பொருளையும், கல்வியையும் அறிவையும் பயன்படுத்த வேண்டும்.

தேவார, திருவாசகங்களைப் பார்த்தால் அவர்கள் முழுமுதல் ஒன்றையே மதித்ததாகவும் அது ஒன்றனுக்கே, தம்முடைய எல்லாவற் றையும் ஈடுபடுத்தியதாகவும் தெரியும். அவர்கள் தம் பெரிய நிலையி லிருந்து சிறிதும் அசைந்து கொடுக்கமாட்டார்கள். சங்ககாலத்துப் புலவர்களும் அப்படியே இருந்தனர்.

ஆக, இறைவன் நமக்குத் தந்த கல்வியையும், அறிவையும் அவனுக்கே நாம் பயன்படுத்த வேண்டும் என்பதனை மேற்கூறிய இரண்டு அடிகளில் அருணகிரியார் தெரிவித்துள்ளார்.

(2) அதனால், பூமேல் மயல்போய், அறமெய்ப்புணர்வீர்

''அதனால்'' என்பது, கல்வியையும், அறிவையும் திருப்பித்தர வேண்டி இருப்பதனால் என்று பொருள்படும். பூ என்பது பூலோகம் அல்லது மண்ணுலகம். மயக்கம் என்பது அறிவு கலங்குதல். ''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்றதனால், அது வெறும் மண்ணையும் நீரையும் குறிக்காமல் உலக மக்களையும் அவர்கள் நடையையும் குறிக்கும். உலகம், முன் பாடல்களில் தெரிவித்தபடி துய்ப்புக்கான இடமாகும். துய்க்கின்ற இடங்களில் மயக்கம் வருவது இயல்பு. அந்த மயக்கத்தில் இருந்து விட்டால், இறைவனுக்குத் திருப்பித்தர வேண்டிய கல்வியையும், அறிவையும் தர முடியாமல் போகும். எனவே ''பூமேல் மயல்'' போக வேண்டுமென்று கூறினார்.

மயலைப் போக்கிக்கொண்டு அறத்தோடு சேரவேண்டும் என்று கூறுகிறார். 'அற' என்னும் சொல்லைப் ''போய் அற'' என்று 'போய்' ஒடு சேர்த்தும், ''அறமெய்'' என்று ''மெய்''யொடு சேர்த்தும் இருவகையில் பொருள் கொள்ளலாம். ஆனால் ''அறமெய்'' என்று ''மெய்''யொடு சேர்ப்பதே சரியான முறையாகும்.

அறம் என்னும் சொல்லைத் திருவள்ளுவர் பல்வேறு பொருள் களில் வழங்கியுள்ளார். தூய்மை என்றும், புண்ணியம் என்றும், நல்வினை என்றும், தருமம் என்றும், கடமை என்றும் கூறுவார். அவை எல்லாவற்றுள்ளும், 'கடமை' என்பதே அவர் கருத்துப்படிச் சிறந்த, பெரிய, முழுமையான, முதன்மையான, நிறைவான பொருளாகும். அறத்துக்குக் கடமை என்னும் பொருளைக் கொண் டால்தான் நல்வினை, தீவினை என்பனவற்றுக்குப் பொருத்தமான விளக்கம் காண முடியும். திருடும் செயல் தீது. ஆனால் ஒருவர், உயிரை மாய்த்துக் கொள்வதற்கு வைத்திருந்த நஞ்சை அவருடைய நண்பர் திருடி விடுவாரானால் அது திருட்டுச் செயல் ஆகுமா? நண்பரின் உயிரைக் காக்க வேண்டிய கடமைக்காக அவர் திருடியதால் அது அறச்செயலேயாகின்றது. குழந்தையை அதட்டுவது தவறு. ஆனால் குழந்தை திருந்த வேண்டுமென்னும் கடமை உணர்வால் தாய் அதட்டுவாளானால் அது அறச்செயலே. இந்த வகையிலேயே அறத்துக்குக் கடமை என்னும் கருத்தில், இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்பப் பொருள் செய்ய வேண்டும்.

அடியார்கள் செயல்களை ஆராயும்போதும், மேற்கூறிய கடமை, அல்லது 'இறைபணி' என்னும் கருத்துக்கொண்டே ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். இதில் மற்றும் ஒரு குறிப்பு உள்ளது. கடமை செய்பவர் உண்மையானவர்களானால் அவர்களுடைய செயல்களில் தன்னலம் இருக்காது. அது ஒன்றைக்கொண்டே எது உண்மையான அறச்செயல் எது அல்லாத செயல் என்று கண்டுகொள்ளலாம். ஒரு செயல் தனக்கு நன்மை செய்தாலும், தீமை செய்தாலும் கடமை ஒன்றையே கருதி செய்யப்படுமானால் அது அறச்செயல் ஆகும்.

மேற்கூறிய கடமை கருதிச் செய்யப்படும் அறச்செயல்களையே தமக்கு உடம்பாகக் கொள்ள வேண்டும் என்று அருணகிரியார் கூறுகிறார். ''அறமெய்ப் புணர்வீர்'' என்றது இதுவேயாகும். மெய் என்பது உடம்பு அல்லது உருவம். கடமையே உருவாக மாற வேண்டும். எந்த நிலையிலும் கடமையைத் தவறாமல் செய்பவரே அறமெய்ப் புணர்ந்தவர் ஆவார்.

''மெய்'' என்னும் சொல்லுக்கு உடம்பு அல்லது உருவம் என்று கொள்ளாமல் ''உண்மை'' என்று கொண்டு அறமாகிய உண்மையைச் சேருங்கள் என்று கொண்டாலும் மேற்கூறிய கருத்தே வரும். எவ்வகையிலும் அறமெனப்படும் கடமையைச் சேர்வது முதன்மை.

(3) இனியே நாமேல் நடவீர், நடவீர்

''இனியே'' என்றது இனிமேல் ஆகும். அதாவது பூவுலகில் உண்டாகும் மயலைப் போக்கிக்கொண்டு அறவுருவாக, கடமையே கண்ணாகக் கொண்டபின் என்று ஆகும். இந்த நிலையை அடைந்தவர்களுக்கு அருள் கைகூடும். அவர்கள் முயலாமலே கவிதை பாடும் ஆற்றல் வரும்.

நா என்பது நாக்கு என்றும், நடு என்றும் உள்நாக்கு என்றும் பொருளாகும். நாக்குச் சரியாக இருந்தால் பேச்சு அல்லது வாக்கு நன்றாக அமையும். நாமேல் நடவீர் என்பது நாக்கின்மேல் நடனமாடுவீர் அல்லது உலா வருவீர் என்பதாகும். அது கவி பாடுவதையும் உரையாடுவதையும் குறிக்கும்.

முதலில் வந்த ''நடவீர்'' என்பது தமக்கெனப் பாராயணம் செய்வதையும் இரண்டாவது வந்த ''நடவீர்'' என்பது பிறர்க்கெனப் பாராயணம் செய்வதையும் குறிக்கும். பாராயணமே அன்றிக் கவிபாடுதலும் அடங்கும். நாக்கால் செய்யும் தொண்டுக்கு ''ஞான விசேஷம்'' (ஞான தானம்) என்று பெயர்.

உண்மையோடு சேர்ந்தார்க்கே வாக்கு நன்றாக வரும். அவர்களே அருள் பெற்ற அடியார்கள். அவர்களுக்கே கவிதை பாட வரும்.

சரியை, கிரியை, யோகங்களைக் கடந்தது வாக்கு. அது விந்துவிலிருந்து தோன்றுவதாகும். நாதம் விந்து தத்துவத்தில் படியும்போது தோன்றுவதாகும். இறைவனைப் பாடுவதில் அடியார் களுக்குச் சோர்வோ, சலிப்போ தோன்றுவதில்லை.

நாமேல் நடவீர் நடவீர் என்றதனால், வேறு எங்கோ சென்று அலைய வேண்டாம், வாக்கால் பணி செய்தால் போதும் என்னும் கருத்தும் வருகிறது.


ஆக, இப்பாடலில் அருணகிரியார், இறைவன் தந்த கல்வியை யும், அறிவையும் அவனுக்கே தர வேண்டும் என்றும் அதனால் உலகப்பற்றை விட்டு, கடமையாகிய அறத்தையே உருவாகப் பெற்று, இனிமேல் வாக்குப்பணியைச் செய்ய வேண்டும் என்றும் அறிவுரை கூறியுள்ளார்.

III சக்கரம்

இப்பாடல் உலகின் மேலுள்ள மையல் போகவேண்டும் என்று கூறுகிறது. துரத்துவதற்கு அல்லது ஒட்டுவதற்கு ஏற்ற ஒலி தகரம் என்று முன்பு பார்த்தோம்.

முதல் ''த''கரம் - தத்துவத்தைப்பற்றியும்
இரண்டாவது ''த°''கரம் அதட்டலையும்
மூன்றாவது ''தஃ''கரம் சூனிய நிலையையும்,

இப்பாடலுக்குரிய நான்காவதாகிய ''தஃ°''கரம் அழுத்தமாய் ஒட்டுவதையும் குறிப்பனவாய் உள்ளன. எனவே இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு அமைகிறது:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு - 18

உதியா, மரியா, உணரா, மறவா,
விதி, மால் அறியா விமலன் புதல்வா,
அதிகா, அநகா, அபயா அமரா—
-வதிகாவல, சூர பயங்கரனே!

I பொழிப்புரை

ஒரு தாய் வயிற்றில் பிறவாதவனும், இறப்பு இல்லாதவனும், ஒன்றைப் புதிதாக உணர்தலும், பிறகு மறத்தலும் இல்லாதவனும், (கல்வியாலும்) பிரமனாலும், (செல்வத்தாலும்) திருமாலாலும் அறியமுடியாதவனும் ஆகிய, மலத்தால் தாக்குறாத சிவபெருமானுடைய புதல்வனே! எதிலும் ஓங்கி இருப்பவனும், பழிப்பு இல்லாதவனும், பயமற்ற தன்மையைத் தருபவனும் ஆகி தேவர்களின் அமராவதி நகரைக் காத்தவனே!! சூரனுக்குப் பயத்தை உண்டாக்கியவனே!!!

II விளக்கவுரை

இதுவரை நாம் பார்த்த பாடல்களுக்கும் இந்தப்பாடலுக்கும் ஒரு வேறுபாடு தெரிகிறது. அதாவது, இப்பாடலில் ஆண்டவனை அதிகா! அநகா! அபயா! என அழைப்பது மட்டும்தான் தெரிகிறது. அழைத்து, இன்னதைத் தரவேண்டுமென்றோ, செய்ய வேண்டுமென்றோ கேட்பதைக் காணோம். அதாவது துதிப்பது மட்டும்தான் தெரிகிறது. ஒருவரைக் கூப்பிட்டு ஒன்றும் சொல்லாமல் போனால், அழைக்கப்பட்டவரே ஆவலோடு கருத்தூன்றிக் கவனிப்பார்.

தமக்கு என்ன வேண்டுமென்பதைச் சொல்லாவிட்டாலும், அக்கருத்துக்கள் அமைந்த சொற்களால் முருகனைக் கூப்பிட்டுள்ளார்.

முதல் இரண்டு வரிகளில், சிவபெருமானின் புதல்வனே என்றும் பின் இரண்டு வரிகளில், அமராவதி நகரைக் காத்தவனே என்றும், சூர பயங்கரனே! என்றும் கூறியுள்ளார்.

சிவபெருமானை விமலன் என்று குறித்ததோடு அவனுடைய இயல்புகளை ஐந்து அடைமொழிகளையும் கொண்டு விளக்குகிறார். முதலில் விமலன் புதல்வா என்பது பற்றிப் பார்ப்போம்:

(1) விமலன் புதல்வா

வி+மலன் விமலன் ஆகிறது. மலன் என்றால் மலம் உடையவன். வி என்பது, மலம் இன்மையையும் விசேஷத் தன்மையையும் குறிக்கும். இறைவன் மலமாகிய பாசப் பண்டங்களை ஆன்மாக்களின் பொருட்டுப் பயன்படுத்துகிறான். பயன்படுத்தினாலும் அவற்றால், தான் தாக்குறாமல், தன் தூய்மை கெடாமல் இருப்பதனால் அவனுக்கு விமலன் என்று பெயர் வந்தது.

[விமலன் என்பதோடு, அமலன் என்றும் நிமலன் என்று கூட அவனுக்குப் பெயர்கள் உள்ளன. அமலன் என்றால் **மலம் அல்லாதவன்** என்று பொருள். பாசத்துக்கு வேறானவன் என்பது அதன் கருத்து. பாசப்பொருள்களோடு பழகிக்கொண்டு இருக்கும் ஆன்மாக்கள், அப்பொருள்களுள் அவனைக் காண இயலாது, அவன் அதற்கு வேறானவன் என்பதனை அறிவுறுத்தும் பொருட்டு அவனை 'அமலன்' என்றனர்.

ஒரு குழந்தை இரண்டு மனிதரிடையே பழகுகிறது என்று வைத்துக் கொள்வோம். அக்குழந்தை அழும்பொழுதும், சிரிக்கும் போதும் அவற்றுக்கான தாக்குதல், குழந்தைக்கு உரியவரிடம் காணப்படும். அடுத்தவருக்கு அத்தாக்குதல், (குழந்தையோடு இருந்தாலும்) வருவதில்லை. இவ்வாறு தாக்குதல் இல்லாத மனிதரைப் போன்றவனே இறைவன் ஆவான். அவன் மலத்தொடு பழகினாலும் அதன் தாக்குதல் இல்லாதவனாய் இருக்கின்றான். எனவே, நிமலன் எனப்பட்டான்].

விமலனுடைய புதல்வனே என்று முருகனை அழைக்கின்றார். தந்தையை விட மகன் சிறந்தவனாய் இருக்க வேண்டுவது முறை. அவ்வாறே முருகனும் ''தகப்பன் சாமி'' என்றும், ''சிவகுரு'' என்றும் பெயர் பெற்றுச் சிறந்து விளங்குகின்றான்.

விமலன் எப்படிப்பட்டவன் என்பதனை விளக்குவதற்கு ஐந்து அடைமொழிகளை அருணகிரியார் பயன்படுத்தியுள்ளார். அவை அ) உதியா ஆ) மரியா இ) உணரா ஈ) மறவா உ) விதிமால் அறியா என்பன. இவற்றின் விளக்கத்தைக் காண்போமாக:

(2) உதியா

உதித்தல் இல்லாதவன் உதியாதவன். தாய் உந்தியில் இருந்து உந்தப்படுவது உதித்தலாகும். உந்தும் ஆற்றலைப் பெற்றிருப்பது உந்தி. (உந்துதல் தமிழ்ச்சொல் ஆனதால் உதித்தலும் தமிழே ஆகும்). இறைவனுடைய இலக்கணங்களுள் முதன்மையானது - ஒரு தாய் வயிற்றில் பிறவாமை. முழுமுதல் இறைவன் இன்னார் வயிற்றில் தோன்றினான் என்று யாரேனும் சொன்னால், அது உண்மையாகாது. பிறப்பது ஆன்மாவேயன்றி இறைவன் அல்லன். ஆன்மாவுக்கு ஆணவம் இருக்கும்வரை வினை உண்டு. வினை இருக்கும்வரை பிறப்பு உண்டு. எனவே பிறப்பெடுப்பது ஆன்மாவேயன்றி இறைவன் அல்லன்.

சமயங்கள் பலவாய் இருப்பதனால் அவற்றுக்குள் வேறுபாடுகள் இருப்பதைத் தவிர்க்க இயலாது. அவற்றுள் இறைவனுக்குப் பிறப்பு இறப்பு சொல்லாத சமயமே உயர்ந்ததாகும். எனவே இறைவன் பிறப்பில்லாதவன் என்று அருணகிரியார் சொன்னதனால் இறைவனுக்கு முதல் மரியாதையை அவர் செலுத்தியதாகும்.

இதனால் இறைவனைக் காணவே இயலாது என்பது பொருளன்று. இறைவனுக்கு அருவம், உருவம், அருவுருவம், இவை அல்லாதது ஆகிய நிலைகள் உண்டு என்பது சைவ சமயக் கோட்பாடாகும். இதன்படி இறைவன் கண்ணுக்குப் புலனாகும்படித் தோன்றி மறையவும் கூடும். ஏனெனின், அவன் எல்லாம் வல்லவன். ''நிலந்தன்மேல் வந்து அருளி நீள் கழல்கள் காட்டி'' என்றதனால் இதனை அறியலாம். (நிர்குணப் பிரம்மம் என்பது வேதத்துக்கு உடன்பாடில்லை. இச்செய்தி இன்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு சிவத்திரு. மறைமலையடிகளாராலும் மற்றும் சிலராலும் ஆராய்ந்து நிறுவப்பட்டது).

அருணகிரியார் முதன் முதலில் இந்த இறை இலக்கணத்தைக் குறிப்பிடுவது, தமக்கும் பிறவாநிலை வேண்டுமென்பதைக் குறிப்பால் உணர்த்தியதாகும்.

(3) மரியா

மரித்தல் இல்லாதது மரியாததாகும். மரித்தல் என்பது மறைதல் அல்லது மரணம் ஆகும். பிறக்கின்ற ஆன்மாக்கள் மரணம் அடையும். இறைவன் பிறவாதவன் ஆனதால் அவனுக்கு மரணம் என்பதில்லை.

யாரேனும் மரணம் அடைந்தார் என்றால் அவர் இறைவர் ஆகமாட்டார்.

இறைவன் பிறப்பு இறப்பு இல்லாதவன் என்னும் அடிப்படை உண்மையில் நமக்கு எத்தகைய ஐயப்பாடும் இல்லாத தெளிவு இருக்க வேண்டும். அதோடு அதற்கேற்ப மதித்து நடத்தலும் வேண்டும்.

நாம் அடைய வேண்டிய ஒரே குறிக்கோள் இந்தப் ''பிறவா இறவா'' நிலையாகிய தெய்வ நிலையேயாகும்.

(4) உணரா மறவா

இறைவனுக்குப் புதிதாக ஒன்றை உணர வேண்டிய நிலையும், அதனை மறத்தலாகிய நிலையும் இல்லை. இயல்பாகவே எல்லாவற்றையும் அவன் உணர்ந்தவன் ஆவான். நினைப்பைப் பகல் என்றும் மறதியை இரவென்றும் கூறுவர். இவ்விரண்டும் அவனுக்கு இல்லாமையால் அவனுடைய நிலை இரவு பகலற்ற நிலையாகும்.

ஆன்மா கருவிகரணங்களோடு சேர்ந்துள்ள நிலைக்குச் சகல நிலை அல்லது நினைப்பு (உணரும்) நிலை என்று பெயர். கருவிகரணங்களைப் பெறுவதற்கு முன்பு உணர்வற்ற இருண்டநிலையில் இருந்தது. அந்த நிலைக்குக் கேவல நிலை என்று பெயர். இறைவனுக்கு இந்த இரண்டு நிலைகளும் இல்லையாதலால், அவனை உணரா, மறவா நிலையினன் என்று குறிப்பிட்டார்.

(5) விதி, மால் அறியா

நான்முகனை இங்கு ''விதி'' என்று குறிப்பிட்டார். இவர் ஆன்மாக்களின் விதியை விதிப்பவராவார். அதாவது நல்வினை, தீவினைகளை ஆராய்ந்து இன்ன ஆன்மாவுக்கு இப்பிறவியில் நுகர இவ்வளவு வினையைச் சேர்க்க வேண்டுமென்று திட்டமிட்டுச் சேர்ப்பவர். இவர் ஒழுங்குடையவர்.

''மால்'' என்னும் சொல்லுக்குப் பெரியவர் என்றும் மயக்குபவர் என்றும் பொருள்கள் உள்ளன. ''திருமால்'' என்பவர் தெய்வத் தன்மை பொருந்திய பெரியவர் ஆவார். இவரே ஆன்மாக்களுக்குப் பொருளைச் சேர்ப்பவர். அவற்றைச் சேர்ப்பதோடு, அவற்றுடன் ஒரு மயக்கத்தையும் கொடுப்பார். இதனால் இளமை, செல்வம்,

போகம், பதவி முதலியவை வரும்போது, ஒரு மயக்கமும் வருவதை நாம் அறிவோம்.

ஒழுங்குபடுத்துபவர் விதி ஆகிய பிரம்மா என்பதனைப் பார்த்தோம். மேற்கூறிய இரண்டையும் தெளிவுபடுத்துவது இறையருளாகிய ஞானம். இதற்கு அதிதேவதை உருத்திரன் ஆவார்.

இந்த மூன்று செயற்பாடுகளும் அதாவது மயங்குதலும் ஒழுங்குபடுதலும், தெளிவு பெறுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் என்றும் எங்கும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இறையருள் இல்லாமல் செல்வமும், கல்வியும் உடையவர்கள் ஞானம் பெற்றுவிட முடியாது. உருத்திரன் ஞானத்துக்கு அதிதேவதை என்றாலும், உருத்திரன் முழுமுதல் இறைவன் அல்லன். செல்வத்துக்குத் திருமாலும் கல்விக்குப் பிரமனும் அதிதேவதை என்பதுபோல உருத்திரன் ஆன்ம அறிவிலே உதிக்கும் மெய்யறிவுக்கு அதிதேவதையாவான். உருத்திரனுக்கு மேற்பட்ட வளர்ச்சி நிலைகளுக்கு மகேச்வரன், சதாசிவன் என்னும் அதிதேதைகள் உள்ளனர்.

சதாசிவநிலையும் இறுதியானதன்று. மெய்ஞ்ஞானத்திற்கும் சத்திக்கும் எட்டாதது இறைநிலை. ''கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின் நோக்கரிய நோக்கே'' என்றதனால் இது விளங்கும்.

முத்தி நிலையிலும் கூட இறைநிலையை ஓரளவு அநுபவிக்கலாமேயல்லாது அவனை முழுமையாகத் துய்ப்பதென்பது இயலாது. இதற்கான படிமுறைகளை எண்ணும்போது அவை வருமாறு அமையும்:

1. தத்துவங்களின் உச்சி - நாதாந்தம்.
2. அதற்கு மேம்பட்ட மற்றும் அதனால் வரும் நிலை - போதாந்தம்.
3. அதற்கு மேம்பட்ட அதனைப் பயன்படுத்தும் இரக்கம் கலந்த நிலை - கலாந்தம்.
4. இறைவனோடு கூடிய நிலை - யோகாந்தம்.
5. இறைவனைத் தான் என அநுபவிக்கும் நிலை - வேதாந்தம்.
6. அதற்கும் அடுத்த - தன்னையும் மறந்த முடிந்த நிலை - சித்தாந்தம்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு ''விதி மால் அறியா'' என்னும் தொடருக்குப் பொருள் காணும்போது அதன் சரியான் நிலை விளங்கும்.

மண்முதல் 36 தத்துவங்களுடன் பக்குவமாகப் பழகிக் கொள் வது கல்வி எனப்படும். கல்வி, பொருளிலிருந்து வருவதாகும். அதனாலேயே திருமாலிலிருந்து பிரமன் தோன்றினான் என்பர். செல்வந்தர் ஒரே முகமாய்ப் பார்ப்பர். கல்வியாளர் நாலாபக்கமும் பார்ப்பர். அதனால் திருமாலுக்கு ஒருமுகம் என்றும், பிரமனுக்கு நான்கு முகம் என்றும் கூறினர். பிரமன் மேலான நூல்களைக் கற்றறிந்த அறிஞர் ஆவார். அவருக்கு வேதா என்றும் பெயர் உண்டு. நாலாபக்கமும் பார்க்கின்ற சாதாரண கல்வி நிலையிலிருந்து தெய்வ சிந்தனை வரும்போது பார்வை மேல்திசைக்குச் செல்லும். அத்தெய்வ சிந்தனையேயன்றி செருக்கினாலும் மேலே பார்ப் பதுண்டு. இறைவன் அச்செருக்கை ஒடுக்கினான் என்பதனை விளக்கவே, பிரமனின் மேலே பார்த்த ஐந்தாவது முகத்தைக் கிள்ளி எறிந்தான் என்றனர். தெய்வ சிந்தனையை மேலே பார்க்காமல் உள்ளே பார்ப்பதுதான் அதோ முகம் எனப்படும் ஆறாவது முகம் ஆகும்.

இனி, பொருளையும் கல்வியையும் கொண்டு எந்த அளவுக்கு இறைவனைத் தேட முடியும் என்பது மேற்கூறிய உண்மைகளைக் கொண்டு ஒருவாறு புரிந்து கொள்ளலாம். இவ்விரண்டுக்கும் இறை நிலைக்கும் உள்ள இடைவெளி அதாவது சேய்மை ஒருவாறு விளங்கும். பொருளாலும், அறிவாலும் ஒளிவடிவாகிய இறைவனைக் காண இயலாது என்பதனைத் திருவண்ணாமலை விளக்கு (தீபம்) காட்டுகிறது. அவனைக் காண்பதற்கு அருள் ஒன்றே துணை செய்யவல்லது. இதனையே ''ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்'' என்று வள்ளலாரும் கூறினார். ஆக விதியாகிய பிரமனாலும், பொருளாகிய திருமாலாலும் காணமுடியாத இறைவன் என்று அருணகிரியார் இறைவனின் இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

இதுவரை முருகன் விமலனுடைய புதல்வன் என்பதையும், விமலனுடைய அடைமொழிகளின் விளக்கங்களையும் பார்த்தோம். அடுத்து முருகன், தேவர்களைக் காத்தவன் என்பதனையும் அவன் சூரனுக்கு அச்சத்தைக் கொடுத்தான் என்பது பற்றியும் கூறி, முருகனுக்கான மூன்று அடைமொழிகளையும் கூறுகிறார். அவை

'அதிகா', 'அநகா', 'அபயா' என்பவை. அவற்றின் விளக்கங்களைக் காண்போமாக:

(6) அதிகா

முருகன் எதிலும் ஓங்கி நிற்பவன்; அதிகமானவன்; தெரிகின்ற தோற்றங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்; எட்டாதவன்; திசைக்கு அப்பாற்பட்டவன். அவன் எல்லாமானவன் ஆனதனால் - அதிகன் எனப்பட்டான்.

(7) அநகா

அவன் நகுதல், ஏளனம், பழிப்பு முதலியவை இல்லாதவன். நகுதலுக்கு இடமில்லாதவன் ஆனதனால் அநகன்.

(8) அபயா

அவன் பத்தர்களுக்குப் பயமற்ற தன்மையைத் தருபவன். ஒரு செயல் வெற்றி பெறுமோ, பெறாதோ என்பதுதான் பயங்களுள் பெரிய பயமாகும். அதாவது பயனை விரும்பி ஒரு செயலைச் செய்பவருக்கு இந்தப்பயம் இருக்கும். பயன் கருதிச்செய்யாதவர்கள் பயப்பட மாட்டார்கள். அப்பயன் கருதா நிலையையும், பயம் இல்லா நிலையையும் முருகன் அருளுவான். ஆனதனால் அவன் அபயன் ஆவான். முருகன் அதிகனாய் இருப்பதனால், அநகனாயும், அதனால் அபயம் தருபவனாயும் இருக்கின்றான்.

(9) அமராவதி காவல, சூர பயங்கரனே!

தேவர்களுக்குச் சூரனால் கெடுதி வந்தபோது, முருகன் சூரனை அடக்கி, அவர்களைக் காப்பாற்றினான். அதைக் குறிப்பிடுவதற்காக அவர்கள் தலைநகராகிய அமராவதியைக் காத்தான் என்று கூறினார்.


நல்லவர்களாகிய தேவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், தீயவர்களுக்குப் பயங்கரமானவனாக மாற வேண்டியுள்ளது. எனவே சூர பயங்கரனே என்றார்.

ஆக, இந்தப்பாடலில் இறைவனை ஒன்றும் கேட்காமலே, அவனைத் துதித்ததோடு முடித்துவிட்டார் அருணகிரியார். இறைவனோடு உறவு கொண்டால், அவன் குறிப்பறிந்து வேண்டுவனவற்றைக் கொடுப்பான்.

இப்பாடல் நல்ல துதிப்பாடல்; இறைவன் மயமாகும் பாடல். சகசமாய் விளங்கக்கூடிய மாறுதலில்லாத உயர்ந்த பாடலாய் அமைந்துள்ளது. இறைவனைப் புகழ்வதைவிட வேறு என்ன வேலை செய்ய வேண்டி இருக்கிறது?

III சக்கரம்

இப்பாடல் மெய்யுணர்வு நிலையாகிய ஒளிநிலை அல்லது சோதிநிலையைக் குறித்தது. இப்பாடலுக்கான அதிதேவதைக்குச் ''சோதி தேவன்'' என்று பெயர். முன்பாடல்களில் வந்த பாசப் பொருள்களைத் துறத்துகின்ற பயிற்சிக்கு மேற்பட்ட நிலை பயனைத்த ரும் நிலையாகும். அப்பயன் ''நன்மை''யானதாலும் நன்மையைக் குறிக்கும் எழுத்து 'ந'கரம் ஆனதாலும் இப்பாடலுக்குரிய எழுத்து 'ந'கரம் ஆகும். சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-19

வடிவும், தனமும், மனமும், குணமும்
குடியும், குலமும், குடி போகியவா!
அடி அந்தம் இலா அயில்வேல் அரசே!!
மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே.

I பொழிப்புரை

தோற்றமும் இறுதியும் இல்லாத மெய்ஞ்ஞானம் ஆகிய கூர்மையான வேற்படையை உடைய அரசே! வறுமை என்னும் ஒரு தீமை வந்த உடனே அழகு, செல்வம், நல்ல மனம், நல்ல குணம், நல்ல குடியின் பெருமை, நல்ல சூழல் ஆகியவை ஒரு சேர விலகிப்போவது எவ்வளவு வியப்பாய் உள்ளது!!

II விளக்கவுரை

இந்தப் பாடலில் மனிதனுக்கு என்னென்ன சிறப்புகள் இருக்க வேண்டும் என்பதனையும், அவை வறுமை வந்தாலும் மறையக் கூடாது என்னும் தம் கருத்தையும் அருணகிரிநாதர் தெரிவித்துள்ளார். மனிதனுக்கு இருக்க வேண்டிய சிறப்புக்களுள் ஆறு அம்சங்களை இங்குக் குறிப்பிட்டுள்ளார். அவை வடிவு, தனம், மனம், குணம், குடி, குலம் என்பவை. அவற்றின் விளக்கங்களைக் காண்போமாக:

(1) வடிவும்

வடிவு என்பது தீர்மானமாக வடித்தெடுக்கப்பட்ட (with a fine finish) உருவமாகும். அவ்வாறு வடிக்கப்பட்ட உருவம் மிக அழகாய் இருக்கும்.

அழகை எல்லோரும் விரும்புவர். அம்பிகைக்கே ''வடிவாம்பிகை'' என்னும் பெயர் உண்டு. மனிதர்களும், ''அழகன்'' என்றும் ''சுந்தரம்'' என்றும், ''அழகு சுந்தரம்'' என்றும் பெயர் வைத்துக்கொள்கின்றனர். இதனால் மக்களுக்கு அழகின்மேல் உள்ள விருப்பம் புலப்படுகிறது.

ஆனால் அழகாய்ப் பிறப்பவர் சிலரே ஆவர். அவர்களும், மேலும் அழகு செய்து கொள்கின்றனர். மக்கள் வாழ்வே அழகை அவாவிக் கொண்டு, அழகில் திளைக்கிறது என்று சொல்லும்படி உள்ளது.

சிலருக்கு எவ்வளவு அழகு செய்தாலும் அது அமையாமல் போவதும் உண்டு. அழகுக்காக நம் நாட்டிலும், குறிப்பாக மேல்நாடுகளிலும் பெருந்தொகை செலவிடப்படுகிறது. இந்த நிலை முற்காலத்திலும் இவ்வாறே இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தின்படி அதாவது 1800 ஆண்டுகளுக்கு முன்பு, மாதவி, இசை, நடனம் பயின்றதோடு, அழகு செய்து கொள்வதுபற்றிமட்டும் ஏழு ஆண்டுகள் பயின்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதனால் அழகுக் கலையைப் பயில்வதற்கு அவ்வளவு கல்வி இருந்திருக்கிறது என்பது தெரிகிறது.

அழகுப்பொருள்களுள் தற்கால சாதனங்களுக்கும் முற்கால சாதனங்களுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. பண்டைக்காலத்தில் இயற்கையை ஒட்டிய உயர்ந்த மூலிகைகளால் செய்து வந்தனர். இன்று இரசாயனப் பொருள்களால் செய்கின்றனர். தலைமுடியை (மயிரை) அலங்கரித்து மணப்படுத்த நூற்றுக்கணக்கான மூலிகைகளைக் கலந்த கலப்புகளைச் செய்து பயன்படுத்தி வந்தனர். அந்த மூலிகைகளால் நோய் உண்டாவதில்லை. மாறாக நோய் குணமாகும். குளிப்பதற்கும் அவ்வாறே பல மூலிகைகளைக் கொண்ட சாந்துகளைச் செய்தனர். அழகு செய்யும் கலை இக்காலத்தில்தான் வந்துள்ளது என்று சிலர் கருதுகின்றனர். அக்கலை இப்போது இருப்பதைவிடப் பண்டைய நாகரிகத்தில் சிறந்து விளங்கி இருந்திருக்கிறது.

(2) தனமும்

தனம் என்பது சொத்து; அதாவது வீடு, வாசல், நிலம், நீர், மக்கள் எல்லாம் சேர்ந்ததாகும். அது வெறும் காசு மட்டும் அன்று. நகைகளும் இதில் அடங்கும்.

வடிவுக்கு அடுத்து, ''தனமும்'' என்று சொன்னதற்கு ஒரு காரணம் உள்ளது. அழகு உடையவர்களுக்குத் தனம் இல்லாவிட்டால் இரங்கத்தக்க நிலை வந்துவிடும். அழகுடையவர்களுக்குத் தனம் நிறைந்த நல்ல சூழல் அவசியம் ஆகும். எனவே தனத்தை இரண்டாவதாகக் கூறினார்.

(3) மனமும்

தனம் நிறைந்த இடத்தில் பொதுவாக மனம் செம்மையாய் அமைவதில்லை. அவ்வாறின்றி தனத்தோடு நல்ல மனமும் அமையு மானால் மனித வாழ்வு சிறக்கும். நல்ல காரியங்கள், அவை இரண்டும் சேர்ந்தால்தான் நாட்டில் நடைபெறும். தனம் இருப்பவர்க ளுக்கே மனம் மேலும் விரிவாய் இருக்க வேண்டும் என்பதனைக் குறிப்பதற்கே தனத்துக்கு அடுத்து மனத்தைக் கூறினார்.

மனம் நன்மை, தூய்மை, விரிவு, நுட்பம் ஆகிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(4) குணமும்

குணம் என்னும் சொல் இரண்டு இடங்களில் பயன்படுத்தப்படு கின்றது. 1) 24 தத்துவங்கள் அடங்குகின்ற முக்குணம் எனப்படும் சாத்துவிக, இராஜச, தாமத குணங்களைக் குறிப்பது ஒன்று. 2) உயிருக்கு அமைய வேண்டிய அன்பு, அருள், ஈகை முதலிய குணங்களைக் குறிப்பது இரண்டாவது.

முக்குணங்களுள் சிறந்தது சாத்துவிகம். அது இருக்கும்போது நல்ல பழக்க வழக்கங்கள் அமையும். அதனாலேயே சேக்கிழார் பெருமான் ''குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக'' என்று கூறினார். சாத்துவிகம் வந்த பிறகே நல்ல குணங்கள் வரும்.

(5) குடியும்

குடி என்பது இல்லறம் நடத்தும் பண்போடு கூடிய சிறப்பு நிலையாகும். இல்லறம் நடத்துவோர் இல்லறக்கடமைகளை வழுவா மல் செய்யும்போது அவர்கள் நல்ல குடியினர் என்று புகழப்படுவர். இச்சிறப்பு இல்லறத்தார்க்கு மட்டுமே உரியது. ('துறவுக்கு இப்படி ஒரு சிறப்பு இல்லை. ஏனென்றால் துறவிக்குக் குறிப்பிட்ட கடமைகள் என்று வரம்பு இல்லை. அது அருள் அடிப்படையில் நடைபெறுவது). ஆக தமக்கமைந்துள்ள சூழலிலே, அன்போடு கடமை தவறாமல் செய்யப்படும் இல்லறம் நல்ல 'குடி'யாகின்றது. அக்கடமைகள் எவை எவை என்பதனைத் திருவள்ளுவர் விளக்கமாகவும் விரிவாகவும் கொடுத்துள்ளார். (துறவுக்கும் சில ஒழுக்கங்கள் கொடுக்கப்பட்டுள்

என என்றாலும், அவற்றையும் இல்லறத்திலிருந்துகொண்டே செய்ய லாம். அதாவது இல்லறத்தில் இருந்துகொண்டே, சிறந்த குடி என்னும் பெயரைப் பெறுவதோடு துறவியாகவும் இருக்கலாம்).

இல்லறத்தார் ஒரு நாளைக்கு 4 மணிக்கு மேல் பொருள் ஈட்ட வேண்டுவதில்லை என்பது இந்நாட்டின் கொள்கையாய் இருந்திருக்கிறது. மற்ற நேரங்களில் செய்ய வேண்டிய வேறு கடமைகள் வகுக்கப்பட்டிருந்தன. காலையில் 4 மணிநேரத்தை **உழவுக்குப்** பயன்படுத்தி விட்டு, அடுத்த 4 மணிநேரத்தை **அறத்துக்கும்,** அதற்கடுத்த 4 மணி நேரத்தை **இன்பத்துக்கும்** செலவிட வேண்டும் என்பது நக்கீரர் வகுத்த முறையாகும். அறத்துக்குரிய நேரம் வழிபாட்டுக்கும் நல்ல உரைகளைக் கேட்பதற் கும் பயன்படவேண்டும். இன்பத்துக்குரிய நேரத்தில் செய்ய வேண்டுபவை அழகியலைத் துய்ப்பதும், கலைகளை வளர்ப்பதும், இயற்கையின் கோலங்களையும் இனிமை களையும் அநுபவிப்பதும் ஆம்.

நாயன்மார்களுள் பலர் குடித்தனம் நடத்தியவராவர். அவர்கள் குடித்தன ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினர். குடிப்பெயர் என்பது ஒழுக்கத்தால் வருவதேயாகும். ஒருவர் நல்ல குடியைச் சேர்ந்தவர் என்றால், அவருடைய தாயும், தந்தையும், குடித்தன ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினர் என்பது பொருளாகும். அவர்கள் இல்லறக்கடமை களைப் பொறுப்போடு செய்தனர் என்பது பொருள். முன்னோர் செல்வம் பின் தலைமுறையினர்க்கு ஆவதுபோல நல்ல குடியில் பிறந்தோர்க்கு, அக்குடிக்கான நல்ல ஒழுக்கங்கள் தாமே இயல்பாக (சுலபமாக) வந்து அமைகின்றன.

(6) குலமும்

குலம் என்பதனையும், சாதி என்பதனையும் ஒன்றாகவே கருதுகின்றனர். அவ்விரண்டும் வேறானவை. குலம் என்னும் சொல்லுக்கு வளைந்து, சுற்றி, பக்கத்திலே இருப்பவர் என்று பொருளாகும். குல்லா வட்டமாக இருக்கும். குலத்தார் என்பவர் வட்டமாய் அருகிருப்போராவர்.

சாதி என்பது தொழிலால் வருகிற பிரிவாகும். ஒரு குறிப்பிட்ட தொழிலைச் சாதிக்கவல்லவர் இன்ன சாதியார் என்று அழைக்கப்பட் டனர். ஒரு தொழிலைச் சாதிக்கும் கோட்பாடு, உறுதி, நோக்கம்,

போக்கு அதற்கான திறன் உள்ளவர்கள் இயல்பாகவே பிரிந்து வாழ்வதை இன்றும் காணலாம். இது பண்டைக் காலத்திலும், இயல்பாகவே அமைந்திருக்கிறது. இப்பிரிவு ஒருவகையில் நல்லதே யாகும். ஆனால் சாதி பிரிந்ததற்கு அடிப்படைக் காரணமாய் இருந்த தொழிலை இப்பொழுது செய்யாமல், வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தும், உயர்வு தாழ்வுகளை மட்டும் கற்பித்துக் கொண்டு வெறித்தனமாக நடப்பதுதான் கூடாது.

குலம் என்பதில் ''கோத்திரம்'' என்னும் ஓர் உட்பிரிவும் இருக்கின்றது. கோத்து இருப்பது கோத்திரம். ஒரு பூங்கொத்து போலக் கோவையாய் ஒன்று சேர்ந்து, ஒரே முதலை அடிப்படை யாய்க் கொண்டது கோத்திரமாகும். இக்கோத்திரப் பிரிவுகளுக்குப் பண்டைய சான்றோர்களின் பெயர்களை வைத்துள்ளனர். (இப்பிரிவு, திருமணத்துக்கு, மணமகனும், மணமகளும் ஒரே இரத்த சம்பந்தம் உடையவர்களா, வேறுபட்டவர்களா என்பதைப் பிரித்துக்காட்ட உதவுகிறது).

மேற்கூறிய பல பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பெருமையைத் தாமே தேடிக் கொள்ளாவிட்டாலும் தம் முன்னோர் பெயர்களைச் சொல்லியும் எண்ணியும் பெருமைபட்டுக்கொள்வர். மாறாகத் தமக்கு அமைந்த சிறப்புக்களைப் பயன்படுத்தாதவர்கள் இகழ்ச்சியும் அடைவர்.

(7) குடி போகியவா

''குடிபோகியவா'' என்னும் தொடரில் வருகின்ற ''குடி'' என்னும் சொல் அடியோடு அல்லது முழுமையும் என்று பொருள் படும்.

''போகியவா'' என்பது போனது என்பதாகும். ''வாறு என்னே!'' என்று இருக்கவேண்டியது ''வா'' என்று நின்றுவிட்டது.

('போகிய'வும் ''போதர''லும் வேறு கருத்துடைய சொற்கள். 'போகிய'வுக்குப் ''போ'' பகுதியாகும். ''போதரலு''க்குப் ''போதரு'' பகுதியாகும். இதன் பொருள் ''வருதல்'' என்பதாகும்).

(8) மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே

மிடுக்குடையது ''மிடி.'' இது மக்களை மிடுக்காக வந்து தாக்கும். (இது நாட்டில் வெளிப்பட்டுப் பரவி, தாக்குவதாகும்.) அவ்வாறு

தாக்குவது வறுமையாகும். இவ்வறுமை விரைவில் பரவுவதனால் ''பாவி'' எனப்பட்டது. ''பா'' என்னும் ஓரெழுத்தொரு மொழிக்குப் பரவுதல் என்று பொருள். (பரவலாய் இருக்கும் கல்லுக்குப் ''பாவுகல்'' என்னும் பெயருண்டு).

தீமைகள் எளிதாகப் பரவுவன. அதனால் அவற்றுக்கும் ''பாவங்கள்'' என்ற பெயர் வந்தது. எனவே இங்குப் ''பாவி'' என்றது பரவுகின்ற இடர்ப்பாடு (இன்னல்)களையாகும். அத்தகைய இடர்ப்பாடுகள், அதாவது வறுமை வந்தாலும் நிலைகுலையாமல் இருக்க வேண்டுவது முறை. ஆனால் ''பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'' என்னும் பழமொழிக்கேற்ப மேற்கூறிய நலங்கள் போய்விடுகின்றன. பசி அல்லது வறுமைக்கு இந்த ஆற்றல் உண்டு.

மேற்கூறிய நிலை எளியோர்க்கு (சாதாரணர்க்கு) மட்டுமே பொருந்தும். சிறந்த சான்றோர் நிலை இதற்கு மாறுபட்டதாகும். அவர்களுக்கு வறுமையும் பசியும் வந்தால், அப்பொழுதுதான் விளக்கங்கள் தென்படுகின்றன. அவர்களுக்குப் பசி துன்பத்தைத் தருவதில்லை. பசித்தபோது அவர்கள் உள்ளம் அருளில் பதிந்து திருத்தமும் அழகும் பெறுகின்றது. அவர்களுக்கு வளம் குன்றினாலும் மனம் குன்றுவதில்லை.

''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது'' என்பது திருக்குறள். வறுமை வந்து அதனால் பொருள் நிலை திரிந்தாலும், சான்றோர்கள் மாறுவதில்லை. அவர்கள் வறுமையால் வரும் துன்பங்களுக்கு நடுங்குபவர் அல்லர். அவர்கள் தோற்றம் மலையை விடப் பெரிதாகும் என்று கூறுகிறார் திருவள்ளுவர். (வேறு இரண்டு இடங்களில் ஞாலத்தின் மாணப் பெரிதென்றும், கடலிற் பெரிது என்றும் கூறியுள்ளார். அந்த உவமைகளால் தமக்குச் செய்யப்பட்ட உதவிகள் அவ்வளவு பெரியவை என்று காட்டப்படுகின்றன. இவற்றுள் உலகத்தை உவமைப்படுத்தியது பொது நிலை. கடலை உவமைப்படுத்தியது இடை நிலை. மலையைக் காட்டியது சிறப்பு நிலை என்று இம்மூன்றனுள், நாம் பாகுபாடு செய்து கொள்ள வேண்டும்). மலை, எது வந்து அசைத்தாலும் அசையாது, நிலைத்து நிற்கும். அதுவே வெற்றியையும், ஞானத்தையும் குறிப்பதாகும். மெய்ஞ்ஞானம் நிலை திரியாதது ஆகும். மெய்ஞ்ஞான வாழ்க்கை அமைந்து விட்டால் எல்லாம் வெற்றியே.


(9) அடி அந்தம் இலா அயில்வேல் அரசே!

வறுமை வந்தால் நல்லன எல்லாம் குடிபோகியவாறு என்னே என்று அருணகிரியார் கேட்கின்றார். அவர் கேட்கின்ற முருகன், வேல் அரசன் என்றும், அந்த வேல் அடியும் அந்தமும் இல்லாதது என்றும், ஒளியும் கூர்மையும் பொருந்தியது என்றும் கூறுகிறார். அயில் வேல் அரசன் என்பது கூர்மையான மெய்ஞ்ஞானத் தலைவன் என்று பொருள்படும். ''ஐ''ல் என்பது அயில் என்று வந்துள்ளது. எந்த ஒரு உலோகப் பொருளையும் தேய்க்கத் தேய்க்க ஒளியும் நுட்பமும் மிகும். அந்த நுட்பத்தன்மைக்கு ''ஐ'' என்று பெயர். நுட்பத்தன்மை என்றது இங்குக் கூர்மையைக் குறிக்கின்றது. எனவே கூர்மை பொருந்திய வேல் ஆயிற்று. அது துவக்கமும் முடிவும் இல்லாத மெய்ஞ்ஞானம் ஆகும். வேல் அரசன் என்பது மெய்ஞ் ஞானத்தை உடைய இறைவன் ஆகும்.

ஆக இப்பாடலில், வறுமை வந்தால் நல்லனவெல்லாம் போய்விடுவது பொது இயல்பு. ஆனால் அவை போகாதபடி மெய்ஞ்ஞானத்தை அருள வேண்டும் என்று அருணகிரியார் வேண்டிக்கொண்டார்.

III சக்கரம்

வறுமையால் நிலைகுலையும் நேரத்தில் நிலை குலையாதபடி காப்பது மெய்ஞ்ஞானம் ஆகிய பண்பு ஆகும். பண்பைக் குறிப்பது 'ப'கர எழுத்தாகும். இப்பாடல் இந்தப் பண்பைப் பற்றிக் கூறுவதால் இதற்குரிய சிறப்பெழுத்து 'ப'கரம் ஆகும். இப்பாடலுக்கு உரிய அதிதேவதை ''ஜயதேவன்.'' இதற்குரிய சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-20

அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்ரம வேள் இமையோர்
புரி தாரக நாக புரந்தரனே.

I பொழிப்புரை

எளிதில் கிடைக்காத இறை அநுபவத்துக்கு அடியேனை உரியவனாகும்படி உபதேசம் செய்த முறை எவ்வளவு சிறப்புடையது! அடியேனை விரிவாகத் தாங்கிக் கொண்டு இருக்கும் தியாகியே! தேவர்கள் விரும்புகின்ற ஆதாரமானவனே! குண்டலியாகிய பாம்பினைக் காப்பவனே!

II விளக்கவுரை

இப்பாடலில் முதல் இரண்டு வரிகளில் ஒரு கருத்தையும், பின் இரண்டு வரிகளில் இறைவனை அழைத்தலையும் தெரிவித்துள்ளார்.

(1) அரிதாகிய மெய்ப்பொருளுக்கு

மெய்ப்பொருளுக்கு என்னை உரியவனாகும்படிச் செய்தனை என்று கூறுகிறார். மெய்ப்பொருள் என்பது இறை அநுபவம் ஆகும். அந்த அநுபவமே முடிவான மெய்ப்பொருளாகும்.

என்றும் உள்ள பொருள் மெய்ப்பொருளாகும். ஆன்மாவும், பாசமும் கூட என்றும் உள்ள பொருள்களே என்றாலும் அவை மெய்ப்பொருள்களாகக் கொள்ளப்படுவதில்லை. ஆன்மா, பிறப்பு இறப்புக்களில் உடலோடு உழன்று கொண்டு இருக்கும்போது அதனை மெய்ப்பொருள் என்று கூறுவதில் சிறப்பில்லை. அது ஆண்டவனை அடைந்து, அடைதலின் பயனாகப் பெறுகின்ற இன்ப நுகர்வோடு இருக்கும் நிலை மெய்ப்பொருள் ஆகின்றது.

இது எவ்வாறெனின், ஒரு மாணவன் குருவைக் காண்டலினா லேயே நிலையான சிறப்பைப் பெற்றுவிடுவதில்லை. மாணவனுக்கு எட்டாததை குரு உபதேசித்து, எட்டவைக்கும்போது அது மெய்ப் பொருள் ஆகின்றது. ஒரு கோடீஸ்வரர் பெரும்பொருளை வைத் திருப்பதனாலேயே சிறப்படைவதில்லை. அவர் தம் பொருளைப் பிறர்க்கு உதவி செய்த பிறகே, நிலைத்த தன்மை உண்டாகிறது. ஒரு அரசனைப் பார்த்துவிட்டாலே போதாது. அரசனோடு பழக்கம் உண்டாதல் வேண்டும். பழக்கம் கிடைத்த பின்னரே அக்கூட்டுறவின் பயன் விளையும். அவ்வாறே ஆன்மாவுக்கு இறைவன் கிடைத்து விட்டாலே போதாது. கிடைத்ததன் பயன் ஆன்மாவுக்குச் சேர வேண்டும். அப்பயன் இங்கு மெய்ப்பொருள் எனப்பட்டது. மெய்ப்பொருள் கிடைப்பது எளிதன்று. அது கிடைப்பது மிகவும் அருமையாகும்.

விரைவில் அழிகின்ற பொருள்களுக்கு மதிப்பு குறைவாகவே இருக்கும். நிலைத்த பொருளுக்கு விலை கூடுதலாக இருக்கும். துணி வகைகளுள் சாயம் போகும் துணியை விட, போகாத துணிக்கு விலை அதிகம். அவ்வாறே, சொன்ன சொல்லை நிறைவேற்றாதவரை விட, நிறைவேற்றுபவருக்கு மதிப்பு அதிக மாகும். ஆனால் நிறைவேற்றுவது அரிதாகவும் உள்ளது. அதுபோ லவே மெய்ப்பொருள் உயர்ந்தது, நிலைத்தது. அதனால் அதனைப் பெறுவது அரிதாக உள்ளது. அதனால்தான் ''அரிதாகிய மெய்ப்பொ ருள்'' என்றார்.

நிலைத்த தன்மையில் அருமைப்பாடு இருக்கிறது. நாம் புறத்தே காணும் பாசப்பண்டங்களுள் ஏதேனும் நிலைத்தது உண்டா? அவை அனைத்தும் சில காலம் இருந்து பிறகு அழிவைப் பெறுவனவாகவே உள்ளன. பாசப்பண்டங்களோடு ஆன்மாவுக்குக் கூட்டுறவு உண்டு. பாசமும் அநாதியே. ஆனால் பாசப்பண்டங்களோடு ஆன்மா பெறுகின்ற அநுபவம் நிலைத்ததல்ல. அந்த அநுபவம் ஒரு காலத்தில் விட்டு நீங்குவதாகும்.

ஆன்மா இறைவனோடு சேர்ந்து அநுபவிப்பது மட்டுமே என்றும் உள்ளது, பிரிவில்லாதது. அதனையே முத்தி என்றும், தெய்வக் கூட்டுறவு என்றும் கூறுவர். இதனைத் தெய்வச் சேக்கிழாரும் ''அருமையாம் நிலை'' என்று கூறியுள்ளார். ஆக, அருமை என்னும் சொல் நிலைத்தது, மாறுபாடற்றது என்று பொருள்படும்.

''அருமை'' என்பதும் ''பெருமை'' என்பதும் வெவ்வே றானவை. அருமை, எட்டாத நிலைத்த தன்மையைக் குறிக்கும். பெருமை பலர்க்கும் பயன்படுவதற்காக எளிய முறையில் இரங்கி வரும் தன்மை ஆகும். பெருமை என்னும் சொல்லில் பயன்படுதல் முதன்மை பெறுகிறது. ''மெய்ப்பொருள்'' பெருமை உடையதானா லும், அதனுடைய நிலைத்த தன்மையையும், எட்டாத தன்மையையும் புலப்படுத்துவதற்காக, அருணகிரியார் ''அரிதாகிய மெய்ப்பொருள்'' என்றார் (ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு சிறப்புக் கருத்தைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. இந்த உயிர்ப்பான நிலையை அறியாதவர்கள் அவற்றைக் கண்ட இடங்களில் அதாவது பொருத்த மில்லாத இடங்களில் பயன்படுத்துவர். இந்த வகையில், உரிய சொல்லை உரிய இடத்தில் பயன்படுத்தும் நூல் திருக்குறள் ஆகும். அது ஓர் அருமையான நூல். அதற்கு நிகர் அதுவே. பிற நூல்களைப்பற்றி எண்ணும்போது அவற்றை இனிய நூல்கள் எனலாம்).

(2) அடியேன்

''அடியேன்'' என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் ஒலி பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு மட்டும்தான் உண்டாகும்.

இறைவனுக்கு மற்றவர்கள் எல்லாரும் அடிமைகளே. அனை வரும் அவனுடைய ஏவல்படி ஒழுகக்கூடியவரேயாவர்.

தற்போதம் அற்றவர்களே தம்மை ''அடியேன்'' என்று சொல்லுவர். அதாவது தன்னையும், தன் சூழலையும் மறந்தவர், தன்முனைப்பில்லாதவர், தனக்கென ஒரு அவா இல்லாதவர், இறை செயலே தம் செயலாக எண்ணுபவர் ஆகியோரே ''அடியவர்'' ஆவர். உருவத்தால் தாம் தனி மனிதராக இருந்தாலும், தமக்கென ஒரு பற்றும் இல்லாதவரே உண்மையான ''வேலைக்கார்'' அல்லது ''அடியவர்'' ஆவர்.

அடிமையின் நிலை கடமையைச் செய்வதோடு நின்றுவிடுகிறது. மற்றப்படி தலைவனோடு (இறைவனோடு) சேர்ந்து இருப்பது என்பதில்லை.

''அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றேயனையாய்! என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ!
இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ, எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய், பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே''

''கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூற
எண்ணாது இரவும் பகலும் நான் அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக்கடவேனோ அடிமைசால அழகுடைத்தே.

''நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப்பிறவிஉன் வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி
ஆயக்கடவேன் நானோதான் என்னதோ இங்கு அதிகாரம்
காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ்வைப்பாய் கண்ணுதலே!

''மற்றுப்பற்றெனக்கு இன்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை வந்து எய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரில் பாண்டிக்கொடுமுடி
நற்றவா! உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே!''

என்னும் பாடல்களில் அடிமையின் நிலை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இப்பாடல்கள் முடிவான அநுபவப்பாடல்கள். இவற்றுக்கு மேல் அநுபவப்பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆக, ''அடியேன்'' என்றதனால், அருணகிரியார் தமக்கு ஏதும் பற்றில்லை என்பதனைத் தெரிவித்துக்கொண்டார் என்று கொள்ள வேண்டும்.

பற்று இல்லாதபோது வசியமும், பெருங்காரியங்கள் நடைபெறுதலும் நிகழும். மற்றும் அடியேன் என்ற உடனே ஐக்கிய உணர்வு உண்டாகும். இந்த உணர்வே இரண்டற்ற (அத்வைதம்) நிலை எனப்படும். ''அடியேன்'' என்று உச்சரிக்கும்போது ''நன்றாக ஒன்றானேன்'' என்னும் ஒன்றிய உணர்வு (ஐக்கிய பாவம்) தோன்றும்.

இந்த உயர்ந்த நிலை வெறுமனே ''அடியேன்'' என்று வாயளவில் சொல்லுவோர்க்கு வருவதில்லை. இது துரியநிலைக்கு உயர்ந்துள்ள ஆன்மாவுக்கு மட்டும்தான் வரும். இது வர வேண்டுமானால், விழிப்பு நிலையை மறந்து, விழிப்பு நிலையில்

வேலை செய்கின்ற கருவி கரணங்கள் ஓய்ந்து, அவற்றையும் மறந்து, பின்னே வருகின்ற கலை நிலைகளையும் மறக்க வேண்டும். அதன் பின்னர்தான் வரும்.

சில நேரங்களில் நாம் ஒரு அழகைக் கண்டு அதிலேயே சொக்கிப் போகும்போது நம்மை மறந்த உறக்கம் போன்ற நிலை வருவதுண்டு. மற்றும், நம் தலைவனுடைய பெருமையில் இன்பம் காணும்போது, நம் செயல் முனைப்பு இல்லாத நிலைவரும். அது ''சுழுத்தி'' நிலை எனப்படும். இதற்கு மேம்பட்டது துரிய நிலையாகும். இந்த நிலையை எட்டியவர்களுக்கு மட்டுமே ''அடியேன்'' என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் தகுதியான அடிமை மனப்பான்மை வரும். அத்தகையோரே அருள் வீச்சுக்கும், அதன் நிழலாட்டத்துக்கும், அதன் பதிவுக்கும் ஆளாவார்கள். அவர்களே இங்கே குறிக்கப்பட்ட மெய்ப்பொருளுக்கு உரியவர் ஆவர். இந்த நிலையே அம்பிகையின் சந்நிதானமும் ஆகும்.

அம்பிகையின் சந்நிதானத்தில் துரிய சுகத்தைத் துய்த்துக்கொண் டிருக்கும் ஆன்மாக்களை இறையருள் வந்து அப்பன் சந்நிதிக்கு அழைத்துச் செல்லும். அங்குத் துரியாதீத சுகம் விளையும். இக்காரணம் பற்றியே முதலில் அம்பிகையை வழிபட்டுப் பிறகு அப்பனை வழிபடுதல் என்னும் முறை வந்தது. ஆன்மா துரிய நிலைக்கு வந்த உடனே அதாவது சுழுத்தியைக் கடந்த உடனே அதன் உடல், உள்ளம் எல்லாம் தூய்மை பெற்றுவிடும். அதோடு அந்த ஆன்மாவைச் சுற்றி உள்ளவர்களும் தூய்மை பெறுவர்.

ஆக, அருணகிரிநாதர், இப்பாடலில் ''அடியேன்'' என்றதனால் அவருக்குப் பற்றில்லை என்பதும் அவர் மெய்ப்பொருளுக்கு உரியவர் ஆனார் என்பதும் தெரிகிறது.

(3) உரிதா

''உரிதா'' என்னும் சொல்லில் 'ய'கரமும், 'க'கரமும் விடுபட்டுள் ளன. அவற்றைச் சேர்த்தால் ''உரியதாக'' என்று வரும். (எழுத்துக் களைத் தொகுத்தாலும் புரியும்படியாகவே தொகுப்பர்; புரியாதபடி தொகுக்க மாட்டார்கள்).

நாம் ஒருவரிடம் கொள்கின்ற கட்டாயமான இயைபுக்கு ''உரிமை'' என்று பெயர். நம் உரிமைப் பொருள் என்பது நமக்குக்

கட்டாயமாக வர வேண்டிய பொருள் ஆகும். (அகப்பொருள் இலக்கணத்தில் வருகின்ற முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என்பவற்றுள்ளும் உரிப்பொருள் என்பது இக்கருத்தைக் கொண்டதேயாகும். முதற்பொருள் என்பது நிலம், கருப்பொருள் என்பது அதிலிருந்து உண்டாகின்ற பொருள். உரிப்பொருள் என்பது அப்பொருள்களால் நமக்கு உண்டாகும் தீன்மைகள். அவை நமக்கே உரியவை. முதல் இரண்டு பொருள்களைப் பிறர் கவர்ந்து கொண்டாலும் உரிப்பொருளை யாரும் கவர முடியாது. ஏனெனின் அது கவரக்கூடிய பருப்பொருள் அன்று. அது நுண்பொருள். (''உரிய பொருள்'' என்பது ''உரிப் பொருள்'' என்று வந்தது). அன்பு முதலிய பண்புகளே உரிப்பொருள்கள் ஆம்.

இனி, உரிப்பொருளைப் பெறுவதில் காலம் ஒரு முக்கியமான அம்சமாக உள்ளது. இளவேனில் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் வரும். அது வரும்போது நாம் அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் விரும்பும்போது அது வருவதில்லை. அக்காலம் வரும்வரை, அதைப் பயன்படுத்திக் கொள்ளும் பக்குவத்தில் தேர்ச்சிபெற்று நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவ்வாறே ஒரு குறிப்பிட்ட பண்பு ஒருவர்க்கு ஒரு பருவத்தில்தான் அமையும். குருவருளைப் பெறுவதற்கான வாய்ப்பு எல்லார்க்கும் எப்பொழுதும் இருந்தாலும், அதனைப் பெறுவதற்கான பக்குவம் ஒரு சிலர்க்கே இருக்கும். இது ஞாயிற்றின் ஒளியால் பெறக்கூடிய நன்மைகள் பல இருப்பினும், அவற்றைப் பெறக்கூடிய பக்குவத்தில் நாம் இல்லாத நிலையைப் போன்றதாகும். இந்தப் பக்குவமாகிய உரிமை மாணவருக்கு வரும்போது குரு வந்து உபதேசங்களால் மெய்ப்பொருளை எடுத்துக் காட்டுவார் அல்லது சொல்லிக்காட்டுவார், அல்லது தொட்டுக்காட்டுவார். ஆன்மாக்கள் உரியவராய்த் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டுவதுதான் தேவைப்படுகிறது.

இனி, ''அடியேன்'' என்னும் சொல் ஆண்பால் உயர்திணைச் சொல்லாகும். அதற்கு ஏற்ப ''உரியவனாக'' என்று வர வேண்டிய சொல் ''உரிதா'' என்று அஃறிணையில் வந்துள்ளது. இதற்குக் காரணம் என்னவெனின் ''அடியேன்'' என்னும் உணர்வு கொண்ட ஆன்மா (பால் பிரிவு தோன்றாத) தன்னுணர்வு அற்ற அதீத நிலையில் இருப்பதனால் அஃறிணைச் சொல்லாக வந்தது.

(4) உபதேசம்

'உப' என்பது துணை அல்லது அணுக்கம் என்று பொருள்படும். 'தேசு' என்பது ஒளி. எனவே ''உபதேசம்'' என்பது துணையான ஒளி கிட்டுவதற்குச் சொல்லப்படும் உரை. அது அண்மையில் உள்ள (தேஜஸ்) ஒளியாகும். (உபநிஷதம் என்பதும் அணுக்கமான அநுபவம் என்று பொருள்படும். அதாவது அநுபவத்துக்கு அணுக்க மாகக் கொண்டு செல்வது என்று ஆகும்). ஆக உபதேசம் என்பது நமக்கு அறிவு ஒளியைத் தரக்கூடியதாகும்.

கண்ணாடி அருகில் ஒரு விளக்கைக் காட்டினால், அக்கண்ணாடி யிலும் அது தோன்றும். அதையே ஒரு பாறைக்கருகில் காட்டினால் ஒன்றும் தோன்றாது. ஆன்மா கண்ணாடி போன்றது. அதன் அருகில் ஒளியாகிய உபதேசம் வரும்போது ஆன்மாவிலும் அந்த ஒளி தோன்றும். அதுவே அருள் பதிவதாகும். அதனையே ஞானம் என்றும் அருட் பிரகாசம் என்றும் கூறுவர்.

(5) உணர்த்தியவா

இந்த அருட்பதிவைத் தம் உள்ளம் உணருமாறு இறைவன் உணர்த்திய அந்த நிகழ்ச்சியை எண்ணி வியந்து கூறுகிறார் அருணகிரிநாதர். ''உணர்த்தியவாறு என்னே'' என்பது''உணர்த்திய வா'' என்று வந்துள்ளது.

இவ்வுணர்த்தும் முறை எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே விதமாக அமைவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக வரும். ஞானசம்பந்தருக்குப் பால் கொடுத்து உணர்த்தப்பட்டது. அப்பருக்கு சூலை நோயும், அதனை மாற்றுவதற்கான திருநீற்றினா லும் உணர்த்தப்பட்டது. சுந்தரருக்கு ஓலை கொடுத்தபோது உணர்த் தப்பட்டது. மாணிக்கவாசகருக்கு ஒரு நூல் பொருளைக் காட்டி உணர்த்தப்பட்டது. உமாபதி சிவத்துக்குக் குருவின் (மறைஞான சம்பந்தரின்) ஒரு சொல்லால் உணர்த்தப்பட்டது. பட்டினத்தாருக்கு ஒரு சீட்டினால் உணர்த்தப்பட்டது.

நாயன்மார்களின் வரலாறுகளைப் பார்க்கும்போது, அவர்களைச் சோதித்தவர்களே அவர்களுக்கு குருமார்களாக அமைந்தனர் என்பது தெரிகிறது. எப்படியும் குரு இல்லாமல் முத்தியடைய முடியாது. குருமார்களிடம் மாணவர்கள் மேற்கூறிய அடிமைப்பண்போடு

இருக்க வேண்டும்; குருவின் சொல்லை ஆராயவும் கூடாது. உணர்த்தும் முறை இனிமையாகவும் அமையலாம் அல்லது அடிப்பது போலவும் அமைவதுண்டு. உபதேசத்தை உணர்த்துகின்ற குருவாகிய இறைவன், நாம் சரியாக அநுபவிக்கின்றோமா என்பதைக் கண்காணிக்க நம்மைச் சுற்றிச்சுற்றிப் பார்க்கின்றான். இதனையே ''புறம் புறம் திரிந்த செல்வமே'' என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

உபதேசம் கிடைத்த பின்னர்தான் மாணவர் மெய்ப்பொருளுக்கு உரியவர் ஆகின்றார். மாணிக்கவாசகர் வாழ்க்கையில் அவர் திருப்பெருந்துறையில் உபதேசம் பெற்றாலும், திருக்கழுக்குன்றத்தில்தான் மெய்யநுபவத்துக்கு உரியவரானார்.

உபதேசம் உணர்த்தப்பட்ட உடனே இருப்புவினை (சஞ்சித வினை) போய் விடுகிறது. பிறகு ஏன்றவினை (பிராரப்தம்) இனிமையாகவும் எளிதாகவும், நல்ல தொண்டுகள் மூலமாகக் கழிந்துவிடுகிறது. ஏறுவினை (ஆகாமியவினை) வளராதபடி இறை பணியாக மாறிவிடுகிறது. ஒருவேளை ஆகாமியம், வாசனை காரணமாக தோன்றுமானாலும், அதைத் தடுப்பதற்கு அடியார் கூட்டுறவு உதவி செய்யும். வினையின் வாசனை போவதற்கு அடியார்களே உற்ற துணையாவர். அதனாலேயே ''குரு, இலிங்க, சங்கமம்'' கட்டாயம் வேண்டும் என்றனர். சங்கமம் என்பது அடியார் கூட்டுறவாகும் (குரு=ஆசிரியர், இலிங்கம்=மெய்ப்பொருள்).

உபதேசத்தை உணர்த்தும்போது இறைவன், மூன்று மலமும் உள்ள சகலருக்கு மனித வடிவிலும், இருமலம் உள்ள பிரளயாகலருக்கு அதிகாரிகள் வடிவிலும், ஒரு மலம் உள்ள விஞ்ஞானகலருக்கு உள்ளிருந்தும் உணர்த்துகிறான்.

ஆக, அருணகிரிநாதர், தமக்கு உபதேசம் உணர்த்தப்பட்ட முறையை எண்ணி, வியந்து கூறினார்.

(6) விரி தாரண

விரிதாரணன் என்பது விரிவாகத் தாங்கிக் கொண்டிருப்பவன் ஆவான். அவன் நம்மைவிட மேலானவனாய் இருப்பதனால் நம்மைத் தாங்குகின்றான்.

(7) விக்ரம

விசேஷமான முறையிலும், சிறப்பான ஒழுங்கிலும் ஆற்றல் பெற்ற முருகன் விக்ரமன் ஆகின்றான்.

(8) வேள்

வேள் என்பவன் தியாகி. அதனால் அவன் அனைவராலும் விரும்பத்தக்கவன் ஆவான். தன்னை இழப்போரையே யாரும் விரும்புவர். செல்வரை மதிப்பது, அவர் செல்வத்தை இழந்து பயன்படுவதனாலேயே. முருகன் அவ்வாறு தியாகியாய் அடியவர்க்கு அருளுபவன் ஆவான்.

(9) இமையோர் புரி தாரக

இமையோர்-தேவர். புரி என்பது விரும்புகின்ற. தாரகன் என்பது ஆதாரமானவன்.

(10) நாக புரந்தரனே

நாகம் என்பது அழகு என்றும், பாம்பு என்றும், குண்டலி என்றும் பொருள்படும். பொதுவாக தேவலோகத்தையும் குறிக்கும். புரந்தரன் என்பது காப்பவன் ஆகும். முருகன் குண்டலி நாகத்தைக் காப்பவனாவான்.


ஆக இப்பாடலில் அருணகிரியார், அரிதாகிய இறையநுபவத்தைப் பெற்று உயர்ந்த நிலையை அடைதலைப்பற்றிக் கூறியருளினார்.

III சக்கரம்

இப்பாடலோடு மணிபூரகச் சக்கரம் முடிவடைகிறது. மணிபூரகம் என்னும் ஆதாரம், வாங்குகின்ற காற்றைக் கொண்டு ''மணி'' என்னும் விந்துவைச் சிறப்பாக்கிக்கொள்ளும் இடம் ஆகும்.

மூலாதாரத்திலிருந்து மணிபூரகம் வரும்வரை உலக அனுபவ உணர்வு இருக்கும். இதற்குமேல் உலக அநுபவம் மறந்துவிடும். இது மணிபூரகத்தின் இறுதிப்பாட்டு ஆனதனால், உலகை மறந்த ''அடியேன்'' என்னும் உணர்வு இங்கேயே தொடங்கிவிட்டது. தன்னை மறந்து இறைவனை உணர்வதுதான் மனிதனுக்கு உரிய

சிறந்த பண்பாகும். பண்பைக் குறிப்பது (இரண்டாவது பகரமாகிய) 'பஂ'கரம் ஆகும். எனவே இப்பாடலுக்கு உரிய சிறப்பெழுத்து 'பஂ'கரம் ஆகிறது. இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்


மணிபூரக ஆதார சக்கரம்

''மணி'' என்பது விந்து. ''பூரகம்'' என்பது காற்றை உள்ளிழுத்து நிரப்புதல். ''மணிபூரகம்'' என்பது காற்றை உள்ளிழுத்து, விந்துவை ஒளிபெறச் செய்து, மேலேற்றுதற்குரிய இடம். இது கொப்பூழ் (நாபி)ப்பகுதியில் உள்ளது.

இந்த ஆதார மலரின் சிறப்பெழுத்து 'ம'கரம் ஆகும். இது திருவைந்தெழுத்தில் இரண்டாவது எழுத்தாகும். (முதல் எழுத்தாகிய 'ந'கரம் சுவாதிட்டானத்தின் சிறப்பெழுத்தாக வந்தது). மகரம் மலத்தையும் அதன் பொருள் தன்மையாகிய மாயையையும் குறிக்கும். மாயையில் கீழ்தளத்திலுள்ள இரண்டாவது தத்துவம் நீர். நீரின் தண்மையைக் குறிப்பது நிலவு ஆகும். அது அழகிய உயர்ந்த இனிய உருவமாகும். எனவே இந்த ஆதார மலருக்கு நிலவின் வடிவம் (அதாவது பிறைவடிவம்) அமைந்துள்ளது. மகர எழுத்தைத் தியானிப்பதால் தண்மையான இனிய இயல்புகளைப் பெறுவதோடு பரஞானத்தைப் பெறவும் வழியுண்டாகும்.

இந்த ஆதார சக்கரம் பத்து இதழ்த்தாமரை வடிவானது. அந்த இதழ்களின் எழுத்துக்கள் டஃ, டஃ°., ண, த, தஂ, தஃ, தஃ°, ந, ப, பஂ, ஆம். 11-வது பாடலிலிருந்து 20-வது பாடல் வரையான பத்துப்பாடல்களில் இந்த எழுத்துக்களுக்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

மணிபூரக ஆதாரமலரின் சக்கரம் வருமாறு:



இச்சக்கரத்தினுள்ளே இருக்கின்ற வட்டம் ஓங்காரத்தைக் குறிக்கும். பிறை வடிவமும், அதனுள் இருக்கின்ற 'ம'கரமும், இந்த ஆதார மலரைக் குறிப்பவை ஆம். வட்டத்துக்கும் பிறை வடிவுக்கும் இடையில் உள்ள ஒன்பது எழுத்துக்கள் மந்திர எழுத்தாகிய 'ம'கரத்தைத் தோற்றுவிக்கின்ற வித்தெழுத்துக்கள் (பீஜாட்சரங்கள்) ஆம். மந்திர எழுத்துத் தோன்றுவதற்கு ஞானம், கலை, பிரணவம், நாதம், விந்து, தத்துவம், கோலம், கிருத்தியம், சத்தி என்னும் ஒன்பது காரணப்பொருள்களும் உள்ளன. இவற்றின் விவரங்கள் வருமாறு:

1) வித்தெழுத்து : ஸி
காரணப்பொருள் : ஞானம்.
விளக்கம் : மந்திரம் தோன்றுவதற்கு ஞானம் இருக்க வேண்டும். ஞானத்தில் ஸ்தூல ஞானம் என்றும் சூக்கும ஞானம் என்றும் இரண்டு வகையுள்ளன. அவற்றுள் 'ஸி'கரம் ஸ்தூல ஞானத்தைச் சேர்ந்ததாகும்.

2) வித்தெழுத்து : ஸிO
காரணப்பொருள் : ஞானம்
விளக்கம் : இது சூக்கும ஞானத்தைச் சேர்ந்ததாகும்.

3) வித்தெழுத்து : மO
காரணப்பொருள் : கலை, பிரணவம்
விளக்கம் : மந்திரம் மொழியின் (எழுத்தின்) மூலமாகத் தோன்றுகிறது. மொழி கலையில் சேர்ந்ததாகும். மணிபூரகத்துக் கலையைக் குறிப்பது 'ம'கரம் ஆகும். அது பிரணவத்தோடு சேர்ந்து 'மO'ஆகின்றது. ('ஓம்' என்னும் ஒலியைக் குறிப்பதற்கு ஒரு வட்டம் 'O' சேர்க்கப்படுவது மரபு).

4) வித்தெழுத்து : மாO
காரணப்பொருள் : நாதம்
விளக்கம் : மந்திரத்துக்கு நாதம் உண்டு. நாதம் சேரும்போது 'மO' ஆகிய குறில் நீண்டு நெடிலாக 'மாO' ஆகின்றது.

5) வித்தெழுத்து : ஈO
காரணப்பொருள் : விந்து
விளக்கம் : மந்திரத்துக்கு வடிவம் உண்டு. அது விந்துவாலானது. அதைக் குறிபபது ஈO ஆகும்.

6) வித்தெழுத்து : கஃங்
காரணப்பொருள் : தத்துவம்.
விளக்கம் : சந்திர ஒளியில் தியானிப்பதால் பர ஞானம் கைகூடும். பரஞானத்தில் நிலைத்திருப்பதுதான் ஆன்மா அடை கின்ற வெற்றியாகும். ''கஃங்' என்னும் ஒலி இந்த வெற்றியைக் குறிப்பதாகும். 'ம'கர எழுத்தின் தத்துவம் நீர் ஆகும்.

7) வித்தெழுத்து : இO
காரணப்பொருள் : கோலம்
விளக்கம் : மந்திரத்துக்கு விருத்தி உண்டு. அதாவது அதன் தத்துவம் பல உருவங்களை (கோலங்களை)க் கொள்ளும். நீர் பனிக்கட்டி கோலங்கொள்வது போல ''கஃங்'' ஆகிய தத்துவத்துக்கு 'இO'கோலம் ஆகும்.

8) வித்தெழுத்து : இ.
காரணப்பொருள் : கிருத்தியம்
விளக்கம் : மந்திரத்துக்குச் செயல் உண்டு. ஐந் தொழிலில் இரண்டாவது தொழிலாகிய காத்தலை 'இ'கரம் குறிக்கின்றது. இத் தொழிலுக்கு உரியவர் திருமால் ஆவார்.

9)	வித்தெழுத்து	:	கிலீO
	காரணப்பொருள்	:	சத்தி
	விளக்கம்	:	'கிலீO' என்னும் ஒலி அச்சத்தைக் குறிக்கும். இந்த அச்சம் மாறும்படி இந்த ஆதாரத்தில் சத்தி உண்டாகின்றது. அதாவது அச்சத்திலிருந்து காப்பாற்றும் இடம் இந்த ஆதாரம் ஆகும். மாயை இருக்கும்வரை அச்சம் இருக்கும். மூலாதாரத்திலிருந்து மணிபூரகம் வரை மாயை இருக்கிறது. அதன் பிறகு மாயையின் தாக்குதல் நின்றுவிடுகிறது.

அடுத்து, வட்டத்தைச் சுற்றியுள்ள பத்து எழுத்து இதழ்களுக்குப் பத்து அதிதேவதைகள் இருக்கின்றனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:

சிறப்பு எழுத்து		அதி தேவதையின் பெயர்
1) டஃ	—	வியோம தேவர்
2) டஃ°	—	இரஜ தேவர்
3) ண	—	சிகி தேவர்
4) த	—	கோத்ர தேவர்
5) த°	—	தோய தேவர்
6) தஃ	—	சூன்ய தேவர்
7) தஃ°	—	ஜனித தேவர்
8) ந	—	ஜோதி தேவர்
9) ப	—	ஜெய தேவர்
10) ப°	—	ஸ்மிருதி தேவர்

இந்த ஆதார மலரைத் தியானிப்பதனால் மாயையை நன்கு துய்த்துப் பிறகு துறந்து ஆன்ம முன்னேற்றம் பெறலாம்.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

அநாகத ஆதார மலர்

பாட்டு 21-32

பாட்டு-21

கருதா மறவா நெறி காண எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்?
வரதா! முருகா! மயில் வாகனனே!
விரத! அசுர சூர விபாடணனே!

I பொழிப்புரை

முடிவுக்கு வராமல் அலசிப்பார்த்துக் கொண்டே இருத்தலும், மறத்தலும் ஆகியவை இல்லாத அருள் நெறியைக் காணப் பரஞானம் அபர ஞானம் என்னும் உன்னுடைய தாமரை மலர் போன்ற திருவடிகள் இரண்டினையும் எனக்கு என்று தருவதற்குத் திருவுளம் கொள்வாய்? வரம் தருபவனே! முருகா! சுத்த தத்துவங்களையும் கடந்தவனே (மயில் வாகனனே) என்னை மேலேற்றும் விரதம் பூண்டவனே! அசுரர்களையும், சூரனையும் முற்றும் அழித்தவனே!

II விளக்கவுரை

அருணகிரிநாதர் இப்பாடலில் ''உன் திருவடி மலர்களை எப்போது கொடுக்க விரும்புவாய்'' என்று முருகனைக் கேட்கிறார்.

(1) கருதா மறவா நெறி காண

ஒரு பொருளின் தன்மை இப்படிப்பட்டதா அப்படிப்பட்டதா என்று அறியாமல் அலசிக் கொண்டே இருப்பது ''கருதல்''. ''கரு''. என்பது ஒரு பொருளினுள்ளே அடங்கி இருந்து இனிமேல் விளக்கம் பெற வேண்டிய ஒன்றாகும். முதற்பொருளின் உட்பொருளை எண்ணிப்பார்ப்பது கருதுதல் ஆகின்றது. இதனை ''யோசிப்பது'' என்றும் கூறுவர். ஒரு முடிவுக்கு வராத நிலை கருதுதல் ஆகும். ஆக, ''கருதா'' என்னும் சொல்லுக்கு ''யோசித்து அறிந்து கொள்ள

முடியாத'' என்று பொருளாகும். இங்கு அருணகிரியார் இறைவனுடைய நெறி, கருதலில் அடங்காது என்று கூறுகிறார்.

இறைவனைக் காண்பதற்கு ஒரு நெறி அல்லது வழி இருக்குமல்லவா? அந்த நெறியைக் கருதி அல்லது நம் அறிவால் யோசித்துக்கண்டு கொள்ள முடியாது என்று கூறுகிறார். அதனைக் காண வேண்டுமானால் அவனுடைய இரண்டு திருவடிகள் நமக்கு உதவி செய்ய வேண்டும். அதனால் அத்திருவடிகளை எப்பொழுது தருவாய் என்று கேட்கின்றார்.

கருதல் (யோசித்தல்) மனத்தினுடைய வேலை. மனம் ஒரு புறப்பொருள். அது புறப்பொருள்களை மற்றும் அவற்றின் தன்மைகளை உள்ளே கொண்டுபோய்த் துய்க்கும்படி செய்கிறது. அது நுண்பொருளானாலும், உடம்புக்கு உள்ளே இருப்பதானாலும், அது புறப்பொருளேயாகும். அதற்கும் நுண்ணியதாகவும், மேம்பட்டதாகவும் உள்ள நாதம்கூடப் புறப்பொருளேயாகும். எனவே மனம், எதைத் துய்க்கும்படி செய்தாலும் அல்லது எதைக் கருதினாலும் அது புறப்பண்டமாகவே இருக்கும்.

ஆனால், இறைவன் மிகவும் நுட்பமானவன். அவன் புறப்பொருள்களில் நிறைந்து கலந்து இருந்தாலும், புறப்பொருள்களுக்கு எட்டாதவன். எனவே, மனத்துக்கும் அது கருதுகின்ற கருத்துக்கும் எட்டாதவன் ஆகின்றான். மற்றும் மனம் அடங்கினால்தான் அவனைக் காண முடியும்; அவனைக் காணும் நெறியையும் அறிந்து கொள்ள முடியும். ஆக அவன் மனத்துக்கு வேறான உள்ளுணர்வால் மட்டுமே உணரத்தக்கவன் என்பது புலனாகும்.

மனம் கருதுவது வெறும் ஆராய்ச்சிக்கும் கல்விகற்பதற்கும் மட்டும்தான் உதவும். கல்வி எவ்வளவு ஆழ்ந்த கல்வியானாலும் அவன் நெறி அதனால் காணத்தக்கது அன்று. பத்தி (அன்பு) ஒன்றாலேயே அவன் நெறியை உணரலாம்.

இனி ''மறத்தல்'' என்பது நினைவில் வராமையாகும். புறப்பண்டங்கள் மறக்கப்படுதல் உண்டு. அதுவும் கருதல் போலத்தான். புறப்பண்டங்களோடு புறச்செயல்களையும் மறத்தல் உண்டு. நினைக்கப்படுவன மறக்கப்படுவது இயல்பு. பகலுக்குப்பின் இரவு வருவது போல, நினைப்புக்குப்பின் மறதி வரும். அவை இரண்டும் அடுத்து அடுத்து வருவன.

நினைப்பென்பது விழிப்புநிலை. மறப்பென்பது உறக்கநிலை. நினைப்பென்பது சகலநிலை (உடலோடு கூடிய நிலை) மறப்பென் பது கேவலநிலை (உடல் இல்லாத நிலை), இறைவனும் அவன் நெறியும், நினைப்பு, மறதிகளுக்கும் விழிப்பு உறக்க நிலைகளுக்கும், சகல கேவல நிலைகளுக்கும் அப்பாற்பட்டவை.

நெஞ்சத்தில் பத்தி இருப்பவர்கள் மட்டும்தான் அவனையும் அவன் நெறியையும் தொடர்ந்து காண்பர். மெய்யன்பு உடையவர்கள் நினைத்து விட்டால் அவர்களுக்கு மறதி வருவதில்லை. மற்றும் அதுவரை செய்து வந்த மற்ற செயல்கள் மறந்துபோம். இறைவனிட மும், அவன் நெறியிலும் நினைப்பு வருமானால் அது மாறாத ஒரே நினைவாக அமைந்துவிடும். ''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், பெயர்த்தும் அவனுக்கே பிச்சியா னாள், அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள், அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை, தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை, தலைவன் தாளே'' என்னும் அப்பர் திருத்தாண்டகம் இந்த நிலையை நன்கு விளக்குகின்றது. இறைவன் மீது அன்பு வந்து விட்டால் நினைப்பு, மறப்பு அற்ற நிலை தானே வந்து விடும். இது கல்வியாலோ, கலையாலோ அடையக்கூடி யதன்று. அவற்றுக்கெல்லாம் நினைப்பும் மறப்பும் உண்டு. எனவே அருணகிரியார் இதனை ''கருதா மறவா நெறி'' என்றார்.

''நெறி'' என்பது ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்குச் செல்ல உதவுவதாகும். உடலோடு கூடி, உலக அநுபவங்களைத் துய்த்துக் கொண்டு இருக்கும் ஆன்மாவை இறைவன் இடத்துக்கு அழைத்துச் செல்வதற்கு ஒரு நெறி உண்டு. அதன் பெயர் அருள் நெறியாகும். அந்த அருள்நெறி கருதா மறவா நெறியாகும்.

இறைவன் ஒருவனே எல்லா ஆன்மாக்களுக்கும் துறை (Destination) ஆவான். அவனுக்கு அப்பால் போவதற்கு ஏதும் இல்லை.

ஆன்மா பிறவிக்கு வரும்போது அருள் பண்டங்களில் கலந்து, அழகைக்காட்டி, ஈர்க்கும். பின் பண்டங்களைத் துய்ப்பதிலிருந்து தெளிவித்து, தன் உருவைக் காட்டும். அதனை உணர்வோர், அருளிலிருந்து இறைவனிடம் செல்வதற்குப் பயணம் தொடங்குவர். அப்பயணமே இங்கு அருள் நெறி எனப்பட்டது. அதுவே கருதா மறவா நெறியாகும்.

(2) எனக்கு இருதாள் வனசம் தர என்று இசைவாய்?

மேற்கூறிய அருள் நெறியைக் காண்பதற்கு, உன்னுடைய இரண்டு திருவடிகளை ''என்று அருள்வாய்'' என்று கேட்கிறார். உலகப் பொருள்களுள் மலர் உயர்ந்ததாகும். அது மென்மையும் அழகும் உடையது. மனித உறுப்புக்கள் கூட நல்லவாறு அமைந்தால் மலர் எனப்படுவதுண்டு. காரண உடம்பில் உள்ள ஆதாரங்கள் கூட மலர்கள் எனப்படுகின்றன. இதயத்தையும் மலர் என்பர். அந்த இதய மலரின் மேல் விளங்கும் திருவடிகளும் மலர் எனப்பட்டன. வனசம் என்பது தாமரை மலராகும். இறைவன் திருவடிகள் இங்கு வனச மலர் எனப்பட்டன.

இரண்டு திருவடிகளுள் ஒன்று பரஞானத்தையும் மற்றது அபரஞானத்தையும் குறிக்கின்றன. பரஞானம் என்பது இறைவனு டைய ஞானம் ஆகும். அபரஞானம் உலக அறிவாகும். முன்னது அப்பன் சத்தி; ஆண் சத்தி. பின்னது அம்பிகையின் சத்தி. பெண் சத்தி. அபரஞானத்தைப் பெற்ற பின்பே பரஞானத்தைப் பெற முடியும். ஆன்மாவுக்குப் பரஞானம் வரும்போது அம்பிகை அப்பனிடம் ஒடுங்குவாள்.

''இரு தாள்'' என்றதனால், ஒன்று தந்தால் போதாது, இரண்டையும் ஒருங்கு எப்போது கொடுப்பாய் என்று கேட்பதாக அமைந்துள்ளது.

தருதல் என்பது ஒத்த நிலையிலுள்ளவர்கள் ஒருவர் மற்றொரு வருக்குத் தருவதாகும் (உயர்ந்தோர் தாழ்ந்தோருக்குக் கொடுக்கும் போது அது ''ஈதல்'' என்னும் பெயர் பெறுகிறது. தாழ்ந்தோர் உயர்ந்தோருக்குக் கொடுக்கும்போது அது ''கொடுத்தல்'' ஆகின்றது). இங்கு முருகனிடம்தான் உரிமையோடு தருக என்று கேட்கின்றார்.

திருவடி தருதல் என்பது தீட்சையாகும். எனவே எனக்கு எப்போது தீட்சை செய்ய இசைவாய் என்று கேட்கின்றார்.

(3) வரதா!

இறைவனுடைய திருக்கரங்களுள் ஒன்று அபயகரமும் மற்றது வரத கரமும் ஆம். அபய கரம் அணைக்கும். வரத கரம் கொடுக்கும். முருகன் கலியுக வரதனாவான். அதாவது தீமைகள் நிறைந்த

நிலையிலுள்ள இக்காலத்தில் வரங்களைப் பத்தர்களுக்குக் கொடுப்பவன் ஆவான். எனவே ''வாதா'' என்றார்.

(4) **முருகா!**

முருகா என்பதன் விளக்கத்தை முன்னமே பார்த்திருக்கிறோம். அவன் அழகுடையவன் என்பது குறிக்கப்படுகிறது.

(5) **மயில் வாகனனே!**

மயில், 36 தத்துவங்களுள் சுத்த மாயை ஐந்தினையும் குறிப்பதாகும். மயில் வாகனன் என்றதனால் இறைவன் சுத்தமாயைக்கும் மேலானவன் என்பது தெரிவிக்கப்பட்டது. பரஞானத்தைத் தருபவன் என்பதும் ஆம்.

(6) **விரத!**

விரதம் என்பது ஒரு கோட்பாடு. இங்கு இறைவனுக்கு ஒரு கோட்பாடு உண்டு. அது ஆன்மாக்களை மேலேற்றும் வைராக்கியம் ஆகும். மேலேற்றும் கொள்கை உடையவனே என்றதனால் என்னையும் மேலேற்றுக என்று மறைமுகமாகக் கேட்டுக் கொள்வதாகவும் ஆகின்றது.

(7) **அசுர சூர விபாஷணனே!**

''விரதாசுர'' என்னும் தொடரை ''விரத+அசுர'' என்று பிரிக்க வேண்டும். (''விரத'' அண்மை விளி) விபாஷணன் என்பது அழித்தவன் என்று பொருள்படும். பாழ் என்பது அழித்தல். விபாழ் என்பது முற்றும் அழிப்பது. (பேழ் என்னும்போது பெருமை ஆகின்றது. அதனாலேயே பெருமைக்குப் பேஷ் என்று சொல்லும் வழக்கு வந்தது. பாஷணம் என்பது நஞ்சையும் கல்லையும் குறிக்கும். அவை இரண்டும் அழிப்புக்கு அறிகுறி). இங்கு முருகன் அசுரர்களையும் அவர்களுடைய தலைவனான சூரனையும் அழித்தமை குறிக்கப்பட்டது.


ஆக இப்பாடலில், அபர, பரஞானங்களைத் தர வேண்டும் என்றும் அவற்றைத் தருவதற்கு எப்பொழுது இசைவாய் என்றும் அருணகிரியார் முருகனைக் கேட்டுள்ளார்.

III சக்கரம்

இந்தப் பாடலிலிருந்து 12 பாடல்கள் அநாகதச் சக்கரத்தைச் சேர்ந்தவை. மேற்கூறிய திருவடிகள் இரண்டும் பதிய வேண்டிய இடம் இதயம் ஆகும். அநாகதச் சக்கரமும் இதயத்தைச் சேர்ந்த தாகும். உடம்பில் இதயமும், அதற்கு மேல்பாகமும் சுத்தம் செய்யும் பகுதியாகும். (இதயத்துக்குக் கீழே அதாவது அடிவயிறு அசுத்தமான பாகம் ஆகும்). காற்று இதயத்தில் இரத்தத்தைச் சுத்தம் செய்கிறது. அவ்வாறே அது பரஞானம் பதியும் தலமும் ஆகின்றது.

மூலாதாரத்தில் முக்கோணம் கீழ் நோக்கியதாக அமைந்தது. அது இங்கே மேல் நோக்கியதாக மாறுகிறது. இங்கே குறிக்கப்படுவது ஆதார மலரிலுள்ள முக்கோணம் ஆகும். (உடலுறுப்பாகிய இதயம் தொங்கவிட்ட மாங்காயைப் போன்று கீழ் நோக்கிய முக்கோணமாக இருக்கும். அதிலும்கூட அதன் வடிவம் கீழ் நோக்கியதானாலும், அதன் ஆற்றலும் அழுத்தமும் மேல் நோக்குடையனவே. முக்கோணம் சத்தியின் உருவம். நாற்கோணம் அச்சத்தியான பண்டமாகும். பிறை அச்சத்தியின் இயக்கத்தைக் குறிப்பதாகும்). இதயத்தில் இயக்கம் மேல் நோக்கு உடையதாக மாறுவதால் முக்கோணமும் மேல் நோக்கி மாறுகிறது.

மார்புக்குக் காற்று வருவதனால் வல்லெழுத்து அங்குத் தோன்றுகின்றது. மார்பு வலிவானது. அதனால் அதற்கு ''உரம்'' என்னும் பெயர் வந்தது. வல்லெழுத்துக்களுள் முதலாவதாகிய 'க'கரம் இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்தாகும். இதற்கு அதி தேவதை ''விசயன்'' ஆவான். திருவடி தீட்சையைப் பெறுவதில் வந்த வெற்றியை இது குறிக்கின்றது. இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-22

காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா!
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுர பூபதி மேருவையே.

I பொழிப்புரை

பாளையைப் போன்ற குழலுடைய வள்ளியின் தவத்துக்கு இரங்கி வந்து ஞானம் வழங்கிய வள்ளலாகிய முருகனை, இந்திரனுக்கு ஆதாரமானவனை, இளமை மிகுந்த குமரேசன் என்று எண்ணி, அவன் திருவடியைத் தியானிப்பதற்கு நான் தவம் செய்தவாறு என்னே!?

II விளக்கவுரை

(1) பாளைக்குழல் வள்ளி பதம் பணியும் வேளை

''பாளைக் குழல் வள்ளி'' என்பது பாளையை ஒத்துக் குழன்று வளருகின்ற கூந்தலை உடைய வள்ளி என்று பொருள்படும்.

வள்ளி என்பவள் (முருகனுக்கு) அணுக்கமானவள் ஆவாள். செறிவானவள் என்றும் அச்சொல்லுக்குப் பொருள் உண்டு. மழையை ''வள் உரை'' என்பர். ''வள்'' என்பது செறிவைக் குறிக்கும். அதாவது மழைத்துளி தனித்தனியே துளித்துளியாகப் பெய்தாலும், செறிவாக நெருங்கித் துளிக்கும். அந்நெருக்கத்தால் பெருமழையாகிச் சிறக்கிறது.

நெருக்கக் கூந்தலை உடையவள் வள்ளியாவாள். சில பெண்கள் மற்றவகைகளில் அழகாய் இருப்பார்கள். ஆனால் கூந்தல் சரியாக இருக்காது. மகளிர்க்குக் கூந்தல் சரியாய் வளர்ந்திருப்பது கட்டாயம் ஆகும்.

பனைமரப் பாளைக்கும், பொதுவாக எல்லாப் பாளைகளுக்கும் ''கூந்தல்'' என்னும் பெயரும் உண்டு. அதாவது கிளை இல்லாத

எல்லா மரங்களினுடைய பாளைகளுக்குக் ''கூந்தல்'' என்று பெயர். அது அந்த வகை மரங்களின் பூங்கொத்து ஆகும். இப்பூங்கொத்தில் தேன் கிடைக்கும். (இம்மரங்களிலிருந்து மற்ற பகுதிகளில் எடுக்கப் படுவது ''கள்'' ஆகும்). பாளையாகிய கூந்தலுக்குள் தேனோடு, மலர், பிஞ்சு, காய் முதலியனவும் அடங்கியிருக்கின்றன. அது போலவே மாதர் கூந்தலிலும் மதிப்புக்குரிய பொருள்கள் உள்ளன. அவற்றின் விவரங்களைக் காண்போம்:

மாதர் கூந்தலை எளிதாக எண்ணுதல் ஆகாது. அது பெருமதிப்புக்குரியது.. அது மின்மினிப்பும், மழமழப்பும், குழைவும் உடையது; வளர்ச்சி முகம் உடையது. அதன் நுனியில் முளை இருபிரிவாகப் பிரிந்திருக்கும். பெருக்கிக் கண்ணாடியில் பார்த்தால் இது தெரியவரும்.

உடம்பில் நம் உணர்ச்சிகளைத் துடிப்பாக வெளிப்படுத்தும் உறுப்புகள் பல உள்ளன. அவற்றுள் கண் முதலிடம் பெறும். கூந்தலும் அவற்றுள் ஒன்று. கண்ணைப்போல, பிறர் பார்க்கும்படிக் காட்டாவிட்டாலும், அது உணர்வை வெளிப்படுத்துவதில் கண்ணை விட ஆற்றல் உடையது. இந்த உண்மை பொதுவாக இக்கால மக்களுக்குத் தெரிவதில்லை. பண்டைக்காலத்தில் இதனை மக்கள் அறிந்திருந்ததோடு, பயன்படுத்தியும் வந்தனர். இன்று அது மறைந்த கலையாக உள்ளது. பண்டைக்காலத்தவர் கூந்தலைத் தலையணை போல நீட்டியும் சுருட்டியும் வைத்துப் படுப்பர். அக்கூந்தல் மேல் கணவன் தலை வைத்துப் படுப்பான். அதன் பயனாக, மனைவியின் தூய எண்ணங்களின் ஆற்றல் கணவனுக்கு வந்து பதியும். பெண்களுக்குத் தவசத்தியும், எண்ண ஆற்றலும் மிகுதியாய் இருந்ததனால் அவை கணவனுக்கும் பாய்ந்து பயன் தந்தன.

யார் அடக்கமாக இருக்கிறார்களோ அவர்கள் சத்தி மிக்கவராய் இருப்பர். அடுப்பில் வேகவைக்கும்போது மூடி வைத்தால் விரைவில் கொதிக்கும். அவ்வாறே மாதர் அடக்கமாய் இருப்பதனால் அவர்க ளிடம் தவசத்தி மிகும். நிறை அடக்கம் அல்லது நல்ல அடக்கம் உடைய மாதர் சிறந்தவர் ஆவர். (அடக்கம் வேறு கட்டுப்பாடு வேறு. கட்டுப்பாடு சிறந்ததன்று).

எண்ணத்தூய்மையும் தவ ஆற்றலும் உள்ள மாதர் வருந்தினால் குடும்பம் சீர்படாது என்பர். காற்றழுத்தத்தையும், நீரின் அழுத்தத்தை யும் சமாளித்து விடலாம். ஆனால் எண்ண அழுத்தம் மிகுமானால்

அதைச் சமாளிக்க முடியாமல் போய்விடும். (கண்ணகி வரலாற்றை எண்ணிப்பார்க்க).

எண்ணமும், தவமும் ஒரு பிறவியோடு முடிந்து விடுவன அல்ல. அவை பிறவிதோறும் தொடர்ந்து வரும். மாதருடைய எண்ணங்கள் தங்குவதற்கு இடமாய் இருப்பது அவர்களுடைய கூந்தலாகும். எண்ணம் என்றபோது, அவர்களுடைய இதய உணர்ச்சி, மூளை பலம் எல்லாம் அதில் அடங்கும். எனவே கூந்தல் ஆற்றலின் இருப்பிடமாக விளங்குகிறது. இக்காரணம் பற்றியே, தன் கணவனைத் தவிர வேறு யாரும் கூந்தலைத் தொடக்கூடாது என்னும் கோட்பாடு இருந்து வருகிறது. பெற்றோர் கூடத் தம் பெண் குழந்தை பருவம் அடைந்தபின் அவள் கூந்தலைத் தொடக்கூடாது என்பது முறை. தன் மனைவியல்லாதாரின் கூந்தலைத் தொடும் ஆண் மகன் அழிந்துபடுவான். தக்க மாதருடைய கூந்தலுக்கு அச்சத்தி இருக்கிறது. தகாத பெண்ணானால், இருவரும் அழிவர்.

தூய மாதர் தம் தலை மயிராலே மந்திரிப்பதுண்டு. மந்திரம் இல்லாமல் வெறுமனே தடவினாலும் நோய் நீங்கும்.

இச்சிறப்புகள் கூந்தலுக்கு இருப்பதனால், அதனைப் பூசை செய்வதுபோல, அதற்குப் பூ வைக்கின்றோம். மரியாதை செய்கின் றோம். கூந்தலுக்குச் செய்யப்படும் மரியாதை எவ்வளவோ, அவ் வளவுக்கு அது தியானம் செய்யும்போது சாதகமாய் அமைகின்றது. இந்த உண்மைகளை எல்லாம் அறியாத மேல்நாட்டவர் அதனை வளரவிடாமல் வெட்டி விடுகின்றனர். (அதைப்பார்த்து நம்மவரும் அவ்வாறே செய்யத் தொடங்கிவிட்டனர்).

பெண்களுக்கு இருப்பதைப் போல ஆண்களுக்கும் தலைமயிர் உண்டு. ஆனால் அதன் நிலை வேறு. அதனால் இவ்விரண்டுக்கும் வெவ்வேறு பெயர்கள் அமைந்துள்ளன. அவை ஆற்றலிலும் வேறுபட்டுள்ளன. தம் சத்தியைப் பிறருக்குச் செலுத்தும் ஆற்றல் ஆண்களுக்கு இல்லை. ஆணின் தலைமயிருக்குக் ''குஞ்சி'' என்று பெயர். அது அடக்கமானது. நீண்டு இருப்பதில்லை. ''கும்'' என்னும் சொல் அடக்குதல், வெப்பம் காட்டல் என்னும் பொருளை உடையது. 'கு' என்னும் குறிலெழுத்தும் அடக்குவதைக் காட்டும். 'கு'கரத்தில் தொடங்கும் ''குஞ்சி''யும் ஆண்களின் உணர்வுகள் வெளியில் சிதறாமல் இருக்கும்படி அவர்கள் தலைமயிர் அடக்கி வைத்துள்ளது என்பதனைக் குறிக்கும்.

பெண்களுடைய தலைமயிர் உணர்ச்சிகளை வழங்குவதனால், ''கூ'' என்னும் நெடிலெழுத்தைக் கொண்ட ''கூந்தல்'' என்னும் பெயரைப் பெற்றது.

அடுத்து ''வள்ளி பதம் பணியும் வேள்'' என்று வந்ததனால் முருகன் வள்ளியை மதித்து நடந்து கொண்டான் என்பது புலப்படுகிறது. அடிமையானான் என்பதன்று. இங்குப் ''பதம்'' என்னும் சொல்லுக்குப் பக்குவம் அல்லது மென்பதம் என்று பொருள். ''பாதம்'' என்றால் கால் ஆகும். பாதம் என்று கொண்டாலும், மாதருடைய காலுக்கு மென்பதம் உண்டு. அவர்கள் நடக்கும்போது மலர் வைப்பதுபோல, மென்மையாகப் பதித்து நடப்பர். இது அவர்களுக்கு இறைவன் படைத்த அமைப்பாகும். படைப்பு அவ்வாறு அமைந்ததோடு, அவர்கள் நடப்பதும் மிகக்குறைவே.

அத்தகைய மென்மையான வள்ளியின் பாதத்தை முருகன் பணிந்தான் என்றால், வள்ளிக்கு உபகாரம் செய்வதற்காக இரங்கி வந்து ஈடுபட்டான் என்பது பொருளாகும். உதவுதல் முருகனுடைய இயல்பு. அதனாலேயே அவன் ''வேள்'' எனப்பட்டான். ''வேள்'' என்னும் சொல்லுக்கு உபகாரி என்று பொருள்.

''பணியும்'' என்றது, தன் உயர்நிலையை (அந்தஸ்தை)ப் பாராமல் கீழே வந்து இணங்கி உதவி செய்வதைக் குறிக்கும் அதனாலேயே நாதங்கடந்தவன், அடித்தளத்திலுள்ள தத்துவமாகிய மண்ணைத்தன் தலைமேல் சுமந்து, மாணிக்க வாசகருக்கும், பாண்டியனுக்கும் உதவி செய்தான்.

''குழல் வள்ளி'' என்று கூறியதால் வள்ளி தவத்தால் சிறந்தவள் என்பது குறிக்கப்பட்டது. ஏனெனின், குழல் என்பது கூந்தல்; அது தவத்துக்கு அடையாளம். எனவே முருகன் உபகாரம் செய்வது தவம் உடையவர்களுக்கே என்பது பெறப்படும். எனவே மாதர் தவத்தில் சிறக்க வேண்டியவர் ஆவார். அதற்காக அவர்கள் காலையிலும், மாலையிலும் வழிபாடு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதனால், தம் கணவரைக் காக்கும் ஆற்றலைப் பெறுகின்றனர். ''தற்கொண்டான் பேணி'' என்று திருக்குறளில் வந்ததனால், இக்கடமையும் அவர்களுக்கு உண்டு. உண்மையில் மாதர்களால்தான் குடும்பம் தலையோங்க முடியும். அவர்களுடைய எண்ண வளர்ச்சி யால் அவ்வாறு ஓங்கச் செய்யும் தகுதியைப் பெற்றுள்ளனர். புறத்தே சென்று செயல் செய்வதை விட நுட்பமாகிய எண்ணத்துக்கு ஆற்றல்

அதிகமாய் இருப்பதால் இது சாத்தியம் ஆகின்றது. இக்காரணம் பற்றியே கணவர் நாத்திகரானாலும் மாதர் நாத்திகராகாமல் இருப்பது அவசியம் ஆகின்றது. இல்லையானால் நாடு பாழாகும்.

(2) சுர பூபதி மேருவையே

தவசியாகிய வள்ளிக்கு உதவி செய்யும் வேளாகிய முருகனை மற்றும் இந்திரனுக்கு ஆதாரமானவனைத் தியானிக்கும் தவம் எய்தியவாறு என்னே! என்று கூறுகிறார் அருணகிரியார்.

இங்குச் ''சுரபூபதி'' என்றது: தேவர்களுக்குத் தலைவனான இந்திரனையாகும். இந்திரன் என்பது மழை. மழைக்கும் மலைக்கும் தொடர்புண்டு. (''இந்திரனே சாலும் கரி'' என்பதில் ''இந்திரன்'' என்னும் சொல் ''மழையே'' என்னும் கருத்திலேயே வந்தது). மழை மலையில் பெய்து ஆறுகளாய் வந்து ஆண்டு முழுவதும் பயன்படுகிறது. எனவே மழைக்கு ஆதாரமானது மலையாகும்.

மலைகளுள் பெரியது மேருமலை. மழைக்கு மலை ஆதாரமான தைப்போல, இந்திரனுக்கு ஆதாரமாய் இருப்பவன் முருகன். எனவே முருகனை (மலைகளுள் பெரிதாகிய) மேருவே என்றார்.

யோகமுறையில் ''மேரு'' என்னும் சொல் நடு நாடியைக் குறிக்கும். நடுநாடியின் முடிவாகிய உச்சியையும் குறிக்கும். இச்சொல் பளபளப்பையும் குறிக்கும். (மெருகு என்பதும் இதுவே). நடு நாடியில் உணர்வு போகும்போது உடம்பு மினுமினுக்கும்.

இந்திரன் போகத்தில் சிறந்தவன்; அதிக போகியானவன். அவனுடைய உலகம் போகத்துக்கென்றே அமைந்துள்ளது. திரு வள்ளுவர் கருத்துப்படி இந்தப் போக உலகம் சிறப்புடையதன்று. ''வானோர்க்கு உயர்ந்த உலகமே'' சிறப்புடையது. அதுவே நம் குறிக்கோளாதல் வேண்டும். ஒரு போகத்தை (இன்பத்தை)த் துய்க்க வேண்டுமானால், அதற்கு ஒத்த துன்பத்தை அநுபவித்தால் மட்டுமே அது வரும். எனவே நமக்கு இன்பமும் வேண்டாம். துன்பமும் வேண்டாம். நமக்கு வேண்டுவதெல்லாம் அருள் ஒன்றேயாகும். அதுவே மனிதப்பிறவியின் பயனாகும்.

இந்திரனுக்கு ஆதாரமாய் இருப்பவன் முருகன் என்பதைத் தெரிவிக்க ''சுரபூபதி மேரு'' என்றார். முருகன் போகியாகிய இந்திரனுக்கு ஆதாரமாய் இருப்பதோடு யோகிகளுக்கும் ஆதாரமான

வனாய் இருக்கின்றான். மற்றும் போகிகளையும் யோகிகளாக்க வல்லவனாயும் இருக்கின்றான். பெருஞ்செல்வரைப் பத்தர்களாக்க முடியாது என்பர். ஆனால் முருகன் அவர்களையும் மாற்றும் பெரிய வல்லமை உடையவனாவான். அவன் தவசிக்கு இணங்கி ஞானம் தருவான்; போகிகளைத் தவசிகளாக்குவான். முருகன் போகத்துக்கும் யோகத்துக்கும் உரியவன் ஆனாலும் அவனைத் தவ உணர்வில் பார்ப்பதே சிறப்பு. (தவமும், உலகியல் நிலையும் இரண்டையும் தருபவன் முருகன். அருளும் பொருளும் உண்டாகும் என்பதற்கா கவே முருக மூர்த்தம் சிவ சமயத்துள் உள்ளது. சிவனை வழிபட்டால் வளம் குறையும் என்னும் கருத்து உண்டு. பொருளே வேண்டும் என்று சிவத்திடம் வேண்டினால் அதுவும் கிடைக்கும்; ஆனால் அவன் அருளுக்கே சிறப்புடையவன்).

தேவபோகம் என்று சில அநுபவங்கள் ஆதார மலர்களில் வருவதுண்டு. சில சித்தர்கள் அவற்றைத் துய்த்துக் கொண்டு அங்கேயே தங்கிவிடுவர். ஆன்மா முன்னேறும்போது இந்தப்போக நிலைகளுள் மயங்காமல் அவற்றைக் கடந்து மேல் செல்ல வேண்டும்.

ஆன்ம உணர்வு மூலாதாரம், சுவாதிட்டானம் ஆகிய ஆதாரங் களுக்கு வரும்போது ஆன்ம தத்துவங்களின் அநுபவம் கைகூடும். மணிபூரக ஆதாரத்துக்கு வரும்போது வித்யா தத்துவங்கள் கைவரும். ஆன்மா அவற்றைக் கடந்து மேலே செல்ல வேண்டிய நிலைகள் பல உள்ளன.

(3) காளைக் குமரேசன் எனக் கருதி

ஆண்மைத்தன்மை அதிகமாய் உள்ள இளைஞனுக்குக் ''காளை'' என்று பெயர். நிறைந்த ஆண்மை நிறைந்த பெண்மையை ஆளும். இங்குக் குறிக்கப்படும் முருகனுடைய ஆண்மை என்பது தவ நிலையை ஆள்கின்ற ஆண்மையாகும். இளமையிலேயே தவநிலை யைப் பெறுவது சிறப்பாகும். (சரியான இளமைக் காலத்திலேயே பெறவேண்டிய அனைத்தையும் பெற்று விட்டதனால் திருஞான சம்பந்தர் 16 ஆண்டுகளே இருந்தார். அதனாலேயே அவரை இறைவனுடைய புதல்வர் என்பர்).

''குமரேசன்'' என்பது இளைஞர்களின் தலைவனாவான். தவம் செய்தலுக்கேயன்றி தவத்தால் வரும் ஞானத்தைப் பிறர்க்கு வழங்கக் கூடிய மென்மையான நிலையும் இளமையில் சிறப்பாய் இருக்கும்.

சத்தியை உபகரிக்கும் பருவம் இளமைப்பருவம். இளைஞனாய் ஒற்றையாய் இருப்பது தவத்துக்குச் சிறப்பு. உடலும் பருமனாய் (ஊதலாய்) இல்லாமல் இருக்க வேண்டும்.

முருகனைக் காளை என்றும் குமரேசன் என்றும் ''கருதி''த்தவம் செய்ய வேண்டும். இங்குக் ''கருதி'' என்னும் சொல்லுக்குத் ''தியானித்து'' என்று பொருளாகும். தியானம் செய்யும்போது புலனடக்கத்தைத் தர வேண்டும் என்று எண்ண வேண்டும். ஐம்பூதங்களின்மேல் செல்லும் மனம் ஒருமைப்பட வேண்டும் என்றும் எண்ண வேண்டும். அதாவது புறநாட்டம் போய் அகநாட்டம் அமைய வேண்டும் என்று தியானிக்க வேண்டும். முருகன் தவத்தையும், யோகத்தையும் ஞானத்தையும் தருபவன் ஆதலால், இவற்றைத் தருவான் என்னும் எண்ணமும் வர வேண்டும். இவற்றை எல்லாம் எண்ணுவதையே இங்குக் ''கருதி'' என்றார். அது நம்மை மறந்து, முன்னிலையையும் மறந்து தியானிப்பதாகும். அந்தப் பக்குவம் நமக்கு வரவேண்டும்.

(4) தாளைப் பணியத் தவம் எய்தியவா

''தாள்'' என்பது பூட்டு. அது கதவைச் சாத்திப் பூட்டுவது ஆகும். அதாவது ஒன்றோடு மற்றொன்றைச் சேர்த்து வைப்பது. இங்கு இறைவனுடைய திருவடியும், நம் தலையும் ஒன்று சேர்கின்றன. அவனுடைய ஞானம் நம்முடைய அறிவில் வந்து பதிகிறது. இதனைத் ''தாடலை'' என்பர்.

''தாள்'' என்னும் சொல்லும் , ''தலை'' என்னும் சொல்லும் புணர்ச்சியிலக்கணப்படி ஒன்று சேரும்போது முதல் சொல்லின் முடிவில் உள்ள ''ள்''உம், இண்டாவது சொல்லின் (வருமொழியின்) முதல் எழுத்தாகிய ''த''வும் சேர்ந்து''ட'' ஆகின்றது. (ள்+த=ட).

''ட''கரம் ஒரே எழுத்து ஆனாலும் அதனுள் இரண்டு எழுத்துக்கள் மறைந்து உள்ளன. அதைப்போலவே ஆன்மாவும் இறைவனும் சேர்ந்த முத்தி நிலையில் பார்ப்பதற்கு ஒரே பொருளாகத் தோற்றம் அளித்தாலும் இருவரும் உள்ளனர். இதனையே அத்வைத (இரண்டல்லாத) நிலை என்பர்.

இங்குத் ''தாளைப் பணிய'' என்றது ''திருவடியைத் தலைமேல் ஏற்றுக்கொள்ளும்படி'' என்று பொருளாகும்.

''தவம் எய்தியவா'' (று என்னே) என்பது, மேற்கூறிய ஞானப்பதிவைப் பெறுவதற்குச் செய்ய வேண்டிய தவ, யோக முயற்சிகளை நான் பெற்றவாறு என்னே என்பதாகும்.

தவம் செய்வதில் ஆறு முறைகள் (ஷட்கிரியை) என்று ஒன்று உள்ளது. அது மூச்சுப்பயிற்சியைச் சேர்ந்ததாகும். இப்பயிற்சியைச் செய்வதன் பயனாக இறைவன் தாளை நாம் பணிந்து ஏற்கும் நிலை வரும். அப்பயிற்சியின் விவரங்கள் வருமாறு:

(A) கீழ்நோக்கி (அதோமுகமாக)ச் செய்வன I to III

எண்	மூச்சின் இயக்கம்	காற்றின் அளவு (மாத்திரை)	பாவிக்க வேண்டிய கலை	
I	செய்முறை (கிரியை) - I			
(அ)	வாங்குதல்	12''	சூரிய கலை	
(ஆ)	நிறுத்துதல்	10''	அக்னி கலை	
(இ)	உயர்த்துதல்	16''	சந்திரகலை	புருவ நடுவரை உயர்த்தப்பட வேண்டும்.
II	செய் முறை (கிரியை) II			
(அ)	பந்தித்தல்	5''	மனோஜீவ கலை	உச்சிவரை
(ஆ)	ஊடுருவச் செய்தல்	10''	ஆத்மகலை	உச்சிக்கு மேல்
(இ)	ஸ்தம்பித்தல்	10''	அகண்டாகாரம்	
III	செய்முறை (கிரியை) III			
(அ)	ஸ்தாபித்தல்	8''	அருள்	எட்டாப் பெரு வெளியில்

(B) மேல் நோக்கி (ஊர்த்துவ முகமாக)ச் செய்வன IV to VII

IV I-ல் கொடுத்தது போல

V II-ல் கொடுத்தது போல


VI III-ல் கொடுத்தது போல

ஆக, செய்முறைகள் (I to VI)

மேற்கூறிய 6 செய்முறைகள் சூரியகலையில் தொடங்குவன வாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தேய்பிறையில் செய்யத்தக்கன. இவையே வளர்பிறையில் செய்யப்படும்போது சூரிய கலையிலிருந்து தொடங்குவதற்குப் பதிலாக சந்திர கலையிலிருந்து தொடங்கப்படும். (அப்பொழுது மாத்திரைஅளவில் சிறிது வேறுபாடு வரும்).

III சக்கரம்

இப்பாடலில் அழுந்திய தியானமும், தவமுயற்சியில் ஆழ்ந்து செல்லுதலும் வேண்டப்படுகின்றன. இந்த அழுந்திய நிலையைக் குறிப்பது இரண்டாவது ''க'' ஆகும். சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-23

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ? முறையோ?! முறையோ?!!
வடி விக்ரம வேல் மகிபா! குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே!

I பொழிப்புரை

திருவடிப் பேற்றைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் வாழ்கின்ற அறியாமையால் (மக்கள்) அடியோடு கெடலாமா? அது முறையோ! முறையோ! வடித்தெடுக்கப்பட்ட கூர்மையும் வெற்றியும் உடைய வேற்படை ஏந்திய சிறப்புடையவனே! குறத்தி மகளாகிய வள்ளியை (விந்துவை)ப் புணருகின்ற (தவநெறியில் செலுத்துகின்ற) குண மலையே (இறைவனே)!

II விளக்கவுரை

(1) "அடியைக் குறியாது அறியாமையினால் முடியக் கெடவோ? முறையோ?! முறையோ?!!

"அடி" என்னும் சொல்லுக்கு அடிப்படை என்று பொருள். இந்த உலகுக்கு அடிப்படையாய் இருப்பது என்று ஆராய்ந்த நம் முன்னோர், இறைவனுடைய கருணையே அந்த அடிப்படை அல்லது மூலம் என்று கண்டனர். அதனால் இறைவனுடைய கருணை அல்லது அருளுக்கு "அடி" என்று பெயர் வைத்தனர்.

"குறி" என்பது குறிக்கோள் அல்லது லட்சியம் ஆகும். குறிக்கோள் இல்லாத வாழ்வு பயன் இல்லாதது. அந்த வாழ்வு ஒழுங்காக நடைபெறாது. வாழ்க்கை குறிக்கோளோடும், வழியோடும் போனால் சுகமாக நடைபெறும். வழியில்லாத வழியில், எங்குப் போக வேண்டுமென்பதையும் தெரிந்து கொள்ளாமல் போனால், அந்த வாழ்வில் சுகமும் இருக்காது; பயனும் இருக்காது.

எனவே முதலில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது குறிக்கோ ளாகும். குறிப்பிட்ட ஒன்றை, ஆராய்ந்து, சிந்தித்துத், துணிந்து தேர்ந்து கொள்ள வேண்டும். அக்குறிக்கோள் பலவாக இல்லாமல் ஒன்றாகவும் இருக்க வேண்டும். உயர்ந்த குறிக்கோள், மற்றும் ஒன்றாகிய குறிக்கோள் எது என்று ஆய்ந்துகொண்டே போனால், அது இறுதியில் இறைவனுடைய திருவருள் அல்லது திருவடி என்னும் முடிவுக்குக் கொண்டுபோய் விடும். எனவே அதனைத் தெளிந்து கொள்வதே நாம் செய்ய வேண்டிய முதல் செயலாக உள்ளது. அத்தெளிவே அறிவுடைமை. அத்தெளிவின்மையே அறியாமையாகும்.

மேற்கூறிய தெளிவை நாம் அநுபவத்தில் பெறுவதற்காகவே நமக்கு இல்வாழ்க்கை அமைந்துள்ளது. இந்த உண்மையைத் திருவள்ளுவர் ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் அது'' (45) என்று குறிப்பிட்டார். இத்திருக்குறளில் ''அது'' என்னும் சொல்லில் இந்த உண்மை மறைந்துள்ளது. மற்றும் ''அவை'' என்னாமல் ''அது'' என்றதில் இவ்வுண்மை சாரமாய் இருக்கிறது. பண்பும் பயனும் ''அது'' என்றபோது அது எது? என்று ஆராய வேண்டும். அதுவே ''திருவருள்'', ''திருவடி'' ''துறை'' என்பதாகும். இப்பெயர்கள் எல்லாம் அக் ''குறி''யையே சுட்டுவனவாம். அன்பாலும், அறத்தாலும் பெறக்கூடியதும், பண்பாக வும் பயனாகவும் உள்ள குறிக்கோள் அந்தத் திருவருளேயாகும். அதுவே இல்வாழ்க்கையின் குறிக்கோளும் (இலட்சியமும்) பயனும் ஆம்.

அடுத்து, மேற்கூறிய குறிக்கோளை அடைவதற்கான நெறியை நாம் தேட வேண்டும். அந்த நெறியைத் திருவள்ளுவர் ''அறம்'' என்று காட்டியுள்ளார். அவருடைய நூல் இதை விளக்குவதற்காகவே எழுந்தது என்று கூறலாம். திருக்குறளின் பிழிவே அறம்தான். திருக்குறள் பொன்னையும் பொருளையும் தேட வேண்டாம் என்று கூறவில்லை. மாறாக ''செய்க பொருளை'' என்று கூறுகிறது. இன்பம் துய்ப்பதையும் தடுக்கவில்லை. ஆனால் அவற்றை, அறவழியே பெற்று, அறவழியே துய்க்க வேண்டும் என்றுதான் கூறுகிறது. வாழ்க்கை முழுவதும் இந்த அறத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதுதான் திருக்குறளின் நோக்கம்.

அறத்துக்கு அடிப்படையாய் இருப்பது அன்பு. அதுவும், இறைவன் மேல் அன்பு செலுத்தும் முகமாக, உயிர்கள் மேல் இரக்கம் கொண்டு, அதன் காரணமாகக் கடமையைச் செய்வதுதான் ''அறம்'' ஆகின்றது. அறம் பயனைத்தரும். அன்பு பண்பைத்தரும்.

இறைவன் மேல் வைக்கும் அன்புதான் அறமாகிய கடமையைச் செய்வதற்கு அடிப்படையாய் இருப்பதனால், அவன் திருவடியையே நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

இறைவனுடைய இயல்பு கருணையாதல்போல, ஆன்ம இயல்பு உணர்வாகும். கருணையின் இருப்பிடம் அவன் திருவடி. ஆன்ம உணர்வின் இருப்பிடம் இதயம். இறைவன் திருவடி ஆன்மாவில் பதியும் இடம் தலை என்பதனையும், தாள்+தலை அத்துவிதத்தைக் காட்டும் ''தாடலை'' ஆனது என்பது பற்றியும் முன்பாடலில் (22) பார்த்தோம். திருவருள் பதியும் இடம் தலையானாலும், அது ஆன்ம உணர்வோடு கலந்து தங்கும் இடம் இதயமாகும். எனவே இதயமே ஆன்மாவின் அடிப்படையாக உள்ளது.

இதயத்துக்குக் கீழே உள்ள பகுதி (அதாவது அநாகத ஆதாரத்துக்குக் கீழ் உள்ள பகுதி) அசுத்தமானது. இதயம் தூய பகுதி; புனிதமான பகுதி. அதனாலயே இலிங்கம், உருத்திராக்கம், தாலி முதலியவற்றை இதயத்தில் இருக்கும்படி அணிவர். இதயத்தி லிருந்துதான் சத்தி அரும்புகிறது. அரும்பி, உடல் முழுவதும் பரவி, மீண்டும் இதயத்திலேயே வந்து அடங்குகிறது. இரவில் தூங்கும் போதும், ஆன்ம உணர்வு அங்கு வந்து தங்கும். இதயமே ஆன்மாவின் நிலைபேற்றுக்கு உரிய இடம்.

''மலையில் விளைந்தாலும் உரலில்தான் மசிய வேண்டும்'' என்று ஒரு பழமொழி உண்டு. இங்கு மலை என்பது தலையைக் குறிக்கும். அதாவது தலையில் பதிந்த அல்லது விளைந்த திருவருள் இதயத்தில் வந்து நிலைபெறும்.

(உடல் தூய்மை ஆனபிறகு நினைப்புத் தூய்மை பெறும். நினைப்புத் தூயதான பிறகு அறிவு தூய்மை பெறும். அறிவு தூயதான பிறகு உணர்வு தூய்மை பெறும். உணர்வு தூய்மை பெற்ற பிறகே இறையருளை ஆன்மா பெற்றுக்கொள்ள இயலும்.)

ஆக, இப்பாடலில் ''அடியைக் குறியாது'' என்றது ''இறைவ னுடைய திருவடியை ஆன்மாவின் இதய உணர்வினால் குறியாகக்

கொள்ளாமல் போனால் என்று பொருள்படும். அவ்வாறு கொள் ளாமை, அறியாமை இருக்கிறது என்பதனைக் காட்டும். ஆண்டவன் அடியைக் குறியாக வைத்து வாழ்பவர் அறிஞர் ஆவர். அவர்கள் நீடுவாழ்வர். மற்றையவர் கெட்டுப்போவர். அவர்களுடைய ஆக்கம் பெரிதுபோலத் தோற்றமளித்துப் பின் கெடும்.

அடியைக் குறியாக வைத்தவர்கள் உரமாய் இருப்பர். அவர் களை எந்த வகையிலும் அசைக்க இயலாது. பட்டினத்தாரைக் கழுவேற்றப் பார்த்தனர். அவர் அதற்கு அசையவில்லை. அவர் குறியிலிருந்து மாறவில்லை. கழுவே எரிந்துவிட்டது. இந்த நிகழ்ச்சி, இந்த நாட்டு அருள் சிறப்புக்கு எடுத்துக்காட்டு. பிறநாடுகளில் வேறு.

இறைவன் திருவடியைக் குறியாகக் கொள்ளாத அறியாமை உடைய மக்கள் நிலையை எண்ணி அருணகிரிநாதர் வருந்துகிறார். அவர்களுக்காக இறைவனிடம் முறையிடுகின்றார். ''முடிய'' என்னும் சொல் அடியோடு என்று பொருள்படும். மக்கள் அறியாமையினால் அடியோடு கெட்டுப்போவது முறைதானா என்று பரிந்து வாதாடு கிறார். முருகனை விளித்து ''அவர்கள் கெட்டுப் போகலாமா? அது முறையாகுமா? முறையாகுமா?'' என்று இரண்டு முறை வருந்திக் கேட்கின்றார்.

அருள் நெறிக்கு மாறுபட்டவர்கள் நிலைத்ததில்லை. மாறுபட்ட நூல்களும் நிலைத்ததில்லை. அருள்நெறிக்கு மாறுபடாத சங்கநூல்கள், திருக்குறள், சம்பந்தர் முதலானோரின் வாக்குகள் அழிவதில்லை.

இனி, ''அடியைக் குறியாக''க் கொள்ளாமல், பணி மனப் பான்மை மட்டும் சிலருக்கு இருப்பதுண்டு. அத்தகையோர் நாளடை வில் நெறிதவறிப் போகும் வாய்ப்பு இருக்கிறது.

மாறாக, அடியைக் குறியாக வைத்துக்கொண்டு, பணி செய்யாத வர்களும் இருப்பர். அவர்கள் ஆரம்ப நிலையினர் ஆவர். அவர்கள் கெட மாட்டார்கள். காலப்போக்கில் நல்ல நெறியைப் பற்றிக்கொண்டு முன்னேறுவர்.

சிலர், இறை இருப்பை உணர்ந்திருந்தும் மறுத்துப் பேச வேண்டும் என்பதற்காக மறுப்பர். அவர்கள் முடியக்கெடுவர்.

அறியாமை காரணமாக அருள் நெறியில் செல்லாமலும், மறுத்தலையும் செய்யாமலும் இருந்து கொண்டு பணியை மட்டும் செய்வோர் அறிவு வந்தபின் நன்னெறிக்குத் திரும்புவர்.

இவ்வாறு பல நிலைகளில் உள்ள ஆன்மாக்களின் முன்னேற்றத் தைக் கருத்தில் கொண்டு இரக்கம் காரணமாக, இறைவனை நோக்கி ''முறையோ!? முறையோ?'' என்று அருணிரிநாதர் வினவினார். அதே நோக்கத்தோடு, நாமும் தியானித்தால், மாறுபட்டவர்கள் திருந்துவர்.

(2) வடிவிக்ரம வேல் மகிபா, குறமின் கொடியைப் புணரும் குணபூதரனே!

''வடி'' என்பது நன்கு வடித்தெடுக்கப்பட்ட கூர்மையான என்று பொருள்படும். ''விக்ரம'' என்பது நல்ல செயல் திறமைகளைக் குறிக்கும். சிறந்த முறையில் கையாள்வதால் வருகின்ற வெற்றியை யும் குறிக்கும். ''வேல்'' என்பது ஞானம். மனிதனுக்கு ஞானம்தான் வெற்றி தருவதாகும். ''மகிபன்'' என்பது சிறப்புடையவன் - அரசன்.

''குறமின் கொடி'' என்பது வள்ளிப் பிராட்டியாவார். முருகன் வள்ளியை மணம் செய்து கொண்டது இங்குக் குறிக்கப்பட்டது. குறவர் மலைகளிலும், காடுகளிலும் வாழ்பவராவர். காடு இங்கு நாடி நரம்புகளைக் குறிக்கின்றது. அவற்றுக்கடையே தோன்றுகின்ற மின்சத்தியாகிய விந்து சத்தி வள்ளி அல்லது ''குறமின் கொடி'' எனப்பட்டது. வள்ளியைத் தணிகைக்கு அழைத்து வந்தான் என்பது விந்துவை உபசாந்தத்துக்கு அழைத்து வந்தான் என்பதாகும். மற்றப்படி பெண்ணைப் புணர்ந்தான் என்பது உருவகச் சொற்களே. புணர்தல் என்னும் சொல்லுக்கு அணைதல் என்று பொருள். ஆன்ம உணர்வும், விந்துவும், கருவிகரணங்களிலிருந்து நீங்கி, சேரவேண் டிய இடத்தில் சேர்தலே அவ்வாறு கூறப்பட்டது. உடம்பின் கொழுந்தாகிய சத்தி விந்து சத்தி. அது அருளொடு சேர்தலே இங்குப் ''புணர்தல்'' எனப்பட்டது. அதைப் பெறத்தக்கவர் நீத்தா ராவர். அவர்களே குணம் உடையவர்கள். அவர்கள் இயற்கைக்கு ஒத்த வாழ்வை வாழ்பவர் ஆவர்.

இயற்கைக்கு ஒத்த வாழ்வை வாழ்ந்தாலே விந்து அருளொடு சேரும் நிலையைப் பெற முடியும். இதற்காகத் திருமணம் இல்லாமல் பிரம்மசாரியாக இருக்க வேண்டுமென்பதில்லை. திருமணம் இல்லாத

வாழ்வு இயற்கையோடு ஒத்த வாழ்வன்று. அது செயற்கைப்போக்கு உடையது.

இயற்கைப் போக்கென்பது பிறர்க்கென வாழும் வாழ்வாகும். இதுவே குண நிலையாகும். இந்த வாழ்வினால், பிரம்மசரிய ஒழுக்கம், நம் முயற்சி இன்றித் தானே வந்து அமையும்.


''பூதரம்'' என்பது மலை. ''பூதரன்'' என்பது மலையோன். ''குண பூதரன்'' என்றது குணமலையோன் ஆகும்.

ஆக, இப்பாடலில் ஆன்மாக்கள் அழிவில்லா நிலையை அடைவதற்கு ஒரு குறிக்கோளைத் தெரிந்து எடுத்துக் கொண்டால், இறைவன் நெறி காட்டி உதவி செய்வான் என்பது கூறப்பட்டது.

III சக்கரம்

குறிக்கோளுடைய வாழ்க்கையை வாழ்ந்து நிலைத்ததன்மையை அடையவேண்டுமென்பது இப்பாடலின் கருத்து என்பதைப் பார்த்தோம். நிலைத்த தன்மையை நாடாதவர்கள் கெட்டுப்போவார்கள். சமயவாழ்வின் நோக்கம் நிலைத்த பொருளாகிய இறைவனோடு சேர்தலாகும். எனவே சமய ஆசிரியர்கள் அனைவரும் நிலையாமையை எடுத்துக்காட்டியே உண்மைகளை விளக்கி வந்தனர். கெட்டுப்போகாமல் நிலையுதலை (நிலைத்தன்மையை)ப் பெற வேண்டும் என்று வற்புறுத்துவதற்கான எழுத்து அழுத்தமான ('க'கர வர்க்கத்தின் மூன்றாவது எழுத்தாகிய) ''கஃ'' ஆகும்.

ஆக இப்பாடலுக்குரிய சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-24

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ!
சூர் வேரொடு குன்று துளைத்த நெடும்
போர்வேல! புரந்தர பூபதியே!

I பொழிப்புரை

சூரனையும் அவனுக்கு ஆதரவாக இருந்த மலைகளையும் (மும்மலங்களையும்) வேரொடு துளைத்து அழித்த கடுமையான போர்த்தன்மையுடைய நீண்ட வேல் உடையவனே! வானவர்கள் தலைவனே! கூர்மையான வேல் போன்ற கண்களையுடைய மங்கையரின் கொங்கையில் சேர்ப்பவனாகிய யான் அருளைச் சேர எண்ணுவது இயலுமா? (இயலாது, எனினும், அருளொடு சேரும்படி அருள்புரிக).

II விளக்கவுரை

(1) சூர் வேரொடு குன்று துளைத்த நெடும் போர்வேல

''நெடு'' என்னும் சொல் ''வேலுக்கும், போரு''க்கும் அடைமொழியாக வருகிறது. சுருக்கத்துக்காக இரண்டு முறை சொல்ல வேண்டியதை ஒரே முறை சொல்லியுள்ளார்.

''நெடும் போர்'' என்பதனை நீண்ட நாள் போர் என்று கொள்ளாமல் கடுமையான போர் என்று கொள்ள வேண்டும். போர் கடுமையானதானாலும் அது முருகனுக்கு எளிதேயாகும். மற்றும், முருகனைத் தவிர வேறு யாராய் இருந்தாலும் சூரனை வென்றிருக்க முடியாது.

''நெடுவேல்'' என்பது நீண்ட வேலை உடையவனே என்று பொருளாகும். வேலெனப்படுவது ஞானம். வேலை உடையவரின் (முருகன் திருவுருவின்) முகமும், வேலின் முகமும் (அகன்ற பகுதி) ஒத்த அளவினவாக இருக்க வேண்டும். திரு உருவை அமைக்கும்

போது, முகத்துக்கு நேராக அதாவது உயரம் குறையாமல் திட்டமாக இருக்க வேண்டும். சிறிது நீண்டிருந்தாலும் தவறு இல்லை.

பண்புபட்ட அறிவு, ஞானம் எனப்படும். கனிந்துவிட்ட அறிவு, குணம் எனப்படும். எனவே அருள்நிலை, ஞானநிலை, குணநிலை என்பன எல்லாம் ஒன்றேயாகும்.

ஞானம் மிகவும் நுட்பமானதால் அதன் உருவகமாகிய வேல் கூர்மையானது எனப்பட்டது. முருகனுடைய திருக்கோலத்தில் வேல் அவன் மார்பில் சாய்ந்து இருப்பதே சிறப்பாகும். அவன் கையில் பிடித்தபடி வைத்தால் அது போர்க்கோலம் ஆகிவிடும். போர்க் கோலம் எப்பொழுதும் இருக்கக்கூடியதன்று.

ஞானம் தன் இயல்பினாலேயே எங்கும் பரவி நலம் செய்து கொண்டிருப்பதாகும். அது முயற்சி நிலையன்று; முயற்சி அவிந்த இயல்பான நிலையாகும். இந்த அமைதி நிலையை உலகியலிலும் காணலாம். சிலர் தம் அளவில் அமைதியாக இருப்பர். அவர் இருப்பினாலேயே செயல்கள் தாமாக ஒழுங்காய் நடந்து கொண்டே இருக்கும். திருமணங்களும், விழாக்களும்கூட இவ்வாறு நடைபெறுதல் உண்டு. பக்குவப்பட்ட வேலையாட்களும், உறவினரும், நண்பர்களும் வேலைகளைச் செய்து விடுவர். இது முயற்சி அவிந்த சகச நிலை எனப்படும். தவம் செய்பவரும் முதலில் பெருமுயற்சி செய்வர். பின்னர் முயற்சி இல்லாமலேயே யோகம் நடைபெறும். இந்த நிலையே ஞானத்தின் நிலை அதாவது வேலின் நிலை. எனவே வேல் வெறுமனே சாத்தப்பட்டிருப்பதே முறை.

முருகனை மறந்தாலும், அவன் வேலை மறத்தலாகாது. சுந்தரர் வாக்கிலும், இந்த உண்மை விளக்கப்பட்டுள்ளது. அவர், இறைவனை மறந்தாலும் அவன் பெயரை மறத்தலாகாது என்று கூறுகிறார். ''நற்றவா உனை நான் மறக்கினும், சொல்லும் நா நமச்சிவாயாவே'' என்றார். ஒரு வேளை அவன் பெயரும் மறந்து போனாலும் அவன் அநுபவத்தை மறக்காமல் இருக்க வேண்டும். அதைப்போல முருகனை மறந்தாலும் அவன் வேலையும் அவன் ஞானத்தையும் மறத்தலாகாது.

''நெடும் போர் வேல'' என்னும் தொடரில் போர் முனைப்புத் தெரிகிறதே என்று தோன்றும். முருகனுடைய போர் வரவேற்கத் தக்கதே. ''போர்'' என்பது பொருந்துதல். முருகன் ஞானத்தால்

பொருந்துவதனால் அது வரவேற்கத்தக்கதாகின்றது. அறிவு நுழைந்து ஆராய்வதாகும். எனவே அதனைக் கூர்மையானது என்போம். ஆனால் அந்தக் கூர்மை குத்தும் இயல்புடையதன்று. அறிவு ஆராயும்போதும் பரவும்போதும் நுட்பத்திலே செயல்படும். ஞானத்தின் பண்பும் அத்தகையதே. அதுவும் நுட்பமாய்ப் பரவும். ஆழ்ந்து, அகன்று, நுட்பமாய் இருப்பதே வியாபகத்துக்கு அறிகுறி. இந்த இயல்புகள் வேலுக்கும் உள்ளன. அது ஆழ்ந்து (நீண்டு) அகன்று (முகப்பில் அகன்று) நுட்பமாய் (நுனி கூர்மையாய்) இருக்கின்றது.

ஆக ''நெடும் போர் வேல''வன் ஆன்மாக்களின் அஞ்ஞானமாகிய மலத்தை ஞானத்தால் விலக்குபவன் ஆவான்.

''சூர்'' என்பது ஆணவம். ''வேரொடு''அழிப்பதென்பது முழுவதும் அழிப்பதாகும். ஆணவத்துக்குக் கன்மமலம் வேர் போன்றது. எனவே வேரொடு அழிப்பது கன்மத்தையும் அழிப்பதாகும். ''குன்று'' என்பது மலை. இங்கு அது மாயாமலத்தைக் குறிக்கின்றது.

''துளைத்து'' என்றது உருவகப்படுத்திச் சொன்னதாகும். மாயையை மலை என்றதனால் அதனைத் ''துளைத்து'' என்றார். ஆனால் மாயையை வெல்வதற்கு நுட்பமான கருவியே ஏற்புடையது. ஞானம் ஒன்றே மாயையை அழிக்கக்கூடியதாகும். ஒரு சிறுவனைச் சாம, பேத, தான, தண்டத்தால் திருத்த முயலுவோம். ஆனால் அந்த முறை நிலையான பயனைத் தருவதில்லை. அச்சிறுவன் நம் பெருமையை உணருமாறு செய்தால் அவன் தானே திருந்தி விடுவான். மற்றவர்களை மாற்றுவதற்கு இது ஒன்றே சரியான வழியாகும். இதற்கு நுட்பமானதைப் பரவச் செய்ய வேண்டும். அப்பரப்புதலும் நுட்ப முறையாகவே இருக்க வேண்டும். ''நெட்டிருப்புக்கோலுக்கு நெக்குவிடாப்பாறை புல்லின் வேருக்கு நெக்கு விடும்'' என்பதை அறிவோம். மாயை பாறை போன்றது. ஞானம் புல்லின் வேர் போன்றது.

(2) புரந்தர பூபதியே

''புரந்தரன்'' என்பது காப்பாற்றுபவன் என்று பொருள்படும். புரவலர், புரந்தருதல், புரத்தல் என்னும் தமிழ்ச்சொற்கள் காப்பவர், காத்தல் என்னும் பொருள் உடையன. உலகம் தேவர்களால் காக்கப்படுவதனால் அவர்களுக்குப் புரந்தரர் என்ற பெயர் வந்தது.

உலகம் நன்கு காக்கப்பட வேண்டுமானால், தேவர்களை மகிழவைக்க வேண்டியுள்ளது. அதற்காக அவர்களுக்கு அவி இடுவதுண்டு. அவி என்பது பக்குவ உணவாகும். தேவர்களைத் திருப்தி செய்யுமுகமாகத் திருத்தம் செய்வதே உயர்வு. அதனாற்றான் ''வாழ்க அந்தணர்'' என்றதோடு ''வானவரும் வாழ்க'' என்று வந்தது. இறைவன் இயக்கம், (தேவர்களாகிய) வானவர்கள் வழியாகவும் அடியார் வழியாகவும் நடைபெறுவதால் வானவர்க்கும் உலக நடைமுறைக்கும் தொடர்புண்டு. முருகன் ஆணவம், கன்மம், மாயைகளை அவற்றின் தரத்துக்கேற்பப் போரிட்டு உலகுக்கு நலம் செய்வதோடு வானவர் களைக் காத்து அவர்களுக்குத் தலைவனாகவும் இருக்கின்றான். எனவே முருகனைப் ''புரந்தர பூபதியே'' என்றார். (பூபதி என்பது அரசன்).

(3) கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ

மங்கைப் பருவ மாதர்களுக்குக் கூர்வேல் விழி இருக்கும். கண்பார்வை கூர்மையானது; வியாபித்து எல்லாவற்றையும் தன்வயப் படுத்தும் ஆற்றல் உடையது. மற்றவர்களைப் பார்வையாலேயே அடக்கும் தன்மையும் உடையது.

கண்ணுக்குப் பளிங்கு போன்ற ஒளி உண்டு. அதற்கு மனிதரின் அறிவைப் புலப்படுத்தும் ஆற்றல் இருக்கிறது. மற்று ஒருவருடைய உணர்ச்சி கண்ணில் நன்றாக நிழலாடும். இக்காரணங்களாலேயே, கண் பிற உறுப்புக்களை விடச் சிறந்ததாகிறது.

கடைக்கண் உணர்ச்சியை வெளிப்படுத்துவதோடு மற்றவர்க்குப் பாய்ச்சும் ஆற்றலையும் பெற்றுள்ளது. பாய்ச்சுவதோடு பாய்ச்சப்பட்ட வரை இழுத்துவரவும் செய்யும். மங்கையர், தம் கணவரிடமும், குழந்தைகளிடமும் அவ்வாறு பாய்ச்சி நலம் விளைவிக்கலாம். நலம் விளைவிப்பதாவது தம் அறிவையும், திறனையும் அவர்களுக்குப் பயன்படுத்தப் பாய்ச்சுதலாம்.

இனி, விலைமாதர்க்கும்கூட அறிவும் திறனும் உண்டு. குணக்குறைவால் அவர்களுடைய ஆற்றல் தவறான நெறியில் செல்லும். அதனையே அருணகிரியார் இங்குக் குறிப்பிட்டார்.

கொம்+கை கொங்கை ஆகின்றது. ''கொம்'' என்னும் சொல்லுக்குத் திரட்சி என்று பொருள். அது பெண்பாலார்க்குப் பக்குவ காலத்தில் வெளிப்படும் உறுப்பாகும். பக்குவம் என்பது உடல்பக்குவம் மட்டுமன்று; உள்ளப்பக்குவமும் ஆகும். உள்ளப்பக்குவம் வந்த பின்னரே, உடல் பக்குவம் வரும். பெண்ணின் உள்ளத்திலும், உடம்பிலும் உள்ள வேறுபாடுகளுக்குக் காரணம், அவற்றுக்குரிய உயிர் பெண் உயிர் ஆனதனால் ஆகும். ஆண் பெண் வேறுபாடு இயற்கையில் உள்ளதாகும். இந்த வேறுபாடு இறைவனிடமும் இருக்கின்றது; இது அறியாமையால் வந்ததன்று. ஏனென்றால் இறைவன் அறியாமை இல்லாதவன். அவனிடமே இந்த வேறுபாடு (அம்மையப்பராக) இருப்பதனால், இதற்கும் அறியாமைக்கும் தொடர்பு (சம்பந்தம்) இல்லை. உயிர்களின் ஆண் பெண் வேறுபாடு என்றும் (சாசுவதமாக) உள்ளதாகும்.

ஆக, கண்ணைப்போலவே கொங்கையும், ஞானத்தைப் புலப்படுத்தி, வயப்படுத்தி, தன்வண்ணம் ஆக்குகின்றது. அதாவது பிறர்க்கு அன்பும் நெகிழ்வும் உண்டாகும்படி செய்கின்றது. பக்குவ மங்கையரால், காளையர்க்குப் பக்குவம் உண்டாகின்றது. சுந்தர மூர்த்தி நாயனார் அவ்வாறு பரவையின் விழி தீட்சையையும், ஸ்பரிச தீட்சையையும் பெற்று யோகம் பெற்றார். திருமணம் என்பது அறமாகிய மணத்தைத் தருவதால் அப்பெயரைப் பெற்றது. திருமணத்தின் நோக்கமே தவத்தையும் ஞானத்தையும் பெறுவதாகும். இதனை விளக்குவதற்காகவே திருமணத்தின்போது பல சடங்குகள் செய்யப்படுகின்றன. மாதர்க்குக் கற்பு இருப்பதனால் அவர்களுக்கு இயற்கை மணமும் உண்டு. இவை எல்லாம் இறைவனுடைய அமைப்புகள். இவ்வாறெல்லாம் அமைத்து ஆன்மாக்களை அவன் தன் வண்ணமாக்குகின்றான்.

இச்சிறப்புக்களை எல்லாம் பயன்படுத்தும் முறையில்தான் வேறுபாடு வருகிறது. அறவழியில் சென்றால் நன்மையும் பிறவழியில் சென்றால் தீமையும் விளையும். ஆண்டவன் படைப்பில் தீ இருக்கிறது. அதைத் தக்க முறையில் பயன்படுத்தினால் உணவு சமைக்கும். தவறாகப் பயன்படுத்தினால் பண்டங்களைக் கொளுத்தி அழிவை உண்டாக்கும். அதுபோலவே மாதர் விழியாலும் கொங்கையாலும் உயர்ந்தவரும் உண்டு; அழிந்தவரும் உண்டு. அருணகிரியார்

இங்குத் தவறியவர்க்கு அருளைச் சேரவும் எண்ண இயலுமோ என்று வினவுகிறார். இயலாதெனினும், அவன் கருணையால் அருளொடு சேர்க்க வேண்டுமென்பது அவர் கருத்தாகும்.

''அருளைச் சேர்''தல் என்பது மங்கையரைத் தவறான முறையில் சேர்ப்பவர்க்கு இயலாது.

''எண்ணுமதோ'' என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. 'ஓ'காரம் எதிர்மறையைக் குறிப்பது.


III சக்கரம்

திருமணமும், மாதரொடு வாழ்வதும் யோகம்தான். இதுபற்றித் திருக்குறளிலும் வந்துள்ளது. திருக்குறளை இறையனார் ''மலர்'' என்றார். திருவாசகத்தைத் ''தேன்'' என்பர். மலர் பொது; தேன் சிறப்பு. பொதுவிலிருந்து சிறப்பைத் தெரிவிக்க மாணிக்கவாசகரே தகுதியானவர் என்று இறைவனே அவரைத் ''திருக்கோவையா''ரை எழுதும்படிப் பண்ணினான்.

இறைவன் படைப்பில், ஒவ்வொன்றும், அதனதன் உயர்ந்த நிலையைப் பெற்றுப் பயன் கொள்ளுமாறு அமைக்கப்பட்டுள்ளன. காற்றாகிய பொருளைக் கொண்டு பந்து செய்து, காற்பந்து விளையாடுவதோடு நிற்காமல், பிராணாயாமம் செய்து, அதன் உயர்ந்த பயனைப் பெற வேண்டும். அதைப்போலவே, மாதரொடு இல்லறம் நடத்துவது உலகியல் வாழ்வோடு நின்று விடாமல் யோகத்தில் பயின்று சிவஞானத்தில் சேரும்படி வாழவேண்டும். தேர்ச்சி பெற்ற யோகிகள் காற்றோடு உலவுவர். யோகம் தவமுயற்சியின் இறுதிப்பகுதி.

தவம் அல்லது கடமையைச் சக்கரத்தில் குறிக்கும் எழுத்துக்கள் 'க' வர்க்கத்தைச் சேர்ந்தவை. இப்பாடல் அருளொடு சேர்தலையும் தவமுயற்சியின் இறுதியையும் குறிப்பிடுவதால், 'க' வர்க்கத்தின் இறுதி எழுத்தாகிய 'கஃ' இப்பாடலின் சிறப்பெழுத்தாகும். வாயு தேவன் இதற்கு அதிதேவதை.

இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-25

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்(து)
ஐயோ! அடியேன் அலையத்தகுமோ?!
கையோ, அயிலோ, கழலோ, முழுதும்
செய்யோய்! மயில் ஏறிய சேவகனே!!

I பொழிப்புரை

தீவினை, நல்வினை கலந்த இந்த உலகியல் வாழ்வை மெய்யென்று விரும்பி ஏற்றுக்கொண்டு ஐயோ! அடியேன் அலைந்து கொண்டிருப்பது தகுமோ?! காக்கும் (அபய) கரமும், வெற்றி தரும் வேலும், வினைகளைப்போக்கி ஞானத்தைத்தரும் திருவடியும், முழு நடுநிலையையும் உடையவனே! மயிலாகிய சுத்த மாயையிலிருந்து கொண்டு (ஆன்மாக்களை ஈடேற்றும்) கடமையைச் செய்யும் வீரனே (முருகனே)!!

II விளக்கவுரை

(1) மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து ஐயோ அடியேன். அலையத்தகுமோ?!

இந்தப் பாடல் குற்றத்தை நினைந்து வருந்தி இரங்கும் பாடலாக அமைந்துள்ளது. அடியேன் வினை வாழ்வை நுகர்ந்து உழன்று கொண்டு இருப்பது தகுமோ என்று இரங்கும் பாடல் இது.

வெம்மை+வினை வெவ்வினை ஆயிற்று. ''வெம்மை'' என்னும் சொல்லுக்குக் கொடுமை என்றும், விருப்பம் என்றும் இரண்டு பொருள்கள் உள்ளன. அதனால் ''வெவ்வினை'' என்பது விரும்பத் தக்க நல்வினை, கொடிய தீவினை ஆகிய இரண்டையும் குறிக்கும்.

''வினை வாழ்வு'' என்பது செயல்கள் நிறைந்த வாழ்வு. அதாவது கன்மத்தோடு கூடிய வாழ்வு. செயல் நிறைந்த வாழ்வு சிரமம் நிறைந்த வாழ்வானாலும், செயல் இல்லாத சோம்பல் வாழ்வை விட உயர்ந்தது. என்றாலும் இதுவே உயர்ந்த வாழ்வன்று.

ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அதனதன் சஞ்சித வினைக்கு ஏற்ப, இன்ன இடத்தில் பிறந்து, இன்னதைச் செய்து, இன்னதைத் துய்க்க வேண்டும் என்று இறைவன் முறைப்படுத்தி அனுப்புகின்றான். வினை கழிவதற்காகவும் மெய்யறிவைப் பெறுவதற்காகவும், இந்த வினை வாழ்வு வேண்டத்தக்கதே. ஆனால், இந்த வாழ்வை மெய்யென்றும், இதுவே முடிந்தநிலை என்றும், நிலைத்ததென்றும் எண்ணுவது தவறு.

''உகந்து'' என்னும் சொல்லுக்கு விரும்பி என்றும் உயர்வான தென்றும் பொருள் உண்டு. எனவே இந்த வாழ்வை உயர்ந்ததென்று கருதி இதனை விரும்பவும் கூடாது.

இந்த வினை வாழ்வு செயல் நிறைந்த வாழ்வானதால், இது கர்மவாழ்வு, கன்மவாழ்வு, கடமைவாழ்வு, தர்ம வாழ்வு என்று பல பெயர்களால் அழைக்கப்படும். தர்மம் என்னும் சொல்லைப் பொதுவாக தானம் என்று கருதுவர். தானம் வேறு தருமம் வேறு. ஒரு பொருளை மற்றவர்க்குக் கொடுப்பது தானம். கடமையைச் செய்வது தர்மம். கடமைகளுள் தானம் செய்வதும் ஒன்றாக இருப்பதனால், அதுவும் தர்மத்தில் அடங்கும்.

கடமை என்பதில் தொழில் செய்வதும் ஒன்று. தொழிலுக்கும் கர்மம் என்று பெயர் இருப்பதனால், எல்லாத் தொழிலாளிகளும் ''கருமார்'' எனப்பட்டனர். கருமார்,கம்மார், கம்மாளர் கம்மவார் ஆகிய எல்லாச் சொற்களும் தொழிலாளர்களையே குறிக்கும். காலப்போக்கில் இச் சொற்கள் வெவ்வேறு இனத்தவரைக் குறிப்பன வாயின.

ஆக, இவ்வேறுபட்ட சொற்களைக் கொண்ட கடமையை விரும்பிச் செய்ய வேண்டும. ''அறம் செய விரும்பு'' என்பது இதனையே குறிக்கும். கடமையை வெறுப்பின்றிச் செய்து வந்தால், சஞ்சிதம் குறையும். ''கர்மத்தைத் தொலைக்கணும்'' என்னும் ஒரு சொல் வழக்கு உண்டு. இந்த வழக்கில் வெறுப்பு அடங்கியுள்ளது. வெறுப்போடு செய்யும் செயல் தீயசெயலாகி அது மீண்டும் வினையை வளர்க்கும். எனவே கடமையை விரும்பிச் செய்ய வேண்டும். அதுவும் எப்பொழுதும் செய்துகொண்டே இருக்க வேண்டும்.

இனி, செயல் செய்யும்போது செய்பவருக்கு ஏதாவது ஒரு நுகர்வு (அநுபவம்) வரத்தானே செய்யும்? வெறுப்பு வரும்போது

அதை எவ்வாறு தடுப்பது எனின் அதற்கும் ஒரு வழி உள்ளது. நாம் செய்யும் கடமைச் செயலை நமக்காக என்று கருதாமல் இறைவனுக்காகச் செய்கிறோம் என்று கருதிவிட்டால் அந்த வெறுப்புத் தோன்றாது. காட்டாக, வெள்ளம், புயல் முதலியன வரும்போது பலரும் ஒன்று சேர்ந்து தொண்டு செய்வர்; அவர்களுள் சிலர் விரும்பிச் செய்வர்; சிலர் வெறுப்போடு செய்வர். சிலர் விருப்பு வெறுப்பு இன்றியும் செய்வர். இந்த மூன்றை விட, இறைவனுக்காகச் செய்கிறோம் என்னும் எண்ணத்தோடு, இறைவன் கருத்தோடு ஒன்றிச் செய்வதே சிறந்ததும், செய்யத்தக்க முறையும் ஆகும்.

ஒரு செயல் துன்பம், தருவதாய் இருந்தால், அதனைத் தீவினை என்றும், இன்பம் தருவதானால் நல்வினை என்று சொல்லுவோம். இன்பதுன்பங்களை நுகர்ந்து அச்செயல்களைச் செய்வதனால், அவை மேற்கொண்டு (ஆகாமிய) வினைகளை உண்டாக்குகின்றன. இன்பத் துக்குப் பின்னே துன்பமும் தொடர்ந்து வரும். இதுதான் நியதி. ''இன்பம் உண்டேல் துன்பம் உண்டு'' என்று சுந்தரர் சொன்னது கவனிக்கத்தக்கது. இன்பத்தை நன்றாக நுகர்ந்த அவரே அவ்வாறு தம் அநுபவத்தைச் சொல்லி இருக்கின்றார். இன்ப துன்பங்கள் ஒன்றைவிட்டு ஒன்று நீங்கா.

நல்வினையைத் துய்த்தபின், தீவினை தொடரும் என்பதோடு, நல்வினை இறைவனை அறிந்துகொள்ளவும் அநுபவிக்கவும் தடை யாக உள்ளது. அது உலகப் பண்டங்களைத் துய்ப்பதைத்தான் செய்யும். இதனால் இறைவனிடம் நாம் வேண்டும்போது, பொன் வேண்டும், பொருள் வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக, இறை நலத்தில் ஒன்றக்கூடிய தகுதி வேண்டும் என்றுகேட்பதே சிறப்பு. இன்ப நுகர்வுக்காக இறைவனைக் கேட்டுக்கொள்வதுஅருட் செயலாகாது.

''வானவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ்வான்'' என்று மாணிக்கவாசகர் கூறியுள்ளார். வானவர்களுடைய வாழ்த்துச் சிறப் புடையதன்று. இறைவனிடம் முழு நன்மையைப் பெற விரும்புவோர் துய்ப்புப்பொருள் எதையும் வேண்டக்கூடாது; தமக்காகவும் வேண் டக்கூடாது.

தீவினை துன்பம்தருமே என்று அஞ்சியோ, சோம்பல் காரண மாகவோ, வேறு எந்தக்காரணத்துக்காகவோ பணியை மேற்கொள்ளா தவர் மனிதராகார். எனவே அப்படி ஒருவரும் இருத்தல் ஆகாது.

மற்றும், ''என் குடும்பத்துக்கு நான் பணி செய்கின்றேன்'' என்பதுவும் சிறப்பன்று. அது மன்பதைக்குச் செய்ய வேண்டிய கடமையில் தவறியதாகும். அருணகிரிநாதர் முன்பு ஒரு பாடலில் (7) ''கரவாது இடுவாய்'' என்று கூறியுள்ளார். தம்மை மன்பதைக்கு ஒப்படைப்பதில் கரவு இருக்கக்கூடாது என்னும் கருத்தில் அவர் கூறியிருப்பதால், குடும்பப் பணிகளுக்கு மேற்பட்டவற்றிலும் நாம் ஈடுபட வேண்டும்.

மன்பதைப் பணி செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு சிலர் சிற்றுயிர்களுக்குத் தீங்கு செய்வர். மன்பதைத் தொண்டென்பது மனிதர் தொண்டு மட்டுமன்று. அது சிற்றுயிர்களையும் சேர்த்ததாகும். நாடாளும் அரசுகளும் தெய்வ நிலை வாய்ந்தவையே. எனவே எந்த அரசும் தொகை தொகையாகச் சிற்றுயிர்களைக் கொலை செய்யக்கூடாது. அதைத் தவிர்க்க வேண்டும். மீன் பிடித்தல், ஆடுமாடுகளைக் கொல்லல் முதலியவற்றை மன்பதைத் தொண்டு செய்வோர் ஓம்புதல் கூடாது. ஏனென்றால், வினையில் செயல்பாட்டைப் போன்ற வேறு ஒரு ஒழுங்கான, முறை தவறாத நிகழ்ச்சி எங்கும் இல்லை. அதாவது, அது, சிறிதும் தவறாமல் வந்து தாக்கும். அறவோர் கூறுவதற்கு இணங்காத அரசு நல்ல அரசு ஆகாது. அந்த அரசு ஆளும் நாடும் நல்லநாடு ஆகாது. ஒருவர் தனிப்பட்ட ஒரு கொலையைச் செய்வதை விட அரசியல் தலைவராய் இருந்து கொண்டு, சிற்றுயிர்க் கொலைக்கு ஆதரவு காட்டினால், அத்தலைவரை வினை அதிகமாகத் தொடரும்.

கொலைக்கு மாறாக, உயிர்களுக்கு உணவளிப்பது பெரும் புண்ணியச் செயலாகும். (வேண்டியவர், வேண்டாதவர் என்று பாராமல் திருமதி. வள்ளியம்மையார் என்பவர் திருக்கழுக்குன்றத்தில் நடைபெறும் மாணிக்கவாசகர் விழாவில் பல ஆண்டுகள் பல நூற்றுக்கணக்கானவர்க்கு உணவளித்தமை இங்குக் குறிக்கப்பட்டது. (பசிக்கு உணவளிப்பது அத்தகைய புண்ணியச் செயலாகும்). இத்தொண்டு அருளொடு தொடர்புகொண்டதாகும்.

அருள்தொடர்போடு சீவகாருணியத்தின் அடிப்படையில் மன்பதைப் பணி நடைபெறுமானால், வெவ்வினை தாக்காது. சீவகாருணியம் இல்லாத தொண்டுகள் போலியாக முடிந்துவிடும்; வெவ்வினையும் ஓயாது.

வெவ்வினை ஓயாதநிலை பரிதாபத்துக்குரியதாகும். அது முடிவில்லாமல் தொடரும். இன்ப துன்பங்கள் மனத்தின் வழியே வருகின்றன. மனம் ''நான்'' என்றும், ''என்னுடையது'' என்றும் எண்ணியே செயல்களைச் செய்கின்றது. இந்த மனத்தின் உந்துதலால் செய்யாமல், திருவருளின் உந்துதலால், இறைவனுக்காகச் செய்கிறோம் என்று எண்ணுவோமானால், வெவ்வினை நம்மைப் பற்றாது.

இனி, ''மெய்'' என்னும் சொல் மூன்று வகையாகப் பயன்படுத்தப்படுகிறது:

1) உண்மை, சத்தியம் அல்லது உள்ளதாம் தன்மை.
2) வடிவம் அல்லது உருவமாய் இருப்பது.
3) நன்மை.

இம்மூன்று பண்புகளையும் உடையவன் இறைவன் ஒருவனே யாவான். அவன் என்றும் உள்ளவன்; குருவாக உருவெடுத்து வந்து ஆன்மாக்களுக்கு உதவுபவன்; நன்மைக்கு இருப்பிடமானவன். ஆன்மாக்களும், மலமும்கூட என்றுமுள்ள பொருள்களேயானாலும் அவை சிறப்பில்லாதன; மாற்றத்துக்குரியன. அவற்றின் வடிவங்கள் எவ்வளவு முயன்று ஓம்பப்பட்டாலும் பழுதுபட்டு அழிவனவே. எனவே இறைவன் ஒருவனே ''மெய்'' ஆவான். மற்றவை ''மெய்'' ஆகா.

அருணகிரியார், வெவ்வினை வாழ்வை மேற்கூறிய ''மெய்'' வாழ்வு என்று எண்ணியதால் அலைந்ததாகவும் அவ்வாறு அலைவது தகுமோ என்றும் வினவுகிறார்.

''ஐயோ'' என்பது இரக்கத்தைக் காட்டுகிறது. 'ஐ' என்னும் தனி எழுத்து அழகையும் மேன்மையையும் குறிக்குமானாலும், ''ஐயோ'' என்னும்போது நொய்மைப் பொருளைத் தருகின்றது. இச்சொல் சத்தி இன்மை கழிவுற்ற நிலை, ஆற்றல் இல்லாத நிலையைக் குறிக்கும். அதனால் இரக்கப்பொருளில் வருகிறது.

''தீவினை வாழ்வுக்கு அடிமையாகி விட்டேன். அதனால் அலைகின்றேன்'' என்று கூறுகிறார் அருணகிரியார். இந்த நிலை மாறவேண்டுமானால், நாம் ஆற்றலை மிகுத்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த நிலையை அடைய வேண்டும்; தெளிவுபெற வேண்டும்; அருளோடு தொடர்புகொள்ள வேண்டும். பின்னர் இறைபணி மேற்கொள்ள வேண்டும்.

''அடியேன்'' என்பதனால், அருணகிரியார் முருகனுக்கு அடியவர் என்பதைக் குறிப்பிட்டு, அதனால் உதவ வேண்டும் என்று வேண்டுகிறார். ஒருவர் போகும் வழியே ஒத்துப்போவது அடிமைத் தனமாகும். ''முருகா! உன்னைப் பின்பற்றி, அடியேன் வருவதனால், நான் அலைந்து வரும் வினை வாழ்விலிருந்து காத்தருள்க'' என்று வேண்டுகிறார்.

(2) கையோ, அயிலோ, கழலோ, முழுதும் செய்யோய் மயிலேறிய சேவகனே!

''கையோ, அயிலோ, கழலோ'' என்னும் சொற்களின் ஈற்றில் உள்ள 'ஓ'காரம் எண்ணிடைச் சொல்லாகும். எனவே அவற்றைக் ''கையும், அயிலும், கழலும்'' என்று கொள்ள வேண்டும்.

கை என்பது முருகனுடைய காக்கும் கரத்தைக் குறிக்கும். அது அற ஒழுக்கத்தையும் குறிக்கும். அயில் என்பது கூர்மையான வேல்; வேல் என்பது ஞானமாகும். கழல் என்பது அவன் திருவடி. அது ஆன்மாக்களின் வினைகள் கழன்று போவதற்குக் காரணமாய் இருப்பதாகும். அதாவது மலத்திலிருந்து விடுதலை தருவதாகும்.

''முழுதும் செய்யோய்'' என்பதற்கு முழுவதும் செம்மை நிறம் உடையவன் என்று பொருள் கூறலாம். ஆனால் அந்த உரை சிறப்புடையதன்று. நிறத்தைக் கூறுவதை விடக் குணத்தைக் கூறுவது தான் சிறப்பு. ''செய்யோன்'' என்பதற்கு நடுநிலையானவன் என்று பொருள். முழுதும் செய்யோன் என்பது சிறிதளவும் குறைவுபடாத செய்யோன் ஆகின்றது. நடுநிலையே மெய்யான நிலை. மேம்பட்ட குணநிலை. தாக்குதல் இல்லாத நிலை, செம்மையான நிலை.

''மயிலேறிய சேவகனே'' என்பது சுத்த மாயையில் இருந்து கொண்டு ஒழுங்காக நடுநிலையோடு உயிர்களை ஈடேற்றுவதாகிய கடமைகளைச் செய்து வருவோனே என்று பொருள்படும். ''சேவகன்'' என்னும் சொல்லுக்கு வீரமாக நடுநிலையோடு பணி செய்பவன் என்று பொருள். (அரசு அலுவலகங்களில் பணி செய்வோர் நடுநிலை பிறழாமல் தம் கடமைகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால் அரசு தர்மகாரியங்களுக்காக உள்ளது. இறைவனை அரசன் என்பர். அரசனை இறைவன் என்பதும் உண்டு. ''முறைசெய்து காப்பாற்றும்

மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்'' - 388 என்பது திருக்குறள். எனவே, அரசு அலுவலர்களை இறைவனுடைய தொண்டர்கள் என்றாலும் ஒக்கும்).

மயில் ஏறிய சேவகன் என்பது விந்துவில் ஏறி வீரமாக நடப்பவன் என்றும் ஆகும். அது நீல நிறத்தின்மேல் செம்மை நிறம் என்றும், உலகின் மேல் விளங்கும் அம்பிகை என்றும் கொள்ளப்படும். (மலத்தைக் குறிக்கும்) கருமை நிறத்தின்மேல் (இறைத் தன்மையைக் குறிக்கும்) செம்மை நிறம் என்று வந்திருக்க வேண்டும். ஆனால் கருமையைவிட நீலம் அழகானதால் அவ்வாறு கூறப்பட்டது. மயிலேறிய மாணிக்கம் என்பதுவும் இதுவே.

''சேவகனாக இருந்து கொண்டு அதாவது வீரனாகவும், நல்லவனாகவும், தொண்டு செய்யும் முருகனே! நானும் உன் ஆளுகையில்,உனக்கு அடிமையாகத்தானே இருக்கின்றேன்? அப்படி இருந்தும் நான் ஏன் வினை வழிப்பட்டு அலைய வேண்டும்! நான் அலையாத வண்ணம் என்னை ஈடேற்றுவாயாக'' என்று அருணகிரியார் வேண்டுகிறார்.


(மயிலாகக் கூறப்படும்) விந்து தத்துவத்தின்மேல் விளையாடும் முருகனோடு தானும் விளையாட வேண்டும் என்றும் அதற்கு உதவ வேண்டும் என்றும் கேட்கின்றார்.

யார் விந்துவை ஒழுங்கு செய்து நடுநாடியில் ஏற்றுகிறார்களோ, அவர்கள் செய்யும் தொண்டே மெய்த்தொண்டாகும். விந்து (சுக்கிலம்) வெண்ணிறம் எனப்படும். ஆனால் அதன் சரியான நிறம் வெண்மையும் நீலமும் கலந்ததாகும். ''வானத்தின் மீது மயிலாடக்கண்டேன்'' என்பதில் வானம் நடுநாடியாகும். மயில் ஆடுதல் விந்து ஏறுதல் ஆகும். நடுநாடி வழியே விந்து மார்பகம் வரும்போது சாதகருக்கு ''ஓம்'' சித்திக்கும்.

ஆக, அருணகிரியார் இப்பாடலில், வினைவழிப்படாமல், முருகனுடைய காக்கும் கரத்தால் ஒழுக்கத்தையும், கூர்த்த வேலால் ஞானத்தையும், திருவடியால் விடுதலையும் பெற்று, மெய்யொடு சேர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறார்.

III சக்கரம்

இந்தப்பாடல், விந்து நடுநாடியில் ஏறி ஒளிபெறுவதைக் குறிக்கின்றது. இப்பாடலுக்குரிய எழுத்து ''ங''கரமாகும். 'ங'கரம் மூக்கால் தோன்றுகின்ற மெல்லின ஒலியாகும். இது 'க' வர்க்கத்திற்கு அடுத்தபடி வருகிறது. 'க' வர்க்கம் கடமையைக் குறிப்பது. கடமை மெய்யொடு தொடர்புறுவதால் மென்மையும் நுட்பமும் ஒளியும் பெறுகின்றது. இப்பாடல் இருளாகிய வினைவாழ்வை விட்டு ஒளிபெற வேண்டுமென்பதனால் இதன் சிறப்பெழுத்து 'ங' ஆயிற்று. இதன் அதிதேவதை ஒளிதேவன். இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-26

ஆதாரமிலேன், அருளைப் பெறவே,
நீதான் ஒரு சற்று நினைந்திலையே!
வேதாகம ஞான விநோத! மனா-
தீதா! சுரலோக சிகாமணியே!

I பொழிப்புரை

எனக்கு ஆதாரம் ஏதும் இல்லை. அருளையே ஆதாரமாகப் பெற வேண்டுகிறேன். அதைப் பெறுவதற்கு (முருகா) நீ சிறிதும் நினைக்கவில்லையே! (நீ அதனை எண்ணி அருள் செய்வாயாக). வேதம், ஆகமம் ஆகியவற்றுள் ஞானமாய்த் திகழ்ந்துகொண்டு, விளையாடல் புரிகின்றவனும், மனத்துக்கு (தத்துவங்களுக்கு) அப்பாற்பட்டவனும் வானோர்க்கு முடிமணி போன்றவனும் ஆகியவனே! (முருகனே!).

II விளக்கவுரை

(1) ஆதாரமிலேன் அருளைப் பெறவே நீதான் ஒரு சற்று நினைந்திலையே!

பொதுவாக, பொன்னையும் பொருளையும் நமக்கு ஆதாரம் என்று எண்ணுவோம். இவற்றைப் பெறாத மக்கள் ஆதரவின்றித் தவிப்பர். இவற்றை நிறையப் பெற்றவரும் ஆதாரம் இல்லை என்று கூறுவது உண்டு. இது, எல்லோருக்கும் குறை இருக்கிறது என்பதனைக் காட்டும். பொன்னும் பொருளும் நமக்கு நிலைத்த ஆதரவுகளல்ல.

மற்றும் நம்மைப்போன்ற நண்பர்களும் உறவினரும் கூட நிலைத்த ஆதாரங்கள் அல்ல. ஏனெனின், நமக்குள்ள குறைகள் அவர்களுக்கும் உள்ளன. தமக்கே குறையுள்ளவர்கள், மற்றவர்களுக்கு ஆதரவாக இருக்க இயலாது. எனவே பொன்னும் பொருளும் ஆகிய பாசப்பண்டங்களும், நம்மை ஒத்த மற்ற ஆன்மாக்களும் நமக்கு உண்மையான ஆதாரங்கள் ஆகமாட்டா.

இனி, எஞ்சியுள்ள இறைவனே, அதாவது அவனுடைய அருளே எல்லா ஆன்மாக்களுக்கும் ஆதாரமாய் இருக்கின்றது. அருளைப் பெறாத ஆன்மாக்கள் அனைவரும் ஆதாரம் இல்லாதவர்களே.

அருள், நாம் விரும்பிய உடனே வந்து அமைவதன்று. அது நம் தூய்மைக்கும் தரத்துக்கும் ஏற்ப இறைவனால் வழங்கப்படும். எனவே அருணகிரியார், ''அருளைப் பெறுவதற்கு, நான் விரும்பி என்ன பயன்? நீ சிறிதும் அதை வழங்குவது பற்றி நினைக்கவில்லையே!'' என்று வருந்துகிறார். இங்கு ''அருளைப் பெறுதல்'' என்பது ஞான வெளியாகிய (சிதாகாசமான) அருள் வெளிக்குப் போவதாகும். அது உயர்ந்த நிலையாகும். அது ஒன்றே ஆன்மாக்களுக்கு ஆதாரமாகும். அதற்குக் கீழ்ப்படியிலுள்ள நாதம், விந்து, ஆகமம், வேதம், மற்ற பொருள்கள் சூழல்கள் எல்லாமே ஆதாரங்களல்ல என்பது தெரிகின்றது.

நினைப்பு என்பது மனத்தின் வேலை. ''நினைந்திலையே'' என்றதனால் இறைவனுக்கும் மனம் இருக்கிறதா என்று தோன்றும். இறைவனுக்கு மனமோ, மாயையாலான உடம்போ கிடையாது. அவன் செய்கின்ற வேலைகள் எல்லாம் அருளால் நடைபெறுகின்றன. அவை நினைத்துச் செய்வன அல்ல. அவை தாமாகவே இயல்பாய் நிழந்து வருகின்றன. எனவே அருணகிரியார் இறை இயல்பை இங்குக் கூறினார் என்றும் கொள்ளவேண்டும். 'ஏ'காரம் இரக்கத்தைக் குறிக்கும்.

(2) வேதாகம ஞான விநோத!

இத்தொடர், இறைவன் இயல்பைக் கூறுகிறது. அவன் வேதத்திலும் ஆகமத்திலும் ஞானப்பொருளாய் இருப்பவன். மற்றும் ஞான விளையாடல்களைப் புரிபவன்.

வேதம் ஆகமம் ஆகிய நூல்களின் முடிவும் பயனும் இறைவனே என்று திருமூலர் கூறுகின்றார். இவை ஞான நூல்கள்; பகுத்தறிவு நூல்கள் அல்ல. இவை அநுபவத்தோடு உண்மைகளைச் சொல்பவை. (அநுபவம் என்பது அறிவோடு அன்பும் கலந்த நிலையாகும். இந்த நூல்களில் படிப்போடு பத்தியும் கலந்துள்ளது. இவ்விரண்டும் சேரும்போது திருவருளும் கூடும். அதாவது திருவருள் இருந்தால், இந்நூல்களைப் படிக்கவும் பத்தி செய்யவும் இயலும். பத்தியைப் பெறுவதற்குப் பெரியோர் தொடர்பு பெரிதும் உதவும். திருவள்ளு

வர், பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டுவதன் கட்டாயத்தை (அவசியத்தை) முதன்மை கொடுத்துக் கூறியுள்ளார். இது, வாழ்க்கையில் முதன் முதல் தெரிந்து கொள்ள வேண்டிய பகுதியாகும். பெரியார்கள் அறிவுக்கும் பத்திக்கும் வித்துப்போன்றவர்கள். அப்பெரியாருக்குத் தொண்டு செய்வதனால் பத்தியும் அறிவும் வளரும். அத்தொண்டு மனப்பான்மை இல்லாதபோது பத்தி வருவதில்லை. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு மருத்துவர், ஒரு வழக்கறிஞர், ஒரு சோதிடர் இருப்பது போல, ஒரு பெரியாரும் (குருவும்) இருத்தல் வேண்டும். அன்றாட வாழ்வில் அவர் விதித்தபடி நடத்தலும் வேண்டும்).

வேதத்தில் உண்மைகள் சிதறி இருக்கும். மற்றும் அவை தெளிவில்லாமலும், மயக்கம் தருவனவாயும் இருக்கும்.

சமயங்களுள் பல பிரிவுகள் உள்ளன. முழுமுதல் இறைவனை ஏற்றுக்கொள்ளாத புறச்சமயங்கள் ஆறும், புறப்புறச் சமயங்கள் ஆறும் ஆக பன்னிரண்டு உள்ளன. அவ்வாறே இறைவனை ஏற்றுக்கொள்ளும் அகப்புறச் சமயங்கள் ஆறும், அகச்சமயங்கள் ஆறும் ஆக பன்னிரண்டும் உள்ளன. இரண்டுவகைச் சமயங்களையும் சேர்த்து மொத்தம் (12+12) இருபத்தி நான்கு சமயங்கள் உள்ளன. இத்தனை பிரிவினரும் வேதத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். அதாவது தெய்வம் இல்லை என்பார்க்கும் இதில் இடம் உண்டு. அதனால் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகள் அதில் இடம் பெற்றுள்ளன.

எனவே வேதத்தில் இறை உண்மையைத் தேடிப்பிடிக்க வேண்டும். மற்றும், முழுமுதல் இறைவனுக்கு மட்டும் கொடுக்கப்பட வேண்டிய ''பரத்துவம்'' ஏனையோர்க்கும் இதில் கொடுக்கப்படு கிறது. உண்மைப் பரத்தை அது காட்டினாலும் அது வெளிப்படையாய் இல்லாமல் மறைவாக உள்ளது. இக்காரணம் பற்றியே, வேதம் இறைவனைத் தேடியும் காணவில்லை என்னும் வழக்கு வந்தது.

இறைவன் ''ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற நுண்ணியன்'' ஆதலால் அவன் எங்கும் வியாபித்து இருக்கிறான் என்றும், அதனால் வேதத்திலும் உள்ளான் என்றும் கொள்ள வேண்டும். வேதம் அவனைக் காணவில்லை என்பது, அவன் அந்த அளவுக்கு நுண்ணியன் என்பதாகும்.

வேதத்தை யாரும் உபதேசிப்பதில்லை. ஒருவர் ''இந்த நூலைப்படி'' என்று சொன்னால், அதைப்படிப்பதற்கு முன்னமே சில நூல்களைப் படித்துவிட்ட அல்லது படிக்க வேண்டிய நிலை உண்டு. எனவே முன்னமே படித்து முடித்த நூல்களும் தேவைப்படு வனவே. ஒரு மாடிக்குப் படிகள் பல இருக்கும். மாடியில் ஏறுவதற்கு முதற்படியும், இறுதிப்படியும், இடையிலுள்ள ஒவ்வொரு படியும், ஆக எல்லாப்படிகளுமே தேவைதான். அந்த முறையில் வேதத்தைப் படிப்பதும் தேவையாகின்றது.

இனி, ''ஆகமம்'' என்னும் சொல்லுக்கு ''வடிவம்'' என்று பொருள். அது இறைவனுடைய வடிவத்தையும், அவன் அமரும் கோயிலின் வடிவத்தையும், அக்கோயில்கள் இருக்க வேண்டிய அமைப்புகளைப் பற்றியும் விளக்கிக்கூறும். ஆகமமுறைப்படி கட்டப் பட்ட கோயில்களைக் காணும்போதே அதில் ஈடுபாடு வரும்.

ஆகமத்தில் உண்மைகள் திரட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. செறிவாகவும், தெளிவாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆகமம் வேதத்தை விட மேலானது. ஆகமத்தில் கூறப்படும் வழி சுலபமாகவும், வசதியாகவும் இருக்கும். பயனும் எளிதில் கிடைக்கும். ஆகமம் அநுபவத் தெளிவை உண்டாக்கும். அத் தெளிவே ஞானம் எனப்படுவது.

ஆகமம் (வேதத்தைப்போல) எல்லாத் தரத்தவர்க்கும் உரிய தன்று. பக்குவம் வந்தவர்களுக்கே உரியதும், வழிகாட்டுவதும் ஆகும். இது சமயங்கடந்த நூல்; சமயாதீதப் பொருளைத் தன்னிடம் கொண்டதாக விளங்குகிறது. அதுவே சித்தாந்தம் ஆகும். சித்தாந் தத்தை விளக்குவதனால் ஆகமத்துக்குச் ''சித்தாந்தம்'' என்ற பெயரும் உண்டு. சித்தாந்தம் மதம் கடந்ததானாலும், அதைக் குறிப்பதற்கு ஒரு பெயர் தேவைப்படுவதனால் ''சித்தாந்த மதம்'' எனப்பட்டது. சித்தாந்த வழிகள் சுருக்கமானவை. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கேயாம்.

ஆகமத்தில் இறை உண்மையைத் தேடவேண்டுவதில்லை. வேதம் படித்த பின்னர்தான் ஆகமத்தைப் படிக்கும் தரம் வரும்.

''ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்'' என்னும் திருவாசகத் தொடருக்கு ஆகமத்துக்கு எட்டுவான் என்று பொருளாகும். ''அண்ணிப்பான்'' என்னும் சொல் அணுக்கமாவான் என்பதைக்

குறிக்கும். அதோடு ''தித்திப்பான்'' என்றும் இதற்குப் பொருள் உண்டு. அது எவ்வாறு எனின், உண்ணும்போது எப்பொருளையும் வாய்க்குள் பக்கத்தில் அடக்கி, மென்று தின்போம். ஆனால் வெல்லம் மட்டும் அவ்வாறன்றி, அதாவது பக்கத்தில் அடங்காமல் மேல் வாயில் ஒட்டிக்கொள்ளும். பின்னர் கரையக்கரைய இனிப்பான சுவையைத் தந்துகொண்டு இருக்கும். மேல்வாய்க்கு ''அண்ணம்'' என்று பெயர். மேலானவற்றுக்கெல்லாம் அப்பெயர் வருவதுண்டு. உடன் பிறந்தாரில் மூத்தோருக்கு ''அண்ணன்'' என்று பெயர். மேலான அம்மை ''அண்ணி'' ஆகின்றாள். மேல்வாயாகிய அண்ணத்திலிருந்து கொண்டு தித்திப்பதுதான் இங்கு ''அண்ணித்தல்'' எனப்பட்டது. யோக முறையிலும், பெரியார் சேவையால், உயர்ந்த அகக்கருத்தில் தியானிப்பதாலும், உள் நாக்கு வழியாக, அண்ணத்தில் ஒன்று ஒழுகி சுவைதரும். அச்சுவையே ''அண்ணித்தல்'' ஆகும். இதைச் சுவைத்து உண்டுவிட்டு, பசியாறுவோரும் உள்ளனர். அவர்கள் வேறு எதையும் உண்ணாமல் இருப்பர். இராமலிங்கர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு கவளம் மட்டும் உண்பாராம். இது உள்நாக்கிலிருந்து வரும் ஊற்றை உண்பதனால் முடிந்தது. இரண்டு நாட்களுக்கு ஒரு கவளம் உண்பதுகூடத் தனக்காக அன்று; உலகுக்குத் தொண்டு செய்யவேயாகும்.

உலகுக்குத் தொண்டு செய்பவர்களுள் வெறும் எண்ணத்தால் செய்பவரும் உண்டு. அவர்களுடைய அருட்பணி பேச்சு, செயல்கள் இல்லாமலேயே நடைபெறும். அவர்கள் வெளியே உலாவுதல் இல்லாதவர்கள். அவர்கள் ஒரு மூலையில் ஒதுங்கி இருப்பர். உலகுக்கு உடலால் உழைப்போர் உச்சிப்போதில் சிறிது வாங்கி உண்பர். இதையும் இல்லாமல் செய்யத்தக்கது மேற்கூறிய உண்ணாக்கின் வழிவரும் அண்ணித்தல் ஆகும்.

மனிதனுக்கு உள்ள இரண்டு நாக்குகளுள் ஒன்று மேலும், ஒன்று கீழுமாக உள்ளன. கண் போன்ற மற்ற உறுப்புக்கள் பக்கவாட்டில் அமைந்துள்ளன. கீழ் உள்ள நாக்கு உணவைத் துய்ப்பதற்கு உதவுகின்றது. மேலுள்ள நாக்கு மேற்குறித்த ஒழுகுதலைத் தருவதற்காக உள்ளது. இந்த உண்மைகளை உடற்கூற்று நூல்களில் காண இயலாது.

ஆக, உள் நாக்கிலிருந்து ஒழுகித் தித்திப்பைத் தருவதுபோல, இறைவன் ஆகமத்திலிருந்து கொண்டு சுவை தருவான். இதனையே

''ஆகமமாகி நின்று அண்ணிப்பான்'' என்று மாணிக்கவாசகர் கூறியுள்ளார். ஆகமம் பாவனையில் பாவனாதீத அநுபவத்தைக் கொடுக்கும்.

(1) நமச்சிவாய வாழ்க, 2) நாதன் தாள் வாழ்க, 3) இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க, 4) ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க, என்னும் நான்கு தொடர்களில் ஒரு ஒழுங்குமுறை அடங்கியுள்ளது. அதாவது உபதேச மொழி ஐந்தெழுத்தென்பதும், உபதேசிப்பவர் இறைவன் என்பதும், அவன் நம்மிடமிருந்து இமைப்பொழுதும் நீங்காதவன் என்பதும், அவன் ஆகமமாகி அண்ணிப்பான் என்பதும் ஆம். அவை 1) உபதேசம், 2) குரு, 3) தீட்சை, 4) உபதேச முறையாகக் காட்டப்பட்டுள்ளன. உபதேசம் பெறுவது அநுபவத்தில் கால் வைத்தோம் என்பதற்காகவே. ஆகமப் பொருளாகிய ஐந்தெழுத்தே உபதேசிக்கத்தக்கதாகும். மேற்கூறிய உண்மைகளைக் கொண்டு ஆகமத்தின் நிலையை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

வேத, ஆகமங்களின் பயன் ஞானம் ஆகும். அதுவே ''சிற்றம்பலம்'' எனப்படும். தேவாரத்தைப் பாடுவது அச்சிற்றம்பலத்தின் அநுபவத்தைப் பெறுவதற்காகவே. அதனால்தான் பாடுவதற்கு முன்னும் பின்னும் ''திருச்சிற்றம்பலம்'' என்பர். அவ்வாறு கூறுவதனால், தன்னை மறந்து, சூழலை மறந்து, இன்னாரைப் பாடுகிறோம் என்பதையும் மறந்து முப்பாழுக்கப்பால் வருகின்ற அநுபவத்துக்கு அழைத்துச் செல்லும். அதுவே வேதாகமங்களின் பயன்.

இறைவன் வேதாகமங்களில் ஞானமாய் இருப்பதோடு ''விநோத''னாகவும் இருக்கின்றான். ''விநோதம்'' என்னும் சொல்லுக்கு வியப்பு, இனிமை, எளிமை, ஆடல் பாடல், முன்பின் அறியாத நிலை என்றெல்லாம் பொருள் உண்டு. இறைவன் பல ஞானச்செயல்களை விளையாட்டாகச் செய்வதுண்டு. அரிய காரியங்களை எளிதாகச் செய்வான். அவன் பிட்டுக்கு மண் சுமந்தான். பொதிசோறு கொண்டு போய்க்கொடுத்தான். அவன் ஏன் அவ்வாறு விளையாடினான்? அது, நாம் அவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதனைக் காட்டவேயாகும். அருளுடம்பெடுத்து மண் சுமந்து சேவை செய்ததில் அவனுடைய கருணையின் மாட்சி வெளிப்பட்டது.

இறைவனின் அடியார்களும் ஞானவிநோத செயல்கள் பலவற்றைச் செய்துள்ளனர். திருஞான சம்பந்தர் அச்சிறு வயதில்

கோயில்தோறும் சென்று பாடியதே ஞான விநோதச் செயல்தான். அப்பர் பெருமான், சூலை நோய் தீர்ந்தபின் செய்தவை எல்லாம் விநோதச் செயல்களே. சுந்தரரும் அடியார்களைச் சுட்டிக்காட்டியதே விநோதச் செயல்தான். மாணிக்கவாசகர் ''இதுதான் திருவாசகத்தின் பொருள்'' என்று இறைவனைச் சுட்டிக்காட்டியதே விநோதச் செயல்தான். இவை எல்லாம் சேவைகளின் கடந்த (அதீதப்பட்ட) நிலை.

''விநோத''ச் செயல்கள் வாக்காலும், மனத்தாலும், உடம்பாலும் செய்யப்படலாம். மனோ ஞான விநோதத்தை விட வாக்கு ஞானவிநோதம் உயர்ந்தது. அதைவிட செய்கையால் நடைபெறும் ஞான விநோதம் உயர்ந்தது. உடம்பால் செய்வது எளியார்க்கும் செய்யும் சேவையாகும். சேவையே இந்த உலகில் ஞானவிநோதம் ஆகும். அது அடியார்க்கும் ஆருயிர்க்கும் செய்யப்பட வேண்டும். செய்கை வினையைப் போக்குவதில் சிறந்தது. அருணகிரியார் ''ஞான விநோத''என்றதனால் ''முருகா! நீ இருப்பது சிற்றம்பல (சிதாகாச) வெளி அங்கே நீ ஆடல் பாடல் செய்கின்றாய், நான் அங்கு வருவதற்குத் தகுதி பெறும்படி ஞான விநோதச் சேவைகளைச் செய்யும்படி அருள்வாயாக'' என்னும் வேண்டுதல் குறிக்கப்பட்டது.

(3) மனாதீதா!

(மனோதீதா என்னும் பாடம் சரியன்று). மன+அதீதா=மனாதீதா ஆகிறது. இது மனத்துக்கு அப்பாற்பட்டவன் என்று பொருளாகும். பொதுவாக எல்லார்க்கும் மனம் அதாவது 21-வது தத்துவம் வரைதான் தெரிகிறது. தெரியாத தத்துவங்கள் 15-ம் சேர்த்து முப்பதாறு தத்துவங்களையும் கடந்தவன் என்று வந்திருக்க வேண்டும். எளிமைக்காக யாவர்க்கும் புரியும் பொருட்டு மற்ற 15 நுட்பமானவற்றை உள்ளடக்கி ''மனாதீதா'' என்றார்.

(4) சுரலோக சிகாமணியே!


சுரலோகம் என்பது தேவர் உலகம். அதாவது அனைத்துத் தேவர்களையும் குறிக்கும். இறைவன் தேவர்களுள் ஒருவன் அல்லன். தேவர்கள் ஆன்மாக்களே; சிறப்பு நிலையால் தேவ பதவியைப் பெற்றவர்களே. இறைவன் தேவர்களைக் காத்து அருள் செய்தவன். எனவே ''சுரலோக சிகாமணி'' எனப்பட்டான். சிகாமணி என்பது

முடியில் அணிந்து கொள்ளத்தக்க சிறந்த மணி என்றும், மணிகளிலே தலை சிறந்தது என்றும் பொருள்படும். தேவர்களுக்கு அத்தகைய மணி போன்றவன் இறைவன்.

ஆக, அருணகிரிநாதர் இப்பாடலில், அருளை ஆதாரமாகத் தர வேண்டும் என்று இரக்கம் தோன்ற மிக வருந்தி கேட்டிருக்கின்றார். நாமும் இப்பாடலைத் திருப்பித் திருப்பி உருக்கமாக மெய்யன்போடு ஓதி வந்தால், ஆதரவு கட்டாயம் கிடைக்கும். தொடர்ந்து விடாமல் ஓதி வந்தால் பயன் கிடைக்கும். ''சிவன் எனும் நாமம் தனக்கே உடைய மெம்மேனியம்மான்... இவன் பன்னாள் அழைப்பொழியான் என்று அருள் செய்துவிடுவான்'' என்று அப்பர் பெருமான் கூறுகிறார். இவரை ஞான சம்பந்தரே ''அப்பா'' என்று அழைத்தார். எனவே நமக்கெல்லாமும் ''அப்பா'' தான். அப்பா சொன்னதை நாம் கேட்க வேண்டாமா?

III சக்கரம்

இப்பாடலில் அருணகிரியார் தெரிவித்த வேண்டுதல் பகுதி ஒருபுறம் இருக்க, அவர் இறைவனுடைய இயல்பை அதாவது ஞானமாகிய சகஜ நிலையை எடுத்துரைத்தது சிறந்து விளங்குகிறது. ஞானத்தைக் குறிக்கும் எழுத்து 'ச'கரமாகும். இப்பாடலின் அதி தேவன் ''அழிவிலாத் தேவன்''ஆவான். இப்பாட்டுக்குரிய சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-27

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே! விதியின் பயன் இங்கு இதுவோ!
பொன்னே மணியே! பொருளே அருளே!
மன்னே! மயிலேறிய வானவனே!

I பொழிப்புரை

மின்னலை ஒத்த (நிலையில்லாத உலக) வாழ்வை விரும்பிய, என்னுடைய வினைப்பயன் இங்கு இவ்வளவு (துன்பமாக) ஆகிவிட்டதே! இது என்னே! (முருகா) பொன்னே மணியே! பொருளே அருளே தலைவனே மயில் (தூய மாயையில்) எறிய உயர்ந்தோனே!

II விளக்கவுரை

(1) மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான், என்னே! விதியின் பயன் இங்கு இதுவோ!

அருணகிரியார் இந்தப் பாடலை மனம் நொந்து பாடுவது போல இருக்கிறது.

மின்னல் பளிச்சென்று தோன்றும். உடனே மறைந்து விடும். பார்ப்பதற்கு அது கவர்ச்சியாக இருக்கும்; ஆனால் நெடு நேரம் இராது. போலிப் பொருள்கள் எல்லாமே அவ்வாறு தோன்றி மறைவனவே. நெற்பயிர் ஆறு மாதங்களில் வேகமாக வளர்ந்து பின் மடிந்துவிடும். பனைமரம் வளர்வதற்கு நீண்டகாலம் ஆகும். அது ஆழ்ந்து, அகன்று ஓங்கி வளர்கிறது. பயனையும் நீண்ட காலம் கொடுத்துக் கொண்டு இருக்கும்.

நாளைக்குக் கிடைக்கும் பலாப்பழத்தை விட, இன்று கிடைக்கும் களாப்பழம் மேல் என்று சிலர் கருதுவர். அவர்கள் பலாப்பழத்தின் சுவையை அறிய இயலாது. பொறுத்திருந்து பலாப்பழத்தைப் பெறுவோரே சிறந்தவர். அவர்களே மன உறுதி உடையவர்கள்.

அவ்வாறே மின்னல் போன்ற இந்த உலக வாழ்வை விரும்பாதவர் நிலையான வாழ்வைப் பெறுவர்.

பண்டைய சான்றோர்கள் முதலில் உலகத்தின் நிலையாமையை எடுத்துச்சொல்லி, அதன் பின்னரே, ஞானத்தைப்பற்றிப் பேசிவந்தனர். தொல்காப்பியத்தில், அகத்திணை, புறத்திணைகளுக்குப்பின், காஞ்சித்திணையை வைத்தார். அதாவது நிலையாமையைக் கூறும் ஒழுக்கம் வைத்தார். உலகம் நில்லாமையாகிய புல்லிய நிலையை உடையது மொழியைக் கூறும் தொல்காப்பியமும், மனித வாழ்வும் ஒரே அடிப்படையில் அமைந்துள்ளன. அவை வேறுபட்டவையல்ல. மொழியின் உண்மைகளை வாழ்க்கையில் காணலாம். வாழ்க்கையின் உண்மைகளை மொழியில் காணலாம். தொல்காப்பியமும், திருக்குறளும் தமிழ் மொழியின் இரு கண்களாக அமைந்தவை. அவை முழுமையும் கிடைத்திருப்பதனால் தமிழ் உயிருள்ள மொழி என்பது விளங்கும். இந்த இரண்டு நூல்களும் நிலையாமையைக் கூறுகின்றன. இவற்றைப் பின்பற்றிய மற்ற நூல்களும் அவ்வாறே கூறுகின்றன.

நிலையாமையைப் புரிந்து கொண்டால்தான் மனிதனுக்குப் பற்றுவிடுபடும். பற்று விடுதலால் மெய்யுணர்வு தழைக்கும். அவா அறுவதற்கு அதுவே வழி. மெய்யுணர்வு சரியாய் இருந்தால் வாழ்க்கையில் ஏமாற்றமே வராது. வாழ்வு நெறி தவறாமல், செம்மையாய், பயனுடையதாய் அமையும்.

மெய்யுணர்வென்பது சமய உணர்வாகும். சமய உணர்வைப் போல, வாழ்க்கையைத் தெளிவாக்கும் உணர்வு வேறு எதுவும் இல்லை. சமய உண்மைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பவர் இம்மையிலும் மறுமையிலும் சிறப்புறுவர். இந்த ஞானம் உள்ளவர்களே தெளிந்தவர்கள்; பகையை எதிர்ப்பவர்கள்; காக்க வேண்டியவற்றைக் காப்பவர்கள். அவர்களே நல்லதைச் செய்பவர்கள்.

மற்றவர்களுக்கு நிலைத்ததல்லாத பொருள்களில் கவனம் செல்வதால், நல்வழியில் போக முடியாதவர்களாகின்றனர். அவர்கள் நல்ல காரியங்களுக்குப் பொருள் இல்லை என்பர். வறுமை இருக்கிறதென்று தவறான வழிகளில் செல்வர்.

நிலையில்லாத இந்த உலக வாழ்வில், நிலையில்லாத இந்த உடம்பைக் கொண்டு நிலையான பொருளைப் பெறுவதற்கே இந்தப்பிறவியை எடுத்துள்ளோம். அதற்கான கருவிகள் இந்த

உடம்பில் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது ஆறு ஆதாரங்கள், நடுநாடி (திருச்சிற்றம்பல வெளி) தியானத்துக்குரிய மனம், மற்றும் பல கருவி கரணங்கள் இந்த உடம்பில் அமைந்துள்ளன. இந்த அமைப்பு மற்ற பிறவிகளுக்கு இல்லை. மனிதப்பிறவிக்கு மட்டுமே அமைந்துள்ளது.

எனவே எதிலும் நிலைத்த தன்மையைக் கண்டறிவது நம் கடமையும் அறிவுடைமையும் ஆகும். துணி வாங்கும்போது அதன் சாயம் நிலைக்குமா என்று கேட்கின்றோம். பிறந்த குழந்தை நீண்ட ஆயுளோடு இருக்குமா என்போம். அவ்வாறே மின் போன்ற இந்த வாழ்வு நித்தியத்தன்மை பெறுமா என்று கேட்க வேண்டாமா? அவ்வாறு கேட்டு ஆராய்ந்து சிந்திக்கும்போது எல்லாப் பொருள்களிலும் ஏதோ ஒன்று நிலையாக ஊடுருவி இருப்பது தெரிய வரும். அவ்வாறு தெரியவரும் பொருளில் மூன்று வகை உண்டு. அவை:

(1) ஆன்மா : இது ஒரு காலத்தில் பாசத்தோடு தொடர்ந்தும், மறுகாலத்தில் இறைவனைத் தொடர்ந்தும் இருக்கும். எனவே ஆன்மா நிலைத்ததானாலும், அதன் தொடர்பு நிலையாக இல்லை.

(2) பாசம் : இதுவும் நிலைத்தபொருளானாலும், இதன் வடிவம் மாறிக்கொண்டே இருக்கும். இது அஞ்ஞானிகளை வருத்தும். ஞானிகளைப் பற்றாது. அவர்களுக்கு முத்தியில் இன்பத்தையும் விளைவிக்கும்.

(3) இறை : இது என்றும் மாறாதது; நிலைத்தது; சத்தானது. இதுவே மெய்யென்றும், நன்மை என்றும், சிவம் என்றும் அழைக்கப்படும்.

மேற்கூறிய 1) ஆன்மாவும், 2) பாசமும் மாறுதல் உடையவை. 3) இறைவன் மட்டும் வேறு பற்றுக்கோடின்றி, மாறுதல் இன்றி, தனிப்பொருளாய் விளங்குகிறது. இந்த மெய்ப்பொருளைக் காணும் வரை அதனைக் காண ஒட்டாமல் மறைக்கின்ற மின் போன்ற பொருள்களே புலப்படும். அவற்றில் விருப்பம் கொண்டு துன்புறக் கூடாது என்பது அருணகிரியாரின் வேண்டுகோள்.

மாயைப்பொருள்கள் மேல் விருப்பம் வருவதற்குக் காரணம் தன்முனைப்பாகும். அவ்வாறு விரும்பிய யான் இங்கு விதியால் துன்புறலாமோ என்று அருணகிரியார் வருந்துகிறார்.

''யான் என்பது தனித்தன்மையைக் குறிப்பதாகும். இங்கு அச்சொல் ''எனது'' என்னும் கருத்தில் வந்துள்ளது. ''விரும்பிய யான், என்னே! விதியின் பயன்'' என்னும் தொடரில் ''என்னே!'' என்பது வியப்பைக் குறிப்பது. எனவே அதனை நீக்கிய பிறகு ''விரும்பிய, யான் விதியின் பயன்'' என்று மிஞ்சும். ''யான் விதி'' என்பது ''எனது விதி'' என்று வந்திருக்க வேண்டும். ''யான்'' ஒடு ''அது'' என்னும் (ஆறாவது) உருபைச் சேர்த்தால் ''எனது'' ஆகும் (யான்+அது=எனது). எனவே ''யான்'' என்பதிலிருந்து ''என்'' என்னும் சொல்லும் ''எனது'' என்னும் சொல்லும் வந்துள்ளன என்பது புலப்படும். (அதாவது ''எனது'' என்பதில் ''அது'' என்னும் உருபை எடுத்துவிட்டால் ''யான்'' ஆகிவிடும்). ஆக ''யான்'' என்பதும் ''எனது'' என்பதும் அடிப்படையில் ஒன்றேயாகும்.

''எனது'' என்பது சூழலைப்பற்றிய செருக்கு அது புறச்செருக்கு எனப்படும். ''யான்'' என்பது அகச்செருக்கு எனப்படும். அதாவது அது தன் உடம்பைப் பற்றிய செருக்கு. இச்செருக்கு வரும்போது ''யான்'' என்றும், ''நீ'' என்றும் பேசுவோம். இச்செருக்கு இறைவனுக்கு அடங்கி நின்றால் வராது.

''என்'' என்னும் சொல்லுருவம் ''யான்'' என்ற சொல்லிலிருந்து தோன்றுவதால் மேற்கூறிய இரண்டு செருக்குகளையும் ''யான்'' என்பது உணர்த்துகிறது.

எனது விதியின் பயன் என்று வருந்துவதால், அந்த விதியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்:

''விதி'' என்னும் சொல்லுக்கு முறையாக வருவது என்று பொருள். அது இறைவனால் விதிக்கப்படுவதாகும். அது முதலில் ''செயல்'' என்றும், பின்னர் ''வினை'' என்றும், அது முற்றியபோது ''ஊழ்'' என்றும் பெயர்பெறுகிறது.

நாம் ஒருவரை இழித்துப் பேசிவிட்டாலோ அல்லது அவருக்குக் கெடுதி செய்து விட்டாலோ அது உடனே பயன் தருவதில்லை. அச்செயல்கள் தன்னிலையிலேயே வினை கொள்கின்றன. பிறகு முற்றிக்கொண்டு வரும். ஒரு விதையை நட்டுவிட்டால், அது இயற்கையாக முளைவிட்டு, மரமாக வளர்ந்து கொண்டே வரும். அவ்வாறே நாம் செய்யும் தீயவையும் வளருகின்றன. அவற்றை முறைப்படுத்தி, இறைவன் நம்மைத் தாக்குமாறு விதிக்கும்போதுதான்

அதைப்பற்றி நாம் தெரிந்து கொள்கிறோம். அவை நீண்டகாலம் சென்றாலும் தாக்காமல் விடுவதில்லை. இந்தத் தெளிவு இருக்கு மானால், யாரும் யாரையும் நோகும்படி செய்யமாட்டார்கள்.

''ஊழிற் பெருவலி யா உள?'' என்று ''யா'' எனப் பன்மையில் கேட்டதனால், வேறு எவையுமே அதைவிட வலிவானவை இல்லை என்பது பெறப்படும். இறைவனுடைய அருள்கூட, விதியோடு ஒட்டி நடக்க வேண்டியுள்ளது.

தெய்வமும், விதியும் இல்லை என்பவர் நாத்திகராவர். தெய்வத்தைப் பற்றிக் கவலை கொள்ளாது விதியை ஒப்புக்கொள் பவர் ஆத்திகராவர்.

யாரை நோக்கி நாம் எண்ணுகிறோமோ, அவரை அந்த எண்ணம் போய்ச்சேருவது திண்ணம். ''பல் ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம், தாய் நாடிக்கோடலை'' என்றபடி நாம் செய்த வினை நம்மை எப்படியும் வந்து சேரும். மற்றும் வினை வந்து நம்மைத் தாக்குவதைக் கொண்டுதான், அதை விதித்த இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை நாம் உணருகின்றோம். அவன் நமக்கு வினைகளை விதிக்கும்போது எவ்வளவோ குறைத்துத்தான் விதிக்கின்றான். அது, தாய் தன் குழந்தையை அடிக்கும்போது ஓங்கிய அளவுக்கு அடி விழாமல் குறைத்துவிடுவதைப் போன்ற தாகும்.

இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட வினையையும்கூட நாம் அநுப விக்கும்போது தாங்கமுடியாத துயரமாய் இருக்கின்றது. தீ வினையைத் துய்ப்பதில் ஒரு நன்மையும் உண்டு. அது நமக்கு உருக்கத்தை உண்டாக்குகிறது. அந்த உருக்கம் இரண்டு வகைப்படும்: ஒன்று வெம்புதலான உருக்கம். மற்றொன்று கனிவுபெறும் உருக்கம். வெம்புதல் என்பது தீவினையைத் துய்க்கும்போது பொறுமை இழந்து மேலும் புதிய தீமைகளைச் செய்வதாகும். இது, காய் முற்றாமுன்பே வெம்பிப்போவதை ஒக்கும்.

மற்றொன்று காய் முற்றி, சாறு நிறைந்து கனியாவதைப் போன்றது. இதனால் துன்புறும் உள்ளம் கனிந்து மென்பதம் அடையும்.

ஆன்மாக்கள் மேற்கூறிய கனிவு பெறுவதற்காகவே உலகத்தில் துன்பங்கள் மிகுதியாக உள்ளன. அதை அறிந்து உள்ளம் கனிந்து

அளிய வேண்டுமேயன்றி வெம்பி அழுகுதல் கூடாது. பண்டைய அருளாளர்கள் துன்பம் வந்தபோது எவ்வாறு கனிவு பெற்றனர் என்பதைக் காணும்போது இது விளங்கும். அப்பர்பிரான் நஞ்சு கொடுக்கப்பட்டார்; தீயில் இடப்பட்டார்; கடலில் எறியப்பட்டார். அவர் துன்புறவில்லை. ஆனால் கனிந்தார். அத்துன்பங்களால் அவர் மேன்மேலும் உயர்வடைந்தார். நாயன்மார்கள் பலர் வறுமையில் இருந்தனர். ஆனால் அவ்கள் வெம்பாமல் கனிந்தனர்.

எனவே நமக்குத் தீவினை வரும்போது பிறரைக் குறிப்பாகச் சான்றோரையும் இறைவனையும் நொந்துகொள்ளக்கூடாது. அவ்வாறு செய்யின் மேலும் வினை பெருகும். மாறாக, சான்றோர் துணையாலும், இறைவன் துணையாலும் துன்பங்களைத் துய்ப் போமானால், நமக்கு ஆற்றல் மிகும்; வினையின் தாக்குதல் குறையும்.

இவ்வுண்மைகளை அறியாமல் தீவினைக்கு ஆட்படுவது பெருந்துன்பமாய் இருக்கும்.

(2) பொன்னே மணியே! பொருளே அருளே! மன்னே! மயிலேறிய வானவனே!

அருமையும், பெருமையும் உடைய சிறந்தோர்க்கு உலகிலுள்ள சிறப்பான பொருள்களின் பெயர்களை வைத்து மகிழ்வது மரபு. ஒளியுடையதைக் ''காசு'' என்பர். பொன்னால் செய்யப்பட்டதே காசு எனப்படும். ''காசு மாலை'' என்பது பொன் மாலையைக் குறிப்பதால் இது தெரியவரும். பளிச்சென்னும் வெள்ளிக்காசு ''பணம்'' எனப்பட்டது. ''பள்'' என்பது ஒளியைக் குறிக்கும். ''பளிதம்'' என்பது கற்பூரம், ''பள்ளிக்கூடம்'' என்பது ஒளியுள்ள இடம். ''மடைப்பள்ளி'' என்பது தீயால் சமைக்கும் இடம். ''பளிங்கு'' என்பது கண்ணாடி. ஆக, காசு பணம் என்பவை ஒளியுள்ள பொன்னும் வெள்ளியும் ஆம். ஆக உயர்ந்த பொருளைப் ''பொன்னே'' என்பது வழக்கு. எனவே முருகக்கடவுளை அருணகிரி யார் ''பொன்னே'' என்றார்.

மணி மதிப்பு மிக்கதானாலும் பொன்னைப் போல வேண்டிய வாறு (லாவகமாக) பயன்படுத்த முடியாது. எனவே மணியைப் பொன்னில் பதிப்பது சிறப்புடையது. இது சான்றோர் சூழ இருக்கும் மேலோரை ஒக்கும். சான்றோர் ஆதரவாளர்களைச் சூழ்ந்தும்

இருப்பர். புறநானூற்றில் இப்படி பொன்னில் பதித்த மணியாக அரசனைச் சூழ சான்றோர் இருந்தனர் என்று வருகிறது. எனவே ''பொன்னே'' என்றும், அதில்பதித்த ''மணி''யே என்றும் முருகனை அழைக்கின்றார்.

''பொருளே'' என்னும் சொல்லக்குப் பொன் என்றும் மணி என்றும் சொல்லலாகாது. ஏனென்றால் அப்பொருள்களை முன்னமே கூறி விட்டார். எனவே ''பொருளே'' என்பதற்கு ''மெய்யே'' என்று உரைகொள்ள வேண்டும்.

''அருளே'' என்றது முருகனின் அருளைக் குறிக்கும். அது மெய்யாகிய இறைவனில் பதிந்துள்ள அருள் என்று கொள்ள வேண்டும். பொன்னில் மணியையும், பொருளில் அருளையும் காண்பதுதான் சிறப்பு. மற்றும், நில்லா உலகில் நிலைத்ததைப் பார்ப்பதும், துன்பங்களிடையே பேரின்பத்தைத் துய்ப்பதும் சிறப்பு. ஒரு செடியைக் கண்டால் அதன் பழத்தை அநுபவிக்க எண்ணுவது சாதாரண நிலை. மாறாகச் செடியைக் கண்டதும் அதன் அடிப்படையாகிய மெய்ப்பொருளைப் பார்ப்பவர் ஞானி. கல்லாலும் உலோகங்களாலும் செய்யப்பட்ட இறைவன் திருவுருவங்களெல்லாம் இப்பயிற்சியைத் தருவனவே. பண்டங்கள் எவையாயினும் அவற்றுள் பதிந்துள்ள மெய்ப்பொருளாகிய இறைவனைக் காண வேண்டும். சத்தாகிய இறைவனோடு சித்தாகி அம்பிகையையும் காண வேண்டும். திருக்கோயில்களில் நடைபெறும் வழிபாடுகளும், விழாக்களும், அப்பனுக்கும் அம்பிகைக்கும் நடத்தப்படும் திருமணங்களும், இப்பயிற்சிக்காகவே.


''மன்னே'' என்பது தலைவனே என்று பொருள்படும். பொன்னையும் பொருளையும் நன்மைக்குப் பயன்படுத்தும் தலைவனே என்றார்.

''மயில் ஏறிய வானவனே'' என்பது மயிலில் பதிக்கப்பட்ட முருகன் என்று பொருள். அருணகிரியாரை ஆட்கொண்டவன் முருகன். அவன் சுத்தமாயையில் செயல் நிகழ்த்துபவன். எனவே மயில் ஏறியவன் என்றார். இனி, சூரன் மயிலாக வந்தபின், அந்த மயிலை வாகனமாகக் கொண்டது. ஆணவம், நீங்கிய தூய ஆன்மாவில் ஏறியது அல்லது பதிந்தது ஆகும். (சூரன் மயிலாக வருவதற்கு முன்பே முருகனுக்கு மயில் வாகனம் இருந்தது).

ஆக, பொன்னில் மணியையும், பொருளில் அருளையும், நில்லா உலகில் நிலைத்த இறைவனையும் பார்க்க வேண்டும். துன்பங்களிடையே பேரின்பம் அநுபவிப்பவனே சிறந்தவன். மின்னல் போன்ற உலகில் வினைக்கு ஆட்பட்டுத் துன்புறாமல் அதில் இறைவனைக் காணும் விருப்பத்தை பயிற்சியால் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

III சக்கரம்

இந்தப்பாடலில், நிலையாத உலகில் நிலைத்த பொருளாகிய இறைவனைக் காண்பதுபற்றிக் கூறப்பட்டது. அது ஒரு சிறந்த விருப்பம். அது ஞான விருப்பம் ஆகும். அதனை இச்சா சத்தி என்பர். இச்சா சத்தியைக் குறிக்கும் எழுத்து ''ச'' ஆகும். எனவே இப்பாடலுக்கு உரிய எழுத்து ''சஂ'' ஆகும். அதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-28

ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானாகரனே! நவிலத் தகுமோ?
''யான்''ஆகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே!

I பொழிப்புரை

(துய்த்தது போதும் என்னும்) தெவிட்டுதல் இல்லாத அமுதமே! கூர்மையான வேல் (ஞானப்) படை உடைய அரசே! ஞானமே உருவானவனே! ''யான்'' என்னும் தன்முனைப்புடன் இருந்த என்னைத் தானாகிய உன்னுள் அடக்கி, தனக்குத்தானே பரமாகி நிலைத்து நின்றமையை (என்னால்) சொல்லவும் முடியுமோ? (முடியாது)

II விளக்கவுரை

(1) ஆனா அமுதே! அயில்வேல் அரசே! ஞானாகரனே! நவிலத்தகுமோ?

அருணகிரியார் முருகனைப் பல பெயர்கள் கொண்டு அழைத் துள்ளார். இந்தப்பாடலில் ''அமுதே'' என்று அழைக்கின்றார். இது ஓர் உயர்தர அழைப்பாகும். உயர்ந்தோரை உயர்ந்த அன்பால் அழைப்பதற்கு ஏற்ற சொல் ''அமுதம்'' ஆகும். அதுவும் ''ஆனா அமுதே'' என்றார்.

''ஆனா'' என்பது அமையாத என்று பொருள்படும். அதாவது அநுபவித்துத் திருப்திபடாத என்று ஆகும். குழந்தை முருகன் அநுபவித்து அமையாத ''ஆனா அமுதன்'' ஆவான்.

''அமுது'' என்பது அமிழ்தம் என்னும் சொல்லின் திரிபாகும். அமிழ்தம் வேறு உருவங்களிலும் வழங்குகிறது. அது ''அமிர்தம்'', ''அமிழ்தம்'' என்றும் வழங்கும். இவற்றுள் ''அமிழ்தம்'' என்பதே நல்ல சரியான இலக்கியச் சொல்லாகும். (''ழ''கரத்தை ஒலிக்க இயலாதார் ''அமிர்தம்'' என்பர்).

தமிழின் சிறப்பெழுத்து ''ழ''கரம். அது வழவழப்புடைய எழுத்து. அந்த வழவழப்பு அமிழ்தத்துக்குரிய பண்பாகும். அந்த எழுத்தைக் கொண்ட சொல் ''அமிழ்தம்'' ஆகும். அமிழ்தத்தை உண்போர் அதன் வண்ணம் ஆவர்.

உயிர்ப்பு நிலையைக் காத்து, வளர்ப்பது அமிழ்தம் எனப்பட்டது. இப்பண்பு உடைய எல்லாப் பொருள்களும் அமிழ்தங்களே. அவற்றுள் பசும்பால் முதலிடம் பெறுகிறது. அது ஒரு சிறந்த அமிழ்தம். அதற்கும் காரணமாய் இருப்பதாகிய வான் மழையைத் திருவள்ளுவர் அமிழ்தம் என்றார். பாலேயன்றி அதனால் செய்யப்படும் உணவுப் பொருள்களும் அமிழ்தங்களே. கருணையே வடிவாக உடையது பசும்பால். அது, உண்பவர்க்கு நல்ல குணங்களையும் தரும். எனவே பாலே உண்பதற்கு முதல்தரமான அமுது. அதற்கு அடுத்தபடி வெண்ணெய் நல்ல அமிழ்தம் ஆகும். அதை உண்பவர் சிறப்படைவர்; மற்றும் சிறந்த மேனி பெறுவர் என்று சிந்தாமணியில் வருகிறது. அது கோது இல்லாத அமிழ்தம். பழங்களில் இருப்பதைப் போல, சக்கை, தோல், கொட்டை, கோது ஆகிய எவையும் பாலிலும் வெண்ணெயிலும் இல்லை.

மருந்துக்கும் அமிழ்தம் என்ற பெயர் உண்டு. அது சத்துள்ள பல பொருள்களிலிருந்து செய்யப்படுகிறது. சக்கையில்லாமல், சத்தை மட்டும் திரட்டித்தருவது மருந்து. செயற்கையாய்த் திரட்டப்படுவதனால், சில மருந்துகள் உண்பதற்குச் சுவை இல்லாதவையாய் இருக்கலாம். அவற்றுடன் தேனைக் கலந்து கொடுப்பர். மருந்து உயிர்ப்பை நீட்டிப்பதால் அதுவும் அமிழ்தம் ஆகிறது.

திருக்குறளில் ''ஔவை உண்ட நெல்லிக்கனிபோல் அமிழ்தம்'' என்று ஒரு உரைப்பகுதி வருகிறது. அந்த நெல்லிக்கனி உயிர்ப்பை நீட்டித்தலால் அமிழ்தல் எனப்பட்டது. (தான் வாழ்வதைவிட, ஔவையார் நீண்டநாள் வாழ வேண்டுமென்று விரும்பி அதியமான் அவருக்குக் கொடுத்தான்). மருந்து உண்பாரை அது உடலோடு பொருந்தச் செய்யும். நல்ல உணர்வுகளோடும் பொருத்தும். எனவே மன நலத்துக்கும் மருந்துண்பர். இன்ன மருந்து உண்பதால் இன்ன உணர்ச்சி வரும் என்பதனை உணர்ந்த யோகிகள், சித்தர்கள் அடியார்கள் ஏற்றபடி உண்டு பயன்பெறுவர். அந்த வகையில் மருந்து இறைவனோடு பொருத்தவும் வல்லது. சாதாரணர் உடம்பு நிலைப்பதற்காக மருந்துண்பர். சான்றோர் பிறவியைப் போக்குவதற்

காக மருந்துண்பர். நல்ல குணம் இருந்தால் நோய் வராது. நல்லாரிணக்கம் நோயைப் போக்கி நல்ல பண்புகளைத் தரும். இயற்கை உணர்ச்சி, இயற்கை உணவு, தவ முயற்சிகளால் நோயைப் போக்கிக் கொள்ள வேண்டும். மருந்து உண்ணும்போது பிறவிப்பிணி போக வேண்டும் என்று தியானிக்க வேண்டும். அருணகிரிநாதர் ''ஆனா அமுதே'' என்று விளித்ததன் காரணமே பிறவிப்பிணியைப் போக்கிக் கொள்வதற்காகும்.

அமிழ்தமாகிய பாலும் ஒரு நேரத்தில் தெவிட்டும். நல்ல பஞ்சணையில் குழந்தையை வைத்துக் கொஞ்சுவதும் தெவிட்டும். அவ்வாறே எல்லாப்பண்டங்களிலும் சலிப்புத்தட்டும். ஆனால் இறைவனுடைய குணங்களில் சலிப்புத்தட்டாது. முருகனின் குணமாகிய ஞானத்தை எண்ணும்போது, அது தெவிட்டாதானதனால், ''ஆனா அமுதே'' என்றார்.

இனி, ''அயில்வேல் அரசே'' என்றதில் அயில்வேல் ஞானத்தைக் குறிக்கும். முருகன் ஞானமாகிய படைக்கலத்தைக் கொண்டு ஆட்சி செய்பவன் ஆவான். ஆட்சியேயன்றி வேறு எந்தப்பணியைச் செய்வதற்கும் ஞானம் வேண்டும். பணி செய்வது எல்லோர்க்கும் அவசியம் ஆகும். பணி செய்யாமல் முத்தியையும் முழுமையாகப் பெற இயலாது. அதனாலேயே ஞானசம்பந்தர் முதலானோரும் பணி செய்தனர். பணி என்பது எளியவர்களிடத்திலும், தோன்றுகின்ற துன்பங்களைப் பொருள் பண்ணி, அவர்களுக்குப் பணிந்து செய்யும் உதவியாகும். முருகன் கயிலையிலிருந்து இறங்கிவந்து சூரனோடு போர் செய்தான். சுந்தரர் ''வித்தகம் பேச வேண்டா, பணி செய்ய வாரும்'' என்று தடுத்தாட் கொள்ளப்பட்டார். அதனால் அவர் பணி செய்ததோடு, பணி செய்வோர்க்கு இருக்க வேண்டிய உள்ளப்பாங்கினை விளக்கும் முறையில் ''எல்லார்க்கும் அடியேன்'' என்று விளம்பினார்.

அரசாட்சியும் ஒரு பணியே. மக்களுக்குத் தொண்டு செய்வதே ஆட்சியாகும். அரசன் ஞான வடிவினன் ஆவான். (ஞானம் தரும் மரத்துக்கும் அரசமரம் என்று பெயர். வேம்பு உடல் நலத்தைத்தரும். எனவே இவ்விரண்டையும் ஒன்றாக அமைப்பர். வீட்டு மனையில் அரசமரம் கூடாது என்பர். இருந்தால் அதனடியில் தங்குவோர் ஞானிகளாகி துறந்து விடுவர் என்று அஞ்சினர். ஆல மரம் கல்வியைத்தரும்). பண்டைய தமிழ் அரசர்கள், தெய்வக்குறிப்பைக்

கேட்டறிந்து அரசாண்டனர். அவர்கள் இரக்கமே வடிவாய்த் தனக்கென வாழாச்சிறப்புடையோராய் இருந்தனர். பாரியின் வரலாற்றில், அவன் முல்லைக்குத் தேர் கொடுத்ததைக் கொண்டு அறியலாம். மற்றும் அரசர்கள் அமைச்சர் சொல்வழியே கட்டாயம் நடக்க வேண்டுமென்பதில்லை. அவர்களை மீறியும் நடப்பர். மனுநீதி சோழன் வரலாற்றில் இதைக் காணலாம். அரசர்கள் தெய்வவடிவாய் இருந்தனர். அவர்கள், மக்கள் கருத்தறிந்தும் ஆட்சி செய்தனர். அரசனின் கடமை நீதி செலுத்துவதும், மக்களுக்கு நன்னடை நல்குதலும் ஆம். (அந்தணர் கடமை நன்னடையில் நடந்து காட்டுதல் ஆகும். நன்னடையோடு பண்டங்களை வழங்குபவர் வணிகர். நன்னடையோடு தொழில் செய்வோர் தொழிலாளர்கள். எல்லாமே நல்ல நடத்தை அல்லது ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுவதை அரசன் பார்த்துக் கொள்ள வேண்டும்). இக்காலக் கிளர்ச்சிகளுக்குத் திருக்குறளில் வரும் அரசியல் பொருந்தவில்லை என்பர். உண்மையோடு பொருந்தாததனால் அவை திருக்குறளோடு பொருந்தவில்லை என்று கொள்ள வேண்டும். உண்மைகள் காலத்துக்கு அடங்கா. காலம் உண்மைகளோடு பொருந்தி நடக்க வேண்டும். ''நான் ஆட்சி செய்கிறேன்'' என்று யார் ஒருவர் வருகின்றாரோ அவர் நீதி தவறுவார். ஏனென்றால் ''யான்'' என்னும் தன்முனைப்பு அவ்வாறு செய்து விடும். திருவள்ளுவர் கூறிய ஆட்சி முறையை மாற்றுவது உலகத்தைத் தவறுக்கு ஈடுபடுத்துவதாகும்.

அடுத்து, முருகனை ''ஞானாகரன்'' என்றார். ''ஆகரன்'' என்பது வடிவம் உடையவன் ஆகும். எனவே முருகன் ஞான உருவினன் ஆவான். ''நவிலத்தகுமோ'' என்பதனைச் செய்யுளின் இறுதியில் கொள்ள வேண்டும்.

''ஆனா அமுதே'' என்றதனால் முருகனுடைய பண்பையும், ''ஞானாகரன்'' என்பதால் அவன் உருவத்தையும், ''அயில் வேல் அரசே''என்றதனால் அவனுடைய செயலையும் கூறினார்.

(2) ''யான்'' ஆகிய என்னை விழுங்கி, வெறும் ''தான்'' ஆய் நிலை நின்றது தற்பரமே! (நவிலத்தகுமோ?)

இத்தொடரில் அருணகிரியார், தாம் பெற்ற அநுபவத்தைக் கூறுகின்றார்.

''யான்'' என்பது தன்முனைப்பு. ((இது ஊக்கம் அன்று. ஊக்கத்துக்கு ''அகங்காரம்'' என்று பெயர். அகம் உறைப்பாய் இருப்பது அகங்காரம். அது இறைவன்பால் இருக்குமானால் வரவேற்கத்தக்கதே. தன்முனைப்புக்கு ஆணவம் என்று பெயர். ஆணவம் கொடியது. அது இல்லாதிருந்தால் துன்பம் நீங்கிவிடும். இதற்குச் ''செருக்கு'' என்றும் பெயர் உண்டு. ''நான்'' என்று தனித்துப் பிரித்துப் பேசுவது இச்செருக்கேயாகும். இறைவன் என்னும் ஒருவன் இருக்கிறான் என்பதனை மறந்து விடுவதால் இச்செருக்கு வருகிறது. நாம் படிப்பதும், பத்தி செலுத்துவதும், வாழ்க்கையை நடத்துவதும், தொழில்கள் பல செய்து செல்வத்தைச் சேர்ப்பதும் எல்லாமே, தன்முனைப்பாகிய செருக்கை அவித்தலுக்கே யாகும். இந்த நிலை நடைமுறைக்கு எவ்வாறு வரும்? தன் முனைப்பு அவிந்துவிட்டால் நாம் செய்யும் செயல்களை யார் செய்தனர் என்று கூறுவது? இதற்கு எல்லாச் செயல்களையும் செய்பவன் இறைவன் ஒருவனே என்னும் உணர்வு முதலில் வர வேண்டும். செய்கையின் மதிப்பெல்லாம் அவனையே சாரும் என்பதில் ஐயம் இருத்தலாகாது. பிறகு, அன்றாட வாழ்க்கையில் (விவகாரத்தில்) பேசும்போது, செய்தது யார் என்று தெரிவதற்காக ''நான் செய்தேன்'' என்று சொல்லலாம். அது குற்றமாகாது. தன்முனைப்பற்றவர் இந்நிலை யிலும் அடியேனைக் கொண்டு திருவருள் செய்தது என்பர்.

இங்குத் தன்முனைப்பு ஆன்மாவையும் இறைவனையும் பிரித் துப் பேசும்; பிரித்து உணரும். முனைப்பற்ற நிலை ஒன்றுபடுத்தும். கணவனும் மனைவியும், நீ வேறு, நான் வேறு என்று எண்ணும்வரை அங்குக் கற்பு இல்லை. கணவனும் மனைவியும், ஒருவரிடம் மற்றவர் ஒப்படைத்து வாழ்வதே கற்புடைய வாழ்வு. அவ்வாறே தன்னை இறைவனிடம் ஒப்புவித்த வாழ்வை நாம் மேற்கொள்ள வேண்டும். அதுவே பேதமில்லாத கற்பாகும். பேதம் கொஞ்சம் இருந்தாலும் கற்பு குறைந்ததாகி விடும். பேதம் இல்லாமல் இறைவனுக்குள்ளே ''சீவன்'' அடங்கிவிட்டால் அதாவது அந்த ஆன்மாவை இறையருள் விழுங்கிவிடுமானால் அதைச் ''சிவன்'' என்றே கூறுவர். பின்வரும் எடுத்துக்காட்டால் இது விளங்கும்:

பண்டைக்காலத்தில் பயணம் செல்வோர் கட்டுச்சோற்றை மூட்டைகட்டி அதனை ஒரு தடியில் கட்டிக்கொண்டு, அத்தடியை தோளில் சார்த்திக்கொண்டு வழி நடப்பர். அது ''தோட்கோப்பு'' (தோள்+கோப்பு) எனப்படும். பசி வந்தபோது மூட்டையை


அவிழ்த்துச் சோற்றை உண்டு களைப்பாறியபின் மேலும் நடப்பர். அக்கட்டுச் சோற்றை உண்பதற்கு முன்னர், பயணியும், சோற்று மூட்டையுமாக இரு பொருள்கள் இருந்தன. மூட்டையைக் கொண்டு செல்வது வேறு சுமையாய் இருந்தது. சோற்றை உண்டபின் மூட்டை இல்லாமல் பயணி மட்டும் இருந்தார். பளுவும் இல்லை. அதைப் போல், தன்முனைப்பு இருக்கும்வரை ஆன்மாவுக்கு வாழ்க்கைச் சுமையும் பேத உணர்வும் இருக்கும். இறைவன் ஆன்மாவின் தன்முனைப்பாகிய ''யான்'' என்பதனை விழுங்கியபின் இருப்பது இறைவன் ஒருவனேயாவான்.

இந்த ''விழுங்கும்'' செயல் நடைபெற வேண்டுமானால் ஆன்மா தன்னிடம் இறைவன் தாராளமாகப் பழகுவதற்கு இடம் கொடுக்க வேண்டும். இல்லையேல் பேத உணர்வு போகாது. எனவே தான் ஒரு தூய வடிவினன், குணமலை, பணியத்தகுந்தவன் என்னும்படி இருக்க வேண்டும். சிறுமையும், கெட்ட குணமும் தோன்றாதபடி நடந்து கொள்ள வேண்டும். காட்டாக, மாதரைப் பார்க்கும்போது அவர்களைத் தெய்வம் என்று எண்ணுதல் வேண்டும். அப்போது அவர்கள் மேல் வேறு எண்ணம் தோன்றாது.

ஆன்மா விழுங்கப்பட்ட பின் எஞ்சி நிற்பது தற்பரமாகிய ''தான்'' ஆகும். ''தான்'' எனப்படும் இறைவனே அதாவது தற்பரனே நிலையாக நிற்பான். இந்த நிகழ்ச்சியின் அநுபவத்தை விளக்கிக்கூறுவது இயலாதானதனால், அதனை நவிலத்தகுமோ என்று வினவினார். அதாவது அந்த அநுபவத்தைப் பிறர்க்கு எடுத்துச் சொல்ல இயலாது என்று கொள்ள வேண்டும். (தற்பரன்=தனக்குத்தானே மேலானவன்).

III சக்கரம்

இது ஞானப்பாடல் ஆகும். ஞானம் ஆன்மாவில் வியாபித்து வேலை செய்வதை விளக்குகிறது. ஞானசத்தியை உணர்த்தும் எழுத்து 'ஐ' ஆகும். எனவே இப்பாடலின் சக்கர எழுத்து 'ஐ' ஆயிற்று. இதற்கான சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-29

இல்லே எனு(ம்) மாயையில் இட்டனை நீ!
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே!
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே!

I பொழிப்புரை

(முருகா) இல்லை என்று சொல்லக்கூடிய (நிலையாமை உடைய) மாயைப் பண்டங்களில் நீ என்னை வைத்தனையே! (சிறிதும் குறையாமல்) இருந்தபடி இருக்கின்ற என்னுடைய அறியாமையை (நீ) பொறுத்துக்கொள்ளவில்லையே! வலிமையுடைய பன்னிரு தோள்களில் என் சொல்மாலையை அணிகின்ற சுடர்விடும் வேலை உடையவனே!

II விளக்கவுரை

(1) இல்லே எனும் மாயையில் இட்டனை நீ, பொல்லேன் அறியாமை பொறுத்திலையே!

''இல்லை'' என்று வரவேண்டிய சொல் இங்கு ''இல்லே'' என்று கொச்சையாக வந்துள்ளது. அது ''நிலையில்லாத'' என்னும் கருத்தில் வந்தது. ''இல்'' என்பது குடியிருக்கும் வீட்டுக்கும் பெயராகும். எனவே ''இல்லே எனும் மாயை'' இல்வாழ்க்கை (சம்சாரம்) எனும் மாயை என்றும் ஆகும். பொதுவாக இல்வாழ்க்கையைப் பற்று (பந்தம்) என்றும், மாயை என்றும் கூறுவர். அது சரியன்று. ஒரு மாதை மணந்து அறவாழ்வு வாழ்தல் பந்தம் ஆகாது. அது மாயவாழ்வு அன்று. தெளிவோடு அறம் தவறாமல் குடித்தனம் நடத்தினால் அதுவே கோயிலாகும். அதுவே பேரின்ப வீடும் ஆகும். கணவனும் மனைவியும் சிவனும் சக்தியுமாக விளங்கலாம். உடம்பை நடமாடும் கோயிலாகவும் அமைத்துக்கொள்ளலாம். உடம்பு ஓர் அருள் உலகம். அண்டத்திலுள்ள அத்தனைச் சத்திகளும் அதில் உள்ளன. மழை, இடி, சூரியன், சந்திரன், இமயம், குமரி,கங்கை,

பல தலங்கள், இறைவன் எல்லாமே உடம்புக்கும் உள்ளன. அது ஒரு சிறப்பான உலகம். அநுபவிக்கத் தெரிந்தவர்களுக்கு அது ஓர் அற்புதமான உலகம். மற்ற பிறவிகளை விட, மனிதப்பிறவி உயர்ந்த அமைப்புடையது. நோய், பகை முதலிய இல்லாமலும், நாம் விரும்பும் வரையிலும் இவ்வுடலை வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு அமைத்துக் கொள்வது அருமையாகும். அருமையானாலும், பல சான்றோர்கள் அவ்வாறு வாழ்ந்துள்ளனர்.

மேற்கூறிய சிறப்புக்கள் எல்லாம் ஞான வாழ்வு வாழும் அருளாளர்களுக்கே கைகூடுவதாகும். ஏனையோர்க்கு உலகியல் வாழ்வு பெருந்துன்பமாகவே உள்ளது. அருணகிரிநாதர் இப்பாடலில் குறிப்பிடும் வாழ்வு, அருள் மற்றும் ஞானம் பெறாத எளிய மக்களின் நிலையை ஆகும். பாசக்கட்டிலிருந்து விடுபடும் வரை உலகவாழ்வு ''இல்லே எனும் மாயை'' வாழ்வாகவே இருக்கும். மாயை வாழ்வு மாறுதலை உடையது.

''மாய்'' என்னும் சொல்லுக்கு அழிதல் அல்லது மறைதல் என்று பொருள். அது மாயும் தொழிலை உடையது. அதனால் ''மாயை'' எனப்பட்டது. அதன் வடிவம் மாறும், மறையும். ஆனால் மாயை ஆகிய பொருள் அல்லது பாசம் அழிவதன்று. அது என்றும் உள்ள முப்பொருள்களுள் ஒன்றாகிய மலத்தைச் சேர்ந்தது. மண்ணால் செய்யப்பட்ட குடம் உடைந்து போகும். ஆனால் மண் அழிவதில்லை. அதைப்போலவே, இன்றுள்ள உடம்பும், உலகமும், உருவமும் மாறும், அழியும். ஆனால் மாயை அழியாது. அது நுட்பத்தால் ஒடுங்கும்.

''மாயையில் இட்டனை'' என்று கூறும்போது அவருடைய வருத்தம் தெரிகின்றது. இந்தப் பிறவியில் உள்ள துன்பங்களை எண்ணி அவ்வாறு மனம் நொந்து கூறியுள்ளார். மாயையில் இடுவதாவது ஆன்மாவை உடம்பிலும், உலகத்திலும் உலகப் பண்டங்களின் சூழலிலும் இட்டதாகும். உலகில் அகப்பட்டுக் கொண்ட ஆன்மாவை ''ஆறு கோடி மாயா சத்திகள்'' வந்து பிய்த்துக் கொள்கின்றன; சூழ்ந்து கொண்டு கவருகின்றன.

மாயையைக் கொண்டு ஆன்ம வளர்ச்சிக்காக இறைவன் பல கருவிகளைச் செய்து கொடுத்துள்ளான். அக்கருவிகளுக்குத் தத்துவங்கள் என்று பெயர். இவற்றினிடையே நம்மை விடுவது நம்முடைய அறியாமை தேய்வதற்காகவே. உடம்புக்கு வந்தாலன்றி, அறியாமை தீய்க்கப் பெறாது; தெளிவு பிறக்காது.

தெளிவு பிறத்தல் என்பது ஞான ஒளி தோன்றுவதாகும். அது தோன்றும்வரை மல இருள் நம்மைக் கௌவி இருக்கும். அந்த இருளில், உடலும், உலகப்பண்டங்களும், ஞாயிறு முதலியனவும் விளக்குகளைப் போன்று உதவுகின்றன. இவ்விளக்குகளால் அறியாமை இருள் சீய்க்கப்படுகிறது. பல விளக்குகள் கொடுக்கப்பட்டிருப்பது பேரிருளைப் போக்குவதற்காகும். இருட்டு இருப்பதனால்தான் விளக்கு வைத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. அருணகிரியார் வருத்தப்படுவது எதற்காக எனின், ''இருட்டிலே வாழ்வதற்கு விளக்கினைக் கொடுத்தனையே, விளக்கின் தேவை இல்லாதபடி நீயே என்னுள் ஒளியாக வந்திருக்கலாமே, அதற்கு நீ அருளவில்லையே'' என்பதாகும்.

''விளக்காகிய உடலையும் உலகப்பண்டங்களையும் வைத்துக் கொண்டு இருளில் எவ்வளவு காலம் வாழ்வது? கோடி விளக்குகளை வைத்தாலும் இருளைப் போக்க முடியுமா? ஞாயிறு தோன்றினால் புற இருள் தானே நீங்கிவிடும். அப்பொழுது விளக்குகள் தேவைப்படுவதில்லை. அதைப்போல நீயே என்னுள் விளங்கி என்னுடைய அக இருளாகிய அறியாமையைப் போக்குவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தபோது, நீ என்னை மீண்டும் விளக்காகிய இவ்வுடலைக் கொடுத்து இருள் சூழ்ந்த மாயை வாழ்வுக்கு அனுப்பிவிட்டனையே! என் அறியாமையைப் பொறுத்துக் கொண்டு என்னுள்ளே ஒளிவிடாமல் போய்விட்டனையே!'' என்று நொந்து வருந்திக் கேட்கின்றார்.

பிறவி எடுப்பதில் பல துன்பங்கள் இருக்கின்றன. ஆன்மாவுக்குள்ள சிறிதளவு உணர்வும் மாயையால் மறைக்கப்படுகிறது. தாய் வயிற்றில் இருக்கும்போது இருக்கும் தெளிவுகூடப் பிறந்தபின் இருப்பதில்லை. பிறந்த உடனே மாயாசத்திகள் சூழ்ந்து கொள்கின்றன. கருவிலிருக்கும்போது மற்றவர்கள் சொல்வது குழந்தைக்குக் கேட்கிறது. (அதனால் கருக்கொண்ட மாதரிடம் விழிப்பாய் இருக்க வேண்டும். ஆறுமுதல் எட்டு மாதம் வரை தாய்வயிற்றில் குழந்தை மிகத்தெளிவாக இருக்கும்). பிறந்தபின் உண்டாகும் பல துன்பங்களை எண்ணி ''என்னைப் பிறக்க வைத்தனையே, நீ என்னுள் விளங்கி, என் பிறவியைத் தடுத்திருக்கக் கூடாதா'' என்னும் தம் குறையைத் தெரிவித்துக் கொண்டார்.

இனி, ''பொல்லேன்'' என்னும் சொல்லுக்குப் பொல்லாதவன் என்று ஒரு பொருள் உண்டு. மற்றும் ஒரு பொருள் இருக்கிறது. அது மாறாத நிலையில் இருப்பவன் என்பதாகும். பொல்லேன் என்பது ''பொள்ளேன்'' என்பதன் திரிபாகும். பொள்ளுதல் என்றால் செதுக்குதல் அல்லது திருத்தம் செய்தல் என்று பொருள். கல் தச்சனால் உளி கொண்டு திருத்தம் செய்யப்படாத பிள்ளையார் திரு உருவுக்குப் ''பொல்லாப்பிள்ளையார்'' (அதாவது பொள்ளுதல் செய்யப்படாத சுயம்பு பிள்ளையார்) என்று பெயர். (நம்பியாண்டார் நம்பிகளுக்கு அருள் செய்தவரும் பொல்லாப் பிள்ளையாராவார்). ''முன்பு ஆணவ மலத்தால் சூழப்பட்டு இருளில் எப்படி இருந் தேனோ அதே நிலையில் சிறிதும் அறிவு வளர்ச்சியின்றி இருப்பதனால் திருத்தம் பெறாத, பொள்ளப்படாத, ''பொல்லேன்'' என்று தம்மைக் கூறிக்கொண்டார்.

''பொறுத்திலையே'' என்னும் சொல்லில் 'ஏ' காரம் இரக்கத்தைக் காட்டுவதாகும்.

ஆக, அருணகிரியாருடைய கருத்து இந்த உலகில், மேன்மேலும் செல்வம் மற்றும் சாதகமான சூழல்கள் வேண்டும் என்பதன்று. இருக்கும் சூழலே நமக்குத் தேவை இல்லை; நமக்கு வேண்டுவதெல் லாம், அறியாமை இருளைப் போக்கக்கூடிய ஞான ஒளியேயாகும் என்பதாகும். பொன் வேண்டும், பொருள் வேண்டும் என்று ஆசைப்படுகின்ற நோக்கம் மாற வேண்டும் என்பதே அவருடைய அநுபவம் நிறைந்த அறிவுரையாகும். அநுபவப்பட்டு அதனால் வரும் பாட்டுக்கே அநுபூதி என்று பெயர். அப்பாட்டுப் பிறரையும் அநுபவத்தில் உய்ப்பதாகும்.

(2) மல்லேபுரி பன்னிரு வாகுவில் என் சொல்லே புனையும் சுடர் வேலவனே!

''மல்'' என்பது மற்போர். வலிமையான போர். ''மல்லே புரி'' என்பது வலிமை ஏறிய. ''வாகு'' என்பது வெற்றி. ''மல்லேபுரி பன்னிருவாகு'' என்பது வெற்றிக்குக் காரணமாகிய பன்னிரண்டு தோள்கள். உடல் பலத்தால் பெறுகின்ற வெற்றியும் பயனும் சாதாரணமானவை. அதைவிட மனோபலம் சிறப்புடையது. மனபலம் இல்லாத உடல் பலம் பேடி கை வாள் போன்றதாகும். மன பலம் இருந்தாலே உடல் பலம் சிறக்கும். மனபலத்தைவிட அருள்

பலம் மேலும் சிறப்புடையது. சூரன் எவ்வளவு பலம் பொருந்திய வன்! முருகன் குழந்தைதானே. முருகன் அருள்பலத்தால் வென்றான். அருள் பலம் இருந்தால் மற்ற எல்லாப் பலமும் வந்துவிடும்.

அருளை விளக்கும் சமயமும் ஆற்றலுடையதே. ஆனால் அதற்கு இழுக்கு வந்துள்ளது. அதற்குக் காரணம் என்ன? சமயத்தை உண்மையாக மேற்கொண்டு செயல்படாமைதான் அதற்குக் காரண மாகும். சமயம் செயற்கரும் செயல்களைச் செய்யவல்லது. ஒரு சிறு துரும்பினிடத்தும் அது ஒளிவிடக் கூடியதே. ஆனால் சமயத்தவர் உலகில் வாழத்தெரியாதவர், தொழில் தெரியாதவர், திறமை இல்லாதவர் என்னும்படி நிலைமை உள்ளது. உண்மை அதுவன்று. திருமூலர் எவ்வளவு உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார்! கரு வைப்பற்றி எவ்வளவு தெளிவு செய்துள்ளார்! சமயம் உலக வாழ்க்கைக்கு மாறானதன்று. வாழ்வை உயர்த்தி ஒளி காட்டுவதே யாகும். சமயம் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுக்கும். எல்லாவற்றுள்ளும் வல்லவராக இருக்கவேண்டு மென்பதற்காகவே ''திருவிளையாடல்'' தோன்றியது. முருகன் குழந்தை. ஆனால் விரும்பினால் விசுவரூபம் எடுப்பான். வீரன் அமைதியாய் இருப்பது அவனுடைய கண்ணியத் தைக் காட்டும். புறவலிமையால் வேலை செய்வது முரட்டுத்தன மானது. உள்ள வலிமையால் அதாவது நயத்தால் செய்வதே வீரம் ஆகும். முருகன் செய்த வேலை அருளால் செய்யப்பட்டது. அதனால் அவன் வாகுபெற்றான் (வெற்றி பெற்றான்). வாகு, வெகுமதி, வெகு என்பவை ஒரு பொருளுடையவை. வெற்றிக்கு அறிகுறி யாவது வலிமையேறிய தோள் ஆகும். ஞான வெற்றிபெற்ற முருக னுக்கு பன்னிரண்டு தோள்கள் உள்ளன.

தோள் பகைவரொடு போர் செய்வதற்கேயன்றி நண்பனுக்கு உதவி செய்யவும் வரும். அதனால் நண்பனுக்குத் தோழன் என்று பெயர் வந்தது. அன்புக்கும், அறிவுக்கும், உதவிக்கும், வெற்றிக்கும் தோள் குறிக்கப்படும்.

பன்னிரண்டு தோள் என்பது முருகனுடைய ஆறு முகங்களுக்கு ஏற்ப அமைந்தது என்பதோடு அவன் வெற்றி பெற்றதற்குக் காரணமாய் இருந்த ஞானத்துக்குச் சிறப்பு எண்ணிக்கையாகவும் உள்ளது. ஞான ஒளி பன்னிரண்டு கலைகளை உடையதாகும். எனவே முருகனுக்குப் பன்னிரு தோள்கள் என்று குறிக்கப்பட்டது. மற்றும், சூரிய கலைகளும் பன்னிரண்டே. கடலிடைக் காலை


ஞாயிறுபோல், நீல மயில்மேல் விளங்கும் முருகனுக்கும் பன்னிரு தோள்களாகிய கலைகள் உள்ளன. ஆன்ம இருள் போக, பன்னிரு கலைகளோடு முருகனாகிய ஞாயிறு ஒளிவிட வேண்டும். (பன்னிரண்டு என்னும் எண்ணிக்கை ஒரு நல்ல இலக்கமாகும். உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவர், சூரிய கலையோடு தொடர்புடைய அநாகத ஆதாரத்துக்கு இதழ்கள் பன்னிரண்டு. சிவஞானபோத நூற்பாக்கள் பன்னிரண்டு. திருமுறைகள் பன்னிரண்டு).

அடுத்து, ''என் சொல்லே புனையும் சுடர் வேலவனே'' என்பது ''என்னுடைய சொற்களை மாலையாக அணிந்து கொள்கின்ற ஞானக்கதிர்வீசும் வேற்படையுடையவனே'' என்று பொருளாகும். எல்லா வெற்றிகளும் தோளுக்கே உரியவை. ஞானத்தால் வெற்றி பெற்றாலும் மாலை தோளிலேயே அணியப்படும். அருணகிரியார் அணிவிப்பது சொல்லான மாலை. எந்த மாலையையும் தோளில் அணிவிப்பதே சிறப்பு. நாம் முருகனைப் பாடும் மாலையும் அவன் தோளில் சேரும். அருணகிரியார் ஞான ஒளியைப் பாடினார். ஞான ஒளிக்குக் காரணமான தோளில் பாமாலை பொருந்தும். முருகன் சூரனைக் கொன்று தொண்டு பண்ணியதால் அவன் தோள் வாகை சூடிற்று. ''ஞானக்கதிர்விட்டுக் கொண்டு இருக்கும் பெருமானே உன் வெற்றித்தோளில் என் பாட்டாகிய மாலையையும் சாத்துகின்றேன்'' என்றார். இந்தப்பாடலில் ஒரு நுட்பமான கருத்தும் ஒலிக்கின்றது. அதாவது: ''என் சொல் மாலையை உனக்கு அணிவிக்கின்றேன். அதனை நீ ஏற்றுக்கொள்கிறாய். என் பாட்டு மட்டும் உனக்கு ஆகும். ஆனால் நான் மட்டும் உனக்கு ஆகாதவனோ? என்னை ஏன் மீண்டும் இந்த மாய உலக வாழ்வுக்கு அனுப்பிவிட்டனை? கருணையே உருவான முருகனே! ஏனோ என் அறியாமைக்கு இளகாமல் என்னை மாயையில் தள்ளிவிட்டனை'' என்பதாகும். இது ஒரு உருக்கமான பாடல்.

III சக்கரம்

இப்பாடலில் சிறப்பிக்கப்படுவது தோள். அது செயலைக் குறிப்பதாகும். இது கிரியா சத்தியைக் குறிக்கும். அச்சத்தியின் வேலை அறியாமையைப் போக்குவதாகும். அதன் பயனாக ஞான

சூரியனாகிய முருகனின் ஒளியில் பாமாலையின் நாதம் சேர்வது பற்றிக் குறிக்கப்பட்டது. இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்து ''ஜஃ''. (சகரவர்க்கத்தின் நான்காவது எழுத்து). இதன் அதிதேவதை நாத தேவன். சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-30

செவ்வான் உருவில் திகழ்வேலவன் அன்(று)
ஒவ்வாதது என உணர்வித்ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே!

I பொழிப்புரை

செம்மை நிறமுடைய வானத்தின் உருவில் திகழ்கின்ற வேலவன் (முருகன்) அன்று, (பிரமன் சொன்னது) ஒவ்வாதது என்று (சீகண்ட உருத்திரருக்குப்) பொருத்தமான வகையில் உணர்வித்த அதனை (அதாவது ஓங்காரப் பிரணவத்தின் பொருளை) ஏற்ற வகையில் இருந்து, முறைப்படி அறிவதல்லது, வேறுவகையில் (பக்குவம் இல்லாத) ஒருவருக்குப் பொருந்தும்படிச் சொல்ல இயலுமோ? (இயலாது).

II விளக்கவுரை

(1) செவ்வான் உருவில் திகழ் வேலவன்

வேலவன் செந்நிறமானவன். அவன் காலை - ஞாயிறு பரப்புகின்ற சிவந்த வானத்தின் உருவானவன்.

நிறங்களில் சிறந்தது சிவப்பு நிறமாகும். அதற்கு அடுத்த சிறப்புடையது நீல நிறமாகும். மற்ற நிறங்கள் இவற்றுக்குப் பிந்தியவையே. வெள்ளைநிறம் எல்லா நிறங்களுக்கும் அதீதமானது. வெண்ணிறம் ஞானத்தைப் போன்றது. ஞானம் செயற்படும்போது நிறம் கொள்கின்றது. அந்த நிறம் சிவப்பாகும். ஞான உருவமாகிய முருகனும் சூரனை மாய்ப்பதாகிய செயலுக்கு வந்ததனால் செந்நிறம் பெற்றான்.

ஐம்பூதங்களில் காரியச் சிறப்புடையது தீயாகும். தீ செந்நிறம் உடையது அது மற்ற பூதங்களுக்கு நடுவே இருந்து கொண்டு, அவற்றைச் சமன் செய்து, நிலைக்க வைக்கின்ற இயல்புடையது. தீயினால் பதப்படுத்தப்பட்ட பண்டங்கள் நீண்ட நாள் இருக்கின்றன.

மண் பாண்டங்கள் நிலைத்திருப்பதற்குத் தீயே காரணமாக உள்ளது. தீ மாசில்லாதது. மற்றவற்றையும் தூய்மைப்படுத்துவது. தீயில் வெந்தபொருள் இறுதிப் பக்குவத்தைப் பெற்றுவிடுகிறது. திருநீறு அந்த நிலையைப் பெற்றதாகும். இவ்வாறு தீ பல தகுதிகளைப் பெற்றிருப்பதனால்தான், இறைவன் வெளிப்பட நேரும்போது தீ உருவில் செந்நிறமாய்த் தோன்றும் வழக்குண்டாயிற்று. அதனாலேயே வேலவனும் தீ உருவில் தோன்றி செந்நிறம் பெற்றான்.

(2) அன்று ஒவ்வாது என உணர்வித்ததுதான் அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்

ஞானத்தின் உருவாகிய முருகன் தோன்றினான் என்றால், ஏதோ செயல் செய்ய வந்தான் என்று பொருள். அவன் செய்த பல செயல்களுள் பிரமனைச் சிறையில் இட்டது ஒன்றாகும். பிரமன் ஒரு காலத்தில் செருக்குற்றிருந்தான். அதனை ''அன்று'' என்னும் சொல்லால் அருணைகிரியார் இங்குக் குறிப்பிட்டுள்ளார். அதை உணர்ந்த முருகன் பிரமனை அழைத்து ''உனக்குப் **பிரணவத்தின்** பொருள் தெரியுமா?'' என்று கேட்டான். பிரமன் தெரியாதவன் ஆதலால், விடை கூற முடியாமல் விழித்தான். எனவே அவனை முருகன் சிறையில் அடைத்தான்.

பிரமன் சிறையில் அடைபட்டதனால், படைப்பு வேலை நின்றுவிட்டது. அதன் விளைவாகக் காத்தலும், அழித்தலுங்கூடத் தடைபட்டன. எனவே திருமாலும் சீகண்ட உருத்திரரும் முருகனைக் கண்டு ''ஏன் பிரமனைச் சிறையிலிட்டனை?'' என்று கேட்டனர். ''பிரமனுக்குப் **பிரணவத்தின்** பொருள் தெரியாததால் சிறைப்படுத்தினேன்'' என்று முருகன் கூறினான்.

''உனக்குத் தெரிந்தால் சொல்லுக'' என்று சீகண்ட உருத்திரர் கேட்டார். அதற்கு முருகன் ''இருக்கும்படி இருந்து கேட்டால் சொல்லுகிறேன்'' என்றான். உருத்திரரும் அவ்வாறே விதிப்படி இருந்து உபதேசப்பொருளைக் கேட்டுக்கொண்டார்.

இப்புராண நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டுவது என்னவெனின் உபதேசப் பொருளைத் தன் மகனே (சீகண்ட உருத்திரரின் தவத்தில் தோன்றியவர் முருகக் கடவுள் ஆவார்)சொல்லுவதானாலும் அடக்க ஒடுக்கத்தோடு கேட்க வேண்டும் என்பதாகும். 'அடக்கம்' என்பது புலனடக்கம்; ''ஒடுக்கம்'' என்பது கேட்கும்

பொருளில் உணர்வை ஒடுக்கி இருப்பதாகும். அடக்க ஒடுக்கம் இல்லையானால், **'உபதேசம்'** விளங்காது. பலகால் கேட்டாலும், அது உணர்வில் பதியாது. மற்றும் ஒரு பொருளைக் குறிப்பிட்ட ஒருவர் சொல்லி அது முறைப்படிக் கேட்கப்படுமானால், உடனே புரிந்து விடும்; உணர்வும் வரும். சொல்லுபவர் ஞானாசிரியராக இருந்தால், இது நிகழும். ஞானாசிரியர் கூறுவதைக் கேட்கும்போது ஒரு புத்துணர்ச்சியும் உண்டாகும். அப்புத்துணர்ச்சி அநுபவத்தைத் தரும்.

அநுபவம் என்பது வெறும் பேச்சன்று. அது உணர்வதாகும். அது சுட்டிக்காட்டக்கூடிய ஒரு உருவமுடைய பொருளன்று. உபதேசப்பொருள் புறத்திலுள்ள கல்வி, கலை, திறமை ஆகியவற்றைக் கடந்ததாகும். உபதேசத்துக்கும் இவற்றுக்கும் ஒவ்வாது. அது அருள் வெளியில் உணரத்தக்கது. ''ஒவ்வாதது'' என்னும் சொல் மற்ற எந்த நிலைக்கும் பொருந்தாது என்று பொருள்படும். அவ்வுபதேசப் பொருள் நம் முயற்சியால் எட்டக்கூடியதன்று. எனவேதான், ஞானத்தைப் பெறுவதோ, ஈசனைப் பெறுவதோகூட நம் ஆசையாக இருக்கக்கூடாது என்றனர். அதாவது உபதேசப்பொருளைப் பெறுவதற்காகக் குருவைத் தேடுவதுகூட நம் விருப்பமாக இருக்கக்கூடாது என்பதாகும். நம் முயற்சி எல்லாம் நல்ல செயல்களைச் செய்துகொண்டு இருப்பதோடு முடிவடைய வேண்டும். அதாவது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றில் முறையாக ஈடுபட்டால், அதுவே போதுமானது. அவ்வாறு ஈடுபடுவோருக்கு உபதேசப் பொருளைச் சொல்லுவதற்குச் சற்குரு ''வாய்க்கும்'' என்றனர். வாய்ப்பதென்பது தற்செயலாக நிகழும் நிகழ்ச்சி. அது முயன்று பெறுவதன்று.

உபதேசம் என்பது ஒன்றுசேர்தல், அல்லது முடிந்த இடம் (அதாவது ஆன்மா, தன்னை மறந்து தன் முயற்சி அவிந்த நிலை) என்று பொருள்படும். அது சீவன் சிவநிலையைப் பெறுகின்ற நிலையாகும்.

உபதேசத்தால் ஆன்ம அறிவு அருளால் நிரப்பப்படுகிறது. அந்த நிலையில், புறத்தில் வந்து அநுபவப்பட்டு ஒன்றை அடையவேண்டும் என்பது இல்லை. உபதேசம் எல்லாச் சிறப்புகளையும் ஒரு நொடியில் அமைத்துத் தருகிறது.

''அவ்வாறு அறிவார்'' என்றது முறைப்படி அறிவார் என்ப தாகும்.

(3) எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?

ஞான அநுபவத்தை ஒருவர்க்கு எடுத்துச் சொல்வது இயலாது. ''இசைவிப்பதென்பது இணக்குவது அல்லது ஒன்றாக்குவது ஆகும். ஒரு நெறியில் நாம் ஐக்கியப்பட வேண்டும். அந்த நெறி பெருநெறியாகவும், அருள்நெறியாகவும், திரு நெறியாகவும் இருக்க வேண்டும். நாலுபேர் ஒன்றுபடும்போது, உபதேசத்துக்குரிய பக்குவம் வருகின்றது.

மனித இனத்தைச் சாதிமத பேதங்களால் பிரித்துப் பார்க்கா மலும், எல்லா ஆன்மாக்களையும் ஒத்த நிலையில் காணவும் வல்லார்க்கு உபதேசம் கைகூடுகிறது. இந்த நிலையைப் பேதமில்லாத கற்புநிலை என்பர். அவ்வாறு ஒன்றி, இணங்கும் பக்குவம் வந்தால், இன்பம் தானே பொங்கி எழும்.

இனி, 'ஒவ்வாதது' என்னும் சொல் 1) பிரமன் சொன்னது ஒவ்வாது என்றும், 2) பிரமனுக்குச் சொல்லுவது ஒவ்வாது என்றும் இரண்டு வகையில் பொருள்படும். அவனுக்கு உணர்த்துவது ஒவ்வாதது என்பதற்குக் காரணம் - அவன் அடக்க ஒடுக்கத்தோடு இல்லாமல், செருக்குற்று இருந்தான் என்பதாகும்.


இனி, இச்செய்யுளில் 'பிரமன்' என்னும் பெயரும், 'சீகண்ட ருத்திரர்' என்னும் பெயரும் வரவில்லை. வராமையால் இதற்கு வேறு ஒரு பொருளையும் சொல்லலாம்படி உள்ளது. அது என்னவெனின் - 1) அருணகிரியாரின் இளமைக்காலத்து நிலையை எண்ணி, ''நீ இவ்வாறு நடப்பது ஒவ்வாதது'' என்று முருகன் கூறியதாகும். மற்றும் 2) அருள் பெற்ற பிறகு, அந்த அநுபவத்தை இருக்க வேண்டிய முறையில் இருந்து அறிவதல்லது பக்குவம் இல்லாத ஒருவருக்குச் சொல்ல இயலாது என்று அருணகிரியார் சொல்வதாகக் கொள்ளலாம்.

ஆக, இப்பாடலில் ஞான அநுபவத்தைப் பிறர்க்கு எடுத்துச் சொல்ல இயலாது என்பதனையும், அதனை இருக்க வேண்டிய முறையில் இருந்து தெரிந்துகொள்ள வேண்டும் என்பதனையும் உணர்த்தினார்.

III சக்கரம்

இப்பாடல் ஞானத்தைப்பற்றி பேசுகின்றது. ஞானம் என்பதும் சத்தி என்பதும் ஒன்றே. சத்தி செயல்படும்போது இச்சை, கிரியை, ஞானம் என்று மூன்றாகப் பிரிந்து உலகியலை நடத்துகின்றது. அது இறைவனிடம் ஒன்றி இருக்கும்போது அதற்குப் பராசத்தி என்று பெயர். பராசத்தி ஆண்டவனிடம் ஒடுங்குதலும், தன்னிடத்தில் ஆண்டவனை ஒடுக்கிக் கொள்வதுமாக இருக்கும். ''ஞானத்தால் வீடு'' என்னும் தொடர், பராசத்தி வழியாக இறைவனைப் பெறுவதைக்குறிக்கும்.

பராசத்தியை, அதாவது ஞானத்தைக் குறிக்கின்ற எழுத்து 'ஞ'கரம் ஆகும். 'ஞ'கரம் எழுத்துக்களில் மிக மெல்லியதாகும். இது பராசத்தி இறைவனோடு ஒன்றிய நிலையைக் குறிக்கின்றது. உலகியலில் இறங்கி வேலை செய்யும்போது பராசத்தி மிகவும் கடுமையாகி, மதம் பிடித்த யானை போன்று அடக்க இயலாததாய் இருக்கும். அதே யானை தன்னைக் குளிப்பாட்டும் பாகனிடம் இணக்கமாய் இருந்து குளிக்கும்போது குழந்தையைப் போல மென்மைத் தன்மையை அடைகின்றது. இந்தப்பாடல் அந்த அடக்கமும் மென்மையும் உள்ள ஞானத்தை அறிந்து கொள்வதைப் பற்றிக் கூறுவதனால் இப்பாடலின் சிறப்பெழுத்து 'ஞ'கரம் ஆகின் றது. எனவே இப்பாடலுக்கான சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-31

பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே!
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ! மயில் வாகனனே!

I பொழிப்புரை

அழிகின்ற இயல்புடைய வாழ்வு என்று கூறப்படும் மோசமான இந்த அசத்த மாயையில் வீழும்படியாக என்னை விதித்தனையே! மயில் (சுத்த மாயை) மேல் வீற்றிருக்கும் முருகப்பெருமானே! உனக்கு நான் தாழ்வான செயல்கள் எவையேனும் செய்ததுண்டோ? இனி நீயே வாழ்ந்து போவாயாக!

II விளக்கவுரை

(1) பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே வீழ்வாய் என என்னை விதித்தனையே!

அருணகிரிநாதர் 29வது பாடலில், ''என் அறியாமையைப் பொறுத்துக் கொள்ளாமல் நிலையில்லாத மாயையில் இட்டனையே'' என்று வருந்தினார். இந்தப் பாடலில் ''நான் உனக்கு என்ன தவறு செய்தேன்? என்னை இந்த மோசமான மாயையில் தள்ளிவிட்டாயே'' என்று கேட்பதோடு, ''இனி நீயே வாழ்ந்துபோ'' என்று நிஷ்டூரமும் பேசுகிறார்.

மாயையில் இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அந்தச் சூழலை ஒட்டிவிட வேண்டுமென்று ஆத்திரப்படுகிறார்.

மாயை வாழ்வு அழுக்குடையது. மாயை மூன்று பிரிவுகளை உடையது. அவற்றுள் இரண்டு பிரிவுகள் அழுக்கானவை என்றும் ஒரு பிரிவு அந்த இரண்டைவிட்த் தூயதென்றும் பிரிக்கப்பட்டுள்ளது. ஆன்ம தத்துவும் (24), வித்யா தத்துவம் (7) ஆகியவை அழுக்குப் பகுதியில் சேர்ந்தவை. சிவ தத்துவம் (5) தூய பகுதியாகும்.

தனியாக ''மாயை'' என்று சொன்னால் அது சாத்திரப்படி அசுத்த மாயையை (அதாவது ஆன்ம, வித்யா தத்துவங்களை)க்குறிக்கும். ''சுத்த'' என்னும் சொல்லைச் சேர்த்துச் சொன்னால்தான் தூய பகுதியைக் குறிக்கும். அருணகிரியார் ''மாயை'' என்பதோடு நிற்காமல் ''படுமாயை'' என்று வெறுப்புடன் கூறுகிறார். மேலும் அதற்கு ஒரு விளக்கமும் தருகிறார். அது ''பாழ் வாழ்வை''த் தருவது என்பதாகும். பாழ்வாழ்வு நிலைத்த வாழ்வன்று. அது அழிந்து கொண்டே இருக்கும் தன்மையுடையது. மற்றும் ''வீழ்வாய்'' என என்னை விதித்தனை என்றதால் தாழ்ந்த இடத்தில் அழுத்திவிட்டனை என்னும் குறிப்பும் உள்ளது. அத்தாழ்ந்த இடம் அசுத்த மாயையேயாகும்.

இனி, அழுக்கு மாயைக்கு வந்துவிட்ட பிறகு அதிலிருந்து விடுபட்டுத் தூய்மை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பார்க்க வேண்டும். அதற்குத் தூய மாயைப் பொருள்கள் எவை என்பதனை அறிந்து இறையருளால், பத்தியோடு, அப்பொருள்களுடன் பழகி வந்தால் தூய்மை பெறலாம்.

மாயையின் தூய பகுதியாகிய சிவ தத்தவங்கள் ஐந்தனுள், மிகவும் தூய்மையானது நாதம். அதற்கு அடுத்தது விந்து. நாதம் என்பது ஒலி. விந்து என்பது ஒளி. இந்த இரண்டும் சேர்ந்தது பொருள் ஆகிறது. அதுவே சாதாக்கியம் என்றும், சதாசிவம் என்றும் இலிங்கம் என்றும் பெயர்பெறும். (சாதாக்கியம் என்னும் சொல்லுக்குச் சதா புகழப்படுவது என்று பொருள்). நாதமும் விந்துவும் சம அளவில் சேர்ந்ததே சாதாக்கியம் (இலிங்கம்) ஆகும். விந்து மிகுதியாகவும் நாதம் குறைவாகவும் சேர்ந்ததற்கு ''ஈசுவர தத்துவம்'' என்று பெயர். நாதம் மிகுந்து விந்து குறைந்த சேர்க்கைக்குச் ''சுத்த வித்தை'' என்று பெயர்.

நாதமாகிய சொல்லும், அது குறிக்கின்ற பொருளும் சேரும் போது இன்பம் உண்டாகின்றது. வாழ்த்திக்கூறும் சொல் இல்லாமல் வெறும் பண்டத்தை மட்டும் ஒருவருக்குக் கொடுத்தால் அவர் மகிழ்ச்சியடைய மாட்டார். வாழ்த்தோடு பெறும்போது மிக மகிழ்வார். மந்திர ஒலியோடு தாலி கட்டிய திருமணம் மகிழ்ச்சியில் சிறக்கும்.

ஈசுவர தத்துவத்தில் பேச்சு குறைவாகவும் பண்டங்கள் மிகுந்தும் இருக்கும். அதில் செயல் மிகுதியாக இருக்கும். சுத்த வித்தையில் செயல் குறைவாகவும் சொல் அதிகமாகவும் இருக்கும்.

அண்ட பிண்டப் பொருள் எல்லாமே இந்த நாத விந்துவின் சேர்க்கையால் ஆனவையே. நம் உடம்புகளில் இந்த இரண்டும் தவிர மற்றவை எல்லாம் அசத்த மாயையைச் சேர்ந்தவை.

நாதம் தூய வாக்காக (சொல்லாக) வெளிப்படும். விந்து நல்ல ஒளியாக வெளிப்படும். இவ்விரண்டும் பண்டங்களில் சேரும்போது அப்பண்டங்கள் அழுக்கானவைகளாக இருந்தால் நாத விந்துக்களின் தூய்மை குறையும். மற்றப்படி அவ்விரண்டும் தூயவையே. ஒலி ஒளிகள் சேரும் இடங்களும் அவ்வாறே அவற்றின் தூய்மை நிலையைத் தாழ்த்தவும் உயர்த்தவும் செய்கின்றன. திருக்கோயிலில், தேவார இசையும், ஒளி விளக்குகளும், வண்ண மலர்களும், மந்திரச் சொற்களும், தூய நீரும் சுத்த மாயையைச் சேர்ந்தவை. அறமும், நீதியும், ஒழுங்கும் மற்றும் அருளைப் பாடுவோரும், அருளால் பாடுவோரும், சுத்த மாயையைச் சேர்ந்தவர்களே.

பொன்னும், பொருளும், கலையும், படிப்பும் மற்றும் கவிஞரும், எழுத்தாளரும் அசுத்த மாயையைச் சேர்ந்தவர்கள். தீ (விந்துவைச் சேர்ந்து) சுத்த தத்துவத்தைச் சேர்ந்ததானாலும், அது விறகில் எரிந்து குளிர் காய்வதற்கோ, வீட்டைக் கொளுத்தவோ பயன்படும்போது அசுத்த தத்துவத்தைச் சேர்ந்ததாகிறது. அதுவே சமித்தில் எரிந்து ஓமத்துக்குப் பயன்படும்போது சுத்த தத்துவத்தைச் சேர்ந்ததாகிறது. அருட்பாடல்களைப் பாடுவோர் சுத்தராவர். மற்றவற்றைப் பாடுவோர் அசுத்தராவர். தன்னறிவால் ஆற்றல் தோன்ற எழுதுவோரும் அசுத்தரே. நிலைமாறுபவை அசுத்தத்தைச் சேர்ந்தவை. இவ்வாறே மற்ற எல்லாவற்றிலும் இந்தப் பிரிவினைக் காணலாம்.

மாயையில் ஒலியும் ஒளியுமே மிக உயர்ந்தவை, தூய்மையானவை, நுட்பமானவை. இவற்றோடு பழகிக்கொண்டு இருந்தால் நாமும் தூயோராகலாம்.

நாத விந்துகளில் பழகாமல், மற்ற தாழ்ந்த தத்துவங்களில் பழகுவோமானால் இறைவன் படுமாயையில் வீழும்படி விதித்து விடுகிறான். குடித்தனத்தை ஒழுங்காக நடத்தாமல் போனால், உயர்ந்து போவதற்கு மாறாகக் கெட்டுப் போவதைக் காண்கின்றோம்.

அவ்வாறே நமக்குக் கொடுக்கப்பட்ட மாயைப் பண்டங்களைச் சரிவரப் பயன்படுத்தாமல் தீய வழியில் போனால், மிகவும் அசுத்தமான வாழ்வில் அழுந்திவிடும்படி விதித்துவிடுவான். இறை வன் விதிக்காமல் நமக்கு நல்லது கெட்டது வராது.

(2) தாழ்வானவை, செய்தன தாம் உளவோ? வாழ்வாய் இனி நீ! மயில் வாகனனே!

தாழ்ந்த மாயைப் பிறவியை நீ எனக்கு விதிக்கும்படி, உனக்கு என்ன தவறு செய்து வட்டேன்? என்று கேட்கின்றார். ''நீ செய்தது நியாயமா?'' என்று கேட்பதாக அமைந்துள்ளது. ''நான் நாத விந்துக் களோடு பழகிக்கொண்டு இருக்கிறேன் (அதாவது நாள்தோறும் விளக்கு வைத்து, உன் புகழைப் பாடிக்கொண்டிருக்கிறேன்), அப்படி இருந்தும் பாழ்வாழ்வாகிய மாயை வாழ்வில் வீழ்த்திவிட்டனையே'' என்று வருந்துகிறார்.


இருட்டு எவ்வளவு நாள் செறிந்திருந்தாலும் விளக்கு வந்த உடனே போய் விடும். அதுபோல ''நான் எவ்வளவு பாவங்கள் செய்திருந்தாலும் உன் திருவருளால் அவற்றைப் போக்கி விடலாமல் லவா?'' என்று கேட்பது போலவும் உள்ளது. தம்மைக் காப்பதற்கு வாய்ப்பிருந்தும் மாயையில் வீழும்படிச் செய்ததனால் ''நீ வாழ்ந்து போ'' என்றும் கூறிவிட்டார்.

அடுத்து, மயில் வாகனனே என்பதில், முருகன் சுத்த மாயையில் விளங்குபவன் என்னும் குறிப்பும் உள்ளது. மயில் சுத்த மாயையின் அடையாளம் ஆகும். மயிலை வாகனமாகக் கொண்டவன் என்பத னால், முருகன் மாயையைக் கடந்தவன் என்பது விளங்கும். மயில் பல நிறங்களோடு மின்னும். அது தோகையை விரித்தால் (வட்டமிட்டால்) ஓங்கார உருவில் காட்சி தரும். அதாவது நாதம் சூக்குமமாகவும், விந்து விளக்கமாகவும் மயிலில் காணப்படுகின்றன. மயிலை வாகனமாகக் கொண்டவன், தன்னையும் சுத்த மாயைக்கு உயர்த்த வேண்டுமென்பது கருத்து.

ஆக இப்பாடலில், அசுத்த மாயையிலிருந்து விடுபட வேண்டு மென்பது குறிக்கப்பட்டது.

III சக்கரம்

பாழ் வாழ்வெனும் மாயையில் இருந்து விடுபடுவதற்கு ஒலியாகிய மந்திரங்கள் உதவுகின்றன. மந்திரங்களைத் தவறு இன்றி ஒலிக்க வேண்டும். மந்திரங்களை ஒலிக்க இயலாதவர்கள் அருட் பாடல்களைப் பத்தியோடு பாடினால் மாயையிலிருந்து விடுபடலாம். ஒலிகள் மூலாதாரத்தில் தோன்றினாலும், இதயத்தில் வடிவுகொண்டு வல்லமை பெறுகின்றன. இதயத்தில் வல்லெழுத்துக்கள் தோன்றுகின்றன. அவை பருமனானவை. நிலைத்த தன்மை (ஸ்திரத் தன்மை) உடையவை. அவற்றுள் ('ட')மிகவும் பருமனானது. முரடு, கரடு, அடே, படி முதலிய சொற்களில் அதன் இயல்பைக் காணலாம். மந்திரங்கள் ஏழு வகையான முடிவுகளை உடையவை. அவற்றுள் ''பட்'' என்னும் முடிபும் ஒன்று. முடிபுகளைக் கோடி என்பர். (அதனால் மந்திரங்கள் ஏழு கோடி என்பர்). ''பட்'' என்னும் முடிபு ஒன்றை ஒட்டுவதற்குப் பயன்படும். இந்த முடிபு உடைய மந்திரங்களால் பேயை ஒட்டுவர். அவ்வாறே அசுத்த மாயையையும் 'ட' கரத்தால் ஒட்டலாம். எனவே இப்பாடலின் சிறப்பெழுத்து 'ட'கரமாகும். இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-32

கலையே பதறிக் கதறித் தலையூ(டு)
அலையே படுமாறு அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே மலை கூறிடு வாகையனே!

I பொழிப்புரை

(முருகா) கலையையே பெரிதென்று எண்ணிப் பதற்றத்துடனும் அலறிக்கொண்டும் அதன் மயக்கத்திலேயே இருந்துகொண்டும் அலைந்துகொண்டும் மேல் நிலைகளுக்குப் போகாமல் அதோடு நின்று விடுவதோ? கொலைபுரியும் வேடர் குலத்து வள்ளிப்பிராட்டியை (அவர்களிடமிருந்து மீட்டு), மணந்த மலை போன்றவனே! கிரவுஞ்ச மலையைப் பிளந்தவனே! வெற்றி வாகை சூடியவனே!

II விளக்கவுரை

(1) கலையே பதறிக் கதறித் தலையூடு அலையே படுமாறு அதுவாய்விடவோ?

''கலை'' என்பது கல்வி. அதற்குப் பிரிவு என்றும் பொருள் உண்டு. அது பகுத்துப் பகுத்துப் பிரித்துப் பிரித்து ஆராய்வதாகும். மான் கொம்புக்கும் ''கலை'' என்னும் பெயர் உண்டு. ஏனென்றால் அது கிளைத்துக் கிளைத்து வளருகிறது. பிரித்துப் பிரித்து எண்ணப்படுவன எல்லாமே கலைகள்தாம்.

''கலை'' பண்ட ஆராய்ச்சி (Science) என்றும் அழகுக் கலைகளென்றும், அருங்கலைகள் (Fine Arts) என்றும் பலவாகப் பிரிந்துள்ளன. பண்டங்களை ஆராய்வதால், மன்பதைக்குப் பயன் படக்கூடிய பல நலங்கள் விளைகின்றன. எடிசன் போன்ற பெருமக்கள் இந்த ஆராய்ச்சியால் பல புதிய கருவிகளைக் கண்டுபிடித்து உலகுக்குப் பெருந்தொண்டு செய்துள்ளார். அப்பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

ஓவியம், நாடகம், இசை முதலியனவும் கலைகளே. இவற்றுள் சிறந்தது கவிதை. கூத்துக் கலையில் இவை எல்லாமும் சேர்ந்துள்ளன. கலைகளனைத்தையும் மொத்தமாக, ஒன்றாகச் சொல்ல வேண்டு மானால் கூத்து என்னலாம். கூத்தில் உடம்பு அசைவைவிட உடம்பை இயக்குகின்ற பாட்டின் உணர்வுக்கூத்தே உயர்ந்தது. அதிலும் அருட்பாடல்கள் நம்மை அநுபவத்தில் திளைக்க வைக்கும். அருட்பாடல்களோடு நம் ஆழ்ந்த உணர்வு தொத்திக் கொள்ளு மானால், அருள் வெளியில் பறக்கலாம். எனவே அருங்கலைகளுள் திளைக்கும் நலம் வந்து விட்டால் அருள் வந்துவிடும். சரியான அருங்கலை என்றால் அது அருள்முகப்பட்டதாகவே இருக்க வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் அருட்பாடல்களைத் துருப்பிடிக்குமாறு புறக்கணித்து வைத்திருப்பது வருந்தத்தக்க செய்தி யாகும்.

பண்டத்தை. ஆராய்ந்து பார்க்கின்ற பகுத்தறிவுக் கலை, பிரித்துக் காட்டுவதால் அது வேற்றுமையை வளர்க்கும். பகையை உண்டாக் கும். ஆழ்ந்து அநுபவிக்கும் அருங்கலைகள் ஒற்றுமையை உண்டாக் கும்; மெய் மறக்கச் செய்யும்.

ஐம்பூதங்கள் ஒன்றனுக்கொன்று வேறுபட்டும் மாறுபட்டும் பிரிந்திருப்பது வெளிப்படையாய்த் தெரிகின்றது. ஆனால் அவற்றை எல்லாம் ஒற்றுமைப்படுத்திக்கொண்டு இருக்கின்ற இறைவன் அவற்றி னூடே மறைந்து இருக்கின்றான். ஆண் பெண் உடம்புகள் வெளிப்படையாய்ப் பிரிந்துள்ளன. ஆனால் அவர்களை ஒற்றுமைப் படுத்தும் காதல் உணர்வு மறைந்துள்ளது. எனவே எதையுமே ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், கண்ணுக்குக் காணப்படும் வேற்றுமைகளுக்குள் ளாக ஒரு ஒற்றுமை அழகும் தெரியவரும். அந்த ஒற்றுமையைத் தெரிந்தவரே இறைவனை அறியமுடியும். குடும்பத்தைப் பிரிப்பது மிக எளிது. இணைப்பது அருமை. பிரிந்தவர்கள் ஒன்று சேரும்போது இன்பம் உண்டாகிறது. பிரிந்து ஆனால் அப்பிரிவினுள்ளே ஓர் ஒற்றுமை இருப்பதற்கு ''ஊடல்'' என்று பெயர். அது உவகையைத் தரும். ஊடல் உவகையைப் பெறுபவரின் ஒற்றுமை மறைவாக இருக்கும்.

ஆக, எந்தப் பொருளைப் பார்த்தாலும, அதனுள்ளே மறைந்து இருக்கின்ற ஒற்றுமைப் பொருளைக் காண வேண்டுவது அவசியம் ஆகின்றது. ஒரு பண்டத்தின் அழகைப் பார்த்தாலும், அருங்கலையின்

நுணுக்கத்தைப் பார்த்தாலும் ஒற்றுமைப் பொருளைக் காண வேண்டும். மலையை, ஆற்றை, கடலைப் பார்த்தாலும், அவற்றின் சிறப்பிலே ஈடுபட்டு மயங்கினால் பயனில்லை. அச்சிறப்புகளை உண்டாக்கியவர் யார் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அறிவான முறையில் இனிமைப்படுத்திக் காட்டுவது அறிவுள்ள பொருளாகத் தானே இருக்க வேண்டும்! அறிவு கலப்பில்லாமல் இனிமை தோன்றாதல்லவா? எனவே எதைப்பார்த்தாலும் அதைப் ப்டைத்த அறிவான பொருளைப்பற்றி எண்ண வேண்டும். நூலைப் பார்த்தால், அதன் ஆசிரியரையும், கட்டடத்தைப் பார்த்தால் அதைக் கட்டியவரையும் எண்ணுவதைப்போலக் கலைகளைப் பார்த்தால் அதனுள் இறைவனைக் காண வேண்டும். அவ்வாறு காணாமல், வேறு விதமாகக் காண்பவருடைய பிறவி வீணேயாகின்றது.

பண்டங்களினூடேயும், கலைகளினூடேயும் மறைந்துள்ள இறைவனை உணராதபோது மனிதனுக்கு அமைதி கெடுகிறது. பதறுதலும், கதறுதலும் அலைதலும் உண்டாகின்றன.

''தலையூடு'' என்பது தலைவழியே உண்டாகும் அறிவு மயக்கத்தைக் குறிக்கின்றது.

''அதுவாய்விடவோ?'' என்றது, ''பதறுதலும், கதறுதலும், மயங்குதலும் அலைதலும் என் நிலை ஆக வேண்டுமோ? என்பதாகும். அதற்கு உயர்ந்த தெய்வ நலம் பொருந்திய அநுபவங்கள் வேண்டாவோ? முருகா எனக்கு உயர்ந்த அநுபவங்கள் வரும்படி அருள்வாயாக'' என்று வேண்டிக்கொண்டதாகும்.

(2) கொலையே புரி வேடர் குலப் பிடிதோய் மலையே! மலை கூறிடு வாகையனே!

எல்லாக் குற்றங்களையும் விடப் பெரிய குற்றமாகிய கொலையைச் செய்கின்ற வேடர் குலத்துப் பெண்ணாகிய வள்ளிப்பிராட்டியை முருகன் மணந்து கொண்டான். இந்த சம்பந்தம் நன்றாக இல்லை என்று தோன்றும். வள்ளி இருந்த இடம் சரியானதன்று என்பதைக் குறிக்கவே ''கொலையே புரி'' வேடர் குலம் என்று வந்தது. இறைவன் தகாத இடமாகிய மாயையிலிருந்து ஆன்மாவை எடுத்துக் கொள்வான் என்னும் உண்மையை விளக்கவே வள்ளியின் சூழல் இங்கு அவ்வாறு குறிக்கப்பட்டது. வேடர்களின் எண்ணத்துக்கு அகப்படாத வள்ளியை முருகன் மீட்டான் என்று கொள்ள வேண்டும்.

முருகனைப் போலவே ''கொலையே புரி''வாரிடமிருந்து யாரையும் நாம் பிரிப்போமானால் அது தவறாகாது. கொலைஞரும் புலையரும் (புலால் உண்போரும்) ஒரு வகையைச் சேர்ந்தவர்களே. கொலை புரிபவர் இறையருளுக்குத் தகுதி இல்லாதவர் ஆவர். மக்கள் புலையை விட்டால் கொலை நிகழாது. முதலில் கொல்லாமை விரதத்தை மேற்கொண்டால்தான் தவமும், ஞானமும், அருளும் எல்லாம் வரும். திருவள்ளுவர் அதனாலேயே திருக்குறளின் விரதப்பகுதியில் முதலில் புலால் மறுத்தலையும், கடைசியில் கொல்லாமையையும் வைத்துள்ளார். அரும்பெரும் கல்வியாளரும் புகழ் படைத்தவரும் புலால் உண்ணுவோரிலும் இருக்கின்றனர் என்பது உண்மைதான். என்றாலும் அவர்கள் குறையுடையவர்களே. ஏனென்றால் அவர்களால் அருள் நிறைவைப் பெற முடியாது. ''ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்''? என்று கேட்கிறார் திருவள்ளுவர். கொலைக்கும் புலைக்குமான தண்டனையைப் பெற்ற பின்னரே அவர்கள் அருளைப் பெறுவர். கண்ணப்பரே இதற்குச் சான்றாவார். அருள் நாட்டம் உடையவர்கள் புலாலை மறுக்க வேண்டும். நமக்குக் குறிக்கோள் ஆகிய அருளைப் பெறுவதுதான் பெரிது. புலால் உண்பதாகிய சிறுசிறு வசதிகள் பெரிதாக மாட்டா.

கொலை புரியும் வேடர்கள் தாம் விரும்பும் விலங்கு அல்லது புள்ளினத்தைக் கொன்று எடுத்துக்கொள்வர். கொள்ளைக்கும் வேட்டை என்ற பெயர் உண்டு. ''வேள்'' என்பதைப் பகுதியாகக் கொண்ட ''வேட்டை'' என்னும் சொல்லுக்கு விரும்பி எடுத்துக்கொள் வது என்று பொருளாகும்.

புலாலை உண்பவர் புலையர்; அதைப்போலவே, உடலைச் சம்பந்தப்படுத்தி, சதைக்காக ஒருவரை விரும்பினாலும், புலால் உண்பவருக்கு ஒத்தவராவார். வற்புறுத்துவது கொலை செய்வதைப் போன்றதே.

ஓர் ஆன்மா தான் விரும்பிய பெற்றோருக்குப் பிறக்க வேண்டும் என்பது இயலாது. ஏனென்றால் பிறப்பு வினைக்கு ஏற்ப இறைவனால் விதிக்கப்படுவதாகும். எனவே கொலையே புரிவார் குடும்பத்திலும் ஒரு நல்ல ஆன்மா பிறத்தல் கூடும். தவறான இடமாகிய வேடுவர் இடையே இருந்தாலும் வள்ளி, முருகனுக்குப் புலால் படைக்காமல் தேனையும், தினை மாவையும் படைத்தாள். முருகன் ஓடோடியும் வந்து அவளை மீட்டுக்கொண்டான். முருகன்

வள்ளியை மீட்டுக்கொண்டதிலிருந்து வேடர் குலத்தில் பிறந்தாலும் பாதகம் இல்லை; மீண்டுவிடலாம் என்று தெரிகிறது. பிறந்த தீவினையை நினைந்து, இறைவனை வேண்டினால் அதிலிருந்து மீளலாம். மலையிலும் காட்டிலும் வேடர் குலப் பிடிபோல் வளர்ந்த வள்ளிக்கு நடந்த அவ்வருட் செயல் மற்றையோர்க்கும் மற்ற இடங்களிலும் நடக்கக்கூடியதே.

''பிடி'' என்பது பெண் யானை. அழகுக்கும் பிடி என்று பெயர். அழகை வருணிக்கும்போது ''பிடித்தெடுத்ததுபோல் இருக்கிறது'' என்றும், ''செதுக்கி எடுத்ததுபோல் இருக்கிறது'' என்றும் கூறுவர். பருமனாய் இல்லாமல் பிடியளவாய் இருப்பதனாலும் ''பிடி'' எனப்படும். அழகுக்குக் கொடிபோல நன்றாக வணங்கி அசைவதற்கு ஏற்றதாகவும் பிடியளவாய் மெலிந்து இருப்பதும் சிறப்பு. குழந்தைகள் இவ்வாறு இருந்தால், எடுத்து அளவளாவலாம். கணவனைவிட மனைவி உயரத்திலும் பருமனிலும் குறைவாய் இருப்பதே பொருத்தமாகும்.

ஒல்லியாய் இருப்பது ''பிடி''யாயிற்று என்றால் மிகவும் பருமனான யானைக்கு இப்பெயர் எவ்வாறு வந்தது என்று தோன்றும். பெண் யானைக்கு இப்பெயர் வந்ததற்குக் காரணம் அது ஆண் யானைக்கு (களிறுக்கு) ''மனப்பிடிப்பு'' உடையது என்றதினால் ஆகும். யானை உருக்கத்தோடு கூடிய மனப்பிடிப்புக்கு உரியதாகும். சங்க நூல்களில் யானை மற்றும் மான் ஆகிய விலங்குகளின் காதல் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. யானை அறிவுக் கூர்மை உடையது; கோட்பாடு உடையது, அமைதி மிகந்தது; தோற்றத்தில் பெரியது, கண்ணியமானது. சங்க இலக்கியப் பாட்டு ஒன்றில் யானையின் இயல்பு வருமாறு குறிக்கப்பட்டுள்ளது: ''ஆண் யானை காட்டில் உலவிக்கொண்டிருந்தபோது ஒரு சிங்கம் வந்தது. சிறிது தூரத்தில் இருந்த பெண் யானையைப்போய் துதிக்கையால் தழுவிக்கொண்டு இரண்டுமாக சிங்கத்தைப் பார்த்தன. சிங்கம் திரும்பி விட்டது.'' வள்ளி, யானையைப்போலக் கண்ணியமும் (பிடியைப்போலக்) கணவனுக்கு அடங்கியவளாகவும் சாந்தமானவளாகவும் இருந்தாள். கட்டுப்பட்டவள் என்னும் கருத்தும் ''பிடி''க்கு உண்டு. மற்றும் கணபதியாகிய யானையால் முருகனை அடைந்தாள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிவ பரம்பரையே யானை பரம்பரை தான். சிவமும், பார்வதியும் யானை உருக்கொண்டதாக புராணங்களில் வருகின்றது.


எனவே ''பிடி தோய் மலையே'' என்று முருகனை விளித்தார். அழகிய பிடிபோன்ற வள்ளியை மணந்த மலை போன்ற முருகனே என்றார். மனிதரில் தகுந்தவர் வந்தால் ''மலையே வந்தது'' என்பர். வள்ளி, மலைச்சாரலில் ஆயல் ஓட்டும்போது, மலையையே தழுவி, மலையிலேயே நின்றாள். அதாவது முருகனையே தழுவி, அவனிடமே இருந்தாள்.

இனி ''மலை கூறிடு வாகையனே'' என்பதில் மலை கிரவுஞ்ச மலையைக் குறிக்கும். முருகன் போர் செய்யும்போது கிரவுஞ்ச மலையைக் கூறிட்டான். கூறிடுதல் அரிதல் மட்டுமன்று; பங்கு போடுதலும் ஆம். முருகன் மலையைக் கூறிட்டான் என்பது மலையில் கொலை செய்யும் வேடரைத் திருத்தியும், செய்யாதாரை (வள்ளி போன்றவர்களை) ஆட்கொண்டான் என்றும் பொருளாகும். அவன் ஆன்மாக்களை அவரவர் தரத்திற்கேற்பப் பிரித்து ஆட்கொள்பவனாவான்.

''வாகையனே'' என்பது அசுரர்கள் போரில் வெற்றி வாகை சூடியவனே என்பதாகும்.

III சக்கரம்

இந்தப் பாடலில், குற்றங்களில் பெரிய குற்றமாகிய கொலைக் குற்றம்பற்றியும் அதிலிருந்து விலகி இறைவனை அடைவதுபற்றியும் குறிக்கப்பட்டுள்ளது. பெரிய குற்றத்திலிருந்து விலகுவதற்கு அதற்கு ஏற்ற வலிவான ''டீ'' இப்பாட்டின் மந்திர எழுத்தாகிறது. இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பகுதி IV (ii) அநாகத ஆதார சக்கரம்

அநாகத ஆதாரம் கொப்பூழுக்கு மேலும், கண்டத்துக்குக் கீழும் உள்ள மார்புப்பகுதியின் இடப்பக்கத்தில் உள்ளது. இதயம் இருப்பதும் இந்த இடமேயாகும்.

இந்த ஆதார மலரின் வடிவம் மேல் நோக்கிய முக்கோணமாகும்.


குருதியைத் தூய்மைப்படுத்துகின்ற தசையாலான இதயம் கீழ் நோக்கிய முக்கோணம் போன்று இருக்கும். அது தாமரை மொட்டு தொங்குவதைப் போன்றது. அது ஊன இதயம். ஞான இதயமாகிய அநாகத ஆதார மலர் மேல் நோக்கிய தாமரை மொட்டுப் போன்றது. அது மூலாதாரத்தில் தோன்றி மார்பகத்தில் நிமிர்ந்திருக்கும். அவ்வாறு நிமிர்ந்து எழுவதற்கு ஐந்தெழுத்துப் பாவனை செய்ய வேண்டும்.

இந்த ஆதாரத்தின் அதிதேவதை உருத்திரர் ஆவார். ஞாயிற்றின் வாயிலாக உருத்திரர் அழுக்கைப் போக்குவார். அந்தக்கரணங்களைத் தூய்மைப்படுத்துவார். மற்றும் ஒளி தருவார். உருத்திரரின் சத்திக்கு 'உருத்திரி' என்று பெயர்.

இந்த ஆதாரத்தின் நிறம் (ரத்த நிறம்) சிவப்பு ஆகும்.

இதன் சிறப்பெழுத்துச் 'சி'கரம் ஆகும். இது திருவைந்தெழுத்தின் மூன்றாவது எழுத்து. 'சி'கரத்தில் தொடங்குகின்ற ஐந்தெழுத்தாகிய "சிவாயநம" என்னும் மந்திரம் எல்லா மந்திரங்களிலும் சிறந்தது என்பது ஞானசம்பந்தர் வாக்காகும்.

அநாகத ஆதார சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

இந்த மலரில் 12 எழுத்துக்களைக் கொண்ட 12 இதழ்கள் உள்ளன. அந்த எழுத்துக்கள் க, க௦, க஡, க஢. ங, ச, ச௦, ச஡, ச஢, ஞ, ட, ட. ஆம். இவற்றுக்குரிய விளக்கங்கள் 21-லிருந்து 32 வரையான பாடல்களின் சக்கரங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

இச்சக்கரத்தில் உள்ள வட்டம் 'ஓ'ங்காரத்தைக் குறிப்பதாகும். முக்கோண வடிவமும், அதனுள் இருக்கின்ற 'சி'கரமும் இந்த ஆதார மலரைக் குறிப்பவை ஆம்.

வட்டத்துக்கும் முக்கோணத்துக்கும் இடையில் உள்ள ஒன்பது எழுத்துக்கள் மந்திர எழுத்தாகிய 'சி'கரத்தைத் தோற்றுவிக்கின்ற வித்தெழுத்துக்கள் ஆம்.

மந்திர எழுத்துத் தோன்றுவதற்கு ஞானம், கலை, பிரணவம், நாதம், விந்து, தத்துவம், கோலம், கிருத்தியம், சத்தி என்னும் ஒன்பது காரணப் பொருள்கள் உள்ளன என்பதனை முன்னமே பார்த்துள்ளோம். இவற்றின் விவரங்கள் வருமாறு:

1) வித்தெழுத்து : ஸ॰
காரணப்பொருள் : ஞானம்
விளக்கம் : மந்திரம் தோன்றுவதற்கு 'ஸ॰' ஸ்தூல ஞானமாக உள்ளது.

2) வித்தெழுத்து : ஸ॰੦
காரணப்பொருள் : ஞானம்
விளக்கம் : இது (ஸ॰੦) சூக்கும ஞானத்தைச் சேர்ந்ததாகும்.

3) வித்தெழுத்து : சிO
காரணப்பொருள் : கலை, பிரணவம்
விளக்கம் : அநாகதத்தின் கலையைக் குறிப்பது 'சி'கரம் ஆகும். அது பிரணவத்தோடு சேர்ந்து 'சிO' ஆகின்றது.

4) வித்தெழுத்து	:	சீ0
காரணப்பொருள்	:	நாதம்.
விளக்கம்	:	'சி0' ஓடு நாதம் சேரும் போது ''சீ0'' ஆகின்றது.
5) வித்தெழுத்து	:	ஊ0
காரணப்பொருள்	:	விந்து
விளக்கம்	:	மந்திரத்துக்குரிய வடிவத் தைக் குறிப்பது விந்து வான 'ஊ0' ஆகும்.
6) வித்தெழுத்து	:	வ0
காரணப்பொருள்	:	தத்துவம்
விளக்கம்	:	ஆன்மாவின் அந்தக்கரணங் கள் இங்குத் தூய்மை பெறுகின்றன. 'சி' கரத்தின் தத்துவப்பொருள் தீயாகும். தூய்மை பெறுவதை 'வ0' குறிக்கின்றது.
7) வித்தெழுத்து	:	ர0
காரணப்பொருள்	:	கோலம்
விளக்கம்	:	தூய்மைப்படுத்துகின்ற தீயின் உருவம் (கோலம்) 'ர0' ஆகும்.
8) வித்தெழுத்து	:	உ
காரணப்பொருளு	:	கிருத்தியம்
விளக்கம்	:	இந்த மந்திர எழுத்துக்கு உரிய செயல் (கிருத்தியம்) ஐந்தொழிலில் மூன்றாவ தாகிய அழித்தலாகும். சம் மாரம் தீயின் (உருத்திர னின்) செயல் ஆகும். அழிக்கும் சக்தியைக் குறிப் பது 'உ' கரம் ஆகும்.

9) வித்தெழுத்து	:	சௌ0
காரணப்பொருள்	:	சத்தி
விளக்கம்	:	இதயம் (அநாகதம்) அழித்துத் தூய்மைப்படுத்தும் இடம். தூய்மையடைந்த பின் சௌபாக்கியம் உண்டாகும். இதனைக் குறிப்பது 'சௌ0' என்னும் ஒலியாகும்.

இந்த ஆதாரத்தைத் தியானிப்பதனால் ஆன்மா தூய்மை பெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பகுதி V
விசுத்தி ஆதார மலர்

(பாட்டு 33-48)

பாட்டு-33

சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப்பெறுவேன்?
மந்தாகினி தந்த வரோதயனே!
கந்தா! முருகா! கருணாகரனே!

I பொழிப்புரை

சிந்தைக்குக் கவலை தருகின்ற இல்வாழ்க்கை, செல்வம் (மக்கள்) என்று சொல்லப்படும் விந்தையான காட்டிலிருந்து என்று விடுதலை பெறுவேன்? மந்தாகினி என்னும் கங்கை தந்தவனே! ஞான மூலத்தால் தோன்றியவனே! கந்தா, முருகா, கருணாகரனே!

II விளக்கவுரை

(1) சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும் விந்தாடவி என்று விடப்பெறுவேன்?

''சிந்தாகுலம்'' என்பது சிந்தையில் கவலை. ''இல்'' என்பது இல்வாழ்க்கை அல்லது இல்லாள் ஆகும். ''செல்வம்'' என்பது பொருள், இங்கு ''இல்''ஒடு சேர்ந்து வந்திருப்பதனால் இல்லத்தின் செல்வமாகிய மக்களையும் குறிக்கும். ஆக, இல்லம், பொருள், மக்கள் ஆகியவை கவலை தருவன.

கவலைகள் பலவாகும். அவை காட்டில் மரங்கள் அடர்ந்து இருப்பதைப்போல, சிந்தையில் செறிந்து இருப்பதனாலும், அவை விந்தையானவையாய் இருப்பதனாலும், ''விந்தாடவி'' என்றார். செறிந்த காட்டுக்கு ''அடவி'' என்று பெயர்.

இக்கவலைக் காட்டிலிருந்து நான் என்றைக்கு விடுபடுவேன் என்று முருகனை அருணகிரியார் கேட்கின்றார். புலன் நுகர்வுக்குப்

பொருள் அடிப்படையாய் இருப்பதனால், மனிதனுடைய கவலைகள் பெரும்பாலும் பொருளைப்பற்றியதாகவே இருக்கும். வறுமை இருக்கும்போது கவலைகள் மிகுந்திருக்கும். வறுமை தீர்ந்து பொருள் சேர்ந்த பிறகும் கவலைகள் தீர்வதில்லை. மாறாக முன்பிருந்ததை விடப் பெருகவும் செய்யும். அதற்காகப் பொருளைத் தேடாமல் இருக்கவும் கூடாது. அறமுறையில் எவ்வளவு தேட முடியுமோ அவ்வளவையும் தேடலாம். தேடியபின் அதைச் சரியாகச் செலவு செய்தல் வேண்டும். அதாவது அப்பொருளைக் கையாளுவது சரியாக இருக்குமானால், கவலை வராது. பொருளைச் சரியாகக் கையாளுவது என்பது அதனை அருள்முகப்படுத்துவதாகும்.

பொருளைத் தேடுவதற்கு எவ்வளவு கவனம் செலுத்து கிறோமோ அதைவிட மிகுதியாக அதனைக் கையாளுவதற்குச் செலுத்த வேண்டும். மாணிக்கவாசகர் தம்மைச் ''சிவமாக்கி''யதைச் சொன்னதோடு ''எனை ஆண்ட'' என்றும் கூறியுள்ளார். அதனால் ஆட்கொண்டமைக்கு முதன்மை கொடுக்கப்பட்டிருப்பது தெரிகிறது. அதைப்போலப் பொருளை ஈட்டிய பிறகு அதைக் கையாள்வதைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். பொருளுக்கு அடுத்து, இல்லற வாழ்வை நடத்தும்போது, வாழ்க்கையை ஒளிமயமாக்கக் கூடிய விந்துவைக் காமத்துக்கு இழந்துவிட்டால், கவலைகள் வரும். எனவே அவ்வாறு இழக்காமல் இருப்பதும் முதன்மையாகும்.

மனத்தின்வழிக் கவலைகள் வருவதனாலும், பொருளை, அருளுக்குப் பயன்படுத்தினால் கவலை வராது என்பதனாலும், மனத்தைப்பற்றியும், அருள்முகப்படுத்துவது எவ்வாறு என்பது பற்றியும், அகத்தில் நமக்கு வழிகாட்டுகின்ற தேவர்களைப்பற்றியும் சிறிது தெரிந்து கொள்வது நலம் பயக்கும்.

மனம் ஐம்புலன்களின் வழியே செய்திகளைக் கொண்டுவருகி றது. அது புலன்களுக்குத் தலைவன் ஆகும். அது பொருள்களையும், வெளி நிகழ்ச்சிகளையும், உலகின் கூறுகளையும் புலன்களின் துணையோடு பகுத்து அறியும்போது அந்த அறிவு ''பகுத்தறிவு'' ஆகிறது. அதற்கு மேலுள்ள நுட்பமான அகப்பொருள்களை ஆராயும்போது ''ஆன்ம அறிவு'' ஆகின்றது. ஆன்ம அறிவு வெளி மன அறிவோடு சேர்ந்து புறத்திலும் வேலை செய்யும். உள்ளுணர் வோடு சேர்ந்து அகத்திலும் வேலை செய்யும். ஆன்ம அறிவு உள்ளே போகப்போக சிந்தாகுலம் நீங்கி விடும்.

ப்ரகிருதி தத்துவம் அதாவது முதல் 24 தத்துவங்கள் புறத்தில் வேலை செய்பவை. இவை பிரமதேவனின் நிலையாகும். பிரமா கல்விக்கு உரியவர். அவர் ஒரு கலைஞர். கல்வி பொருளுதவியால் வருவதாகும். இங்குப் பொருள் என்பது பணத்தை மட்டும் குறிப்பதன்று. அது உடம்பையும், உலகத்தையும் அதாவது அண்ட பிண்டங்கள் அனைத்தையும் குறிக்கும். உடம்பையும், உலகத்தையும் பயன்படுத்தும் திறம் இருந்தால் கல்வி வரும். பொருளை அகமுகமாக அதாவது அருள்முகமாகப் பயன்படுத்துவதில் இது முதல் படியாகும். பிரமா படைப்புத் தொழிலைச் செய்பவர். அவருக்கு நீண்ட ஆயுள் உண்டு.

பிரகிருதி தத்துவத்தைக் கடந்து மேலும் அகமுகமாகப் போனால் வித்யா தத்துவமும், சுத்த தத்துவமும் வரும். உலகியலில் உள்ள ஆன்மாக்களை அகமுகமாகத் திருப்புபவர் விஷ்ணு ஆவார். அவர் வித்யா தத்துவத்தில் வேலை செய்வார். எனவே விஷ்ணுவிடம் ஈடுபட்டால் உள்முகநாட்டம் வரும். விஷ்ணு மனத்துக்கும் பொருளுக்கும் உரியவர். ஆதலால், இறுதியில் வெளிமுகமாகக் கொண்டு போய் மயக்கிவிடுவார்.

வித்யா தத்துவத்துக்கும் அப்பாலுள்ளது சுத்த மாயை ஆகும். அதன் ஐந்து பிரிவுகளுள் ஐந்தாவது சுத்த வித்தையாகும். அதன் அதிதேவதை உருத்திரன். அவருடைய ஆணைப்படியே பிரமாவின் படைப்பும், விஷ்ணுவின் காப்புத் தொழிலும் நடைபெறுகின்றன. உருத்திர நிலையில்தான் கலையறிவு மெய்யறிவாக உயருகிறது. இதுவே ஞானம் தலை எடுக்கும் இடமாகும்.

முருகன் உருத்திரனிடமிருந்துதான் தோன்றினான். மெய்யுணர்வு முளைக்கும் இடம் உருத்திரன் என்றால் அம்முளை கொழுந்தோடி வருவதே முருகன் ஆகும். தெய்வத்தில் அழகான தெய்வம் முருகன். பண்டங்களையும், கலைகளையும், அறத்தையும், மெய்ப்பொருளையும் எல்லாவற்றையும் அழகுக் கண்கொண்டு பார்க்கும் இடம் முருகன் ஆகும். அக உணர்வில் தோன்றுகின்ற குழந்தை மூர்த்தம் முருகன். அவன் புறத்தையும் அகத்தையும் இரண்டையும் இயக்க வல்லவன். எத்தகைய உலக நிலையில் இருப்பவரும் அவனிடமிருந்து அக நலங்களைப் பெறலாம். அதனாலேயே முருகனைக் ''கலியுக வர்தன்'' என்றனர். முருகன் நிலையில் அகத்துக்குப் போன ஆன்மா மீண்டும் புறத்துக்குப் போவதில்லை. அதனை மேலும்

அகத்திலேயே முன்னேறச் செய்வான். நாமாக விரும்பினால் புறத்திலும் காட்சி கொடுப்பான். மயங்கவைக்காமலும் கொடுப்பான்.

மேற்கூறியவாறு பொருளைக் கலைக்கும், கலையை மெய்யறிவிற்கும் பயன்படுத்தி அகமுகமாக முன்னேறினால் சிந்தாகுலம் விடப்பெறும். ஒரு ஆற்றுநீரை அணையில் தேக்கி, உணவுப் பொருளையும், மின்சாரத்தையும் உண்டாக்கினாலும், அந்த அணையின் அருகே ஒரு பூந்தோட்டத்தையும், திருக்கோயிலையும் அமைத்து, மக்களுடைய கருத்தைக் கலைக்கும் இறுதியில் மெய்யுணர்வுக்கும் திருப்புதல் வேண்டும். அதாவது பொருளாதார நோக்கத்தோடு ஒரு செயலைச் செய்தாலும் கலையும் அருளும் அதில் சேருமாறு செய்தல் வேண்டும். பொருளின்றிக் கலையில்லை. பொருளும் கலையும் இன்றி அருள் வராது. பொருளையும், கலையையும் கையாளத் தெரியாதவர் நிறைந்த அருளாளராக முடியாது. திருஞானசம்பந்தர் பேரருளாளர். அவர், பல்லக்கு, அணிகலன்கள் முதலியவற்றைப் பெற்றிருந்தார். அருளாளர்களே பொருளையும் கலைகளையும் சரியாகத் திருப்பிவிடுவர். ஆக, பொருள், கல்வி, கலைகளைச் சரியாகக் கையாளாதவரை சிந்தாகுலம் காடாகவே இருக்கும். கையாள்பவர்க்குச் சிந்தாகுலம் விடப்பெறும்.

(2) மந்தாகினி தந்த வரோதயனே! கந்தா, முருகா, கருணாகரனே!

''மந்தாகினி'' என்பது இமயத்தின் தாழ்வரையில் அதாவது மிக உயரத்திலிருந்து இறங்கி வருகின்ற கங்கையாகும். அது அமுத ஒழுக்காகும். ''கம்'' என்பதற்கு நீர் என்று பொருள். அது பாய்ந்துவரும் நீர்; பனி, வெப்பத்தால் கரைந்து வரும் நீர்; இதமான சூடு உடைய நீர். (வாய்க்காலில் ஓடும் நீரை நிலத்துக்குப் பாய்ச்சுபவருக்குக் ''கம்புகுட்டி'' என்று பெயர். கம்மார் என்பதும் கங்கை என்பதும் தமிழ்ச்சொற்களே). முருகன் கங்கை தந்த சரவணன் ஆனதனால் ''மந்தாகினி தந்த வரோதயனே'' என்றார்.

''வரோதயன்'' (வர+உதயன்) என்பது வரத்தால் உதயமானவன் ஆகும். வரம் என்னும் சொல்லுக்கு ஞானம் என்றும் பொருள் உண்டு. எனவே ஞான மூலத்தால் தோன்றியவன் என்றும் ஆம்.

''கந்தா'' என்பது நமக்குப் பற்றுக்கோடானவனே என்று பொருள்படும். ''முருகா'' என்பது அருளழகன். ''கருணாகரன்''

கருணையையே வடிவாக உடையவன். கருணையைப் பூரணமாக ஆளத்தக்கவன்.

ஆக, இப்பாடலில், அகநாட்டத்தால் அருளைப் பெற்று எப்போது கவலையிலிருந்து விடுபடுவேன் என்று அருணகிரியார் வினவுகிறார்.

III சக்கரம்

32-ஆவது பாட்டோடு அநாகத ஆதார சக்கரத்தின் பாடல்கள் முடிந்தன. இந்த 33-வதுபாட்டு விசுத்தி ஆதார சக்கரத்தின் முதலாவது பாட்டாகும். இந்த ஆதாரத்தின் இதழ்கள் 16 ஆனதால், இதோடு 16 பாடல்கள் விசுத்தியைச் சேர்ந்தவை. விசுத்தி ஆதாரத்தின் இடம் புறநாக்கின் அடி (முதல்) ஆகும். (உள்நாக்கின் அடி ஆக்ஞை ஆதாரத்தின் இடமாகும்). புறநாக்கின் அடி என்பது கழுத்தில் உள்ளது.

''கழுத்தை நெறுக்கினால் உயிர் போகும்'' என்று ஒரு வழக்கு உள்ளது. அதனால் கழுத்தில் உயிர் ஆற்றல் இருக்கிறது என்று தெரிகிறது. அதற்கேற்ப, விசுத்தி ஆதார மலர்கள் 16-ல் விளங்கு கின்ற 16 உயிர் எழுத்துக்களும் இங்கு ஆற்றல் பெறுகின்றன.

இந்த உயிர் எழுத்துக்கள் 16-ம் சாந்தியாதீதக்✱ கலையில் தோன்றுகின்றன. கலை என்பது பிரிவு. அவை ஐந்தாகும். அவற்றின் பெயர்களும் அவற்றில் தோன்றுகின்ற எழுத்துக்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

எண்	கலையின் பெயரும் அதன் செயலும்	கலையில் தோன்றும் எழுத்துக்கள்	எழுத்துக்களின் எண்ணிக்கை
1.	**நிவர்த்திகலை:** ஆன்ம நாட்டத்தை உலகியலிலிருந்து அக முகமாகத் திருப்புகிறது	க்ஷ	1

2.	பிரதிஷ்டாகலை அகமுகமாக வந்த ஆன்ம நாட்டத்தை மீண்டும் மாறாமல் நிலைக்க வைக்கும்.	ட, டீ, டீ., டீ, ண த. தீ, தீ, தீ., ந, ப, டீ, பீ, பீ, ம, ய, ர, ல, வ, ச ஷ, ஸ, ஹ, ள	24
3.	வித்யாகலை நிலைத்த ஆன்ம நாட்டத்துக்கு ஞானத்தைக் கொடுக்கும்	கீ, ங, ச, சீ, ஜ, ஜீ ஞ	7
4.	சாந்தி கலை ஞானத்தால் வருகின்ற எழுச்சியைச் சமப்படுத்தும்	க, கீ, கீ	3
5.	*சாந்தியாதீதக் கலை சாந்தப்படுத்தியதை அருள்முகப்படுத்தும்	அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ருு, ரூ, லு, லூ, ஏ, ஐ, ஓ, ஔ, அ., அ:	16
			51

உயிர் எழுத்துக்கள் 16-னுள் ரு, ரூ, லு, லூ ஆகிய நான்கு எழுத்துக்கள் தமிழில் இல்லை. இவை தமிழில் மெய்யெழுத்துக் களாகக் கொள்ளப்பட்டுள்ளன. கரகரப்பு ஒலிக்குறிப்புகள் கழுத்தில் தோன்றுவதனால் வடமொழியில் இவை உயிரெழுத்துகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. ஆ, ஈ, ஊ ஆகிய நெட்டெழுத்துக்கள் தெய்வீகமான சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படும். ''ஹ'' என்பது சிவ பீஜாட்சரம். ''ஸ'' என்பது சத்தி பீஜாட்சரம்.

ஒரு மொழி வழங்கி வரும்போது, சேனைப்படைக்குப் பயன்படுத்துவதற்காகத் தனியே ஒரு ரகசிய மொழியை உருவாக்கிக் கொள்வதைப்போல அக்காலத்தில் மந்திரங்களுக்கென்று தனியே ஒரு மறைமொழியை உருவாக்கிக் கொண்டனர். அந்த மொழியில்

காவியங்களையும், இலக்கியங்களையம் செய்யாமல், உலகியலுக்கும் பயன்படுத்தாமல் இருக்கும்வரைதான் அது மந்திர மொழியாக இருக்கும். உலகியலுக்குப் பயன்படுத்திய உடனே அது செய்யப்பட்ட தன் நோக்கம் தோல்வியடைந்து விட்டது. வடமொழியில் குறிப்பிட்ட படி ஒலித்தால்தான் பலன் கொடுக்கும்.

இராமலிங்க சுவாமிகள் எழுத்துக்களின் சிறப்புக்களைத் தனித் தனியே தெரிவித்துள்ளனர். தமிழின் சிறப்புக்களை எண்ணி ஞானசம் பந்தர் தம்மைத் ''தமிழ் ஞான சம்பந்தன்'' என்று கூறிக்கொண்டார். தமிழில் தம்மைப் பாடவைத்ததைப் பெரும் பேறாக அருணகிரிநாதர் கருதினார். ''தமிழ்மொழியில், அதீதத்தன்மைக்கு உயர்ந்து சென்ற அருளாளர்களின் பாடல்கள் நிறைய உள்ளன'' என்று ஒரு ஜெர்மானியர் கூறியுள்ளார். அவர் பல மொழிகளைப் பயின்ற பெரும் புலவர். இச்செய்தியை இலங்கை அமைச்சர் திரு. நடேசப் பிள்ளை என்பவர் திருவெண்ணை நல்லூரில் நடைபெற்ற சித்தாந்த மாநாட் டில் எடுத்துக்காட்டினார். எனவே தமிழ்மொழி அதீதத் தன்மைக்குரி யது என்பது தெரிகிறது. ஆனால், மந்திரமொழியை மற்றவற்றிற்குப் பயன்படுத்தியதால் அதன் சிறப்பு மாறிவிட்டதைப்போல, தமிழ் மொழியைத் தெய்வ சம்பந்தம் இல்லாதவற்றுக்குப் பயன்படுத்தினா லும், அதன் தனித்தன்மை மாறுபடும். வேதத்தைவிட, ஆகமம் உயர்ந்தது. அதனினும் மேலானவை தேவார திருவாசகங்கள்.

இனி, விசுத்தி சக்கரத்துள் ஒரு வட்டம் வரும். அது ஓங்காரத்தைக் குறிப்பதாகும்.


அவ்வட்டத்தினுள்ளே இரண்டு முக்கோணங்கள் வருகின்றன. அவை உருத்திரனையும், உருத்திரனிடமிருந்து தோன்றிய முருகனை யும் குறிக்கும். அதாவது ஒன்று மேல்நோக்கியும் மற்றொன்று கீழ் நோக்கியும் வரும். முக்கோணம் என்பது சத்தியாகும். மேல் நோக்கிய முக்கோணம் △ அகநோக்குச் சத்தியாகும். கீழ்நோக்கிய முக்கோணம் ▽ உபகாரம் செய்வதைக் குறிக்கும். இவற்றின் கருத்து என்னவெனின், அகத்தில் பெற்ற சத்தியைப் புறத்தே கொண்டுவந்து மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதாகும்.

இந்த இரண்டு முக்கோணங்களை ஒன்றன் மேல் ஒன்று வைக்கும்போது ஆறு சிறிய முக்கோணங்கள் உருவாகும். ★ அவற்றுள் 'அ'கர, 'உ'கர, 'ம'கரமும் % குறியிட்ட விந்துவும், குறியிட்ட நாதமும் 'ந'கரமும் வருகின்றன. 'ந'கரம்

நன்மையைக் குறிக்கும். உகரம் கிரியா சக்தியைக் குறிக்கும் % விந்துவைக் குறிக்கும். மகரம் இச்சா சத்தியைக் குறிக்கும். 'அ'கரம் ஞான சத்தியாகும். ◡ என்னும் சந்திர வடிவம் நாத ஒலியைக் குறிக்கும்.

இடையே உள்ள 'வ'கரம் விசுத்தி சக்கரத்துக்குரிய எழுத்தாகும். அது அம்பிகையின் எழுத்து. பொருளியலிலிருந்து அருளியலுக்கு உயர்ந்து வரும்படி அழைக்கும் அம்பிகையின் எழுத்தாகும். இச்சக்கரத்தின் மேலே உள்ள 'அ'கரம், 16 உயிரெழுத்துக்களுள் முதலெழுத்தாகும்.

சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-34

சிங்கார மடந்தையர் தீ நெறிபோய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகா வல சண்முகனே!
கங்கா நதி பால கிருபாகரனே!

I பொழிப்புரை

அழகு செய்துகொள்வதே நோக்கமாய், அதனால் பிறரை மயக்கும் இயல்புடைய பெண்களின் தீய நெறியில் சென்று மங்கிவிடாதபடி (முருகா) எனக்கு வரம் தருக! போர் புரியும் மயிலில் ஏறி அதனைச் செலுத்தும் வல்லமை உடையவனே! ஆறுமுகனே! கங்கா நதியின் புதல்வனே! கருணை வடிவினனே!

II விளக்கவுரை

(1) சிங்கார மடந்தையர் தீ நெறிபோய் மங்காமல் எனக்கு வரம் தருவாய்


''சிங்கார மடந்தையர்'' என்பவர் அழகு செய்து கொள்ளும் பெண்கள். மடந்தையர் என்றும் சொல் அறியாமை உடையவரைக் குறிக்கும். அவர்கள் அறத்தை மறந்து அழகு செய்துகொள்பவர். சிருங்கார ரஸத்தையே (அதாவது காம உணர்வையே) வாழ்வில் பெரிதாக எண்ணிக்கொண்டு இருப்பவர்கள். காமத்துக்கே தம்மை ஒப்படைத்துக் கொண்டவர்கள். அவர்கள் பொது மாதராவர்.

இனி, பொதுவாக எதிலுமே மிகுந்த நாட்டம் இருக்கக்கூடாது. அதிலும் அழகு செய்துகொள்வதில் பெண்கள் அதிக நாட்டம் செலுத்தக் கூடாது. அறநோக்கம் மறையாத அளவுக்கு, மற்றும் அறம் விளங்குவதற்கு மட்டுமே அழகு துணை செய்வதாக இருக்க வேண்டும். கோயிலுக்குப் போகும்போது பெண்கள் அழகு செய்து கொள்வர். அவர்களைப் பார்ப்பவர்க்குப் பத்தி வருமாறு அவர்கள் இருந்து கொள்ள வேண்டும். அதாவது, அவர்கள் பட்டாடை

நன்மையைக் குறிக்கும். உகரம் கிரியா சக்தியைக் குறிக்கும் % விந்துவைக் குறிக்கும். மகரம் இச்சா சத்தியைக் குறிக்கும். 'அ'கரம் ஞான சத்தியாகும். என்னும் சந்திர வடிவம் நாத ஒலியைக் குறிக்கும்.

இடையே உள்ள 'வ'கரம் விசுத்தி சக்கரத்துக்குரிய எழுத்தாகும். அது அம்பிகையின் எழுத்து. பொருளியலிலிருந்து அருளியலுக்கு உயர்ந்து வரும்படி அழைக்கும் அம்பிகையின் எழுத்தாகும். இச்சக்கரத்தின் மேலே உள்ள 'அ'கரம், 16 உயிரெழுத்துக்களுள் முதலெழுத்தாகும்.

சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-34

சிங்கார மடந்தையர் தீ நெறிபோய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகா வல சண்முகனே!
கங்கா நதி பால கிருபாகரனே!

I பொழிப்புரை

அழகு செய்துகொள்வதே நோக்கமாய், அதனால் பிறரை மயக்கும் இயல்புடைய பெண்களின் தீய நெறியில் சென்று மங்கிவிடாதபடி (முருகா) எனக்கு வரம் தருக! போர் புரியும் மயிலில் ஏறி அதனைச் செலுத்தும் வல்லமை உடையவனே! ஆறுமுகனே! கங்கா நதியின் புதல்வனே! கருணை வடிவினனே!

II விளக்கவுரை

(1) சிங்கார மடந்தையர் தீ நெறிபோய் மங்காமல் எனக்கு வரம் தருவாய்

''சிங்கார மடந்தையர்'' என்பவர் அழகு செய்து கொள்ளும் பெண்கள். மடந்தையர் என்றும் சொல் அறியாமை உடையவரைக் குறிக்கும். அவர்கள் அறத்தை மறந்து அழகு செய்துகொள்பவர். சிருங்கார ரஸத்தையே (அதாவது காம உணர்வையே) வாழ்வில் பெரிதாக எண்ணிக்கொண்டு இருப்பவர்கள். காமத்துக்கே தம்மை ஒப்படைத்துக் கொண்டவர்கள். அவர்கள் பொது மாதராவர்.

இனி, பொதுவாக எதிலுமே மிகுந்த நாட்டம் இருக்கக்கூடாது. அதிலும் அழகு செய்துகொள்வதில் பெண்கள் அதிக நாட்டம் செலுத்தக் கூடாது. அறநோக்கம் மறையாத அளவுக்கு, மற்றும் அறம் விளங்குவதற்கு மட்டுமே அழகு துணை செய்வதாக இருக்க வேண்டும். கோயிலுக்குப் போகும்போது பெண்கள் அழகு செய்து கொள்வர். அவர்களைப் பார்ப்பவர்க்குப் பத்தி வருமாறு அவர்கள் இருந்து கொள்ள வேண்டும். அதாவது, அவர்கள் பட்டாடை

உடுப்பது தூய்மைக்காக இருக்க வேண்டும். பிறருடைய தீட்டுப்படாமல் இருப்பதற்கு அமையவேண்டும்.

நாட்டியப் பெண்களும் அறநெறியில் அழகு செய்துகொண்டு ஆடினால் பத்தி தோன்றும். அப்படிப்பட்ட சிறந்த பெண்கள் இருக்கிறார்கள். இராமகிருஷ்ணர் நாடகம் பார்ப்பதுண்டு. அவர் நாடகங்களில் மாதரைப் பார்த்தபோதெல்லாம் அம்பிகையின் நினைவே வரும். அத்தகைய நடன மாதரும் கோயில்களில் இருந்தனர்.

''சிங்கார மடந்தையர்'' என்னும் சொற்களை யோக நெறியில் வருகின்ற சித்திகளை உருவகப்படுத்திச் சொன்னார் என்றும் கொள்ளலாம்.

''தீ நெறி'' என்பது தவறான போக்கு. இங்குக் காம நெறியைக் குறிக்கின்றது. மற்றும் ''தீ'' என்னும் சொல்லுக்கு நெருப்பு என்னும் பொருளும் உண்டு. ஆக, நெருப்பு வழி என்றும் ஆகும். காமமே ஒரு நெருப்புதான். பசி எப்படி நெருப்பாக இருக்கிறதோ அவ்வாறு காமமும் ஒரு நெருப்பே. எனவே காமநெறியைத் ''தீ நெறி'' என்றார். காம நெறி நஞ்சு நெறியும் ஆகும்.

நெருப்புத் தன்மையும், நஞ்சுத்தன்மையும் கொண்ட காமநெறியில் செல்பவருடைய உடம்பு, ஆயுள், பார்வை, நரம்பு, காது, உணர்வு நிலை, பெருமை ஆகியவை எல்லாமே மங்கிவிடும். வாழ்க்கையைக் காம வாழ்க்கை ஆக்காமல், அற வாழ்வாகவும், அருள் நோக்குடையதாகவும் மாற்றிவிட்டால் ஞானம் வரும். பெண்களால் ஞானம் பெற்ற ஆடவர் பலர் உள்ளனர். மங்கையர்க்கரசியாரால் பாண்டியனுக்கும், கண்ணகியால் கோவலனுக்கும், பரவையாரால் சுந்தரருக்கும் ஞானம் வந்தது. மற்றும் ஔவைப் பிராட்டியார், முதுமையில் மட்டுமல்லாமல் சிறுவயதிலிருந்தே எல்லோர்க்கும் அறம் உரைத்து வந்தார்.

உலகில் காணப்படும் அழகுகள் எல்லாமே திரோதான சத்தியின் வெளிப்பாடுகளே என்பதனை முன்னமே பார்த்திருக்கிறோம். திரோதானம் என்பது மலத்தில் கலந்து வேலை செய்யும் அம்பிகையே என்பதையும் பார்த்துள்ளோம். எனவே உலகிலுள்ள எல்லா அழகுப்பொருள்களையும், ''சிங்கார மடந்தையரை''யும் சேர்த்து, நாம் காணும்போது, அம்பிகையாகக் காண்பதுவே முறையாகும்.

பார்க்கும் இடம் எங்கும் நீகமற நிறைந்துள்ள அப்பொருளைக் கண்டு கொள்வதே அறவாழ்வாகும். காமநெறி நஞ்சு நெறியாவது போலக் கவர்ச்சிப்பொருள்களில் எல்லாம் அம்பிகையைக் காணும் நெறி அமுத நெறியாகும். அதுவே அருள் நெறியாகும்.

அருள் நெறியில் செல்வோர்க்கு வாழ்வு மங்குவதில்லை. ''மங்காமல்'' என்பது ''சுபமாய்'', ''நலமாய்'' மங்களமாய் இருப்ப தாகும். அத்தகைய வாழ்க்கையையே அருணகிரியார் வேண்டுகிறார். அதாவது அருள்நெறியையும், அமிழ்த ஒழுக்கு வரும் ஞானத்தையும் தருக என்று கேட்டுக்கொள்கிறார். ''வரம்'' என்னும் சொல்லுக்கு வேண்டுவதைத் தருவது என்பதோடு ''ஞானம்'' என்றும் பொருள் உண்டு. ''மங்காமல் எனக்கு வரம் தருவாய்'' என்றதனால், மாதர் எப்படி இருந்தாலும், ''நான் தகுதியாய் இருந்து தாழ்வுறாமல் இருக்கும்படி ஞானத்தை அருள வேண்டும்'' என்றும் முருகனைக் கேட்டுக்கொண்டார்.

(2) சங்க்ராம சிகாவல சண்முகனே!

''சங்க்ராமம்'' என்பது சரியான ஒழுங்குமுறையில் நடக்கும் போர்; அதாவது நியாய அடிப்படையில் நடைபெறும் போர் ஆகும். கீதம் என்பது இசை; சங்கீதம் என்பது நல்ல இசை ஆகின்றது. அதைப்போலவே சங்க்ராமம் என்பது நல்ல கிரமம் ஆகிறது. பாட்டுக்கு ஏற்ற எதுகைக்காக அப்படி வந்தது.

கிரமம் என்பதுதான் ''க்ராமம்'' என்று வந்துள்ளது. (கிராமம் ஒழுங்கான இடம். நகரத்தை விடக் கிறாமத்தில் ஒழுங்கும் ஒழுக்கமும் நன்றாகவே இருக்கும். நகரத்தில் தெருக்கள் பார்ப்பதற்கு ஒழுங்காக இருக்கலாம். ஆனால் அங்கு ஒழுக்கம் கிராமத்தில் இருப்பதைப் போலச் சிறப்பாய் இருப்பதில்லை. வீடு, சுகாதாரம், ஆட்சி, குடித்தனம், அருள் எல்லாம் நீதியாக, கிரமமாக நடப்பதற் குரிய இடம் கிராமமே ஆகும்.) கோணலாகப் போவோரைக் கிரமப்படுத்துவது அதாவது சரிப்படுத்துவது போர். ஒருவரை ஒருவர் சமமாகக் கருதாமல் தாழ்வாக நினைக்கும்போது அதைச் சமப்படுத்து வது போர். தீயவற்றை எதிர்ப்பது போர்.

போர் நடத்துவதில் பொதுவாகப் படைபலமே வெற்றி தரும் என்னும் எண்ணம் இருந்து வருகிறது. ஆனால் வெற்றிக்குக் காரணம் அதுவன்று. வெற்றிக்குக் காரணம் ''கோல்'' ஆகும். ''கோல்'' என்பது

நடுநிலைமை எனப்படும் அறம் ஆகும். ''வேலன்று வென்றி தருவது மன்னவன் கோல், அதுவும் கோடாது எனின்'' என்று நம் நாட்டுப் பெரியோர்கள் முன்னமே கூறியுள்ளனர். அறத்தோடு பொருந்தும் போதுதான் வேல் வெல்லும். இந்த உண்மையை நம் பண்டைய தமிழ் மன்னர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனால் அவர்கள் தம் ஆட்சியில், பொருளைத் தேடுதல், கலைகளை அநுபவித்தல் முதலிய எல்லாத் துறைகளிலும் அறத்தின் அடிப்படையில் நடந்து வந்தனர். எங்கேனும் தவறு நேர்ந்து விட்டால், தம்மைத்தாமே ஒறுத்துக்கொண் டனர். பொற்கைப் பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழி யன் வரலாறுகளில் இதனைக் காணலாம். அறத்தின் அடிப்படையில் ஆட்சி நடத்தியதாலேயே நம் தமிழ் மன்னர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொடர்ந்து ஆண்டு வந்தனர். மூவேந்தர் பரம்பரை மிகப் பழைய பரம்பரையாகும். அது படைப்புக்காலம் தொட்டு வந்தது என்பர். அந்தப் பரம்பரையும் இப்பொழுது இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் அவர்கள் அறத்தை மறந்ததே யாகும். அவர்கள் பாரி வள்ளலைச் சூழ்ச்சியால் கொன்றதனால் அப்பரம்பரையும் அழிந்தது. ஆக வெற்றி தருவது அற உணர்வேயன் றிக் கருவிகள் அல்ல. கண்ணகி என்னும் ஒரு மாது அற அடிப்படையில் பேருணர்ச்சியாய் இருந்தபோது அப்பெரு நகராகிய மதுரையில் அவரை யாராலும் எதிர்க்க முடியவில்லை.

இக்காலத்தில் போர் நடப்பது அற அடிப்படையில் இல்லை. பொருள் காரணமாகப் பெரும் போர்கள் நடைபெறுகின்றன. அவை ஆசை அடிப்படையில் நடப்பனவாம். முன்னறிவிப்பு இல்லாமல், போர்க்களம் இல்லாமல் ஊர்களுக்குள்ளேயே போர்கள் நடைபெறு கின்றன. குழந்தைகளையும் பெண்களையும் போரில் கொல்வது எவ்வாறு பொருந்தும்? இன்றைய போர்கள் படை பலத்தைக் கொண்டே நடைபெறுகின்றன.

சூரன் போர் செய்தபோது அவனுக்குப் போர் செய்யும் ஆற்றல் இல்லை என்பதை உணர்ந்து கொண்டான். என்றாலும் முன்வைத்த காலைப் பின்வைக்கக் கூடாதே என்பதற்காகப் போர் செய்தான். அந்த ஒரே எண்ணத்தால் போர் செய்தான். அவன் செய்த போர் எல்லாம் வெளித்தோற்றத்துக்குச் சும்மா போரிட்டான். அவன் உள்ளுணர்வு போருக்கு ஏற்றதாய் இல்லை.

போரில் முதன்மை பெறுவதும், வெற்றி பெறுவதும் அற உணர்வேயாகும். உள்ளம், சொல், பார்வை, அறம் இவற்றால் பெரும் படைகளை வென்று விடலாம். மனிதர்கள்தாம் போரில் கருவி ஏந்திப்போர் இடுகின்றனர். விலங்குகள் கருவியில்லாமல் போரிடும். பெரிய ஆயுதம் தாங்கி வருபவருடைய மனத்தை மாற்றிவிட்டால் பிறகு கருவிகளால் தீங்கு எப்படி வரும்?

விலங்குகள் போரிடும்போது, தம்முடைய உற்று நோக்கும் பார்வை, வேகமாக மோதுதல் ஆகியவற்றால் போரிடும். பல்லி உற்றுப் பார்ப்பதனாலேயே, பூச்சி அசையாமல் அப்படியே நின்று விடும்; அப்போது பிடித்துக்கொள்ளும். சாரைப் பாம்புக்கும் இப்படி பார்வை, உணர்வாற்றல் உண்டு. புலி முதலியவற்றுக்கு மனோசத்தி அதிகம். யானைக்கு அறிவு சத்தி அதிகம்; மற்றும் அதன் உடல் வலிமை எல்லாவற்றினும் அதிகம். ஆறறிவு படைத்த மனிதன் உடல் வலிவால் போரிடுவது பொருந்தாது. அவன் எவ்வளவு வலிவுள்ளவனானாலும், பலர் ஒன்று சேர்ந்து எதிர்க்கும்போது தோற்றுவிடுவான். அதோடு அவன் எவ்வளவு முயன்றாலும் யானையின் வலிவைப் பெறமுடியாது. மனிதன் தன் உடல்நலம் கெடாமல் இருப்பதற்கு எவ்வளவு வலிவு வேண்டுமோ அதை மட்டும் தேடிக்கொண்டால் போதுமானது. போர் செய்வதற்கு அறவுணர்வையே அவன் நாட வேண்டும். ஆனால் நடைமுறையில் அது வேறாக உள்ளது. மனிதன் கருவிகளைப் பெருக்கிக் கொண்டான். விஞ்ஞானத்தின் துணையை மேற்கொண்டான். அதனால் கோழையும் போரிடலாம் என்னும்படி ஆகிவிட்டது. ஆனால் நல்ல உள்ளமும் உணர்வும் வேலை செய்பவருக்கு விஞ்ஞானத்தால் வரும் எதிர்ப்புகள் ஒன்றும் செய்ய முடியாது. எனவே உணர்வாற்றலே வெற்றி தருவதும் நிலையானதும் ஆகும்.

இத்தகைய உணர்வாற்றலால் போர் செய்வதே மயிலின் இயல்பாகும். இது முருகனின் வாகனமானதால் இதற்கு நியாயம் தெரியும். விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் அந்த அற உணர்வு உண்டு. போர் வீரர்களைத் தாங்கும் யானையும் குதிரையும் அறம் தவறாமல் போரிடும். மயிலுக்கும் இந்த இயல்பு உண்டு. எனவே அதனைச் ''சங்க்ராம சிகா'' என்றார்.

மயில் சிகையை உடையதானதால் அதனைச் ''சிகா'' என்றார். சிகை என்பது கொண்டையாகும். பொதுவாக, மயில் என்ற உடனே

அதன் தோகையே நினைவுக்கு வரும். ஆனால் இங்குத் தோகை யைக் குறிப்பிடாமல் சிதையைக் குறிப்பிட்டார். வாயைப் பார்த்து மகிழ்வதை விடத் தலையைப் பார்த்து மகிழ வேண்டும் என்பதற்காக அதனைச் ''சிகா'' என்றார். மயிலின் முகத்தைப் பார்க்கும்போது அதன் கொண்டை தெரியும்.

''சிகா வலன்'' என்பது மயிலை நடத்துகின்ற பாகன் என்று பொருள்படும். ''வலன்'' என்பது ''வல்லவன்'' ஆகும். எதையும் செலுத்துவதற்கு ஒரு வல்லமை இருக்க வேண்டும். நல்ல அறிவு வாய்ந்தவர்களை எளிதில் 'நிர்வாகம்' செய்ய (இயக்க) இயலாது. முரடரை, சாதாரணமானவர்களை எளிதில் அடக்கியாளலாம். போர்த்திறம் வாய்ந்த மயிலை நடத்தும் வல்லமை வாய்ந்த முருகனை இங்குச் ''சிகா வல'' என்றார். உணர்வு பலம் உடையவர்களால்தான் இது முடியும். முருகன் உள்முகமாகிய ஆறாவது முகம் உடையவ னாதலால், மயிலைச் செலுத்தும் வல்லமை உடையவன் ஆனான்.

மேற்கூறிய வல்லமை உடையவன் என்பதனை எடுத்துக்காட் டவே முருகனை ''சண்முகனே'' என்றார். ஆறுமுகம் உடையவன் ''சண்முகன்'' எனப்பட்டான். ஆறுமுகம் என்று சொல்லும்போது, முதல் ஐந்து முகங்களைக் காட்டிலும் ஆறாவது முகம் நின்னவுக்கு வரவேண்டும். புறத்தில் செல்லும் ஐந்து முகங்களின் நினைவை மாற்றி உள்முகப்படுத்துவது ஆறாவது முகம். அதுவே உணர்வு பலத்தைக் கொடுக்கக்கூடியது. மயில் மேல் சண்முகன் என்பது, விந்துவின் மேல் நாதம் என்பதனையும், கலையின் மேல் அருள் என்பதனையும் குறிக்கும். அழகிய உலகியலிலே அருள் ஆற்றல் செலுத்துகிறது என்பதைப் புலப்படுத்தவே மயிலைச் செலுத்தும் சண்முகனே என்றார். அழகியலைச் சரியாக நடத்துவதற்கு அருளி யல் கட்டாயம் வேண்டும். அழகியல் எல்லாம் மயில். அதை நடத்துபவன் ஆறுமுகங்கொண்ட முருகன்.

(3) கங்கா நதி பால கிருபாகரனே

முருகன் கங்கை நதியில் கண்டெடுக்கப்பட்டதால், கங்கை நதியின் புதல்வன் அல்லது ''கங்கா நதி பால'' என்றார். உலகியலுக்கும், இறையியலுக்கும் எப்பொழுதும் மாறுபாடு இருக் கும். உலகியலில் குழந்தை மாதினிடமிருந்து பிறக்கும். இறையிய லில், முருகன் உருத்திரனிடமிருந்து பிறந்தான். உலகியலில், முதலில்

வேலையைச் செய்துவிட்டுப் பிறகு அதற்கான கூலியை வாங்குவர். இறையியலில், முதலில் பிட்டை வாங்கி உண்டுவிட்டுப் பிறகு இறைவன் வேலை செய்தான்.

முருகன், நெற்றியிலிருந்து அக்னியில் தோன்றியதால், அவருக்குத் தணிவு மிகுதியாகத் தேவைப்பட்டது. எனவேதான் கங்கையில் வந்து சேர்ந்தார். (சிவத்தின் தலையில் கங்கை இருக்கிறது என்பதன் கருத்தும் இதுவேயாகும். சிவத்தின் தவத்தால் உண்டாகும் சூட்டைக் கங்கை தணிக்கின்றது என்பது அதன் கருத்தாகும்.) முருகன் கங்கையில் தங்கி தணிவு பெற்றதனால் ''கங்கா நதி பால'' என்றார். பால் குடிக்கும் குழந்தைக்குப் ''பாலன்'' என்று பெயர்.

பனி உருகி வருவது கங்கை, அருள் உணர்வு உருகி வருவது கிருபை. நாம் இறைவனை நோக்கி உருகினால், அவனிடமிருந்து இரக்கம் உருகி வரும். ''ஈசனுக்கு அன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பிலார்'' என்பது பெரியோர்களின் முடிவு. சீவனைச் சிவமாக்குவது சீவகாருண்யம். பூரண சீவகாருண்யத்தைக் கையாள வேண்டுமானால் தெய்வத்தை நோக்கி உருக வேண்டும்.

ஈரத்தின் வெளிப்பாடே வீரம். வீரம் உடையவர்களே மற்றவரிடம் இரக்கம் தொண்டு உதவிசெய்வர். ''ஈரம்'' என்னும் சொல்லுக்கு (ஈர்=ஈரம்) இரண்டு என்று பொருள். அவற்றுள் ஒன்று தன்னளவில் ஆற்றலாய் இருத்தல்; மற்றொன்று இன்னொருவரைப் பார்க்கும் போது இரக்கம் கொள்ளுதல். இந்த இரண்டு வேலைகளையும் நாம் செய்ய வேண்டும். இல்லறத்தில் ஒரு மாதுக்குத் தன் கணவனோடு சேர்ந்த பிறகே (அறம்) உபகாரம் செய்யும் பக்குவம் வருகின்றது. அதற்கு முன் வரையில், ஆற்றல் பெறுகின்ற நிலையாகும்.

உருக்கம் உள்ள பசுவின் பாலுண்டு வளர்ந்ததால் ஆபுத்திரன் வாழ்வெல்லாம் உருக்கமானவனாய் உபகரித்தான். உருகிவந்த கங்கையில் பிறந்ததனால், முருகன் ''கிருபாகரன்'' ஆனான்.

ஆக, இந்தப் பாடலில், சிங்கார மடந்தையரையும், அம்பிகையாக எண்ண வேண்டும் என்னும் உயர்ந்த கருத்தை அருணகிரிநாதர் தெரிவித்துள்ளார். நல்ல வாழும் முறையைக் கற்பிக்கும் அழகிய பாடலாக இது அமைந்துள்ளது.

III சக்கரம்


இந்தப் பாட்டுக்குரிய சிறப்பு எழுத்து ''ஆ''காரம் ஆகும். ''ஆ'' என்னும் எழுத்துக்கு ஆக்கம் என்றும், அமிழ்தம் என்றும் பொருளுண்டு. இப்பாட்டின் சக்கரத்துக்குரிய அதி தேவதை ''அமிழ்த தேவன்'' ஆகும். 'ஆ' என்பது ஆச்சரியத்தையும், ஆசையையும் குறிக்கும். சாதாரண மக்கள் சிங்கார மடந்தையரை ''ஆ'' என்று வாய் திறந்துகொண்டு தவறான நோக்கோடு ஆசையுடன் காண்பர். அதே பெண்களை உயர்ந்தோர் ''இது அம்பிகையின் உருவம்'' என்று ஆச்சரியத்தோடு 'ஆ' என்று பார்ப்பர். அருட்சத்தியே அழகு சத்தியாக மாயா மலப்பொருள்களை மூடிக்கொண்டு அழகைக் காட்டுகிறது என்பதனை உணர்ந்து கொள்வர். 'வ'கரம் (அருள் அம்மை) 'ந'கரமாக திரோதாயியாக (மறைப்பு அம்மையாக) வேலை செய்வதை அறிவர்.

அ, இ, உ, எ, ஒ ஆகிய உயிர் எழுத்துக்களுக்குப் பிரம்ம மந்திரம் என்று பெயர். அவை நமசிவய என்னும் ஐந்தெழுத்துக்கு ஒப்பானவை. இவை தனியாக இறைவனைத் தியானிப்பதற்கான குற்றெழுத்துக்கள் ஆம். நெட்டெழுத்துக்களாகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஓ சடங்குகளுக்கு உரியவை.

மற்றும் மந்திர எழுத்துக்களை இயக்குவதற்கென்று வேறு மூல ஒலிகளும் உள்ளன. அவற்றுக்கு பீஜாட்சரங்கள் - வித்தெழுத்துக்கள் என்று பெயர். அவை இன்ன மந்திர எழுத்துக்கு இன்ன பீஜாட்சரம் என்று வகுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

'ந'கரத்துக்குரிய பீஜாட்சரம் ஐம் ஆகும்.
'ம'கரத்துக்குரிய பீஜாட்சரம் க்லீம் ஆகும்.
'சி'கரத்துக்குரிய பீஜாட்சரம் சௌம் ஆகும்.
'வ'கரத்துக்குரிய பீஜாட்சரம் ரீம் ஆகும்.
'ய'கரத்துக்குரிய பீஜாட்சரம் ஸ்ரீம் ஆகும்.

இனி இப்பாடலுக்கான சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-35

விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதி காண மலர்க்கழல் என்று அருள்வாய்?
மதி வாள் நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா சுர பூபதியே!

I பொழிப்புரை

விதியால் வரையறுத்துக் கொடுக்கப்படுகின்ற இந்த உடம்பை (யோகம், தவம் போன்ற ஆன்ம வளர்ச்சிப் பாதைகளில்) விடாத வினையுடையேன் ஆகிய நான், முத்தி நெறியைக் காணும்பொருட்டு (ஞானம் ஆகிய) மலர் போன்ற உன் திருவடியை (எனக்கு) என்று அருள் செய்யப்போகின்றாய்? நிலவொளி பொருந்திய நெற்றியை உடைய வள்ளியை அல்லாமல் வேறு ஒருவரையும் எண்ணாத விரதம் உடையவனே! தேவர் தலைவனே!!

II விளக்கவுரை

(1) விதி காணும் உடம்பை விடா வினையேன்

'விதி' என்னும் சொல்லுக்கு ஊழ், முறைமை, திட்டம், பிரமன் என்று பொருள்கள் உள்ளன. 'விதி காணும் உடம்பு' என்றது, இறைவன், வரையறுத்துக் கொடுத்த திட்டப்படி பிரமனால் படைக்கப் பட்ட உடம்பு ஆகின்றது.

நம்முடைய எண்ணங்களும் செயல்களுமே நம் வினைகளாகின்றன. இவையே நமக்கு உள்ளுடம்பை அமைக்கின்றன. உள்ளுடம்புக்கு ஏற்பப் பரு உடம்பு அமைகின்றது. இப்படைக்கும் தொழிலைப் பிரமன் செய்கின்றான். பிரமன் என்பது இறைவனுடைய ஞான சத்தியாகும். இச்சத்தியின் அதிதேவதைக்குப் பிரமன் என்று பெயர்.

சிலர், படைப்புத்தொழில் இயற்கையாக நடைபெறுகிறது என்பர். ஆனால் இயற்கை ஓர் அறிவற்ற சடப்பொருள் ஆகும். ஒரு சடப்பொருள் ஓர் அறிவார்ந்த செயலைச் செய்ய இயலாது. எனவே அவர்களுடைய கொள்கை தவறுடையதாகின்றது.

உடல் படைக்கப்படும்போது, அதற்குரிய ஆன்மாவுக்கு இப்பிறவியில் துய்க்க வேண்டிய நல்வினை தீவினைகளுக்கு ஏற்ற சூழல் அமைக்கப்படுகிறது. அந்த வினைகளைத் துய்த்து முடிந்த உடனே அந்த உடல் அழிந்து விடுகிறது. அதாவது வினை இன்றேல், உடம்பு இல்லை.

ஆனால் உடல் மாய்ந்த உடனே, வினை முடிந்து விட்டதென்று கொள்வதற்கில்லை. அது அவ்வளவு எளிதாக முடிவதில்லை. வினையின் தொகுப்பு மலைபோன்றதென்றால், ஒரு பிறவியில் கொடுக்கப்படும் வினை, தினை அளவினதேயாகும்.

ஒரு பிறவி முடிந்ததும், வினைத்தொகுப்பிலிருந்து மற்றொரு தினையளவு அடுத்த பிறவிக்குக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு பிறவிகள் தொடர்ந்து செல்கின்றன. வினைத் தொகுப்பை ஒரு சேர ஒரே பிறவியில் துய்க்க முடியாதானமையால் இந்த அமைப்பு இருந்து வருகிறது.

நம் செயல்களே நமக்கு வினையாக வருகின்றன என்று பார்த்தோம். நாற்று நடுவது செயலானால், விளைச்சல் வினை ஆகின்றது.

ஆனால் எல்லாச் செயல்களும் வினையாவதில்லை. அடிபடுவதனால் உண்டாகும் காயங்கள் எல்லாமே புண்ணாவதில்லை. சில வெட்டுக்காயங்கள் அவற்றின் வடு கூடத் தெரியாதபடி ஆறிவிடுகின்றன. சில, புண்ணாகி, புடம் வைத்துப் பெருந்துன்பம் தருகின்றன. செயல்களின் நிலைமையும் அத்தகையதே. சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு வெட்டுக்காயம் புண்ணாகிப் புடம் வைக்கும். அதுபோல 'யான்', 'எனது' என்னும் தன்னுணர்வு மிக்குடையவர்களின் செயல்கள் வினையாகப் பல்கி வருவதோடு, பிறவியைத் துன்பத்தில் ஆழ்த்தி விடும்.

தன்னுணர்வு இல்லாதவர்களுடைய செயல்கள் வினை கொள்வதில்லை. செயலளவில் நின்று விடுகின்றன. அச்செயல்களுக்கு 'இறைபணி' என்று பெயர். அச்செயல்களில் தன்னுணர்வு இல்லாமையால் இறைவுணர்வு நிறைந்திருக்கும். எனவே அப்பெயரைப் பெற்றன.

'இறைபணி' செய்பவர், குறிப்பிட்ட ஒரு மனிதரானாலும், அவர் செய்யும் செயல்களைத் தாம் செய்தனவாக எண்ணுவதில்லை.

''என்னால் ஆவது ஒன்றுமில்லை'', ''எல்லாம் அவன் செயலே'' என்னும் உணர்வோடு (அதாவது தன்னுணர்வு இல்லாமல்) செய்வர். மற்றும், செயலின் ஒவ்வொரு அணுவும் இறைவனாலேயே செய்யப்படுகிறது என்னும் நம்பிக்கையும் தெளிவும் அவர்களுக்கு அநுபவத்தில் இருக்கும். அதனால் அச்செயல்களுக்கு வினை வளருவதில்லை.

ஞானசம்பந்தர் செய்த செயல்கள் இந்த இறைபணியைச் சேர்ந்தவையே. அவர் பல அற்புதச் செயல்களைச் செய்துள்ளார்; அரிய புரட்சிகளையும் செய்துள்ளார். ஆனால் அவற்றை எல்லாம் அவர், தாமே செய்ததாக எண்ணவில்லை. ''ஆலவாய் அரன்'' உடன் இருந்து, அவனே செய்ததாக எண்ணினார். மற்றும் அவர் திருவாயால் உரைத்தவை இறைவனுடைய உரையாகவே எண்ணி னார். அவர் தன்முனைப்புச் சிறிதும் இல்லாதவரானதனால், அவர் எண்ணியபடி இறைவனே உடனிருந்து செய்தான்.

''தொண்டனேன் விளம்புமா விளம்பே'' என்னும் தொடரில், விளம்புவது தொண்டரானாலும் அதனை உள்ளிருந்து விளம்பச் செய்வது இறைவனாதல் வேண்டும் என்பது வெளியிடப்பட்டது. அந்த அளவுக்குத் தம்மையே இறைவனிடம் ஒப்படைத்துத் தம்மை ஆளும்படி இடம் கொடுத்துச் செயல்படுவது ''இறைபணி'' ஆகின்றது. நாயன்மார்கள் செய்த செயல்கள் எல்லாம் இறைபணி களே.

பிறருக்குக் கொடுப்பது நல்ல செயல். அதன் விளைவாக வருவது நல்வினை. ஆனால் தாம் கொடுப்பதை மற்றவர்கள் அறிந்து தம்மைப் போற்ற வேண்டும் என்னும் எண்ணத்தோடு கொடுப்பது வேதனை கலந்த நல்வினையாய் வரும். அதனாலேயே அருணகிரி நாதர் தாம் பாடியருளிய ''கெடுவாய் மனனே'' என்னும் ஆறாவது பாடலில் கொடுப்பது அவசியம் என்று கூறியதோடு கொடுக்கும் போது ''வடிவேல் இறைதாள் நினைவாய்'' என்றார். இறைதாளை நினைத்துக்கொண்டு (தன்னுணர்வு இல்லாமல்) கொடுக்கும்போது, அச்செயலுக்கு வினை வளருவதில்லை.

இனி, வினையை நம்பாதவர்களும் சிலர் உள்ளனர். முன்னே பல பிறவிகள் நமக்கு இருந்தன என்பதனையும், இனியும் பல பிறவிகள் வர இருக்கின்றன என்பதனையும் அவர்கள் ஏற்றுக்கொள் வதில்லை. ஆனால், நாம் அறிவு கொண்டு ஆராயும்போது, எந்தச்

செயலும், காரணமில்லாமல் நிகழ்வதில்லை என்பதனை உணரமுடியும். ஒரு மனிதன் நூறு ஆண்டுகள் வாழ்கின்றான். அந்த வாழ்வுக்காக, ஒரு பிறவி எடுக்கின்றான். அந்தப் பிறப்பாகிய நிகழ்ச்சி காரணமில்லாமலா நடைபெறும்? அவனுடைய நூறாண்டு வாழ்வுக்கு ஒரு பயனும் இல்லாமலா போகும்? இதனை ஆழ்ந்து எண்ணிப்பார்த்தால் ஓர் உண்மை விளங்கும்: நாம் இதுவரை வாழ்ந்துள்ள முன் பிறவிகள், இப்பிறவிக்குக் காரணமாய் இருந்துள் என. இப்பிறவியின் பயனாக அடுத்த பிறவி வர இருக்கின்றது. அடுத்த பிறவியில் நாம் துய்க்கப் போகும் இன்பதுன்பங்களுக்கு நாம் இப்பொழுது செய்பவையே காரணமாக அமைய உள்ளன. எனவே, அடுத்துவரும் இன்பதுன்பங்களுக்கு நாமே காரணமாவோம். பிறரால் நாம் துன்புறுகிறோம் என்பது சரியன்று. ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்றதனால் இந்த உண்மை விளங்கும்.

முன் பிறவிகளின் நினைவுகள் சிலருக்கு வருவதுண்டு. அவர்களுக்கு இன்றைய இன்ப துன்பங்களின் காரண காரியங்கள் புலப்படும். முன் பின் பிறவிகளில் அவர்களுக்கு ஐயப்பாடு வருவதில்லை. இவற்றின் நிலைகளை நன்கு உணர்ந்த திருவள்ளுவரைப் போன்ற சான்றோர்கள் ''எழுமை'' என்றும் ''எழு பிறப்பு'' என்றும் பல இடங்களில் குறிப்பிடுவர். முன் பின் அறிந்து அறம் செய்ய வேண்டும் என்று அறனை வலியுறுத்துவர். இவற்றைக் கருத்தில் கொண்டு வினைக்கு அஞ்சுவோர் தவறுகளைச் செய்ய மாட்டார்கள். தம் செயல்கள் வினை கொள்ளாதபடியும் பார்த்துக் கொள்வர்.

நிற்க, சிலர் ஒரு வேலையைத் தொடங்கினால், அதனை முடிப்பது பற்றி எண்ணுவதில்லை. அதனை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே செல்வர். மற்றும் அச்செயல் தன்னுணர்வோடு செய்யப்படுமானால், புதிய வினைகள் முளைக்கின்றன. அவற்றுக்கு ஏறுவினை (ஆகாமிய வினை) என்று பெயர். இவை, இப்பிறவி முடிந்த உடனே, பழைய வினைத்தொகுப்போடு சேர்ந்து விடுகின்றன. இவ்வாறு பழையதும் புதியதும் ஆகிய வினைகளைத் தொடர்ந்து துய்த்துக்கொண்டே இருக்கவேண்டியுள்ளது.

இத்தொடர்ச்சியை வளர விடாமல் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுவது அவசியமாகும். அதற்கு நாம் ஒரு துணிவு கொள்ள வேண்டும். அதாவது ''பிறந்து விட்டதனால் எப்படியும் வினையைத்

துய்க்கப் போகின்றோம். அவற்றுள் பல துன்பங்களும் இருக்கும். அவற்றை அநுபவிக்கும்போது, தன்னுணர்வு இல்லாமல், இறைவனுக் காக என்றோ, பிறர்க்காக என்றோ அவற்றை அநுபவித்தால், புதிய வினையாவது வராமல் இருக்கும். பட்டினி இருக்க வேண்டி வந்தால் அதனை இறைவனுக்காக நோன்பிருப்பதாக மாற்றிக்கொள்வோம், அவ்வாறே பிற துன்பங்களையும் ஏற்போம்'' என்று நம் உணர்வை மாற்றிக்கொள்ள வேண்டும்.

காந்தியடிகள் அவ்வாறு செய்துள்ளார். அவர் தன்னுணர்வு இன்றி, மக்களுக்காக எவ்வளவோ நாட்கள் சுற்றி அலைந்தும், சிறையில் இருந்தும், பட்டினி இருந்தும் பலவாறு துன்புற்றார். இவை பிறர்க்காக ஏற்கப்பட்டதனால், துன்புறுவதும் எளிதாக இருந்தது. புதிய வினைகளும் முளைக்கவில்லை.

மேற்கூறிய முடிவுக்கு வரும் வரை ஆன்மாவின் வினை வாழ்வு முற்றுப் பெறுவதில்லை. செய்த குற்றத்தையே மீண்டும் செய்யும் இயல்பு இருந்துவரும். பசி, துன்பம், பகை, அச்சம், நோய், இடையூறு, சிக்கல் முதலியவை இப்பிறப்பில் இருப்பதை அறிந்தும், அதனை மாற்றும் எண்ணம் வருவதில்லை. அதனால் மீண்டும் மீண்டும் உடம்பெடுக்க வேண்டியுள்ளது. எனவேதான் அருணகிரி நாதர் ''விதி கண்ட உடம்பை'' என்று முடிக்கும் கருத்தில் இறந்த காலத்தில் கூறாமல் ''விதி காணும் உடம்பை'' என்று தொடரும் கருத்தில் நிகழ்காலத்தில் கூறியுள்ளார்.

உடம்பு எலும்பாலும், தசையாலும் செய்யப்பட்டதானாலும், எண்ணிப்பார்ப்போர்க்கு அதில் ஞானப்பதிவும், அக அமைப்புகளும் இருப்பது புலப்படும்.

ஒரு பெரியவரிடத்தில் ஓர் ஓவியத்தைக் கொடுத்தால், அவர், அதைப்பார்த்த உடனே அதனைத் தீட்டியவர் யார், அவரைப்பற்றிய செய்திகள் என்ன, ஆகிய விவரங்களை அறிய விரும்புவார். மற்றும் அந்த ஓவியம் உணர்த்தும் உணர்வுச் சிறப்புகளைக் கண்டு வியந்து பாராட்டி அநுபவிப்பார். அதோடு, அதைப்போன்ற ஓவியத்தைத் தாமும் தீட்ட வேண்டும் என்று விரும்புவார்.

அதே ஓவியத்தை ஒரு குழந்தையிடம் கொடுத்தால், தன் அளவுபட்ட சிறிய அறிவுகொண்டு அநுபவிக்கும் அல்லது சும்மா இருந்துவிடும்.

நம் உடம்பு இறைவனால் தீட்டப்பட்ட ஓவியத்தைப் போன்ற தாகும்.மேற்கூறிய குழந்தையைப் போலல்லாமல், அப்பெரியவரைப் போல், உடம்பை அமைத்தவரைப் பற்றியும், உடம்பின் அமைப்புப் பற்றியும், அதன் காரண காரியங்களையும் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். அவ்வாறு எண்ணிப்பார்த்தால் இந்த உடம்பைக் கொண்டு நாம் என்ன செய்ய வேண்டும். இது அநுபவிப்பதற்காக மட்டும்தான் உள்ளதா அல்லது இதைக்கொண்டு வேறு பயன்களைப் பெறவேண்டியுள்ளதா, இது எந்த நோக்கத்தோடு இறைவனால் கொடுக்கப்பட்டது என்றெல்லாம் தோன்றும். இவ்வெண்ணங்களின் பயனாக இறுதியில் ஒரு தெளிவும் பிறக்கும். அத்தெளிவு பெற்ற அருணகிரிநாதர் இவ்வுடம்பை ''விடா வினையேன்'' என்று கூறி வருந்தினார்.

உடம்பை ''விடு''தலாவது - ''இதுகாறும் இதனை நடத்தி வந்த போக்கிலேயே விட்டுவிடாமல் கட்டுப்படுத்தி ஆன்ம வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் உயர்ந்த பாதையில் விடுதல். சுருங்கச் சொன்னால் ''தீய வழியில் செல்வதை மாற்றி நல்வழிக்குச் செல்லும்படி விடுதலாகும்.''

அவர் குறிப்பிடும் நல்வழி - யோகம், தியானம் முதலியவை யாம். உடம்பு புலனுணர்வில் சிக்குண்டு தாழ்ந்து போவதை மாற்றி, நோன்புகளை மேற்கொண்டு, நல்ல சொல், நல்ல செயல், நல்ல நினைவுகளில் பழகும்படி விடுவதாகும். அவ்வாறு ''விடாத (தீ)வினையேன்'' என்று தம் நிலையை எண்ணி வருந்துவதாகக் கூறியருளினார்.

(2) கதி காண மலர்க்கழல் என்று அருள்வாய்?

'கதி' என்பது முத்தியைக் குறிக்கும். அது நடை, போக்கு என்றும் பொருள்படும். முருகன் திருவடியை அருள வேண்டும் என்றும், அதன் வழிச்சென்று முத்தியைப் பெறுவதாகவும், அத்திரு வடியை எப்பொழுது அருளுவார் என்பதனைச் சொல்ல வேண்டும் என்று கேட்கின்றார்.

'மலர்க்கழல்' என்பது, மலர் போன்ற திருவடி அல்லது ஞானம் ஆகும். அது ஆன்மாவை அறியாமையாகிய மலத்திலிருந்து கழலுவிப்பதால் 'கழல்' எனப்பட்டது.

''திருவடியை அருளுவது எப்பொழுதேனும் இருக்கட்டும்; அதனை என்றைக்கு அருளப்போகிறாய் என்பதனையாவது சொல்லி யருளுக'' என்று கேட்கின்றார்.

இறைவனுடைய திருவடி கிடைத்தால்தான் ஆன்மா, அருள் நடையில் செல்ல முடியும். அதைப்பற்றிக்கொண்டுதான் மேல் நிலைகளை அடையும்.

மாணிக்கவாசகருக்குத் திருப்பெருந்துறையில் திருவடி கிடைத்தது. அதன் பிறகுதான் அவர் தம் உலகியல் நடையிலிருந்து அருள் நெறியில் செல்ல முடிந்தது.

''திருவடி'' என்னும் சொல் பல கருத்துக்களில் பல நிலைகளில் வைத்துப்பேசப்படும். இங்கு அருணகிரிநாதர் குறிப்பிடுவது இறை சத்தியையாகும். இச்சத்தி மலத்தினாலான (மாயையாலான) உலகத்தில் ஊடுருவி, அந்த அழுக்குப் பொருளுக்குக் கவர்ச்சியையும், அழகையும் ஊட்டி, அதன் வழி ஆன்மாக்களை ஈர்த்து, அவற்றின் சிற்றறிவைக் கிளறி, அச்சிற்றறிவால் உலக அழகை அறிந்து கொள்ளும்படித் தூண்டி, பிறகு அந்த அழகு எங்கிருந்து வந்தது என்பதனை ஆராயும்படிச் செய்து, இறுதியில் அந்த அழகுக்கு இருப்பிடமாகிய மெய்ப்பொருளை நாடுமாறு செய்கின்றது. இந்த அரிய பெரிய வேலையைச் செய்வதுதான் ''திருவடி'' ஆகும்.

அருணகிரிநாதருக்குத் திருவடியைப் பெறுவதில் உள்ள ஆர்வம் அவர் கேள்வியால் புலப்படுகின்றது. அந்த உணர்ச்சியின் வேகம் தான் இப்பாடலின் உயிர்ப்பாக உள்ளது. அது அவருடைய ஊக்கம், ஆர்வம், தாகம் அல்லது தீவிர உணர்வைக் காட்டுகின்றது. அந்த வேகத்தைப் பொருத்தே இறைவன் அருளுவது அமையும்.

திருவடியை அருளுவது என்பதும், 'அருள் பதிவு' என்பதும், 'சத்தினிபாதம்' என்பதும் ஒன்றே. அதனைப் பெறுவதற்கான தீவிரம் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை 1) மந்ததரம் 2) மந்தம் 3) தீவிரம் 4) தீவிரதரம் என்பன. இவற்றுள் இப்பாடல் காட்டும் உணர்வு நான்காவதாகிய தீவிரதரத்தைச் சேர்ந்ததாகும்.

(3) மதிவாள் நுதல் வள்ளியை அல்லது பின் துதியா விரதா சுர பூபதியே!

'மதிவாள் நுதல் வள்ளி' என்பது நிலவுபோன்ற ஒளி பொருந்திய நெற்றியை உடைய வள்ளியாகும். 'வள்ளி' என்பது

குண்டலிசத்தி என்பதனை முன்னமே பார்த்துள்ளோம். வள்ளியை அல்லாத வேறு யாரையும் எண்ணாத விரதம் உடையவன் முருகன். அவன் வள்ளியை ஆட்கொள்வதையே நோக்கமாக உடையவன் ஆவான். அதாவது குண்டலிசத்தியை மேலேற்றிய ஆன்மாக்களுக்கு அருள் செய்வதே அவனுடைய விரதமாகும்.

முருகன், வள்ளியை விரும்புவது - மதிவாள் நுதல் வள்ளிக்கு இருப்பதானாலேயே ஆகும். மதி என்பது அறிவு. அறிவு, ஆராய்ச்சி உடையதாய், நடு நிலையுடையதாய், குணம் பொருந்தியதாய் விளங்கும். அந்த விளக்கம் நெற்றியில் தெரிவதனாலேயே ஒரு பெண்ணுக்கு மதிப்பு உண்டாகிறது. பெண்கள் (படிக்கா விட்டாலும்) இந்த நுண்ணறிவைப் பெற்றிருப்பர். இந்த நுண்ணறிவும், குறிப்பறியும் தன்மையும் இருப்பதனாலேயே பெண்கள் புகழப்படுவர்; கணவனும் விரும்புவான்.

இங்குக் குறிக்கப்படுகின்ற நெற்றியின் ஒளி மேல் பூச்சுக்களால் வருவதன்று. அது தவத்தால் வருவதாகும். அதாவது மூச்சுப் பழக்கத்தால் மூலாதாரத்தில் குண்டலியாகக் கிளம்பி, மார்பில் ஞாயிற்றொளியாகி, நெற்றியில் நிலவொளியாக ஒளிரும். மூச்சுப் பழக்கத்தோடு பத்தியும் இச்சிறப்பைத் தரும்.

இதயப் பகுதியில் அழுக்கு எரிக்கப்பட்டு, தூய்மை வருவது போல, நெற்றிப்பகுதியில் தண்மை நிலவி, குணச்சிறப்பைத் தரும். மற்றும் கருவுறுதலும் நிலவொளியால் நிகழும். இக்காரணம் பற்றியே நிலவைப் பெண் என்றனர். இத்தகைய சிறப்புடைய நிலவொளியைப் பெற்ற நெற்றியையுடைய வள்ளியை முருகன் நாடினான் என்பது கூறப்பட்டது.

மற்றும், இறைவனுடைய ஞான சத்தி முருகனாவான். ஞானம் என்பது அறிவு. அறிவு ஊக்கத்தையும், காரியத் திறமையையும் பெற்றிருக்க வேண்டும். இன்றேல் அறிவு பயன்படுவதில்லை. ஊக்கத்துக்கு இச்சா சத்தி என்றும், காரியத் திறமைக்குக் கிரியாசத்தி என்றும் பெயர். அதோடு சத்திகளைப் பெண்பாலாகக் கூறுவது மரபு. எனவே ஊக்கத்தை வள்ளி என்றும், காரியத் திறமையை தேவயானை என்றும் கூறினர். முருகன் ஊக்கத்தில் மும்முரமானவனாதலால், வள்ளியை அல்லது வேறு யாரையும் நினையாதவன் என்றார்.

முருகன் காரியத் திறமை உடையவன் என்பது சூரனைக் கொன்றதனால் வெளிப்படும். அந்த அரிய வீரச்செயலைச் செய்ததற் காகத் தேவர்கள் தலைவனாகிய இந்திரன் தேவயானையைக் கொடுத்து மணம் முடித்து வைத்தான். கொடையாக வந்ததைக் காரணமில்லாமல் மறுக்கக்கூடாதானதனால் முருகனும் ஏற்றுக்கொண் டான். அதனால் முருகன், தேவயானையை மனைவியாகக் கொண்ட வனானாலும், மும்முரமான ஊக்கம் உடையவனாதலால் வள்ளியை (இச்சா சத்தியை) நாடுபவன் என்பது குறிக்கப்பட்டது.

(மேலே குறிக்கப்பட்ட 'மகட்கொடை' ஞானசம்பந்தர் வாழ்க்கை யிலும் நிகழ்ந்தது. ஆனால் கொடையாக அளிக்கப்பட்ட பூம்பாவை யைத் தாமே உயிர்ப்பித்து எழுப்பியதால், அக்கொடையை மகளாக ஏற்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இதைப்போலவே சிங்கடியையும் வனப்பகையையும் தம் மக்களாக ஏற்றார்.)

'விரதா' என்பது தவத்தோன் ஆகும். முருகனுக்கு வள்ளியை அடைவதே தவமாக உள்ளது. அதாவது குண்டலியை மேலெழுப்பும் ஆன்மாக்களை நாடி உயர்த்துவதே அவனுடைய விரதமாகும்.


'சுர பூபதி' என்பது தேவர் தலைவன் ஆகும். தேவர் தலைவன் என்றதனால், தேவானையை உடையவன் என்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

ஆக, உடலைத் தவத்துக்குப் பயன்படுத்தும் ஆன்மாக்களை உயர்த்துவதே தன் இச்சையாக உடையவன் முருகன் என்பது இப்பாடலால் விளக்கப்பட்டது.

III சக்கரம்

இந்தப் பாடல் முருகனுடைய இச்சா சத்தியாகிய வள்ளியைப் பெறுவதையே சிறப்பித்துக் கூறுகின்றது. இச்சா சத்தியைக் குறிக்கின்ற எழுத்து 'இ' கரம் ஆகும். எனவே இப்பாடலின் சிறப்பெழுத்து 'இ'கரம் ஆகின்றது.

இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-36

"நாதா, குமரா, நம" என்று அரனார்
"ஓதாய்" என ஓதியது எப்பொருள்தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா! குறமின் பத சேகரனே!!

I பொழிப்புரை

சீகண்டருத்திரர், முருகனிடம் "நாதா, குமரா, நம; ஓதாய்" என்று கேட்டபோது, நீ அவருக்கு ஓதியது எந்தப் பொருளையாகும்?

பிரமன் முதலான விண்ணவர் தங்கள் தலைகளில் சூடுகின்ற மலர்ப்பாதத்தை உடையவனே! (ஆனால்) குறவர் குலத்தில் தோன்றிய மின்னற்கொடி போன்ற வள்ளியின் பாதத்தை (குண்டலி சத்தியைத்) தன் தலையில் சேர்ப்பவனே!!

II விளக்கவுரை

(1) "நாதா, குமரா, நம" என்று அரனார் "ஓதாய்" என ஓதியது எப்பொருள்தான்?

இந்தப் பாடல், ஓங்காரத்தின் உட்பொருளைத் தெரிவிக்கும்படி முருகனைக் கேட்டதாக அமைந்துள்ளது.

இங்கு அரனார் என்றது, முருகனுக்குத் தந்தையாகிய சீகண்ட ருத்திரர் ஆவார். அவருக்கு "ஆர்" விகுதி சேர்த்தமையால் அவர் உள்ளபடியே உயர்ந்தவர்தான் என்பதனைக் காட்டும். அவர் முருகனிடம் உபதேசம் பெற்றதனால், அவ்வளவு பெருமைக்கு உரியவரைவிட முருகன் உயர்ந்தவன் என்பது இதனால் தெரிவிக்கப் படுகிறது.

ஞானாசிரியர் நாதத்தை மாணவரிடம் உண்டுபண்ணுவார். அது ஞானச் சொத்தாகும். அது உயர்ந்த சொத்தாகும். அதனை மாணவருக்குத் தருபவர் "குரு" ஆகின்றார். அதனால் குருவின் நிலை மற்ற எல்லா நிலைகளையும்விடச் சிறந்ததாகிறது. குரு,

நாதத்தைத் தோற்றுவிப்பதனால் ''நாதா'' என்று அழைக்கப்படும் தகுதியைப் பெறுகின்றார். எனவே முருகனை ''நாதா'' என்று அரனார் விளித்தது முறையே ஆகின்றது. மற்றும் அவருக்கு உபதேசம் செய்ததனால் முருகன் ''சிவகுரு'' ஆனதும் முறையே ஆகும். இதனால் முருகனுக்குச் ''சுவாமி நாதன்'' என்னும் பெயரும் வந்தது.

நாதம் என்பது ஒலி. ஒலி தோன்றியபின் ஒளி தோன்றும். திருக்கோயிலில் மணியடித்தபின் தீபாராதனை நடைபெறும். அது போல, நாதம் தோன்றியபின் ஒளியின் திரட்சி உண்டாகும். திரட்சிக்குக் 'குமிழ்' என்று பெயர், 'குமரன்' என்பது ஒளியாகத் திரண்டவனைக் குறிக்கும். ஆக, அரனார் ''நாதா, குமரா'' என்று விளித்து 'நம' என்று வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

''நாதா குமரா, நம'' என்னும் தொடர் மந்திரச் சொல்லாக இருக்குமோ என்று சிலர் எண்ணக் கூடும். ஆனால் அத்தொடரில் மந்திரம் ஏதும் இல்லை. மற்றும் 'சரவணபவ' 'முருகாயநம' என்பவையும் மந்திரங்களல்ல.

மந்திரம் என்பது தவத்துக்கும் யோகத்துக்கும் பொருத்தமுடைய தாகவும், பெருவழக்குடையதாகவும் இருக்கவேண்டும். அத்தகைய சிறப்புகளை உடையது ''ஓம் நமசிவாய'' என்னும் ஆறெழுத்தே யாகும். திருவைந்தெழுத்தோடு "ஓம்" சேர்ந்து ஆறு எழுத்து மந்திரம் ஆகின்றது. ''ஓம்'' இல்லாத ஆறெழுத்தென்பது ஒன்றில்லை.

இனி, மேலோராகிய சீகண்டருத்திரர் ஓங்காரத்தின் பொருளை 'ஓதுக' என்றது அறியாமையால் அன்று. அவர் 'நாதா, குமரா' என்று விளித்ததனாலேயே ஓங்காரத்தின் அமைப்பையும் பொருளை யும் உணர்ந்தவரே என்பது விளங்கும். தெரிந்திருந்தும் முருகனைக் கேட்டதற்குக் காரணம், அவருடைய இணங்கிப்போகும் இயல்பைக் காட்டுவதாகும்.

''ஓதாய்'' என்னும் சொல்லுக்கு ''இப்போது சொல்க'' என்றும், ''உபதேசிப்பாய்'' என்றும் பொருளாம். ஆனால் அது வாயால் சொல்லக்கூடியதன்று. ஞானாசிரியர், தொடுவதாலும், பார்வை யாலும், மாணவரைப் பக்குவப்படுத்தி, உபதேசித்து எல்லாத் தத்துவங் களையும் தெளிவுபடுத்துவார். அதைக் கேட்க வேண்டிய முறையில் அடங்கி இருந்து கேட்பவருக்கு ஓதப்படும். உபதேசம் எப்படி வந்தாலும், நாதம் உள்ளே உருவாகும்.

''ஓம்'' ல் அ, உ, ம் ஆகிய மூன்றும், அவற்றின் காரியங்களாகிய நாதமும் விந்துவும் ஆக ஐந்து ஒலிகள் உள்ளன. ஓங்காரத்தை ''ஊமை எழுத்தெ''ன்றும் கூறுவர். ஊமை எழுத்து ஒருவர் சொல்லித் தெரிவதன்று. அது மோனத்தில் விளங்குவதாகும். அதனால் அதனை ''மௌன மந்திரம்'' என்றும் கூறுவர். அது தியானத்தில் தோன்றுவதாகும். அது தனியாக உச்சரிக்கக்கூடியதன்று. வேறு மந்திரங்களோடு சேர்ந்து வரும்போது அதனை உச்சரிக்கலாம்.

இந்த உலகம் பூதாகாசத்திலிருந்து (வான வெளியிலிருந்து) வந்தது. பூதாகாசம் அருளாகாசத்திலிருந்து வந்தது. அருளாகாசம் ஞானாகாசத்திலிருந்து வந்தது. ஞானாகாசத்துக்குச் **'சிற்சுக பரவெளி'** என்றும் **சிற்றம்பலம்** என்றும் **'சிதாகாசம்'** என்றும் பெயர்கள் உள்ளன. இந்த இடத்தில்தான் ஓங்காரம் தோன்றுகின்றது. ''ஓதியது எப்பொருள்தான்'' என்று அருணகிரியார் கேட்டது இப்பெருவெளி யையே யாகும்.

''எப்பொருள்தான்'' என்பதில் உள்ள ''தான்'' அசையன்று. அதற்கு ஒரு கருத்து உண்டு. அதாவது, ''அப்பொருள் எதுவாக இருக்கும்? பிறர்க்குத் தெரியாத அப்பொருள் எதுவாகும்? நீதான் அதனைச் சொல்லக்கூடியவன், எனவே சொல்லுக'' என்னும் கருத்தாகும்.

மேலே குறிப்பிட்ட (ஓங்காரம் தோன்றுகின்ற) ஞான வெளியிலிருந்தே (சிற்றம்பலத்திலிருந்தே) தேவாரம் திருவாசகம் போன்ற அருள் நூல்களும் தோன்றுகின்றன. இக்காரணம் பற்றியே அவற்றை ஓதும் முன்னரும், ஓதி முடித்த பின்னரும் ''திருச்சிற்றம்பலம்'' என்பர். மேற்கூறியவற்றால், ஓங்காரத்தின் இடம் எது என்பது விளங்கும். அத்தகைய சிறப்புடைய பொருளை ''எப்பொருள்தான்?'' என்று கேட்டதனாலேயே அது கேள்விக்கும் விடைக்கும் அடங்காதது; அது அநுபவப் பொருள் என்பதைக் காட்டுகின்றது.

(2) வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்பாதா!

''வேதா'' என்பது பிரமனைக் குறிக்கம். பிரமன் வேதத்தை ஓதுபவன் ஆவான். அவன் ஓதுபவனே அன்றி அதைப் படைத்தவன் அல்லன். படைத்தவன் வேதத்துக்குத் தலைவன் ஆவான். பிரமன் வேதத்தில் பழகுபவன் மட்டுமே ஆவான். அதாவது பிரமனுடைய நிலை - மனப்பயிற்சி, கல்வி, பகுத்தறிவு, கலை ஆகியவற்றின்

நிலையேயாகும். இந்த நிலையினர் வேதத்தை மற்றவருக்கு அறிவிக்க உரியவராவர்.

''பிரம்மா'' என்னும் சொல்லுக்குப் ''பெரியவர்'' என்று பொருளாகும். ஞானசம்பந்தரும் ''கற்றல் கேட்டல் உடையார் - பெரியார்'' என்று கூறியுள்ளார்.

எல்லா நூல்களிலும் பெரிதாய் இருப்பது வேதம் எனப்பட்டது. அதாவது எது அறிவார்ந்த பெரிய நூலோ அது வேதம் ஆகின்றது. அவரவரும், தாம் தாம் விரும்பியவற்றை வேதம் என்று சொல்லுவதால் இச்சொல் ஒரு பொதுச் சொல்லாகவும் இருக்கின்றது. எனினும் எது ஞான நூலாக உள்ளதோ அதுவே வேதமாகும்.

இந்த வேதத்தைக் கற்று, ஓதி, மற்றவரும் கேட்டறியும்படி உரைப்பவர் சமூகத்தில் சிறப்பிடம் பெறுகின்றார். அவரை மற்றவர்கள் பின்பற்றுவர். இங்கு ''வேதா முதல் விண்ணவர்'' என்று சொன்னதனால், பிரமனும், அவரைப் பின்பற்றுகின்ற விண்ணுலகத்தைச் சேர்ந்தவராகிய கந்தருவர் முதலாயினோரும் ஆவர். அவர்களின் எண்ணிக்கை 33 கோடி என்பர். இவர்கள் பல்வேறு புவனங்களில் இருப்பவராவர். பொதுவான தேவர்களேயன்றி, சிறப்புடைய திருமால், மகேசுரர், உருத்திரர், சதாசிவர் ஆகியோரும் ''விண்ணவ''ரில் அடங்குவர்.

மற்றும், உலகிலுள்ள மனிதர்களிலும், கற்றல் கேட்ல் உடையவராய், தெய்வ நெறியைப் பின்பற்றுபவரும் ''விண்ணவர்''களைப் போன்றவர்களே. ஏனெனின், 'விண்' என்னும் சொல்லுக்கு வரம்பில்லா வானம் என்றும் விடுதலை என்றும் பொருளாகும். எனவே, பிறவியிலிருந்து விடுதலை பெற முயல்வோர், நிலவுலகில் இருந்தாலும் விண்ணவராகக் கருதப்படுவர்.

ஆக, மேற்கூறிய விண்ணவர்களனைவரும், பிறவியிலிருந்து விடுதலை பெற முருகனின் மலர்ப் பாதத்தைத் தலையில் சூடுவர், என்று அருணகிரியார் கூறுகிறார்.

''சூடுதல்'' என்பது அடையாளம் தெரியும்படி அழுந்த அணிவதாகும். தேவர்கள் இறைவன் திருவடியைச் சுவடுபடும்படி அணிந்து கொள்வர். (மூவேந்தரும் மலரைச் சூடினர். ஆனால் அவர்கள் சூடியது தாம் இன்னார் என்பதனைக் காட்டுவதற்காகும்.

மற்றும் அவர்கள் போருக்குப் போகும்போது கறுவிக்கொண்டு போவதால் வஞ்சி மாலையையும், வெற்றியுடன் திரும்பும்போது வாகை மாலையையும் சூடினர்). தேவர்கள் திருவருட் போக்கு உடையவர்கள் என்பதனைக் குறிக்க இறைவன் திருவடியைச் சூடுவர். (மாணிக்கவாசகர் இறைவன் திருவடியைச் சூடியது - தமக்கு ஞானம் ஒன்றே நோக்கமாகும். — வேறு நோக்கம் இல்லை என்பதனைக் குறிப்பதாகும்).

சூடுதல், அழுந்தப் பதியும்படி அணிவதோடு, வளைந்து அணிவதும் ஆகும். வளையும்படி அணிவதற்குக் காப்பு என்றும் பெயருண்டு. ஒரு தலைவர் சொல்லும்போது அவர் முன்னும் பின்னும் தொண்டர்கள் சூழ்ந்து செல்வர். அவர்கள் அத்தலைவருக் குப் பாதுகாப்பாகவும் இருப்பர். இறைவன் திருஉருவங்களுக்கும் சூழ ஒரு திருவாசி இருக்கும். அது ஓங்காரத்தைக் குறிக்கும்.

நம் தலைப்பகுதி அறிவுக்கு இடமாகும். அதைப் பாதுகாப்பதற் குச் சூழ அணியக்கூடியது அருளைக் குறிக்கின்ற இறைவன் திருவடியாகும். இறைவன் திருவடியைத் தவிர வேறு எதையும் அணிவது கூடாது. (சேரன் செங்குட்டுவன், ஒரு சிறந்த சிவ பத்தன். அவன் இறையருளைப் பெற்றவனும் ஆவான். அருள் பலத்தைக் கொண்டே இமயம்வரை சென்று வெற்றி பெற்றான். அந்தப் பேர் அரசன் திருநெல்வேலியில் ஒரு முறை திருமால் கோயிலில் வணங்கும்போது, கோயிலார் திருமாலின் திருவடியை வைக்க வந்தனர். அரசன் அதனைத் தன் தலைமேல் கொள்ளாமல், தன் தோளில் கொண்டான். தலை இறைவன் திருவடி ஒன்று மட்டுமே பதித்ததற்குரியது என்பது இதனால் புலனாகும்).

அடுத்து, நாம் ஒருவர் வீட்டுக்குச் சென்றால், அந்த வீட்டார் நம்மை வரவேற்பாரானால், நம் உள்ளம் மலரும். இல்லையேல் குவியும். அவ்வாறே, இறைவன் திருவடியை விண்ணவர் விரும்பி ஏற்பதனால், அத்திருவடி மலரும். அதாவது அத்திருவடி ''மலர்ப்பா தம்'' ஆகின்றது. அத்தகைய பாதத்தை உடையவன் முருகன் ஆவான். எனவே ''விண்ணவர் சூடும் மலர்ப்பாதா'' என்றார்.

[திருவின் (இலக்குமியின்) இயல்பும் திருவடியைப் போன்றதே யாகும். நற்பண்பு உடையவர்களிடத்தில் திரு மலர்ச்சியாக இருப் பாள். திரு உள்ள இடத்தில் பாக்கியம் இருக்கும். பாக்கியம் வேறு; பணம் வேறு. பாக்கியத்தால் வருவது பணம். பணம் இல்லாவிட்டா

லும் பாக்கியம் இருந்தால் போதுமானது. பணம் இருந்தால் பகை, பயம் முதலியன வரும். பாக்கியத்துக்கு அத்தகைய குறைகள் வருவதில்லை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஉடையவர். அதனால் அவருக்குப் பணமும் பண்டமும் வேண்டியபோது வந்தன. சேரமான் பெருமாள் நாயனாரும், குண்டையூர்க் கிழாரும் பணத்தையும் பண்டத்தையும் கொடுத்தனர். சிலரிடம் பணம் இருக்கலாம்; பாக்கியம் இருக்காது. அத்தகையோரிடம் 'திரு' மலர்ச்சியாய் இருக்க மாட்டாள். இறைவனிடம் பத்தியாய் இருப்பவரிடம் திரு, மலர்ச்சி யாய் இருப்பாள். வேண்டுதல் செய்வாரிடம் மலரமாட்டாள்].

(3) குறமின் பத சேகரனே!

''விண்ணவர் சூடும் மலர்ப்பாதா'' என்னும் தொடருக்கும், ''குறமின் பத சேகரனே'' என்னும் தொடருக்கும் இடையில் ''ஆனால்'' என்னும் கருத்தை வருவித்துக்கொள்ள வேண்டும். அதாவது முருகன், விண்ணவர் தலையில் சூடுகின்ற திருவடியை உடையவன்; ஆனால் அவன் தன் தலையில் வள்ளியின் பாதத்தைச் சூடுகின்றவனாய் இருக்கின்றான் என்பதாகும். இதனால், வள்ளியின் பாதம் எல்லாரும் சூடிக் கொள்ளத் தக்கதாக உள்ளது என்பது குறிக்கப்பட்டது.

''குறமின்'' என்பது குறத்தியாகிய மின்னற் கொடி போன்ற வள்ளிப் பிராட்டியாவார். முன்பு விளக்கப்பட்டதைப்போல் வள்ளி என்பது குண்டலி சத்தியாகும். வள்ளியின் பாதம் என்பது மேலே குறிக்கப்பட்ட 'சிற்சுக பரவெளி'யாகும். அது அனைவருடைய தலையிலும் சேர்க்கத்தக்க ஞான வெளியாகும்.

குழந்தை பளிங்குபோன்ற உள்ளம் உடையது. அத்தகைய உள்ளம் உடைய வள்ளியின் தன்மையை மதித்து, அவ்வம்மையின் பக்குவத்தைத் தன்னிடம் சேர்த்துக் கொள்பவன் முருகன் என்பது கூறப்பட்டது.

பக்குவம் அடைந்த ஆன்மாக்களை இறைவன் அவ்வாறு ஏந்திக் கொள்வான். அவன் தன் அன்பர்களின் எலும்பை அணிந்து கொள்கிறான் என்பதும் இக்கருத்தைக் கொண்டதேயாகும். ஆன்மாக் களின் பக்குவத்துக்கு இறைவன் வைக்கும் மதிப்பும் அன்பும் அத்தகையதாகும்.


அடியை முடியில் சூடுவது என்பது பணிவைக் காட்டும். ''கீழோராயினும் தாழ உரை'' என்பதில் ஒரு சிறப்புக் கருத்தும் உள்ளது. அதாவது, அனைவர்க்கும் தாழ உரைக்க வேண்டும் என்னும் கருத்துடன், தாழ்ந்தோர் பக்குவம் அடைய வேண்டுமே என்னும் நோக்கத்தோடு, அவர்களுடன் இணங்குவதாகும். அவ்வாறே ஆன்மாக்கள் பக்குவம் அடையவேண்டுமே என்பதற்காக இறைவன் அவற்றுக்குப் பணிகின்றான். இறைவன் ஒருவனே பெரியவன் ஆவான். அதில் சிறிதும் ஐயம் இல்லை. என்றாலும் அவன் அவனுடைய பெருநிலையிலேயே இருந்துவிட்டால், ஆன்மாக்களோடு இணக்கம் இல்லாமல் போய்விடும். அதனால் அவற்றுக்குத் தெளிவும் வளர்ச்சியும் உண்டாகமாட்டா. அவற்றுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதே அவனுடைய நோக்கமாய் இருப்பதனால், அவன் பணிந்து, இணங்கி வருகின்றான். அதனால் அவற்றுக்கு அவன் அடிமை ஆவதென்பது இல்லை. அவனுடைய இணக்கமே 'குறமின்பத சேகரனா'வதற்குக் காரணமாகும்.

III சக்கரம்

இந்தப் பாடலில் ஓங்காரத்தின் (பிரணவத்தின்) பொருளை உபதேசிக்கும்படிக் கேட்பதும், உபதேசிப்பதும் குறிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரிடம் உபதேசம் கேட்கும் மாணவர் ''ஈவார் முன் இரப்பார் போல்'' இரந்து கேட்பார். அந்த இரந்து கேட்கும் நிலையைக் குறிக்கும் எழுத்து 'ஈ' காரம் ஆகும்.

எனவே இப்பாடலின் சிறப்பெழுத்து 'ஈ' ஆகும். இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-37

கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே! பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே!

I பொழிப்புரை

மனமே! (ஆணவமாகிய) மலையிடத்தில் விடுகின்ற (சிறப்பான ஒழுங்குடைய) ஞான வேல் முருகனுக்கு, வேலைக்காரனாகிய நிலையைப் பொருந்துதலையே விரும்பிச் செய்வாயாக! பொறுத்துக் கொள்வதால் வருகின்ற ஞானத்தால் அகந்தையை அடியோடும் அரிந்துவிடுவாயாக!

II விளக்கவுரை

இதுவரை பார்த்த பாடல்களுள் பெரும்பாலானவை முருகனை விளித்துச் சொல்லுவதாக அமைந்துள்ளன. இந்தப் பாடல் முருகனை அழைக்காமல், மனதை அழைத்துச் சொல்லுவதாக அமைந்துள்ளது.

அருணகிரியார்; தம் மனதைப் பார்த்துச் சொல்லுவதானாலும், அவரவரும், பாராயணம் செய்யும்போது தத்தம் மனங்களை அழைத்து இதிலுள்ள அறிவுரைகளைக் கூறிக் கொள்ளலாம்.

(1) கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்

'கிரி' என்பது மலை, இங்கு மலை ஆணவத்துக்கு உருவகமாக வந்துள்ளது. உருவகம் செய்வதால், கருத்துக்களை நன்கு புலப்படுத்த முடிகிறது. நுண் பொருள்களை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமானால் இது தேவையாகின்றது. உருவம் இல்லாத இறைவனை மற்றவர்களுக்கு எப்படி புரியவைப்பது? ''கற்பனை கடந்த சோதி'' என்று சொன்னால், அவன் ஒளியானவன், எட்டாதவன் என்பது புலப்படும். ''கருணையே உருவமாகி' என்னும்போது, எட்டாதவனானாலும் கருணையால் இரங்கி வரு

வான் என்பது புலப்படும். மற்றும், இதுவரை பார்க்காத ஒருவரை ''சிங்கம்'' என்று சொல்லும்போது, அவர் கம்பீரமாகவும் கடுமையாக வும் வீரமாகவும் இருப்பார் என்பதனைப் புரிந்து கொள்வோம். அவ்வாறே ஒருவரைத் ''தராசு'' என்று சொன்னால், அவர் நேர்மையானவர் ஓரவஞ்சனை இல்லாதவர் என்பதைத் தெரிந்து கொள்வோம். அதைப்போல இங்கு மலை என்னும்போது, ஆணவம் பெரிதாகவும், உணர்வற்ற அசையாப் பொருளாகவும் இருக்கும் என்று ஒருவாறு புரிந்து கொள்ளலாம்.

ஆணவம் என்பது என்றும்-உள்ள மலத்தின் மூன்று பிரிவுகளுள் ஒன்றாகும். மற்ற இரண்டும் கன்மம், மாயை என்பனவாம். இவற்றுள் ஆணவம் அடிப்படையானதும், பெரியதும் ஆகிய மலம் ஆகும். எனவே இது மலை என உருவகிக்கப்பட்டது.

மெய்கண்ட சாத்திரங்கள் பதிநான்கனுள் ஒன்றாகிய 'இருபா இருபஃது' என்னும் நூலில், அருணந்தி சிவாசாரியார் இந்த மூன்று மலங்களைப்பற்றி விளக்கியுள்ளார். ஆணவத்துக்கு எட்டு வகையான தன்மைகளும், கன்மத்துக்கு ஏழு வகையும், மாயைக்கு ஆறு தன்மைகளும் உள்ளன என்று கூறியுள்ளார். அவற்றுள் ஆணவத்தின் தன்மைகளை இங்குக் காண்போமாக. அவை வருமாறு:

(1) ஆணவம் மக்களிடையே வேறுபாடுகளைக் காட்டும். மனிதர்களுக்குள் வேறுபாடுகள் இருப்பது உண்மையே. ஆனால் அந்த வேறுபாடுகளைக் காணக் கூடாத இடங்களிலும் இது காணும்படிச் செய்யும். உணவு கொள்ளும் பந்தியில் வேறுபாடு காண்பது தவறு. ஏனென்றால் பசியும், உணவு கொள்ளும் விருப்பமும் எல்லார்க்கும் ஒன்றாகவே இருக்கும். அந்த இடத்தில் வேறுபாடு காண்பதும் வஞ்சனை செய்வதும் ஆணவத்தின் செயலாகும்.

(2) ஒரு சிறு காரியத்துக்காகப் பெரிதும் வருந்துவது. அதாவது அளவுக்கு மீறிய வருத்தம் கொள்வது. இதுவும் ஆணவத்தின் செயலாகும்.

(3) இல்லாததைக் கற்பித்துக்கொண்டு அதற்காகத் துன்பப்படுவது.

(4) ஓர் உயிரைப் பெருங் கோபத்தின் காரணமாகத் தாங்க முடியாத அளவுக்குத் துன்புறுத்துவது அல்லது கொன்றுவிடுவது.

(5) உணவுக்காகக் கொலை செய்வது. விலங்குகளைத் தாமே வளர்த்துத் தாமே கொல்வது. நச்சுமரமானாலும் தாம் வளர்ப்ப வற்றைக் கொல்வதற்கு மனம் வருவதில்லை. அப்படி இருந்தும், உணவுக்காகக் கொல்வது ஆணவத்தின் அடிப்படை யிலாகும்.

(6) பலமுறை தெளிவுபடுத்தியும், நியாயம் இது என்று புலப்ப டாமை.

(7) தன் குழந்தை தவறு செய்தாலும், பிறர்மேல் குற்றம் காண்பதும், அது திட்டினால் அதன் திட்டுகின்ற திறமையை வியந்து நகைப்பதும்.

(8) தவறு செய்தபோதும், தகாத மான உணர்வால், (False Prestige) அதையே தொடர்ந்து செய்வது. ''தோற்பன தொடரேல்'' என்னும் முதுமொழிக்கு மாறாக, அச் செயலை விட்டுவிடடால், அவமானம் என்று கருதுவது. இந்த உணர்வால்தான் சூரன் போரை நிறுத்தாமல் தொடர்ந்தான். போருக்கு வந்திருப்பது முருகன் என்பதனை உணர்ந்திருந்தும், முருகன் கூறியது நியாயம் என்று தெரிந்த பின்னரும், தன் படையினர் அனைவரும் அழிந்தாலும் வெல்ல முடியாது என்பதனைத் தெரிந்திருந்தும், அவன் பின் வாங்கவில்லை. 'தோல்வியை ஒப்புக்கொண்டு பணிவதா? என்று எண்ணினான். அதற்குக் காரணம் அவனுடைய 'மான உணர்வாகும்' அது ஆணவத்தின் செயலாகும்.

சூரனுக்கு (மான உணர்வுக்கு) அரணாக ஏழுமலைகள் இருந்தன என்பது முதல் ஏழு தன்மைகள் ஆம். ஆக அவனோடு சேர்ந்து எட்டு மலைகளின் மேலும் ஞானமாகிய வேலை விடுத்து முருகன் போர் புரிந்து வென்றான். எனவே ''கிரிவாய் விடு'' என்றது மலையினிடத்துப் பாய்ச்சிய வேல் ஆகும். (''வாய்'' என்பது 'இடத்தில்' என்று பொருள் தருகின்ற ஏழனுருபு ஆகும்).

''விக்ரம'' என்பது சிறந்த அல்லது விசேஷமான ஒழுங்கு ஆகும். கிரமம் - ஒழுங்கு வி+கிரமம்=விக்ரமம் - விசேஷமான ஒழுங்கு இச்சொல்லுக்குப் 'பலம்' அல்லது 'ஆற்றல்' என்றும் பொருள் உண்டு. முறையாக நடப்பதுதான் உண்மையில் பலம் ஆகின்றது

'விக்ரம' என்னும் சொல் இங்கு வேலுக்கு அடைமொழியாக வந்துள்து. 'வேல்' என்பது ஞானம் ஆகும். ஞானம் எப்போதும் விக்ரமமாக வேலை செய்யும். அது அக்ரமத்தில் (ஒழுங்கின்மையில்) போகாது.

இந்த உலகம் ஒழுங்காய் இயங்குவதை நாம் காண்கின்றோம். ஒழுங்கு, அறிவுடைய ஒருவரால் வருவதனால், இந்த உலகும் அறிவுடையவரால் நடத்தப்படுகிறது என்பது தெளிவாகும். அறிவில் லாதவர் குடித்தனம் நடத்தினால், அது ஒழுங்காய் இருப்பதில்லை. ஆனால் உலகம் அப்படியன்று, பழத்திலுள்ள சுளைகள்கூட, ஒழுங்காய் இருப்பதை நாம் காண்கின்றோம். அத்தகைய சிறப்புமிக்க (விசேஷமான) ஒழுங்குமுறையோடு அதாவது 'விக்ரம'த்தோடு நிகழ்வது ஞானம் ஆகும்.

விசேஷ ஒழுங்கு முறை என்று சொல்லும்போது, விசேஷமில் லாத ஒழுங்குமுறை என்று ஒன்று இருக்க வேண்டுமல்லவா? அதுதான் சாதாரண அறிவாகும்.

சாதாரண அறிவுக்கும் ஞானத்துக்கும் வேறுபாடு உள்ளது. அறிவு எதையும் ஆராயும். 'இது குற்றமுடையது, இது நல்லது' என்று பிரித்துக்காட்டும். இந்த அறிவை உடையவர்கள் விஞ்ஞானி கள். அவர்கள் பண்டங்களின் நிலைகளை உள்ளபடி அறிபவர்கள். பண்டங்களைப் பயன்படுத்தும் திறமை உடையவர்கள். இந்த அறிவுக்கும் மேம்பட்ட மன-அறிவு, தத்துவ-அறிவு, ஆன்ம-அறிவு, சமூக-அறிவு என்பனவும் உள்ளன. இவை எல்லாமே சாதாரண அறிவைச் சேர்ந்தவையே.

சமூக அறிவுப்படி குற்றப்பட்டாரைச் சீர் செய்வதற்கு வெறும் அறிவு மட்டும் போதாது. அதற்குக் குற்றம் உடையவர்களிடத்தில் இரக்கமும், குற்றங்களை நீக்குதலும், அவர்களைத் திருத்தும் குணமும் இருக்க வேண்டும். அந்தக் குணத்துக்கு 'ஞானம்' என்று பெயர். அதுவே இங்கு 'விசேஷ ஒழுங்கு' அல்லது 'விக்ரம வேல்' எனப்பட்டது.

முருகன் அவ்வாறு விக்ரமவேல் கொண்டு, கீழ்ப்பட்ட இயல்புடைய சூரனைத் திருத்தி, ஆட்கொண்டான் என்பது இங்கு விளக்கப்பட்டது. 'வேல் இறையோன்' என்றது முருகக் கடவுளைக் குறிக்கும். 'இறையோன்' என்னும் தனிச்சொல் சிவபெருமானைக்

குறிக்கும். எனவே இரண்டையும் பிரித்துக்காட்டுவதற்காக அருணகிரியார் இங்கு 'வேல் இறையோன்' என்றார். (நச்சினார்க்கினியர் தமது உரையில் இறைவன் என்று வருகின்ற இடங்களிலெல்லாம் சிவபெருமான் என்றே பொருளுரைத்துள்ளார்).

'இறை' என்னும் சொல்லுக்குத் தங்கி இருப்பவன், இருத்தலை உடையவன் என்று பொருளாகும். ஓர் இடத்துக்குப்போய் (camp) அங்கு வேலை செய்ய வேண்டுமானால், வேலை செய்பவர் தங்குவதற்கு ஓர் இடம் இருக்க வேண்டும் அல்லவா? அவ்வாறே இறைவன் ஒரு செயலை இயக்க வேண்டுமானால், அவன் தங்குவதற்கு ஓர் இடம் வேண்டும். அத்தகைய தங்கும் இடங்களே ஆன்மாக்கள் ஆவர். அவன் (அறிவு பெற்றுள்ள) ஆன்மாக்களில் எல்லாம் தங்கி, அவர்களைக் கொண்டு எல்லாச் செயல்களையும் இயக்குகின்றான். அவன் அறிவற்ற பண்டங்களிலும் தங்குகின்றான், என்றாலும் அறிவுப்பொருள்களிலேயே அவனுடைய இயக்கம் தென்படும். ஆன்மாக்களிலும், அவற்றின் உள்ளங்களில் விளங்கி இருப்பான். அவற்றுள்ளும் சிறப்பாக நல்ல உள்ளங்களில் அழுத்தமாக - முடிவாகத் தங்குவான். அவன் தங்குவது ஒரு குறிப்பிட்ட செயலுக்காக (அதாவது கார்யார்த்தமாக) ஆனதனால், முடிவாய்த் தங்குவதென்பது அந்த ஆன்மாவுக்கு அருள்புரிந்து முத்தி தருவதற்காகும். எனவே அவன் ஒவ்வொரு ஆன்மாவிலும் அழுத்தமாகவும் நிலைத்தும் முத்தியடையும்வரை தங்கி இருந்து காரியங்களைச் செய்விக்கின்றான். மேற்கூறிய இயல்புகளோடு ஆன்மாவில் தங்கக்கூடியவன் இறைவன் ஒருவனே ஆவான். அதனால்தான் அவனுக்குத் 'தங்குபவன்' அல்லது ''இறைவன்'' என்ற பெயர் வந்தது.

ஆன்மாவில் முடிவுவரை - முத்தியடையும்வரை, தங்கக்கூடியவன் இறைவன் ஒருவனே ஆதல்போல, மனைவி, குரு, நண்பன் ஆகியோரும் ஒவ்வொருவராகவே இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவராக இருக்கக்கூடாது. ஊரில் ஒருவனே தோழன் என்பது பழமொழி. குருவும் மனைவியும் அப்படித்தான்.

இறைவன் அவனுடைய இயல்பான (சொரூப) நிலையில் இருப்பவன் ஆவான். அவனை நாம் வணங்கும் பக்குவத்திற்கேற்ற உருவில் அவன் வடிவுகொண்டு வருவான். நாம் வணங்கும் வடிவுகளைத் தவிர, அவனேயும் சில வடிவுகளை எடுத்து வருவதும் உண்டு. அவ்வாறு வந்த உருவங்களில், முருகன் என்னும் உருவமும்

ஒன்றாகும். முருக உருவம் அறியாமையை (ஆணவத்தை) போக்கும் உருவம் ஆகும். அவனுடைய ஞானச்செயல் நமக்கு விளங்கி நம்மிடம் நுழைந்து நம் அறியாமையைப் போக்கும்போது அவனை ''வேல் இறைவன்'' என்கின்றோம். வேல் வெற்றி (ஞானம்) தருவதாகும்.

ஞானம் ஆகிய வேலை ''வாள்'' என்றும் சொல்வது உண்டு. வாள் கூர்மையானது. ஒளி பொருந்தியது. தீமையை நீக்கி, நன்மை செய்வது. ஞானமும் அதனையே செய்யும். வாளால் வெட்டப்படும் போது ஒரு பண்டம் இரண்டு துண்டுகளாகின்றது. தேவையற்ற கூறு வெட்டப்பட்டு விலக்கப்படுகிறது. பொற்கைப்பாண்டியன், தன் கை வேண்டுவதில்லை என்றபோது அதனை வெட்டித் தள்ளினான். அவ்வாறே இது தவறு என்று உணர்வதை - வேண்டாததை நீக்குவது ஞானம் ஆகும். தீது ஒரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு (ஞானம்). எனவே இறைவனுக்கு ஞானமாகிய வேலைப் படைக்கலமாகக் கற்பித்துள்ளனர். ஆணவமலையை அழிக்கும் வேலுடையவன் 'விக்ரம வேல் இறையோன்' எனப்பட்டான்.

(2) பரிவாரமெனும் பதம் மேவலையே புரிவாய்! மனனே!

'பரிவு' என்பது அன்பு; 'வாரம்' என்பது ஒழுக்கம். எனவே 'பரிவாரம்' என்பது அன்போடு ஒழுகுகின்ற பணியாட்கள் ஆவர். அவர்களைத் தொண்டர் என்றும், சேவகர் என்றும், வேலைக்காரர் என்றும் கூறலாம்.

உண்மையான வேலைக்காரர் நல்ல விசுவாசத்தோடு இருப்பர். ஆன்மா ஆண்டவனுக்குத் தொண்டன் ஆவான்; தொண்டனை அடிமை என்றும் கூறுவர். இறைவனிடம் ஆன்மா, விளக்கத்தையும் நன்மையையும் பெறுவதனால், அவ்வாறு இருக்க வேண்டியுள்ளது. ஒரு செல்வரிடத்தில் வறியவர் எப்படி நடந்து கொள்வாரோ, ஒரு ஆசிரியரிடம் மாணவர் எப்படி நடந்து கொள்வாரோ அவ்வாறே இறைவனிடம் ஆன்மா நடந்துகொள்ள வேண்டும்.

கொடுப்பதும் வாங்குவதும் இல்லாத இடத்தில் அடிமை நிலை இல்லை. தேவலோகத்தில் இந்த நிலை இல்லை. ஆனால் அவர்கள் 'புவனியில் போய்ப்பிறவாமையால், இங்கு வீணாகக் காலத்தைப் போக்கிக்கொண்டு இருக்கிறோம்' என்று கவலைப்படுவதாகத் திருவாசகத்தில் வருகின்றது.

முத்தி நிலையில் இறைவனும் தானும் ஒன்று என்று ஆன்மா எண்ணும் (பாவிக்கும்). ஆனால் அந்த நேரத்திலும்கூட இருவரும் சமமாவதில்லை. இறைவன் நிலை வேறு; ஆன்ம நிலை வேறு. இதனை ஆன்மாக்கள் உணர்ந்து அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும்.

பிறவியில் இருக்கும்போதே, சூழலிலுள்ள தாய், தந்தை, ஆசிரியர் ஆகியோரிடம் பழகும்போதே அடிமை உணர்வு விளங்க வேண்டும். விளங்குமானால் இறைவனிடம் எளிதாக அமையும். இந்த அடிமைநிலை மிக உயர்ந்த நிலையாகும். எனவே அதனைப் ''பரிவாரமெனும் பதம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

''மேவலையே புரிவாய்! மனனே!'' என்பது பொருந்துதலையே செய்வாயாக! மனமே! என்று பொருள்படும். (இங்கு மேவலையே என்பதிலுள்ள 'ஏ'காரம், பிரிநிலையோடு தேற்றமாக வந்துள்ளது). வேறு எதையும் செய்ய வேண்டாம், பரிவாரம் எனும் பதத்தை விரும்பிப் பொருந்துதலையே செய்வாயாக என்றார்.

இந்தப் பதத்தை மேற்கொள்ளவில்லையே என்னும் இரக்கத் தோடு கூறியதாகவும் 'மேவலையே' என்னும் சொல்லுக்குப் பொருள் கொள்ளலாம். (மேவல் = ஆசையோடு பொருந்துதல்).

''புரிவாய்'' என்பது முறுக்குவாய் என்று பொருள்படும். புரிநூல்-முறுக்கு நூலாகும். பலவாக இருப்பவற்றை ஒன்றாகத் திரட்டுவது புரிதலாகும்.

மனம், ஐம்புலன்களோடு புறத்தில் சென்று வேலை செய்யும். ஐந்தாகப் பிரிந்துள்ள புலனுணர்வை ஒன்றாக்கி அதனை ஒருமைப் படுத்துவது புரிதலாகும். மனம் ஞானத்தில் ஒன்றும்போது புலன் அடக்கம் வருகின்றது. அந்த அடக்கத்தோடு மேவுதலைச் செய்க என்பதாகும்.

'மனன்' என்பதும் 'மனம்' என்பதும் ஒன்றே. அது புறத்தில் வேலை செய்யும்போது 'மனம்' என்றும், உள்ளே பண்பட்ட நிலையில் இயல்பாய் இருக்கும்போது 'மனன்' என்றும் அழைக்கப் பெறும். அதாவது 'மனன்' என்பது அதன் சொரூப நிலையின் பெயராகும்.

(3) பொறையாம் அறிவால் அரிவாய், அடியோடும் அகந்தையையே!

மேற்கூறிய பரிவாரம் எனும் பதத்தை அடைவதோடு, அகந்தையை அடியோடும் அரியவேண்டும் என்றும் அருணகிரியார் மனதுக்குக் கட்டளை இடுகின்றார்.

'பொறை' என்பது பளுவைத் தாங்குவது அல்லது சுமையைப் பொறுத்துக்கொள்வது ஆகும். சுமைகள் பல வகைகளில் வருகின்றன:

1) நற்செயல்களை எல்லாம் தம் கடமைகள் என்று தாமே வலிந்து ஏற்றுக் கொள்வதனால் பெரும் சுமை வருகின்றது.

2) ''உற்ற நோய் நோன்றல்'' என்னும் வகையில் தமக்கு வினைப்பயனாய் வருகின்ற துன்பங்களை எல்லாம் வெறுப்பின்றித் தாங்கிக்கொள்ளுதல்.

3) மற்றவர்கள் படுகின்ற துன்பத்தைப் போக்கி, அவர்கள் நன்னிலைக்கு வருவதற்கான கருணைச் செயல்களால் வருகின்ற சுமை.

4) தம் உள்ளத்தில் இறைவனை ஏற்றுக்கொண்டு இருப்பதனால், இறைவன் வேலைகளைத் தம் கடமைகளாக (இறைபணியாக) ஏற்றுக்கொள்வதனால் வருகின்ற சுமை.

இவ்வாறு வருகின்ற பல சுமைகளையும் தாங்குவது பொறையாகின்றது. இப்பொறை 'அறிவு' அல்லது ''ஞானம்'' ஆகின்றது.

இந்த ஞானம் வாள்போல் பயன்படும் என்று முன்பு பார்த்தோம். இங்கு 'அரிவாய்' என்றது அந்த ஞானவாளைக் கொண்டு அரிவதாகும். அகந்தையை அடியோடு சிறிதும் விடாமல் அரிந்து நீக்கிவிடும்படிக் கூறுகின்றார். தீமைகளைப் போக்குபவருக்கு 'அரி' என்று பெயர். 'அரி'க்கு ஆண்பால் 'அரன்' ஆகும். 'அரி'யில் சத்தியின் கூறு அதிகம் ஆகும். அச்சத்திக்குக் காரணமாய், அடிப்படையாய் இருப்பவன் 'அரன்' ஆவான். ('அரியும் சிவனும் ஒண்ணு' என்னும் வழக்கு அவர்கள் ஒத்து வேலை செய்பவர் என்பதனை உணர்த்தும். மற்றப்படி பேதம் இல்லை என்பதன்று).

'அரிவாய்' என்றதால், அரியப்படும் பொருள் மென்மையானது என்னும் குறிப்பும் இருக்கின்றது. அரியப்படும் பொருள் கடினமான

தாய் இருந்திருந்தால் 'வெட்டுக' என்று கூறியிருப்பார். இங்கே அரியப்படும் பொருள் அகந்தையாகும். இது வன்மையான ஆணவத்தின் பதப்பட்ட நிலையாகும். ஆணவம் மேலும் பதப்பட்டு, முத்தி நிலையில், முத்தி இன்பத்தை அதிகப்படுத்த உதவுகின்றது.


முத்தி இன்பத்தை அநுபவிக்கின்றோம் என்பதை மறந்து, இறைவனையும் மறந்து, அநுபவிப்பது முத்தி ஆகும். அந்த இடத்தில், தான் அநுபவிப்பதாக அகந்தை உணர்வு வருமானால் முத்தி இன்பம் தடைபடும். எனவே அகந்தையை அடியோடு அரிய வேண்டும் என்றார். நுகர்வதைத்தவிர தான் எனும் அகந்தை உணர்வுகூட இல்லாதபோதுதான் முத்தி இன்பம் மேலும் மேலும், அதாவது என்றும் — பெருகும் இயல்பில் தெவிட்டாது தழைத்துக் கொண்டே இருக்கும்.

ஆக, இப்பாடலில், 'இறைவனுடைய தொண்டன் என்னும் பதத்தை அடைவதையே நீ நோக்கமாகக் கொள்க' என்றும், 'இறைபணி செய்வதாகிய ஞானத்தால் அகந்தையை அடியோடு நீக்கிவிட வேண்டும்' என்றும் அருணகிரியார் தம் மனதுக்குக் கூறியுள்ளார்.

III சக்கரம்

இப்பாடல் இறைவனுக்குத் தொண்டன் ஆதல் பற்றியும், அகந்தையை நீக்குவது பற்றியும் கூறுகின்றது. நல்லதைச் செய்வதையும், கூடாததை நீக்குவதையும் செய்வது ஞானம் அல்லது அருட்சத்தியாகிய அம்பிகையாகும். அம்பிகையைக் குறிக்கும் எழுத்து 'உ'கரம் ஆகும். எனவே இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்து 'உ'கரம் ஆகின்றது.

இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-38

ஆதாளியை ஒன்று அறியேனை, அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ!?
கூதாள கிராத குலிக்கு இறைவா!
வேதாள கணம் புகழ் வேலவனே!

I பொழிப்புரை

அறியாமையோடு பழகுகின்றவனும், மெய்ப்பொருளாகிய ஒன்றை அறியாதவனும், முழுதும் தீமையையே புரிகின்றவனும் ஆகிய என்னை ஆட்கொண்ட உன்னுடைய அருள் திறம் சொல்லும் தகைமையதோ! ''கூதாளம்'' என்னும் மலரை அணிந்த, வேடர் குலத்தில் தோன்றிய வள்ளிக்குத் தலைவனே! பேய்க்கணம் புகழும் படியாகச் சூரபதுமனோடு போர் புரிந்து வெற்றி பெற்ற வேலேந்திய வனே!

II விளக்கவுரை

இந்தப் பாடலில் அருணகிரியார் முருகனை விளித்து ஒரு வியப்பைத் தெரிவிக்கின்றார். வியப்பு எதற்கென்றால், அவன் தம்மை ஆட்கொண்டதாகும். தகுதியுள்ள பத்தர்களை முருகன் ஆட்கொண்டு இருந்தால் அதில் வியப்பதற்கு ஏதும் இல்லை. தகுதி இல்லாதவனும் ஒன்றுக்கும் பற்றாதவனும் ஆகிய தம்மை அவன் ஆட்கொண்டது வியப்புக்குரிய செயல் என்கிறார். ஆட்கொண்டதற்குக் காரணம் அவனுடைய கருணையாகத்தான் இருக்க வேண்டும் என்றும் எண்ணுகிறார்.

(1) ஆதாளியை, ஒன்று அறியேனை, அறத்தீதாளியை ஆண்டது செப்புமதோ!?

இத்தொடரில் தமக்குத் தகுதி இல்லை என்பதனைக் காட்டுகிறார்.

''ஆதாளி'' என்பது அறியாமை உடையவன் என்று பொருள் படும். ''ஆதம்'' என்பது அறியாமை. ''ஆளி'' என்பது ஆளுகின்ற

வன். அதாவது அறியாமை உடையவன். இதையே நேர்ப்பொரு ளாகக் கொள்ளலாம்.

இச்சொல்லை நுணுகி ஆராயும்போது வேறு பல கருத்துக்களும் வருகின்றன. அதாவது, ஆதம் என்னும் சொல்லுக்கு ''ஆ'' என்னும் எழுத்தைப் பகுதியாக வைத்துப் பார்க்கும்போது அறிவாளி என்னும் பொருள் வரும். ஏனென்றால், ''ஆ'' என்னும் பகுதி ஆக்கத்திற்கு வருவதாகும். எக்காரியத்தையும் ஆக்கத்தோடு செய்பவர் அறிவாளி களாவர். மற்றும் ''ஆ''வைப் பகுதியாக உடைய ஆதவன் என்னும் சொல் ஞாயிறென்றும், அறிவாளி என்றும் பத்தியில் சிறந்தவர் என்றும் பல நல்ல கருத்துக்களைத் தருகின்றது. இவ்வாறு ''ஆதம்'' என்னும் ஒரே சொல், இரண்டு மாறுபட்ட பொருள்களைத் தருவதாக உள்ளது.

இந்த இயல்புக்கும் ஒரு காரணம் இருக்கின்றது: ஒரு இயக்கம் நன்றாக நடைபெறலாம்; ஆனால் அதன் விளைவு தீயதாகவும் முடிவுபெறலாம். அதனால் அந்த இயக்கம் நன்மையும் தீமையும் இரண்டையும் உடையதாகிறது. இது ஒரு மயக்க நிலை. இது மாயையால் வருவதாகும். நல்ல அறிவார்ந்த அமைப்புகளோடு ஒரு வீட்டைக் கட்டுகிறோம். அந்த வீட்டிலேயே சொக்கிப் போனால், மயக்கம் வந்து விட்டதென்று பொருள். உலகம் அழகாய் இருக்கிறது என்பதைக் காண்கிறோம். அதிலேயே மயங்கி நின்று விட்டால் அதுவே அறியாமை ஆகிவிடுகிறது.

ஆக, ''ஆதம்'' என்னும் சொல் அறிவு, அறியாமை ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாக உள்ளது. சுருங்கச் சொன்னால், அறிவாய்த் தொடங்கி, பயனற்றதாகி, மயக்கத்தில் முடிகின்ற அறியாமையை உடையவன் ''ஆதாளி'' ஆகின்றான்.

மற்றும் ''ஆதம்'' என்னும் சொல் ''அதம்'' என்பதன் திரிபாகவும் உள்ளது. ''அதம்'' என்பதற்கு அட்டகாசம் அல்லது ஆரவாரம் என்றும் பொருளுண்டு. அதனால்''ஆதாளி'' அட்டகாச மானவன் என்றும் ஆகும்.

அருணகிரியார், தம்மை, மேற்கூறிய இயல்புகளை உடைய ''ஆதாளி'' என்று கூறிக்கொள்கின்றார். நாட்டை ஆள்பவர் ''நாடாளி'' என்றும், அருளை ஆள்பவர் ''அருளாளி'' என்றும், ஒளியை ஆள்பவர் ''ஒளியாளி'' என்றும் இருளை ஆள்பவர்

''இருளாளி'' என்றும் ஆவதைப்போல ஆதம் (அறியாமையை) உடையவர் ''ஆதாளி'' ஆகின்றார். இவர்களைக் ''கயவாளி'' என்றும் கூறுவர்.

''ஒன்று அறியேனை'' என்பது யாதொன்றையும் அறியாதவனை என்று பொருள்படுமாயினும், இதற்குச் சில ஆழ்ந்த கருத்துக்களும் உள்ளன. ''ஒன்று'' என்பது எல்லாவற்றுக்கும் காரணமாய் உள்ள முழுமுதல் என்றும் கொள்ள இடமிருக்கிறது. அவ்வாறு கொண்டால், முழுமுதலை அறியாதவனை என்று ஆகும்.

மற்றும், உலகத்தைப் பார்க்கும்போது, அதனுடைய பல பிரிவுபட்ட நிலைகள் தெரிகின்றன. எனினும் அதில் ஒற்றுமையைக் காட்டுகின்ற ஒன்றான தன்மையும் உள்ளது. அத்தன்மையை அறியாதவனை என்றும் அத்தொடருக்குப் பொருளாகின்றது.

உலகம் பலவிதம்; பொருள்களும் பலவிதம் என்பது உண்மையே. ஆனால் அவற்றை உண்டு பண்ணி, இயக்கி, ஆன்மாக்களுக்குப் பயன் தருவதாகிய அருள் ஒன்றே ஆகும். எனவே உலகிலுள்ள எல்லா வேறுபாடுகளையும் திரட்டிப்பார்க்கும்போது அந்த அருளின் திறத்தைக் காணலாம்.

சென்னை என்னும் நகரத்தில் பல காட்சிகளை ஒருவர் பல நாட்கள் பார்க்கின்றார். பிறகு தமது சொந்த ஊருக்குப் போய்ச் ''சென்னையைப் பார்த்தேன்'' என்று ஒருமையிலேயே சொல்லுகிறார். அதாவது, அவர் கண்டவற்றைத் திரட்டி ஒன்றாகவே சொல்லுகிறார். அவ்வாறே மயிலில் உள்ள பல நிறங்களைப் பார்த்துவிட்டு மயிலைப் பார்த்ததாகவும், சோலையில் பல நிற மலர்களைப் பார்த்துவிட்டுச் சோலையைப் பார்த்ததாகவும் சொல்லுவர். அவர்களுடைய அநுபவிப்பும் ஒன்றி இருக்கும்.

ஒன்றாகக் காணும் ஒற்றுமை உணர்வு அல்லது கூட்டுறவு இல்லையானால், வாழ்க்கையில் வெற்றிக்கு மாறாகத் தோல்வியே அமையும். பிரிந்து விளையாடும் கால் பந்தாட்டத்தில் ஒற்றுமையைக் காணாமல் போனால் வெற்றி பெற இயலாது. எங்கிருந்தோ வந்த வெள்ளையர் இந்த நாட்டைப் பிடிப்பதற்கும் இப்பரந்த நாட்டவர் அடிமைகள் ஆனதற்கும் காரணமாய் இருந்தவை முறையே ஒற்றுமையும் ஒற்றுமை இன்மையுமேயாம். நம்மிடையே ஒற்றுமை நோக்கு இல்லாமையால் நாம் பலவற்றை இழந்து கொண்டு

இருக்கின்றோம். அந்த நோக்கு வருமானால் நாம் எவ்வளவோ சாதிக்கலாம். அது இன்மையே நம் பெருங்குறையாகும்.

செயல் செய்வதற்குப் பிரிவினை தேவை என்பதும், உறுப்புக்கள் பிரிந்தாலன்றி செயல் நிகழாதென்பதும் உண்மையே. மற்றும் பிரிந்த பின்னர்தான் அவற்றின் தனி அழகு புலப்படும். ஆனால் பிரிந்தவை மீண்டும் ஒன்றுபடுதல் வேண்டும். ஒற்றுமை இல்லாத பிரிவினை வலுவின்மையைத் தரும். பிரிவினையை மட்டும் விரும்பி ஒற்று மையை விரும்பாதவர் அறிவில்லாதவர் ஆவர். பன்மையைப் பார்க்கத் தெரிந்த அறிவுக்கு ஒற்றுமையைக் காணவும் தெரிய வேண்டும். அதனையே ''ஒன்று அறியேனை'' என்றார்.

இனி, இத்தொடருக்கு ''ஒன்றாகிய இறைவனைத் தவிர வேறு ஒன்றையும் அறியாதவனாகிய என்னை'' என்றும் பொருள் கொள்ளலாம். சமாதி நிலையில் (தேனிப்பில்) இருப்பவர்கள் உலகை மறந்துவிடுவர். முப்பொருளில் எஞ்சியுள்ள இறைவனும், தாமும் மட்டுமே உணர்வில் இருப்பர். உணர்வு முதிர்ச்சியில், தம்மையும் மறந்து விடுவர். அந்த அதீத நிலை ''தான் கெட்ட நிலை'' எனப்படும். அதற்கும் ஒரு படி மேலே போகும்போது யாரைத் துய்த்துக்கொண்டு இருக்கிறார்களோ அந்த இறைவனையும் மறந்து விடுவர். அது முப்பொருளும் ''பாழ் ஆன நிலை'' எனப்படும். இப் பாழ்நிலையில் துய்க்கின்ற (அநுபவ) உணர்வு மட்டும் இருக்கும். வேறு எதுவுமே தோன்றாது. ''ஒன்று அறியேனை'' என்னும் தொடர் அந்த உயர்ந்த நிலையையும் குறிக்கும். அதாவது ''இதுவரை ஒன்றை அறிந்துகொண்டு இருந்தேன்; இப்போது உதவி செய்த அந்த இறைவனாகிய ஒன்றையும் மறந்து விட்டேன். எனவே ஒன்று அறியேனை'' என்னும் கருத்தும் இத்தொடருக்கு அமைகின்றது.

''ஒன்று அறியேனை'' என்னும் இத்தொடரை வைத்துக்கொண்டு ''சீவனே சிவமாகிவிட்டது'' என்று யாரேனும் மாயாவாதக் கருத்தைப் புகுத்துவராயின், அது தவறாகிவிடும். ஏனென்றால், அந்த உயர்ந்த நிலையிலும் இறைவன் ஆண்டானாகவும், ஆன்மா அடிமையாகவும் இருந்து வருகின்றனர். இதை விளக்கும் பொருட்டே திருவாசகத்தில் ''சிவமாக்கி எனை ஆண்ட'' என்னும் தொடர் வருகின்றது. சிவமாக்கிய பின் ''எனை ஆண்ட'' என்பது இதனை விளக்குகிறது. அதாவது ஆன்மா, சிவத்தைத் துய்க்கின்ற பின்னரும் அடிமை நிலையில் இருந்து கொண்டு அவனால் ஆளப்படுகிறது.

இந்த நிலை, குழந்தை தாயை மறந்தாலும் தாய் அதற்கு வேண்டுவனவற்றைச் செய்துகொண்டே இருப்பதைப் போன்ற தாகும்.

''அறத்தீதாளியை'' என்பது முழுமையும் தீமையை உடையவன் என்றாகும். ஆன்மாக்கள் செய்கின்ற செயல்களில் சில நல்லன இருக்கும். அவற்றுள் சில தீயனவும் கலந்துவிடும். அப்படியே தீய செயல்களில் சில நல்லனவும் கலந்துவிடும். இங்கு அருணகிரி யார், அத்தகைய கலப்புகூட இல்லாமல் அதாவது நன்மையே கலவாத தீமை மட்டுமே உடையேன் என்று தம்மைக் கூறிக்கொள் கிறார்.

நல்லதில் தீமையும், தீயதில் நன்மையும் கலக்கும் முறை எவ்வாறு என்பதைப் பார்ப்போம்: வெப்பத்தில் வேட்கையைத் தணிக்கத் தண்ணீர்ப் பந்தலை வைப்பது நல்ல செயல். அந்த நற்செயலைச் செய்தவர் நீர் ஊற்றும்போது பிறரைத் திட்டிக் கொண்டே ஊற்றுவாரானால் அது நன்மையில் தீமை ஆகிவிடுகிறது.

சிலர், பிறரை வருத்திப் பெரும் பொருள் சேர்ப்பர். அப்பொரு ளைக் கொண்டு அறச் செயல்களையும் செய்வர். அது தீமையில் நன்மை ஆகின்றது.

அறம் செய்யும்போது தீமை கலத்தல் கூடாது. எனவே ''அறத் தீதாளியை'' என்பதற்குத் ''தர்மத்தில் தீது செய்வேனை'' என்றும் ஆகும்.

இனி, நமக்கு வருகின்ற நல்வினை தீவினைகள் அறத்தின் முறைப்படி நம்மை வந்து தாக்குகின்றன. அவற்றை வேண்டாம் என்பதும், வேண்டும் என்பதும்கூடத் தீதாகிவிடும். அவ்வாறு வெறுப்பு விருப்பு காட்டுவதனால் நான் ''அறத்தீதாளி'' ஆகின்றேன் என்று கூறுகிறார்.

நம்மை வந்து தாக்குகின்ற வினையை வேண்டாம் என்றால், அது இறைவனுடைய அமைப்பை எதிர்ப்பதாகும்; இன்னல்களை ஏற்கவேண்டும் என்று அவன் செய்துள்ள அமைப்பில் குற்றம் காண்பதாகி விடும். நம் வினையை நாம் துய்ப்பதானாலும், அதனை இயக்கி விட்டவன் இறைவன் ஆனதனால், அதனை அப்படியே ஏற்கவேண்டும். ''படு மனமே படு'' என்னும் வாசகம் அனைவரும் பின்பற்றத்தக்கதாகும். துய்த்தாலன்றி (அநுபவித்தாலன்றி) வினை

நீங்குவதில்லை. எனவே வேண்டுதல் வேண்டாமை இல்லாத சமநிலையில் துய்த்துப் பழகிக்கொள்ள வேண்டும். இவ்வாறு தீமையை ஆளுவதே அதனைக் கடப்பதாகும்.

வினையை ஏற்க மறுத்தாலோ அல்லது விருப்பு வெறுப்பு காட்டினாலோ அது மேலும் வளரும். நாம் வெறுப்பது எவ்வளவு தீதோ, விரும்புவதும் அவ்வளவு தீமையுடையதே. ஏனென்றால் நாம் விரும்புவது வினையாக வளர்ந்து, அதைத் துய்ப்பதற்காக ஒரு பிறவியை எடுக்க வேண்டி வருகிறது. அரண்மனையில் இருக்க வேண்டுமென்று அவாவி விட்டால், அதற்காக ஒரு பிறவி எடுத்து ஒரு நாளாவது அரண்மனை வாசம் செய்ய வேண்டி வரும். நாடகத்திலாவது அவ்வாறு இருக்க வேண்டி வரும். எனவே அவாவுதலைக் குறைத்தோமானால் பிறவிகளைக் குறைத்துக் கொண் டவர்களாவோம்.

நாம் செய்வதையும் எண்ணுவதையும் எல்லாவற்றையம் கடமை காரணமாக அல்லது இறைபணியாகச் செய்து வருவோமானால், வினை வளராது. இக்கோட்பாடுகளை மீறுவோர் ''அறத்தீதாளி'' யாவர்.

ஆதாளியாகவும், ஒன்று அறியாதவராகவும், அறத்தீதாளியாக வும் உள்ள தம்மை முருகன் ஆட்கொண்டது வியப்புக்குரியதே என்று அருணகிரியார் கூறுகிறார். இங்கு ''ஆண்டது'' என்னும் சொல், தமக்கு ஞானத்தை வழங்கியதைக் குறிக்கின்றது. ஆன்மாக்கள் தவறுகளைச் செய்தாலும், அவை திருந்த வேண்டும் என்பதற்காக அவன் ஆட்கொள்கின்றான். அதாவது இருளில் இருந்த அவற்றுக்கு உடம்பைக் கொடுத்து உணர்வு நிலையைக் கொடுக்கின்றான். அது கேவலாவத்தையிலிருந்து விழிப்பு நிலைக்கு (ஜாக்கிராவத்தைக்கு)க் கொண்டு வந்ததாகும். அதற்கும்மேல் அவத்தைகளைக் கடந்த ஞான நிலையைத் தருகின்றான். இந்த ஞானம் வழங்குதலையே இங்கு ''ஆண்டது'' என்று குறிப்பிடுகின்றார். நல்ல செயல்களைச் செய்தால் இந்த ஞான நிலை கிட்டும். தீமைகளையே உடைய தமக்கும் இந்த ஞான நிலையைத் தந்தது ஒரு வியப்பாகும் என்கிறார்.

''செப்புமதோ'' என்பது ''சொல்லப்போமா?'' என்று பொருள் படும். ஞானத்தை அருளிய அவன் கருணை, வாக்கால் விரித்துச் சொல்ல முடியாது என்பது கருத்து. மற்றும், இறைவன் கருணையைப் பற்றிச் சாதாரண விழிப்பு நிலையிலேயே சொல்ல முடியாது. அதைத்

தன்னை மறந்து சொக்கிப்போன நிலையில் எப்படிச் சொல்வது? எனவே நான் சொல்லுவதற்கில்லை என்று கூறுகிறார்.

(2) கூதாள கிராத குலிக்கு இறைவா! வேதாளகணம் புகழ்வேலவனே!

''கூதாளம்'' என்பது ஒருவகைப் பூ ஆகும். (இச்சொல் மிகுதிப்பாட்டையும் குறிக்கும்). ''கிராத'' என்பது வேடர் குலத்தைக் குறிப்பதாகும். ''குலி'' என்பது குலத்தில் தோன்றிய பெண். இங்கு அது வள்ளிப்பிராட்டியைக் குறிக்கும்.

வேடர்கள் மற்றவர்களைத் தம் வயப்படுத்துபவர் ஆவர். பறவைகளையும் விலங்குகளையும் கொன்று வாழ்பவராதலால் வேண்டாதவரும், வெறுக்கத்தக்கவரும் ஆவர். அத்தகையோருடைய குலத்தில் ஒரு நல்ல பெண் பிறந்தாள் என்பதைக் குறிப்பிட ''கிராதகுலி'' என்றார்.

உடம்பின் உறுப்புக்களில் அடி வயிறு அழுக்கு(மலம்)உடைய தும் அதனால் வெறுக்கத்தக்கதுமாக உள்ளது. அந்த அடிவயிற்றில் (மூலாதாரத்தில்) குண்டலினி என்னும் வளமான சத்தி பிறக்கின்றது. தீயதிலிருந்து நல்லது பிறக்கின்றது. அது சேற்றில் செந்தாமரை தோன்றுவதைப் போன்றதாகும்.

குலிக்கு இறைவன் என்றது வள்ளி மணாளனாகிய முருகன். அவன் அறிவு நிலையில் அகத்தில் வேலை செய்பவன் ஆவான். அதாவது புறத் தீமைகளை அடக்கி, அகத்தில் குண்டலினியை எழுப்புகின்ற தவச்சீலருக்கு ஞான வடிவினனாய் இறைவன் வந்து ஆட்கொள்கின்றான் என்பது இங்குக் குறிக்கப்பட்டது.

அவன் ''வேதாள கணம் புகழ் வேலவனா''வான். வேதாள கணம் என்பது பேய்க்கூட்டம் ஆகும். ''வேது'' என்னும் சொல்லுக்கு அறிவு என்றும், சூடு என்றும் பொருளுண்டு. (வேதம் என்னும் நூலும் அறிவார்ந்தது என்னும் கருத்துடையதே. நெருப்புக்கும் இப்பெயர் பொருந்தும்). ஆக, அறிவுக்கூர்மையோடும், சூட்டோடும் வேலை செய்வது வேதாளம் ஆகும். இதே இயல்புகளோடு, ஒரு பெரும் படைக்கு - முன்னால் சென்று போர் செய்கின்ற தூசிப்படைக்கும் இப்பெயர் உண்டு.

பேய்கள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் போர்க்களத்தில் இறந்தவரின் உடல் களை உண்ணுகின்றன. போர் என்றாலே அவற்றுக்குக் கொண்டாட் டம். சூரபதுமனோடு முருகன் செய்த போரில் பெருந்தொகையான போர் வீரர்கள் மடிந்திருப்பர். அவர்களுடைய உடலங்களை உண்ணும்போது அவை முருகனைப் புகழ்ந்தன. அவற்றுக்கு எதிர்பாராத அளவுக்கு இரை கிடைத்ததனால் மகிழ்ச்சி பொங்க, அதற்குக் காரணமான முருகனைப் புகழ்ந்து கொண்டே உண்டன. எனவே ''வேதாள கணம் புகழ் வேலவனே'' என்றார். புறத்தீமை களை அடக்கவல்லது ஞானம் ஒன்றே ஆதலாலும் ஞானத்துக்கு உருவாய் அமைந்தது வேல் ஆனதனாலும் ''வேலவனே'' என்றார்.

ஆக, இப்பாடலில் அருணகிரிநாதர் புறத்தீமைகளை ஞானத்தால் வெற்றி கொள்கின்ற முருகனை விளித்துத், தீமைகளையே முழுது மாய் உடைய தம்மை ஆட்கொண்ட அவனுடைய கருணைத் திறத்தை வியந்து பாராட்டியுள்ளார்.

III சக்கரம்


இப்பாடலில், ஆன்மாக்களை ஆட்கொள்கின்ற இறைவனுடைய சத்தியின் திறம் வியந்து பாராட்டப்பட்டுள்ளது என்பதனைப் பார்த்தோம். சத்தியின் எழுத்து ''உ''கரம் ஆகும். அச்சத்தியின் மிகுதிப்பாட்டுக்கு உரிய எழுத்து ''ஊ'' காரம் ஆகும். (37வது பாட்டில் 'உ'கரம் விளக்கப்பட்டது). எனவே இப்பாடலின் சக்கரத் துக்கு உரிய சிறப்பெழுத்து ''ஊ''காரம் ஆகின்றது. இதற்குரிய அதி தேவதை ''க்ஷமாதேவன்'' ஆகும். அது பொறுமையின் தெய்வ நிலையாகும். பொறுமை ஞானிகளின் அடையாளம். அது நமக்கு வருகின்ற துன்பங்களைத் தாங்கிக் கொள்வதாகும். பொறுப்பவர்க ளுக்குப் பிறவிகள் குறைந்து விடும்.

இறைவனை நினைந்து உருகி, பொறுமையோடு இருக்கின்ற அடியார்களை அவன் தீவினைகளைத் தந்து நைய வைக்கின்றான். பிறகு அவை நிலைத்துவிடாதபடி அவற்றை நீக்கவும் செய்கின்றான். ''நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்; நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்'' என்பது அப்பர் வாக்கு. நாம் பொறுமையோடு இருக்க இருக்க நம்மை வருத்தும் அத்தீவினை ஓய்ந்து விடுகிறது. வினையைப் பொறுத்தால் தீமையைச் செய்ய வருபவரும் திருந்தி

விடுவர். நமக்குச் சேர வேண்டியதாகிய தீவினைக்கு அதிகமாக எதுவும் வருவதில்லை. நாம் பொறுப்பதனால், தீமை செய்பவர் மேலும் மேலும் துன்பத்தை உண்டாக்குவார் என்னும் கருத்துத் தவறானது. வினை இருக்கும் வரையில்தான் அவரால் தீமை செய்யமுடியும். மற்றும் ''விதியை மதியால் வெல்லலாம்'' என்று ஒரு வழக்கு இருந்து வருகிறது. அதன் கருத்து என்னவெனின்-நாம் பொறுத்திருக்கும்போது, நம் மதி, எதிரி செய்தது தவறு என்று எண்ணுவதாகும். அந்த எண்ணம் அதாவது மதியின் கதிர் தன் சத்தியால் எதிரியைத் திருத்திவிடும்.

பொறுக்கப் பொறுக்க அதிக சத்தி வரும். வாய் பேசாமல் இருக்க இருக்க, சத்தி மிகும். புறத்தில் புலன்களை விடாமல் காக்கக் காக்க சத்தி அதிகரிக்கும். அச்சத்தியின் அதிதேவதை பொறுமைத்தேவர் (க்ஷமா தேவர்) எனப்பட்டார்.

ஆக, பொறுமையோடு துன்பங்களை ஏற்று, ஊக்கத்தோடு இறைபணி செய்தால், அதனினும் மிகுந்த ஊக்கத்தோடு இறைவன் வந்து ஆட்கொள்கிறான் என்பதனை இப்பாடல் தெரிவிக்கின்றது. இப்பாடலுக்கான சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-39

மா ஏழ் சனனம் கெட மாயை விடா
மூ வேடணை என்று முடிந்திடுமோ?!
கோவே! குறமின் கொடி தோள் புணரும்
தேவே! சிவசங்கர தேசிகனே!

I பொழிப்புரை

நெடுகத் தொடர்ந்து வருகின்ற ஏழு வகையான பிறவிகள் நீங்க மாயையால் வருகின்ற மூவகைப் பற்றுகள் எப்பொழுது முடிவுக்கு வருமோ?! நெறிப்படுத்தும் தலைவனே! குறவர் குலத்தில் தோன்றிய வள்ளிப் பிராட்டியின் தோளை (விந்துவின் உந்து சத்தியை)ப் புணரும் (ஈர்த்துக் கலக்கின்ற) ஒளியும் இன்பமும் உடைய தெய்வமே! சிவசங்கரனுக்கு உபதேசித்த குருவே!

II விளக்கவுரை

(1) கோவே! குறமின் கொடி தோள் புணரும் தேவே! சிவசங்கர தேசிகனே!

அருணகிரிநாதர் முருகனைக் கோவே என்றும், தேவே என்றும், குருவே என்றும் அழைக்கின்றார். அழைத்து, ஒரு கேள்வியையும் கேட்கின்றார்.

''கோ'' என்னும் எழுத்துக்குத் தலைவன் என்று பொருளாகும். கோ+ஏ - கோவே ஆயிற்று. இந்த 'ஏ'காரம் அழைக்கும் குரலைக் காட்டுவதாகும். ('ஏ'காரத்தைப் போலவே 'ஆ'காரமும் கூப்பிடும் ஒலியாகும்).

கோலை உடையவன் ''கோ'' எனப்படும் தலைவன் ஆவான். அவன் ''கோன்'' என்றும் அழைக்கப்படுவான். அவனிடம் உள்ள கோலுக்குச் செங்கோல் என்று பெயர். அதை உடையவன் மக்களின் தலைவன் ஆகின்றான். அவன், நாட்டின் ஒழுங்கை நிலை நிறுத்துபவன் என்பதனை அக்கோல் காட்டும்.

அரசனுக்கேயன்றி, சிறு பதவிகளில் உள்ள காவலர், மற்றும் தலையாரி, வெட்டியான் முதலியோரிடமும் கோல் இருக்கும். இவர்கள் சிற்றூர்களிலும், கிராமங்களிலும் ஒழுங்கை நிலை நிறுத்துவர்.

'கோ' என்னும் எழுத்துக்கு ஒழுங்கு என்னும் அடிப்படையில் தான் தலைவன் என்னும் பொருள் வந்தது. அதாவது அவன் ஒழுங்கை நிலைநிறுத்துவதால் 'கோ' அல்லது 'கோன்' ஆகின்றான்.

வெறும் மரக்கொம்புக்குக் ''கோல்'' என்று பெயர். அது ஒழுங்காய், கோணல் மாணல் இல்லாமல் இருப்பதனால்தான், அதற்கு அப்பெயர் வந்தது. ஒழுங்கு தெய்வத்தன்மை உடையது. யாரிடம் ஒழுங்கு இருக்கிறதோ அவர்கள் தலைவர் ஆகிவிடுவர். ஒழுங்கு உடையவர்கள் கீழோர் மேலோர் என்றும், தான் என்றும், மற்றவர் என்றும் எந்த வேறுபாட்டையும் பாராமல், அறமுறையில் நேர்மையாய் நடந்து கொள்வர். அதனாலேயே அவர்கள் தலைவர் களாகின்றனர்.

மென்மையானவர்களும், மென்மைப் பொருள்களும் இயல் பாகவே ஒழுங்குடன் இருப்பர்/இருக்கும். கடினமான பெரிய மரத் துண்டுகளை ஒழுங்காக அறுத்து எடுப்பதற்குக் ''கோலை''ப் பயன்படுத்தி வரிகளை வரைந்து கோணல் மாணல்களை நீக்கிவிடு வர். ''கோல்'' இல்லாமல் அந்த ஒழுங்கு வருவதில்லை. அவ்வாறே மக்களில் ஒழுங்குக்கு உட்படாதவர்களைத் திருத்துவதற்குக் ''கோ'' அல்லது ''கோன்'' இன்றியமையாதவன் ஆகின்றான்.

இத்தகைய ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டே தமிழில் சொற்கள் அமைந்துள்ளன. அவற்றை நுட்பமாய் ஆராய்ந்து அறிவதற்கு இலக்கணமும் சாத்திரமும் துணை செய்யும்.

ஆக, யாரிடத்தில் ஒழுங்கு இருக்கின்றதோ, யார் மற்றவர்களை ஒழுங்குபடுத்துகிறார்களோ, அவர்கள் 'கோ', 'கோன்' ('கோல்') ஆகின்றனர்.

''கோ''வினால் நிலை நிறுத்தப்படுகின்ற ஒழுங்கு மற்றவர்களுக் குப் பயன்படுவதாக இருக்கும். அவ்வாறு பயன்படுவது ''அழகு'' எனப்படும். அதுவே ''அறமும்'' ஆகும். (''அறம்''என்னும் சொல்லுக்கும் அறுக்கப்பட்டு வரையறை செய்யப்பட்டது என்பதே பொருளாகும். அறத்தில் கோணல் மாணல்கள் இருக்க மாட்டா).

ஆக, ''கோவே'' என்பது ஒழுங்கு, அழகு, அறம் உடையவன் என்றும், அவற்றை உடைய ''முருகனே!'' என்றும் ஆகும்.

முருகனைக் ''கோவே'' என்ற பிறகு அருணகிரியார் ''தேவே'' என்றும் அழைக்கின்றார். ''தே'' என்னும் எழுத்துக்கு ஒளி என்றும் இனிமை என்றும் பொருள்கள் உள்ளன. (''தீ'' என்னும் எழுத்துக்கும் இதே பொருள்கள் உள்ளன). ஒளி உள்ள இடத்தில் இனிமையும் இருக்கும். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன. இருட்டில் இனிமை இராது. முருகன், ஒளியையும், இனிமையையும் உடைய வன் என்பதனால் ''தேவே''என்றார்.

''தேவே'' என்னும் சொல்லுக்கு முன் பல அடை மொழிகளை யும் தந்துள்ளார். குறவர் மகளாகிய வள்ளியின் தோளைப் புணர்கின்ற தேவே என்றார்.

குறவர் குன்றங்களில் வாழ்பவராவர். குன்றிய மலைக்குக் குன்றம் என்று பெயர். மலைக்கத்தக்கபடி இருப்பது மலை. மலைமேல் இருப்பவர்களுக்கு உயர்ந்த எண்ணங்கள் இயல்பாகவே தோன்றும். மாறாகக் குன்றங்களில் இருப்பவர்க்கு எண்ணங்களும் குறுகி இருக்கும். அவர்கள் பிறருடைய பொருள்களையும் பறவைகள் போன்றவற்றின் உயிர்களையும் வவ்வுவதனால் அவர்களுடைய எண்ணங்கள் குறுகிவிட்டன. அத்தகைய குறவருடைய மின்கொடி யாக (மகளாக) வள்ளிப்பிராட்டியார் இருந்தார்.

''வள்ளி'' என்னும் சொல்லுக்கு வளம் என்றும், குளிர்ச்சி என்றும், ஒளி என்றும், வெண்மை என்றும், ஒழுங்கு என்றும், நிலவு என்றும் பொருள்கள் உள்ளன.

''குறமின் கொடி'' என்பதற்குக் குறவரின் கொடிபோன்ற மகள் என்பதோடு வேறு பொருளும் உண்டு. அது மூலாதாரத்தில் தோன்றுகின்ற மின்னல் போன்ற விந்துவின் ஒழுங்கு ஆகும். மூலாதாரம் ஒரு குறுகிய இடம். அங்குத் தோன்றுகின்ற விந்துவுக்கு மின்னல் போன்ற ஒளி இருக்கிறது. கொடி என்பது அந்த மின்னலின் ஒழுங்கு ஆகும்.

விந்துவுக்கு ஒளியோடு இன்பமும் இருக்கின்றது. அது கீழே செல்லும்போது சிற்றின்பமாகவும், மேலே செல்லும்போது பேரின்ப மாகவும் அமைகின்றது.

முதுகெலும்பு நிமிர்ந்து நிற்கும் மரத்தைப் போன்றது. அதை ஆதாரமாகக் கொண்டு நுண்ணியதாகிய நடுநாடி உயர்ந்து செல்கின் றது. அதை மரத்தைச் சார்ந்த கொடிக்கு உவமிப்பர். ஆக, இங்குக் ''குறமின் கொடி '' என்றது வள்ளியைக் குறிப்பதோடு, விந்துவின் ஒளியையும், அது செல்லும் இன்பப் பாதையாகிய நடுநாடியையும் குறிக்கின்றது.

''குறவர் குடிசை நுழைந்தாண்டி, அந்தக் கோமாட்டி, எச்சில் விழைந்தாண்டி'' என்னும் திருவருட்பாத் தொடரில், குறவர் குடிசை மூலாதாரத்தைக் குறிக்கும். கோமாட்டி என்பது வள்ளி எனப்படும் விந்துவாகும். எச்சில் என்பது அவ்விந்துவின் மிச்சம் ஆகும்.

விந்து நடு நாடியில் செல்வதென்பது அது எழுச்சி கொள்வ தாகும். நடு நாடி மனித உணர்ச்சிகளின் போக்குவரத்துக்கு வாயிலாகும். உணர்ச்சியோடு கருத்தும் கலந்திருக்கும். இவற்றின் அசைவுக்கும் உந்துதலுக்கும் பிராணாயாமக் காற்று உதவி செய்கிறது. பிராணா யாமத்தால் உந்தச் செய்யும் முயற்சி இல்லாமல் வெறுமனே மூச்சை விட்டுக்கொண்டிருக்கும் மனித வாழ்வு சிறப்புடையதன்று. அது சாதாரண வாழ்வாகவே முடிந்துவிடும்.

மூச்சில், உணர்வும், கருத்தும் கலப்பதோடு அவரவர் பண்பும் கலந்து வரும். சான்றோர் விடுகின்ற மூச்சுகூட மற்றவர்களுக்கு நன்மை செய்யும். மாறாகத் தீயோர் விடுகின்ற மூச்சில் தீமை இருக்கும். இதனாற்றான் ''அவர் காற்றே படக்கூடாது'' என்னும் வழக்கு இருந்து வருகிறது.

மூச்சைப்போலவே தொடுதலும் ஆகும். சிலர் தொட்டால் நன்மை உண்டாகும். சிலர் தொடுவதால் தீமை வரும். ''தொட்டால் தீட்டு'' என்னும் வழக்கு இதனாலேயே இருந்து வந்தது. உண்மை யிலேயே தூயோராய் இருப்பவரை அல்லாதார் தொட்டால் தீமை உண்டாகும்.

எனவே, ஒவ்வொரு நொடியும் நாம் செய்கின்ற செயல்களும், நினைக்கின்ற எண்ணங்களும் உயர்ந்தனவாய், தூய்மையானவை யாய் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். நல்லதையே செய்வோமானால் நாம் இழுத்து விடுகின்ற (சுவாசிக்கின்ற) மூச்சும் இயல்பாகவே தூயனவாய் நல்ல சத்திகளை வெளியிட்டுக்கொண்டு (சுரந்துகொண்டு) இருக்கும்.

இயல்பாகவே நன்மை செய்யும் சான்றோர் எப்போதும் சமநிலையில் அமைதியாய் இருப்பர். அவர்களுக்குப் பணி செய்வதும் ஓய்வு எடுப்பதும் ஒன்றாகவே இருக்கும். ஓய்வென்பது இனிமையில் தங்குவதாகும். இனிமை இல்லாதோர் செய்கின்ற பிராணாயாம முயற்சிகள் துன்பமாய் இருக்கும். முயற்சி என்பதே இல்லாமல் இயல்பாய் இனிமையில் இருப்போர்க்கு விந்துவின் ஏற்றம் இயல்பாகவே அமையும்.

இனி, மேற்கூறியவாறு மூலாதாரத்திலிருந்து மேலேறிச் செல்லும் விந்து இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விந்துவும் இறைவனும் சந்திக்கும் இடம் இதயம் ஆகும்.

விந்துவைக் குறிக்கின்ற எழுத்து 'உ'கரம் ஆகும். இறைவனைக் குறிக்கின்ற எழுத்து 'அ'கரம் ஆகும். 'அ'கரமும் 'உ'கரமும் சேரும் இடம் இதயம் ஆகும். இதயத்தில் நடைபெறும் இச்சந்திப்பைக் குறிப்பதுவே இலிங்கம் ஆகும் (அ+உ=இலிங்கம்):. இந்த அமைப்பைப் பண்டைய தமிழர்கள் எவ்வளவோ காலத்துக்கு முன்பே கண்டு அநுபவித்துத், தெரிவித்து, வழிவழியாய்ப் பின்பற்றி வந்துள்ளனர்.

உலகத்தில் எத்தனையோ மதங்கள் உள்ளன. அவற்றுக்கு எத்தனையோ மூர்த்தங்கள் உள்ளன. மூர்த்தங்கள் இல்லாதவையும் உள்ளன. ஆனால் மேற்கூறிய இலிங்க மூர்த்தம் கருத்தோடு இயற்கைக்கு ஒத்ததாய் அமைந்துள்ளது என்பதனை அறிந்து, பயன் கொள்ளலாம். இதனை விளக்குகின்ற சைவ சமயமும், உண்மைகளைப் புலப்படுத்தும் சமயமாக உள்ளது. இதற்கு ஒரு சான்றைக்கூட இங்குச் சொல்லலாம். அது இயற்கையே அமைத்துத்தந்த சான்றாகும். அது நாகலிங்கப் பூவாகும். அதில் இயல்பாகவே இலிங்க அடையாளம் இருக்கின்றது. இதைக்கொண்டு அந்த மூர்த்தம் இயல்பானதே என்று துணியலாம்.

இலிங்கம் உணர்த்துவதெல்லாம்: நீளமும் வட்டமும் சேர்ந்ததுவே இவ்வுலகம் என்பதாகும். இயற்கையைக் கூர்ந்து கூர்ந்து அதன் அடையாளங்களைக் காணும்போது இந்த உண்மை புலப்படும். அதாவது நாதமும் விந்துவும் சேர்ந்த இலிங்க வடிவமே இவ்வுலகம் ஆகும்.

நாத விந்துக்களின் சேர்க்கை ஓர் உள் நிகழ்ச்சி (அக நிகழ்ச்சி) ஆகும். அதன் தன்மைகளை ஓதுவதே இந்தக் கந்தரநுபூதி நூலாகும். உள்ளுணர்வுக்குத் தக்க கோலத்தை இக்கந்தரநுபூதிச் சொற்கள் ஒவ்வொன்றும் காட்டிக்கொண்டிருக்கின்றன.

அடுத்துத் ''தோள் புணரும் தேவே'' என்பது என்ன என்பதைப் பார்ப்போம். தோள் புணர்தல் என்பது முயற்சியில் ஒன்றாதல் என்று பொருள்படும். தோளொடு தோள் சேர்தல் என்பது சமமான இருவர் ஒன்று சேர்ந்தனர் என்றாகும். இதனால் வள்ளியும் முருகனும் சமமான நிலையில் இருக்கும் பாவனை இப்பாடலில் குறிக்கப்படுகின்றது. அவ்வாறே ஆன்ம முயற்சியாகிய விந்துவும், இறை அருளாகிய நாதமும் சமமாகச் சேர்கின்றன.

''புணர்''தலென்னும் சொல் அத்வைதக் கருத்தை உடையது. இரண்டு பொருள்கள் சேர்ந்து ஒரு பொருள்போல இருப்பது புணர்தல் ஆகும். பாலில் நீர் சேர்வது அத்தகைய சேர்க்கையாகும்.

அட்ட மூர்த்தங்களில் இறைவனும் அவ்வாறு கலந்திருக்கின்றான் என்று மாணிக்கவாசகர் கூறியுள்ளார். ''நில(ம்), நீர், நெருப்பு, உயிர், நீள் விசும்பு, நிலாப், பகலோன், புலனாய மைந்தனொடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்'' (உயிர் = காற்று. புலனாய மைந்தன் = ஆன்மா) என்று திருத்தோணோக்கத்தில் வந்துள்ளது. இந்த எட்டுப் பொருள்களுள் அவன் பிரித்து அறிய முடியாதபடி புணர்ந்துள்ளான். இந்த அத்துவிதக் கலப்பை எண்ணியே இறந்தவர்களுக்கு இலிங்கம் வைத்து வழிபடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இறந்தவர் சிவமே ஆகிவிட்டார் என்னும் எண்ணத்தால் அவ்வழக்கு இருந்து வருகிறது.

சைவ சமயத்தில் இறைவனை அடைவதற்கான நெறிகள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன. அவை: 1) அடிமை நெறி (தாச மார்க்கம்) 2) மகவு நெறி (புத்திர மார்க்கம்) 3) தோழமை நெறி (சக மார்க்கம்) 4) அன்பு நெறி (சன்மார்க்கம்). இவற்றுள் சன்மார்க்கம் என்பது உண்மை நெறியாகும். சன்மார்க்கம் என்பதைப் பிரித்தால் சத்+மார்க்கம் என்று வரும். ''சத்'' என்பது இங்கு நன்மை என்னும் பொருளில் வரவில்லை. அது உளதாம் தன்மையைக் குறிக்கின்றது. மணிக்கவாசகர் இந்தச் சன்மார்க்கத்தில் சென்றார். இந்த நெறி அன்பு அல்லது பத்தியின் மிகுதிப்பாட்டைக் காட்டும். இதே சன்மார்க்க நெறியில்தான் வள்ளியும் முருகனை

அடைந்தாள். கந்தரநுபூதி இதை விளக்குவதாகும். அதனாலேயே இந்நூல் வள்ளியைப்பற்றி மீண்டும் மீண்டும் கூறுகின்றது.

இனி கோவே, தேவே என்று அழைத்த அருணகிரியார் அடுத்து, முருகனை ''தேசிகனே'' என்று அழைக்கின்றார். தேசிகன் என்பது குருவாகும். முருகன் சிவசங்கரனுக்கு உபதேசித்ததால் குருவானான். ''சங்கரன்'' என்பதும், ''சிவ சங்கரன்'' என்பதும் ஒன்றே. இதனை விதந்து கூறியது என்பர்.

சங்கரன் என்னும் சொல்லுக்கு சுகம் கொடுப்பவன் என்று பொருள். (சம்=சுகம்; கரன்=செயலுடையவன்). சுகம் சேர்வதற்குத் தடையாய் உள்ள தீயவற்றை அழித்துப் பிறகு, இன்பம் தருபவன் சங்கரன். தீயவை அழியாமல் சுகம் வருவதில்லை. தீமை அழிந்தால் சுகம் தானே வரும். இறைவனுக்கு இப்பெயரைக் கொடுத்துள்ள இந்நாட்டவர் தீயதைப் போக்கி இன்பம் பெறும் கொள்கை உடையவராவர். தத்தம் தீமைகளைக் குறைத்துக் கொண்டே வந்தால், அனைவருக்கும் இன்பம் தானே வரும். இதுதான் மன்பதை உய்வதற்கான ஒரே சீர்திருத்தக் கொள்கையாகும். இக்கொள்கையை உடைய சமயத்தால் உண்டாகாத சீர்திருத்தம் வேறு எந்தச் சமயத்தால் உண்டாகப் போகிறது?

மேற்கூறியவாறு தீமைகளை அழித்து அதனால் பெறுகின்ற நன்மைகள் செம்மை என்றும், நன்மை என்றும், மங்களம் என்றும், சத்து என்றும், தூய்மை என்றும், உண்மை என்றும் கண்டனர். அதோடு, இப்பொருள்கள் அத்தனையையும் ஒரே சொல்லால் குறிக்கக்கூடிய ''சிவம்'' என்னும் பெயரையும் தம் சமயத்தலைவனுக்கு வைத்துக் கொண்டனர். இந்தச் சமயம் மிகப் பழங்காலம் தொட்டு இருந்து வந்துள்ளது. மற்றும் ''சிவம்'' என்னும் சொல்லுக்கு எவ்வகையான தீய பொருளும் இல்லை. (உருத்திரன் என்னும் சொல்லுக்கு அழுது கொண்டே இருப்பவன் என்ற பொருள் உண்டு. ஆனால் அந்த அழுகை பிறர்க்காக அழுவதாகும். மற்றும், உருத்திரன் தீமைகளை அழிக்கும்போது அச்சுறுத்தும் உருவத்துடன் இருப்பான். என்றாலும் அவ்வுருவம் ஆன்மாக்களுக்கு நன்மை செய்வதற்கே அமைந்ததாகும்).

சிவசங்கரனின் நன்மை செய்யும் கொள்கையை ஒளிரச் செய்தவன் முருகன் ஆவான். ''தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது'' என்றபடி முருகன்

சிவசங்கரனைவிட அறிவார்ந்தவனாய் இருந்தான் என்பதற்காகத் தகப்பனுக்குக் குருவானான்.

(2) மா ஏழ் சனனம் கெட மாயை விடா மூவேடணை என்று முடிந்திடுமோ?

அருணகிரியார் முருகனைக் கேட்ட கேள்வி மூவகைப் பற்றுக்கள் நீங்கி, பிறவி என்று முடிந்து விடும் என்பதாகும்.

சனனம் என்பது பிறப்பு. ஏழ்சனனம் என்பது ஏழு வகைப் பிறப்புக்கள். அவை: 1) தாவரம் 2) புழு 3) நீர் வாழ்வன 4) பறப்பன 5) விலங்கு 6) மனிதர் 7) தேவர். இப்பிறப்புக்கள் தொடர்ந்து பலகாலும் வருவதனால் ''மா ஏழ் சனனம்'' என்றார்.

அவா நீங்காமல் பிறப்பு அறுவதில்லை. அவா, பாசம் என்னும் மலத்தொடு சேர்ந்தது. அது ஆன்மாவை அநாதியாய்ப் பற்றியுள்ளது. பாசத்தின் பிடியிலிருந்து ஆன்மா விடுபடுவதற்கு, மாயைப் பொருளைக் கொடுத்து அதன் அறிவை விளங்க வைக்கிறான் இறைவன். அறிவு விளக்கம் பெற்று, மாயையைக் கடந்து விட்டால் பற்றுக்கள் நீங்கிப் பிறவி அறும். இது என்று நிகழும்? என்பதே அவருடைய கேள்வியாகும். இக்கேள்வியைக் கேட்பதனால், உடனே பாசம் நீங்கிப் பிறவி நிற்க வேண்டும் என்னும் அவருடைய ஆர்வம் வெளிப்படுகின்றது.

மாயையின் மயக்கம் நீங்காதவரை, பற்றுக்கள் நீங்கமாட்டா. அவை இங்கே ''மூவேடணை'' எனப்பட்டன. ''ஈடணை'' என்னும் சொல் இங்கு ''ஏடணை'' என்று வந்துள்ளது. மூ+ஈடணை என்னும் சந்திச் சொற்கள் நன்கு ஒலிக்க இயலாமையால் ''மூ ஏடணை'' என்று வந்துள்ளது. ஈடுபாடு அல்லது பற்றுக்கு ஈடணை என்று பெயர்.

மாயைப்பொருள் எது என்பதையும், அது எதற்காக இறைவனால் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டு உலகில் பழகுவோருக்கு அதனால் வரும் மயக்கம் நீங்கும். மற்றையோருக்கு நீங்காது. அவர்களுக்கு அந்த ஈடுபாடு 1) மண்ணாலும், 2) பெண்ணாலும், 3) பொன்னாலும் தொடர்ந்து இருந்து வரும்.

மண் என்பது நிலம், வீடு, நாடு, நாட்டின் ஆட்சி என்று வளர்ந்து செல்லும். அதிகார ஆசை என்பதும் இதுவே. இது

அறிவின் வேட்கையால் வரும்; புலனால் வருவதன்று. இந்த ஆசை எல்லோருக்கும் இருப்பதில்லை.

பெண் ஆசை ஐம்புலன்களைக் கொண்டு அநுபவிக்க விரும்புகின்ற ஆசையாகும். இது சிறுவர்க்கும் வயோதிகருக்கும் இருக்காது.

பொன் ஆசை என்பது சூழல் வளம் ஆகும். அதாவது செல்வாக்கு, மதிப்பு முதலியவற்றில் உள்ள ஆசை. இதற்கு அடிப்படையாய் இருப்பது செல்வம் அல்லது பொன். இந்த ஆசை எல்லோரிடத்திலும் இருக்கும்.

மண், பெண், பொன் ஆகிய மூன்றும் அறத்தின் அடிப்படையில் நுகரப்படுமானால், அது பற்றாகாது. எனவே துய்க்கும்போது அறம் ஒன்றே முதலிடம் பெற வேண்டும். அறிவும் குணமும் சேர்ந்த நிலையில் துய்க்கப்பட வேண்டும்.

''என்று முடிந்திடுமோ?'' என்றது எப்பொழுது இறுதியாகத் துய்க்கப்பட்டு நின்றுவிடுமோ என்பதாகும்.

ஆக இப்பாடலில் அருணகிரியார் முருகனை விளித்து, மாயையின் மயக்கம் நீங்கி மூன்று பற்றுக்களிலிருந்து என்றைக்கு விடுபடுவேன் என்று வினவுகிறார்.

III சக்கரம்

இந்தப் பாடலில், மாயையின் சேர்க்கையால் மூன்று ஆசைகள் வருகின்றன என்பதும், மாயையின் மயக்கம் நீங்கி, ஆசைகளும் பிறவிகளும் முடிவுக்கு வரவேண்டும் என்பதும் குறிக்கப்பட்டுள்ளன.

ஆன்மாவுக்கு மாயைப் பண்டங்களோடு சேர்க்கை வரும்போது ''கர கர'' என்றும் ''கல கல'' என்றும் ஒலி உண்டாகும். மற்றும் மாயைக்குரிய மந்திர எழுத்துக்கள் ''க்ரீம்'' ''க்லீம்'' ஆம். இவற்றுள் மாயையின் உந்துதலைக் குறிப்பது ''ரு''கரம் ஆகும். இது வடமொழியில் உயிரெழுத்துக்களுள் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. ரு, ரூ, லு, லூ ஆகிய நான்கு எழுத்துக்களும் மந்திரத்துக்குரியவை. அவை தமிழில் இல்லை. ஏனென்றால், மொழி வழக்கில் அவை பயன்படுவதில்லை.

இப்பாடலில் ஆன்மாக்கள் மாயைப் பண்டங்களோடு சேர்ந்து பழகுவது குறிக்கப்படுவதால், இப்பாடலுக்குரிய சிறப்பெழுத்து 'ரு'கரம் ஆகும். இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-40

வினை ஓட விடும் கதிர்வேல் மறவேன்;
மனையோடு தியங்கி மயங்கிடவோ?!
சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு, திரிந்தவனே!

I பொழிப்புரை

சுனைகளிலும், அருவித் துறைகளிலும், பசுமையான தினைக்கதிர் விளையும் புனங்களிலும், பரணிலும் உலவிவரும் முருகனே! என் வினைகளை வேகமாகத் துய்ப்பித்து, ஓயும்படிச் செய்கின்ற உன்னுடைய ஞானமாகிய கதிர்வேலை நான் மறக்கமாட்டேன். அடியேன் உலக வாழ்வில் பற்று நீங்காமல் வருந்தி மயங்க வேண்டுமோ?!

II விளக்கவுரை

இந்தப் பாடல் சிக்கலே இல்லாத சொற்றொடர்களால் அமைந்துள்ளது, என்றாலும் அரிய பல கருத்துக்கள் இதில் மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. மற்றும் இப்பாடல் முருகனுடைய இயல்பையும் காட்டுகின்றது. அநுபூதிப் பாடல்கள் ஒவ்வொன்றும் முருகன் என்னும் சொல்லுக்கு விளக்கம் தருவனவேயாம். அவற்றுள் இதுவும் ஒன்று. இதில் அவனுடைய திருவிளையாடல்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவன் வள்ளியைத் திருமணம் புரிந்துகொள்ள இயற்கை எழில் விளங்கும் இடங்களில் திரிய வேண்டும்போலும்! வள்ளியைத் திருமணம் புரிந்து கொள்ளுதல் என்பது ஆன்மாவை ஆட்கொள்ளுவதாகும். இப்பாடல் இயற்கைச் சூழலைக் குறிப்பதனால் நமக்குக் கலை மற்றும் தெய்வ உணர்வைத் தந்து அநுபூதியில் செலுத்துகின்றது.

(1) சுனையோடு, அருவித்துறையோடு, பசுந்தினையோடு, இதணோடு, திரிந்தவனே!

சுனை மலையிலுள்ள நீர் நிலையாகும். அகலம் குறைவாகவும் ஆழம் மிகுதியாகவும் உள்ள நீர்நிலை ''சுனை'' எனப்படும். மலைமேலேயே அகன்ற ஏரி இருந்தாலும் அது சுனை ஆகாது.

''சுன்'' என்பது ஓர் ஒலிக் குறிப்பாகும். இதுவும் ''சுர்'' என்பதைப் போன்றதே. சூரிய வெப்பம் மிகும்போது 'சுரீல் என்று காய்கிறது' என்று கூறுவோம். காய்ச்சப்பட்ட இரும்புக் கம்பி தண்ணீரில் வைக்கப்பட்டால் முதலில் ''சுர்'' என்றும், பிறகு, கம்பி ஆழமாகச் செல்லச் செல்ல ''சுன்'' என்றும் ஒலி எழுப்புவதை நாம் கேட்டிருக்கின்றோம். ''சுர்'' ஒலி கேட்பதைப்போல ''சுன்'' ஒலி பெரிதாகக் கேட்காவிட்டாலும் உற்றுக்கவனிக்கும்போது நுட்ப மாகக் கேட்கும்.

திண்மையான பொருள்கள் இரண்டினை ஊத்துத் தட்டும்போது பெருத்த ஒலி கேட்கின்றது. அதைப்போலவே ஒரு தாளை (காகிதத்தை) இன்னொரு தாளோடு பொருத்தும்போதும் ஒலி உண்டாகின்றது. ஆனால் அந்த நுட்ப ஒலியை நம் காதுகளால் கேட்க முடிவதில்லை.

இத்தாள்களிலிருந்து வரும் ஒலியைப்போல் புல நுண்ணிய ஒலிகள் நமக்குக் கேட்பதில்லை. மேற்குறித்த ''சுன்'' என்னும் ஒலியும் நுண்ணியதாயினும் உற்றுக்கேட்டால் புலனாகும். அது தண்ணீரில் வெம்மை குறைந்து வரும்போது வருகின்ற ஒலியாகும். நீர் நிலை ஆழ்ந்ததாகவும், மிகவும் தண்மையாகவும் இருப்பதனால் அதில் உண்டாகக்கூடிய ''சுன்'' என்னும் ஒலிக்குறிப்பை அடிப்படை யாகக் கொண்டு அதற்குச் ''சுனை'' என்னும் பெயர் உண்டாயிற்று.

புறத்தில் சுனை இருப்பதைப் போலவே நம் உடம்பினுள்ளும் ஒரு சுனை இருக்கின்றது. அதுவே நம் இதயம் ஆகும்.

சென்ற பாடலில் (39) பார்த்தைப்போல, இதயத்தில் நாதமும் விந்துவும் கூடுகின்றன. மேலிருந்து வருகின்ற நாதம் ஒரு தீப்பிழம்பு (அக்னித்தம்பம்) போன்றது. கீழிருந்து வரும் விந்து சுனைநீரைப் போன்று தண்மை உடையது.

வெம்மையும் தண்மையும் ஒன்று சேரும்போது (மேலே குறிப்பிட்ட ''சுர்'' என்னும் ஒலி உண்டாவதைப்போல) இதயத்தில் ஓர் ஒலியுண்டாகின்றது. அது பிரணவம் என்னும் ''ஓ''ங்கார ஒலியாகும்.

நாதம் 'அ'கரத்தாலும், விந்து'உ'கரத்தாலும் குறிக்கப்பெறும். ''அ''வும், ''உ''வும் சேர்ந்து 'ஓ' உண்டாகிறது (அ+உ=ஓ).

எனவே பிரணவம் நமக்குக் கைகூட வேண்டுமானால் (சித்திக்க வேண்டுமானால்) ஒளிவிடும் அனல் போன்ற இறை உருவத்தை இதயத்தில் தியானிக்க வேண்டும். அது சிவசூரியன் என்றும், கீழே இருப்பது ஆவுடையார் என்றும் வழங்கப்பெறும். இவ்விரண்டின் சேர்க்கையே ''இலிங்கம்'' எனப்படும்.

மேற்கூறிய அமைப்பை அநுபவத்தில் கண்ட நம் முன்னோர்கள் உடம்பே கோயில் என்றும், அக்கோயிலின் கருவறை (மூலத்தானம்) இதயம் என்றும் தெரிவித்துள்ளனர். எனவே திருக்கோயில்களில் கருவறைகளில் காணும் இலிங்கத்தை நம் இதயங்களிலும் காணலாம்; காணவும் வேண்டும்.

''புன் புலால் யாக்கை புரை புரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்து'' என்னும் திருவாசகத் தொடரில், இந்த உடம்பு கீழ்மையான புலால் கொண்டு செய்யப்பட்டதானாலும், இதனைப் பொன்னாலாகிய நீண்ட மாடத்தை உடைய கோயிலாகக் கருதி இறைவன் இதனுள்ளே புகுகின்றான் என்பது தெரிகிறது. அதாவது, புலால் யாக்கையானாலும், இதற்குப் பொற்கோயில் ஆகக்கூடிய மதிப்பு இருக்கின்றது. உடம்புக்குள்ளே இலிங்கத்தை மட்டும் வைத்து விடுவோமானால், இது பொற்கோயில் ஆகிவிடுகின்றது. எல்லா ஆன்மாக்களின் இதயங்களிலும் இறைவன் வீற்றிருப்பதனால், முருகனைச் ''சுனையோடு...திரிந்தவனே'' என்றார்.

அடுத்து ''அருவித்துறையோடு'' என்பதனைப் பார்ப்போம்: உயரத்திலிருந்து கீழே இறங்கிவரும் நீரோட்டம் அருவியாகும். படி இருக்கும் இடம் துறையாகும். அது நீரைப் பயன்படுத்தக்கூடிய ஒரு குறிப்பிட்ட இடமாகும்.

புறத்தில் மண் இருப்பதைப்போல நம் உடம்பினுள் மண் தன்மை உடையது மூலாதாரம் ஆகும். சுவாதிட்டானம் அந்த மண்ணை அரித்துக்கொண்டு வருகின்ற நீரோட்டம் போன்றது. (அடுத்துள்ள மணிபூரகம் கடல் போன்ற அகன்ற நீர் நிலையை ஒப்பதாகும்).

முருகனுக்கு உரிய ஆதாரம் சுவாதிட்டானம் என்பதனை முன்னமே பார்த்திருக்கின்றோம். அதாவது அவன் அருவி போன்ற இனிய இடமாகிய சுவாதிட்டானத்தில் உலவிக்கொண்டு இருப்பான். இந்த இடத்திலிருந்தே சூக்கும சத்திகள் அருவிபோல வருகின்றன.

அடுத்துப் ''பசுந்தினை'' என்பது முற்றாத தினையாகும். இங்கு அத்தினை விளைகின்ற தினைப்புனம் குறிக்கப்பட்டது. தினை மலையில் விளைகின்ற தானியமாகும். பச்சையாகவே தின்னக்கூடிய பொருள் என்னும் கருத்தில் அதற்குத் ''தினை'' என்னும் பெயர் உண்டாயிற்று. தினையின் அளவு மிகவும் சிறியது. (திருக்குறளில், இத்தினை சிறிய பொருள்களுக்கு உவமையாகக் காட்டப் பட்டுள்ளது).

மூலாதாரத்தின் மண் தத்துவமும், சுவாதிட்டானத்தின் நீர் தத்துவமும் சேர்ந்து விந்துவாகிய தினை விளைகின்றது. இத்தினை யுடன் திருவருளாகிய தேனைக் கலந்து தின்னலாம் (துய்க்கலாம்).

விந்துவின் உணர்ச்சி குருதியின் வாயிலாக மயிர்க்கால்தோறும் உடம்பெல்லாம் பரவும். விந்து சிறிது உயரும்போதே அதன் உணர்ச்சி உச்சிக்கும் அதற்கு மேலும்கூடப் போகும். முற்றாத தினைக்கே காவல் வேண்டுமாதலால், ''பசுந்தினை'' என்றார்.

''இதண்'' என்பது இந்த இடம் அல்லது இந்தக் குறிப்பிட்ட இடம் என்று பொருளாகும். இச்சொல் இ+அண் என்று பிரிந்து இந்த மேலிடம் என்று பொருள்படும். அதாவது தினைப்புனத்தில் உள்ள எல்லாவற்றையும் விட மேலான உயர்ந்த இடம் பரண் ஆகும். (பரண் என்னும் சொல் தமிழ் ஆனதால் அதே கருத்துடைய மேலான பொருளைக் குறிக்கின்ற ''பரம்'' என்னும் சொல்லும் தமிழே ஆகும்). பரண் இங்கு ''இதண்'' எனப்பட்டது. எல்லாவற்றுக் கும் மேலான இடமாகிய அந்தப் பரண்மேல் இருந்துகொண்டு தினைப்புனம் காப்பவர் பறவைகளை 'ஆயல்' ஓட்டுவர்.

புறத்திலுள்ள பரண்போல, உடம்பினுள்ளேயும் ஒரு பரண் இருக்கின்றது. அது புருவ நடுவாகும். வள்ளி பரண்மேல் இருந்து கொண்டு, ஆயல் ஓட்டினாள் என்பது அகத்தே ஆன்மா புருவ நடுவில் இருந்து கொண்டு புலன்களாகிய பறவைகள் வராதபடி பாதுகாப்பதாகும்.

''ஆயல்'' ஓட்டுவது கல்லை வீசிப் பறவைகளைத் துரத்துவ தன்று. ஆயல் ஓட்டும்போது இசை பாடுவர். வருகின்ற பறவைகள் அந்த இசையில் மயங்கிப் பயிரை அழிக்காமல் நின்று விடும். அவ்வாறே உடம்பினுள்ளே விளைகின்ற சிவானந்தப் பயிரைப் புலன்கள் அழிக்காதபடி அவற்றைச் சிவபுண்ணியச் செயல்களில் திருப்பிவிடுவது அகத்தில் ஆயல் ஓட்டுவதாகும்.

மூலாதாரத்தில் தோன்றுகின்ற குண்டலியை வளர்த்து உயர்த்துவது, சிவானந்தப்பயிரின் பயனைப் பெறுவதற்கேயாகும். மற்றப்படி அதனால் வரும் தவ ஆற்றலைக் கொண்டு சித்துக்களைப் பெறுவதற்கல்ல. எனவே புருவத்தில் இருந்துகொண்டு ஆன்ம உணர்வு புலன் வழியாகவோ, சித்து வழியோ போகாமல் இருக்கும்படி ஆயல் ஓட்ட வேண்டும்.

அவ்வாறு பாதுகாத்தால், ஆன்ம உணர்வு புருவத்திலிருந்து 12 அங்குலம் உயர்ந்து பரவும். அந்த மேல் ஆதாரங்களின் சத்தி அதற்கும் மேல் ஆறு அங்குலம் (அதாவது உச்சியிலிருந்து 12 அங்குலம் வரை) பாயும்.

குன்றின் கீழே வேடர் குடிசையிலிருந்து மேலேறி, பரண்மேல் இருந்து கொண்டு வள்ளிப்பிராட்டியார் ஆயல் ஒட்டுகின்றார். இது கீழ் ஆதாரங்களையும், மேல் ஆறு ஆதாரங்களையும் ஆன்மா கடந்து உயர்வதைக் குறிக்கின்றது.

இப்பயணத்தோடு சம்பந்தம் உடையதே ஆறுஆறையும் (முப்பத்தாறு தத்துவங்களையும்) கடப்பது என்பதும் ஆம். ஆறு என்னும் சொல்லுக்கு வழி என்றும், நதி என்றும் பொருள்கள் உள்ளன. இங்குக் குறிக்கப்பட்ட சுனை, அருவி, துறை முதலிய ஆற்றுவழியே முருகன் உலாவி வள்ளியாகிய ஆன்மாவைச் சந்திக்கின்றாள். அந்த அழகிய முருகனைப் பார்த்து அருணகிரியார் ஒரு கேள்வி கேட்கின்றார்.

(2) வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன் மனையோடு தியங்கி மயங்கிடவோ?!

பிறவிதோறும் நம் வினைகள் நம்மைத் தாக்குகின்றன. ஓரறிவுப் பிறவிகளை விட மேல் பிறவிகளில் மிகுந்த வினைகளை வேகமாகத் துய்க்கின்றோம். மனிதப்பிறவியில், அதிலும் சான்றாண்மை மிகுந்து வர வர, வினைகள் நுட்ப உருக்கொண்டு வேகமாக வந்து தாக்குகின்றன. சான்றோர்கள் செய்யும் செயல்களும் வேகமாக நடைபெறும். வினைகளைத் தாங்கிக் கொள்ளும் திறனும், செயல் செய்யும் திறனும் அவர்களுக்கு மனத்தால் வருகின்றன.

மனம் சிறப்பாய் வேலை செய்வதே மனிதப் பிறவியில் பெற வேண்டிய மாட்சிமையாகும். மனத்தினால் செய்யப்படும் வேலை

களை விட, கையினால் செய்யப்படுபவை சிறியவையே. அதனா லேயே சிறுமை என்னும் பொருளைத் தருகின்ற ''கை' என்னும் பெயர் அதற்கு வைக்கப்பட்டுள்ளது.

கை, கால்களால் செய்யப்படும் வேலைகள் வரம்புக்குட்பட் டவை. எவ்வளவு வேகமாக ஓடினாலும் மனிதக்கால்களால் குதிரையின் வேகத்தை எட்ட முடியாது. ஆனால் அதனினும் வேகமாக மனத்தால் ஓட முடியும். மனதை ஒரு செயலில் பதியவைப்பதற்குப் ''பாவித்தல்'' என்று பெயர். (நிலத்தின்மேல் பதியும்படி வைக்கப்படுவது பாதம். பதியும்படி எண்ணுவது பாவனை) ''எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்'' என்னும்போது எண்ண அழுத்தத்தால் அவர்கள் எய்துவர் என்பது குறிக்கப்படுகிறது. ஆக, சான்றோர்களின் ஆழ்ந்த எண்ணத்தால், வினைகளைச் செய்வதும், துய்ப்பதும் வேகமாக நடைபெறுகின்றன.

நுட்பமான எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் வேகம் தானா கவே மிகுந்து வரும். விஞ்ஞானத்தில் புதிய நுட்பமான கண்டுபிடிப்புக் கள் எவ்வளவு வேகமாகப் பரவுகின்றன என்பதை நாம் காண்கின் றோம். (எண்ணங்கள் தவறானவையாய், தீயவையாய் இருந்தாலும் அவற்றின் வேகமும் மிகும். அதிலும், சான்றோர்கள் தவறு செய்து விட்டால் மிகவும் வேகமாகப்பரவும்). ஆக, கருத்துக்கள் எவ்வளவு நுட்பமாய் ஆழமாய்ப் பிறர் நன்மைக்காகப் பாவிக்கப்படுகின்ற னவோ, அந்த அளவுக்கு வினை வேகம் கொள்கின்றது.

வினை வேகம் கொள்வதன் நோக்கம் என்னவெனில், அது விரைவில் துய்க்கப்பட்டு, ஓய்ந்துபோய் முடிந்துவிட வேண்டும் என்பதே ஆகும். நினைந்து உருகும் அடியார்களுக்கு வினைகளை வேகமாக ஓடவிட்டு அவர்களை நையவைக்கின்றான் இறைவன். பிறகு அவ்வினைகள் துய்க்கப்பட்டு, நில்லாமே நீங்கும்படியாகவும் செய்கின்றான். அருணகிரியார் இதனை ''வினை ஓடவிடும் கதிர் வேல்'' என்றார்.

வேலாகிய ஞானம் வந்துவிட்டால், தீவினைகள் எல்லாம் ஓடிவிடும். ஒரு கல்லைக்கொண்டு பல காகங்களையும் விரட்டமுடி வதைப் போல ஞானத்தால் வினைகள் எல்லாமே நீங்கிவிடுகின்றன.

சுனை, அருவி முதலியவற்றைக் கூறி, வேலைப்பற்றியும் கூறியிருப்பதனால் இவற்றுக்கும் வேலுக்கும் ஏதோ தொடர்பு

இருக்கிறது என்பது தெரிகிறது. அது ஆன்ம உணர்வு மூலாதாரத்தி லிருந்து மேலே சென்று ஆதாரங்களைக் கடந்து, சிவானந்தத்தைப் பெறுவதற்குக் கதிர்வேல் (ஞானம்) துணை செய்கிறது என்பதாகும்.

அவ்வாறு துணை செய்கின்ற வேலை, ''நான் மறவேன்'' என்று அருணகிரியார் கூறுகிறார். மறவாமல் இருந்தும் உலகியல் வாழ்வில் ''நான் மயங்கலாமோ?'' என்று வருந்தி வினவுகிறார். ''மயங்கிடவோ'' என்பதில் 'ஓ'காரம் எதிர்மறைக்கருத்தில் வந்துள் ளது. எனவே மயங்கக்கூடாது என்பது கருத்தாகும்.


''மனை'' என்பது வீடு. அதோடு, இது, உலகியலில் எல்லாவற்றையும் குறிக்கின்ற பொதுச்சொல்லாகவும் உள்ளது. மனத்தின் வழியாக நடத்தப்படும் இல்லறம் முழுமையையும் இது குறிக்கின்றது.

''ஒடு'' என்பது உடன் இருந்து என்று பொருளாகும். சம்சாரத்தோடு கலந்து இருந்தாலும் பற்றற்று இருக்க வேண்டும். மாறாக அதில் ஆழ்ந்து விட்டால் தியங்கி மயங்க வேண்டி வரும். ''தியங்கு''தல் என்பது வருந்துதல் ஆகும். மயங்குதல் என்பது ஒரு செயலைச் செய்தால் துன்பம் வரும் என்று தெரிந்து இருந்தும், மீண்டும் மீண்டும் அதையே செய்கின்ற தெளிவின்மை யாகும். ஒருமுறை வந்த அறிவு மீண்டும் திரிந்து போவதாகும்.

ஆக, அருணகிரியார் இப்பாடலில் தாம் சம்சாரத்தில் அழுந்தி வருந்தி மயங்காதபடிக் காத்தருள வேண்டுகிறார்.

III சக்கரம்

இந்தப் பாடல் உலகியல் பண்டங்களில் மயங்கக்கூடாது என்பதனைத் தெரிவிக்கின்றது. உலகியல் பண்டங்களோடு ஆன்மா சேரும்போது ரு, லு ஒலிகள் வரும் என்றும், சென்ற பாடலின் சிறப்பெழுத்து 'ரு'கரம் என்றும் பார்த்தோம். இப்பாடலிலும் மனையோடு ஒன்றி இருந்தாலும் பற்றற்று இருக்க வேண்டும் என்பது பற்றி வருவதால் இதன் சிறப்பெழுத்து 'ரூ' ஆகின்றது. இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-41

சாகாது எனையே சரணங்களிலே
கா கா, நமனார் கலகம் செயுநாள்,
வாகா! முருகா! மயில் வாகனனே!
யோகா! சிவஞான உபதேசிகனே!

I பொழிப்புரை

(நான்) சாகாமல் இருக்கும்பொருட்டு எமன் (என்) உடலிலிருந்து உயிரைப் பிரிக்கும்போது, எனக்கு உன் திருவடிகளிலே இடம் தந்தருள்க. என் துயரத்தைத் தாங்குகின்றவனே! அழகனே! மயிலை வாகனமாக உடையவனே! யோகியே! சிவஞானத்தை உபதேசிப்பவனே!

II விளக்கவுரை

இந்தப் பாடல் சாதலைத் தவிர்ப்பதற்கான வழியையும், வாழ்க்கையில் உண்மையான வெற்றி எது என்பதனையும் கூறுகின்றது.

(1) சாகாது எனையே சரணங்களிலே கா கா, நமனார் கலகம் செயு(ம்) நாள்

உயிர் உடலை விட்டுப் பிரிவது சாதல்; உடலோடு சேர்வது பிறப்பு. சாதலும் பிறத்தலும் ஒரு நச்சுச் சுழல் (Vicious circle) ஆகும். அது சுற்றிச் சுற்றி, முன்பு இருந்த இடத்துக்கே கொண்டு வந்து விடுகின்ற இயக்கம் ஆகும். அதாவது சாதலைத் தொடர்ந்து பிறத்தல் வரும்; பிறப்பைத் தொடர்ந்து இறப்பு வரும்.

பிறப்பு, நம் விருப்பத்துக்கு உட்பட்டதன்று; நம் உணர்வுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டது. எனவே அதை நாம் தவிர்க்கவோ மாற்றி அமைக்கவோ இயலாது. அதை இறைவனே அமைத்துத் தருகின்றான்.

இறப்பைப் பொருத்தவரை, நாம் முயன்றால் மாற்றிக்கொள்ள வழி பிறக்கும். இயற்கை நியதிப்படி நோய்வாய்ப்பட்டு இறந்தால் அடுத்த பிறப்பு நம்மைப் பின் தொடரும். அவ்வாறின்றி, இயற்கை நியதியைக் கடந்த முறையில் நாமாக, நம் விருப்பம்போல, உடலை விட்டுப் பிரிந்தால், மீண்டும் பிறக்க வேண்டுவதில்லை. அத்தகைய வாழ்வே மரணமிலாப் பெருவாழ்வு ஆகின்றது. அந்த வாழ்வை எப்படிப் பெறுவது என்னும் வினாவுக்கு அருணகிரியார் இந்தப் பாட்டில் ஒரு விடை கூறுகின்றார். அது பிறப்பு இறப்பு இல்லாத இறைவனுடைய பாதுகாப்பில் அவன் திருவடியில் அடைக்கலமாவது (சரணடைவது) ஆகும். பிறப்பு இறப்பு இல்லாதவனாகிய இறைவன் ஒருவனாலேயே ஆன்மாக்களின் பிறப்பு இறப்புக்களைத் தவிர்க்க முடியும். தாமே பிறப்பிறப்பு உடைய எவரும், மற்றவர்களுடைய பிறப்பு இறப்புக்களைப் போக்க இயலாது.

மாணிக்கவாசகர் பிறப்பு இறப்பைப் பற்றிக் கூறும்போது ''யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்; இறப்பதனுக்கு என் கடவேன்'' (திருச்சதகம் - 12) என்றார். அதனால் அவர் இறப்பை எதிர்க்கும் வீரம் குறைந்தவர் என்பது பொருளன்று. இறப்பின் துன்பம் அவ்வளவு பெரியது என்பது இதனால் காட்டப்பெற்றது. இறப்பை எதிர்க்கும் வீரம் போர்க்களத்தில் வீரமரணம் அடைவதை விட உயர்ந்தது ஆகும்.

இயற்கை நியதிப்படி நோய் அல்லது வேறு காரணமாக கூற்றுவனால் (எமனால்) ஒருவருடைய உயிர் பிரிக்கப்பட்டதென் றால், அவர் அடுத்த பிறவிக்கு ஆயத்தம் செய்து விட்டார் என்று பொருளாகும். அந்த நிலையை மாற்றுவதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். அக்குறிக்கோள் பிறப்பு இறப்பு இல்லாத இடமாக இருக்க வேண்டும். அதுவே நாம் வேண்டத்தக்கது.

எனவே இறைவனிடம் நாம் ஒரு வேண்டுகோளை விடுத்தால் அது பிறவாமையாக அமைய வேண்டும். ''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை'' என்பது திருக்குறள். காரைக்கால் அம்மையா ரும் அவ்வாறே வேண்டினார். ''பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். இந்த வேண்டுகோளை விடுப்பதைவிட இறைவனிடம் சரணடைவதே சிறந்த, மற்றும் உயர்ந்த நிலையாகும். ஏனென்றால், அடிமை நிலையில் தனக்கென ஒரு விருப்பு வெறுப்பு

இருப்பது தவறாகிவிடும். மாணிக்க வாசகர் ''மண்மேல் யாக்கை விடுமாறும், வந்து உன் கழற்கே புகுமாறும் அண்ணா! எண்ணக் கடவேனோ? அடிமை சால அழகுடைத்தே!'' (குழைத்த பத்து-9) என்றார். அவ்வாறு எண்ணுவது அடிமைத்திறத்துக்கு இழுக்கை உண்டாக்கும் என்றார்! அந்தத் தூய அடிமை நிலையைப் பெறுவதை இங்கு அருணகிரியார் சரணங்களிலே சேர்த்துக்கொள் என்றார்.

'சரணம்' என்னும் சொல் அடைக்கலம் புகுதலைக் குறிப்பதோடு திருவடியையும் குறிக்கின்றது. 'எமன் வரும்போது உன் திருவடியில் சேர்த்துக்கொண்டு என்னைக் காப்பாற்று' என்றார். பிறப்பிறப்பை நீக்கினால் மட்டும் போதாது என்பது இதனால் வலியுறுத்தப்பட்டது.

திருவடியில் சேர்த்துக்கொள்ளாமல் பிறப்பு இறப்பை மட்டும் நீக்குவது பயனற்றதாகும். அந்த நிலை அருணகிரியாருக்கு உடன் பாடன்று. இருளை நீக்கினால் மட்டும் போதாது. ஒளியையும் வளர்த்துக்கொண்டே செல்ல வேண்டும். அதை வற்புறுத்தவே 'சரணங்களிலே கா' என்றார்.

'கா' என்னும் எழுத்துக்குக் காப்பாற்று, உதவி செய் என்னும் பொருள்கள் உள்ளன. இங்கு அருணகிரியார் இருமுறை 'கா' 'கா' என்று கூறியுள்ளார். அது விரைவை (அவசரத்தை)க் குறிப்பதாகும். மற்றும் வற்புறுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும்கூட இருமுறை வருவதுண்டு. உதவி செய்வது என்னும் பொருளின் அடிப்படையில் சோலைக்குக் 'கா' என்னும் பெயர் வந்தது.

இரண்டு முறை 'கா' வருகின்ற 'காகா' என்னும் சொல் காகம் என்னும் பறவையைக் குறிக்கின்றது. இந்தப் பெயரும் உதவி செய்தலை அடிப்படையாகக் கொண்டே வந்துள்ளது. காகத்தின் இயல்பு மற்ற காகங்களுக்கு உதவி செய்தலாகும். உணவு கிடைத்துள்ள இடத்துக்கு அது மற்ற காகங்களைக் கூவி அழைக்கின் றது. காகம், தன்னைப் போலவே மற்றவரும் உதவி செய்து வாழ வேண்டும் என்று கூறுவதைப் போலக் ''காகா'' என்று கரைகிறது.

உதவி செய்தல் என்னும் இந்த இயல்புக்கு மாறானது நாயின் இயல்பாகும். அது வேறு எந்த நாய்க்கும் இடம் கொடுக்காமல் தானே அநுபவிக்க வேண்டும் என்னும் இயல்பு உடையது. மனிதர்களில் இந்த இரண்டு இயல்புடையோரும் இருக்கின்றனர். மற்றும் ஒரே மனிதனிடத்திலும் இந்த இரண்டு மாறுபட்ட இயல்புகள்

வேலை செய்வதற்கான மூளைப் பகுதிகள் உள்ளன. (மூளையை இன்றைய மருத்துவ விஞ்ஞானிகள் இன்னமும் முழுவதாக ஆராய்ந்து காண முடியவில்லை என்பர்). சமயத்துறையில் மூளையை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். (இப்பெரும் பகுதிகள் ஒவ்வொன்றனுள்ளும் இரண்டு சிறுபகுதிகளும் உள்ளன.) அவை:

1) (மேலே உள்ள) உச்சிப்பகுதி.
2) (இடையிலுள்ள) நடுப்பகுதி.
3) (கீழே உள்ள) அடிப்பகுதி.

1) உச்சிப்பகுதி விடுதலை உணர்வுக்கு வேலை செய்கின்றது. இது காகத்துக்கு அடையாளமாக உள்ளது. இப்பகுதி வேலை செய்வோர்க்கு உதவி செய்தலும், விடுதலை உணர்வோடு இருப்பதும் இயல்பாய் அமைந்திருக்கும்.

2) இடைப்பகுதி உலகப்பற்றை வளர்க்கும். நாய் இயல்புக்கு அடையாளமாகும்.

3) அடிப்பகுதி உலகியல் செய்திகளை அறிந்து கொள்வதற்கும், உலகியல் சத்திகளை வாங்குவதற்கும் வேலை செய்கின்றது.

இம்மூன்று பிரிவுகளுள் உச்சிப்பகுதி வேலை செய்வது முதன்மையும் விரும்பத்தக்கதுமாகும்.

அடுத்து, 'சாகாது எனையே சரணங்களிலே காகா நமனார் கலகம் செயுநாள்' என்னும் இத்தொடரில், 'காகா' எனும் சொல்லை மற்ற ஒவ்வொரு சொல்லுடனும் சேர்த்து நான்கு வகையில், பொருள் காணலாம்: அவை:

1) சாகாது காகா = பிறப்பிறப்பு வராதபடிக் காப்பாற்று.

2) எனையே காகா = யான் எனது என்னும் செருக்கைப் போக்கிக் காப்பாற்று.

3) சரணங்களிலே காகா = பிறப்பு இறப்பைப் போக்கினால் மட்டும் போதாது; உன் திருவடியில் சேர்த்துக்கொள்க.

4) நமனார் கலகம் செயு நாள் காகா = எமன் வந்து, என் உடலில் கலகலப்பை உண்டாக்கி ஒன்பது வாயிலையும் அடைக்கு முன் நீ வந்து காப்பாற்று.

'நமன்' என்பது நம்மவன் ஆகும். அதாவது நம்மைச் சேர்ந்தவன் அல்லது நம்மிடமே இருப்பவன். அவன் யார் என்று ஆராயும்போது அது நோய் என்று தெரியவரும். நாம் பிறக்கும்போது நோய் நம்மோடு பிறக்கின்றது. உடலோடு ஒட்டி இருந்துகொண்டே இருக்கும். உடன்பிறந்தே கொல்லும் நோய் என்பது ஔவைப் பிராட்டியின் திருவாக்காகும். நோய்க்கு அதிதேவதைதான் எமன் எனப்படுபவன்.

'எமன்' ஒரு 'ஆர்' விகுதியைச்சேர்த்து 'எமனார்' என்று அருணகிரியார் குறிப்பிட்டுள்ளார். அது இழிவுச் சிறப்பைக் காட்டும். மற்றும் அதனைப் பன்மைச் சொல்லாகக் கொள்ளும்போது ஒன்றுக்கு மேற்பட்ட எமதூதரைக் குறிக்கும். எமதூதர் பலராகவே வருவர். அவ்வாறே ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நோய்கள் வந்து நலிந்த உடலிலிருந்து உயிர் பிரிவதை நாம் காண்கின்றோம்.

எமன் அழகாய் உள்ள உடலை அழிக்கின்றான். நோய் செய்வதும் அதுவே. நாம் இயற்கைக்கு ஒவ்வாதவற்றைச் செய்தால், நோய் உடனே வந்துவிடும்.

சிறியோர், முதியோர், இளைஞர், செல்வர், வறியர் என்று எந்த வேறுபாட்டையும் பாராமல், ஓரவஞ்சனை இல்லாமல் எமன் தன் கடமையைச் செய்வான். அதனால் அவனுக்கு 'அறக்கடவுள்' என்றும் பெயருண்டு.

அவன் கட்டுக்கோப்பாய் உள்ள உடலை கலகலக்கச் செய்து, குழப்பத்தை உண்டாக்கி உயிரைப் பிரிப்பான். அதனால் அவன் வரும் நாள் 'கலகம் செயுநாள்' எனப்பட்டது.

அவன் வரும் முன்னரே தம்மை ஆட்கொண்டு திருவடியில் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டார்.

(2) வாகா! முருகா! மயில் வாகனனே! யோகா! சிவஞான உபதேசிகனே!

'வாகு' உடையவன் 'வாகன்' ஆவான். அவனை அழைக்கும் போது 'வாகா' என்று வரும். வாகு என்னும் சொல்லுக்குத் தாங்குதல், திறமை, அழகு, வெற்றி என்ற பொருள்கள் உள்ளன.

வாழ்க்கையில் நாம் படும் துயரங்களைத் தாங்கிக்கொண்டு முருகன் சரணாகதியைத் தருகின்றான். அதனால் அவனை 'வாகா' என்றார். (தோள் சுமையைத் தாங்குவதனால் அதற்கும் 'வாகு' என்ற பெயருண்டு).

எமனுடைய அழிக்கின்ற தொழிலுக்கு மாறாக, முருகன் மாயையை அழகு செய்து மேம்படுத்துகின்றான். அதனாலும் அவனை 'வாகா' என்று விளித்தார்.

வாழ்க்கையில் நமக்கு வெற்றி பல நிலைகளில் வருகின்றது. விளையாட்டுப் பந்தயத்தில், கல்வியில், வாணிபத்தில், போரில், தேர்தலில் எல்லாம் வெற்றி வருகின்றது. அவை எல்லாம் ஒரு நேரத்தில் மறைந்து போகின்றன. இவற்றுக்கெல்லாம் மேம்பட்டது சாகா வெற்றியேயாகும்; அது மாளா வெற்றியாகும். அந்த வெற்றியைத் தருவதனால் முருகனை 'வாகா' என்றார்.

அவன் அழகே உருவானவன் ஆதலால் அவனை 'முருகா' என்றும் விளித்தார்.

முருகன் மயிலை வாகனமாக உடையவன். 'வாகனம்' என்னும் சொல், முன்பு பார்த்த 'வாகு' என்னும் சொல்லிலிருந்து வந்தது. தாங்கும் தன்மையை உடையது வாகனம்.

மயில் நீல நிறம் உடையதாகும். 'மை' என்பது நீலமாகும். மயில் சுத்த மாயையைக் குறிப்பதாகும். இறைவன் சுத்த மாயைக்கு மேல் இருப்பவனாதலால் 'மயில் வாகனன்' எனப்பட்டான்.

மலத்தின் மூன்று பிரிவுகளாகிய ஆணவம், கன்மம், மாயைகளில், ஆணவம் அடங்கினால், மாயை தூய்மை பெற்று விளங்கும். ஆணவம் இருக்கும்வரை தூய்மை வருவதில்லை. வீட்டைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்றாலும், ஆணவம் அடங்கிய பிறகே துப்புரவுச் செய்வதற்கு மனம் வரும். அவ்வாறே எல்லா இடங்களிலும், செயல்களிலும், ஆணவம் குறைந்தால்தான் நற்செயல்கள்

நடக்கின்றன. ஆணவம் இருக்குமானால், ஒரு மாது தாய்கூட ஆக முடிவதில்லை. சூரனிடம் ஆணவம் போன பிறகே அவன் உடல் சுத்த மாயை ஆகிய மயில் ஆயிற்று. அதற்கு முன்பு அந்த உடல் அசுத்த மாயையாய் இருந்தது.

(முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்ட) மாயையின் இரண்டாவது தத்துவமாகிய விந்துவே இங்கு மயில் எனப்படுகிறது. இறைவன் மாயையில் பதியும்போது முதலில் நாத, விந்துகளில் விளங்குவதனால், விந்துவாகிய மயில்மீது ஏறி ஆடுவான் என்றனர்.

நம் உடம்பிலும், சுத்த மாயையைச் சேர்ந்த பகுதி இந்த விந்துவேயாகும். விந்து குருதி (ரத்தம்)யிலிருந்து வந்தாலும் அது தூய்மையானது. குருதி கெட்ட நாற்றம் உடையதானாலும் விந்துவாகத் தூய்மை பெறும்போது நறுமணம் உடையதாக மாறுகிறது. விந்து முத்துப்போன்றது. அது செழுமை பெறும்போது நம் உடம்பில் அழகு மிகுகின்றது. கட்டுப்பாட்டோடும், உயர்ந்த நோக்கத்தோடும் பிரம்மசரிய விரதம் இருக்கும்போது அது பளிங்குத் தன்மை பெறுகின்றது. அத்தகைய விந்துவின்மேல் (மயிலின் மேல்) இறைவன் வீற்றிருப்பான். விந்து சிறக்கும்வரை அவன் காத்துக் கொண்டும் இருக்கின்றான்.

அடுத்து முருகனை ‘யோகா’ என்றும் விளித்துள்ளார். மேற்குறித்த விந்து சத்தியால் சுத்த மாயைத்தன்மையைப் பெறுவதே யோகம் ஆகும். இந்த யோகத்தைப் பயிலுவோரிடம் இறைவன் தங்குவானாதலால் அவனை ‘யோகா’ என்றார்.

யோகத்துக்கு அடுத்த நிலை ஞானம் ஆகம். இறைவனே யோகிகளை ஞானநிலைக்கு உயர்த்துகிறான். முருகன் யோகிகளுக்கு உபதேசித்து அவர்களை ஞானிகளாக்குவதனால் ‘சிவஞான உபதேசிகன்’ எனப்பட்டான்.

‘‘தேஜஸ்’’ என்பது ஒளி அல்லது தேசு ஆகும். ‘உப’ என்பது துணை. ‘உபதேசம்’ என்பது ஒளியைத் தருவதற்குத் துணையாய் இருப்பதாகும். உபதேசிப்பவர் ஒளியைத் தருவதற்கு முன்பு ஆணவத்தைப் போக்கி விடுவார். ஐந்தெழுத்து உபதேம் என்றால், ஐந்தெழுத்தால் ஒளி தருவதாகும். மந்திரம் ஒளி தருவதற்குத் துணையாய் இருக்கும். எனவேதான் உபதேசத்தில் மந்திரம் பயன்படுத்தப்படுகிறது. உபதேசத்தைப் பெறுவதனால்தான் சாகா நிலையைப் பெற முடியும்.


ஆக, அருணகிரியார் இந்தப் பாடலில் சாகா நிலையையும், சரணாகதியையும் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

III சக்கரம்

இந்தப்பாடல் மாயா உடலை அழிக்கின்ற எமனிடமிருந்து தம்மைக் காக்க வேண்டும் என்று அருணகிரியார் வேண்டிக்கொண டார்.

மாயையைக் குறிக்கின்ற மந்திர எழுத்துக்கள் ரு, ரூ, லு, லூ என்பதை முன் பாடல்களில் பார்த்தோம். அவற்றுள் 39, 40 பாடல்களுக்கு ரு, ரூ எழுத்துக்கள் வந்தமையையும் பார்த்தோம்.

ஐந்தெழுத்தில் வருகின்ற 'ம' கரம் மாயையையும் மாரகத்தையும் (இறப்பு) குறிக்கும். அந்த எழத்துக்கான உயிர்ப்பெழுத்து (பீஜாட்ச ரம்) 'கிலிம்' ஆகும். (மற்ற நான்கு எழுத்துக்களுக்கான உயிர்ப்பெ ழுத்துக்கள் வருமாறு: ந - ஐம், சி - சௌம், வ - ரீம், ய- ஸ்ரீம்). மாரகம் அல்லது கொலைக்கு வருகின்ற உயிர்ப்பெழுத்தில் 'ல'கரம் வருவதனாலும், இந்தப்பாடலில் சாதலைப்பற்றி சொல்லப் பட்டதனாலும், இதன் மந்திர எழுத்து 'லு'கரம் ஆகின்றது. இதற்கான சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-42

குறியைக் குறியாது குறித்து அறியு(ம்)
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்,
செறிவற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று,
அறிவற்று, அறியாமையும் அற்றதுவே.

I பொழிப்புரை

(முருகன்) எனக்குரிய குறிக்கோளை (நான்) குறியாதபோது (அவனே, எனக்குக்) குறித்துத் தந்து, அதனை அடையும் வழிமுறைகளையும் அறிவித்து, ஞானத்தையும் நல்கியபோது, என் பற்றுக்கள் நீங்கி, மாயையோடு (நான்) உரையாடுதல் நீங்கி, (அசுத்த மாயையைச் சேர்ந்த) சிந்தனையும் நீங்கி, தன்னுணர்வும் நீங்கி, அறியாமையும் நீங்கியது. (மெய்யுணர்வு நிலை வந்தது).

II விளக்கவுரை

இந்தப் பாடல் ஒரே வாக்கியமாக அமைந்துள்ளது. மற்ற பாடல்களில் வந்ததைப் போல முருகனை அழைத்து ஒன்றைக் கேட்பதோ, சொல்லுவதோ இதில் இல்லை.

இது தத்துவக் கருத்துக்களையும், அருணகிரியார் பெற்ற அநுபவங்களையும் கூறுகின்றது. வாக்கால் தெரிவிக்க முடியாத நிலையை (இறை அநுபவ எல்லையை எட்டும் வரையில்) சொல்லக்கூடியவற்றை விவரித்துக் கூறுகின்றது. எனவே இப்பாடல் முழுவதும் ஒரு மெய்யுணர்வுப் பாடல் என்னலாம்.

இப்பாடலில், முருகனுடைய சிறப்புகளையோ, அவன் செய்த லீலைகளையோ, புராண விவரங்களையோ, அருணகிரியார் கொடுக்க வில்லை. மற்றும், முருகனுடைய வடிவை, அவன் செய்த லீலைகளை யாரும் ஐம்புலக் கண்களால் கண்டதும் இல்லை.

என்றாலும் அருளாளர்கள் அந்தரத்தில் நிற்க முடியாது. அவர்களுடைய அருளுரைகள் ஏதேனும் ஒன்றைப் பற்றிக்கொண்டு தான் இருக்க வேண்டியுள்ளது. இல்லையேல் தம்முடைய அநுபவங் களை மற்றவர்களுக்கு உணர்த்த முடியாமல் போய்விடும். எனவே இப்பாடலில் ஞானமாகிய "வேலை" மட்டும் குறித்துள்ளார். அதாவது வேலை ஆதாரமாக வைத்துக்கொண்டு, தம் அநுபவங் களை விளக்குகிறார்.

(1) குறியைக் குறியாது குறித்து அறியும் நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்

''குறி'' என்பது குறிக்கோள். மக்கள் அனைவருக்குமே, ஏதோ ஒரு குறிக்கோள் இருக்கின்றது. நம்முடைய பிறப்புக்கே ஒரு குறிக்கோள் இருக்கின்றது.

ஆனால், தம் குறிக்கோள் எது என்பதை அறியாதோரும் சிலர் உள்ளனர். அவர்களுக்குத் தம் குறிக்கோளைச் சிந்தித்து முடிவு செய்துகொள்ளும அறிவாற்றல் இன்மையால் அவ்வாறு இருப்பர். மற்றும், மன நலம் குன்றியவர்களுக்குக் குறிக்கோள் என்பது இல்லை. அத்தகையோரை ''ஏன் பிறந்தீர்?'' என்று கேட்டால், ''எனக்குத் தெரியாது'' என்பர். ''வாழ்க்கையில் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டால் ''அதைப்பற்றி நான் ஏன் சிந்திக்க வேண்டும்?'' என்பர்.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வீண் வாழ்க்கையாகும். அப்பர் பெருமானும் ''குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்றே கூறியுள்ளார். நமக்கென அமைந்த குறிக்கோள் எது என்று சிந்தித்துத் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டும். அது மிகவும் அவசியமாகும். குறிக்கோளே நமக்குத் தெய்வம் போன்றதாகும். குறிக்கோளின் இன்றியமையாத நிலையை மேலும் வற்புறுத்துவதற்கில்லை.

இக்குறிக்கோளைத் தாமே முடிவு செய்துகொள்ள இயலாதவர்க்கு வேறொரு தக்கவர் முடிவு செய்யலாம். தன் மகன் எந்தக் கல்வியைப் பயில வேண்டும் என்பதனைப் பெரும்பாலும் தந்தையே முடிவு செய்வதை நாம் காண்கின்றோம். அவ்வாறே தம்மிடம் வாழ்க்கையை ஒப்படைத்துக் கொண்ட மாணவர்களுக்கு ஆசிரியரே குறித்துத் தருவதும் உண்டு. அத்தகைய குறிக்கோளே ''குறியாது குறித்த'' குறிக்கோள் ஆகின்றது.

இனி, ''எனக்கு எந்தக் குறிக்கோளும் இல்லை'' என்று ஒருவர் சொல்லுவாரானால், அந்த நிலையை எட்டுவதே அவருடைய குறிக்கோள் ஆகிவிடும்.

அருணகிரியாருக்கும் ஒரு குறிக்கோள் இருந்திருக்கிறது. அது இந்தப்பாடலில் குறிக்கப்பட்ட மெய்யுணர்வு நிலையாகும். அது பற்றற்று, உரையற்று, சிந்தையற்று, அறிவற்று, அறியாமையும் அற்ற நிலையாகும்.

மனித நிலைக்கு எட்ட முடியாத ஒன்றை ஒருவர் தம் குறிக்கோளாக அமைத்துக் கொள்வாரானால் அதை எவ்வாறு அடைவார்? அதை எவ்வாறு அறிந்துகொள்வார். அதை அடைவதற்

கான நெறிமுறைகள் எவை? இவற்றை எல்லாம் எண்ணுவதற்கும் மனித அறிவைவிட மேம்பட்ட அறிவு தேவைப்படுகிறது. அந்த அறிவு எத்தகையது என்பதைப் பார்ப்போம்.

அறிவு அல்லது ஞானம் மூன்று வகைப்படும். அவை 1) பாச ஞானம், 2) பசு ஞானம், 3) பதி ஞானம் ஆம். (இம்மூன்று ஞானங்களைப்பற்றி மெய்கண்ட சாத்திரங்களில் விரிவாகக் காண லாம்.)

1) பாசஞானம் - இது வரம்புபட்டது. இதற்கு வானம், காற்று, நீர், முதலிய பருப்பொருள்களின் அளவுகளைக் கூடக் கண்டறிந்து சொல்ல முடியாது. இது பாசத்தால் நமக்கு உண்டாகின்ற அறிவு வளர்ச்சியாகும். பாசம் என்பது கட்டு அல்லது மலம் ஆகும். மலம் மூன்று பிரிவுகளை உடையது. அவை ஆணவம், கன்மம், மாயை ஆம். மாயை. 36 வகையான பண்டங்களாகப் பிரிகின்றது. அவற்றுள் ஒன்றே மனம் ஆகும். இந்த மனமாகிய பண்டம் நாம் அறிவு பெறுவதற்குத் துணை செய்கிறது. எனவே (பாசத்தின் பிரிவாகிய) மனத்தால் வரும் அறிவு பாச அறிவு அல்லது பாசஞானம் எனப்பட்டது. ஆக மனமாகிய பண்டத்தாலோ அல்லது நூல்கள் முதலிய வேறு பொருள்களாலோ வருகின்ற அறிவு எதுவாயினும் அது பாச ஞானத்துள் அடங்கும்.

இப்பாச அறிவு, ஒரு நேரத்தில், ஒரு வழியாகப்போய், ஒரு வரம்பில் நின்று குறிப்பிட்ட ஒன்றை மட்டும் அறிவதாய் இருப்பத னால், இதற்குச் ''சுட்டறிவு'' என்றும் பெயருண்டு. அறிவைக் கொண்டு வருகின்ற மனம் ஒரு நேரத்தில் ஒரு புலன் வழியாக மட்டுமே வேலை செய்ய முடியும். அப்படியானால் ''அட்டாவதானம்'' செய்பவர் ஒரே நேரத்தில் எட்டுப்பேருக்குப் பதில் சொல்லுகிறாரே என்று தோன்றும். அட்டாவதான நிகழ்ச்சி ஒரு அரைகுறையானதே யாகும். ஒன்றன்பின் ஒன்றாக ஆனால் மிக வேகமாக மனம் வேலை செய்வதால், எட்டுப் பேருக்குப் பதில் சொல்லுவதுபோல் தோன்றும். ஆனால் அவர்கள் காதால் கேட்கும்போது, கண்ணால் சரியாகப் பார்க்க முடியாது; பார்க்கும்போது சரியாகக் கேட்கமுடி யாது. ஒரு இடத்துக்கு மனம் போகும்போது இன்னொரு இடத்தில் வேலை செய்ய இயலாது. எனவே மனத்தால் வரும் பாச அறிவு குறை உடையதே.

மற்றும் நம்மைப்பற்றியே நாம் எண்ணிக்கொண்டு இருக்கும் வரை நம் உணர்வு மனக்கண்ணாடியில் படிவதனால் அப்பொழுது வரும் அறிவும் பாச அறிவேயாகும்.

இப்பாச அறிவைக்கொண்டு, பாசப்பண்டங்களின் மேல் கொள்கின்ற ஆர்வமே ''அவா'' ஆகின்றது.

2) பசுஅறிவு (பசுஞானம்) என்பது ஆன்மாவின் உணர்வு, அறிவு முதலிய நுண் பொருள்களை அறிவிப்பதாகும். இது பாச அறிவைவிட உயர்ந்ததுவே. என்றாலும் அதற்குள்ள வரம்புபட்ட தன்மையும், மாட்டாமையும் இதற்கும் உண்டு. ஏனென்றால், ஒரு ஆன்மாவின் அறிவு, உணர்வுகளை மற்றொரு ஆன்மா அளந்து அறிந்து கொள்ள முடிவதில்லை. ஒருவர் அன்பை மற்றவர் அறிந்து கொள்ள முடிவதாய் இருந்தால், நண்பர்களுக்குள்ளேயும், கணவன் மனைவிக்கு இடையேயும் பூசல் வராது.

அன்பும், காதலும் பசுஞானத்தைச் சேர்ந்தவை. காதல் மனோ தத்துவத்துக்கு அப்பாற்பட்டதாகும். அது பகுத்தறிவுக்கு (பாசஅறிவுக்கு) எட்டாதது.

கல்வி வெறும் ஏட்டறிவு மட்டும் அன்று. அதைக் கடந்தும் உள்ளது. ஏட்டறிவு இல்லாதோரிடத்தும் கல்வி உண்டு. படிக்காத மாதர் சிலர் குறிப்பறியும் திறம் படைத்தவராய் இருப்பர். குறிப்பறிதல் பசுஅறிவைச் சேர்ந்ததாகும்.

3) பதிஅறிவு (பதிஞானம்) என்பது இறை உணர்வாகும். யாராலும் எட்ட முடியாத ஒன்றை, இன்னதென்று தெளியவும் துணியவும் முடியாத ஒன்றைப் புலன்களாலும், மனத்தாலும் காணமுடியாத ஒன்றைச் சுட்டிக்காட்டமுடியாத ஒன்றைக் காண வேண்டுமானால், இப்பதிஞானத்தைப் பெற வேண்டும். இறைவனோ, அவன் அருளைப் பெற்ற குருமார்களோ மட்டுமே இதனைத் தரவல்லவராவர். பதிஞானம் சுட்டறிவைப்போல வரம்புபட்டதன்று. இது எங்கும் பரவியதாகும். அதாவது அத்தனை அண்டங்களிலும், எண்ணிலி (infinite) ஆன்மாக்களுக்கும் நடைபெறுகின்ற அத்தனை செய்திகளையும் ஒருசேர அறிகின்ற, முழுமையான அறிவாகும். இறைவன் எல்லா ஆன்மாக்களிலும் தங்கி இருப்பதனால், அவன் ''அநேகன்'' எனப்பட்டான். ''ஏகன், அநேகன்'' என்று சொன்ன மாணிக்கவாசகர், உடனே, பக்கத்திலேயே ''இறைவன்'' என்று அமைத்தார். இறைவன் அல்லாத எவர்க்கும், எங்கும் தங்கி, முழுமையான பதிஞானத்தைப் பெற்றிருத்தல் இயலாது.

பசுஞானத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒரு கனிவு இருக்க வேண்டும். அக்கனிவு என்பது உலகியல் நீதி, சட்டங்களுக்கு அப்பாற்பட்ட அற உணர்வாகும். பண்டைக் காலத்து ஆட்சியில், சான்றோர் கூறும் நீதியை அரசன் செயல்படுத்தி வந்தான். சான்றோர்

மேற்கூறிய கனிவைப் பெற்றிருந்ததனால் அவர்களுடைய தீர்ப்புகள் நீதிக்கும் மேம்பட்ட அறங்களாய் இருந்து வந்தன.

மக்கள் ஒருவரோடு, ஒருவர் பழகும்போது தீமை செய்து விட்டால், செய்தவரை ஒறுப்பது முறையாகும். ஆனால் ''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'' என்றும், ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்றும் கூறப்பட்டுள்ள இந்த முடிவுகள் நீதிக்கு ஏற்றவையாய் இல்லை. இந்த முடிவுகள் சட்டத்துக்கும், நீதிக்கும் அடங்காமல், அவற்றுக்கு மேலான அறங்களாய் உள்ளன. இத்தகைய அறங்களைப் பசுஞானமும் பாசஞானமும் உடையவர்கள் ஏற்கமாட் டார்கள். பதிஞானத்தை உடையவர்களே இதனை ஏற்றுச் செயல்படுத் துவர். எனவே மேற்கூறிய திருக்குறள் செய்யுட்களைப் புரிந்து கொள்வதற்கும் பதிஞானம் இருத்தல் வேண்டும். அவ்வாறே நம் குறிக்கோள் பாச, பசு ஞானங்களைக் கடந்த ஒரு பொருளாக இருக்குமானால், அதைக் குறித்துக்கொள்வதற்கும், பதிஞானம் அவசியம் ஆகின்றது. எனவே இவை, நாமே குறியாது சான்றோர் களால் குறித்துத் தரப்படுவதே சிறப்புடையதாகின்றன.

திருவள்ளுவரைப் போன்ற சான்றோரின் நூல்களை இக்காலத் தில் கிள்ளுக்கீரையாக எண்ணி நினைத்தவாறெல்லாம் உரை கூறுகின்றனர். அல்லது அவற்றை ஆராயாமலே ஒதுக்கி விடுகின்ற னர்.

முன்பு, ஒரு குருகுலத்துக்கு ஒரு தலைவர் இருப்பார். அவர் சான்றோராய், முனிவராய் விளங்குவார். அவரே மாணவர்களுக்கு எழுத்து அறிவித்துக் கல்வியைத் தொடங்குவதும் உண்டு. படிப்படி யாய், பண்டங்களின் தன்மைகளையும், ஆன்மாக்களின் இயல்புகளை யும் தெளிவுபடுத்துவார். அச்சான்றோரின் தெளிவுரைகளே உண்மை யான கல்வியாகும். பதிஞானம் உள்ள அப்பெரியோர்களே, பசுஞானத்தையும், பாசஞானத்தையும் கற்பிக்க உரியவராவர்.

திருவள்ளுவர் ''அவா அறுத்தலை''ப் பற்றிக் கூறியுள்ளார். அதைச் சொன்னவர், காமத்துப்பாலைச் சொல்லலாமோ? என்று சிலர் எண்ணுவர். பெரிய ஞானிகள்தாம், ஞாயிறு முதல் துரும்புவரை உள்ள எல்லாப் பொருள்களையும் பற்றிப் பேசுவதற்குத் தகுதி உடையவர் ஆவர். சொல்லப்போனால் அவர்கள் மட்டுமே பேச வேண்டும். அப்போதே எல்லாம் சரியாக அமையும்.

அத்தகைய ஞானிகளிடம் நம்மை ஒப்படைத்துக் கொண்டால், நம் வாழ்க்கையின் குறிக்கோள் எதுவாக இருக்க வேண்டும் என்பதை

அமைத்துத் தருவர். நாமே முயன்று நமக்குரிய குறிக்கோளைத் தெரிந்து கொள்ள முடியாதா என்று கேட்கத் தோன்றும். அதற்குச் சரியான விடை முடியாது என்பதேயாகும். ஏனென்றால், எல்லா ஆன்மாக்களும், ஒருவர் அறிவிக்க அறிந்து கொள்ளுமேயன்றி தாமே எதையும் அறிபவையல்ல. ஆன்ம இயல்பு அத்தகையது.

ஆக, அருணகிரியார், இந்த வரியில், ''குறியை'' என்பதற்குத் தாமே மேற்கொண்ட குறிக்கோள் என்றும், ''குறியாது குறித்து'' என்பதற்கு, பதிஞானம் பெற்ற பெரியோர் குறித்துத் தந்த குறிக்கோள் என்றும், ''அறியும்'' என்பதற்குப் பதிஞானத்தால் அறிந்து என்றும் கூறியதாகக் கொள்ள வேண்டும்.

அடுத்துக் குறி இன்னதென்று தெளிந்து முடிவு செய்துவிட்டால், அதனை அடைவதற்கான ''நெறி'' தானே துலங்கத் தொடங்கும். உழவுத்தொழில் நமக்குக் குறியாகி விட்டால், அதற்கேற்ற போக்கும், சூழலும், கருவிகளும் பிற அமைப்புகள் எல்லாமே அமையத் தொடங்கிவிடும். நோக்கம்தான் சரியாக அமைய வேண்டும். நோக்கம் என்பதும் குறி என்பதும் ஒன்றே. அதை அடையும் போக்கு ''நெறி'' எனப்படும். நோக்கின்றி போக்கு உருவாகாது. அதாவது குறியின்றி நெறி உருவாகாது.

வீடுபேற்றை அடைவது குறியானால் பாச நீக்கம் அதற்கு நெறியாகிவிடும். பாச நீக்கத்துக்கான தெய்வநெறி அவரவர் பக்குவத்துக்கேற்ப இறைவனால் கற்பிக்கப்படும். அத்தெய்வ நெறியே அருள் நெறி என்றும், பெருநெறி என்றும், திருநெறி என்றும், ஒருநெறி என்றும் பல பெயர்களால் குறிக்கப்படும்.

தெய்வ நெறியைக் குருவருளால் அடையப்பெற்றால், அதன் பயனாகிய ஞானம் விளையும். ஞானத்துக்கு உருவகம் வேல் ஆனதனால், இங்குத் ''தனிவேல்''ஐ நிகழ்த்திடலும் என்று கூறினார்.

தனிவேல் என்பதில் ''தனி'' என்னும் அடைமொழிக்கு ஒப்பற்ற அல்லது நிகரற்ற என்று பொருளாகும்.

மற்றும், முருகனை மறந்து ஞான அனுபவத்தில் இருக்கின்ற ''தனி நிலை'' என்றும் ஆகும். ஞான அனுபவத்தின்போது மற்ற அனுபவங்களைப் போலவே முருகன் முதலிய சூழல்கள் மறக்கப்படுவது இயல்பேயாகும். நண்பர்கள் இருவர் பழகும்போது 'நான்', 'அவர்' என்னும் பிரிவு இருக்கும். ஆனால் இசையை அனுபவிக்கும் போது நிலைமை மாறுகிறது. இசை அரங்கம், இசையைப் பாடுகின்ற கலைஞர், பக்கவாத்தியம், சுற்றுச்சூழல்கள் எல்லாமே மறந்து போகும். அனுபவிப்பு மட்டும் ''தனி''யே நிற்கும். சாதாரண இசை

அநுபவத்துக்கே இந்தத் தனிநிலை வருகிறது என்றால், மிக உயர்ந்த நிலையில், அருளாளர்களுக்கு ஞானாநுபவம் ''தனி''த்திருக்கும் என்பதில் வியப்பில்லை. எனவே தனி ஞானத்தை அல்லது ''தனிவேலை'' நிகழ்த்துவார் என்று கூறினார்.

''தனிவேல்'' என்பதற்கு வேறு ஒரு பொருளும் உண்டு. அது கையில் பிடிக்கப்படாமல், தனியே சாத்தப்பட்ட வேல் என்பதாகும்.

அடுத்து, வெற்றியைத் தருவது ''வேல்'' எனப்பட்டது. சூரனை வென்ற போர்க்கருவியானதனால் வேல் ஆயிற்று. பாசத்தை வெல்வதும் இதுவே (ஞானமே). அதனாலும் ''வேல்'' ஆயிற்று. முருகனுக்குள்ள சத்தி (ஞானம்) வேல் ஆகும்.

வேலின் மேற்பகுதி இலைபோன்று அகன்று இருக்கும். கீழ்ப்பகுதி அதைத் தாங்குகின்ற தண்டு போன்று நீண்டு இருக்கும்.

வேலின் இலைப்பகுதி குறிக்கோளையும் தண்டுப்பகுதி அதை அடைவதற்கான நெறியையும் குறிக்கின்றன.

வேல் முருகனைப் பிரியாத ஒன்றாகும். மயில், பாம்பு, வள்ளி, தெய்வயானை முதலியவற்றைப் பிரித்தாலும் வேலை மட்டும் பிரிக்கக்கூடாது. வேல் இல்லாமல் முருகனுக்குப் பூசையோ, திருமுழுக்கோ செய்தல் கூடாது. (முருகனில்லாமல் வேலுக்கு மட்டும் பூசையோ திருமுழுக்கோ செய்வதில் தவறு இல்லை).

வேல், முருகன் மார்பில் சாத்தி வைக்கப்பட்டிருக்கும். முருகன் அதைக் கையில் பிடிக்காதபோதே அதுவே இயல்பாகவே ஆன்மாக்க ளின் பாசத்தை அழித்துக் கொண்டிருக்கும். முருகன் அதைக் கையில் பிடித்திருப்பதைப்போல அலங்கரிக்கக்கூடாது. அவ்வாறு செய்தால், போருக்குக் கிளம்பியதாகப் பொருளாகி, பாசத்தைப் போக்குவ தோடு, உடலையும் பிரித்து விடுவான் என்று ஆகிவிடும்.

வேல், முருகனின் உச்சிவரை இருக்க வேண்டும். அதற்கும்மேல் உயர (12 அங்குலம்) இருந்தாலும் தவறு இல்லை. ஆனால் தலைக்குக்கீழே இருக்கலாகாது. (வெட்டியான், தலையாரிகளுடைய தடிகளும் இந்த அளவினவே).

மற்றும், இந்த வேலைச் சாத்தி இருப்பதில், ஒரு யோகக்கருத்தும் இருக்கின்றது. மனிதனுடைய சத்தி, சுவாசம், நாடி முதலிய எல்லாமே உள்ளங்காலிலிருந்து உச்சிவரை பரவியுள்ளன. இவை இடக்கால் பெருவிரலிலிருந்து தொடங்கி இடுப்பில் வலப்பக்கம் மாறி, உச்சிவரை செல்லும். அப்படியே வலக்காலில் தொடங்கும். நாடி இடுப்பில், இடப்பக்கம் மாறி உச்சியில் முடியும். நடு நாடி

இடுப்பிலிருந்து தோன்றுகிறது. இடகலை பிங்கலைகளில் மாறி மாறி மூச்சு வாங்கியபின் யோகிகள் நடுநாடியில் ஏற்றுவர். காற்றோடு விந்துவையும் ஏற்றும்போது அதிக சத்தியைப் பெறுவர். அத்தகைய யோகிகளுக்கு உடல் நலமும் ஒளிஅழகும் (தேஜஸும்) நிறைந்திருக் கும். அத்தகையோரிடமிருந்து தோன்றுகிற வாக்கும் நூல்களும் அழிவதில்லை. இக்கருத்துக்களை எல்லாம் நினைப்பூட்டும் வகையில் அமைந்ததுவே, வேலைச்சாத்தும் முறையாகும். வேல், முருகனின் இடதுகால் பெருவிரலில் தொடங்கி வலப்பக்கம் உச்சிவரையும் (அல்லது அதற்கு மேலும்) நீண்டிருக்கும். முருக வழிபாட்டில் இவை எல்லாம் தியானிக்கப்பட வேண்டும். தண்டுப்பகுதியை யோக நெறி என்றும், இலைப்பகுதியை அதன் பயனாகிய ஞானம் என்றும் கருதி, தியானிக்க வேண்டும். இவ்வாறு ''தனி வேல்'' நமக்கு யோகத்தையும், ஞானத்தையும் வழங்குகின்ற தத்துவப்பொருள் ஆகின்றது.

அடுத்து, ''நிகழ்த்திடலும்'' என்னும் சொல் ''செய்திடலும்'' என்னும் கருத்தைத் தருகின்றது. செய்பவர் யார் என்று இச்செய்யு ளில் வரவில்லை. அதாவது இச்செய்யுளின் எழுவாய் மறைந்துள் ளது. அதனை நாம் வருவித்துக்கொள்ள வேண்டும். ஞானத்தை நிகழும்படிச் செய்பவர் குரு ஆவார். எனவே இச்செய்யுளின் தோன்றா எழுவாய் ''குரு'' ஆகும். குருவழியாய் முருகனே ஞானத்தை நிகழும்படிச் செய்கிறான் என்று கொள்வதும் இப்பாட லுக்கு ஏற்றதேயாகும். ஆக, முருகன் தமக்குக் குறிக்கோளையும் குறித்துத் தந்து, யோக நெறியையும் அறிவித்து, ஞானத்தையும் நிகழ்த்துகின்றான் என்று கூறியுள்ளார்.

''நிகழ்த்திடலும்'' என்பதில், அருணகிரியார் வாக்கியத்தை முடிக்கவில்லை. தாம் சொல்லப்போகும் கருத்து மேலும் தொடரு கிறது. ஞானம் நிகழ்ந்தபோது என்ன ஆயிற்று என்பதனை அடுத்த வரிகளில் கூறுகிறார்.

(2) செறிவற்று, உலகோடு உரை, சிந்தையும் அற்று, அறிவற்று, அறியாமையும் அற்றதுவே

''செறிவு'' என்பது ஆசையின் மிகுதிப்பாடு ஆகும். ஆசை நீங்கினால் அடக்கம் அல்லது ஒடுக்கம் வரும். முதலில் இறைவனை அடைவதற்காக உலகப்பற்றை விலக்க வேண்டும். இறைவனோடு சேர்ந்த பின்னர், அவன் மீதுள்ள செறிந்த ஆசையையும் நீக்கிவிட வேண்டும். அதுவே இங்குச் ''செறிவற்று'' என வந்தது.

''உலகோடு உரை, சிந்தையும் அற்று'' என்பதில், ''உரை''க்குப் பக்கத்திலும் ''அற்று'' என்னும் சொல்லை வருவித்துக் கொள்ள வேண்டும். அதாவது''உலகோடு உரை அற்று, சிந்தையும் அற்று'' என்று கொண்டு பொருள் காண வேண்டும். இங்கு, ''உலகம்'' மாயைப் பொருள்கள் எல்லாவற்றையும் குறிக்கின்றது. மாயை பாசத்தின் ஒரு பிரிவு. மற்ற இரண்டு பிரிவுகளாகிய ஆணவம், கன்மங்களோடும் அதாவது மூன்று மலங்களோடும், நினைவு அற்ற நிலையை இங்குக் குறிப்பிடுகின்றார். நினைவு அற்றுப்போனால், உரையாடுதல் தானே நின்று விடும். உரையாடுதல் நின்று விட்டால் மௌனம் தொடங்கும். மௌனம் இறைவனோடு தொடர்பு கொள்ள வழி செய்யும்.

உரையாடுதல் வேறு, வாக்கு வேறு. வாக்கு விந்து தத்துவத்தைச் சேர்ந்தது. அது சுத்த மாயையில் சத்தி மண்டலத்தில் தோன்றுவது.

உரையாடுவது மனத்தோடு தொடர்புடையது. மனம் (பிரகிருதி) அசுத்த மாயையைச் சேர்ந்தது. முதலில் கீழ்த்தத்துவமாகிய மனத்தா லான உரை அடங்கிய பின்னரே, அருளில் தோய்ந்ததும், மேல் தத்துவமாகிய சுத்த தத்துவத்தைச் சேர்ந்த வாக்கு வேலை செய்யத் தொடங்கும். இறை அருள் பதிந்தவர்களுக்கே வாக்கு உண்டாகும். திருஞானசம்பந்தருக்கு அவ்வாறு உண்டாயிற்று. அவர் இறை வனைப் பார்த்தார். உடனே அருள் வாக்குத் தோன்றிற்று. குமரகுருபரருக்கும் அவ்வாறே ஆயிற்று; மௌனம் கலைந்தது; அருள்வாக்கு வந்தது. இறையருளால் வந்த வாக்கு எந்த மொழியில் வந்தது? எந்தச் சமயத்தவருக்கு வந்தது? இவற்றை எண்ணிப்பார்க்க வேண்டும். எல்லாச்சமயங்களிலும் அருள் பெற்றவர்கள் உள்ளனர். என்றாலும், தமிழ் மொழியில், தமிழ்ச்சமயமாகிய சைவத்தில் அமைந்திருப்பதைப்போலப் பிற சமயங்களில் அமையவில்லை. ஞான சம்பந்தர் வாயைத் திறந்ததுமே, அன்று வழங்கிய தமிழி லேயே, கவிதைகளாய், இசைப்பாடல்களில், சமயத் தத்துவங்களைக் கொண்ட பொருள் செறிந்த இறைவனின் புகழ் மாலைகள் வெளிவந்தன. இத்தகைய அமைப்பும், சிறப்பும் பிற சமயங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. பிற சமயங்களில் சமயாசாரியர்கள் கூறிய உபதேசங்களை மற்றவர்கள் கேட்டு எழுதியுள்ளனர். இச்செய்திகளைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து பார்த்தால், இந்த உண்மை புலனாகும்.

இறைவன் உலகுக்கு ஒருவனே. அதனால் அவன் சமயமும், அதன் மொழியும்கூட ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்? நடைமுறையில் பல்வேறு சமயங்களும் மொழிகளும் இருக்கின்

றனவே என்றால், அவற்றின் தன்மைகளில் வேறுபாடுகள் உள்ளன என்பதுவே பொருளாகும். உலகில் எதுவும் சமமாக இல்லை. ஆன்மாக்கள் எண்ணிறந்தவையாய் இருந்தாலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு உள்ளன. அவை முத்திபெற்ற பின்னரும், அவற்றில் உயர்வு தாழ்வு இருக்கவே செய்யும். முத்தி நிலையே அவ்வாறென்றால், உலக வாழ்வில் தோன்றியுள்ள சமயங்களிலும், மொழிகளிலும் உயர்வு தாழ்வு இருப்பதில் வியப்பில்லை.

அன்புக்கண் கொண்டு பார்க்கும்போது எல்லா ஆன்மாக்களும், எல்லாச் சமயங்களும், எல்லா மொழிகளும், எல்லா நாடுகளும் ஒன்றாகவே கொள்ளப்பெறும். ஆனால் அறிவு கொண்டு ஆராயும் போது அந்த ஒன்றான நிலையைக் காணமுடியாது. அதனாலேயே ஒரே சமயத்தவரும், ஒரே மொழியினரானாலும், அருணகிரியாரை வாக்குக்குச் சிறந்தவர் என்றும், மாணிக்கவாசகரை உருக்கத்துக்கு உரியவர் என்றும், நக்கீரரை நோக்குக்கு உரியவர் என்றும் வழங்கலாயினர். ஆக, இறைவன் ஒருவனே ஆதல்போல், அவன் சமயம் சைவமே என்பதும் அவன் சமயத்துக்கான மொழி தமிழே என்பதும் விளங்கும்.

இனி, ''சிந்தையும் அற்று'' என்பதைப் பார்ப்போம். மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றினுடைய தொகுப்புக்குச் ''சிந்தை'' என்று பெயர். இந்த மூன்று தத்துவங்களும் ஆழ்ந்து இயங்கும்போது சிந்தை ஆகின்றது. இது அசுத்த மாயையைச் சேர்ந்தது. அருணகிரியார், ''உரையும் சிந்தையும்'' அற்றுப்போதலைக் குறிப்பிட்டு, வாக்கைக் குறிப்பிடாததற்குக் காரணம் இருக்கின்றது. அது வருமாறு: அருளாளர்களுடைய வாக்கில் மிச்ரதத்துவத்தைச் சேர்ந்த கலையும், சுத்த தத்துவத்தைச் சேர்ந்த அறமும் கலந்து வருகின்றன. அவற்றுள் அசுத்த தத்துவம் சேர்வதில்லை. எனவே, ஞானம் நிகழ்ந்தபோது, கீழ்த்தத்துவங்கள் மட்டும் அற்றுப்போகும் என்பதைக் குறிப்பிட்டு வாக்கைப் பற்றிக் கூறாமல் விட்டுவிட்டார்.

ஞானசம்பந்தர் ''நாளும் இன்னிசையால் தமிழ் '' பரப்பியதாகச் சுந்தரர் கூறியுள்ளார். இங்குத் தமிழ் என்னும் சொல் அறத்தையும், மெய்யுணர்வையும், தெய்வத்தன்மையையும், தத்துவ விளக்கத்தையும், ஞானத்தையும் குறிக்கின்றது. இவ்வாறு குறிப்பதற்குக் காரணம் -அறம், ஞானம் முதலியவை சுத்த மாயையைச் சேர்ந்தவையாம். அவ்வாறே ஞானசம்பந்தரின் வாக்கும் அதாவது அவருடைய தமிழும் சுத்தமாயையில் தோன்றியது. எனவே இவ்விரண்டினையும் இயைபுபடுத்திப் பேச வேண்டியுள்ளது. ஆக ஞானம் நிகழும்போது

உரையும் சிந்தையும் அறுமே அன்றி வாக்கு அறாது என்பது விளக்கப்பட்டது.

அடுத்து, ''அறிவற்று'' என்பதில் அறிவு ''தற்போதம்'' அல்லது ஆன்ம அறிவைக் குறிக்கும். தற்போதம் இருக்கும்வரை மெய்யுணர்வு வருவதில்லை. அதாவது ஞானம் நிகழ்ந்ததுமே தற்போதம் அற்றுவிட்டது என்பதைக் குறிப்பிட்டார்.

இறுதியாக ''அறியாமையும் அற்றதுவே'' என்றார். அறியாமை ஆன்மாவுக்கு இரண்டு நிலைகளில் உள்ளது. 1) பிறவிக்கு வருமுன் ஆணவமலம் முழுமையாகக் கௌவி இருந்ததனால் எதையும் உணராத கேவல நிலை. 2) பிறவிக்கு வந்த பின்னர், ஆன்ம அறிவை மறைக்கும் சகல நிலை. முன்னது ஆணவத்தின் பிடி முழுவதும் உள்ளநிலை. பின்னது அதன் பிடி சிறிது தளர்ந்த நிலை. ஞானம் வரும்போது இரண்டாவது நிலையும் அற்றுப்போகின்றது.

''அறியாமை'' என்பதில் மற்றொரு கருத்தும் அடங்கியுள்ளது. அது வருமாறு: சைவத்தின் அகச்சமயப் பிரிவுகளிலே ''பாஷாண வாதம்'' என்பது ஒன்று. (பாஷாணம் = கல்). அந்தப் பிரிவினர் முத்தி நிலையில், ஆன்மா கல்போல உணர்வற்று இருக்கும் என்பர். இது ஒரு தவறான கருத்து. முத்தி நிலையில் இறை இன்பம் ஐயத்துக்கிடமின்றி இருக்கின்றது. அவர்கள் கூறுவதைப்போல உணர்வு இல்லாமல் ஒரு முத்தி இருக்குமானால் அதனால் ஆன்மாவுக்கு என்ன பயன்? பிறவிகளை எடுத்துப் பாசநீக்கம் பெற்றதன் பயன் என்ன? தவறாகக் கூறும் அந்த ''அறியாமையும் அற்றதுவே'' என்று கூறி ஞானம் நிகழ்ந்த உடனே இன்பம் விளைந்தது என்பதனைக் குறிப்பிட்டார்.


மற்றொரு கருத்து: மெய்யுணர்வு நிலை-அறிதலும், அறியாமையும் ஆகிய மாற்றங்களை உடையதன்று. அது என்றும் நிலையானதாகும். அந்த அறியாமை இல்லாத மாறாத நிலை குறிக்கப்பட்டது.

மற்றும், இன்பம் உண்டேல் துன்பம் உண்டு என்பது உலக வாழ்வின் நியதி. இன்பத்தையும் துன்பத்தையும் அறிந்து கொண்டிருக்கும் நிலை ஆன்மா வளர்ச்சி அடையாத நிலையாகும். ஆன்மநிலை உயரும்போது அவற்றை அறியாத நிலை வரும். அதுவே இறைநிலை. சூடும் இல்லாத, குளிரும் இல்லாத கதகதப்பான நிலையைப் போன்றது. இன்பம் துன்பம், சூடு குளிர்ச்சி, அறிதல் அறியாமை ஆகிய இரண்டுபட்ட நிலைகள் அற்றதுவே என்றார்.

ஆக, இந்தப் பாடலில், இறைவன் குறிக்கோளையும், அதை அடைவதற்கான நெறியையும், அதன் பயனாகிய ஞானத்தையும் தந்தபோது, பற்றற்று, உரையற்று, தற்போதம் அற்று, அறிதலும் அறியாமையும் அற்ற மெய்யுணர்வு நிலை வந்தது என்று அருணகிரியார் கூறியுள்ளார். மற்றும் செறிவு என்பது மாயையையும், உரை, சிந்தை என்பன கன்மத்தையும், அறியாமை என்பது ஆணவத்தையும் குறிக்கின்றன. ஞானம் நிகழ்தலால் மும்மல நீக்கமும் இதில் குறிக்கப்பட்டது.

III சக்கரம்

முன்பாடலில் (41-ல்) மாயையாலான ஒரு பிறவியின் உடலை எமன் அழிப்பதைப்பற்றி வந்தது. அதற்குரிய மந்திர எழுத்து ''லு'' என்பதைப் பார்த்தோம். இந்தப் பாடல் மும்மலங்களும் முழுவதும் அற்று, மெய்யுணர்வு நிலை வருவதைப் பற்றிக் கூறுகின்றது. அதாவது மெய்யுணர்வின் ஒளியால், பாச இருள் முழுவதும் போதல் குறிக்கப்பட்டது. இதுவே மாயையின் கடைசி அழிவும் ஆகும். எனவே இப்பாடலின் மந்திர எழுத்து 'லு'கரத்தின் நெடிலாகிய ''லூ''காரம் ஆகின்றது. இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-43

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

I பொழிப்புரை

தூய்மையான மணியையும், வெள்ளைப் பஞ்சாடையையும், உடுத்துபவளாகிய வள்ளிப் பிராட்டியின் (விந்துவின்) நண்பனே! முருகா! உன்னுடைய அன்பு மற்றும் அருளால், (என்னுடைய) ஆசையாகிய (இரும்பு) விலங்கு தூளாகி நீங்கியபின் (என் முயற்சியால்) பேசாத (உன் வாக்கால் பேச முடிந்த) அநுபூதி தோன்றியது.

II விளக்கவுரை

அருணகிரியார் இறை அநுபவம் பெற்றவர். அந்த அநுபவத்தை இந்தப் பாடலில் ''அநுபூதி'' பிறந்தது என்று கூறியுள்ளார். அநுபூதியைப் பெற்றவர்களே அதைப்பற்றிப் பேச முடியும். அந்த ''அநுபூதி'' என்னும் சொல்லே இந்நூலுக்குப் பெயராக அமைந்துள்ளது.

ஒரு நூலுக்குப் பெயர் வைப்பது என்று பார்க்கும்போது, அந்நூலின் முதல் சொல்லையே வைப்பது ஒரு முறையாகும். (ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்கள் இந்த முறையிலேயே பெயர்களைப் பெற்றுள்ளன.) அன்றி, அந்நூலுள் வருகின்ற சொற்களுள் எது முதன்மையாக உள்ளதோ அதனையோ அல்லது ஆசிரியரின் பெயரையோ வைப்பதும் உண்டு.

''கந்தரநுபூதி'' என்னும் இந்த நூலில் பல சொற்கள் உள்ளன. அவற்றுள் எது முதன்மையான சொல் என்று ஆராயும்போது, ''அநுபூதி'' என்னும் சொல்லே முதன்மை பெற்றதாக விளங்குகிறது. ஏனென்றால், இந்த நூல் தெரிவிக்கும் பல கருத்துக்களுள், அநுபவமே முதலிடம் பெறுவதாக உள்ளது.

கல்வி ஒரு சிறந்த செல்வம். அதைப்போலவே பொருளும் ஒரு செல்வம். இச்செல்வங்கள் எல்லாவற்றையும் விட மேலானது

இறை அநுபவமே ஆகும். அநுபவம் ஆகிய செல்வத்துக்கு ''அநுபூதி'' என்று பெயர். (பூதி=செல்வம்). இந்நூலைப் படிப்போருக்கு இறை அநுபவத்தைச் சேர்ப்பதனாலும் ''அநுபூதி'' எனப்பட்டது. மற்றும் கந்தனுடைய அநுபவத்தைத் தருவதனால் ''கந்தரநுபூதி'' ஆயிற்று.

ஆக, இந்த 43-வது பாடல், இந்நூலின் பெயர் வருவதற்குக் காரணமான சொல்லைப் பெற்றுள்ள சிறப்புடையதாக விளங்குகிறது.

(1) தூசா மணியும், துகிலும், புனைவாள் நேசா! முருகா!

''தூசா மணி'' என்பதனைத் தூசாம்+அணி என்று பிரித்தால் தூய்மையாகிய ஆபரணம் என்று பொருள்படும். ''தூசா+மணி'' என்று பிரித்தால் தூய்மையான (ஒளி பொருந்திய) மணி என்று ஆகும். ''அணி'' என்பது ஆடையையும் ஆபரணங்களையும் குறிக்கும். ''மணி'' என்னும்போது ஆடையைத் தழுவாது மணியை மட்டுமே குறிக்கும். இங்குத் ''தூசா+மணி'' என்று பிரிப்பதே பொருத்தமாகும். ''துகில்'' என்பது ஆடை. ''புனைவாள்'' என்பது தன்னை அலங்கரித்துக் கொள்ளும் வள்ளிப்பிராட்டியாகும்.

''தூசு'' என்னும் சொல் தூய்மை என்றும், அழுக்கு என்றும் இரண்டு மாறுபட்ட கருத்துக்களைத் தருவதாக உள்ளது. இந்த இடத்தில் தூய்மையையே குறிக்கின்றது. ஒரு சொல்லுக்கு இரண்டு பொருள் வரும்போது, பக்கத்தில் வருகின்ற சொல்லைக் கொண்டு பொருத்தமானதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

''தூ'' என்னும் தனி எழுத்துக்குத் தூய்மை என்பதே பொருளாகும். ''சு''என்னும் மற்றொரு எழுத்தோடு சேரும்போது ''தூசு'' ஆகி அழுக்கு என்னும் பொருளைத் தருகின்றது. அது சேர்க்கையால் வரும் மாற்றம் ஆகும். வீட்டை அழுக்குச் சேராமல் வைத்துக் கொண்டால் தூய்மையாய் இருக்கும். அழுக்குச் சேர்ந்தால் ''தூசு'' ஆகிவிடும். ''மணி''க்குக் கருப்பொருள் மண். மண் அசுத்த மாயையைச் சேர்ந்த இருபத்து நான்கு தத்துவங்களுள் கீழ்மையானது. அத்தகைய மண்ணோடு ஒளி சேரும்போது ''மணி'' ஆகி உயர்வைப் பெறுகின்றது; தூயதாகவும் மாறுகிறது.

ஆடையை அணியும்போது, இடுப்பில் கட்டுகின்ற பல மணிகளைக் கோத்த மணித்தொடரும் ''தூசா மணி'' ஆகும். அது ஒட்டியாணம், மேகலை போன்று அழகுக்கு அணிவதோடு ஆடையை இறுகக் கட்டவும் பயன்பட்டு வந்தது.

''துகில்'' என்பது பஞ்சு ஆடைக்கே சிறப்பாய் வரும். அது பட்டாடையைக் குறிப்பதில்லை. தூசாமணியும் துகிலும் என்றதனால், வள்ளிப்பிராட்டி பட்டாடையை உடுத்தவில்லை என்பதும், மணியையும், பஞ்சாலான தூய வெள்ளை ஆடையை உடுத்தினாள் என்பதும் குறிக்கப்பட்டது. வள்ளியைப்பற்றிய இந்த வர்ணனை, விந்து மேலேறி ஒளி பெற்றுத் திகழ்வதை விவரிக்கும் உருவகமாகும்.

முருகன் பட்டாடையை அணிபவன். ஆனால் அவன் விரும்பிய வள்ளி பட்டாடையை அணியாதவள். அவள் அணியும் துகில் ஓர் எளிய ஆடை. எளிமையில் அழகு இருக்கிறது. அதில் வளமும் இருக்கிறது. அகநாட்டம் உடையவர்கள் ஆடம்பரத்தை (படாடோபத்தை) விரும்ப மாட்டார்கள். அகக்கண்ணுக்கு எளிமையில்தான் அழகு தோன்றும். முருகன் அகநாட்டமாகிய ஆறாவது திருமுகத்தை உடையவன். அவன் நாடுவது ஆன்மாவின் ஒளியும் வளப்பமும் மிக்க விந்துவின் எழுச்சியேயாகும்.

பட்டாடை உடுத்தினால் மற்றவர்களுடைய தீய எண்ணங்கள் தாக்கமாட்டா. என்றாலும் அது அழுக்குப் பண்டத்தாலான ஆடையாகும். அது ஒரு புழுவின் புலாலழுக்காகிய நூலிலிருந்து செய்யப்படுகிறது. பட்டுப்புழுவைக் கொல்லாமல் நூலை எடுத்தாலும்கூட அது அழுக்குடையதே. இறைவழிபாட்டுக்கு பஞ்சாடைதான் ஏற்றது.

ஆடை அணிகலன்கள் நம் கோட்பாடுகளை வெளிப்படுத்துவதற்கு அமைந்தன. அவை நம் உள்ளத்தின் அழகை வெளிப்படுத்துகின்றன. முன்பெல்லாம், இவ்வளவு பொருள் உள்ளவர்கள் இப்படி அணிவார்கள்; இன்ன கொள்கை உயைவர்கள் இவ்வாறு அணிவார்கள் என்று இருந்தது. அந்த வகையில் ''தூசா மணியும் துகிலும்'' என்று வந்ததனால், வள்ளியின் தூய்மையும் எளிமையும் வளமும், அழகும் குறிக்கப்பட்டன. இந்த் அடை மொழிகள் ஒளிபெற்று மேலேறும் விந்துவுக்கும் பொருந்தும்.

''புனைவாள்'' என்பது அழகுபட அணிந்து கொள்கின்ற வள்ளிப்பிராட்டியாவார். ''புனைதல்'' என்பது அழகுபடுத்திச் சொல்லுவதாகும். புனைதல் வேறு, பொய் வேறு. புனைவது பொய் அன்று. ''பொய்யும் புனை சுருட்டும்'' என்று ஒரு தொடர் இருப்பதனால் அவ்விரண்டும் வேறானவை என்பது விளங்கும்.

''நேசா'' என்பது மேற்கூறியவாறு, தன்னை அழகுபடுத்திக் கொள்ளும் வள்ளியின் நண்பன் ஆகும். நேசம் என்னும் சொல் நட்பைக் குறிக்கும். நட்பு உயிரைச் சேர்ந்த பண்பாகும். அது சடப்பொருளாகிய உடலுக்கு உரியதன்று. (உயிர் நட்பு இல்லாமல்

உடலை மட்டும் நேசிப்பவர் உடல் சரியில்லாதபோது நேசத்தை விட்டுவிடுவர்). இங்கு வளமான விந்துவால் செழிப்புற்று மேலோங் கும் ஆன்ம உணர்வில் இறைவன் விரும்பி தங்குவதனால், வள்ளியின் ''நேசா'' என்றார். அவ்வாறு தங்கும் இடம் இதயம் ஆகும்.

இதயம் சதைப்பிண்டமானாலும், அது உணர்வுக்களமாய், இருக்கின்றது. உடம்பிலுள்ள ஒவ்வொரு இடத்துச் சதையும் ஒவ்வொரு வகையான உணர்வை உண்டாக்குகின்றது. அவற்றுள் இதயம் தவ, ஞான உணர்வைத் தருவதாகும். ஆன்ம உணர்வும் இறைஉணர்வும் சந்திக்கின்ற இடமாகவும் உள்ளது. முருகன் ஆன்ம உணர்வை நாடி இதயத்துக்கு வருவதனால், அவனை ''நேசா'' என்றதோடு ''முருகா'' என்றும் அழைத்தார்.

(2) நினது அன்பு அருளால் ஆசா நிகளம் துகளாயினபின்

அன்பு என்பது நமக்கு மேம்பட்டவரிடம் அல்லது ஒத்தவரிடம் செலுத்தப்படும் உள்ளநெகிழ்ச்சியாகும். அருள் என்பது, முன்பின் அறியாத (தொடர்பில்லாத) மற்றும் நம் உதவியைப் பெறுவோரிடம் செலுத்தும் உள்ளநெகிழ்ச்சியாகும். அன்பாலும், அருளாலும் செய் கின்ற செயல்கள் அறச்செயல்களாகின்றன.

அன்பு இல்லறத்தை நடத்தும்போது உண்டாகின்றது. அருள் துறவறத்தை மேற்கொள்ளும்போது மலர்கிறது. இல்லறம், துறவறம் என்று தனித்தனியே இரண்டு நிலைகளை மேற்கொள்ளாமல் வாழ்வு முழவதும் அன்பையும் அருளையும் செலுத்துவதுதான் சிறந்த வாழ்வாகும்.

அன்பும் அருளும், தாயையும் சேயையும் போன்றவை. அதாவது அன்பாகிய தாய், அருள்ாகிய குழந்தையைப் பெற்றெடுக் கிறாள். பெற்றபின், தாய், குழந்தையை விட்டுப் பிரிவதில்லை. இருவரும் உடன் வாழ்வதே இயல்பாகும். அதுபோல, அன்பும், அருளும் உடன் இருந்து ஆன்மாவை உயர்த்த வேண்டும். மற்றும், குழந்தையைப் பெற்ற தாய், குழந்தை தக்கபடி வளர வேண்டும் என்று ஒத்தாசையாய் இருப்பாள். அவ்வாறு இருப்பதைத் தவிர, தாய்க்கு வேறு வேலையும் இல்லை. முட்டை வைத்த கோழி அடைகாத்து வளர்ப்பதைப்போல அன்பு அருளை வளர்க்க வேண்டும். அதாவது அன்புக்குரிய இல்லறமும், அருளுக்குரிய துறவறமும், தனியே பிரியாமல் ஒன்றி இருப்பதே வாழ்வுக்குச் சிறப்பாகும்.

அன்பு எப்படி அருளாகிறது? அது வருமாறு: பண்டங்களைக் கொடுத்தல் வாங்கல் செய்யும்போது தொடர்பில்லாரிடத்தும் பழகி, பண்டங்கள்மேல் பற்று வையாமல், கொடுத்தவர்/பெறுபவர்மேல் பற்று வைத்தால் அது அருளாகின்றது. இவ்வாறு அருள் மலரும் ஆன்மாவுக்கே இறைவனுடைய அன்பும் அருளும் கிட்டும்.

ஆன்மாவின் அன்பும் அருளும் பாசப்பண்டங்களைப் பரிமாறு தலின் அடிப்படையில் வளர்ந்தவை. இறைவனுடைய அன்பும் அருளும் இயல்பானவை; அவை பாசப்பண்டங்களின் தொடர்பு இல்லாதவை.

ஆன்மாவினுடைய பாசப்பற்றுகள் நீங்கவேண்டுமானால், அது, இறைவனுடைய அன்பும் அருளும் வரும்போது மட்டுமே நிகழும். இந்த நுட்பமான கருத்தை வலியுறுத்தும்பொருட்டே ''நினது'' என்னும் சொல்லைச் சேர்த்து, அருணகிரியார் தெரிவித்துள்ளார். ''நினது அன்பருளால், ஆசா நிகளம் துகளாகும்'' என்றார். ''ஆசா நிகளம்'' என்பது ஆசையாகிய (இரும்பு) விலங்கு ஆகும். ''துகளாதல்'' என்பது தூளாகி விலகிப் போதலாகும். ஆக, ஆன்மா தன் அன்பு அருளால், இறைவனுடைய அன்பு அருளைப் பெற்று, அவனுடைய அன்பு அருளால் ஆசை என்னும் கட்டை விலக்கிக் கொள்ள வேண்டும். தாமே முயன்று தவமிருந்து ஆசைகளை அடக்கிவிடலாம் என்று முயல்வது வீண் முயற்சியாகும். அதனால் ஆசைகள் அறமாட்டா.

ஆசை அடங்காத தன்மையுடையது. அது பாசத்தின் இயல் பாகும். ஆசையின் அடிப்படையில் எதைச் செய்தாலும் வம்பில் வந்து முடியும். மாறாக, கடமை (அல்லது அறத்தின்) அடிப்படையில் செய்யும்போதே இறைவனுடைய அன்பையும் அருளையும் பெறு கின்ற தகுதி உண்டாகும். பாச அடிப்படையை உடைய ஆசை, பாசத் தொடர்பு இல்லாத இறைவனுடைய அருளால் மட்டுமே நீங்கும். அவ்வாறு ''ஆசா நிகளம் துகளாயினபின்'' இறை அநுபவம் தமக்கு வந்ததாகக் கூறுகின்றார். ஆசை அறாமல் அநுபவம் வருவதில்லை.

(3) பேசா அநுபூதி பிறந்ததுவே

மேற்கூறியவாறு ஆசைவிலங்கு பொடியாகிக் கட்டு நீங்கியபின் பேசா அநுபூதி பிறந்தது என்றார்.

அநுபூதி மௌன நிலையில் தோன்றுகின்ற ஞானம் ஆகும். அதனாலேயே ''ஞானம் என்பது மோன வரம்பு'' எனப்பட்டது.

ஞானம்-குணத்தோடு கூடிய அறிவாகும். அது பதி அறிவு, அருள் அறிவு, மெய்யுணர்வு என்று பல பெயர்களால் குறிக்கப் பெறும். அந்த அறிவு இதமானது. மற்ற அறிவுகள் (பகுத்தறிவு போன்றவை) நெருப்பு போன்றவை என்றால், பதி அறிவு தீய்க்கும் தன்மை இல்லாத கதகதப்பானதாகும். நிலவு (ஞாயிற்றிலிருந்து வந்தாலும்) தண்மைபட்டிருப்பதுபோல, அந்த அறிவும், தண்மை யாய் அநுபவிக்கலாம்படி இருக்கும்.

அந்தப் பதிஅறிவைப் பெற்றவரிடம் போனால், நமக்கு, அவர் எவ்வாறு பயன்படலாம் என்று எண்ணுவார். அத்தகைய ஞானி களையே மக்கள் அனைவரும் விரும்புவர். ஆன்ம அறிவாளியிடம் (பசு ஞானம் உடையவர்) போனால், நம்மை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணுவார். பாச அறிவாளியிடம் (பகுத்தறிவா ளியிடம்) போனால், நம்முடைய குற்றங்களையே பார்ப்பார். இவை பதிஅறிவுக்கும் மற்ற அறிவுகளுக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகின்றன.

குணத்தோடு கூடிய பதிஅறிவு நமக்கு வீடுபேற்றைத் தரவல்லது. வீடுபேறு என்பது முழுமையான விடுதலை (உரிமை)யாகும். அந்த நிலையில் தோன்றுகின்ற இன்பமே உண்மையான இன்பம் ஆகும். அதுவே ஆன்மா அடைய வேண்டிய கடைசி நிலையாகும். அதுவே முத்தி எனப்படுவது. அதற்கும் பின்னர் அது அடையவேண்டியது ஒன்றும் இல்லை.

அருணகிரியார் அந்தப் பதிஅறிவைப் பெற்றார் என்பதனை ''அநுபூதி பிறந்தது'' என்று கூறினார். அநுபூதி பிறந்தது என்பதும், ஞானம் பெற்றார் என்பதும், ஆதார மலர்களோடு அநுபவம் பெற்றார் என்பதும், வள்ளியின் சன்மார்க்க நெறியில் சென்றார் என்பதும் எல்லாம் ஒன்றேயாகும்.

அநுபூதி வந்தது என்று கூறும் இந்த நூலில், அவர் அதிகமாகப் பேசுவது வள்ளியைப் பற்றியேயாகும். வள்ளி அநுபவம் (சன்மார்க் கம்)தான் கந்தரநுபூதி என்னலாம். முன்பு தெரிவித்தபடி விந்துவின் வளமே வள்ளி எனப்படுவது. அதை விரும்புகின்றவனே முருகன். விந்து வளர்ச்சியின் எழுச்சியில் தோன்றுகின்ற வள்ளியை ஒரு ''மாது'' என்று சொல்லுவதைவிட முருகனின் (தெய்வ) ''சத்தி'' என்றே கொள்ள வேண்டும். முருகனை வழிபடுவது என்பது அவன் விரும்புவதை (விந்துவை) விரும்புவதாகும். அதை வளர்க்கும் யோக நெறியில் செல்வதாகும். அதாவது உடம்பின் வளமாகிய விந்து வீணாகாமல் மேலே ஏறி வீசும்படிச் செய்தலாகும். அது மேலேறி விசிறினால்தான் முருகன் அருள் வந்து பதியும்.

இந்த நிலையில் மற்றொரு செய்தியையும் நினைக்க வேண்டியுள்ளது: அநுபூதி வந்து விட்டால் ''அது வந்தது'' என்று சொல்லுகின்ற நிலை இருக்காது. ஆனால் அருணகிரியார் ''வந்ததுவே'' என்று சொல்லுகிறார். மற்றும், அது ''பேசா அநுபூதி'' என்று அதன் தன்மையை வேறு விளக்கிக் காட்டுகிறார். இதில் எது உண்மை என்று பார்க்க வேண்டும். ''பேசா'' என்னும் சொல்லில் இக்குழப்பம் இருக்கிறது. அதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

பேசுவது இரண்டு வகையில் நடைபெறுகிறது. 1) ''நான் பேசுகிறேன்'' என்னும் உணர்வோடு பேசுவது. 2) தன்னுணர்வு இல்லாத நிலையில், தானாகப் பேச முடியாத நிலையில், இறைவனுடைய உந்துதலால், தன்னையும் அறியாமல், வாய்ப்பழக்கத்தால் பேசுவது.

இங்கு அருணகிரியார் ''பேசா'' என்று குறிப்பிட்டது, தானாகப் பேசாதது ஆகும். தான் பேசாதபோது, செய்யுள் இருக்கிறதே என்றால், அது இறைவன் உந்துதலால் வந்ததென்று கொள்ள வேண்டும். எனவே பேசாத மோன நிலை வந்ததும் உண்மையே, இச்செய்யுள் அவர் திருவாயால் வந்ததுவும் உண்மையே.

பொதுவாக வழக்கில் ''இதை நான் சொல்லவில்லை'' என்று ஒருவர் சொல்வாரானால், வேறு ஒருவர் சொன்னதை இவர் வாயால் சொல்லுகிறார் என்று பொருள். அதைப்போலவே இங்குப் ''பேசா அநுபூதி பிறந்ததுவே'' என்று சொன்னது, தான் மோன நிலையை அடைந்த பின்னர் இறை அருளால் சொற்கள் வந்தன என்பது பெறப்படும். எனவே 44வது பாடலிலிருந்து 51வது பாடல் வரையும் அவரே பாடியருளினார் என்பது தெளிவாகும். கந்தரநுபூதியாகிய இந்நூல் ஒரு மந்திர நூல். மந்திர எழுத்துக்கள் 51 ஆக இருப்பதனால் அவர் இவ்வைம்பத்தோரு பாடல்களையும் இறை அருள் கொண்டு பாடியுள்ளார்.

இனி, ''பிறந்ததுவே'' என்பது பிரிதுபட்டதுவே என்று பொருள்படும். அது தம் உள்ளத்திலிருந்து வந்தது என்பதனைக் குறிக்கும். ஆக, இறை அருளால் ஆசை நீங்கி அதன் பயனாக அநுபூதி நிலை வந்தது என்றார்.

III சக்கரம்


சென்ற பாடலில் (42ல்) பாச இருள் முழுவதும் அற்றுப்போதல் பற்றி வந்தது. இந்தப் பாடல், பாசம் அழிந்த பின்னர் அது

மறக்கப்பட்டு, மோன நிலை கூடுவதுபற்றிக் கூறுகின்றது. இது, பாச அழிவுக்குப்பின் பெறுகின்ற இளைப்பாறும் நிலை அதாவது எல்லாவற்றையும் மறந்த நிலையைக் குறிக்கின்றது.

ஆனமாவுக்கு இந்த மறைப்பு நிலையைத் தருவது இறைவனுடைய ஐந்து தொழில்களுள் ஒன்று. அந்த ஐந்து தொழில்களும், அவற்றைக் குறிக்கின்ற மந்திர எழுத்துக்களும் வருமாறு:

	ஐந்தொழில்		மந்திர எழுத்து
1)	படைத்தல்	—	அ
2)	காத்தல்	—	இ
3)	அழித்தல்	—	உ
4)	மறைத்தல்	—	ஏ
5)	அருளல்	—	ஓ

எனவே இப்பாடலுக்குரிய மந்திர எழுத்து''ஏ'' ஆகின்றது. இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-44

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ?
வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெங்
காடும், புனமும் கமழும் கழலே.

I பொழிப்புரை

(பகைவருடைய முனைப்புத் தன்மையை) மோதி அழிக்கின்ற ஒப்பற்ற வேலை உடைய முருகனிடம் (நான்) அடைந்த அடைக்கல நிலை (எனக்கு) அவன் திருவடியை (த்தலைமேல்) சூடிக்கொள்ளும் படித் தந்தது சொல்லால் தெரிவிக்க முடியுமோ? (முடியாது). அவன் திருவடி முத்தியிலும், சிறந்த தேவர்களின் முடியிலும், வேதத்திலும், கொடிய காட்டிலும், வயலிலும் மணம் வீசித் தோன்றுவதாகும்.

II விளக்கவுரை

இதுவரை பார்த்த பாடல்களில் அருணகிரிநாதர், முருகனைப் பல அடைமொழிகளோடு விளித்துச் செய்திகளைச் சொல்லி இருக்கின்றார். அவற்றுள் ''தனிவேல்'' முருகன் என்று பல முறை கூறியுள்ளார். இந்தப் பாடலில் அத்தனி வேலைச் ''சாடும்'' தனிவேல் என்று கூடுதலான ஒரு அடைமொழிச் சொல்லையும் சேர்த்துக் கூறியுள்ளார். மற்றும், சரணடைதலைப் பற்றியும், அவன் திருவடியின் சிறப்பைப் பற்றியும் தெரிவித்துள்ளார். அவற்றின் விளக்கங்களைக் காண்போம்:

(1) சாடும் தனிவேல் முருகன் சரணம் சூடும்படி தந்தது சொல்லுமதோ!?

முன்பு ''தனிவேல்' என்று சொன்ன அருணகிரியார் இப் பொழுது வேலினுடைய சிறப்பை மேலும் விளக்குகிறார். அந்த வேல் எதனால் தனிவேல் ஆயிற்று, அது என்ன செய்ததனால் ஒப்பற்ற நிலையைப் பெற்றது என்பதே இங்கு விளக்கப்படுகிறது.

''சாடுதல்'' என்னும் சொல்லுக்கு மோதுதல் என்று பொருள். வேகமாக, கனமாகத் தள்ளுவது சாடுதல் ஆகும். (தக்கன் வேள்வி சாடப்பட்டது பற்றி மாணிக்கவாசகர் ''சாடிய வேள்வி சரிந்திட''

என்றும், அப்பர் பெருமான் ''சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில்'' என்றும் கூறியமை கவனிக்கத்தக்கது.) இதற்கு, யானை பயிரில் போய் விழுவதை உவமையாகக் கூறலாம். திருக்கோயில் களில் நெருக்கித் தள்ளிக்கொண்டு தரிசனத்துக்குப் போவதும் சாடுதலே. (அவ்வாறு சாடிக்கொண்டு தரிசிப்பவரை ஆண்டவன் வரவேற்க மாட்டான்; மாறாகக் கோபிப்பான்). மற்றும் எதிரியின் முனைப்பை அழிப்பதும் பொருளை அழிப்பதும் கூடச் சாடுதலே.

முனைப்பு என்பது அகங்காரம் (அல்லது ஆணவம்) ஆகும். அதை மட்டும் அழித்து, எதிரியை அழிக்காமல் விடுவது அவனைத் திருத்துவதாகும். கண்டித்தல் என்பதும் அதுவே. அதனால் எதிரி உயர்வு பெறுவான். எதிரியைத் திருத்துவதற்கு இறை அருள் இருக்க வேண்டும். இல்லையேல், விளைவு விபரீதமாகி விடும். உலகியலில் எதிரியின் அகங்காரத்தை அடக்கப்போய், அவருடைய உடம்பையே அழித்து விடும்படி நேர்வதும் உண்டு. அது கொலையாகி விடும். தனக்குத் தீமை செய்ததன் காரணமாகவோ, அல்லது தான் வேண்டியபடி உதவிசெய்யாததனாலோ ஒருவரை ஒருவர் கொன்று விடுகின்றனர். அது உலகியல்.

ஆனால் முருகனுடைய தனிவேல் வேறுவிதமாகச் செயல்படு கின்றது. அது யாரையும் அழிப்பதில்லை. தீய தன்மைகளைப்போக்கி, நல்ல குணத்தைப் பெறும்படிச் செய்யும்.

சூரபதுமனை வேல் அவ்வாறே திருத்தியது. ஒருவர் திருந்தி விட்டாரானால், அவருடைய முகத்திலும் உடம்பிலும் மாற்றம் உண்டாகின்றது. கோபத்தோடு இருக்கும்போது ஒரு வகையாகவும், அமைதியாய் இருக்கும்போது வேறுவகையாகவும் மக்கள் இருப் பதை நாம் காண்கின்றோம்.

சூரபதுமன், முருகனோடு போர் செய்யும்போது, மாமரமாகி, அதுவும் தலைகீழாகி, மேலும் நிலத்தில் இருக்கமாட்டாமல், கடலில் இருந்தான். இவை எல்லாம் ஆணவத்தால் நேர்ந்தவை. ஆணவம் இருப்பவன் ''ஏவவும் செய்கலான், தான் தேறான், அவ்வுயிர் போஒம் அளவும் ஓர் நோய்'' (திருக்குறள் - 848) என்னும்படி இருப்பான். சூரபதுமனுக்கு ஆணவம் மிக்கிருந்ததோடு, வலிமையும் இருந்தது. ஆணவம் மிக்குடையோருக்கு உலகில் இருப்பதற்கு இடம் கிடைப்பதில்லை. எனவே அவன் கடலில் நின்றான். ஆற்றலும் தெய்வத்தன்மையும் உடையவர்கள், எதிரில் வரும்போதே கெட்டவர் கள், தாமே, குன்றிப்போய், உருமாறி விடுவது இயல்பேயாகும்.

அவ்வாறே மாமரமாய் (ஓரறிவுடையதாய்) நின்ற சூரனை முருக னுடைய வேல் பறவையாக உயர்த்தியது. இதுவே, அது ஒப்பற்ற வேல் ஆனதற்குக் காரணமாகும்.

''பதுமம்'' என்பது தாமரை மலர். அது ஒரு நல்ல மலர். ''பதுமன்'' என்பவனும் நல்லவனே. ''சூரன்'' என்னும் சொல்லுக்கு ஆணவம் மிக்கவன் என்று பொருள். எனவே ''சூரபதுமன்'' என்பவன் - நல்லவனும் கெட்டவனும் ஆகிய இரண்டு தன்மைகளை யும் உடையவனாய் இருந்தான். அவன் தவம் செய்தவன் ஆனதால் ஏற்றுக்கொள்ளலாம் போலவும், ஆணவ மிகுதியாய் ஒதுக்கிவிடலாம் போலவும் இருந்தான். அத்தகையவனைத் தனிவேல் சாடித் திருத்தியது. அதனால் வேல் நிகரற்ற சிறப்பை எய்தியது.

இனி, சரணம் என்னும் சொல்லுக்கு அடைக்கலம் அல்லது ஒப்படைப்பு என்று பொருளாகும். இறைவனிடம் ஒருவர் அடைக்க லம் புகுந்துவிட்டால், அவர் எப்படிப்பட்டவரானாலும் காக்க வேண்டிய கட்டாயம் இறைவனுக்கு வந்துவிடுகிறது. அடைக்கலம் என்னும் சொல்லின் கருத்தே எப்படியேனும் காக்க வேண்டும் என்பதாகும். அடைக்கலம் புகுந்தவர் எவ்வளவு குற்றங்களைச் செய்தவரானாலும், (கொன்றன்ன இன்னா செய்தவராய் இருந்தா லும்) அவரை விட்டுவிடுவதற்கில்லை. இதனால் இறைவனுக்குப் பொறுப்பு மிகுவதோடு அவனைக் கட்டாயப்படுத்துவதாகவும் நேர்கின்றது.

இதுபற்றி மாணிக்கவாசகர் கூறும்போது இறைவனிடத்தில் அப்பெரும் பொறுப்பைத் திணிப்பதற்குத் தமக்கு மனம் வரவில்லை என்று கூறுகிறார். ''உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்'' அடைக்கலத்தை விரும்பாமல், அதற்கு ஈடாக ஒரு வரம் கேட்கின்றார். அவ்வரத்தைத் தந்தால் தமக்குக் குறை ஏதும் இல்லை என்று கூறுகிறார். (அவ்வரமாவது ''எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க, என் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க, என் கண் மற்றொன்றும் காணற்க'' என்பதாகும்).

சரணாகதி அடைவது துன்பத்தை ஏற்க அஞ்சிச் செய்யும் செயலென்றும், அது பொறுப்பை இறைவனிடம் சுமத்திவிடும் செயல் என்றும், அதனால் அது விரும்பத்தகாதது என்றும் மாணிக்கவாசகர் கருதினார். எனவே அவருடைய நிலை சரணாகதி அடைவதை விட உயர்ந்தது என்பது தெரிகின்றது.

இங்கு அருணகிரியார் சரணாகதியை அடைந்தார் என்றும், அதன் பயனாக, முருகன் தமக்கு அவனுடைய கழலைத் தலையில் சூடும்படித் தந்தான் என்றும் கூறுகிறார். அக்கழலைச் சூடிக்கொண்டு அவர் பெற்ற அநுபவத்தைச் சொல்ல முடியவில்லை என்றும் கூறுகிறார். அந்த அநுபவம் எத்தகையது என்பதைப் பார்ப்போம்:

''சொல்லுமதோ'' என்பதற்குச் சொல்ல முடியாது என்பது பொருள். உலகச் செய்திகளை நாம் ஒருவரிடம் ஒருவர் சொல்லிக் கொள்ளலாம். அதனால் திருத்தங்களைப் பெறவும், செய்யவும் முடியும். அவை எல்லாம் சொல்லுக்கு எட்டியவை. ஆனால் அகத்தில் நிகழும் உணர்ச்சிகள் அவ்வாறு சொல்லக்கூடியனவாய் இருப்பதில்லை. அவை நினைந்து உணர மட்டும் உரியவை. அதனாலேயே அருணகிரியார் கழல் சூடும்படிப் பெற்ற நிலையைச் சொல்ல முடியுமோ? என்றார்.

அதை மற்றவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் கொண்ட பெரியோர்களும் அதனை நினைந்து, உணர்ந்து எல்லாம் நிறைந்து முடிந்த பின்னர், அது அருளமுதம் என்றும், நன்னிதி என்றும் குறிப்பிட்டனர். அதற்கு மேல் சொல்வதற்கு அது சொற்களில் அடங்குவதாய் இல்லை. இச்செய்திகளைச் சொல்லுவதும் மனித முயற்சியால் ஆகக்கூடியதாக இல்லை. அது இறையருளாலே, அவன் கழல் (ஞானம்) பதிவதனால் மட்டுமே இயலுவதாகும்.

அருணகிரியார் சென்ற (43வது) பாடலில் ''அநுபூதி பிறந்ததுவே'' என்றார். அந்த அநுபவமும், இப்பாடலில் வருகின்ற (கழல் சூடப்பெற்றதனால் வருகின்ற) அநுபவமும் தொடர்புடையன. முன் சொன்ன அநுபூதியின் வளர்ச்சியே இந்தப்பாடலில் குறிக்கப்பட்டதாகும்.

இந்த அநுபவங்கள் மூன்று வகையின: அவை: 1) உயிர் அநுபவம், 2) அருள் அநுபவம், 3) ஞான அநுபவம்.

1) **உயிர் அநுபவம்:** இது ஆன்மாவுக்கு பதிஅறிவு பதியும் போது வருகின்ற அநுபவம் ஆகும். பதிஅறிவு வந்த உடனே சூழலில் உள்ள பண்டங்களை எல்லாம் இறை உணர்வோடு நல்ல வண்ணமாகவும் பார்க்க வேண்டிய முறைப்படி பார்த்தும் அநுபவிக்கும்.

2) **அருள் அநுபவம்:** இது அம்பிகையின் அருளால் வருகின்ற அநுபவம் ஆகும். ஆன்மா வீடுபேற்றை நோக்கிப் போகுமாறும், மீண்டும் உலக அநுவத்துக்குத் திரும்பாமலும் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளும். அருள் ஆன்மாவுக்குக் கரம் கொடுத்து அழைத்துச் செல்லும் அநுபவம் ஆகும்.

3) ஞான அநுபவம்: இது வீடுபேற்றைப் பெறுவதற்கு முன்பு உள்ள அநுபவம் ஆகும். இந்த ஞான அநுபவம் வீடு அடைவதற்குக் கருவியாகும்.

மேற்கூறிய மூன்று அநுபவங்களையும் வகைப்படுத்தி விளங்க வைத்தவர் இராமலிங்கர் ஆவார். இராமலிங்கர் அண்மையில் இருந்தவர். நம் காலத்துக்குச் சற்று முன் அதாவது கி.பி. 1823-லிருந்து 1874 வரை இருந்தவர். அவர் தனித்திறமை உடையவராய் விளங்கினார். விளங்காத பல செய்திகளை விளங்க வைத்துள்ளார். அவர் ஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டவர். குருவாகிய ஞானசம்பந்தரே தமக்கு மேற்குறிப்பிட்ட உயிர் அநுபவம், அருளனுபவம், ஞான அநுபவம் ஆகிய மூன்றினையும் தந்தார் என்றும் பாடியுள்ளார். ஞானசம்பந்தர் இயற்றிய அற்புதங்கள் பலவாகும். தம் திருமணம் நடந்தபோது உடன் இருந்தவர்களுக்கு முத்திப்பேற்றையும் தந்துள்ளார். இவரும், மற்ற மூவரும் (அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்) பல அரிய செயல்களைச் செய்துள்ளனர். இவர்கள், கோயில்களுக்கெல்லாம் கோயிலாக விளங்கும் தில்லை (சிதம்பரத்து)க்கே மூர்த்திகரம் தந்தவர் ஆவர். (அதிலும் மாணிக்க வாசகர் அம்பலவாணரின் அருகிலேயே இருக்கும் பேறு பெற்றார்). நால்வர் பெருமக்களே சைவ சமயத்தின் எல்லைக்கல் போல மதித்துப் போற்றத்தக்கவராவர். இராமலிங்கரைப்போலவே பிற்காலத்துச் சான்றோர் பலரும் நால்வரைத் தம் குருவாகக் கொண்டுள்ளனர். (ஆனால் நால்வர் தமக்குக் குருவாக வேறு ஒருவரைக்கொள்ள வில்லை). நால்வருடைய நிலை அவ்வளவு சிறப்புடையதாகும். இதைச் சைவர்கள் புரிந்துகொண்டு போற்றுதல் வேண்டும்.

மேற்கூறிய மூன்று அநுபவங்களில் கழல் சூடும்படித் தந்தபோது வந்த அநுபவம் உயிர் அநுபவத்தைச் சேர்ந்ததாகும். இது அம்மூன்றனுள் முதலாம் படியாகும். அதாவது பதிஅறிவு பதியப் பெற்ற நிலையாகும். இந்த நிலையையே எப்படி இருந்ததென்று சொல்ல முடியவில்லை என்று கூறுகிறார். இதுவே அத்தகையதானால் இதற்கும் மேம்பட்ட அருளநுபவமும், ஞானாநுபவமும் எப்படிச் சொல்ல முடியப்போகிறது? இந்த நிலைகளைக் கடந்த பின்னரே வீட்டு அநுபவம் வரும். அந்த அநுபவம் ''சிவாநுபவம்'' என்று சொல்லப்பெறும். அதனைச் ''சிவகதி'' என்றும் கூறுவர். இதுவே இறுதி நிலை.

''சிவகதி'' என்னும் சொல்லைச் சைவர்களேயன்றி மற்ற சமயத்தவரும் பயன்படுத்துகின்றனர். இந்த நாட்டிலேயே தோன்றிய மிகப்பழைய சமயங்களாகிய சமண, பௌத்த சமயங்கள்கூடத் தம்

சமயத்தில் குறிக்கப்பெறும் வீட்டு அநுபவத்தைச் ''சிவகதி'' என்றே கூறுகின்றன. முடிந்த நிலைக்கு இந்தப் பெயரே பொருத்த மானதாகும். சிவம் என்னும் சொல்லுக்கு உள்ள பொருள்கள் எல்லாமே நல்லனவற்றையே குறிக்கின்றன. அச்சொல்லுக்குக் கெட்டபொருள் எதுவுமே இல்லை. அது நன்மை, தூய்மை, மங்களம், அழகு, மென்மை, நிறைவு, உண்மை ஆகியவற்றையே குறிக்கின்றது.

ஊன்றிப்பார்த்தால் அப்பொருள்கள் அச்சொல்லுக்கு அமைந்த தன் நடுநிலை தெரியவரும். ஊன்றிப் பாராதவர்க்கு ஒருபட்டசமாகத் தெரியும். நூல் வழக்கு (இலக்கிய வழக்கு) இலக்கண வழக்கு, மரபு ஆகியவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால், அச்சொல்லின் பொருள் மேற்குறித்தவையே என்பது புலனாகும். வேறு சமயங்களில் முடிந்த நிலை இவ்வளவு சிறப்புக்களோடு அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. எல்லாச் சமயங்களின் நல்லியல்புகளையும் தன் னுள்ளே கொண்டு, அவற்றையும் மாறுபாடு கருதாமல் தழுவிச்செல் வதே சைவ சமயம் ஆகும். இச்சமயமே முதன் முதலில் தெய்வம் உண்டு என்னும் உணர்வைப் பெற்றவர்கள் வழங்கிய சமயம் ஆகும். இதனை ''இராசாங்கத்து அமர்ந்தது'' என்று சமரசஞானி தாயுமான வரே கூறியுள்ளார்.

(2) வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெங்காடும், புனமும் கமழும் கழலே

வாயால் சொல்ல முடியாத பெருநிலையைத் தந்த முருக னுடைய கழல் எப்படிப்பட்டது என்பதனை இத்தொடரில் அருண கிரியார் விளக்குகிறார்.

ஆன்மாக்களுடைய துன்பங்களைக் கழலச் செய்வது (விலகச செய்வது) ''கழல்'' எனப்பட்டது. வீரத்துக்கு அறிகுறியாக அணியப் படும் ஆபரணமும் கழல் எனப்பெறும். ஆன்மாக்களின் துன்பங்களைப் போக்குவதும் வீரச்செயலே ஆகும். வீரக்கழலை அணிந்த திருவடி யும் ''கழல்'' எனப்பட்டது. அத்திருவடிதான் ஞானம் ஆகும்.

அக்கழல், ''கமழும் கழல்'' என்றார். ''கமழ்''தல் என்பது மணத்தல் என்றும், தோன்றுதல் என்றும் பொருள்படும். ஞானம்தான் நல்லியல்புகள் எங்கும் மணக்கும் தன்மை உடையது. அது எங்கெங்குத் தோன்றும் என்பதற்கான பட்டியலை இங்கு அருணகிரி யார் கொடுத்துள்ளார். அது வீட்டிலும், சுரம் மாமுடியிலும், வேதத்திலும், வெங்காட்டிலும், புனத்திலும் தோன்றும் என்றார்.

வீடுபேற்றில், ஆன்மா உடன் இருந்து இன்பம் துய்க்கும்படிச் செய்வது ஞானமாகிய அவனுடைய கழலேயாகும்.

''சுரர்'' என்பவர் தேவர்கள். ''சுரர்மாமுடி'' என்றதனால் சுரர்களுள் மெய்யுணர்வு பெற்ற சிறந்த சுரர்களின் முடியில் தோன்றும் என்றார்.

முருகன் திருவடி வேதத்திலும் தோன்றும் என்றார். வேதம் மெய்ப்பொருளை உணர்த்தும் நூலாகும். அது இறையருளால் செய்யப்பட்டது. அது மூன்று வகைப்படும். அவை 1) ருக், 2) யசுர், 3) சாமம்.

1) ருக் மந்திர சக்தி உடையது. உச்சரிப்பில் சிறந்ததாகிறது. ''ஓ''காரத்தின் பிரிவாகிய ''அ'' ''இ'', ''உ''க்களுள் 'அ'கரத்தால் உண்டாக்கப்பட்டது ருக் ஆகும்.

2) யசுர் இது கிரியா சத்தி உடையது. இது வேள்விக்கு (யக்ஞுத்துக்கு) உரியது. ''இ''கரத்தால் உண்டாக்கப்பட்டது.

3) சாமம் இது பாவனா சத்தி உடையது. தோத்திரங்களைக் கொண்டது. 'உ'கரத்தால் உண்டாக்கப்பட்டது.


பிரணவமாகிய ''ஓம்'' என்பதிலிருந்து மந்திரம் கிரியை, பாவனை உண்டாயின. வைதிக சமயம் இம்மூன்று சத்திகளையும் கொண்டதாகும். வேத சம்பந்தம் உடையது வைதிகம் எனப்படும். சைவ சமயம் ஆகம சம்பந்தம் உடையது. ஆகமம் மேலான தரத்தவருக்கு மெய்யைத் தெளிவிக்கும். இத்தெளிவு வேதத்தில் வெளிப்படையாக இல்லாமல் மறைந்திருக்கும். வேதத்தைப் பயின்ற பின் உபநிடதத்தைப் பயில்வர். இந்த வேதத்தின் கருத்துக்களில், முருகனுடைய கழலாகிய ஞானம் தோன்றும்.

வெங்காடு என்பது வெம்மை மிகுந்த காடு என்றும், விரும்பத்தகுந்த காடு என்றும் பொருள்படும். புனம் என்பது கொல்லை நிலம் அல்லது வயல் நிலம் ஆகும். வள்ளியை நாடி முருகனின் திருவடிகள் காட்டிலும் நிலத்திலும் சுற்றின என்பது ஒருபொருள். இச்சொற்கள் உடம்பின் உள்ளே இருக்கின்ற நுண்களன் களில் (சூக்கும இடங்களில்) விந்துவை நாடித் தெய்வசத்தி திரிந்தது என்றும் பொருள்படும். அதாவது இறைவனை நாடுகின்ற யோகி களுக்கு அகத்தே தோன்றி (யோகத்தில் வருகின்ற இடர்களை நீக்கி அவர்களை உயர்த்துகின்றது.

ஆக, முருகனிடம் அடைக்கலாம் புகுந்த அருணகிரியாருக்கு அவன் திருவடியாகிய ஞானம் சொல்ல முடியாத அநுபவங்களைத் தந்தது என்று கூறியுள்ளார்.

III சக்கரம்

இந்தப்பாடல் சரண் அடைந்ததன் பயனாக முருகனின் கழலாகிய ஞானம் பதியப்பெற்றதன் அழகைக் குறிக்கின்றது. அழகைக் குறிக்கும் எழுத்து 'ஐ'காரம் ஆகும். எனவே இந்தப்பாடலுக்கு உரிய மந்திர எழுத்து ''ஐ'' ஆகின்றது. இப்பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்
பாட்டு-45

கரவாகிய கல்வியுளார் கடை சென்(று)
இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையே
குரவா குமரா! குலிசாயுத குஞ்-
சரவா! சிவயோக தயாபரனே!

I பொழிப்புரை

(மறைப்பென்னும்) வஞ்சனை சேர்ந்த கல்வியாளரின் கடை வாயிலில் சென்று (மெய்ப்பொருளை) இரந்து கேட்காமல் இருக்கும் பொருட்டு (நீயே எனக்கு) மெய்ப்பொருளைத் தருவாயாக. ஞானாசிரியனே! இளமைப்பருவம் உடையவனே! குலிசப்படையை உடையவனே! யானை வாகனம் உடையவனே! சிவயோகம் உடையவனே! தயையுடைய மேலோனே!

II விளக்கவுரை

இந்தப் பாடலில் அருணகிரியார் முருகனை ஆறு விதமாக அழைத்து மெய்ப்பொருளைத் தரும்படி வேண்டுகிறார்.

(1) கரவாகிய கல்வியுளார் கடைசென்று இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையே

கல்வி என்பது மனப் பயிற்சியாகும். ஐம்புலக் கண்களின் துணையோடு புருவ நடுவிலுள்ள மனக்கண் கொண்டு பயில்வதே கல்வியாகும். எழுத்தறிவிக்கும் ஆசிரியரிடம் சிறு பிள்ளையை ஒப்படைக்கும்போது ''இச்சிறுவனுக்குக் கண் திறந்து வையுங்கள்'' என்று கூறும் வழக்கு இருந்து வருகிறது. அங்குக் ''கண்'' என்பது இந்த மனக்கண்ணையே குறிக்கின்றது.

கல்வி மனிதனுக்குக் கண் போன்றதானாலும், அதுவே உயர்ந்த நிலையைத் தருவதில்லை. கல்வியோடு உண்மை சேரும்போதே அது உயர்வைத் தரும். எனவே வெறும் கல்வியைவிட உண்மை உயர்ந்ததாகும். எந்த இடத்தில் மனம் அடங்குகிறதோ அங்கேதான் உண்மை தொடங்குகிறது. உண்மை இல்லாத கல்வி கரவுடையதாகும்.

கரவு என்பது ஒளிப்பு (அல்லது மறைப்பு அல்லது வஞ்சனை) ஆகும். அருணகிரியார் ''கரவாகிய கல்வி'' என்று சொல்லி விட்டதனால், அதற்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கலாம் என்பது விளங்கும்.

யார் படிப்பால் மட்டும் வேலை செய்துகொண்டு சிறந்து விளங்குகிறார்களோ அவர்கள் மறைந்து ஒழுகுவதிலும் கெட்டிக்கார ராய் இருப்பர். படிப்பின் ஒளியால் அவர்களுடைய ஒழுக்கக்குறைவு தெரியாமல் இருக்கும். அவர்களை உண்மையானவர்கள் என்று துணியமுடியாது. அவர்கள் செய்யும் தவறுகளை மறைக்க சாமர்த்திய மாகப் பதில் கூறுவர். எனவே வெறும் படிப்புக்குத் திறமை என்னும் அளவுக்கு மட்டுமே மதிப்புத்தர வேண்டும்.

படிப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஞானிகளாக மாறுகின்ற வர்களிடம் ஒரு மாற்றம் காணப்படும். அவர்கள் உலகத்தையும் உலகப்பண்டங்களையும், கற்ற கல்வியையும்கூட மறக்கின்ற நிலை வந்துவிடும். அவர்கள் பெரிய பொருளாகிய இறைவனை நினைந்து பரவசப்பட்டுக்கொண்டு இருக்கும்போது மற்ற எந்தப் பொருள் பற்றிய எண்ணமும் அவர்களிடம் தலைகாட்டுவதில்லை.

கல்வியைப் போலவே கலையும் கரவுடையதே. கலைஞர்கள் சிலர் ஒழுக்கமாய் இல்லாமலும் இருப்பர். அழகு, புனைவுகளோடு அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னால், மக்கள் அனைவரும் அவர் பின் செல்வர். அவரிடமுள்ள கலைத்திறன் அவ்வாறு ஈர்க்கும். எனவே, தாம் கருதியவற்றை மக்கள் பின்பற்றும்படிச் செய்வதற்கு கலை ஏற்ற கருவியாக உள்ளது. எப்படிச் சொன்னால் மக்கள் ஏற்பார்கள் என்று புனைந்து சொல்லுவதால் கலை கரவுடையதாகின் றது. அது தந்திரம் அடங்கியதாகும்.

தீயவற்றுக்குப் பயன்படுவது போலவே கலை, நன்மைக்கும் பயன்படுகிறது. அதனைப் பயன்படுத்துவோரின் தன்மையைப் பொருத்துப் பயன் அமையும். திருஞானசம்பந்தர், இசைக்கலையைக் கொண்டு, நாளும், தமிழைப் பரப்பியதாகச் சுந்தரர் கூறியுள்ளார். தமிழை வளர்க்க விரும்புவோர், இன்றும் இசைக்கலையின் துணை யோடு வெற்றி பெற முடியும். ஞானசம்பந்தர் பரப்பியது மொழியை மட்டுமன்று. அவர் ஞானத்தையும் பரப்பினார். தமிழைப் பயின்றால், அது ஞானத்தைப் பெறுகின்ற அளவுக்கு உதவி செய்யும். மெய்கண்ட சாத்திரங்களைப் படிப்பது கடினமாய் இருக்கும். தேவார திருவாசகங் களைப் பயில்வது அவ்வளவு கடினமன்று. அவற்றோடு இசையையும் சேர்த்துப் பயின்றால், இனிமையாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும்.

''கரவாகிய கல்வி''யையும், பெற விரும்பினால், அக்கல்வி யுடையவர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்கள் கடைவாயிலில் நின்று இரக்க வேண்டியுள்ளது. இரத்தல் என்பது பிச்சை எடுத்தல் ஆகும். இது பொருள் இல்லாதவர் இருப்பவரிடம் சென்று இரப்பதைப் போன்றதே. (எனினும், பொருளை இரப்பதைவிட, கல்வியை இரப்பது மேலானதாகும்). அருணகிரியார் கரவாகிய கல்வியைப் பெற விரும்பவில்லை.

இறையருள் பெற்ற சில ஞானிகள் தம் அநுபவங்களை நூல்களில் எழுதித் தெரிவித்துள்ளனர். அச்செய்திகளைப் படிப்பள வில் கற்றவர் அனைவரும் அருளாளர்கள் ஆவதில்லை. அநுபவம் இல்லாத நிலையில் அக்கல்வி கரவுடையதாகின்றது. அநுபவம் இல்லாத அக்கல்வியாளரிடம் சென்று மெய்ப்பொருளைக் கேட்டால், அவர்களால் தர இயலாது. எனவேதான் முருகனை விளித்து நீ ஈகுவையே என்றார்.

பொதுவாக ஆசிரியரிடம் கல்வி கற்கும்போது மாணவருக்குக் கால் பங்கு மட்டுமே வரும். அந்த மாணவர் மற்றவர்களுக்குக் கற்பிக்கும்போது மற்றொரு கால் பங்கு (அதாவது அரைப்பங்கு) வரும். அக்கல்வியை இறைவனே தரும்போது ஒரு நொடியில் எல்லாவற்றையும் முழுமையாகத் தந்துவிடுகிறான். ஒரே ஒரு எழுத்தைப் படித்தால் போதுமானது. எல்லாம் வந்துவிடும். அந்த ஒரு எழுத்துக் குருநாதன் சொல்லுகின்ற ஒரு மொழியாகும். அது பிரணவம் என்றும், மெய்ப்பொருள் என்றும் சொல்லப்பெறும். இராமலிங்கர் இந்த மெய்ப்பொருளைப் பெற்றார். அவர் பிறரிட மிருந்து கல்வி கற்கவில்லை. இறைவனிடமிருந்தே பெற்றார்.

பிரணவம் முதலில் சூக்குமையாக இருந்து இதயத்துக்கு வரும்போது உருக்கொள்கிறது. உருக்கொள்ளும்போது தெய்வ வடிவமாகிய சிவலிங்கம் தோன்றும்.

மெய்ப்பொருளை இளமையிலேயே பெற்றுவிட வேண்டும். தவறினால் முப்பது ஆண்டுகளுக்குள்ளாவது பெற்றுவிட வேண்டும். மெய்ப்பொருளைப் பெற விரும்பிய அருணகிரியார் முருகனை ஆறு விதமாக விளிக்கின்றார். அவை வருமாறு:

(2) குரவா, குமரா, குலிசாயுத, குஞ்சரவா, சிவயோக தயாபரனே!

''குரு'' என்னும் சொல்லே இங்குக் ''குரவா'' என்று வந்துள்ளது. இச்சொல்லுக்கு ஞான ஒளி உடைய ஆசிரியன் என்று

பொருளாகும். ஒரு சொல்லுக்குப் பொருள் காண வேண்டுமானால், முதலில் அதனுடைய பகுதிச் சொல் எது என்று பிரித்துக்கொண்டே போக வேண்டும். இனியும் பிரிக்க முடியாது என்னும்போது எஞ்சி நிற்கும் அந்த மூலச்சொல் இலக்கியங்களிலும், மரபுப்படியும் எவ்வாறு வழங்கியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதன்படியே பொருள் கொள்ள வேண்டும். இந்த வகையில் பார்க்கும்போது ''குரு'' என்பதற்கு ஒளியானவர் என்னும் பொருள் பொருந்தி வருகிறது: 1) ஒளியுடைய நல்ல நிறம் பொருந்திய மணி - ''குருமணி'' எனப்படுகிறது. உடம்பினுள்ளே செந்நிறத்தோடு பாய் கின்ற இரத்தம் ''குருதி'' எனப்படுகிறது. 2) நல்ல மணமும், நிறமும் உடைய ஒரு பூ ''குரவ மலர்'' எனப்படுகிறது. ஆக ஒளிபொருந்திய ஞானாசிரியர் ''குரு'' எனப்பட்டது பொருத்தமாகவே உள்ளது.

''குரு'', இங்கு ''குரவா'' என்று மருவி வந்துள்ளது. அது ''அருவா நாட்டு'' (தமிழ் நாட்டு) மொழி ''அரவம்'' என மருவியதைப் போன்றதாகும்.

ஆக, முருகன் தெய்வ ஒளிபொருந்திய ''குரவன்'' ஆனான். அவன் குமரனும் ஆவான். ''குமரன்'' என்பது இளமை நிறைந்தவன் ஆகும். அவன் இளையோனாய், சத்தி நிறைந்தவனாய் இருந்து கொண்டு தந்தைக்கு உபதேசம் செய்ததனால் ''குரவா குமரா'' என்றார். இந்த இரண்டையும் ஒன்றுசேர்த்துச் சொல்லுவதுபோலவே மற்ற நான்கையும் ''குலிசாயுத குஞ்சரவா'' என்றும் ''சிவயோக தயாபரனே'' என்றும் கொள்ளலாம். அவ்வாறு இணைத்துக் காணும்போது சில கருத்துக்கள் புலப்படும். ஆறு முகங்களை மூவிரு முகங்கள் என்று சொல்லுவதைப்போல அவற்றை இணைத்தும் காணலாம்.

''குலிசாயுதம்'' என்பது வச்சிராயுதம் போன்ற வளைத்துப் பிடிக்கும் ஆயுதம் ஆகும். (குலிசம்=வளைந்தது). குலிசாயுதத்தை உடைய முருகன் ஆன்மாக்களின் பாசங்களை வளைத்துப் பிடித்துத் தன்வயமாக்கி, நீக்கி விடுகின்றான்.

ஆயுதம் கூர்மையானது, ''ஆய்'' என்னும் பகுதி நுட்பம் மென்மை, கூர்மை என்று பொருள்படும். எல்லா ஆயுதங்களும் கூர்மையாகவே இருக்கும் (தண்டாயுதம் பருத்து உருளையாய் இருந்தாலும் அது செய்யும் வேலை கூர்மையானதாகும்.)

ஆய்த எழுத்து (ஃ) மென்மையானதனால் அதற்கு அப்பெயர் வந்தது. அது இடையின, மெல்லின எழுத்துக்களை விட மென்மையானது. அது மற்ற எழுத்துக்களோடு சேர்ந்து வேறுபட்ட

ஒலியைத்தரும். 'ப'வோடு சேர்ந்து 'F' என்று ஒலிக்கும். 'அஃது' என்னும் சொல்லில் அது 'ஹ'கர ஒலியைத்தரும். இத்தகைய ஒலி வேறுபாடுகளைத் தருவதற்கென்றே அது தமிழில் அமைந்துள்ளது. நாம் அதனைச் சரிவரப் புரிந்து கொண்டு பயன்படுத்துவதில்லை. பயன்படுத்தினால் மற்ற மொழிகளிலுள்ள நலங்களைத் தமிழிலேயே பெறலாம். அது மூன்று கண்களைப் போலவும் (ஃ), சூலத்தின் மூன்று பிரிவுகளின் நுனியைப் போலவும் அமைந்துள்ளது.

மென்மையானவற்றுக்கு வன்மையும் உண்டு. கரடுமுரடான பாறையைவிட வழவழப்பான கண்ணாடி வன்மையாய் இருக்கும். கண்ணாடியில் நிழலாடுதற்கேற்ற நுட்பம் இருக்கின்றது. அவ்வாறே வச்சிராயுதம், குலிசாயுதம் ஆகியவை மென்மையும், நுட்பமும், உறுதியும் உடையன ஆம்.

''குலிசாயுத குஞ்சரவா'' என்று இரண்டையும் சேர்த்துப் பொருள் கொண்டால் வச்சிராயுதத்தை உடைய இந்திரனின் மகளாகிய தேவயானையை மணந்தவனே என்னும் பொருளைத் தரும். தனியே ''குஞ்சரவா'' என்று பிரித்துப்பார்க்கும்போது யானை வாகனம் உடையவனே என்று ஆகும். மற்றும், யானையைப் போன்ற பெருமிதமும் வல்லமையும் உடையவனே என்றும் ஆம்.

முருகனுக்கு மயில் வாகனம் எவ்வளவு சிறப்பானதோ, அவ்வளவு சிறப்பு யானை வாகனத்துக்கும் உண்டு. யானைக்குப் ''பிணிமுகம்'' என்ற ஒரு பெயருண்டு அது எல்லாருடைய கருத்தையும் ஈர்த்துப் பிணிப்பதனால் அப்பெயர் வந்தது. யானை மேல் ஏறிய முருகனைக் காண்போர் அனைவரும் அவ்வாறே பிணிக்கப்படுவர். யானையின் தோற்றம் கம்பீரமானது. அது சாந்தம் வல்லமை, ஆண்மை, போர்த்திறம் முதலிய குணங்களை உடையது.

ஒவ்வொரு வாகனமும், ஒவ்வொரு சிறப்புடையது: சிங்க வாகனம் வீறு பெற்றிருப்பதைக் குறிக்கும். முருகன் சிங்க வாகனத்தில் வரும்போது வீறுடையவர்களை அடக்குவான் என்று கொள்ள வேண்டும். குதிரை வாகனம் வேகத்தைக் குறிக்கின்றது. யானை, மற்ற வாகனங்களைவிடப் பெருந்தன்மை உடையதாய் இருப்பதனால் சிறப்புப்பெறுகின்றது. ''குஞ்சரவா'' என்பது ஊக்கம் தருபவனே என்னும் பொருளையும் தருகின்றது.

இறுதியாகச் ''சிவயோக தயாபரனே'' என்றார். சிவத்தோடு சேரும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு செய்யப்படும் யோகம் சிவயோகம் ஆகும். சித்து முதலிய வேறு நோக்கங்களை உடைய யோகம் சிவயோகம் ஆகாது. சிவயோகியாய் இருப்பவரே

சத்தி மிக்கவராவர். சத்தி மிகுந்தவர்களே தயை (கருணை) உடையவராவர். தயை இருந்தால் அன்பர்களுக்கு வாரி வழங்குதல் இயலும். தயை உடையவனே மேலோன் ஆதலால் ''தயாபரனே'' என்றார். (பரன்=மேலோன்)

அகநாட்டம் (அதோமுகம்) உள்ள முருகனுக்கும் அகத்திலுள்ள ஆறு ஆதாரங்களுக்கும் தொடர்புண்டு. அவனுடைய ஆறு முகங்களை மூவிரு முகங்களாகக் காண்பதுபோலவே அவனுடைய ஆறு பெயர்களையம் இரட்டை இரட்டையாகப் பார்த்தோம். ஆறு ஆதாரங்களையும் அவ்வாறே இரட்டை இரட்டையாகக் காணலாம். அவை 1) மூலாதாரம், சுவாதிட்டானம், 2) மணிபூரகம், அநாகதம், 3) விசத்தி, ஆக்ஞை. இவற்றுக்கு முறையே 1) மண்ணுக்கும் நீருக்கும், 2) கடலுக்கும் ஞாயிற்றுக்கும், 3) காற்றுக்கும் வானத்துக்கும் உள்ள தொடர்பு உள்ளன. முருகனுடைய ஆறு படை வீடுகளும் ஆறு ஆதாரங்களைக் குறிப்பனவே.

இந்த ஆறு ஆதாரங்களில் பழகி, அவனுடைய ஆறு இயல்புகளைப் பெற்று அவனை ஆறு பெயர்களால் போற்றுகின்றவர்கள், அவனிடமிருந்து மெய்ப்பொருளைப் பெறுவர். அவர்கள் கரவாகிய கல்விக்குப் பிறரிடம் இரக்க வேண்டுவதில்லை என்பது இப்பாட்டலால் குறிக்கப்பட்டது.


III சக்கரம்

''கரவாகிய கல்வி''யை நாம் எவ்வாறு பெறுகின்றோம் என்று ஆராயும்போது அது கீழ்வரும் முறையில் வருவதைக் காண்கின்றோம்:

எழுத்தறிவிக்கும் ஆசிரியரிடமிருந்து எழுத்துக்களின் ஒலிகளையும், வரிவடிவங்களையும் தெரிந்து கொண்டு, அவற்றாலான சொற்களையும் வாக்கியங்களையம் பயின்று அவற்றால் கருத்துக்களைப் புரிந்து கொள்கிறோம். அக்கருத்துக்களின் தொகுப்பே கல்வி எனப்படுகிறது. இக்கல்வியில், அநுபவமும் உண்மையும் கலவாத வரை இது ''கரவாகிய கல்வி''யாகவே இருக்கும்.

மெய்ப்பொருளைத் தருகின்ற மெய்ஞ்ஞானத்தைப் பெறுகின்ற முறை இதற்கு மாறானது. மேற்கூறிய எழுத்துக்களின் ஒலிகளும், வரிவடிவங்களும், சொற்களும், வாக்கியங்களும், பல்வேறு கருத்துக்களும், இறுதியில் எந்த ஒரு எழுத்தில் அடங்குகின்றனவோ அந்த ஓரெழுத்தை ஞானாசிரியர் உணர்த்தும்போது, அதில் அடங்கியுள்ள அனைத்தும் ஒரு நொடியில் பளிச்சென்று விளங்கி விடும். அந்த

ஒரு எழுத்தை இறைவன் ஈகுவதே பிரணவத்தை உபதேசிப்பதாகும். 'ஓ'ங்காரமகிய அந்த மெய்ப்பொருளைத் தரவேண்டுமென்று அருண கிரியார் இந்தப் பாடலில் வேண்டுவதால் இந்தப் பாடலின் மந்திர எழுத்து 'ஓ' ஆகின்றது. இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-46

எந்தாயும் எனக்கு அருள் தந்தையு(ம்) நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனை ஆள்!
கந்தா! கதிர் வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை' நாயகனே!

I பொழிப்புரை

எங்களுக்குத் தாயும், எனக்கு அருள் புரிகின்ற தந்தையும் ஆகிய நீ, மனக்கவலையைத் தீர்த்து என்னை ஆள்வாயாக! கந்தா! ஒளிவிடும் வேற்படையுடையவனே! அம்பிகையின் மகனே! குமரனே! மறைக்குத் தலைவனே!

II விளக்கவுரை

இந்தப்பாடல் உயர்ந்த நூற்பொருளை எளிதாக விளக்குகிறது. உருவத்தில் எளிய சொற்களைக் கொண்டதாகத் தோன்றினும், இது பொருள் செறிந்த பாடலாக உள்ளது.

(1) எந்தாயும் எனக்கருள் தந்தையு(ம்) நீ

அருணகிரியார் சென்ற பாடலில் சிவயோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். சிவயோகம் என்பது மெய்ப்பொருளோடு சேர்வதற்கு வழிசெய்யும் என்றும், அந்த மெய்ப்பொருளுக்கு இந்நாட்டவர் ''சிவம்'' என்னும் பெயரை வைத்துள்ளனர் என்றும் பார்த்தோம்.

சிவத்தோடு சேர்வதற்குச் சில படிமுறைகள் உள்ளன. அவை: 1) பாசப்பற்றுக்களிலிருந்து விலகி சிவயோகத்தில் ஈடுபடுதல்; 2) சிவயோகத்தால் வருகின்ற ஞானத்தைப் பெறுதல்; 3) ஞானத்தால் வருகின்ற முத்தியைப் பெறுதல். இவற்றுள் இரண்டாவது படிமுறையில் குறிக்கப்படும் ''ஞானம்''தான் இந்தப்பாடலில் ''தாய்'' எனப்பட்டது. ஞானம், தாய், அம்பிகை ஆகிய பெயர்கள் எல்லாம் ஒரே பொருளைக் குறிக்கின்றன.

''எந்தாய்'' என்பது எம்+தாய் என்று பிரியும். அம்பிகை எல்லா ஆன்மாக்களுக்கும் தாய் ஆனதனால் பன்மைச் சொல்லால் ''எம்'' தாய் என்றார்.

தாய், குழந்தையைத் தூய்மைப்படுத்தித் தந்தையிடம் கொடுப்பதைப் போல, அம்பிகை ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி சிவத்தினிடம் கொடுக்கும். சிவத்தொடு சேர்தல் என்பதும், முத்தி பெறுதல் என்பதும் ஒன்றேயாகும்.

பாசப்பற்றுகளிலிருந்து நீங்கிச் சிவயோகத்தில் பயிலும்வரை தான் ஆன்மா முயற்சி செய்ய வேண்டும். சிவயோகத்தின் பயனாக அம்பிகையிடம் சேர்ந்தபின் ஆன்ம முயற்சி தேவையில்லை. தன்னிடம் வந்துவிட்ட ஆன்மாவைத் தகப்பனிடம் சேர்க்கும் பொறுப்பைத் தாயாகிய அம்பிகையே ஏற்றுக்கொள்கின்றாள்.

இப்பெரும் பொறுப்பை ஏற்கின்ற தாய் என்பவளும், அவள் சேர்ப்பிக்கும் தந்தை என்பவரும் வெவ்வேறான இருவர் அல்லர். மேற்கூறியவாறு பொறுப்புகளைத் தனித்தனியே பிரித்துச் செயல்பட்டு, ஆன்மாக்களை உய்விக்கும் தாயும் தந்தையும் ஒருவரே ஆவார்.

தாயும் தந்தையும் ஆனவர்கள் குணமும், குணியும் போன்றவர்கள் என்பது தவறு. ஏனெனின் அவ்விருவரும் இரு வேறு மூலப்பொருள்கள் ஆவர். அவ்விருவரும் சேர்ந்தே இறைவனாகிய ஒரு முழுப்பொருளாவர். அவர்களுடைய நிலை இரண்டு பகுதிகளைக் கொண்ட ஒரு முழுக்கடலையை (அல்லது மொச்சையை)ப் போன்றதாகும்.

ஒருவனே ஆகிய இறைவன் ஏன் அவ்வாறு இருபகுதிகளாகப் பிரிகின்றார்? எனின். செயல்களைச் செய்வதற்கு ஒருவராய் இருந்தால் இயலாது. இறைவனுடைய நோக்கம் ஆன்மாக்களை மலத்தின் பிடியிலிருந்து பிரித்து முத்தி இன்பம் தருவதாகும். இப்பெரு நோக்கத்துக்கு, ஆன்மாக்கள் உடல் எடுத்து, தத்துவப் பொருள்களோடு பயின்று தெளிவுபெற வேண்டும். இதை நடத்துவதற்காகத் தானே இரு கூறுகளாகப் பிரிகின்றான். அதுவும், பால் வேறுபாட்டோடு ஆண்-பெண்ணாகப் பிரிகின்றான்.

அவன் பெண்ணாகிய பெருமானாய்ப் பிரிந்ததனால், ஆன்மாக்களிலும் அந்தப்பிரிவு உண்டாயிற்று. பாசப்பண்டங்கள் அத்தனைக்கும் மூலமான அணுக்கள் எல்லாவற்றுள்ளும், நேர்மின் ஆற்றலும் (Positive) எதிர்மின் ஆற்றலும் (Negative) கொண்ட அணுப்பகுதிகளாகப் பிரிந்தன. இயக்கத்துக்கு அப்பிரிவு இன்றியமையாததாகும். கவர்ச்சியும் ஈர்ப்பும் இப்பிரிவால் வருகின்றன. அதனால் ஆன்மாக்கள் பிறவி எடுக்கின்றன. அணுவும் அண்டங்களும் இயக்கம் கொள்கின்றன. இறைவனுடைய நோக்கம் செயல்படுகிறது.

இனி ''எனக்கு அருள் தந்தையும்'' என்னும் தொடரில் ''அருள்'' என்னும் சொல்லைத் ''தந்தைக்கு'' மட்டும் சேர்த்திருப்பதனால், ''தாய்''க்கு அருளும் தன்மை இல்லை என்பது தவறு. தாய் உருவமே அருளால் வந்ததனால், இந்த அமைப்புக்கு வேறு கருத்து உண்டென்பது புலனாகும். அது தந்தைக்கும் அருளும் இயல்பு உண்டென்பதும், அது தாயின் அருளுக்கு வேறுபட்டது என்பதும் ஆகும். ''அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ...'' என்னும் திருத்தாண்டகத்திலும் இவ்வாறே வந்துள் ளது. இத்தொடரில் அப்பனுக்கும் அம்மைக்கும் அன்புடைமை குறிக்கப்பெறவில்லை. ஏனென்றால் அவ்விருவருக்கும் இயல் பாகவே அன்புண்டு. மாமனுக்கும் மாமிக்கும் சம்பந்தத்தால் அன்பு வருவதனால் அது எடுத்துக்காட்டப்பட்டது. அதைப்போலவே அருணகிரியார் தாய்க்கு அருளும் இயல்பு உண்டென்பதை விதந்து கூறாமல், அதனினும் வேறுபட்ட முறையில் தந்தைக்கு அருளும் தன்மை உண்டென்பதனை எடுத்துக் காட்டுவதற்காக ''எனக்கு அருள் தந்தையு(ம்) நீ'' என்றார். இதில் மற்றொரு கருத்தும் உள்ளது. அதாவது இறைவனுடைய அருள்தான் தாய் என்று கூறுவது சரியன்று என்பது இதனால் தெளிவாக்கப்பட்டது. அதாவது இறைவனுடைய பண்பன்று இறைவி. தாய் என்பது வெறும் பண்பு அன்று. அது ஒரு தனி முதற்பொருளின் பிரிவு என்பது இதனால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அமைப்பினை மாணிக்கவாசகர் ஐயத்துக்கு இடமில்லாமல் ஒரு செய்யுளில் விளக்கியுள்ளார். அது வருமாறு:

''தோலும், துகிலும்; குழையும், சுருள் தோடும்;
பால் வெள்ளை நீறும், பசுஞ்சாந்தும்; பைங்கிளியும்,
சூலமும், தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ''

(திருக்கோத்தும்பி - 18)

இச்செய்யுளில், இரண்டு பிரிவுடைய ஒரு முழுமுதலின் இயல்புகள் (வர்ணனை) நன்கு விளக்கப்பட்டுள்ளன. சிவயோகம் பயின்று தாயிடம் சேர்ந்த ஆன்மா இங்குப் ''பைங்கிளி'' எனப்பட் டது. கிளி அம்பிகையின் திருக்கரத்தில் இருப்பதாகும். ''தொக்க வளை'' என்பது ஒன்றிற்கு மேற்பட்ட பலவாகிய தொகுப்பைக் குறிக்கும். இச்செய்யுளில் அச்சொல் எண்ணிலி (Infinite) ஆன்மாக்க ளைக் குறிக்கின்றது. இங்குத் ''தும்பி'' என்றது உள்ளத்தையாகும்.

தூய்மைப்படுத்தப்பட்ட ஆன்மாக்கள் தாய் வழியே சென்று தந்தையிடம் ஒடுங்குகின்றன. அதாவது முத்தி இன்பத்தில் அழுந்தி

விடுகின்றன. இனிமேல் தூய்மைபெற இருக்கின்ற ஆன்மாக்களும், மும்மலங்களும் அம்பிகையில் ஒடுங்குகின்றன.

மேற்கூறியவை சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் சிலவாம். இக்கொள்கைகளில் குருட்டுத்தனம் ஏதும் இல்லை. இவை மெய்ம்மைக்கும், பகுத்தறிவுக்கும் பொருத்தமானவையே.

மேற்கூறியவாறு, இறைவன் ஆண் பெண்ணாகப் பிரிந்து திருமணம் செய்து கொள்வதனால், ஆன்மாக்களும், திருமணம் செய்து கொள்கின்றன. அவன் திருநடம் ஆடினால் ஆன்மாக்கள் இயங்குகின்றன. அவன் யோகம் செய்தால் ஆன்மாக்களும் யோகம் செய்வர். (திருமணமே ஒரு சிறிய யோகம்தான். அந்த அடையாளத்தைக் கொண்டு பெரிய யோகத்துக்கு முயல வேண்டும்).

ஆக, அருணகிரியார், இறைவனைத் தாயும் தந்தையும் ஆக உள்ள நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் என்று வேண்டுகிறார்.

(2) சிந்தாகுலமானவை தீர்த்து எனை ஆள்

''சிந்தாகுலம்'' என்பது சிந்தையில் எழுகின்ற கவலையாகும். சிந்தை என்பதும் சித்தம் என்பதும் ஒன்றே. சித்தம், மாயையின் பிரிவுகளாகிய 36 தத்துவங்களுள் ஒன்று. இது அசுத்த மாயையைச் சேர்ந்தது. அசுத்த மாயையில் புறக்கருவிகள் 20ம் அகக்கருவிகள் - அதாவது அந்தக்கரணங்கள் 4ம் உள்ளன. அந்தக்கரணங்களாகிய 1) மனம், 2) புத்தி, 3) அகங்காரம், 4) சித்தம் என்பவற்றுள் சித்தம் முதன்மை பெற்று விளங்குகிறது. அதாவது 24 அசுத்த தத்துவங்களுள் சித்தமே மூலமாகவும் உயர்ந்ததாகவும் உள்ளது. இதனை உள்ளம் என்றும் கூறுவர்.

உள்ளத்தில்தான் கவலை என்பது தோன்றுகிறது. கவலை என்னும் சொல்லுக்குப் பிரிவு என்று பொருள். கவலை வேறு துக்கம் (அல்லது துன்பம்) வேறு. துக்கத்துக்குக் காரணமாய் இருப்பதுதான் கவலையாகும். நாம் நினைக்கின்ற நினைப்புகள் எவ்வளவு அதிகமாகப் பிரிவுபடுகின்றனவோ, அவ்வளவு கவலைகள் தோன்றி, அதன் காரணமாக துக்கம் மிகுகின்றது. எனவே துக்கம் குறைய வேண்டுமானால், நம்முடைய நினைப்புகள் பிரிவுபடாமல், ஒருமைப்படுதல் வேண்டும். அதாவது ஒருமைப்பாட்டில் இன்பமும், பிரிவுகளில் துன்பமும் மிகும்.

எண்ணங்கள் ஒருமைப்பட்டுக்கொண்டே போகப்போக, இறுதியில் அவை ஒரே ஒரு பொருளில் போய் முடியும். அப்பொருளுக்கு

ஈடு இணை மற்றொன்று இல்லை. அந்தப்பொருளோடு சேரும்போது ''சிந்தாகுலம்'' தீர்ந்துவிடும். அந்த ஒரு பொருள்தான் அம்மையும் அப்பனும் ஆகிப் பின் ஒருமையில் விளிக்கப்பட்ட ''நீ'' ஆகிய இறைவனாகும். எனவே சிந்தாகுலம் தீர வேண்டுமானால் இறைவனை நாட வேண்டும்.

இக்கருத்தையே திருவள்ளுவர் ''தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' (தி.கு.7) என்றார். திருவள்ளுவர் கூறிய இந்த முடிவுக்கு மேல், வேறு ஒருவர் மன்பதைக்கு வழிகாட்டுவது என்பது இயலாது. மக்கள் அனைவரும் கவலையற்று இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனரே அன்றி, அதற்கான வழியை, அதாவது திருவள்ளுவர் காட்டிய வழியைப் பின்பற்றுவதில்லை. யாரிடம் போனால் கவலை மாறும் என்று அவர் சொன்னாரோ, அவரிடம் போகாமல் அவரைப் பற்றிய எண்ணமும் இல்லாமல், வேறு ஏதேதோ செய்துகொண்டு கவலையிலேயே உழல்கின்றனர்.

இனி, இறைவனைச் சார்ந்து, சிந்தாகுலம் தீர்க்கப்பெற்ற அடியார்களுக்கும், ஏன்றவினை (பிராரப்தம்) தீரும்வரை உடல் இருந்து கொண்டே இருக்கும். அது இருக்கும் வரையும் பழக்கம் காரணமாக அவர்கள் மாயைப் பொருள்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும். அவ்வாறு ஈடுபடாமல் காத்துக்கொள்வதற்கு அம்மையப்பராகிய இறைவனின் துணை வேண்டி இருக்கின்றது. அத்துணையையே இங்கு அருணகிரியார் வேண்டுகின்றார். மாயையின் கவர்ச்சி மிக வலிவானது. அது மூத்த அடியார்களையும் தாக்குகிறது. அப்பர் பெருமானையும் தாக்கியதாகத் தெரியவருகிறது. இறையருளின் வல்லமையால் அவர் அவற்றுக்குப் பணியவில்லை. அருணகிரியாரும் இப்பாடலில் அந்த மயக்க உணர்வு வராதபடி காத்தருள முருகனை வேண்டுகிறார்.

சிந்தாகுலத்தைத் தீர்த்த பின்னரும், ''எனை ஆள்'' என்று இறுதியாக ஒரு வேண்டுகோளையும் விடுக்கின்றார். ஞானத்தையும் முத்தியையும் பெற்ற பிறகு, அதற்கு மேலும் ''எனை ஆள்'' என்று கூறியதன் காரணத்தைக் கவனிப்போமாக:

ஒரு செல்வந்தருக்கு உலகியலில் துய்க்க வேண்டிய பொருள்கள் எல்லாம் குறைவின்றி அமைந்து விடுகின்றன. அவர் எந்தத் தடையும் இன்றித் துய்த்துக்கொண்டு இருக்கலாம். ஆனால் அவர் துய்ப்பதை விடுத்து இன்னமும் கவலைப்பட்டுக்கொண்டே இருப்பார். இதுதான் ஆன்ம இயல்பு. இது பழக்கத்தின் காரணமாக வருகின்ற ஒரு அவல நிலையாகும். இந்நிலை பாசத்துக்கு அடிமைப்பட்டுப் பழகியதனால் வந்ததாகும்.

இதே நிலை, முத்தி இன்பம் எதிரிலிருக்கும்போதும் ஆன்மாவுக்கு வருகின்றது. அந்த மாட்டாமையைப் போக்கி அருளும்படியும், தம்மை ஆண்டு இன்பத்தைத் துய்க்கும்படிச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறார். முத்தி நிலையில் ஆன்மா சிவமாகவே மாறிவிடுகின்றது என்று சிலர் கூறுவர். அது சரியன்று. **எந்தக்காலத்திலும் ஆன்மா சிவமாக முடியாது. ஆன்மா எப்பொழுதும் அடிமை நிலையிலும் இறைவன் ஆண்டான் நிலையிலுமே இருப்பர்.** அடிமை நிலை முழுமையானபோதுதான், இன்பத்தைத் துய்க்கும் உரிமை உண்டாகின்றது. அதனாலேயே ''எனை ஆள்க'' என்று அருணகிரியார் கூறியுள்ளார்.

(1) கந்தா, கதிர்வேலவனே, உமையாள் மைந்தா, குமரா, மறைநாயகனே!

''கந்தா'' என்பது பற்றுக்கோடானவனே என்று பொருள்படும். பாசப்பொருள்களைப் பற்றிக்கொண்டிருந்த ஆன்மா, ஞானத்தையும் முத்தியையும் அடையும் பொருட்டுப் பற்றக்கூடியவனாகிய முருகனே என்று பொருளாகும். பாசப்பொருள்கள் புறத்தில் இருப்பவை. ஞானம் அகத்தில் இருப்பது. கந்தன் ஆன்மாக்களை அகத்தே செலுத்துபவனாவான். எனவே ஞானத்தையும் முத்தியையும் நாடுகின்ற அருணகிரியார் முருகனைக் ''கந்தா'' என்று அழைத்தார்.

''கதிர் வேலவனே'' என்பது ஒளிபொருந்திய வேலை உடையவன் என்று பொருள்படும். இருளைப் போக்குவது ஒளி. சூரபதுமனுடைய ஆணவத்தைப் போக்கியது ஞானமாகிய வேலாகும். ஆணவம் இருள் சூழ்ந்ததனால், அதனைப் போக்கிய வேல் ஒளி பொருந்தியதாகிறது. எனவே கதிர்வேல் ஆயிற்று (கதிர்=ஒளி). அதனை உடைய முருகன் ''கதிர்வேலவனே'' எனப்பட்டான்.

பொதுவாக, ஒரு பெண் மிகவும் வீரமும், முனைப்பும் கொண்டு ஒரு வேலையைச் செய்தால், அவளை ஆண் என்று உருவகித்துச் சொல்லுவதுண்டு. இங்கு அம்பிகையின் சத்தியாகிய ஞானம் சூரபதுமனாகிய ஆணவத்தை வீறுகொண்டு அழித்ததனால், அச்சத்தி ஆணாக உருவகிக்கப்பட்டு முருகன் எனப்பட்டது. அதாவது முருகன் அம்பிகையின் கூறு ஆகும். எனவே அவன் ''உமையாள் மைந்தன்'' எனப்பட்டான். (''மைந்து'' என்னும் சொல்லுக்கு வலிமை என்றும், அழகு என்றும் பொருளாகும். முருகன் வலிமையையும் அழகையும் உடையவனாவான்.)

குமரன் என்னும் சொல்லுக்கு இளமை உடையவன் என்று பொருள். முருகன் இளையவனாதலால் ''குமரா'' எனப்பட்டான்.

அடுத்து, மறை என்பது கருத்துக்களை மறைவாகக் கொண்டுள்ள சொற்களை உடையதாகும். அத்தகைய சொற்களை உடைய நூலைப் பலதிறப்பட்டவரும் பயின்று, தத்தம் தகுதிக்கும் திறத்துக்கும் ஏற்பப் பொருள் காண்பர். அந்நூல் ''மறை'' அல்லது ''வேதம்'' எனப்படும்.

மறையைப் பலகாலும் பயின்றபின் அதில் தெளிவு காணமுடியாமையால், சிலர் தெளிவை அவாவி நிற்பர். அத்தகையோர்க்குத் தெளிவைத் தருவது ஆகமம் ஆகும். ஆகமத்துக்கு மிகவும் அண்மையில் இருப்பவன் இறைவன். மறைக்கு மேலான ஆகமத்தில் விளங்கித் தெரிவதனால் அவன் மறைக்குத் தலைவன் ஆனான். எனவே ''மறை நாயகனே'' எனப்பட்டான். பெரிய புராணத்திலும் அவன் அருமறைச் சிரத்தின்மேல் இருப்பவன் என்று குறிக்கப்பட்டுள்ளான். சிரத்தின் மேல் மணிமுடி இருப்பதுபோல அவன் மறைக்கு அப்பாற்பட்ட நாயகன் ஆகின்றான்.

ஆக, முத்தியைப் பெறுவதற்குப் பற்றுக்கோடாய் உள்ள கந்தனை, ஆணவத்தை அழிக்கின்ற ஒளிபொருந்திய வேலை உடையவனை, உமையின் கூறாகிய முருகனை, இளமை உடைய குமரனை, மறைகொண்டு தெளிய முடியாத மறைக்கு நாயகனை விளித்துத் தம் சிந்தாகுலத்தைத் தீர்க்கும்படியும், அடிமையின் மாட்டாமையைக் கருதி, ஆண்டு, முத்தி இன்பத்தைத் துய்ப்பிக்கச் செய்யும்படியும் இப்பாடலில் அருணகிரியார் வேண்டுகிறார்.

III சக்கரம்

இந்தப்பாடலில், ஞானத்தாய் ஆகிய அம்பிகை, கவலையைப் போக்கி, முத்தியில் சேர்ப்பிக்கும் திறம் கூறப்பட்டுள்ளது. தாயைக் குறிக்கின்ற எழுத்து ''ஔ'' காரம் ஆகும். எனவே இந்தப் பாடலின் மந்திர எழுத்து ''ஔ'' ஆகின்றது. இந்தப் பாடலின் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-47

ஆறாறையு(ம்) நீத்து அதன் மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறு உளதோ?!
சீறா வரு சூர் சிதைவித்து இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே!

I பொழிப்புரை

(தத்துவப் பொருள்கள்) முப்பத்தாறையும் கடந்து அதன் பயனாகப் பெறக்கூடிய (ஞானமாகிய) மேல் நிலையை அடியேன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றதோ?! சீறிவருகின்ற சூரனை அழித்துத் தேவர்கள் பக்கம் நின்று உலகத்தைக் காத்தவனே (முருகனே)!

II விளக்கவுரை

இறைவனும் ஒரு வேலை செய்கின்றான். அது ஆன்மாக்களை வளர்த்து ஈடேற்றுவதாகும். அந்த வேலையை அவன் எவ்வாறு செய்கின்றான் என்பது இந்தப் பாடலின் முதல் இரண்டு அடிகளில் விளக்கப்பட்டுள்ளது. பின்னிரண்டு அடிகளில் குறிப்பாகச் சூரனை எவ்வாறு ஈடேற்றினான் என்பது விளக்கப்பட்டுள்ளது.

(1) ஆறாறையு(ம்) நீத்து அதன்மேல் நிலையைப் பேறா அடியேன் பெறுமாறு உளதோ?!

அருணகிரியார் இந்தச் செய்யுளிலும் முருகனை விளித்து ஒரு கேள்வி கேட்கின்றார். அது ''அடியேன் செய்கின்ற தவ முயற்சியின் பயனாகப் பெரிய நிலையைப் பெறக்கூடிய பாக்கியம் எனக்கு இருக்கின்றதா?'' என்பதாகும்.

இச்செய்யுளில் ''ஆறாறு'' என்பது,

1) ஆறுடன் ஆறைப் பெருக்கினால் வருகின்ற 36ஐயும்,

2) ஆறுடன் ஆறைக் கூட்டினால் வருகின்ற 12ஐயும்,

3) ஆறு வழிகளாகிய அறுசமயங்களையும் குறிப்பதாக உள் ளது. இவற்றின் விவரங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

I. 36 என்னும் எண்ணிக்கை மாயையாலான தத்துவப் பொருள்களைக் குறிக்கின்றது. அவை (i) ஆன்மதத்துவங்கள்,

(ii) வித்யாதத்துவங்கள், (iii) சிவதத்துவங்கள் என மூன்று பிரிவுகளாக உள்ளன. இத்தத்துவங்களைக் கடந்த மேல் நிலை தமக்குக் கிட்டுமோ என்பது அவர் கேள்வி. தத்துவங்களைக் கடத்தல் என்பது அவற்றின் பயனைப் பெற்றுக்கொண்டு, விட்டு விட்டு, மேலே செல்லுவதாகும்.

இத்தத்துவங்களைப்பற்றி முன்னமே (பாடல் 5ல்) பார்த்துள்ளோம். என்றாலும், அவற்றைக்கடப்பது பற்றிப் பேசப்படுவதனால், அவற்றின் விளக்கங்களை மீண்டும் ஒருமுறை இங்குக் காண்போமாக:

(i) ஆன்மதத்துவங்கள்

இவை மாயையின் கீழ்ப்பகுதியிலுள்ள அழுக்குப் பகுதியைச் சேர்ந்தவை. இவற்றுக்கு அசுத்தமாயை என்றும் பெயர் உண்டு. இவற்றின் விரிவுகள் வருமாறு:

அ) ஐம்பூதங்கள் : மண், நீர், தீ, காற்று, வானம்	5
ஆ) புறக்கருவிகள் : வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்	5
இ) அறிகருவிகள் : மெய், வாய், கண், மூக்கு, செவி	5
ஈ) தன்மாத்திகைகள் : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்	5
உ) அந்தக்கரணங்கள் : மனம், புத்தி, அகங்காரம், சித்தம்	4
ஆக	24

இந்த இருபத்து நான்கு கருவிகளோடும் நாம் அன்றாடம் பழகி வருகின்றோம். இவற்றுள் அந்தக்கரணங்கள் மட்டும் உடம்புக்குள்ளே (அகத்தில்) உள்ளன. அவற்றை நாம் கண்ணால் காண முடியாது. என்றாலும் அவை இருக்கின்றன என்பதை உணர்கின்றோம். இவை நன்கு மலர்ச்சி பெற்று விட்டால் வாழ்க்கை சிறப்பாக அமைகின்றது. இவை மலர வேண்டுமானால் மற்ற இருபது தத்துவங்களையும் நாம் தக்கபடிக் கையாள வேண்டும். இவற்றுடன் நன்கு பழகி, அறிவும், உணர்வும் கிளரப் பெற்றுச் சிறப்புற்று மேல்படிகளுக்குச் செல்வதற்காகவே, நமக்குப் பிறப்பும், உடலும், உலகமும் கொடுக்கப்பட்டுள்ளன.

மனதை மலரவைப்பதற்காக நாம் இளமையில் அதாவது 20 அல்லது 25 ஆண்டுகள்வரை கல்வி கற்கின்றோம். என்றாலும் இன்று கற்பிக்கப்படும் கல்வியால் மனம் முழுவதும் மலர்ச்சி பெறுவதில்லை அது முழுமையாக மலர்ந்தால், நினைக்கின்ற நல்ல காரியங்கள் நினைத்தபடி நடக்கும். சரி என்று பட்டதை ஏற்று

அதன் வழியே நிற்க முடியும். மனம் மலராததனால் அதற்கு மேற்பட்ட மூன்று அந்தக்கரணங்களும் மலராமலே இருக்கின்றன. இதற்கு அடிப்படைக்காரணம் என்னவென்று ஆராயும்போது, இன்றைய கல்வி புறநாட்டத்திலேயே நின்று விடுகின்றது என்பதும் அகநாட்டம் பற்றிக் கற்பிப்பதில்லை என்பதும் தெரிகின்றன. அது வெறும் ஏட்டுப்படிப்போடு நின்று விடுகின்றது. அதனால் தீமையை எதிர்க்க முடியவில்லை. அச்சமின்றி வாழ முடியவில்லை. புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவை மலராமையினால், முறையே, நன்மை தீமைகளை உறுதிப்படுத்த முடியாமல் போகின்றது; நன்மை செய்வதற்கான எழுச்சி கொள்ள முடியவில்லை; ஆழ்ந்து சிந்தித்து தேனிப்பில் ஈடுபட முடியவில்லை.

(ii) வித்யாதத்துவங்கள்

மேற்கூறிய 24 ஆன்மதத்துவங்கள் மலர்ந்தால் அவற்றுக்கு அடுத்துள்ள வித்யாதத்துவங்கள் மலர்ச்சி பெறும். அவை 1) கலை, 2) காலம், 3) நியதி, 4) அராகம், 5) வித்தை, 6) புருடன், 7) பிரகிருதிமாயை என்று ஏழு பிரிவுகளாக உள்ளன.

இவற்றுள் 1) கலாதத்துவம் மலர்ந்தால் கலை உணர்ச்சி வரும் 2) காலதத்துவம் மலர்ந்தால் காலத்தோடு பொருந்த நடக்க முடியும், 3) நியதி மலர்ந்தால் எதையும் ஒழுங்காய்ச் செய்ய முடியும். 4) அராகம் மலர்ந்தால், எடுத்துக்கொண்ட நல்ல செயலை விருப்பத்தோடு செய்ய முடியும். 5) வித்யாதத்துவம் மலர்ந்தால் அறிவாய்ச் செய்ய முடியும். 6) புருஷ தத்துவம் மலர்ந்தால் அதிகாரத்தோடு செய்ய முடியும். 7) பிரக்ருதிமாயை மலர்ந்தால் நம்மைச் சுற்றியுள்ள சூழலை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இவை ஏழும் மலர்ந்தபின்னரே யோகம் நன்கு அமையும்.

வித்யாதத்துவங்களுக்கும் மேம்பட்ட சிவ தத்துவங்கள் 5 உள்ளன. அவை 1) நாதம் 2) விந்து 3) சாதாக்கியம், 4) மகேஸ்வரம் 5) சுத்தவித்தை என்பன. இவற்றுள் 1) நாத தத்துவம் மலர்ந்தால் ஒலியை நன்கு கையாளுவோம். 2) விந்து தத்துவம் மலர்ந்தால் ஒளியை நன்கு கையாளுவோம். 3) சாதாக்கியம் மலர்ந்தால் ஒலி, ஒளி ஆகிய இரண்டின் சேர்க்கையால் ஆன எழுத்தை நன்கு கையாள முடியும். அதனால் நல்ல எழுத்தாளராகலாம். (வேதம் ''எழுதாக்கிளவி'' எனப்பட்டாலும், அது, சாதாக்கிய தத்துவம் கைவந்தவர்களால் இயற்றப்பட்டதேயாகும். அது எழுத்துக்கு எட்டும் அமைப்பு உடையதே). 4) மகேச்சுரம் மலர்ந்தால் எழுத்தைப் பயன்படுத்தும் அதிகாரம் வரும். 5) சுத்தவித்தை மலர்ந்தால் எழுத்தால் வரக்கூடிய ஞானம் வரும்.

மேற்கூறிய சிவதத்துவங்கள் ஐந்தும் மலரும்போது ஞான யோகம் கைவரும். இதுவே பதமுத்தியைத் தருவதாகும். இந்த ஐந்து தத்துவங்களைப்பற்றிப் படிக்கின்றோம். ஆனால் அவை இருப்பது இப்பொழுது நமக்குத் தெரியவில்லை. அவற்றை எதிரில் காணும்படி (பிரத்யக்ஷமாக) நேரும்போது மேற்கூறிய பலன்கள் உண்டாகும்.

இவ்வாறு 36 தத்துவங்களையும் பயன்படுத்திப் பிறகு அவற்றை விட்டு விலகி அவற்றுக்கும் மேலான ஞான நிலையையும், வீட்டு நிலையையும் அடைய வேண்டும். அந்தப் பெரிய பேறு எனக்குக் கிட்டுமோ? என்று அருணகிரியார் கேட்கின்றார்.

II அடுத்தது 12 என்னும் எண்ணிக்கை ஆகும். இது ஆறு கீழ்-ஆதாரங்களையும் ஆறு மேல்-ஆதாரங்களையும் குறிக்கின்றது. ஆதாரங்கள் வருமாறு: 1) மூலாதாரம், 2) சுவாதிட்டானம், 3) மணி பூரகம், 4) அநாகதம், 5) விசுத்தி 6) ஆக்ஞை. இவை முறையே 1) குதத்துக்கும், குறிக்கும் இடையிலும், 2) மூலாதாரத்துக்கு இரண்டு விரல் அளவு மேல் பகுதியிலும், 3) நாபியிலும், 4) இதயத்திலும், 5) கண்டத்திலும் (கழுத்து) 6) புருவ நடுவிலும் உள்ளன. இவற்றுக் குக் ''கீழ் ஆதாரங்கள்'' என்று பெயர். கீழ்-ஆதாரங்கள் முடிவு பெறுகின்ற புருவ நடுவிலிருந்து உச்சிவரை இவை மீண்டும் வருகின்றன. உச்சியில் முடிகின்ற இந்த ஆறு ஆதாரங்கள் ''மேல்-ஆதாரங்கள்'' எனப்படும். தேர்ச்சி பெற்ற ஆன்மாக்கள் இப்பன்னிரண்டு ஆதாரங்களிலும் உலவிப் பல அரிய அநுபவங்க ளைப் பெறுவர். உச்சிக்கு மேலும் நிராதார நிலை என்றும், துரியாதீதம் என்றும், பரஞானவெளி என்றும், வீட்டுநிலை என்றும் உயர்ந்து செல்கின்றன. அந்த உயர்ந்த நிலைகளை அடையும் பாக்கியம் எனக்கு உண்டோ என்று கேட்கின்றார்.

ஆதாரங்களில் உலவுதல், யோகப்பயிற்சியைச் சேர்ந்ததாகும். யோகத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் தாம் கண்ட சில உண்மைகளை நமக்காகச் சொல்லி வைத்திருக்கிறார்கள்: காட்டாக நம் உடம்பில் 72,000 நாடிகள் உள்ளன என்றார்கள். இவர்களே தத்துவங்கள் 36 என்றும் சொன்னார்கள். இவற்றை எல்லாம் அவர்கள் எப்படிக் கண்டுபிடித்தார்கள்? நாம் எப்படி அவற்றை நம்புவது? நம்பலாமா வேண்டாமா என்பதற்கு நாமே முயன்று சரிபார்க்க வேண்டும். சரிபார்க்கும்வரை அவற்றை நம்புவது நல்லது.

நம்பலாமா, வேண்டாமா என்பதை உறுதி செய்வதற்கு ஒரு மாதிரி தேர்வைச் செய்து பார்க்கலாம்: அது - இறந்து போகிறவர் களுக்குப் பரு உடம்பிலிருந்து நுண்ணுடம்பு தானே பிரிந்து

போகிறது. யோகிகளுக்கு அவர்கள் விரும்பினால் பிரிவதும், மீண்டும் வந்து கூடுவதும் செய்யும். இதனால் அவர்களுக்கு ஏதோ சிறப்புச் சக்திகள் வந்துள்ளன என்பது புலப்படும். அவர்கள் யோகம் செய்யும்போது அவர்களுக்கு ஞானத்தோடு சம்பந்தம் உண்டாகின் றது. ஞானம் பெற்றவர்கள் மனித அறிவுக்கு மேம்பட்ட உண்மை களை உணர்கின்றனர். நாமே சிறிது நேரம் அமைதியாக இருந்தாலே ஒரு தெளிவு பிறக்கின்றது. ஆறு ஆதாரங்களிலும் படிந்து தெளிந்தால் எவ்வளவோ செய்திகளைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் நாம் முயன்று பார்ப்பதில்லை.

எனவே யோகத்தைத் தொடங்கிப் பார்க்க வேண்டும். ஒன்றை உற்று உற்றுக் கவனிப்பதே யோகம்தான். ''நெற்றிக்கு நேரே புருவத்திடை வெளி உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம் பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம் சிற்றம்பலம் என்று தேர்ந்து கொண்டேனே'' (2724) என்னும் திருமந்திரச் செய்யுளில் புருவநடு வில் உற்றுப்பார்க்க வேண்டும் என்று வந்துள்ளது. இதில் உற்று என்னும் சொல் இரண்டுமுறை வந்துள்ளது. அவற்றுள் முதல் ''உற்று''- கீழ் ஆறு ஆதாரங்களைப் பார்ப்பதற்கும் அடுத்த ''உற்று'' என்னும் சொல், மேல் ஆறு ஆதாரங்களையும் பார்க்க வேண்டும் என்பதற்கும் வந்துள்ளன. மற்றும் ''உற்றுற்று'' என்னும் தொடர், இடையீடு இன்றித் தொடர்ந்து பார்க்க வேண்டும் என்னும் கருத்தையும் தெரிவிக்கின்றது. அதாவது நெடுங்காலம் ஒன்றையே உற்றுப்பார்ப்பதனால் ஒரு சத்தி பிறக்கின்றது. பற்றுக்குப்பற்றாய் இறைவன் பருப்பொருளில் தங்கும்போது சூக்குமமான ஒளியாய் இருப்பான். அந்த ஒளியையும் அவன் உணர்வையும், நாளுக்கு நாள் பெருக்கிக்கொண்டே போனால் யோகத்தின் முடிவாகிய ஞானத்தை அடையமுடியும். அந்த ஞானத்தை அடைந்தவர்கள், பல நுட்பமான செய்திகளைத் தாம் கண்டவாறே நமக்காகச் சொல்லி வைத்துள்ளனர். அவர்களை நம்பி அவர்கள் கூறியவற்றை ஏற்றுக் கொண்டு நடப்பதனால் நமக்கு நன்மை விளையுமேயன்றித் தீமை ஏதும் வராது. இங்கு அருணகிரியார் அந்த ஞான நிலையை அடையும் பேறு தமக்குக் கிட்டுமோ என்று கேட்கின்றார்.

III. அடுத்து ஆறு ஆறு என்பது ஆறு வழிகளையும் குறிக்கும் என்று பார்த்தோம். அந்த ஆறு என்பது ஆறு சமயங்களைக் குறிக்கும். ''சமயம்'' என்னும் சொல்லுக்கு ''நேரம்'' என்று பொருளாகும். நம் அன்றாட வாழ்க்கையில், ஒவ்வொரு நேரத்தில் நமக்கு ஒவ்வொரு விதமான உணர்வு இருந்து வருகின்றது. அவற்றுள் இறைவனைப்பற்றி எண்ணும் நேரம் ''சமயம்'' எனப்பட்

டது. மக்கள் எல்லோரும் இறைவனைப்பற்றி எண்ணுகின்ற நேரமும், எண்ணும்போது தோன்றுகின்ற கருத்துக்களும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்; அவை பலவாக இருப்பதற்குக் காரணமென்ன என்று தோன்றும். ஒரே ஆன்மாவுக்கும், ஒரு நேரத்தில் இறைவனைப் பற்றிக் கொண்ட முடிவு சிலகாலம் கழித்துத் தவறு என்று தோன்றுகிறது. பலவேறு நாடுகளில், பலவேறு தட்பவெப்ப நிலைகளிலும், சூழல்களிலும் அவரவர்கள் மேற்கொள்கின்ற முடிவுகள் வெவ்வேறாக இருக்குமாதலால், சமயங்கள் பலவாக அமைந்துள்ளன. சிலர் இறைவன் என்று ஒருவர் இல்லை என்றும் கருதுகின்றனர். அவ்வாறு இறைவன் இல்லை என்னும் சமயங்களுக்குப் ''புறச்சமயங்கள்'' என்று பெயர். இறைவன் அல்லாதவனை இறைவன் என்று கருதுகின்ற சமயங்களும் ''புறச்சமயங்கள்'' எனப்பட்டன. இறைவனை ஏற்றுக்கொண்டு, ஆனால் ஒழுகலாறு சரிவர இல்லாத சமயங்கள் ''அகப்புறச்சமயங்கள்'' ஆயின. ஒழுகலாறும் சரிவர இருந்து இறைவனை ஏற்பவர் அகச்சமயத்தவர் ஆயினர். அகச்சமயத்தவரே தெய்வத்துக்குச் சொந்தமானவர் ஆவர்.

புறச்சமயங்களிலும் யோகிகள் உள்ளனர். அவர்கள் தெய்வ உணர்வு இல்லாமலே யோகம் செய்வர். அவர்கள், முயற்சியே இல்லாத, பொதுமக்களை விட உயர்ந்தவரே.

மேற்கூறிய அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் ஆறு உட்பிரிவுகள் உள்ளன. இந்த ஆறு சமயத்தவர்களும் வெவ்வேறு வழியே சென்று அவரவர்களுக்கு உரிய இடத்தை எட்டுவர். அவை யாவும் வழிகளேயன்றி முடிந்த இடங்கள் அல்ல. அந்த ஆறு வழிகளிலேயே தங்கிவிடக்கூடாது. துறையைப் போய்ச்சேர வேண்டும்.

நாம் ஒரு சமய நெறியில் போய்க்கொண்டு இருக்கின்றோம் என்னும் உணர்வு இருக்கும்வரை துறையைச் சேர்ந்ததாக ஆகாது. தம்முடைய சமயம் இன்னது என்று பிரித்துக் காண இயலாத அதாவது ''தான்'' என்னும் உணர்வு நீங்கிய இடமே உயர்ந்த ஞான நிலையாகும். இந்த நிலையை மாணிக்கவாசகர் திருத்தெள்ளேணத்தில் விவரித்துள்ளார். அது வருமாறு: ''ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு, என் உள்ளமும் போய், நான் கெட்ட வாபாடித்தெள்ளேணம் கொட்டாமோ'' (18). அந்த ''நான் கெட்ட'' நிலையையே அருணகிரியார் இங்குக் குறிப்பிடுகின்றார். அந்த ''மேல் நிலை'' தமக்குக் கிட்டுமோ என்று கேட்கின்றார். அவர் ''பெறுமாறு உளதோ'' என்று கேட்பதில் ஒரு தீவிரம் புலப்படுகின்றது. அதாவது அந்த மேல் நிலை கிடைத்துவிட்டால், இந்தப்

பிறவியோடு, இனிப் பிறவாமல், இயல்பான நிலையை அடைந்து விடலாம்; அடைந்துவிட வேண்டும் என்பதாகும்.

''பேறாக'' என்பது ''பேறா'' என்று வந்துள்ளது (பேறு=பாக்கியம்).

(2) சீறா வருசூர் சிதைவித்து இமையோர் கூறா உலகம் குளிர்வித்தவனே

''சீறா'' என்பது ''சீறா நின்ற'' ஆகும். அதாவது சீறிக்கொண்டு வருகின்ற அல்லது கோபித்துக் கொண்டு வருகின்ற என்று பொருள்படும். சூரன் மிகவும் கோபம் உடையவனாய் இருந்தான். கோபத்தோடு அவன் ஆற்றல் வாய்ந்தவனாகவும் இருந்தான். அவனுக்கு ஏதேனும் தடை நேர்ந்தால் உடனே சீறுவான்.

சீறுவது ஒரு பெரிய குறைபாடாகும். அந்தக்குறை உடைவர்கள் அழிவதற்கு அதுவே காரணமாகி விடுகிறது. சூரனின் அழிவுக்கும் அதுவே காரணமாய் இருந்தது. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், அழிவுக்குக் காரணம் அவரவர் குறைபாடே என்பது நன்கு விளங்கும். இந்த நாட்டை மாற்றார் வந்து கௌவிக் கொண்டதும் அவ்வாறே.

ஒருவரிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும், கோபம் வருமானால் அக்குணங்கள் எல்லாம் கெட்டுப்போம். அதுவும் நொடிப் பொழுதில் கெட்டுப்போம். கோபம் அத்தகையது. (காமமும் அழிக்கும் என்றாலும் அது உடனே அழிப்பதில்லை. மெதுவாகக் காலம் தாழ்த்தி அழிக்கும்). கோபம் தருகின்ற உடனடியான விளைவை விளக்குவதற்குத் திருவள்ளுவர் ஒரு உவமையைக் கூறியுள்ளார். உவமை கூறுவதில் அவர் ஒரு புலி. அவருக்கு மேல் யாரும் உவமை கூறமுடியாது. அவருக்கு நிகர் அவரேயாவார். அவர் கூறிய திருக்குறள் வருமாறு: ''சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு நிலத்தறைந்தான் கை பிழையாதற்று'' (307). இதில் அறைதலுக்கும் கை நோவதற்கும் கால இடைவெளி இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

மேற்கூறிய தீய இயல்பாகிய கோபத்தோடு சீறிவரும் பழக்கமும் உடையவனாதலால் சூரன் அஞ்சத்தக்கவனாய் இருந்தான். ''சூர்'' என்றும் சொல்லுக்கு அச்சம் தருபவன் என்று பொருள். யார் யார் அஞ்சத்தக்கவர் என்று பார்க்கும்போது முரடர், தீயோர் என்று பல வகையினரைச் சொல்லலாம். அவர்களை ஒரே சொல்லில் சொல்ல வேண்டுமானால் ''தான்'' என்னும் நினைப்பும், முனைப்பும்

உடையவர் என்று சொல்லலாம். எல்லாக் கெட்ட செயல்களுக்கும் காரணமாய் இருப்பது அந்தத் ''தான்'' என்னும் உணர்வேயாகும். எனவே அந்த உணர்வை உடையவர்களே பெரிதும் அஞ்சத்தக்கவ ராவர். அந்த உணர்வுக்குக் ''கர்வம்'' என்றும் பெயருண்டு. அது பல கிளைகளாக முளைத்துக்கொண்டே இருக்கும். அதற்குக் காரணமாய் இருப்பது ஆணவமாகும். ஆணவம், மலத்தில் ஒரு பிரிவாக உள்ளது என்று சிவஞானபோதம் கூறுகின்றது. அது மலத்தின் மற்றொரு பிரிவாகிய வினையை விளைவிப்பதாகும்.

''தான்'' என்னும் உணர்வு நமக்கு எவ்வளவுக்கெவ்வளவு குறைகின்றதோ, அந்த அளவுக்கு வினை குறையும். உலகமும் சாதகமாய் மாறும். சூரனுக்குத் ''தான்'' என்னும் உணர்வு மிகுதியாய் இருந்தது.

''தான்'' என்னும் உணர்வு தேவர்களிடமும் இருந்தது. அதை அடக்குவதற்கு இறைவன் சூரனைப் பயன்படுத்திக் கொண்டான்.

மனிதர்களுக்கும், இத் ''தான்'' என்னும் உணர்வு வருகின்றது. அது இருந்தால் உலகியல் வாழ்வு செம்மையாய் அமையாது. சொத்துச் சேர்ப்பதற்கும் அது இருக்கக்கூடாது. ''தான்'' கெடாமல் எந்த வழியில் முயன்றாலும் செல்வம் சேராது. சாதாரண செல்வத்துக்கே அடக்கம் வேண்டுமானால் அதனினும் உயர்ந்த கலைத்திறம், அருள் திறம் ஆகியவற்றுக்கு எவ்வளவு அடக்கம் தேவைப்படும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இத் ''தான்'' என்னும் உணர்வு போவதற்கு ஒரே வழிதான் இருக்கின்றது. அது பணிந்து தொண்டு செய்வதேயாகும். பணிந்து செய்யப்படும் தொண்டு ''பணி'' என்றே அழைக்கப்பட்டது. எனவே ''தான்'' கெடுவதற்குப் ''பணி'' செய்வதை விட வேறு வழியே இல்லை. அதனாலேயே அப்பர் பிரான் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்றார். இத்தொடரிலுள்ள ஒவ்வொரு சொல்லும் உள்ளொளி நிறைந்து விளங்குகிறது.

ஆக, சூரன் வரலாற்றில், அடக்கம் இல்லாதபோது, வினை வளர்கிறது என்பதும், ஒருவருடைய அடங்காச் செயலை அடக்குவ தற்கு இறைவன் மற்றொருவரைப் பயன்படுத்துகிறான் என்பதும் தெரிய வருகிறது.

இறைவன் யாரையும் கெடுப்பவன் அல்லன். அவன் யாரையும் அழிப்பதென்பது இல்லை. அவன் உருவத்தாலும் உள்ளத்தாலும் அழகுடையவன். அதனாலேயே ''முருகன்'' எனப்பட்டான். (முருகு= அழகு) ஆனால் இந்தப் பாடலில் ''சிதைவித்''தான் என்று

வருகின்றது. சிதைவித்தல் என்பது சூரனுடைய தீவினை அவனைத் தாக்கும்படிச் செய்தான் என்பதேயாகும். அவரவர் வினையே அவரவரை அழிக்கும்.


சூரன் அழிந்ததனால் தேவர்கள் வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்வு மலர்ந்ததற்குக் காரணம் அவர்களுடைய நல்வினையே யாகும். இறைவன் செய்வதெல்லாம் அவரவர் வினை அவரவரை அழிக்கவோ வாழ்விக்கவோ துணை செய்வது மட்டுமே ஆகும். இந்த உண்மை, அவரவர் வாழ்க்கையிலேயே இதுகாறும் நடந்த நிகழ்ச்சிகளை ஆழ்ந்து எண்ணிப்பார்த்தால் தெற்றென விளங்கும்.

''இமையவர்'' என்பவர் தேவராவர். ''தே'' என்பதும் ''தேன்'' என்பதும் தித்திப்பைக் குறிக்கும். தேவர்கள் தித்திப்பானவர்களான தனால் அப்பெயரைப் பெற்றனர். மனிதர்களிலும், தம் நினைப்பாலும், செயலாலும் பிறர்க்குத் தித்திப்பாய் இருப்பவர்கள் தேவர்களே. அத்தகைய இனிய செயலுடைய தேவர்கள் வாழ்ந்தால் இவ்வுலகம் நன்கு வாழும். மழையும், தீயும், ஞாயிறும் நமக்கு இனிமை பயக்கின்றன. அவற்றுளெல்லாம் இறைகலப்பு இருப்பதனாலும் அவற்றை எல்லாம் இறைவன் விளங்கும் இடங்களாக மதித்து வழிபாடு செய்வதனாலும், அவற்றுக்குத் தெய்வத்தன்மை வருகின் றது. மற்றும் அவற்றை அசைக்கவும், பயன்தரும்படி இயக்கவும், சத்தி வாய்ந்த ஆன்மாக்கள் தேவ பதவிகளில் உள்ளனர். அவர்களே இப்பாடலில் ''இமையவர்'' எனப்பட்டனர். அவர்கள் பக்கம் நின்று இறைவன் அவர்களைக் காத்தான். ''கூறாக'' என்பது ''கூறா'' என வந்தது. (கூறு=பக்கம்).

சூரனின் வெம்மையாகிய சீற்றம் அழிந்து உலகம் குளிர்ந்தத னால் ''உலகம் குளிர்வித்தவனே'' என்றார்.

III சக்கரம்

இந்தப் பாடலில் அருணகிரியார் தத்துவம் கடந்த ஞான நிலையை அடைய வேண்டும் என்னும் தம் ஆர்வத்தைத் தெரிவித்துள்ளார். 36 தத்துவங்களையும் கடப்பதற்கு யோகம் பயில வேண்டும். யோகத்துக்கு அடிப்படையாய் இருப்பது மூச்சு. மூச்சை வாங்கும்போது ''அ0'' என்னும் மந்திரத்தை தியானிக்க வேண்டும். இம்மந்திரம் வாயால் ஓதுவதன்று. இதற்கு அஜபா மந்திரம் என்று பெயர். இதனை ''ஹ0'' என்றும் ஒலிப்பர். இப்பாடலில் தத்துவங் களைக் கடப்பது பற்றி வந்திருப்பதனால் இதன் மந்திரஎழுத்து ''அ0'' ஆகின்றது. இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு-48

அறிவு ஒன்று அற நின்று அறிவார் அறிவில்
பிறிவு ஒன்று அற நின்ற பிரான் அலையோ!
செறிவு ஒன்று அற வந்து இருளே சிதைய
வெறி வென்றவரோடு உறும் வேலவனே!

I பொழிப்புரை

(ஆன்மா தன் அறிவால் இறைவனை அநுபவிக்கும் காலத்தில் சூழலைக் கவனிக்கின்ற) அறிவு என்னும் ஒரு பொருளை மறந்து, இறை அநுபவத்திலேயே தங்கி உணர்கின்றவருடைய அறிவில் பிரிவில்லாமல் தங்குகின்ற (இன்பம் தருகின்ற) தலைவன் நீ அல்லையோ! பாசத்தின் அடர்த்தியான கெளவுதல் நீங்கி, அறியாமை சிதைந்து, வாசனாமலமும் அற்றுப் போனவர்களோடு சேர்கின்ற, (வேலையுடைய) முருகனே!

II விளக்கவுரை

இந்தப் பாடல் விசத்தி சக்கரத்தின் இறுதிப் பாடலாகும். இது, அநுபவ நிலையில் மேலும் மேலும் உயர்ந்து போவதைக் காட்டி, அதன் விளக்கத்தையும் தருகின்றது. இது, புரிந்துகொள்வதற்குச் சிறிது கடினமாகவும் உள்ளது.

(1) அறிவு ஒன்று அற நின்று அறிவார் அறிவில் பிறிவு ஒன்று அற நின்ற பிரான் அலையோ!

இத்தொடர் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இதன் கருத்து வருமாறு:

அறிவு ஒன்று அற=(ஆன்மா தன் அறிவால் இறைவனை அநுபவிக்கும் காலத்தில் சூழலைக் கவனிக்கின்ற) அறிவு என்னும் ஒரு பொருளை மறந்து.

நின்று அறிவார் அறிவில்=(இறை அநுபவத்திலேயே) தங்கி உணர்கின்றவருடைய அறிவில்

பிரிவு ஒன்று அற=(ஆன்ம உணர்விலிருந்து) பிரிதல் என்று ஒன்று இல்லாமல்

நின்ற பிரான் அலையோ!=தங்கி (தொடர்ந்து இன்பம் தருகின்ற) தலைவன் நீ அல்லையோ!

இதன் விளக்கத்தைக் காண்போமாக:

இறைவன் எங்கும் நிறைந்தவனாவான். அவன் இல்லாத இடமே இல்லை. அவன் பண்டங்களிலும், உயிர்களிலும் கலந்து இருக்கின்றான். ஆனால் அவன் எல்லாவற்றுள்ளும் விளங்கித் தென்படுவதில்லை.

பண்டங்களில் காணப்படுவதைவிட, ஆன்மாக்களில் விளக்கமாகத் தெரிகின்றான். ஆன்மாக்களிலும் அவர்களுடைய அறிவில் பளிச்சென்று தெரிகின்றான். அறிவில் விளங்குவதனால் அந்த ஆன்மாக்களின் உடம்பிலும், சூழலிலும் ஒளிரு (பிரகாசிக்)கின்றான். இது எவ்வாறெனின், விளக்கொளி, திரியின் நுனியில் தங்கி, அறை முழுவதும் ஒளி தருவதைப் போன்றதாகும்.

ஆன்ம அறிவிலும், அறிவு மிக்கவரிடம் கூடுதலாக விளங்குவான். அதிலும் மெய்யறிவு (ஞானம்) உடையவர்களிடம் முழுமையாய் விளங்கித் தோன்றுவான்.

அறிவார்ந்த ஆன்மாக்களிலும் அவற்றின் உணர்வு மற்றும் ஈடுபாட்டில் வேறுபாடு உண்டு. அவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை:

1) தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைக் காட்சிகளையே இறைவனாகக் கருதி ஈடுபடுதல். கவிஞர், ஓவியர், கலைஞர் இந்த வகையைச் சேர்ந்தவர்.

2) தமக்குள்ளேயே மறைந்திருக்கும் இறைவனை யோக, தியானப் பயிற்சியால் கண்டு உணர்தல்.

3) தம் எதிரிலுள்ள பண்டங்கள் அல்லது ஆன்மாக்களையே இறைவனாகக் கருதி ஈடுபடுதல், தாம் வழிபடும் சிவலிங்கம், அடியார்கள் முதலியோரிடம் ஈடுபடுதல். சண்டேசர், அப்பூதி அடிகள் முதலானோர் இந்த வகையைச் சேர்ந்தவராவர். நாயன்மார்கள் அனைவருமே இத்தகைய உணர்வு நிலையைப் பெற்றவர்களே. அவர்கள் புறத்தில் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், எத்தகைய இடையூறுகள் அவர்களுக்கு வந்தாலும், அவர்களுடைய பரவசநிலை மாறாமல் இருக்கும்.

இனி, ஒரே ஆன்மா, மேற்கூறிய மூன்று நிலைகளிலும் இறைவனை உணர்தலும் உண்டு. இறையுணர்வு முதிர முதிர, சூழலை மறந்து யோக முயற்சியை மறந்து, தாம் வழிபடுதலையும் மறந்து அநுபவ அறிவிலேயே தங்கிவிடுவர். இது எவ்வாறு எனின் நாம் ஒரு வேலையாக மிகவும் விரைவாகப் போய்க்கொண்டு இருக்கி

றோம் என்று வைத்துக்கொள்வோம். எதிரே ஒருவர் ஏதோ பேசுகிறார். அவருக்குத் தக்க விடையையும் தருகிறோம். என்றாலும், பிறகு, அவர் என்ன சொன்னார், நாம் என்ன பதிலுரைத்தோம் என்பவை நினைவிலிருப்பதில்லை. அதாவது அவரைப் பார்த்துப் பேசியதெல்லாம் நம் அறிவில் ஆழப் பதிவதில்லை. நம் அறிவு எடுத்துக்கொண்ட வேலையைப்பற்றி மட்டுமே உணர்வதாக இருக்கும். இத்தகைய அறிவே இங்கு ''அறிவு ஒன்று அற, நின்ற அறிவு'' எனப்பட்டது.

இதற்கும் அடுத்த நிலை, தாம் இறைவனை உணர்கின்றோம் என்னும் நினைப்பையும் மறந்து, இறைவனைப் பற்றிய எண்ணமும் அற்றுப்போய் அவனை அநுபவிக்கும் அநுபவம் மட்டுமே இருப்ப தாகும். இது, விளக்கு ஒளியில் ஒரு வேலையில் தோய்ந்து இருக்கும்போது விளக்கைப்பற்றிய எண்ணம் இல்லாமல் போவதைப் போன்றதாகும். தூக்கத்தில்கூட இத்தகைய நிலையை நாம் கண்டிருக் கின்றோம். கனவு இல்லாத ஆழ்ந்த தூக்கத்தில், நாம் தூங்குகிறோம் என்னும் எண்ணங்கூட வருவதில்லை. விழித்தபின், ''நன்றாகத் தூங்கினேன்'' என்று மட்டும் சொல்லுவோம். இறைவனுடைய அநுபவமும் அத்தகையதே. அது இன்பமாகவும் இருக்கும். அது உண்டபின் இளைப்பாறுவதைப் போன்று இருக்கும்.

இத்தகைய இறை அநுபவத்தைப் பெற்று வருபவருடைய அறிவில் இறைவன் மேலும் நன்றாக விளங்குவான். அத்தகைய அறிவு வேறொன்றையும் அறியாத அறிவு. அதுவே (வேறு) அறிவு அற நின்ற (இறை) அறிவாகும். அந்த அநுபவ நிலைக்குச் ''சிவபோக நிலை'' என்று பெயர். இந்த நிலையைவிட இறைவன் முழுவதுமாகத் தங்கக்கூடிய வேறு ஒரு இடம் இல்லை (சிவபோகம் துய்க்கும் அடியார்களே ''சீவன் முத்தர்'' எனப்படுவர்.)

அடுத்து, ''நின்று அறிவார் அறிவு'' என்று கலையாத, நிலைத்த தியானத்தில் இருப்பவருடைய அறிவு குறிக்கப்பட்டது. தியானம் நிலைக்காமல் எவ்வளவு பூசை செய்தாலும் பயனற்றுப் போகும். பூசையே அல்லாமல், கோயில் கட்டினாலும்கூட அவர்களுடைய அறிவில் இறைவன் தங்கமாட்டான். எனவே அறச்செயல்களை விட நிலைத்த தியானமே சிறப்புடையது என்று தெரிகின்றது. அதனையே ''நின்று அறிவார் அறிவில்'' நிற்பான் என்றார்.

அடுத்து, ''பிறிவு ஒன்று அற'' என்பது ''நீங்குதல் என்பது இல்லாத'' என்று பொருள்படும். இதில் ''பிறிவு'' என்னும் சொல் வல்லின ''ற''கரத்தைக் கொண்டுள்ளது. இச்சொல் குறிப்பிடும் பிரிவு ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருள் வன்மையாகப் பிரிவ

தாகும். அது முட்டையிலிருந்து குஞ்சு பிரிவதைப் போன்றதாகும். இடையின ''ர''கரம் உள்ள ''பிரிவு'' என்னும் சொல், ஒன்றாய் இருந்த இரண்டு பொருள்கள் மீண்டும் பிரிவதைக் குறிக்கும். இது துணியிலிருந்து நூல் பிரிவதைப் போன்றதாகும். இங்கு வல்லினம் கொண்ட ''பிறிவு'' என்னும் சொல்லைப் பயன்படுத்தியதால், இறைவன் ஆன்ம அறிவுக்கு உள்ளே இருப்பவன் என்பதும், அவன் பிரிவதில்லை என்பதும் புலப்படுத்தப்பட்டன. எனவே ''பிறிவு ஒன்று அற நின்ற பிரான்'' என்றார். இறைவனையே உணரும் ஆன்ம அறிவே அவன் எப்பொழுதும் தங்குகின்ற சிறப்பிடமாகும். ஆன்மா மறவாததனால் அவனும் பிரிவதில்லை.

அவன் பிரியாமல் இருப்பதோடு, அத்தகைய ஆன்மாக்கள் மேற்கொள்கின்ற தொண்டுகளுக்கும் அவன் துணைசெய்கின்றான். தம் சத்திக்கு மேற்பட்ட தொண்டுகளை மேற்கொண்டாலும் அவற்றுக்கும் துணை நிற்கின்றான். அவ்வாறு செய்தவர்களுள் பூசலார் நாயனாரும் ஒருவர்.

தம் சத்திக்கு மேற்பட்ட செயலை மேற்கொள்ளும்போது, அதே எண்ணமும் நோக்கமும் கொண்ட, சத்தி மிகுந்தவர்கள் அச்செயலில் ஈடுபடும்படி இணைத்து வைக்கின்றான். இந்த அடிப்படையிலேயே, சான்றோர்கள் நாட்டு நலத்துக்காகத் தம் ஒருவரால் தனித்துச் செய்ய இயலாதவற்றையும் செய்து கொண்டும் எண்ணிக்கொண்டும் இருப் பர். இதே அடிப்படையில்தான், குடும்பத்திலுள்ள மாதரும், இல்லத்திலேயே தங்கி அமைதியாகத் தவம் செய்வர். இவ்வாறு நாட்டிலும் வீட்டிலும், அருஞ்செயல்கள் தொடங்கப்பெற்று, அவற் றுக்கு இறைவனும் துணைநின்றுவழிநடத்தும் வாய்ப்பு அமைகின்றது.

''பிரான்'' என்பது தலைவன் ஆகும். பிரான், பிராட்டி என்பன நல்ல தமிழ்ச்சொற்கள். ஆன்மாக்களுக்கு இறைவன் எப்போதும் தலைவன் ஆவான். அவை அவனுடைய அநாதி அடிமைகளே. முத்தியிலும் இந்த நிலை மாறுவதில்லை. முத்தி அடைவதற்கு அவை நான்கு வழிகளைப் பின்பற்றுகின்றன. அதே முறையில் அவற்றுக்கு அவன் இன்பம் வழங்குகின்றான். அவை வருமாறு:

1) சரியையாளர்கள் அடிமை நிலையில் இன்பம் பெறுவர்.
2) கிரியையாளர்கள் உரிமை நிலையில் இன்பம் பெறுவர்.
3) யோகிகள் சமநிலையில் இன்பம் பெறுவர்.
4) ஞானிகள் அன்பு (காதல்) நிலையில் இன்பம் பெறுவர்.

அடுத்து, ''அலையோ'' என்பது அல்லையோ என்று ஆகும். வியப்பை உணர்த்துவதனாலும், முன்னிலைப்படுத்தி உரைத்தத னாலும் அவ்வாறு வந்தது.

(2) செறிவு ஒன்று அற வந்து இருளே சிதைய, வெறி வென்றவரோடு உறும் வேலவனே!

''செறிவு'' என்பது நெருக்கம் அல்லது மிகுதியாகும். இறைவன் ஆன்ம அறிவில் சிறப்பாக வந்து தங்குவதற்கு முன்னால் அதனைச் செறிவாகப் பாசம் கௌவிக்கொண்டு இருந்தது. உயிர்வேறு, பாசம் வேறு என்று பிரித்து அறிந்து கொள்ள முடியாதபடி கௌவியிருந்தது. அத்தகைய செறிவிலிருந்து அது சிறிது சிறிதாக, விடுபட விடுபட, இறைவன் அதன் அறிவில் ''வந்து'' சேர்கின்றான்.

பாசச் செறிவு குறைந்து அற்றுப்போக வேண்டுமானால், பருமனி லிருந்து நுட்பத்துக்குப் போக வேண்டும். பாசத்தில் பருமனானது மண். அதுவே கடைசி பண்டம். அதனுடன் கலை சேரும்போது அது பூவாகவும், பழமாகவும் உருமாறி அழகைப் பெறுகின்றது. எனவே நாம் நேரே மண்ணொடு பழகுவதைவிடப் பழத்தோடு பழகுவது உயர்ந்தது. அதிலும், பழமாகிய பண்டத்தொடு பழகுவதை விட அப்பழத்தின் அழகைக் கண்டு இன்புறுவது மேல்நிலைக்குக் கொண்டு செல்லும். அது கலையொடு பழகுவதாகும். கலையைவிட அருளொடு பழகுவது அதனினும் உயர்ந்ததாகும். அவ்வாறு மேல் நிலைகளுக்குச் செல்லச் செல்லப் பாசத்தின் செறிவு தளர்ந்து அறியாமை சிதைந்து விடுகிறது. அதனையே ''செறிவு அற, இருள் சிதைய'' என்றார். ''இருள்'' என்றது அறியாமை ஆகும்.

இருளாகிய அறியாமை சிதைவது மட்டும் போதாது. அது மீண்டும் தலை எடுக்காதபடி அதன் வெறியையும் வெல்ல வேண்டும். அவ்வாறு வென்ற ஆன்மாக்களோடு முருகன் வந்து சேர்வான். (உறுதல்=சேர்தல்).

''வெறி'' என்னும் சொல்லுக்கு வெறியாட்டம் என்றும், நாற்றம் என்றும் பொருள் உண்டு. அறியாமையாகிய ஆணவ இருள் சிதைவதற்கு முன்பு ஆன்மா, சினம், காமம் முதலிய தீய தன்மைகளுக்கு ஆட்பட்டுப் பேயாட்டம் ஆடி வந்தது. அந்த வெறித்தன்மையை ஆன்மா வென்று அடக்கிவிடுமானால் வேலவன் வந்து அதனுடன் சேர்வான். அதனையே ''வெறி வென்றவரோடு உறும் வேலவனே'' என்றார்.

''வெறி'' என்னும் சொல்லுக்கு நாற்றம் என்னும் பொருளைக் கொள்ளும்போது அது வாசனா மலத்தைக் குறிக்கும். ''வாசனா மலம்'' என்பது பழக்கத்தின் காரணமாக ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்க்கும் ஒரோ ஒருகால், பழைய நினைவுகளாகிய பாச உணர்வுகள் வந்து தாக்குவதாகும். (இது பெருங்காயக் கலத்திலிருந்து


பெருங்காயத்தை எடுத்துவிட்ட பல நாட்கள் கழித்தும், பெருங்காய வாசனை வருவதைப் போன்றதாகும்). அந்த வாசனையின் தாக்குதலும் வராதபடி அவற்றை வென்றவரோடு இறைவன் வந்து சேர்கின்றான். அருணகிரியார், மேற்கூறியவாறு, ''ஆன்ம அறிவில் சேர்கின்ற வேலவனாகிய நீ'' என்று முருகனை விளித்து, ''என்னுடனும் அவ்வாறே சேர்க'' என்னும் தம் வேண்டுகோளை விடுப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

III சக்கரம்

இந்தப் பாடல் விசத்தி சக்கரத்தின் இறுதிப் பாடல் என்று பார்த்தோம். இதற்கு முந்திய பாடலாகிய 47வது பாடலில் முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்து செல்வதைப்பற்றிக் குறிக்கப்பெற்றது. இந்தப் பாடல், அவற்றைக் கடப்பதோடு அவற்றின் வாசனாமலத்தையும் வெல்ல வேண்டும் என்று கூறுகிறது. பாசத்தினுடனான தொடர்பு பற்றிய குறிப்பு இந்தப்பாடலோடு முடிவுடைகின்றது. இனி வரும் பாடல்கள் இறைவனை அடைவதைப் பற்றியவையாகும். அவை ஆக்ஞா சக்கரத்தைச் சேர்ந்தவை. விசுத்தி சக்கரம் ஆன்மாவை மேல் நிலைக்குச் செலுத்தும் ஆற்றல் உடையது.

[ஆக்ஞா சக்கரம் அமுத ஒழுக்கை அளிக்கின்ற சத்தி உடையது. இதை உணர்த்தவே நமக்கு ''உள்நாக்கு'' அமைந்துள்ளது. உள்நாக்கு மேலிருந்து கீழ்நோக்கி இருப்பதாகும். அதன் மேல் பகுதி ஆக்ஞா சக்கரத்துடன் பிணைந்திருப்பதைப்போல அதைத் தொட்டுக்கொண்டு இருக்கும். அதன் கீழ்ப்பகுதி விசுத்தி சக்கரத்தை நோக்கியதாக அமைந்திருக்கும். உள்நாக்கு ஆக்ஞை ஆதாரத்தைச் சேர்ந்தது. அடிநாக்கு விசுத்தியைச் சேர்ந்தது. உள்நாக்கு, அமுதத்தைச் சுவைத்து அநுபவிக்கும் இடம் ஆக்ஞையாகும்.]

முப்பத்தாறு தத்துவங்களைக் கடப்பதற்கு ஓதவேண்டிய மந்திர எழுத்து ''அ0'' என்றும், அது புறத்தில் ஓசை வராதபடி ஓதப்பட வேண்டும் என்றும் பார்த்தோம். இந்தப் பாடலில் வாசனாமலத்தை ஓட்ட வேண்டும் என்பதனால், இதற்கு மந்திர எழுத்து அதட்டும் ஒலியுடைய ''அஃ'' ஆகின்றது. எனவே இப்பாடலின் சிறப்பெழுத்து - ''அஃ'' ஆகும். இதன் சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்


பகுதி V

(ii) விசுத்தி ஆதார சக்கரம்

'விசுத்தி' என்னும் சொல்லுக்கு விசேஷமான சுத்தி என்று பொருளாகும். அதாவது மீளவும் அசுத்தத்தை நோக்காத தூய்மை யாகும்.

இந்தச் சக்கரத்தின் நிலைக்கு உயர்ந்துவிட்ட ஆன்மாக்கள் மீண்டும் மாயாமலத்தின் ஈர்ப்புக்கு அடிமை ஆகமாட்டார்கள்.

இந்த ஆதாரமலர், கண்டத்தில் (கழுத்தில்) அடி நாக்குள்ள இடத்தில் உள்ளது. உள்நாக்கு தலைகீழாகத் தொங்கிக்கொண்டு இருக்கும். அதைத்தொட்டும் தொடாததுமாக இந்த ஆதாரம் உள்ளது. சக்கரம் வருமாறு:



இச்சக்கரத்துக்குரிய மந்திர எழுத்து 'வ'கரம் ஆகும். 'வ'கரம் அம்பிகையைக் குறிப்பதாகும். சிவத்தோடு சேர்வதற்கு அம்பிகை ஆன்மாவை 'வா' என்று அழைப்பதனால் 'வ'கரம் அம்பிகை எழுத்தாகின்றது. இது 'நமசிவய' என்னும் ஐந்தெழுத்தின் நான்காவது எழுத்தாகும்.

இந்த ஆதாரத்தின் அதி தேவதை மகேஸ்வரன் ஆவார். அவர் சத்தி மகேஸ்வரி ஆகும். இதன் நிறம் கருநிறமாகும். இது காற்றின் கூறாகும்.

இந்தச் சக்கரத்தில் 16 உயிரெழுத்துக்களைக் கொண்ட 16 இதழ்கள் உள்ளன. இவ்வெழுத்துக்களுக்கான விளக்கங்களை அநுபூதிப் பாடல்கள் 33லிருந்து 48 வரை காணலாம்.

இச்சக்கரத்தில் உள்ள வட்டம் 'ஓ'ங்காரத்தைக் குறிப்பதாகும். அறுகோணமும் 'வ'கரமும் இச்சக்கரத்துக்குரியவை.

வட்டத்துக்கும் அறுகோணத்துக்கும் இடையில் உள்ள ஒன்பது எழுத்துக்கள் 'வ'கரத்தைத் தோற்றுவிக்கின்ற வித்தெழுத்துக்கள் ஆம். அவ்வித்தெழுத்துக்களும், அவற்றுக்கான காரணப்பொருள்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1) வித்தெழுத்து — ஸெ
காரணப்பொருள் — ஞானம்
விளக்கம் — மந்திர எழுத்தாகிய 'வ'கரம் தோன்றுவதற்கு 'ஸெ' ஸ்தூல ஞானமாக உள்ளது.

2) வித்தெழுத்து — ஸெ0
காரணப்பொருள் — ஞானம்
விளக்கம் — இது (ஸெ0) சூக்கும ஞானத்தை உணர்த்தும்.

3) வித்தெழுத்து — வா0
காரணப்பொருள் — கலை, பிரணவம்
விளக்கம் — விசுத்தியின் கலையைக் குறிப்பது 'வ'கரம் ஆகும். அது பிரணவத்தோடு சேர்ந்து 'வ0' ஆகின்றது.

4) வித்தெழுத்து — ஏ0
காரணப்பொருள் — நாதம்
விளக்கம் — 'வா0' ஒடு நாதம் சேரும்போது ஏ0 ஆகின்றது.

5) வித்தெழுத்து — த0
காரணப்பொருள் — விந்து.
விளக்கம் — மந்திரத்துக்குரிய வடிவத்தைக் குறிப்பது விந்துவாலான 'த0' ஆகும்.

6) வித்தெழுத்து — வ0
காரணப்பொருள் — தத்துவம்
விளக்கம் — வகரத்தின் தத்துவப்பொருள் காற்றாகும். காற்றால் ஆன்மா தூய்மை பெறுதலை 'வ0' குறிக்கின்றது.

7) வித்தெழுத்து — எ0
காரணப்பொருள் — கோலம்
விளக்கம் — தூய்மைப்படுத்துகின்ற காற்றின் உருவம் (கோலம்) 'எ0' ஆகும்.

8) வித்தெழுத்து — ஏ
காரணப்பொருள் — கிருத்தியம்
விளக்கம் — இம்மந்திர எழுத்துக்குரிய செயல் (கிருத்தியம்) ஐந்தெழுத்தின் நான்காவதாகிய மறைத்தல் ஆகும். மறைத்தல் வாயுவின் (மகேஸ்வரனின்) செயல் ஆகும். மறைக்கும் சத்தியைக் குறிப்பது 'எ'கரம் ஆகும்.

9) வித்தெழுத்து — ரீ0
காரணப்பொருள் — சத்தி
விளக்கம் — கண்டம் (விசுத்தி) மறைத்து ஆறுதல் அளிக்கும் இடம். இதைக் குறிப்பது ரீ0 என்னும் ஒலியாகும்.

இந்த ஆதார மலரைத் தியானிப்பதனால் ஆன்மா மீண்டும் அசுத்தத்தில் படியாமல் இருக்கும்.

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

(ii) ஆக்ஞை ஆதார மலர்

செய்யுட்கள்

(பாட்டு 49-51)

பாட்டு-49

தன்னந் தனி நின்றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ!?
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் கிருபை சூழ் சுடரே!

I பொழிப்புரை

(ஆன்மாவும், இறைவனும்) தனித்தனியாய் இருந்து, (ஒன்று சேர்ந்து) நிலையாக நின்று துய்க்கின்ற அநுபவத்தை (மூன்றாமவராகிய) இன்னொருவர் அறியும்படிச் சொல்ல முடியுமோ? (முடியாது; அதை அவரவர்களே துய்த்து அறிந்துகொள்ள வேண்டும்). மின்னுகின்ற ஒளிபொருந்திய வேலேந்திய சுயம்பு மூர்த்தியே! (உன்னை) நினைப்பவருடைய துன்பங்களை நீக்குகின்ற கருணை நிறைந்த சுடரானவனே(முருகனே)!

II விளக்கவுரை

இந்த 49வது பாடலும், இதற்கடுத்த இரண்டு பாடல்களும் (50, 51) ஆக்ஞா சக்கரத்தைச் சேர்ந்தவை. இந்தப் பாடல் இறை அநுபவமாகிய முத்தி நிலை பற்றியும், இறைவன் ஆன்மாக்களுக்குச் செய்கின்ற உதவி பற்றியும் கூறுகின்றது.

(1) தன்னந்தனி நின்றதுதான் அறிய இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ?!

தனிமை+தனிமை தன்னந்தனிமை ஆகின்றது. (இது, சிறிது+சிறிது சின்னஞ்சிறிது ஆவதைப் போன்றது.) தனிமை என்பது தன்னைத் தவிர வேறு ஒருவர் இல்லாமையாகும்.

துய்க்கும்போது தனித்திருப்பதை வலியுறுத்துவதற்காகத் தனிமை என்னும் சொல் இரண்டு முறை வருகின்றது. அந்த

வலியுறுத்தலோடு இது துய்ப்பதற்கு முன்பும் அவ்விருவரும் தனித்திருக்க வேண்டும் என்பதையும் குறிக்கின்றது. தனித்து இல்லாமற்போனால் துய்ப்பு முழுமை பெறாது; அது தடைபடும்.

அருணகிரியார் இங்குக் குறிக்கின்ற துய்ப்பு-ஆன்மா இறைவனோடு சேர்ந்து பெறுகின்ற இன்ப நுகர்வு ஆகும். அதுவே முத்தி இன்பம் எனப்படுகின்றது.

இருவர் ஒருவரை ஒருவர் நுகரும்போது வேறொரு அறிவுடையவர் இருத்தலாகாது. ஆனால் அறிவில்லாச் சடப்பொருள்கள் இருப்பதில் தவறு இல்லை.

ஆன்ம உணர்வு இறைவனோடு கலந்திருக்கின்ற மேலான நிலையே ஒரு தனி நிலைதான். அந்த நிலை முடிந்த நிலையாகும். அது நுகர்வு (போக) நிலை. அதில் துய்ப்பு மட்டுமே மேலோங்கி இருக்கும். அது மாறாத அழியாத, தெவிட்டாத பேரின்ப நிலையாகும். அதைவிட மேலான ஒரு நுகர்வு எங்கும் இல்லை.

அந்த நிலையில் தன்முனைப்பேயன்றித் தன்னைப்பற்றிய நினைப்பும் இருப்பதில்லை. அதனால், அப்பொழுது தான் பெறுகின்ற இன்ப உணர்வைப்பற்றி, இன்னொருவருக்கு அவர் அறிவில் பதியும்படிச் சொல்ல முடியாது. அந்தப் பெரும் போக நிலையை அவரவர்களே உணர வேண்டுமே தவிர, ஒருவர் இன்னொருவர்க்குச் சொல்ல இயலாது. அந்த உணர்வைப் பெறுவதற்கான வழியைச் சொல்லித் துணை செய்யலாமே தவிர, உணர வைக்க முடியாது.

இனி, இச்சிவபோகத் துய்ப்பு நிலையில், சிவமும் சீவனும் ஒன்றாகி விடுவதாகச் சிலர் கூறுவர். அது சரியன்று. ஏனென்றால், அவ்விருவரும் ஒன்றாகி விட்டால் அங்குத் துய்ப்பு இருக்க முடியாது. ஒருவரே, தன்னைத் தானே துய்ப்பது என்பது இயலாத ஒன்று. துய்ப்பைப் பெறுபவரும், துய்ப்பைத் தருபவரும் ஆகிய இருவர் உள்ள இடத்தில் மட்டுமே இன்ப நுகர்வு இருக்க முடியும்.

மற்றும், இவ்விருவர்க்கும் தரத்தில் வேறுபாடும் இருக்கும். அதாவது இவ்விருவரும் சமமாகி விடுவர் என்பதும் தவறேயாகும். துய்ப்பைப் பெறுகின்ற ஆன்மா, மீளா அடிமையாகவும், துய்ப்பைத் தருகின்ற இறைவன் ஆண்டானாகவுமே இருப்பர்.

அடுத்து ''இன்னம் ஒருவர்க்கு'' என்பது, இவ்விருவர் அல்லாத மற்றொரு அறிவுடைய ஆன்மாவுக்கு என்று பொருளாகும்.

''இசைவிப்பது'' என்பது சொல்லுதல் ஆகும். ஆக, இறை இன்பம் வாயால் சொல்லக்கூடியதன்று என்பதனை அருணகிரியார் தெரிவித்துள்ளார்.

(2) மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார் கின்னம் களையும் கிருபைசூழ் சுடரே!

மின்னுவதென்பது ஒளி விடுவதாகும். முழுதும் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு இறைவன் திருவருள், இடைவிடாது ஒளியுடன் பளிச்சென்று தோன்றும். பக்குவம் முழுமை பெறாதவர்களுக்கு மின்னலைப் போன்று விட்டுவிட்டுத் தோன்றும். மின்னும் கதிர்வேல் என்பது ஒளிக்கற்றையால் மின்னுகின்ற கூர்மையான வேலாகும்.

வேல், ஞானத்தின் உருவகம் என்பதனை முன்னமே பார்த்திருக் கின்றோம். அது இறைவனுடைய உணர்வுக்கூறு ஆகும். ஞானம் ஒளிதரும் இயல்புடையது. அந்த ஒளியால் ஆன்ம உணர்வு வளர்ச்சியையும், ஆற்றலையும் பெறுகின்றது. அந்த ஞானமே ஆன்மாவை நன்னெறியில் செலுத்தி நடத்தும். அது கைப்பந்த மின்விளக்கைப் (Torch light) போன்று வழிகாட்டும்.

ஞானம், ஞாயிறைப் போன்றது. ஞாயிறு ஒரு பொருளை அழிக்கவும், ஒரு பொருளை ஆக்கவும் செய்யவல்லது. அது எலும்பு இல்லாத புழுவை அழிக்கும்; ஊறிய விதையின் முளையைத் தளிர்க்கச் செய்யும். உதிர்ந்த மலரை உலர்த்தி விடும். மொட்டுத் தாமரையை மலரச் செய்யும். ஞானமும் ஆன்மாவின் அறியாமை யாகிய ஆணவத்தை அழிக்கும். அதன் பத்தி உணர்வை வளரச்செய் யும். ஆன்மா இந்த உலகத்தில் பிறந்து, வாழ்வதெல்லாம் அந்த ஞானத்தின் (வேலின்) துணையைப் பெறுவதற்கேயாகும்.

ஞானம், ஆன்மாவுக்கு உதவ வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு முன்னீடு அல்லது கோட்பாடு (condition) நிறைவு செய்யப்பட வேண்டும். அது என்னவெனின், ஆன்மா தன்னுணர்வு அற்று, இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொள்ள வேண் டும். ஒப்படைத்தால் ஞானம் உடனே உதவிக்கு வரும்.

வானத்தில் சில நேரங்களில் மின்னல் பளிச்சிடும். அது பளிச்சிடும்போது ஏதோ ஒரு செயல் நடைபெற உள்ளது என்பது பொருளாகும். அச்செயல் மழை பொழிவதாகும். மின்னல் ஒரு நோக்கமில்லாமல் மின்னுவதில்லை. அவ்வாறே ஆண்டவனுடைய கதிர்வேல் மின்னுகிறதென்றால், அவன் ஆன்மாவுக்கு அருள் மழையைப் பெய்விக்கப் போகிறான் என்று பொருளாகும்.

இந்த அருள் மழையைப் பொழிவிக்கின்ற முருகனுடைய இயல்பைக் கூறும்போது அருணகிரியார் அவனை ''விகிர்தன்'' என்றும் ''கிருபை சூழ் சுடர்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''விகிர்தன்'' அல்லது ''விக்ருதன்'' என்பது வி+க்ருதன் ஆகும். ''வி'' என்னும் எழுத்து இன்மைப் பொருளையும், சிறப்பு (விசேஷம்) என்னும் பொருளையும் தரும். க்ருதன் என்பது செய்யப்பட்டவன் ஆகும். எனவே, அவன்:

1) செய்யப்படாதவன், அதாவது சுயம்பு ஆகின்றான். அவன் அநாதியானவன். அவனுடைய இருப்புக்கு வேறொருவர் காரணராவ தில்லை. அவன் பிறப்பு இறப்பு இல்லாதவன்.

2) அவன் ஆறுமுகங்களையும், பன்னிரு கைகளையும் கொண்ட சிறப்பு (விசேஷ) உருவம் உடையவனாவான். அந்த உருவம் (பிறர்க்கு உதவும் பொருட்டு) அவனாகவே எடுத்துக்கொண்ட கோலமாகும். அவனுடைய இயல்பான கோலம் கற்பனை கடந்த சோதி வடிவமாகும். அவன் கருணையே உருவமானவனாதலால், ஆன்மாக்களின் பொருட்டு அற்புதக்கோலம் அதாவது மேற்கூறிய சிறப்பு உருவத்தைத் தாங்கி வருகின்றான். அச்சிறப்பு உருவம் மற்றவர்களால் செய்யப்பட்டதன்று ஆதலால், அருணகிரியார் அவனை ''விகிருதன்'' என்றார்.

அடுத்துக் ''கிருபை சூழ் சுடரே'' என்பதற்கு அடைமொழியாக அவன் செய்கின்ற கருணைச் செயலை விளக்குகின்றார்.

அவன் கருணையின் காரணமாகத் (தன்னை) நினைவாருடைய கின்னங்களை நீக்குகின்றான் என்று கூறுகின்றார். ''நினைவார்'' என்பது இறைவன் தமக்கு இதுவரை செய்துள்ள நன்மைகளை நினைந்து, அவற்றுக்கு நன்றி பாராட்டி, பலன் கருதாமல், தன் முனைப்பு (ஆணவம்) இல்லாமல், சூழலை மறந்து, இறைவனையே நினைப்பவர் ஆகும். அத்தகையோருடைய கின்னங்களை இறைவன் களைகின்றான்.

''கின்னம்'' என்னும் சொல்லுக்குக் ''கில்'' பகுதியாகும். ''கில்'' என்பதும் ''கின்'' என்பதும், ஆற்றலை உணர்த்தும் சொற்கள் ஆம். ''செய்யாதவர்''என்னும் ஒரு சொல்லுக்குச் செய்யத் தவறியவர் என்று பொருளாகும். அவரையே 'செய்யகில்லாதவர்'' என்று சொன்னால், செய்கின்ற ஆற்றல் இல்லாதவர் என்று பொருளாகும். அதாவது ஆற்றல் இல்லாமையால், செய்ய இயலாதவர் என்று ஆகும். அதே முறையில், ''கில்'' என்னும் பகுதியை உடைய ''கின்னம்'' என்னும் சொல்லுக்குப் பொருள் காண வேண்டும். அது வருமாறு: இறைவன் இந்த உலகியலை நடத்துகின்றான் என்னும் உண்மையை மறந்து, தன்முனைப்பால், ''என் ஆற்றலா லேயே இச்செயலை நான் செய்கின்றேன்'' என்று கருதுவதனால்

வருகின்ற துன்பத்தை இச்சொல் குறிக்கின்றது. எனவே ''கின்னம்'' என்னும் சொல்லுக்குத் துன்பம் என்பது பொருளாகும்.

ஆன்மா, தன்முனைப்பற்று, இறைவனிடம் ஒப்படைத்துக் கொள்ளும்போது அவன் மேற்கூறிய கின்னங்களை நீக்கிவிடுகின் றான்.

''களை''தல் என்னும் சொல்லுக்கு வேண்டாத பொருளை எடுத்துவிடுவது என்றும், அழகு என்றும் பொருள்கள் உள்ளன. நெற்பயிரில் வேண்டாத புல், பூண்டுகள் முளைத்து விட்டால், அவற்றைக் களைந்து விடுகின்றோம். அவ்வாறே இறைவனை நினைவார் துன்பங்களை அவன் கருணை காரணமாகக் களைந்து விடுகின்றான். அவ்ன் கருணை நிறைந்த ஒளி வடிவினன் ஆவான்.

எனவே, அருணகிரியார் இறைவனை ''நினைவார் கின்னம் களையும் கிருபை சூழ் சுடரே'' என்றார்.

III சக்கரம்

ஆக்ஞா சக்கரத்தைச் சேர்ந்த 49, 50, 51 ஆகிய மூன்று பாடல்களும் மூன்று கண்களைப்பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் இந்தப் பாடல் வலது கண்ணைக் குறிப்பதாகும். அது சூரிய சத்திக்கு உரியதாகும். இப்பாடலுக்கான மந்திர எழுத்து 'ஹ'கரம் ஆகும்.

இந்தப் பாடலுக்கான தனி சக்கரம் கொடுக்கப்படவில்லை. ஆக்ஞை ஆதார சக்கரம் 51வது பாடலின் இறுதியில் கொடுக்கப்பட் டுள்ளது. அதிலேயே வலக் கண்ணுக்கான விளக்கமும் கொடுக்கப்பட் டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

பாட்டு-50

மதி கெட்டு, அறவாடி, மயங்கி, அறக்
கதி கெட்டு, அவமே கெடவோ கடவேன்?!
நதி புத்திர! ஞான சுகாதிப! அத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே!

I பொழிப்புரை

('மதி' என வழங்கப்படுகின்ற) அறிவு கெட்டு, அடியோடு வதங்கி, மயக்கம் எய்தி, நீதி நெறி கெட்டு, வீணாகக் கெட்டுப் போகும்படியாகவோ என் நிலை இருக்கிறது?! கங்காநதி (ஆகிய அம்பிகையின்) புதல்வனே! ஞான சுகத்துக்குத் தலைவனே! திதியின் மக்களாகிய அசுரர்களுடைய பெருமையை அழித்தவனே! (எல் லோரையும்) காப்பவனே!

II விளக்கவுரை

இந்தப் பாடல் (இடக் கண்ணாகிய) மதியைப் பயன்படுத்தி மதிக்கவேண்டிய ஒரே பொருளாகிய இறைவனை மதிக்க வேண்டு மென்பதனையும், மதிக்காமல் கெட்டுப் போகக்கூடாது என்பதனை யும் உணர்த்துகிறது.

(1) மதி கெட்டு, அறவாடி, மயங்கி, அறக்கதி கெட்டு, அவமே கெடவோ கடவேன்?!

'மதி' என்னும் சொல்லுக்குப் பொதுவாக அறிவு அல்லது புத்தி என்று பொருள் கூறுவர். அதனை வினைச்சொல்லாகக் கொள்ளும்போது, ஒரு பொருளை உயர்வாகக் கருதுதலைக் குறிக்கும்.

நம் வாழ்வில், நாம் எதை உயர்வாகக் கருத வேண்டும் என்று ஆராயும்போது, அது இறைவன் ஒருவனே என்னும் முடிவுக்குக் கொண்டு வந்து விடும். அது எவ்வாறு என்பதனைப் பார்ப்போம்:

1) சமயச் சான்றோர்கள் இந்த உண்மையைப் பல வகையிலும் பலகாலும் சொல்லி வந்துள்ளனர்.

2) மேல் இடத்தில் உள்ள பொருள் உயர்ந்ததென்றும் கீழே உள்ள பொருள் தாழ்ந்ததென்றும் கொள்வது பொது விதி. அந்த விதிப்படிப் பார்க்கும்போது, நம்மைச் சுற்றியுள்ள இயற்கை அமைப்பு, சில உண்மைகளைக் காட்டுகின்றது. இயற்கையைக் கூர்ந்து கவனித்தால் இது விளங்கும். இயற்கையின் கோலத்துக்கும், இறைவனின் கோலத்துக்கும் ஒற்றுமை இருக்கின்றது.

இயற்கையில் பருமனான, வரம்புபட்ட, தாழ்வான பொருள் கீழேயும், நுட்பமான வரம்பில்லாப் பொருள் மேலேயும் இருப்பதைக் காண்கின்றோம். ஐம்பூதங்களுள் மண் பருமனானது; வரம்புபட்டது. அது கீழே உள்ளது. மண்ணைவிட, நுட்பமான நீர், தீ, காற்று, ஆகியவை மேலே பரவலாக உள்ளன. வானம் மற்ற நான்கு பூதங்களை விட மிக நுட்பமானது; வரம்பும் இல்லாதது. அவற்றை விட மேலே உள்ளது. அதனால் அது உயர்ந்ததாகவும் இருக்கின்றது.

3) ஐம்பூதங்களில் உள்ளதைப் போலவே ஐம்புலன்களிலும் ஒரு அமைப்பு இருக்கின்றது. ஐம்புலன்களும் மனிதனுடைய முகத்தில் உள்ளன. மண்ணும் நீரும் சேர்ந்து உருவாகின்ற உணவுப்பொருளைச் சுவைக்கின்ற நாக்கு முகத்தில் கீழ்ப்பகுதியில் உள்ளது.

மண்ணும் நீரும் கலந்து மலராகி, அது தருகின்ற நாற்றத்தை உணர்கின்ற மூக்கு நாக்கைவிட மேலே உள்ளது.

தீ, மண்ணையும் நீரையும்விட நுட்பமானது. தீத்தத்துவத்தோடு தொடர்புடைய ஒளி பொருந்திய கண்கள் மூக்குக்கு மேலே உள்ளன.

காற்று, தீயைவிட நுட்பமானது. காற்றோடு தொடர்புடைய ஊறுக்கான (ஸ்பரிசம்) தோல் நெற்றியிலும் உள்ளது.

வானம் காற்றைவிட நுட்பமானது. அது ஒலியின் கூறாகும். ஒலியைக் கேட்கின்ற புலன் காது ஆகும். அது நெற்றிக்கு மேல் இருந்திருக்க வேண்டும். ஆனால் அது அவ்வாறு இல்லாமல் பக்கவாட்டில் உள்ளது. ஏனெனின், ஐம்பூதங்களில் வானம் மற்ற நான்கிற்கும் இடம் கொடுத்து, அவற்றுக்குப் பொதுவாக உள்ளது. அதைப்போலவே, இரண்டு காதுகளும், மற்ற நான்கு புலன்களுக்குப் பொதுவாகப் பக்கவாட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

4) மேற்கூறிய ஐம்பூதம், ஐம்புலன் மற்றும் ஐம்பொறி, தன் மாத்திரைகளுக்கும் மேம்பட்டது மனம் ஆகும். அது இரண்டு கண்களுக்கும் இடையே உள்ள புருவநடுவில் உள்ளது. அது கண்ணுக்குத் தெரியாத அகக்கருவியாகும்.

5) மனத்தோடு புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய அகக்கருவி களும், இவற்றுக்கு மேம்பட்ட ஏழு வித்தியாதத்துவங்களும் ஐந்து

சிவதத்துவங்களும், புருவத்திலிருந்து உச்சிவரை உள்ள தலைப்பகுதியில் அவற்றின் நுட்பத்தன்மைக்கு ஏற்ப, மேல் மேல் நிலைகளில் உள்ளன. இவற்றோடு முப்பத்தாறு தத்துவங்களும் முடிவடைகின்றன. இந்த முப்பத்தாறு தத்துவப்பொருள்களையும், அவற்றைக் கையாளுகின்ற அதிதேவதைகளாகிய உயர்ந்த ஆன்மாக்களையும், அவரவர் தகுதிக்கு ஏற்ப நாம் மதிக்க வேண்டும்.

6) முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்தவன் இறைவன் ஒருவனே. அவனுக்கும் மேம்பட்டவர் ஒருவரும் இல்லை. அவன் உச்சிக்கும் மேம்பட்ட பரவெளியில் இருப்பவன்.

மேற்கூறிய வேறுபாடுகளையும் ஒவ்வொரு பொருளினுடைய அல்லது ஆன்மாவினுடைய இடத்தையும் தகுதியையும் உணர்ந்து மதித்துத் தெளிகின்ற அறிவே இப்பாடலில் ''மதி'' என்னும் சிறப்புப்பெயரால் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டைச் செய்து தருகின்ற கருவி மனம் ஆகும். அது கண்போன்று அகத்திலுள்ளவற்றைக் கண்டு நமக்குக் காட்டுகின்றது. எனவே அதற்கு ''மனக்கண்'' என்று பெயர். இத்தகைய மனக்கண் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது என்பதனையும், அது இருக்கும் இடம் புருவநடு என்பதனையும், முதன் முதலில் கண்டவர்கள் தமிழர்களேயாவர். மொகஞ்சதாரோச் சிற்பங்களிலும் இவை குறிக்கப்பெற்றுள்ளன. மற்றும் இந்த உண்மையை நினைப்பூட்டும் வகையில் புருவ நடுவில் பொட்டு வைக்கும் வழக்கு இருந்து வருகின்றது.

எதை, எந்த அளவுக்கு எப்படி, மதிக்க வேண்டும் என்னும் நெறிமுறை தெரிந்து விடுமானால் மக்களுடைய வாழ்க்கையில் பெரியதொரு மாற்றம் வந்து விடும். தக்கபடி மதிக்கத் தெரிந்த அறிவுக்கு உலகப்பொருள்மேல் உள்ள உயர்வு மாறிவிடும். ஆன்மதத்துவத்திலுள்ள பொருள் எதுவாயினும், அது வித்யாதத்துவத்திலுள்ள கலை (கல்வி)க்குத் தாழ்ந்ததே என்பதை உணர்வர். அக்கலை சிவதத்துவத்தின் அருளுக்குத் தாழ்வானதே என்பதையும் தெரிந்து கொள்வர்.

பொருள்கள் ஐம்பூதங்களைக் கொண்டு கை, கால்களின் உழைப்பால் உண்டாக்கப்படுகின்றன. அவை தோள் வலிவால் பெருகுகின்றன. தோள்களுக்கு ஆற்றலைத் தருவது அவற்றின் இடையேயுள்ள இதயம் ஆகும். பொருட் செழிப்பையும், தோள் வலிவையும் காட்டுவது திருமாலின் நிலையாகும். திருமாலின் சத்தி இதயத்தில் இலக்குமியாக உள்ளது.

பொருட் செழிப்பால் வருவது கலை. கலைச் சிறப்பைக் காட்டுவது பிரம்மாவின் நிலையாகும். பொருளிலிருந்து கலை வருவதனால், திருமாலின் உந்தியிலிருந்து பிரம்மா தோன்றினார் என்பர். பிரம்மாவின் ஆற்றல் அவருடைய நாக்கில் கலைமகளாகத் தங்கி இருக்கின்றாள் என்பர்.

பொருள், கலையாக உயர்வதற்குச் சிவதத்துவத்தைச் சேர்ந்த அருள் கலத்தல் வேண்டும். அருள், அம்மையப்பராகிய இறைவனுடைய தலையிலும், மற்றும் சமபாதியாகவும் எங்கும் அமைந்துள்ளது.

ஆன்மதத்துவப் பொருள்கள் இதயத்திலும, வித்யா தத்துவத்தைச் சேர்ந்த கலை நாக்கிலும், சிவதத்துவத்தைச் சேர்ந்த திருவருள் தலையிலும், ஆக அவற்றின் இடங்கள் மீண்டும் குறிக்கப்பட்டன.

மேற்கூறிய உண்மைகளை எல்லாம் உணர்ந்து மதிக்கத் தக்கவன் இறைவன் ஒருவனே என்று தெரிந்து கொள்ளாத அறிவு ''மதிகெட்ட'' தாகி விடுகிறது. அது புறத்திலுள்ள பொருளிலும் கலையிலும் மட்டும் மனத்தைச் செலுத்தும்.

அவ்வாறின்றி மனம் அகத்தே செல்லும்போது ஐம்புல உணர்வுகளும் புருவ நடுவுக்கு மேலுள்ள தலைப்பகுதியில் (சிரத்தில்) வந்து குவிகின்றன. அவ்வாறு உணர்வு குவியப்பெற்ற சிரம் உள்ளவர்களை இறைவன் மேன்மேலும் வளர்த்து ஓங்கச் செய்கின்றான். இதனையே மாணிக்கவாசகர் ''சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்'' என்றார்.

புலன் உணர்வுகளைச் சிரசில் குவியவைக்கும் பயிற்சிதான் 'பூசை' எனப்படுகிறது. எனவே பூவையும் நீரையும் கொண்டு புறத்தே செய்கின்ற பூசை, அகத்தே சிரசில் பதியாமல் போகுமானால், அப்பூசை முழுமை பெறுவதில்லை. பூசை புறத்தில் தொடங்கி அகத்தில் (சிரசில்) தேனிப்பாக வளர்ந்து அருளில் போய்ச் சேர வேண்டும்.

அருளில் சேர்ந்த தேனிப்பு நெடுநாட்கள் கலையாமல் இருப்பதும் உண்டு. ஒரு முறை இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி நடந்தது. விருத்தாசலத்தில் குமரதேவர் என்னும் அடியார் ஒருவர் இருந்தார். அவருடைய மாணவராகிய சிதம்பர சுவாமிகள், தம் குருவிடம் ஒரு செய்தியைச் சொல்ல வந்தார். அவர் நூறு (100) மைல் தொலைவிலிருந்து வந்தார். வந்தபோது குமரதேவர் தேனிப்பில் இருப்பதைக் கண்டார். தேனிப்புக் கலைந்தபின் செய்தியைச் சொல்லலாமென்று சில நாட்கள் காத்திருந்தார். ஆனால் தேனிப்புக் கலையவில்லை. குருவின் தேனிப்பைக் கலைக்கக்கூடாது என்னும்

கருத்தால், அவர் நெடுந்தொலைவிலிருந்து வந்திருந்தும், அவரிடம் பேச முடியாமலே திரும்பிச் சென்றார்.

இந்நிகழ்ச்சியிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது என்னவெனின், அடியார்களின் தேனிப்பு முடிவின்றி நீளும் என்பதாகும். தேனிப்பில் ஆழ்ந்து செல்லச் செல்ல, இறைவனுடைய அருள் மேலும் மேலும் வந்து பாய்கிறது. ஆன்மா பூத உடலில் இருந்தாலும், அதன் உணர்வு உயர்ந்து அருள் வெளிக்குச் சென்றுவிடும். இத்தேனிப்பைச் செய்யாத வாழ்வு வீணேயாகும். திருவள்ளுவரும் இக்கருத்தைக் 'கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை' என்னும் திருக்குறளில் விளக்கியுள்ளார். இறைவனுடைய 'தாள்' என்பது அவனுடைய திருவருள் ஆகும். அதை வணங்குவது என்பது - முன்பு கூறியவாறு ஐம்புல உணர்வுகளையும் தலையில் குவித்து அதனைத் திருவருளில் ஈடுபடுத்துவது, அதாவது தேனிப்பதாகும்.

ஆக, புறத்தில் பூசையும், அகத்தில் தேனிப்பும் செய்து, மனிதப் பிறவியின் பயனைப் பெறவேண்டியுள்ளது. இதற்கு முதற்படியாக அறிவு மதிக்க வேண்டியதை, எது என்று ஆராய்ந்து கண்டு, உரிய முறையில் மதிக்க வேண்டும்.

இனி, மதித்த பொருளை மதித்த அளவில் விட்டுவிட்டால் போதாது. அப்பொருளோடு ஈடுபடாமல் இருந்துவிட்டால் மதித்ததன் பயன் விளையாது. மதித்தபின் ஈடுபடாத அறிவும், மதிக்கத் தெரியாத அறிவும் ஒன்றேயாம். அது 'மதிகெட்ட' அறிவாகிவிடும். மதிக்கவும் தெரிய வேண்டும். மதித்ததோடு ஈடுபடவும் வேண்டும்.

'மதிகெட்ட' ஆன்மா, மதிக்கவும் தெரியாமல், ஈடுபாடும் இல்லாமல் இருக்குமானால், அதன் வாழ்வில் வாட்டம் வரும்; அது வதங்கும். மற்றும் எந்தத் திசையில் செல்வது என்பதில் தெளிவில்லாமல் மயக்கமும் அடையும். அந்த வாட்டமும், மயக்கமும், சிறிய அளவு என்று இல்லாமல் முழுமையும் அதாவது அடியோடு பெற்றுவிடும். அதனையே அருணகிரிநாதர் 'மதி கெட்டு, அறவாடி, மயங்கி' என்றார். இங்கு 'அற' என்றது முழுமையும் ஆகும்.

அடுத்து, 'அறக்கதி கெட்டு' என்பது நீதி நெறி கெட்டு என்பதாகும். இத்தொடரில் வந்துள்ள 'அற' என்னும் சொல்லுக்கு தர்மம் அல்லது நீதி என்று பொருளாகும். இறைவனை மதிக்கத் தெரியாத அறிவு உடையவர்களால், அறநெறியில் நிற்க இயலாது. இறைவனை ஏற்காத சமயங்கள் இடையில் முறிந்து விடுகின்றன.

எனவே அறநெறியை வலியுறுத்தும் சமயங்களும், பொது ஒழுக்க நூல்களும் இறைவனுக்கான மதிப்பைத் தருவதைக் காணலாம்.

உலகத்துக்கே பொது அறநூலாக விளங்கும் திருக்குறளிலும், முதல் அதிகாரமே கடவுள் வாழ்த்தாக அமைந்திருப்பது இவ்வுண்மையை எடுத்துக்காட்டுவதாகும்.

மற்றும், எந்த ஆன்மா நீதிக்கும் நேர்மைக்கும் முதன்மை தருகின்றதோ அதனிடத்தில் இறை சத்தியாகிய அருள் சிறப்பாய் வந்து பாய்கின்றது. இறையுணர்வும், அற உணர்வும் எப்போதும் இணைந்தே செல்லும். இந்த அடிப்படையில், கடவுள் வாழ்த்துக்குப் பின் அறத்துப்பாலையும், அதில் ஆன்மாவுக்கு உரிய அன்பு பற்றியும், இறைவனுக்கு உரிய அருளைப்பற்றியும் திருவள்ளுவர் விளக்கி இருப்பதைக் காணலாம்.

பண்டைக்காலத்து அரசர்களும் இதே அடிப்படையில், அரசு செலுத்தினர். இறையருளைப் பின்பற்றியே தாம் அரசு செய்வதாக எண்ணினர். நீதிநெறி வழுவாமல் இருக்கும் பொருட்டுச் சான்றோர்களையும், பண்பு மிக்க அமைச்சர்களையும் துணைக்கு வைத்திருந்தனர். அரசன் இறைவனுக்கு முதன்மை கொடுக்கும்போது நாடும் மக்களும் சிறப்புற்றனர். அல்லாதபோது சீரழிந்தனர்.

மதிகெட்டு அதனால் வரும் தீமைகளுடன் வாழும் வாழ்வு வீண் வாழ்வு ஆகும். அதனை அருணகிரியார் 'அவம்' என்றார். அவம் என்னும் சொல் சிவத்துக்கு எதிர்ப்பதமாகும். சிவம் நன்மை, தூய்மை, மங்கலம் ஆனதனால், அவம் - தீமை, அழுக்கு, அமங்கலம் ஆகின்றது. அத்தகைய வாழ்வு மதிகெட்டதனால் வருகின்றது. 'எனக்குள்ள நிலை அத்தகைய வாழ்வுதானா'? என்று கேட்கின்றார்.

இங்கு ஒரு செய்தியை நாம் கவனிக்க வேண்டும். சென்ற பாடலில் (49-ல்) அருணகிரியார், தாம் தன்னந்தனியாக இறைவனிடம்பெற்ற முத்தி இன்பத்தை மற்றவர்களுக்கு வாயால் சொல்ல முடியாது என்றார். அதனால் அவர் அநுபூதி பெற்ற மகான் என்பது விளங்குகிறது. இந்தப்பாடலில் (50-ல்) என் வாழ்வு அவமாவதற்குத் தானா உள்ளது என்று கேட்கின்றார். இவ்வாறு கேட்பதில் ஏதோ ஒரு முரண்பாடு இருப்பதாகத் தோன்றுகிறது. அதாவது முத்தி நிலையை எய்தியவர் ஏன் மீண்டும் அவ வாழ்வைப் பற்றிப் பேசுகிறார்? அதற்குக் காரணம் வருமாறு:

தாம் முத்தி நிலையை அடைந்து விட்டாலும், சூழ உள்ளவர்கள் அவவாழ்வை வாழ்ந்து வருவதைக் கண்டு வருந்துகிறார். ஆனால் 'நீங்கள் அவவாழ்வை வாழ்கின்றீர்களே!' என்று சொல்லுவதற்கு

மனம் வராமல், கனிந்த உள்ளத்தால், அக்குற்றத்தைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு இறைவனிடம் முறையிடுகிறார். நாகரிகமாக எடுத்துச் சொல்லப்பட்ட இந்த இடித்துரையை நாம் புரிந்து கொண்டு மதிக்க வேண்டிய இறைவனை மட்டும் மதித்து, அவ வாழ்வுக்கு எதிரான சிவவாழ்வில் வாழ வேண்டும். அதையே இச்செய்யுள் கூறுகிறது. மற்றபடி அருணகிரியாருக்கு அவவாழ்வு வரும் என்பதில்லை.

(2) நதி புத்திர! ஞான சுகாதிப! அத்திதி புத்திரர் வீறடு சேவகனே!

'நதி' என்பது ஆறுகளுள் சிறந்ததாகிய கங்கையாகும். கங்காநதி அம்பிகையைக் குறிக்கின்றது. முருகன் கங்கா நதியில் தோன்றினான். கங்கை என்னும் சொல்லுக்கு நீராதல் என்று பொருளாகும். இமயமலையின் பனிக்கட்டி, உருகி நீராகி வருவதே கங்கை ஆகும். பனிக்கட்டி உருகி வருவது புற நிகழ்ச்சி. இந்தப்புற நிகழ்ச்சியைப் போலவே, அகத்தில் கல் போன்ற கட்டியான மனம் நீராகக் கரைந்து அன்பாகப் பாயும்போது அந்த அன்பு ஆற்றில் முருகன் தோன்றுவான். எனவே முருகனை 'நதி புத்திர' என்றார்.

எல்லாவற்றுள்ளும் மேலான பொருள் இறைவன் ஒருவனே. அவனைவிட மேலான பொருள் வேறு ஒன்று இல்லை என்பதை உணர்ந்து அதை மதித்து அந்த இறைவனிடம் அன்பு பூண்டு வழிபாடும், தேனிப்பும் செய்வதனால் அவன் அருளாகிய ஞானம் கைகூடுகிறது. அந்த ஞான அநுபவம் சுகம் தருவதாகும். அதைத் தருபவன் இறைவன் ஆதலால் அவனை 'ஞான சுகாதிப' என்றார். அவன் அச்சுகத்தைக் கொடுக்கின்ற தலைவன் ஆவான்.

'திதிபுத்திரர்' என்பவர் அசுரர் ஆவர். அவர்கள் காசிபருக்கும், திதி என்னும் பெண்ணுக்கும் பிறந்ததனால் ''திதி புத்திரர்' எனப்பட்டனர். மற்றும் ''திதி'' என்னும் சொல்லுக்கு 'இருத்தல்' என்னும் பொருள் உண்டு. அதனால், உலகியல் சுகத்திலேயே என்றும் நிலைத்து இருக்க விரும்புகின்றவர்களுக்கும் ''திதி புத்திரர்'' என்னும் பெயர் பொருந்துவதாக உள்ளது. உலக சுகம் மந்த (தாமச) குணத்தைத் தருவதாகும். ஞான சுகத்தைப் பெற விரும்புகிறவர்களுக்கு உலகியல் சுகம் ஒரு தடையாக உள்ளது. எனவே ஞானத்தை விரும்புவோர் பாசத்தை வெறுக்க வேண்டும். அதற்காக முயல்கின்ற ஆன்மாவுக்கு வருகின்ற இடையூறுகளைப் போக்கி, அவர்களுக்குத் துணை நின்று, முருகன் காப்பாற்றுகின்றான். அவனுடைய வீரம், பாசத்தை அறுப்பதில் முந்துகிறது.

'வீறு' என்பது மேற்கூறிய திதிபுத்திரருடைய பெருமை அல்லது செருக்கு ஆகும். முருகன் அவர்களுடைய செருக்கை 'அடு'த்தான். 'அடு'தல் பதப்படுத்துதல் ஆகும். ஆக, முருகன், உலகியலிலேயே நிலையாய் இருக்க விரும்புகின்றவர்களை அருளியலுக்குப் போகும் படிச் செய்து, அவர்களைப் பண்படுத்துகின்றான். எனவே ''திதி புத்திரர் வீறடு சேவகனே'' என்றார்.

'சேகவன்' என்பது காப்பாற்றுகின்றவன் ஆகும். அதாவது பொருளியல் வாழ்விலிருந்து அருளியலுக்கு அகவழியில் செல்வோருக்குத் தடைகளும், தீமைகளும் வராமல் காப்பவன் ஆவான்.

ஆக, முத்திநிலையை அடைந்த அருணகிரியார், மற்றவர்கள் குற்றத்தைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு, வாழ்வு வீணாகி விடுமோ என்று இந்தப்பாடலில் கேட்டுள்ளார். அவருடைய கருணை உள்ளத்தைநாம் புரிந்துகொண்டு, அவர் வருந்தாத வகையில் திருந்த வேண்டுவது நம் பொறுப்பாக உள்ளது.

III சக்கரம்

ஆக்ஞா சக்கரத்தைச் சேர்ந்த 49, 50, 51 ஆகிய மூன்று பாடல்ககளும் மூன்று கண்களைப்பற்றிக் கூறுகின்றன என்பதை முன்னமே பார்த்தோம். அவற்றுள் இப்பாடல் இடது கண்ணைக் குறிப்பதாகும். அது சந்திர சத்திக்கு உரியது. இப்பாடலுக்கான மந்திர எழுத்து 'க்ஷ' கரம் ஆகும்.

இந்தப் பாடலுக்கான தனி சக்கரம் கொடுக்கப்படவில்லை. எனவே ஆக்ஞா சக்கர விவரங்களை 51வது பாடலின் இறுதியில் காணலாம்.

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

30/5/96.

பாட்டு-51

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்,
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்,
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்,
குருவாய், வருவாய், அருள்வாய் குகனே!

I பொழிப்புரை

குகனே! நீ உருவாக வந்தும், அருவாக இருந்தும், உள்ளவனாகவும், இல்லாதவனைப்போன்று மறைந்திருந்தும், நறுமணமாகவும், பூவாகவும், மணியாகவும், ஒளியாகவும், கருவாகவும், உயிராகவும், உயிர்களின் குறிக்கோளாகிய முத்தியாகவும் அதை அடைவதற்கான நெறியாகவும் இருந்து, ஆன்மாக்களின் அறியாமையைப் போக்குகின்றாய். என்றாலும் குருவாக வந்து மெய்யுணர்வை அருளுவாயாக!

II விளக்கவுரை

இந்தப் பாடலில் அருணகிரிநாதர் இறைவனுடைய இலக்கணத்தைக் கூறுவதோடு குருவடிவில் வந்து ஞானத்தை அருள வேண்டும் என்று வேண்டுகிறார்.

(1) உருவாய், அருவாய், உளதாய், இலதாய்

காண்பதற்கு ஒரு தோற்றம் உடையதாய், கையால் பிடிபடக் கூடியதாகிய பொருளுக்கு 'உருவம்' என்று பெயர். கண்ணுக்குப் புலப்படாத பொருள் 'அருவம்' ஆகும்.

பனிக்கட்டிக்கு உருவம் இருக்கிறது. அது உருகி, மேலும் காய்ச்சப்படும்போது ஆவியாகி மறைந்து விடுகிறது. ஆவி, தண்மை பெறும்போது மீண்டும் பனிக்கட்டியாக உருவம் பெறுகிறது. இதனால் ஒரே பொருள் உருவமாகவும், அருவமாகவும் இருக்க முடியும் என்பது தெரிகின்றது.

நம் சூழலில் உள்ள ஐம்பூதப் பொருள்களுள் கல்லும் மண்ணும் திண்மையான உருவம் பெற்றுள்ளன.

தண்ணீர் இருப்பது கண்ணுக்கும் கைக்கும் புலப்பட்டாலும், அதனுடைய உருவம் இன்னதுதான் என்று சொல்ல முடிவதில்லை. அதனை எந்தக் கலத்தில் ஊற்றி வைக்கின்றோமோ அந்த

வடிவத்தைப் பெறுகின்றது. எனவே அது உருவமும், அருவமும் கலந்த அருவுருவம் ஆகின்றது.

தீ (தண்ணீரைப்போலக்) காணப்பட்டாலும் அதன் உருவம் நிலையற்றதாய் உள்ளது. எனவே அதுவும் அருவுருவம் ஆகின்றது.

காற்று, வீசும்போது அதன் இருப்புநிலை தெரிகின்றது. ஆனால் அதனைக் காணமுடிவதில்லை. கைக்கு அகப்படுவதும் இல்லை. எனவே அது அருவம் ஆகின்றது.

வானம் ஐம்புலனுக்கும் எட்டாத நுண்பொருளாகும். எனவே அதுவும் அருவம் ஆகின்றது.

பருப்பொருளுக்குப் 'பூதம்' என்று பெயர். வானத்தையும் நம் முன்னோர் பருப்பொருளாகவே கொண்டுள்ளனர். அது எல்லை இல்லாமல் பரந்துகிடப்பதனால் 'வான வெளி' எனப்படுகிறது. இந்த வானவெளி மற்ற நான்கு பூதங்களாகிய மண், நீர், தீ, காற்று ஆகியவற்றைத் தாங்கிக்கொண்டு அவற்றுக்கு இருப்பிடமாய் இருந்து வருகிறது.

இந்த வானவெளியைவிட நுட்பமான ஒரு வெளியும் இருக்கின்றது. அது 'மனவெளி'யாகும். மனவெளி அந்தக்கரணங்களாகிய சித்தம், அகங்காரம், புத்தி, மனம் ஆகியவற்றையும், அவற்றுக்குக்கீழ்ப்பட்ட (20) இருபது தத்துவங்களையும் (ஆக மொத்தம் 24 தத்துவங்களையும்) தாங்கிக்கொண்டு அவற்றுக்கெல்லாம் இருப்பிடமாய் உள்ளது.

இந்த மனவெளிக்கும் நுட்பமான மற்றும் மேம்பட்டதான வேறொரு வெளியும் இருக்கின்றது. அது 'அருள் வெளி' அல்லது ''ஞான வெளி'' ஆகும். இந்த வெளி, மேற்கூறிய வானவெளி மனவெளிகளோடு, முப்பத்தாறு தத்துவங்களையும் தாங்கிக்கொண்டு அவை எல்லாவற்றுக்கும் இருப்பிடமாய் உள்ளது.

இந்த அருள்வெளிக்கும் மேம்பட்டவனே இறைவன் ஆவான். அவனுக்கும் மேம்பட்ட அல்லது நுட்பமான பொருள் வேறு ஏதும் இல்லை. எல்லாவற்றையும் கடந்தவன் அவன் ஒருவனேயாவான். ஆதலால் அவனைக் 'கடவுள்' என்றனர்.

அவன், உருவம், அருவுருவம், அருவம் ஆகிய உருவபேதங்களுக்கு அப்பாற்பட்டவன். அவனை உரு என்றோ, அருவுரு என்றோ, அரு என்றோ பகுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் ஆன்ம அறிவுக்கு இல்லை. ஆன்ம அறிவின் கற்பனை எல்லாம் அளவுபட்டதே. எனவே அவனைக் 'கற்பனை கடந்த சோதி' என்றனர்.

அப்படிப்பட்ட இறைவன் 'கருணையே உருவமாகி'க் கீழிறங்கி வருவதும் உண்டு. ஆனால் அவனுடைய சொந்த நிலை கற்பனை கடந்ததேயாகும். அவனுடைய சொந்த நிலைக்குச் 'சத்'நிலை அல்லது 'உண்மை நிலை' என்று பெயர். அந்த நிலையிலிருந்து கடைசி தத்துவமாகிய மண்வரை அவன் இறங்கி வருகின்றான். அதாவது ஐம்பூதங்களாலான கோடானுகோடி அண்டங்களையே தனக்கு உடலாகவும் உருவமாகவும் கொள்கின்றான். அவ்வாறு அண்டம் முழுவதும் விளங்குவதையே 'அண்டலிங்கம்' என்பர்.

அந்த அண்டங்களில் ஒவ்வொரு ஆன்மாவின் உடலையும் தன் உடலாகக் கொண்டு விளங்கும்போது அது பிண்டலிங்கம் எனப்பெறும்.

அந்தப் பிண்டங்களிலும் ஆன்மாவின் மனதைக் கோயிலாகக் கொள்ளும்போது அது''மனமணிலிங்கம்'' எனப்பெறும்.

அவ்வாறு அவன் உலக வண்ணமாகவும், ஆன்மாக்களாகவும், காட்சி தரும்போது தனிப்பட்ட ஆன்மாக்களின் சொந்த நிலை தெரிவதில்லை. இறைவனுடைய வடிவமே விளங்கித் தோன்றும். அப்போது அவனுடைய உருவங்கள் கணக்கில் அடங்கமாட்டா. அவ்வாறு அவன், எண்ணிலா உருவங்களாக வந்ததையே இங்கு அருணகிரியார் 'உருவாய்' என்று கூறினார்.

மேற்கூறிய உருவங்களாக அவன் இறங்குவதற்கு முன்பு கற்பனைக்கும் புலன்களுக்கும் புலப்படாத அதீத நிலையில் இருந்ததனால் அவனை 'அருவாய்' என்றார்.

மற்றும், நம் வாழ்க்கை நடைபெறுவதற்குச் சில நுட்பமான, அருவமான செயல்களும் மறைவாக நடைபெறுகின்றன. கடையில் ஒரு பழத்தை வாங்கிஉண்கின்றோம். அப்பழம் கடைக்கு வருவதற்கு முன்பு, ஒருவர் செடி வைத்து, வளர்த்து அது பூத்துக் காய்த்துப் பழுத்தபிறகு அதனைப் பறித்துக் கடைக்குக்கொண்டு வந்துள்ளனர். இச்செயல்களெல்லாம் பழத்தைக் காண்பதற்கு முன்னமேயே நிகழ்ந்து விட்டன. அதைப்போலவே நம் வாழ்வுக்கும், உலக இயக்கத்துக்கும் முன்பே அருவமாய்ப் பல செயல்கள் நடைபெற்றுள்ளன. அவை முதலில் நடைபெற்றுப் பிறகு புறத்தில் உருப்பெறுவதனாலும், அவற்றுடன் எல்லாம் இறைவன் உடனிருந்தும், தானேயாகவும் இயங்கியும் இயக்குவதனாலும், 'உருவாய், அருவாய்' என்றார்.

இறைவன் உருக்கொள்ளும் நடைமுறையைத் திருஞானசம்பந்தர் ஒரு தேவாரத்தில் விளக்கியுள்ளார். அது வருமாறு:

'பிடியதன் உரு உமைகொள, மிகு கரியது
வடிகொடு, தனதுஅடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதிவர அருளினன்; மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே.
(1ஆம் திருமுறை. திருவலிவலப் பதிகம் - 5)

இறைவனுடைய இயல்பு நிலை 'சத்' நிலை என்று பார்த்தோம். அவன் ஒரு நோக்கத்தைக் கருதி உருக்கொள்ள எண்ணும்போது, அவனுடைய ஒரு கூறு பிரிந்து உருவெடுக்கும். அது 'சித்' நிலையாகும். அதுவே அம்பிகை எனப்படும். அம்பிகை உருவெடுக்கும்போது இறைவனும் பின்தொடர்ந்து உருக்கொள்வான். இத்தேவாரத்தின்படி, அம்பிகை யானையாக வந்தபோது, இறைவனும் யானையாய்ப் பின்தொடர்ந்தான்; கணபதியை அருளினான். பிள்ளையாரின் தோற்றம் 'ஆனந்தநிலை' ஆகும். ஆக, இறைவன் உருக்கொள்ளும் முறை 'சச்சிதானந்த' முறை என்று இத்தேவாரத்தால் விளக்கப்பட்டது. (கற்பனை கடந்த நிலையிலிருந்து கணபதி நிலைக்கு வரும்போது அவனுடைய ஒரு கூறுதான் உருக்கொள்கிறது.)

புறச்சமயிகள் உருவாய் வருவதை வேறுவிதமாகக் கூறுவர். அதாவது, நாம் எதை மனத்தால் ஆழ்ந்து நினைத்து, உருச் செய்கிறோமோ அதுவே உருவெடுக்கும். இதற்காக இறைவன் என்று ஒரு பொருள் இருக்க வேண்டுமென்பதில்லை என்பர். இந்தக் கூற்று உண்மையன்று. நினைப்பதே உருவாய் வருவது ஓரளவு மட்டுமே நடைபெறக்கூடும். வெறும் நினைப்பு எல்லா நேரங்களிலும் உருப்பெறுவதில்லை. மற்றும் இறைவன் உருக்கொண்டு வருவதற்கும், நினைப்பு உருக்கொள்வதற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. அவ்விரண்டும் வெவ்வேறானவை.

நாம் ஒரு பொருளை நினைந்து உருச்செய்து, அதுவே கிடைக்குமானால், அது நினைப்பால் வந்தது என்னலாம். நினைத்ததற்கு மேற்பட்ட உருவங்கள் வந்தால், அது இறைவனால் வந்ததென்றே கொள்ள வேண்டும்.

திருஞானசம்பந்தர் வாழ்க்கையில் இந்த உண்மையைக் காணலாம். அவர் தம் தகப்பனாரோடு, குளக்கரைக்குச் சென்றபோது அவருக்கு வயது மூன்று ஆண்டுகளாகும். அந்த வயது, ஒரு பொருளை நினைந்து அதனை உருவேற்றக் கூடியதன்று. அவர், தம் தகப்பனார் குளத்தில் மூழ்கி இருந்தபோது அவர் வேண்டி அழுததெல்லாம், தம்முடைய அம்மாவையும் அப்பாவையும் நினைந்தே ஆகும். ஆனால் அவர் கண்டது தோடுடைய

செவியோடு, மதி சூடிய, திருநீறு அணிந்த அம்மையப்பர் ஆவர். அத்தோற்றத்தோடு, அவர் குடிப்பதற்குப் பாலையும், அத்துடன் ஞானத்தையும் பெற்றார். இவை எல்லாம் வெறும் நினைப்பால் உருப்பெறுவன அல்ல. அங்கு இறைவனே 'உருவாய்' வந்தான். இறைவனுடைய சொந்த நிலை உருவம் கடந்த அதீத நிலையானாலும், பின்னே அவன் உருவெடுத்ததனால் அந்த இரண்டு நிலைகளையும் நினைவுகூரும் முறையில் 'உருவாய், அருவாய்' என்றார்.

மற்றும், ஒரு பொருள் முன்னமே உருவாய் இருந்து, நம்முன் அதே உருவத்தில் தோன்றினால் அதனை 'உருவாய் வந்தது' என்று சொல்ல மாட்டோம். முன்பு அருவாய் இருந்து இப்போது உருவாய் வருமானால், ''உருவாய் வந்தது'' என்று சொல்லுவோம். இங்கு இறைவன் அருவிலிருந்து உருவுக்கு வருவதனால் ''உருவாய்'' என்றார்.

இனி, உருவம் கடந்த பொருள் உருவாய் வரும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம். வந்த உருவத்துக்கு நம்மிடமுள்ள உருப்படியான பொருள்களைப் படைக்க வேண்டும். பூ, பழம் முதலியவற்றைப் படைக்கலாம். (ஆடு, கோழி முதலியவற்றைப் பயன்படுத்துவது பாதகச் செயலாகும்). படைப்புப் பொருள்களுள் மிகச் சிறந்தது நம் உள்ளமாகும். உள்ளத்தைப் படைப்பது (அல்லது பலியிடுவது) என்னும் செயலை நினைப்பூட்டவே திருக்கோயில்களில் கொடிமரத்துக்கு அடுத்துப் பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. அங்குச் சென்று சிறிது நேரம் தங்கி, நம் பாசப்பண்டங்களையும், அவற்றின் மீது நாம் கொண்டுள்ள பற்றையும் பலி கொடுத்ததாக எண்ண வேண்டும். பலி கொடுப்பது என்பது பக்குவப்படுத்துவதாகும்.

அடுத்து, 'உளதாய், இலதாய்' என்பதில் இறைவனுடைய இருப்பு நிலையை அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். அன்பு பாராட்டுபவர்களுக்கு அவன் இருக்கின்றான். பாராட்டாதவர்களுக்கு அவன் இல்லாதவன் போல மறைந்து கொள்கின்றான். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்' என்னும் பழமொழிக்கு ஏற்ப அன்பர்களுக்கு அவன் என்றும் நீங்காத்துணையாக இருக்கின்றான். அவன் புறத்தார்க்குச் சேயோன் ஆவான். அதாவது புறப்பொருளையே எண்ணி இருப்பவர்க்கு இல்லாதவனைப்போலச் (தூரத்தில்) சேய்மையில் இருப்பான்.

(2) மருவாய், மலராய், மணியாய் ஒளியாய்

ஆன்மாக்களை உய்விப்பதே இறைவனுடைய நோக்கம் ஆகும். இந்த நோக்கம் நிறைவேறுவதற்காக, அவன் அவற்றோடு கலந்து உதவி செய்ய வேண்டியுள்ளது. அதனால், அந்த ஆன்மாக்கள்தான் இறைவன் என்னும்படி பேதமில்லாமல் கலக்கின்றான்.

ஆன்மாக்களோடு ஒன்றுவதைப்போலவே பண்டங்களிலும் வேறுபாடு தெரியாதபடி கலந்துள்ளான். அதனாலேயே ஞாயிற்றுக்கு ஒளியும், நிலவுக்குத் தண்மையும், தீயில் வெம்மையும் பிறவும் அமைந்துள்ளன. அவன் கலப்பு நிலையை நினைவுபடுத்தவே அருணகிரியார், 'மருவாய், மலராய், மணியாய் ஒளியாய்' என்றார்.

மருவுதல் என்பது சேர்தல் ஆகும். மலரில் இருக்கின்ற பூந்தாது நம் மூக்குக்கு வந்து சேர்வதனால் அதற்கு 'மரு' என்னும் பெயர் வந்தது.

மருவிலும் மலரிலும் இறைவன் கலந்துள்ளதைப் போலவே மணியிலும் ஒளியிலும் அவன் கலந்துள்ளான். நாம் காணும் எல்லாப் பொருள்களிலும், ஆன்மாக்களிலும், அவை பெறுகின்ற துய்ப்புகளி லும், எங்கும் நீக்கமற நிறைந்து, அவற்றை இயக்கியும், அவை இயங்கும் பொருட்டுத் தானும் இயங்கியும், ஆன்ம முன்னேற்றத்தைச் செய்து வருகின்றான்.

எனவே அவன் எந்தெந்தப் பொருள்களில் எவ்வாறெல்லாம் கலந்துள்ளான் என்று பட்டியலிட்டால் அது முடிவின்றி நீண்டு போகும். அப்பர் பெருமான் அத்தகைய பட்டியலைச் சுருக்கமாக 'இருநிலனாய்த் தீயாகி' என்று தொடங்கும் நின்ற திருத்தாண்டகத்தில் கொடுத்துள்ளார். அதிலும், 'பூவாகி, பூவுக்கோர் நாற்றமாகி, புக்குளால் வாசமாய்' என்றும், 'மண்ணாகி விண்ணாகி, மலையுமாகி, வயிரமுமாய் மாணிக்கம் தானேயாகி, கண்ணாகி, கண்ணுக்கோர் மணியுமாகி' என்றும் வந்துள்ளன. அருணகிரியார் அதனையே 'மருவாய், மலராய், மணியாய் ஒளியாய்' என்றார். அப்பொருள் களைக் காணும்போது, அவற்றுடன் அவன் கலந்திருப்பதையும் உணரவேண்டும். உணர்ந்து, இறைவன் வெளிப்படுத்துகின்ற மெய்ப் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

(3) கருவாய், உயிராய், கதியாய் விதியாய்

படைப்புத் தொழிலில் - ஆன்மாக்களுக்குக் கருவைத் தந்து, அதில் பொருந்தும்படிச் செய்கின்றான். எந்தக் கருவில் எந்த உயிர் பொருந்த வேண்டும் என்பது அவற்றுக்குத் தெரிவதில்லை.

அவற்றுக்கு உரிய கருவில் அவற்றைச் சேர்க்க வேண்டுமானால் அவனே அவற்றோடெல்லாம் கலந்து அவையே தானாகி இயங்க வேண்டியுள்ளது. எனவே அவனே கருவாகவும் உயிராகவும், விளங்குகின்றான். என்னே அவனுடைய கருணை! என்னே அவனுடைய செயல் திறம்!

அவன் கருவாய், உயிராய் ஒருமுறை இயங்கிவிட்டு அதோடு நீங்கி விடுவதில்லை. அவை பல பிறவிகளை எடுத்துத் தமக்குக் குறிக்கோள் அல்லது கதியாக உள்ள முத்தி நிலையை அடையும் வரையும் அவற்றுடன் இருந்து துணை செய்கின்றான். அதன் பின்னரும் உடன் இருக்கின்றான்.

முத்தி நிலையை அடைவதற்கான விதி அல்லது நெறிகளைக் காட்டி, வளர்க்கின்றான். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளாகவும் அவன் விளங்குகின்றான். அந்தந்த ஆன்ம இயல்புக்கேற்ற நெறியைத் தந்து உய்விக்கின்றான்.

விதி என்னும் சொல்லுக்கு ஊழ் என்றும் பொருளுண்டு. அந்த ஊழாகவும் இருந்துகொண்டு, நன்மை தீமைகளைத் துய்ப்பிக் கின்றான். அதையே அருணகிரியார் 'கருவாய் உயிராய்' என்றும், 'கதியாய் விதியாய்' என்றும் கூறினார்.

நன்மை தீமைகளை ஆன்மாக்கள் துய்க்கும்படிச் செய்ய, இறைவனும் துய்த்துத் துய்ப்பிக்க வேண்டி இருப்பதனால் அவனுக் கும் இன்ப துன்ப நுகர்ச்சி உண்டோ என்று தோன்றும். அவன் இயல்பாகவே வினையிலிருந்து நீங்கியவனாதலால் அந்த நுகர்ச்சிகள் அவனைத் தாக்க மாட்டா.

(4) குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

இறைவன் உருவெடுத்து வருவது ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு விதமாக அமையும். அவன் வரவை எல்லோராலும் கண்டு கொள்ளவும் முடிவதில்லை.

அவன் குதிரைமீது வந்தபோது பாண்டியனுக்குத் தெரிய வில்லை. குதிரைச்சேவகன் என்றே கருதினான். அதே உருவத்தைப் பார்த்த மாணிக்கவாசகர் இறைவன் வந்திருப்பதைக் கண்டு கொண்டார். எல்லோர்க்கும் அவ்வாறு கண்டு கொள்வது இயலுவ தில்லை.

சுந்தரர் போன்ற நாயன்மார் வாழ்க்கைகளிலும் இந்த மாட் டாமை இருந்திருக்கிறது. தம் திருமணத்தைத் தடுத்தவர் இறைவனே என்பதை அவரால் முதலில் கண்டு கொள்ள முடியவில்லை. மற்றும்,

திருவதிகை சித்தவட மடத்தில் தம் தலைமீது கால் படும்படி வைத்த முதியவர் இறைவன்தான் என்பது அவருக்குத் தெரியவில்லை. இப்படிப் பல நிகழ்ச்சிகள் நேர்ந்துள்ளன.

பக்குவப்பட்ட சுந்தரர் போன்ற ஆன்மாக்களுக்கே அவ்வாறு ஆயிற்று என்றால் எளிய ஆன்மாக்களுக்கு அது மேலும் இயலாததாகவே இருக்கும்.

எனவேதான் அருணகிரியார் இறைவனை, எளிதில் விளங்கும் படியான குருவடிவில் வரவேண்டும் என்று வேண்டுகிறார்.

உயிர்களுக்கு மெய்யுணர்வைப் புகட்டுவதற்குச் சூழலில் பல உருவங்கள் இருப்பினும், அவற்றுள் இறைவனைக் காணும் ஆற்றல் இல்லாமையால், குருவாக வரவேண்டும் என்று வேண்டுகிறார்.

மெய்யுணர்வை அருளுவதற்கு இறைவன் மூன்று வகையான முறைகளைக் கையாள்கின்றான். அவை:

(1) *உள்ளிருந்து உணர்த்துவது*

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களுள் மாயையையும் கன்மத்தையும் கடந்து, ஆணவமாகிய ஒரு மலத்தை மட்டும் உடைய ஆன்மாக்களுக்குப் புறத்தே உருவெடுத்து வராமல், அவர்களுடைய உள்ளத்திலிருந்துகொண்டே மெய்ப்பொருளை உணர்த்துகிறான். ஒரு மலத்தை மட்டும் உடைய ஆன்மாக்களுக்கு 'விஞ்ஞானகலர்' என்று பெயர். மெய்கண்ட தேவர் இந்த வகையைச் சேர்ந்தவர்

(2) *தெய்வ உருவில் வருவது*

மாயாமலத்தை மட்டும் கடந்தவரும், கன்மமும் ஆணவமும் ஆகிய இரண்டு மலங்களை உடையவர்களுக்குப் புறத்தே தெய்வ உருவில் வந்து ஞானத்தை அருளுவார். இந்த வகையைச் சேர்ந்த ஆன்மாக்களுக்குப் 'பிரளயாகலர்' என்று பெயர். திருஞான சம்பந்தர் இந்த வகையைச் சேர்ந்தவராவார்.

(3) *மனித உருவில் வருவது*

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் உடைய ஆன்மாக்களுக்கு இறைவன் மனித உருவில் குருவாக வந்து அருள்பாலிப்பார். இந்த வகையினருக்குச் 'சகலர்' என்று பெயர். மாணிக்கவாசகர் இந்த வகையைச் சேர்ந்தவர்.

இவ்வாறு வருகின்ற இறைவனின் உருவத்தை அவரவர் தகுதிக்கு ஏற்ப எதிர்பார்க்க வேண்டும். இறைவன் வரவை எண்ணி, தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டும், ஆயத்தம் செய்து கொண்டும் இருக்க வேண்டும்.


இனி, அருணகிரியார், உபதேசம் பெற்றுத் தேர்ந்து அநுபூதியையும் பெற்றவராய் இருந்தும், இந்தப் பாடலில் குருவாய் வர வேண்டும் என்று முருகனை ஏன் கேட்டுக்கொண்டார் என்று தோன்றும். அதற்குக் காரணம் வருமாறு: இந்த வேண்டுகோளை அவர் தமக்காகச் செய்து கொள்ளவில்லை. தாம் பெற்ற அநுபூதி நிலையை மற்றவர்களும் பெற வேண்டும் என்பது அவருடைய கருணை உள்ளத்தின் விருப்பமாகும். நமக்காகவே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

எனவே அருணகிரியாரின் கருணை உள்ளத்துக்கு நன்றி செலுத்திக்கொண்டு இந்தப் பாடலைப் பலகாலும் ஓதி, குருவை வரப்பெற்று உய்வோமாக! வாழ்க அருணகிரியாரின் நன்னெஞ்சம்.

III சக்கரம்

இந்த 51வது பாடல் கந்தரநுபூதியின் இறுதிப்பாடலாகும். 49, 50, 51 ஆகிய மூன்று பாடல்களும், ஆக்ஞா சக்கரத்தைச் சேர்ந்தவை. ஆறு ஆதாரங்களுள் இறுதிச் சக்கரம் இதுவேயாகும்.

ஆக்ஞா சக்கரத்துக்கு மந்திர எழுத்து 'ய'கரம் ஆகும். இது 'நமசிவய' என்னும் ஐந்தெழுத்தின் இறுதி எழுத்தாகும். 'ய'கரம் ஆன்மாவைக் குறிக்கின்றது.

ஆக்ஞா சக்கரத்தின் வடிவம் வில்வஇலை போன்றது. அது மூன்று இதழ்களை உடையது. () அவை வலதுகண், இடதுகண், நெற்றிக்கண்களைக் குறிப்பன. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(1) வலது கண் (பாடல் - 49)

இதன் மந்திர எழுத்து 'ஹ'கரம் ஆகும். இது அதட்டும் ஒலியாகும்.

இது சூரிய சத்தியை உடையது. சூரிய மண்டலமாகிய மார்பைச் சேர்ந்தது. இது பொருளாதாரத்துக்கு உரியது. திருமாலின் இயல்பு உடையது. இது ஆன்ம சத்தியையும் குறிக்கின்றது.

யோகப்பயிற்சியில் மூச்சு மூலாதாரத்திலிருந்து மேல் நோக்கிச் செல்லும். அவ்வாறு செல்லத்தொடங்கும்போது 'ஹ' என்னும் ஒலி தோன்றும். அது அதட்டும் ஒலியாகும்.

(2) இடது கண் (பாடல் - 50)

இதன் மந்திர எழுத்து 'க்ஷ'கரம் ஆகும். இது கனிந்த ஒலி.

இது சந்திர சத்தியை உடையது. சந்திர மண்டலமாகிய தலையைச் சேர்ந்தது. இது கலைக்கு அதாவது கலாசாரத்துக்கு உரியது. பிரம்மாவின் இயல்ப் உடையது.

சந்திர மண்டலம் தலையைச் சேர்ந்ததனால் இறைவனும் சந்திரனைத் தலையில் சூடியுள்ளான்.

கலை, பொருளைவிட உயர்ந்தது. எனவே வலது கண்ணைவிட இடது கண் உயர்ந்ததாகும்.

பொருளிலிருந்து கலை தோன்றுவதனால், திருமாலின் உந்தியில் பிரம்மா தோன்றினார் என்பர்.

நிலவு தண்மை உடையது. நிலவில் உலாவுவது மன ஆற்றலையும், மின் ஆற்றலையும் தரும்.

(3) நெற்றிக்கண் (பாடல் - 51)

இதற்கு மந்திர எழுத்து 'ள'கரம் ஆகும். இது அழகிய ஒலியாகும்.

இது அம்பிகைக்கு (அதாவது அருளுக்கு) உரியது. இது தீத்தன்மை உடையது. இங்குத்தீ என்பது மின் சத்தியாகும். மின்னல் சத்திதான் சூரிய சந்திரர்களுக்கு ஆதாரமாகும். மின்னல் தோன்றினால் மழைவரும். மழை இறைவனுடைய ஒரு அருள் சத்தியாகும்.

அருள் நெற்றிக்கண்ணால் வேலை செய்யும். மனித மாட்சிக்கு அருள் மிகவும் இன்றியமையாததாகும். அருள்தான் பொருளைக் கலையாக மாற்றுகிறது.


நெற்றிக்கண்ணைச் சிதம்பரம் என்றும், ஞானாகாசம் என்றும், அருள்வெளி என்றும் கூறுவர். இறைவன் திருநடம் புரியும் இடமும் இந்த நெற்றிக்கண்ணே ஆகும்.

புருவநடுவுக்கு மேலே பல உயர்ந்த நிலைகள் உள்ளன என்பதை முன்னமேயே பார்த்துள்ளோம். புருவ நடுவுக்குக்கீழே அத்தகைய நிலைகள் இல்லை. மேல்பகுதியின் வடிவம் பாதிசந்திரன்

ஆகும்  இந்த இடத்தை மதிநுதல் என்பர். இந்த அரைவட்டத்தின் உள்ளேயே 'ய'கர எழுத்து அமையும்.

மூன்று நாடிகளின் வழியே செய்யப்படும் யோகம் முதிர்ந்து புருவ நடுவில் ஒன்று சேர்கின்றது.

ஆக்ஞை ஆதார சக்கரம் வருமாறு:



திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்


பகுதி VI

(ii) ஆக்ஞை ஆதார சக்கரம்

ஆக்ஞா சக்கரம் புருவநடுவில் உள்ளது. இது ஆன்மா மெய்ஞானத்தைப் பெறுகின்ற இடமாகும். இச்சக்கரத்துக்குரிய மந்திர எழுத்து - 'ய'கரம் ஆகும். நமசிவய என்னும் ஐந்தெழுத்தில் ஐந்தாவதும் இறுதியுமாகிய எழுத்து இந்த 'ய'கரம் ஆகும். 'ய'கரம் ஆன்மாவைக் குறிக்கும்.

இச்சக்கரத்துக்கு மூன்று இதழ்கள் உள்ளன. அவை வில்வ இலை போன்று அமைந்துள்ளன.

இச்சக்கரத்தின் வடிவம் அரை வட்டமாகும். எனவே 'ய'கரம் அரை வட்டத்துக்குள்ளும், ஹ, க்ஷ, ள என்னும் மூன்று எழுத்துக்கள் மூன்று இதழ்களிலும் உள்ளன. சக்கரம் வருமாறு:



இச்சக்கரத்தின் அதிதேவதை சதாசிவம் ஆவார். சத்திமனோன் மணியாகும். இச்சக்கரம் வானத் தன்மையுடையது; படிக நிறமுடையது. அநுபூதியின் இறுதி மூன்று பாடல்களாகிய 49, 50, 51 பாடல்களில் இச்சக்கரத்துக்கான விளக்கங்களைக் காணலாம்.

கந்தரநுபூதி விளக்கவுரை நூல் முற்றிற்று
திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

VII. பாடல் முதல் குறிப்பு அகராதி

ஆறு ஆதார மலர்களின் பட்டியல்

எண்	ஆதார மல ரின் பெயர்	இடம்	வடிவு	இதழ் களின் எண்	மந்திர எழுத்து	இதழ்களின் எழுத்துக்கள்	பீஜாட்சரம்	நிறம் & தன்மை	அதி தேவதை யும் சத்தியும்	அநுபூதிப் பாடல் எண்	பிற செய்திகள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)
1.	மூலாதாரம்	கருவாய்க்கும் எருவாய்க்கும் இடையில்	கீழ் நோக்கிய முக்கோணம்	4	ஓம்	வ, ச (श)ஷ, ஸ	ஆ0, ஸ0, ஹ0	மாணிக்க நிறம், மண்தன்மை	விநாயகர் & குண்டலினி	காப்புச்செய்யுள் & 1-4	
2.	சுவாதிட்டானம்	மூலாதாரத் துக்கு மேல், இடதுபக்கம்	சதுரம்	6	ந	ப:, ப:॰, ம, ய, ர, ல,	ஸ, ஸ0, ந0, நா0, ஆ0, ல0, அ0, அ, ஐ0	செம்பொன் நிறம் மண் தன்மை	பிரம்மா சரஸ் வதி	5-10	
3.	மணிபூரகம்	கொப்பூழ் (நாபி)	பிறைவடிவம்	10	3	ட:, ட:॰, ண, த, த:, த॰, த:॰, ந, ப ப:	ஸி, ஸி0, ம0, மா0, ஈ0, க:॰ ங், இ0, இ, க்லீ0	மரகத நிறம், நீர் தன்மை	திருமால் இலக் குமி	11-20	
4.	அநாகதம்	மார்பு (இடப் பாகம்)	மேல் நோக் கிய முக்கோ ணம்	12	சி	க, க॰, க:, க:॰, ங, ச, ச॰, ச:, ச:॰, ஞ, ட ட	ஸ, ஸௌ0, சி0, சீ0, ஊ0, வ0, ர॰, உ, கௌ0	சிவப்பு நிறம் தீத்தன்மை	உருத்திரன், உருத்திரி	21-32	
5.	விசத்தி	கழுத்து (கண் டம்)	அறுகோணம்	16	வ	அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, லூ, ஏ, ஐ, ஓ, ஔ அ0, அ:	ஸெ, ஸெ0, வா0, ஏ0, த0, எ0, எ, ரீ0, வ0	கருநிறம் காற் றுத்தன்மை	மகேஸ்வரன், மகேஸ்வரி	33-48	
6.	ஆக்ஞை	புருவநடு	அரைவட்டம்	3	ய	ஹ க்ஷ ள		படிக நிறம் வானத்தன்மை	சதாசிவம், மனோன்மணி	49-51	

குறிப்பு:

இந்நூலில் வருகின்ற வல்லொற்று வல்லின எழுத்துக்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களின் ஒலியைப் போல ஒலிக்கவும்:

க Ka	ச Cha	ட Ta	த Tha	ப pa
க॰ KKa	ச॰ Chcha	ட॰ TTa	த॰ ThTha	ப॰ ppa
க: Ga	ச: Ja	ட: Da	த: Dha	ப: ba
க:॰ GGha	ச:॰ JJha	ட:॰ DDa	த:॰ DaDha	ப:॰ bbha

	[illegible]	4	32	6-10-93	11
27	8-9-53	4	32	9-10-93	11
28	15-9-53	4	26	11-10-93	9
29	22-9-53	4	27	12-10-93	9
30	29-9-53	3	20	22-3-94	8
31	6-10-53	4	25	14-10-93	6
32	13-10-53	3	27	16-10-93	8
33	20-10-53	4	28	20-10-93	10
34	27-10-53	5	29	25-10-93	11
35	3-11-53	4	26	29-3-94	15
36	17-11-53	4	38	6-4-94	11
37	24-11-53	4	29	10-4-94	14
38	1-12-53	3	32	25-6-94	15
39	8-12-53	3	12	1-9-94	14
40	20-12-53	3	23	26-9-94	11
41	27-12-53	3	12	4-12-94	13
42	3-1-54	3	35	4-10-94	21
43	10-1-54	3	32	9-10-94	13
44	17-1-54	3	21	12-10-94	13
45	26-1-54	4	24	14-10-94	11
46	9-2-54	3	19	26-10-94	14
47	16-2-54	3	24	31-10-94	16
48	2-3-54	3	8	5-11-94	12
49	9-3-54	2	3	20-11-94	8
50	6-4-54	2	9	29-11-94	15
51	11-5-54	—	15	11-12-94	19
	18-5-54				
ஆறு ஆதார மலர்கள்		20	116		23
Total		221	1643		637

442

பிழை திருத்தம்

பக்க எண்	பத்தி எண்	வரி எண்	பிழை	திருத்தம்
ll	அளவு	12	11 செ.மீX 21.8 செ.மீ.	14.3. செமீ X 21.8 செ.மீ.
ii	பக்கங்கள்	14	36+442	36+444
iii	பொருளடக்கம்	34	—	X பிழை திருத்தம் 443
viii	1	4	'யாவர்க்கும் மேலான்	'யாவர்க்கும் மேலாம்
x	2	1	நெறியை	நெறிய
xiii	3	1	பருவ வடிவில்	பருவடிவில்
xxi	7	5	கந்தரனுபூதி	கந்தரநுபூதி
xxix	2	7	மூன்றும் ஆம்	மூன்றும் ஆம்).
xxx	2	5	-9)	-10)
xxxiv	அநாகதம்	6	ட,டீ	ட, டo
1	தலைப்பு		மூலாதார மலர் (1+4)	பகுதி l 1 மூலாதார மலர் (1+4)
4	7	2	வரும்	வரும்
17	கோட்டுக்கு மேல் தலைப்பு		மூலாதார மலர் பாட்டு - 2	மூலாதார மலர்பாட்டு - 1
44	தலைப்பு		ii மூலாதார சக்கரம்	பகுதி l ll மூலாதார சக்கரம்
46	5	6	ஒன்றிலிருந்த	ஒன்றிலிருந்து
47	தலைப்பு		2. சுவாதிட்டான ஆதார மலர்	பகுதி ll i. சுவாதிட்டான ஆதாரமலர்.
99	தலைப்பு		சுவாதிட்டான ஆதார ஆதார சக்கரம்	பகுதி ll ii. சுவாதிட்டான ஆதார சக்கரம்
103	தலைப்பு		lll மணிபூரக ஆதாரமலர்	பகுதி lll i. மணிபூரக ஆதார மலர்
186	தலைப்பு		மணிபூர ஆதார சக்கரம்	பகுதி lll ii. மணிபூர ஆதார சக்கரம்
190	தலைப்பு		அநாகத ஆதார மலர்	பகுதி IV i. அநாகத ஆதார மலர்
196	3	1	குழன்று	குழன்று (சுருட்டி)
205	3	2	இருப்பது என்று	இருப்பது எது என்று
207	4	2	அசத்தமானது	அசுத்தமானது
209	5	4	அவற்றுக்கடையே	அவற்றுக்கிடையே
211	பொழிப்புரை	5	சேர்ப்பவனாகிய	சேர்பவனாகிய
214	3	2	மற்று	மற்றும்
224	1	1	-388	-(388)
233	2	6	மெம்மேனியம்மான்	செம்மேனியம்மான்
239	1	7	அவ்கள்	அவர்கள்
240	2	1	சொல்லக்குப்	சொல்லுக்குப்

பக்க எண்	பத்தி எண்	வரி எண்	பிழை	திருத்தம்
240	3	12	சித்தாகி	சித்தாகிய
253	2	10	கொண்று	கொன்று
260	2	2	அசத்த மாயையில்	அசுத்த மாயையில்
261	3	2	சிவ தத்தவங்கள்	சிவ தத்துவங்கள்
262	2	3	அசத்த	அசுத்த
263	2	2	செய்து வட்டேன்?	செய்துவிட்டேன்?
269	3	8	மிகந்தது	மிகுந்தது
272	1	3	ட, ட,	ட,டo,
275	தலைப்பு		பகுத V விசுத்தி ஆதார மலர்	பகுதி V (i) விசுத்தி ஆதார மலர்
280	1	2	தঃ, தঃ	த., தঃ
280	1	2	ப, ட	ப, பঃ
285	1	1	நீகமற	நீக்கமற
288	1	2	சிதையைக்	சிகையைக்
303	5	1	குறிக்கம்	குறிக்கும்
350	6	4	உபதேம்	உபதேசம்
351	4	2	எழத்துக்கான	எழுத்துக்கான
376	3	6	மேமபட்ட	மேம்பட்ட
377	2	2	ஒருபட்சமாகந்	ஒருபட்சமாகத்
377	5	5	சுரம் மாமுடியிலும்	சுரர் மாமுடியிலும்
386	1	2	'ஓ'ங்காரமகிய	'ஓ'ங்காரமாகிய
414	தலைப்பு		(ii) ஆக்ஞை ஆதாரமலர்	பகுதிVI (i) ஆக்ஞை ஆதார மலர்
426	2	1	'சேகவன்'	'சேவக்ன்'
439	-	4	அறிவொன்றற..	அறிவொன்றற.. 404
		8	ஆறாறையு..	ஆறாறையு.. 394
		12	உருவாய்...	உருவாய்...427
		13	உல்லாச...	உல்லாச...18
439		14	எந்தாயும்...	எந்தாயும்... 387
		15	கரவாகிய...	கரவாகிய..380
		30	செம்மான்...	செம்மான்...111
		32	தன்னந்தனி...	தன்னந்தனி...414
		41	மதிகெட்டு...	மதிகெட்டு..419
441	3	6	3	ம
441	3	7	த,தঃ, தo	த, தo,தঃ
441	3	7	ப, பঃ,	ப, ப॰
441	4	8	ர॰	ரo
441	5	2	விசத்தி	விசுத்தி

எமது வெளியீடுகள்

ரூ.

1. வடதிருமுல்லைவாயில் (சுந்தரரின்) திருப்பதிக விளக்கம் — விலை. 6/-
2. சிவஞானபோத விளக்கம் (சிவத்திரு அழகரடிகள் விரிவுரைச் சுருக்கம்) — விலை. 12/-
3. வடதிருமுல்லைவாயில் தலபுராணம் — விலை. 35/-

கிடைக்கும் இடங்கள்

அ/மி மாசிலாமணீசுரர் ஆலயம்,
வடதிருமுல்லைவாயில்,
சென்னை - 600 062.

திரு. நு. பரமேசுவரன்,
23/1 பிடாரியார் கோயில் சந்து,
சென்னை - 600 001.

திரு. பூவை. அரங்கநாத முதலியார்,
13, பொன்னம்பல வாத்தியார் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

கந்த கோட்டம்,
பூங்கா நகர்,
சென்னை 600 - 003.

திரு. நு. மகாலிங்கம் **B.A.**,
தொண்டமான் சக்ரவர்த்தி பதிப்பகம்,
3, பழைய அஞ்சலகத் தெரு,
வேங்கடாபுரம், அம்பத்தூர்,
சென்னை 600 - 053.